
சிறுகதைகளைப் படிப்பது எப்படி

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்



தொல்காப்பியக் கட்டுரைகள்

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்

தமிழ்ப் பேராசிரியர் &
தமிழ் மொழித் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.

விற்பனை உரிமை:

பாரிநிலையம்
184, பிரகாசம் சாலை
சென்னை - 600 108.

முதற்பதிப்பு: மே 1995
உரிமை: ஆசிரியருக்கு

விலை: ரூ.90.00

சிறந்த நூல்களுக்கு
நிதியுதவி எனும்
தமிழக அரசின் திட்டப்படி,
தமிழக அரசின் தமிழ்
வளர்ச்சித்துறை இந்நூலுக்கு
நிதியுதவி வழங்கியுள்ளது
என்பதனை நன்றியுடன்
பாராட்டுகிறேன்.

அச்சிட்டோர்:

பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ்,
7-B, கொடிமரத் தெரு, சென்னை-13.

முன்னுரை

தமிழில் தொன்னூலாக விளங்குவது தொல் காப்பியமாகும். முன்தோன்றிய மூத்தமொழியில் கிடைக்க லாகும் நூல்களில் தொல்காப்பியம் முதல் நூலாகத் திகழ் கின்றது.

தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல்:

இவ்விலக்கணநூல் தோன்றுவதற்கு அடிப்படையாகச் சில இலக்கிய நூல்கள், தொல்காப்பியத்திற்கு முன்னர் இருந்திருக்கவேண்டும். ஏன் எனில் இலக்கியங்கண்டு இலக்கணம் இயம்புவது வழக்காறாகும்.

தொல்காப்பியம் ஒரு சிறந்த இலக்கணநூல் என்றும் இன்றைய மொழியலார் குறிப்பிடும் மொழியியல் நுட்பங்கள் பல. தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன என்றும் அறிஞர் குறிப்பிடுவர். தொல்காப்பியத்தின் காலம் எவ்வகையில் பார்த்தாலும் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு எனலாம்.

தொல்காப்பியம் குறித்துப் பல்வேறு சமயங்களில் நான் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இக் கட்டுரைகளை ஒரு சேரப் படிப்பவர்கள் தொல்காப்பியத்தின் மையக் கருத்தினை உணர்ந்து கொள்ளமுடியும் என்று நான் நம்புகின்றேன். ஏறத்தாழ நாற்பதாண்டுக் காலம் தமிழ்த் துறையில் பணியாற்றியதன் காரணமாக என் மனத்துள் எழுந்த தொல்காப்பியச் சிந்தனைகள் பல்வேறு கட்டுரைகளாக முகிழ்த்துள்ளனர். தமிழுலகம் இதனை வரவேற்கும் என்று கருதுகின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்குத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை நிதியுதவி நல்கியுள்ளது. இதனை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவருவதற்கு என்னுடைய தமிழ் மொழித்துறைப் பேராசிரியரும் பதிப்புத்துறையில் நூல்களைப் பதிப்பிப்பதில் வல்லுநராகத் திகழ்பவருமான டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் பெரிதும் உதவினார்கள்.

அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

என் சொந்த வெளியீடாக வெளிவரும் நூலின் விற்பனை உரிமையை ஏற்றுள்ள பாரி நிலையத்தாருக்கு என் நன்றி.

சென்னை-19
3.5.95

சி. பாலசுப்பிரமணியன்

பொருளடக்கம்

1.	தமிழ்	1
2.	தொல்காப்பியர் இலக்கியப் பகுப்பு முறைகள்	21
3.	இலக்கியப் பாகுபாடு	42
4.	பொருளிலக்கணப் பாகுபாடு	69
5.	தொல்காப்பியத்திற் சில திறனாய்வு முறைகள்	89
6.	ஐந்திணைக்காமம்	98
7.	உலகப்பொருள் எல்லாவற்றிற்கும் காமமே முதல்	127
8.	செய்யுள் அல்லது பாட்டு	141
9.	செய்யுள் வழக்கு	150
10.	எழுத்து	164
11.	உணர்தல்	196
12.	உணர்த்தும் முறை	211
13.	மொழிநடை	222
14.	நோக்கு	227
15.	ஓசைப்பொலிவு	233
16.	செவியில்தேறும் திறன்	248
17.	பயன்	257
18.	காவிய உலகில் அகவற்பா	263
19.	அம்மை முதலான எட்டு	269
20.	கற்பனையும் நாடக வழக்கும்	279
21.	பாடுபொருள்	295
22.	நூற்குஉரை கூறுதல்	310
23.	அகப்பாடல்களுக்கு உரை காண்பது	321
24.	பாலையும் வாகையும்	335
25.	பேராசிரியர் உரைத்திறன்	348
26.	தொல்காப்பியப் பொருளதிகாரம்	365
27.	தொல்காப்பியமும் சமுதாய இயலும்	405
28.	மணம்	424
29.	வஞ்சிதானே... முல்லைப்பாட்டு....	433
30.	திணை மயக்கம்...	446

1
தமிழ்

'இனிமையும் நீர்மையும் தமிழ்என லாகும்' என்ற பிங்கல நிகண்டின் நூற்பா "தமிழ்' என்ற சொல்லிற்கு இனிமை, நீர்மை என்ற இரண்டு பண்புப் பொருளைக் கூறுகின்றது. இது பண்புப் பொருளைக் குறித்தலால், நால்வகைச் சொல்லுள் உரிச்சொல்லாக வேண்டும். இனிமை என்பது பலவகை இனிமையைக் குறிக்கும். நீர்மை என்பது தன்மை, இயல்பு என்று பொருள்படும். எனவே பலவகை இனிமையையும் தன்மையையும் இயல்பையும் பொருளாகக் கொண்டது தமிழ் என்னும் உரிச்சொல்.

'இடைச் சொல்லெல்லாம் வேற்றுமைச் சொல்லே' என்னும் தொல்காப்பிய விதிப்படி இடைச்சொல் எல்லாம் பெயரையும் வினையையும் வேறுபடுத்தவே வரும்.

'உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய' என்னும் தொல்காப்பிய விதிப்படி, உரிச்சொல் எல்லாம் வேறு படுத்தும் சொல்லாயும் (விசேடணமாயும்) வேறுபடுத்தப்படும் சொல்லாயும் (விசேடியமாயும்) வரும்.

எனவே தமிழ் என்னும் உரிச்சொல்லும் தமிழ் தழீஇய சாயலவர் (சிந்தாமணி) என்ற இடத்தில் வேறுபடுத்தும் சொல்லாயும் (விசேடணமாயும்) 'தமிழும் திருவுறை கூடலும்' (கல்லாடம்) என்ற இடத்தில் வேறுபடுத்தப்படும் சொல்லாயும் (விசேடியமாயும்) வந்துள்ளவை.

தமிழ் என்னும் சொல் முன்னே இனிமை, நீர்மை என்று பொருள்படும் உரிச்சொல்லாகிப் பின்னர் இனிமையும் நீர்மையும் உடைய மொழிக்குப் (தமிழ் மொழிக்குப்) பெயராகிப் பின்னர் அம்மொழியைப் பேசும் மக்களையும் அம்மக்கள் வாழும் நாட்டையும் குறிக்கின்றது.

'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்ற இடத்தில் தமிழ் என்னுஞ் சொல் தமிழ்மொழியைக் குறிக்க வந்துள்ளது.

"தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானத்து" (புற. - 19) என்ற இடத்தே தமிழ் என்னும் சொல் தமிழ் மக்களால் அமைந்த படையைக் குறிக்க வந்துள்ளது. "மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்" (புறநானூறு - 35) என்ற இடத்திலே தமிழ் என்னும் சொல் தமிழ் நாட்டைக் குறிக்க வந்துள்ளது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்உலகம்" எனத் தொல்காப்பியப் பாயிரம் வடக்கின்கண் வேங்கடமலையையும் தெற்கின்கண் தென்குமரியையும் தமிழ்நாட்டிற்கு எல்லையாகக் கூறுகிறது.

மேற்காட்டியவாறு பண்பினை, பேச்சு மொழியை, மக்களை, நாட்டினை உணர்த்தி நிற்கும் தமிழ் என்னும் சொல்லினைத் தொல்காப்பியர் பெயர்ச்சொல்லாக மட்டும் கருதி, "தமிழென் கிளவியு மதனோ ரற்றே" எனப் புள்ளி மயங்கியலில் புணர்ச்சி விதி கூறியுள்ளார். இச்சொல் தமிழ்மொழியையும் அதனைப் பேசும் மக்களையும் அவர் வாழும் நாட்டையும் குறிப்பதாய்ப் பழைய இலக்கியங் களாகிய புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப் பாட்டு, பரிபாடல் என்பனவற்றில் வழங்குகிறது.

இரண்டு பண்பு

பிங்கல நிகண்டு தமிழ் என்னும் சொல்லிற்குக் கூறும் இனிமை, நீர்மை என்னும் இரண்டு பண்பும் தமிழ் மொழிக்கு இருத்தலால், தமிழ் என்னும் சொல்லை அதற்கு உரிய பெயராகத் தமிழகச் சான்றோர் வழங்கி வருகின்றனர். தமிழ் மொழிக்குத் தமிழ் என வழங்கும் இச்சொல் போன்ற பழமையான சொல் வேறு இல்லை.

வழுவில்லாத, மரபியல் மாறாத, கருத்துடைய சொற்களால் முறைப்படி அமைந்த தொடர்மொழிகளும், யாப்பியல் முறைப்படி அமைந்து பலவகை இன்னோசையைத் தரும் பாடல்களும் தமிழ் மொழியில் உள்ளன. இன்பமும் பொருளும் அறனும் பயக்கும் அன்பின் ஐந்திணைக் காமத்திணையை உள்ளடக்கிய பொருளிலக்கணப் பகுதியும் தமிழ்மொழியில் உள்ளது. அவற்றால் தமிழ்மொழியின் இனிமைப் பண்புடைமை விளங்கும்.

மற்றொரு பண்பு நீர்மை என்பது. நீர்மை என்பதற்குத் தன்மை என்றும், இயல்பு என்றும் இருபொருள் உண்டு.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள

என்னும் குறள் உரையில் பரிமேலழகர் அன்ன நீரார்க்கே என்பதற்கு, அத்தகைய இயல்பினை உடையார்க்கே, என்று உரை கூறியுள்ளார். தமிழ்மொழி, வடமொழி முதலான வற்றைப் போல் ஒலி விகாரம் உடையதன்று. இயல்பான ஓசையை அது பெற்றுள்ளது. அதனால் அதனை நீர்மையை, இயல்பை, தன்மையை உடையது என்று கூறுவது முற்றிலும் பொருந்தும்.

எனவே, இனிமை, நீர்மை என்று பொருள்படும் தமிழ் என்னும் சொல் தமிழ்மொழிக்குக் காரணப் பெய ராகவே அமைந்துள்ளது.

தமிழ் என்னும் சொல், தமிழ்மொழியில் முன்னே பண்புச் சொல்லாக வழங்கப்பட்டுப் பின்னர், விகுதி பெறாமலே தமிழ்மொழிக்கும்; தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெயராக வழங்கியுள்ளதைப் பார்த்தோம். இத் தமிழ் என்னும் சொல்லைத் திராவிடம் என்ற சொல்லின் திரிபென்று கொள்வது அறிவியலுக்குப் பொருந்துவதாகத் தெரியவில்லை. தமிழர் சமஸ்கிருதத்தைக் குறிக்க, ஆரியம் என்றும், வடமொழி என்றும் பெயர்வைத்து வழங்குவது போல, வடமொழியாளரும் தமிழ்மொழியைக் குறிக்க வழங்கிய பெயரே திராவிடம் என்னும் சொல்லாகும்.

தமிழ்மொழி பாரத நாட்டின் தென்கோடியில் நன்கு வழங்கும் தொன்மொழியாகும். இது பலவகை இலக்கியங் களையும் இலக்கண நூல்களையும் பெற்றிருக்கின்றது.

தமிழ்நாடு

மக்கள் பேசும் மொழியாலும் நாட்டிற்குப் பெயர் வைத்து வழங்கப்படுகிறது. அந்த முறையில் தமிழ் மொழியைப் பேசும் மக்கள் உறைவது தமிழ்நாடு ஆகும். தமிழ்நாடு எதுவென்று வினாவின், உடனே "வடவேங்கடம்

தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்னும் பனம்பாரனார் செய்த தொல்காப்பியப் பாயிரத்தை எடுத்துக் கூறி விடை தருகிறோம். பிற்காலத்தில் வாழ்ந்த பாரதியாரும்

நீலத் திரைக்கட லோரத்திலே - நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

எனப் பனம்பாரனார் கூறியவாறே வடக்கே திருவேங்கட மலையையும் தெற்கே குமரியினையும் எல்லையாக்கிக் கூறுகின்றார். பனம்பாரனார் கூறியதற்கும் பாரதியார் கூறியதற்கும் ஒரு வேறுபாடுண்டு. அவர் தென்குமரி என்றது குமரியாற்றினை. இவர் குமரி என்றது குமரி முனையினை. அவர் குறித்த தென்குமரியாற்றின் தென்கரை வரை கடல் கொண்டுபோகப் பிற்காலத்தே குமரி முனையாயிற்று.

பனம்பாரனார் கூறியது நிற்கட்டும். தொல்காப்பியர் எதனைத் தமிழ்நாடென்று கூறுகிறார் எனின்,

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்

(செய்யுளியல்-75)

என்று தொல்காப்பியர் கூறும் நூற்பாவைக் கருதி உணர்ந்தால், சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று முடிமன்னரான தமிழரசர் ஆண்ட நாடே தமிழ்நாடென்று கருத வேண்டியுள்ளது. சேரனாடு குடபுலம் என்றும், சோழனாடு குணபுலம் என்றும், பாண்டியனாடு தென்புலம் என்றும் இலக்கியங்களில் வழங்கப்படுகின்றன.

செந்தமிழ் கொடுந்தமிழ்

பனம்பாரனார் கூறிய பாயிரத்தில் 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு' என்று கூறப்

பட்டுள்ள அடிகட்கு இளம்பூரணர் 'செந்தமிழின் இயல்பு பொருந்தின செந்தமிழ் நிலத்து வழக்கொடு முதனூல்களிற் சொன்னவற்றைக் கண்டு' என்று உரை கூறியுள்ளார். இப்பகுதிக்குச் சிவஞான முனிவர் வேறு உரை கூறுவர். இளம்பூரணர் தமிழ்நாட்டில் செந்தமிழ்நிலம் என்று ஒன்று உள்ளதாகக் கருதுகிறார்.

தொல் - சொல்லதிகாரத்தே எச்சவியலில் "இயற்சொல் தாமே செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித் தம்பொருள் (விழாஅமை) இசைக்கும் சொல்லே" (2) என்ற நூற்பாவில் 'செந்தமிழ் நிலத்து வழக்கு' என்று கூறப்பட்டுள்ளது. இந்நூற்பா உரையுள், "செந்தமிழ் நிலம் என்பது வையையாற்றின் வடக்கு, மருதயாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு" என்று இவற்றுள் அடங்கும் நாடாகும் என்று இளம்பூரணர் குறிக்கின்றார்.

அடுத்துத் திசைச் சொல்லைக் கூறும்பொழுது தொல்காப்பியர்,

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி (எச்ச-4)

என்று கூறுகின்றார்.

மேற்கண்ட நூற்பாவிற்கு இளம்பூரணர் "செந்தமிழ் நாட்டை அடையும் புடையும் கிடந்த பன்னிரு நிலத்தார் தம் குறிப்பினையே இலக்கணமாக வுடைய திசைச்சொற்கள் என்று உரைகூறிச் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமாவன (1) பொதுங்கர் நாடு (2) தென்பாண்டி நாடு (3) ஒளி நாடு (4) குட்ட நாடு (5) பன்றி நாடு (6) கற்கா நாடு (7) சீத நாடு (8) பூழிநாடு (9) மலைநாடு (10) அருவா நாடு (11) அருவா வடதலை நாடு (12) குடநாடு என்று அவற்றிற்குப் பெயரும் கூறுகின்றார்.

இளம்பூரணர் தமிழ்நாட்டுள் ஒரு பகுதியைச் செந்தமிழ் நிலம் என்று பிரித்து, இந்த நாட்டைச் சேர்ந்த பொதுங்கர் நாடு முதலிய பன்னிரண்டும் திசைச்சொல் வழங்கும் நாடு என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு கொள்வதற்கு இவர் கூறுவதே சான்றா? அல்லது வேறு சான்று உண்டா என்பது தெரியவில்லை.

ஆனால், சேனாவரையர் முதலிய ஆசிரியர் இளம் பூரணர் சொன்ன செந்தமிழ்நாடு வையையின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும் மருவூரின் வடக்கும் உள்ளநாடு என்பதை ஏற்றுக்கொண்டு, அதனைச் சூழ்ந்த பன்னிரண்டு நாட்டைக் கொடுந்தமிழ் நாடு என்று பெயர் வைத்துக் கூறுகின்றார்.

நன்னூலாசிரியர் திசைச்சொல்லைக் கூறும்பொழுது தொல்காப்பியரைப் போலக் கூறாமல்

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்மொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப

என்னும் நூற்பாவால் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நிலத்திலும் பதினெண்மொழி பேசும் நிலத்துள் தமிழ் நீங்கலான சிங்களம் முதலான பதினேழு நிலத்தினும் வழங்கும் மொழிகள் செந்தமிழ் மொழியில் வந்து வழங்கின் இந்த இரண்டையும் திசைச்சொல் என்றே ஆசிரியர் வழங்குவர் என்று கூறுகின்றார். இந் நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர் நீங்கலான எல்லா உரையாசிரியரும் செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலம் என்பதற்குச் "செந்தமிழ் நிலத்தைச் சார்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலத்தின் கண்ணும்" என்றே உரைகூறி வருகின்றனர்.

கொடுந்தமிழ்

தொல்காப்பியர் கொடுந்தமிழ் என்ற சொல்லை எங்கும் ஆளவில்லை. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தை இளம்பூரணர் திசைச்சொல் வழங்குமிடமாகக் கூறுகிறாரே யன்றிக் கொடுந்தமிழ் வழங்கும் நிலம் என்று அவர் குறிப்பிடவில்லை. ஆனால் சிலப்பதிகார ஈற்றில் நூற் கட்டுரையைப் பார்த்தால்,

குமரி வேங்கடம் குணகுட கடலா
மண்டிணி மருங்கில் தண்டமிழ் வரைப்பில்
செந்தமிழ் கொடுந்தமிழ் என்றிரு பகுதியின்
ஐந்திணை மருங்கின் அறம்பொருள்இன்பம்

மக்கள் தேவர் எனஇரு சார்க்கும்
ஒத்த மரபின் ஒழுக்கொடு புணர
எழுத்தொடு புணர்ந்தசொல் லகத்தெழு பொருளை
இழுக்கா யாப்பின் அகனும் புறனும்
அவற்று வழிப்படூஉம் செவ்விசிறந் தோங்கிய
பாடலும் எழாலும் பண்ணும் பாணியும்
அரங்கு விலக்கே ஆடலென் றனைத்தும்
ஒருங்குடன் தரீஇ உடம்படக் கிடந்த
வரியும் குரவையும் சேதமும் என்றவை
தெரியது வகையால் செந்தமி ழியற்கையின்
ஆடிநன் னிழலின் நீடிருங் குன்றம்
காட்டு வார்போல் கருத்துவெளிப் படுத்து
மணிமே கலைமேல் உரைப்பொருள் முற்றிய
சிலப்பதி காரமும் முற்றும்

என்னும் அது, "தெற்கே குமரியும் வடக்கே வேங்கடமலையும் கிழக்கே கடலும் மேற்கே கடலும் என்னும் நான்கு எல்லைக்குட்பட்ட தமிழ்நாட்டிலே, செந்தமிழ், கொடுந்தமிழ் என்று கூறும் இரண்டு பகுப்புள், ஐந்திணை அடுத்த அறம் பொருள், இன்பம் என்பவை மக்கள் தேவர் என வழங்கும் இருசாரார்க்கும் பொருந்துமாறு, பொருளை இழுக்காமற் கொண்டொழுகும் யாப்பினாலே, அகத்திணையும் புறத்திணையும் அவற்றின் வழிப்பட்டு நடக்கும் பாடலும் எழாலும் பண்ணும் பாணியும் அரங்கு விலக்கு ஆடல் என்றனைத்தும் ஒருங்கு தழுவி உடம்பட்டுக் கிடந்த வரியும் குரவையும் சேதமும் என்றிவைகளெல்லாம் தெரியுமாறு செந்தமிழியற்கையாலே செய்யப்பட்ட சிலப்பதிகாரம்" என்று கூறுகிறது.

அறிஞர் சிலப்பதிகார நூற்கட்டுரையை முடிவுச் சொற்களுடன் முடித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டிலே செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற இரண்டு பகுப்பில் இச்சிலப்பதிகாரம் செந்தமிழ் இயற்கையால் செய்யப்பட்டது என்பது முடிபாகின்றது. அங்ஙன

மாயின் மேலே குறிப்பிட்ட செந்தமிழ் கொடுந்தமிழ் என்பன நாடா? மொழியா? கருதுக.

ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார்
செந்தமிழ் சேராத வர்

என்று ஐந்திணை ஐம்பதின் பாயிரம் செந்தமிழைக் கூறுகின்றது.

சான்றவர் தேர்ந்து தம்முடைத் தெளிவால்,
சயமுறக் கோத்தசெந் தமிழை *(திருவாலவா 15-6)*

இப்பாட்டில் சான்றவர் என்றது சங்கப் பலகையில் வீற்றிருந்த புலவரை. அவரியற்றிய பாடலைச் செந்தமிழ் என்று மேற்பாட்டு குறிக்கின்றது. தொல்காப்பியரும் எண்வகை வனப்பில் 'அழகு' என்னும் வனப்பு செய்யுள் மொழியால் வரும் என்றும் 'புலன்' என்னும் வனப்பு சேரி மொழியால் வரும் என்றும் கூறுகின்றார். தமிழில் நல்ல நடையைச் செந்தமிழ் நடையென்றும் இழிந்த நடையைக் கொச்சை நடை என்றும் கொடுந்தமிழ் நடையென்றும் கூறும் வழக்கம் உண்டு. இக்காரணங்களால் தமிழ்நாட்டில் செந்தமிழ் நாடென்றும், கொடுந்தமிழ் நாடென்றும் இரண்டு பிரிவான நாடு ஒன்று இல்லை என்பதும் ஆனால் செந்தமிழ் மொழி கொடுந்தமிழ் மொழி என்று இரண்டு வகையான மொழிநடை தமிழில் உண்டு என்பதும் புலனாகின்றன. செந்தமிழ் மொழியை இலக்கண வரம்புடன் கூடிய புலவர் மொழி என்றே கூறலாம். கொடுந்தமிழ் மொழி என்பது இலக்கண வரம்பு கருதாத, கல்வியறிவற்ற மக்களின் பேச்சு வழக்கு மொழியாகும். இதனைக் கொச்சை மொழி என்றும் கூறுவர். எனவே தமிழ்நாடு என்றாலும், "செந்தமிழ் நாடென்ற போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று பாரதியார் வழங்குவது போலச் செந்தமிழ் நாடு என்றாலும் அவ்விரண்டு சொற்களும் தமிழ்நாட்டையே குறிக்கும் என்க.

அங்ஙனமாயின் தொல்காப்பியர் செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிருநிலம் என்றது எவற்றை எனின்? இந்நூற்பா திசைச்சொல்லைக் குறிக்க வந்ததாகும். தமிழ்நாட்டைச்

சுற்றி வேற்றுமொழி வழங்கும் நாடு தொல்காப்பியர் காலத்தில் பன்னிரண்டாக இருந்திருக்க வேண்டும். அவற்றையே செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் என்று அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

சொல்லதிகார உரையாசிரியருள் ஒருவராகிய தெய்வச் சிலையார் என்பவர் "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமாவன: வையை யாற்றின் தென் கிழக்காகிய பொதுங்கர் நாடு ஒளி நாடு தென்பாண்டி நாடு கருங்குட்ட நாடு குடநாடு பன்றி நாடு கற்கா நாடு சீத நாடு பூழி நாடு மலையமான் நாடு அருவா நாடு வடதலை நாடு என்பனவாகும் என்று இளம்பூரணர் உரைக்கருத்தைக் கருதி எழுதிவிட்டு, அவரே இப்பன்னிரண்டு நாடும் செந்தமிழ் நாட்டகத்த செந்தமிழ் சேர்ந்த நாடு என்றமையான் அவை புறத்தே உள்ள பிற நாடாக இருக்க வேண்டும் என்பார் கூறுமாறு "கன்னித் தென்கரைக் கடற்பழந்தீபம் கொல்லம் கூபகம் சிங்களம் என்னும், எல்லையின் புறத்தவும் கன்னடம் வடுகம், கலிங்கம தெலுங்கம் கொங்கணம் துருவம், குடுகம் குன்றம்" என்பன என்பர். இக்கருத்தை நன்னூற் பழைய உரையாசிரியராகிய மயிலை நாதர் அகத்திய நூற்பாக் கருத்தாகக் கூறுவர்.

அகநானூற்றுப் பாடற்பகுதி "தமிழ்கெழு மூவர் காக்கும் மொழி பெயர் தேஎத்த பன்மலை இறந்தே" (31) என்னும் அடிகளால் தமிழ் நாட்டின் ஓரத்தில் இருந்த மொழி பெயர் தேயத்தைக் (வேறுமொழி வழங்கும் தேயம்) குறிப்பிடுதலையும் கருதி உணர வேண்டும்.

வடவேங்கடம் தென்குமரி உள்ளிட்ட நிலப் பரப்பைத் தமிழ்நாடு, தமிழ் வரைப்பு, செந்தமிழ் நிலம் என்ற பெயர்களால் வழங்கலாம். தமிழை நன்கு கற்ற செந்தமிழ் நடைக்குரிய சான்றோர் தமிழ்நாட்டிலே பரவலாக எல்லாப் பகுதியிலும் வாழ்ந்திருந்தனர்.

இலக்கியம்

'இலக்கு என்ற சொல் நல்ல தமிழ்ச்சொல். அதற்குக் குறி, அல்லது குறிக்கோள் என்பன பொருளாகும். வில்லிலே

அம்பினை வைத்து எய்துபழகும் மக்கள் தங்களுக்கு முன்னால் இலக்கமரம் ஒன்றை நாட்டி இருப்பார்கள். அம்மரத்தில் அசையாக் குறி, அசையும் குறி என்று இரண்டனைப் பொருத்தி வைத்திருப்பார்கள். பயிற்சி பெறுபவர் இலக்கமரத்திலுள்ள அக்குறியை எய்து வீழ்த்த வேண்டும். இருவகைக் குறியைப் · பெற்றுள்ள அந்த மரத்திற்கு இலக்கமரம் என்று பெயர். இதனை,

"தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ
நிலைக்கொரா இலக்கம் போன்றன" *(4)*

என்னும் புறநானூற்றுப் பாடற்பகுதியை நோக்கி உணரலாம். இலக்கு அம் இலக்கம் என்றாயிற்று. கொங்கு நாட்டு மக்கள் (விசயமங்கலம் பகுதி) இலக்கு என்னும் இன்சொல்லை இகரத்தை நீக்கி லக்கு என்றும் லகரத்தைத் திரித்து இலக்கு என்றும் வழங்கி வருகின்றனர். நான் இந்த இலக்கிலே வந்தேன். இந்த இலக்கிலே தேடிப்பார் என்றெல்லாம் அவர்கள் வழங்கி வருகின்றனர்.

இலக்கம் குறியினையுடைய மரம். இலக்கியம் குறிக்கோளுடையது. இலக்கியம் என்னும் சொல்லிற்கு உதாரணம் என்றும் பொருளுண்டு.

இதிகாசம் இலக்கியம் எடுத்துக்காட்டல்
உதாரணம் எனவும் உரைக்கப் படுமே

என்று கூறும் பிங்கல நிகண்டு.

உலக நடைமுறையில் எல்லாச் செயலுக்கும் ஒரு குறிக்கோள் உண்டு. இலக்கியம் எழுதுபவனுக்கும் குறிக்கோள் உண்டு. சிலப்பதிகாரம் "அரசியல் பிழைத்தோர் அறங்கூற்றாவதூஉம், உரைசால் பத்தினிக் குயர்ந் தோரேத்தலும், ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதூஉம்" என்னும் மூன்று குறிக்கோளைக் கருதி இயற்றப்பட்டதாக அதன் பதிகம் கூறுகின்றது.

தன் கருத்தைப் பிறர்க்கு அறிவுறுத்தல் என்ற குறிக்கோளுடன் சொல் தோன்றிற்று. முன்னே ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்தொரு மொழிகளும் பின்னர் தொட

ரெழுத்து மொழிகளும் தோன்றின. இவற்றின் பின்னர் தான் மக்கள் எழுத்தைப் பற்றி எண்ணத் தொடங்கினர். எழுத்தின் ஒலிவடிவத்தைக் கருதி வரிவடிவம் அமைத்துச் சொற்களை எழுதத் தொடங்கினர். வாய்ப் பழக்கமாகச் சொற்கள் வளர்ந்த பிறகே மக்கள் எழுத்தினை அமைக்கத் தொடங்கினர் என்பதற்குத் தமிழிலுள்ள குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்றும் சார்பெழுத்துக்களே சான்றாகின்றன. இவ்வெழுத்துக்களை இன்றும் மொழியில் வைத்துத்தான் உணர்கின்றோம்.

எழுத்துக்களைக் கண்டு பிடித்து எழுதத் தொடங்கிய வுடன் அவ்வெழுத்தில் வாய்மொழிப் பாடல்களை எல்லாம் எழுதினர். சில செய்யுள்களை எழுத்தில் எழுதக்கூடாது; எழுதினால் அதன் ஆற்றல் குன்றிவிடும் என்று பண்டை யோர் கருதியதால் எழுதாமல் விட்டனர். அவ்வாறு எழுதாமல் விட்டது மந்திரச் செய்யுளாகும். அதற்கு வாய்மொழி என்றும் பெயர்.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்"

(செய்யுளில் 75)

என்னும் தொல்காப்பிய நூற்பா மந்திரத்தை வாய்மொழி என்றே குறிக்கின்றது. எழுத்தைக் கண்டுபிடித்து எழுதத் தொடங்கிய பின் எழுதும் இலக்கியமும் தோன்றின. தொல்காப்பியருக்கு முன்னும் தொல்காப்பியர் காலத்திலும் தோன்றிய இலக்கியங்கள் எல்லாம் தனிப்பாடல் இலக்கியங் களே ஆகும். தொல்காப்பியர் காலத்துத் தனிப் பாடல்கள் எல்லாம் சிறிய வடிவத்திலும் உள்ளன பெரிய வடிவத்திலும் உள்ளன. எடுத்துக்காட்டாக,

"நன்றே காதலர் சென்ற வாறே
பைம்புதற் பல்ப மலர
இன்புறத் தகுந பண்புமா ருடைத்தே"

என்னும் இவ்வாசிரியப்பா மூன்று அடியால் வந்த சிறிய பாட்டாகும். மதுரைக் காஞ்சி என்னும் தனிப்பாட்டு 782

அடிகளால் வந்துள்ளது. ஆசிரியப்பாவை ஆயிரம் அடிவரை பாடலாம் என்பது செய்யுளியல் விதியாகும். பரிபாடல் கலிப்பா முதலியனவெல்லாம் பலவிதமான உறுப்புக்களைப் பெற்று வருகின்ற பெரிய பாடல்களாகும். எடுத்துக்கொண்ட செய்தி சிறியதாயின் சிறிய பாடலாலும், பெரிதாயின் பெரிய பாடலாலும் பாடிவிடலாம். ஆதலின், பாடுகின்ற வனுடைய பொருள் விரிவிற்கு அடிவிரிவால் தனிப் பாடல்களே இடந்தந்து வந்தன.

பழங்காலத்திலே வாய்மொழிப் பாடல்கள் பல்வேறு வடிவத்தில் வழங்கிவந்தன என்பதைச் சங்க இலக்கியங் கொண்டு அறிதல் கூடும்.

"அகவன் மகளே அகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"

(குறுந்தொகை 23)

இங்கே அகவன் மகள் என்றது கட்டுவிச்சியை. அவர் பாடுகின்ற வாய்மொழிப் பாட்டு மலையைச் சிறப்பித்துக் கூறுகிறது.

"அகவினம் பாடுவாம் தோழி" (40)

என்னும் கலித்தொகைப் பாடலால் குறிக்கப்படுவது தோழியும் தலைவியும் பாடும் வள்ளைப் பாட்டாகும்.

இலக்கண நூலின் விரிபெறாமல் முற்காலத்தெழுந்த வாய்மொழி இலக்கியத்தை இயற்கை இலக்கியம் என்று கூறலாம். வாய்மொழி இலக்கியத்தின் போன்மை கருதி, ஆனால், இலக்கண நூலின் விதிபெறாமல் முதன்முதல் எழுதப்பட்ட எழுதும் இலக்கியத்தையும் இயற்கை இலக்கிய மென்றே கூறலாம்.

முற்காலச் சான்றோர் மேலே கூறிய இருவகை இலக் கியத்தையும் ஆராய்ந்து இலக்கணம் எழுதத் தொடங்கினர்.

இவ்விலக்கண விதியைப் பின்பற்றி எழுதத் தொடங்கிய இலக்கியங்களையெல்லாம் செயற்கை இலக்கியம் என்று கூறலாம்.

சொல் ஓசையை நுட்பமாக ஆராய்ந்து பிரித்து, இது சொல் தோன்றுதற்குக் காரணமான எழுத்தோசையாகும் என்று அறுதியிட்டு, அதற்கு வரிவடிவந் தோற்றுவித்துப் பல இலக்கணங்களை எல்லாம் ஆராய்ந்து எழுதிய காலம் கல்வி வளர்ச்சிக்குக் கால்கோள் செய்த காலமாயிற்று.

ஒருவன் முதன்முதல் பொருளை உணர்ந்தான். பின்னர் அப்பொருளுணர்ச்சிக்குச் சொல்லைப் படைத்தான். பின்னர் அச்சொல்லை எழுதுவதற்கு எழுத்தினைப் படைத்தான். இந்த முறை கருதினால் முன்னே பொருள், இரண்டாவது சொல், மூன்றாவது எழுத்து என்றே இலக்கணமுறை வகுக்க வேண்டும்.

தொல்காப்பியரும் "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லின் ஆகும்" என்று பொருளுணர்ச்சியை முதன்மையாக ஓதியுள்ளமையைக் காண்க.

தமிழண்ணல் என்பார் எழுதிய ஒப்பிலக்கிய அறிமுகம் என்ற நூலில்,

> "திருக்குறள் மொழி அடிப்படையில் தமிழ் நூல் என்றாலும் பொருள் அடிப்படையில் அற நூலாகும். அது தானும் உலக அறநூல் இலக்கியம் பெரு வட்டத்துள் அடங்கும். சங்க இலக்கியத்தை வீரநிலைக் காலத்தினைச் (Heroic Age) சார்ந்தது எனக் காலப் பகுதி கருதி நோக்கும்பொழுது அவ்விலக்கியம் வீரநிலைக் கால இலக்கியங்களுடன் ஒன்றுபடும்"
>
> (பக்கம் 14)

என்பர்.

ஆனால் தமிழ் நாட்டுப் பழைய இலக்கியங்களை ஆராய்ந்தால் வீரநிலைக் கால இலக்கியம் என்று கூறுவதா? வீரத்திற்கு முதலான காதல் நிலைக் கால இலக்கியம் என்று கூறுவதா? என்ற ஐயம் தோன்றுகின்றது.

ஏன் எனில்? தொல்காப்பியர் 1. பொருளதிகாரத்திலே அகத்திணை புறத்திணை என இரண்டு திணைப் பொருள் களைக் கூறினாலும் அவற்றைச் சரி சமமாகக் கூறாமல் காமத்திற்கே ஏற்றந்தந்து கூறுகிறார்.

2. அகத்திணையை ஏழ் என்று கூறி, ஒவ்வொரு அகத்திணைக்கும் புறனாய் ஏழுபுறத்திணைகள் தோன்றின என்று தொல்காப்பியர் கூறுகிறார். இவர் கூறும் இயைபு முறையைக் கருதினால் அகத்திணைக்குள்ள முதன்மை புலனாகின்றது.

3. பாக்களை உறுப்பினைப் பெறாத பா, தரவு முதலிய உறுப்புக்களைப் பெற்றுவரும் பா என்று இரண்டாகப் பகுத்துக் கொண்டு, உறுப்பினைப் பெறாத பாவை எல்லாப் பொருட்கும் பொதுவாக நிறுத்திவிட்டு, உறுப்பினைப் பெற்றுவரும் கலிப்பா, பரிபாடல் இரண்டும் காமப் பொருளுக்கு உரியனவாகவே ஓதுகிறார்.

4. நாடக வழக்கம் உலகியல் வழக்கம் என்னும் இரண்டினாற் கூறப்படும் புலனெறி வழக்கம் அகத்திணைக்கு வரும் என்று அகத்திணை இயலில் ஓதுகின்றார்.

5. அகத்திணைப் பொருளைக் கூறுவதற்கு உள்ளுறை உவமமும் இறைச்சி முதலானவையும் வரும் என்று கூறுகிறார்.

6. புறத்திணையை ஓரியலாகக் கூறிய தொல்காப்பியர், அகத்திணையை அவ்வாறு கூறிவிடாமல் அகத்திணை யியலில் பொதுவிலக்கணம் கூறி, அவற்றின் சிறப்பிலக் கணங்களை களவியல், கற்பியல் பொருளியல் என்னும் நான்கு இயல்களால் கூறுகின்றார்.

7. செய்யுள் இலக்கணம் கூறும்பொழுது அகப்பொருள் பாடல்களுக்குரிய திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை என்பவனவற்றைக் கூறுகிறார்.

8. மிகப் பழைய இலக்கியமாகிய எட்டுத்தொகை இலக்கியங்களில் அகத்திணைப் பாடல்களே மிகுதியாக உள்ளன. அஃதாவது சங்கப்பாடல்கள் 2381 ஆகும். இவற்றுள் அகத்திணைப் பாடல்கள் 1862. அதாவது முக்காற்பாகமாகும்.

சங்ககாலப் புலவர் தொகை 473. அவருள் அகத்திணைப் பாடலைப் பாடினோர் 378. அதாவது முக்காற் பகுதிக்கு மேற்பட்டவர்.

9. இறையனார் களவியல் உரை: "பொருளதிகாரம், வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்; என்று வந்தார். வர, அரசனும், புடைபடக் கவன்று, என்னை? எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறோமே எனின், இவை பெற்றும் பெற்றிலேம்" என்று கவலை கொண்ட பாண்டியனுக்கு அகப்பொருள், அகப்பொருளிலும் அகனைந்திணைப் பகுதி மட்டும் அடங்கிய இறையனார் களவியலன்றோ கிடைத்தது. இதனைக் கருதினால், இக்காலம் புறத்திணை நிகழ்ச்சியைச் சிறப்பாகக் கருத முடியாத காலமாக அன்றோ இருந்திருக்கிறது.

10. பரிபாடலில்,

நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது;
காதற் காமம் காமத்திற் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே...
தள்ளாப் பொருளியல்பிற் றண்டமி ழாய்ந்திலார்
கொள்ளாரிக் குன்றின் பயன்

என்னும் பாட்டில் வேதப் பொருளைக் காட்டிலும் அகனைந்திணைக் காமம் சிறப்பிக்கப்பட்டிருத்தலையும் கருத வேண்டும்.

இவற்றையெல்லாம் கருதினால் தொல்காப்பியருக்கு முந்தின காலமும், அவருடைய காலமும், எட்டுத்தொகை இலக்கிய காலமும், இறையனார் களவியல் காலமும் காதற் காலம் ஆக வேண்டும்.

தமிழகத்தில் முற்படத் தோன்றியது காதல் நிலைக் காலமாம். இதனை அடுத்துப் பின்தோன்றியது வீர நிலைக் காலமாகும்.

தொல்காப்பியர் பாட்டினை மட்டும் செய்யுள் என்று கூறவில்லை. பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்னும் ஏழினையும் செய்யுள் என்று கூறுகிறார். இந்த ஏழையும் அடிவரையறை உள்ளதென்றும் அடி வரையறை இல்லாதனவென்றும் இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுகிறார் அவர். அடிவரையறையுடையன பாட்டாகும். பாட்டுக்களிற் சிறந்தவை முதன்மையாகக் கருதத்தக்கவை ஆசிரியப்பா வெண்பா என்னும் இரண்டு மாம். ஏனைய வஞ்சிப்பாவும் கலிப்பாவும் மருட்பாவும் பரிபாடலும் அவ்விரண்டினால் ஆக்கப்பட்டவையாம். வஞ்சிப்பா ஒழிந்த எல்லாப் பாக்களும் பெரும்பாலும் நாற்சீர் கொண்ட அடியால் வரும். வஞ்சிப்பா மட்டும் இருசீர் கொண்ட அடி, முச்சீர் கொண்ட அடிகளில் வரும். நாற்சீர் கொண்ட அடியிற்றான் தளையும் தொடையும் வரும்.

இத்தகைய அடியின் சிறப்பினைக் கொண்டது பாட்டு என்பர். நாற்சீர் கொண்ட அடியொன்றே நான்கு ஐந்து ஆறு என்னும் எழுத்தினைப் பெற்றுவரின் குறளடி என்றும், ஏழு, எட்டு ஒன்பது என்னும் எழுத்தினைப் பெற்றுவரின் சிந்தடி என்றும் பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு என்னும் எழுத்தினைப் பெற்றுவரின் அளவடி என்றும், பதினைந்து, பதினாறு, பதினேழு என்றும், எழுத்தளவைப் பெற்றுவரின் நெடிலடி என்றும், பதினெட்டு, பத்தொன்பது, இருபது என்றும் எழுத்தளவைப் பெறின் கழிநெடிலடி என்றும் பெயர் பெறும் என்பர் தொல்காப்பியர். அடிவரை யறையுடைய பாட்டினைத்தான் சிறந்ததொன்றாகக் கருதி மாத்திரை எழுத்து அசை சீர் முதலிய இலக்கணங் களையெல்லாம் கூறிச் செல்கின்றார்.

அடிவரையறை இல்லாதன

அடிவரையறையில்லாத செய்யுள்கள் உரையும் நூலும் வாய்மொழியும் பிசியும் அங்கதமும் முதுசொல்லும் என ஆகும். இவ்வாறுள் உரையல்லாத நூல் சொற்சீரால் வருதலாலும் வாய்மொழியாகிய மந்திரமும் நிறை மொழி

மாந்தரது உரைநடையாயிருத்தலாலும் பிசியும் அங்கதமும் முதுசொல்லும் ஒரு வகையான உரைநடையாதலாலும் இந்த ஆறினையும் உரைநடை என்றே கூறிவிடலாம். அங்ஙனமாயின் மேற்கூறிய எழுவகைச் செய்யுளையும் பாட்டு, உரை என்று இரு கூற்றுள் அடக்கிக் கொள்ளலாம்.

பாட்டும் உரையும்

மறைமலை அடிகளார் தாம் இயற்றிய பட்டினப்பாலை ஆராய்ச்சியில் "பாட்டென்பது அறிவு நிலை, உணர்வு நிலை என்னும் இரண்டு நிலைகளைத் தந்து மிகுந்த பயனைத் தருவதாகும். உரையும் அறிவுநிலை உணர்வு நிலையைத் தருகின்றது. அவ்விரண்டுள் பாட்டிற்கு மட்டும் ஏற்றம் என்னவெனின்? பால் கறந்த மாத்திரையே உண்பார்க்கு அது சுவை பயக்குமாயினும் பாலினை வற்றக் காய்ச்சி சருக்கரை முதலியன உடன் சேர்த்து உண்ணின் சிறந்த சுவையைப் பயக்கும்; அதுபோல உரையினை வழுவில்லாமற் செய்து அவ்வுரையால் தொடைநலம்பட, அணி தோன்ற, நல்ல, ஓசைபடப் பொருளினை அமைத்துச் செய்யுள் செய்யின் அப்பாட்டு மிக்க சுவையை விளைக்கும் என்க" என்பர்.

பாட்டு முந்தியது

உலகியல் நடை முறையில் உரைநடை முன்னும் பாட்டு பின்னும் தோன்றக் காண்கின்றோம். ஆனால் தொல்காப்பியர் பாட்டுரை என்று பாட்டை முன்னும் உரைநடையைப் பின்னுமாகவே கூறுகிறார். வீரசோழிய நூலாரும் 'பத்தியம் கத்தியம்' என்று பத்தியமாகிய பாட்டை முன் ஓதியுள்ளார்.

ப. ஆலால சுந்தரனார் எழுதிய இயற்றமிழ் என்னும் கட்டுரைத் தொகுப்பில் மறுமலர்ச்சி - உரைநடை என்னும் கட்டுரையில் பின்வருமாறு கூறுவர்.

"மக்கள் பேச்சுமொழியைக் கற்றுக் கொள்வதற்கு முன் தம் உணர்ச்சிகளைப் பாட்டுக்களின் மூலம் தெரிவித்தனர் என்பர் ஜெஸ்பர்சன் என்ற மேனாட்டு ஆசிரியர். இலக்கிய வரலாற்றில் உரைநடை நூல்களுக்கு முன்னர்ச்

செய்யுள் நூல்களே இடம் பெற்றன என்பர் எமர்சன் என்ற ஆசிரியர். இக்கருத்துத் தமிழ்மொழிக்கும் பொருந்துவதாகும். தமிழர் இலக்கணம் இலக்கியம் சோதிடம் மருத்துவம் முதலிய எல்லா நூல்களையும் செய்யுள் களிலேயே இயற்றி வந்தனர்" என்பனவற்றைக் கருதின் தொல்காப்பியர் பாட்டினை முன்னே வைத்து ஒதினமைக்குக் காரணம் புலப்படும்.

பாட்டு அல்லது கவி

குமரகுருபரர் கல்வி என்னும் கற்புடைய நங்கையிடத்தே பிறந்த செல்வப் புதல்வன் கவி என்பர். கல்வி என்கின்ற அழகான பெண் கவிதை என்னும் குழந்தையை ஈன்றாள். அக்கவிதையாகிய குழந்தை சிறுநடையாக (குறுகுறு) நடத்தல் விளாந்து நடத்தல் தளர்நடை போடல் தவழ்ந்து நடத்தல் முதலிய பலவகை நடையாலும் தன் உடம்பின் அழகாலும் இனிப்பான பொருளைக் கூறுவதாலும் கேட்பவர்தம் சோர்வினைப் போக்கும் இசையாலும் உலகிற்கு மகிழ்ச்சியைத் தந்து விளையாடித் திரியும் என்று கூறுகின் றார். இங்கே குழந்தைகளுக்குக் கூறிய நடை உடம்பின் வனப்பு கூறும் பொருள் இன்னிசை என்னும் இவை எல்லாம் பாட்டிற்கும் உண்டு.

கம்பர்

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் சார்ந்து
சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்

என்னும் பாட்டில் கோதாவிரியாற்றுக்குச் சங்கச் சான்றோருடைய கவியை உவமையிட்டுக் கூறுகிறார். சான்றோர் கவி சொல்லுலகிற்கு அழகாயிருப்பது; சிறந்த பொருளைத் தருவது; பொருள் புலப்பாட்டை உடையது அடங்கிய அகத்திணைத் துறைகளைப் பெற்றிருப்பது; குறிஞ்சி முதலிய ஐந்திணை நடையையுடையது; ஒளி பெறப் பொருள் தெளிவுடையது; குளிர்ந்த பண்புடையது;

களவு கற்பென்றும் கைகோளை உடையது என்று கூறுகின்றார். இதனால் சங்கச்சான்றோரின் கவியெல்லாம் ஆற்றொழுக்கான பொருளை உடையது என்பதையும் அறியலாம்.

கல்வி என்னும் திருமாது
கவிதை என்னும் மகத்தந்தாள்
செல்லும் பலவாம் நடையாலும்
சிறந்த உடம்பின் அழகாலும்
சொல்லும் இனிய பொருளாலும்
சோர்வு போக்கும் இசையாலும்
நல்லமகிழ்வை உலகினுக்கே
நாளும் நல்கி விளையாடும்

(தனிப்பாடல்).

மாறனலங்காரமும் அரிய மணிகளை வரிசையாக வைத்தாற் போன்ற சொல்வரிசையையுடைய சொல் நலமும், அம்மணிகளின் உள்ளே ஒளி வீசினாற்போன்ற பொருள் நலமும், மணிவரிசையில் ஆங்காங்கு அமைந்த அழகு போன்ற அணிநலமும் பெற்றது உரனுடைப் பழம் பாட்டாகிய சங்கச் செய்யுள் என்பர். அதுவே பிறிதோரிடத்தில்

"கற்பக மலர் நறுமணம் தருதலைப் போன்றது கவி" என்று கூறுகிறது.

பரத்தையர் உடல் உள்ளம் போல இலக்கியம்

தாம் பெறுகின்ற விலைப்பொருளையே கருத்தாகக் கொண்டிருக்கும் பரத்தையர்தம் அழகிய தோள் போலக் கற்பவர்களெல்லாம் எளிதில் பயிலுமாறு ஒரு இலக்கியம் அமைய வேண்டும். மற்று அம் மகளிரது அறிதற்கரிய உளம்போல் அவ்விலக்கியம் பொருளாழம் உடையதாகவும் இருக்க வேண்டும் என்பர். எனவே எளிமையும் அருமையுமுடையது இலக்கியமாயிற்று.

பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிப்பட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளியநூல் - மற்றும்
முறிபுரை மேனியர் உள்ளம்போன் றியார்கிறோம்
அறிதற் கரிய பொருள்

இயற்கையழகும் செயற்கையழகும் வாய்ந்த பரத்தையர் போல

இலக்கியமானது பல்வகை அமைப்பில் சிறந்ததாய் இயற்கையழகும் செயற்கையழகும் வாய்ந்த பரத்தை இளை ஞர்க்குக் கவர்ச்சி நல்குதல் போல இருத்தல் வேண்டும். "புனை எழில் வடிவினாலோர் பொதுமகட் கண்ட மைந்தர் மனமெனப் புலவர் நெஞ்சும் மருளும் இன்தமிழ்ப் பாமாலை" என்ற சீகாளத்திப் புலவர் பாடலை நோக்குக.

முத்தும் மாணிக்கமும் அமைந்த திரள் மணிவடம் போல

வலம்புரிச் சங்கு ஈன்ற முத்தும் மாணிக்கமும் கலந்து செய்த திரள் மணிவடம் போல் அமைந்தது சீவக சிந்தாமணி என்னும் இலக்கியம் என்பர். முத்துப் போன்ற எளிமையும் மாணிக்கம் போன்ற அருமையும் உடையது சிந்தாமணி என்பர் நச்சினார்க்கினியர்.

எது இலக்கியம்

"மக்கள் நாகரிக வரலாற்றோடு தொடர்புடைய அனைத்தும் இலக்கிய வரம்புக்குட்பட்டவை" என்பர் எட்வின் கிரீன்லா. மனம் போனவாறு இயங்கும் உலக மக்களின் உள்ளத்தை மாற்றி நன்னெறியிற் செலுத்துவதற்கு அறிஞர் பலர் அல்லும் பகலுமாய் உழைத்தலைப் பார்க்கி றோம். அவர் போன்றே அவரால் இயற்றப்பட்ட இலக்கியமும் நாட்டிற்கு வெகுகாலம் நின்று பயன் தருகிறது. உணர்ச்சி வடிவான அவ்விலக்கியங்கள் கற்கப்பட்டு அங்கே கூறப்பட்ட உயர்நெறிகள் மக்கள் கருத்திலேயே நிலையாகத் தங்கி விடுதலால் அக்கருத்தோடு கூடிய மனம் அவர்களை நன்னெறிக்கு அழைத்துச் செல்கின்றது. இக்காரணத்தினால் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு மக்களை நன்னெறிக்கு அழைத்துச் செல்லும் தனிப்பாடல்களோ, காவியமோ, நாடகமோ, உரைநடையோ, எதுவாக இருப்பினும் அவற்றை இயற்றிய ஆசிரியன் நாட்டிற்கு நன்மை செய்பவருள் சிறந்தவனாகக் கருதப்படுகிறான்.

2
தொல்காப்பியர்
இலக்கியப் பகுப்பு முறைகள்

தோற்றுவாய்

பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் ஓர் இலக்கியத் திறனாய்வு நூலின் அணிந்துரையில் "பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்நாட்டில் தொல்காப்பியரும் மேலைநாட்டில் அரிஸ்டாட்டிலும் வளர்த்த ஒருதுறை இலக்கியத் திறனாய்வாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். தொல்காப்பியர் சொல்லதிகார ஈற்றில்,

செய்யுள் மருங்கிலும் வழக்கியல் மருங்கிலும்
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியின் நானெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரிந்தனர் காட்டல்

(எச்சவியல் - 67)

என்ற புறனடை நூற்பாவொன்றினைக் கூறியுள்ளார். இந்நூற்பா செய்யுளிடத்தும், உலக வழக்கிடத்தும் முடியாது நின்ற சொற்களை உத்திவகையால் நூல்நெறி பிழையாது முடித்துக் கொள்ளுமாறு கூறுகின்றது. இங்கே ஆசிரியர் பொதுவாக உலகவழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரண்டு வழக்கு நெறியினைக் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் செய்த ஆசிரியர் பனம்பாரனார்,

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடை
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி
.....
..... புலந்தொகுத்தோன்

என்று கூறுகின்றார். வடக்கின்கண் வேங்கடமும், தெற்கின்கண் குமரியுமாகிய அவ்விரண்டெல்லைக் குள்ளிருந்து தமிழைச் சொல்லும் நல்லாசிரியரது வழக்கும் செய்யுளுமாகிய அவ்விரண்டையும் அடியாகக் கொள்ளுகையினாலே எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் பொருளிலக்கணங்களை ஆராய்ந்து தொல்காப்பியம் என்னும் நூலினைத் தொல்காப்பியர் தொகுத்தார் என்பது மேற்காட்டிய பாயிரப் பொருளாகும்.

இதனால் தொல்காப்பியர் தமிழ்நாட்டு உலக வழக்குச் செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கினையும் நன்கு ஆராய்ந்து தம் இலக்கண நூலினை இயற்றியுள்ளார் என்னும் செய்தி புலனாகின்றது.

உலகவழக்கு

இவற்றுள், உலக வழக்கென்பது, குழந்தைகள், முதல் பெரியவர் வரையிலுள்ள கற்றோர், கல்லாதோர் என்னும் எல்லாமக்களும் தம் அன்றாட வாழ்வில், சொற்களைத் தேடி அமைக்காமல், தமக்குள் தாம் எளிமையாகப் பேசிக் கொள்வதாகும். இவற்றின் பொருள் உணர்வதற்கு நிகண்டோ, அகராதியோ வேண்டுவதில்லை. இலக்கண நூற்பயிற்சியும் வேண்டுவதில்லை.

செய்யுள் வழக்கு

செய்யுள் வழக்கென்பது உலக வழக்கைப் போன்ற தன்று. நன்கு வயது வந்த கற்றவர்க்கு மட்டும் அது புலனாகும். இதனைப் புரிந்து கொள்வதற்கு நிகண்டு, அகராதி, இலக்கணநூல் என்னும் இவையெல்லாம் வேண்டும். உலக வழக்கில் மிக எளிமையாகச் சொற்கோர்வைகளை அமைப்பது போலச் செய்யுள் வழக்கில் எளிமையாகச் சொற்கோவைகளை அமைத்துவிட முடியாது. செய்யுள் இயற்றப்பெறும் பொருளை இன்னதென்று தெரிந்து கொண்டு, அப்பொருளை உணர்த்தும் சொற்களையும் தெரிந்து கொண்டு, அதற்குரிய யாப்பியல்பு, அணியியல்பு வகையினையும் தெரிந்துகொண்டு செய்யுளைச் செய்ய வேண்டியிருத்தலினால் தொல்காப்பியர் செய்யுளைத் "தெரிந்துமொழிச் செய்தி" (தொல். சொல் - 76) என்று கூறியுள்ளார்.

உலகவழக்கு மொழி

உலக வழக்கில் அண்டைநாட்டு மொழிகளும் சேய்மை நாட்டு மொழிகளும் வந்து வழங்கும். அவை பெரும்பாலும் பெயர்ச் சொற்களாகவே இருக்கும். அவை தமிழில் வந்து வழங்கும் போது தமிழிலக்கண முறையில் வேற்றுமை உருபு முதலானவைகளை ஏற்று இடம், பால், திணைகளை அறிவித்து நிற்கும்.

செய்யுள் வழக்குமொழி

அதுபோலச் செய்யுள் வழக்கிற்கு வரும் சொற்களைத் தொல்காப்பியர்,

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

(சொல்லதிகாரம் - 291)

என்று கூறியுள்ளார். இந்நூற்பாவுரையில் இளம்பூரணர் இயற்சொல் என்பது தமிழ்வழங்கு நாட்டு விகாரமின்றி தமிழியற்கை இலக்கணப்பாடு செவ்வனுடைய சொல். திரிசொல் என்பது செய்யுளின்பம் நோக்கி அவ்வியற் சொற்களை அவ்வாய்பாடு திரித்து வேறு வாய்பாட்ட வர்க்கும் செய்யுளுடைய சொல். திசைச்சொல் என்பது செந்தமிழ் நாட்டை அடையும் புடையும் கிடந்த திசை நாட்டார் வழங்கும் சொல். வடசொல் என்பது ஆரியச் சொற் போலும் சொல். திரிசொல், செய்யுட்கே உரியன. ஒழிந்த மூன்றும் வழக்கிற்குரியவாகிச் செய்யுட்கும் புகும் என்பர்.

செய்யுளுக்கு வழக்குமொழி

செய்யுளியலில் செய்யுளுக்கு உறுப்பாக ஓதப்பட்ட வற்றில் மரபு என்பதும் ஒன்று. அதனை,

மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அந்நூற்பா உரையும் இளம்பூரணர் "மரபாவது தான் இயற்சொல் திரிசொல்

திசைச்சொல் வடசொல் என்னும் நான்கு சொல்லின் இயற்கையாலே யாப்பின் வழிப்பட்டது" என்று பொழிப்புரை கூறி, இயற்சொல் மரபாவது சொல்லதிகார இலக்கணத்தோடு பொருந்துதல், திரிசொல் மரபாவது தமிழ்நாட்டகத்தும் பல்வகை நாட்டிலும் தத்தமக் குரித்தாக வழங்கும் மரபு. திசைச்சொல் மரபாவது செந்தமிழ் சூழ்ந்த பன்னிரு நிலத்தினும் வழங்கும் மரபு. வடசொல் மரபாவது திரிந்த வகையாகிய சொல் மரபு. யாதானும் ஒரு செய்யுள் செய்யுங் காலத்துப் பொருள் உணர்த்தும் சொற்கள் இவையாதலின், இவை ஒருபொருட்குரித்தாகிய ஆண் பெயரும் பெண்பெயரும் குழவிப் பெயரும் முதலாயின பிறபொருட்கள் வாராமையான் அவற்றை அவ்வம் மரபினாற் கூறுதலும், ஒருமை பன்மை மயங்காமையும், பெயரும் வினையும் முடிவுபெறக் கூறுதலும் வேண்டுதலின் இவ்விலக்கணமும் கூறல் வேண்டிற்று" என்பர்.

இருவகை வழக்கிலும் சொற்கள் திரிந்து வழங்குதல்

மொழிகளில் சொற்கள் தோன்றினால் அது தோன்றிய வடிவத்துடனேயே இருப்பதில்லை. காலம் செல்லச் செல்ல அச்சொற்கள் திரிந்துவிடுகின்றன. தொல்காப்பியர் சொல்திரிபைச் செய்யுள் திரிபென்றும், உலக வழக்குத் திரிபென்றும் இரண்டுவகையாகக் குறிப்பிடுகின்றார்.

கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்

என்பது அவர் கூறும் குறிப்பாகும்.

செய்யுள் திரிபு

இயற்சொல் முதலிய நான்கும் செய்யுளுள் திரிந்துவரும் என்பதை,

அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொடுக்கும்வழித் தொகுத்தலும்

நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்

(எச்சவியல் - 7)

என்னும் நூற்பாவாலும்,

குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்
குறைத்தன வாயினும் நிறைப்பெய ரியல

(எச்சவியல் - 57)

என்னும் நூற்பாவாலும் உணர்ந்து கொள்ளலாம்.

உலகவழக்குத் திரிபு

சொல் முன்பின்னாக மாறி வழங்கும் (இல் முன் என்பது முன்றில் என வழங்குவது) மரூஉ முடிபும், ஒன்றும் பலவுமாகிய எழுத்துக்கள் குறைந்தும் விரிந்தும் வரும் மரூஉ முடிபும் அவையல் கிளவியை மறைத்துக் கூறும் இடக்கரடக்கலும் மங்கலம் அல்லாததை மங்கலமாகக் கறும் மங்கலமொழியும் சில குழுவினர் தங்களுக்குள் வழங்கிக் கொள்ளும் குழூக்குறியும் முதலான திரிபெல்லாம் உலகியல் வழக்குத் திரிபாகும்.

தொல்காப்பியர் உலகவழக்குத் திரிபினைத் தம்நூலுள் எழுத்ததிகாரத்தே புணரியல் 9ஆம் நூற்பா, தொகை மரபு 30ஆம் நூற்பா, உயிர்மயங்கியல் 48, 49ஆம் நூற்பா, புள்ளியமங்கியல் 60ஆம் நூற்பா, குற்றியலுகரப் புணரியல் 75, 77ஆம் நூற்பாக்களிலும், சொல்லதிகாரத்தே கிளவியாக்கத்தின்கண் 17, 27, 38, 50 என்னும் நூற்பாக்களிலும், பெயரியல் 11ஆம் நூற்பாவில் "கூடிவரும் வழக்கின் ஆடியற் பெயர்" என்னும் தொடராலும், இடையியல் 22ஆம் நூற்பா, எச்சவியல் 4, 46, 47ஆம் நூற்பாக்களிலும், பொருளதிகாரத்தே அகத்திணை 57ஆம் நூற்பா, பொருளியல் 21, 22ஆம் நூற்பாக்களிலும் கூறிச் செல்கின்றார்.

அவர் செய்யுள் வழக்கிற்குரிய விதிகளை எழுத்ததிகாரத்தே மொழிமரபு 18, 19 ஆம் நூற்பாக்களிலும், உயிர்மயங்கியல் 11, 35, 56, 86ஆம் நூற்பாக்களிலும் புள்ளி மயங்கியல் 10, 61, 76 ஆம் நூற்பாக்களிலும் குற்றியலுகரப்

புணரியல் 76ஆம் நூற்பாவிலும் சொல்லதிகாரத்தே கிளவியாக்கத்தில் 18, 39, 51ஆம் நூற்பாக்களிலும் வேற்றுமையியல் 14ஆம் நூற்பாவில் தெரிந்து மொழிச் செய்தி என்னும் தொடரிலும், பெயரியலில் 41, 42, 43ஆம் நூற்பாக்களிலும், வினையியல் 14ஆம் நூற்பாவிலும் எச்சவியல் 1ஆம் நூற்பாவிலும் பொருளதிகாரத்திலே அகத்திணையியல் 3, 56ஆம் நூற்பாக்களிலும் பொருளியலில் 21ஆம் நூற்பாவிலும், மரபியல் 92ஆம் நூற்பாவிலும் கூறுகின்றனர்.

தொல்காப்பியர் தம் நூலுள் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று இலக்கணங்களை உலக வழக்கிற்கே உரியனவாகவும், செய்யுள் வழக்கிற்கே உரியனவாகவும், இரண்டு வழக்கிற்கும் பொதுவாய் உரியனவாகவுமென மூன்று பகுப்புள் அடங்குமாறு கூறியுள்ளார். ஆனால் பொருளதிகாரத்தே செய்யுளியலில் கூறுவனவெல்லாம் செய்யுள் வழக்கிற்கே உரியனவாகும்.

தொல்காப்பியர் செய்யுளியல் தொடக்கத்தே மாத்திரை முதல் வண்ணம் ஈறான யாப்பியல் வகையின் உறுப்பு இருபத்தாறினை முன்னே கூறி அம்மை முதலான வனப்பு எட்டொடும் அவற்றைச் சேர்ந்து இம்முப்பத்து நான்கும் செய்யுள் உறுப்பு என்றனர். ஆனால், பிற்காலத்து யாப்பிலக்கண நூல் செய்த ஆசிரியரெல்லாம் மிகக் குறைவாக எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறினைமட்டும் செய்யுள் உறுப்பென்று செப்பியுள்ளனர்.

அவர்கள், தொல்காப்பியர் கூறியுள்ள அம்மை முதலான எட்டினையும் தம் நூலுள் ஒழிபியலில் வனப்பு எட்டு என்று கூறிச் சென்றாலும், தொல்காப்பியர் செய்யுள் உறுப்பென்று கூறிய மாத்திரை, யாப்பு, மரபு, தூக்கு, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறைவகை, மாட்டு, வண்ணம் என்னும் இருபத் தொன்றினை அவர்கள் உறுப்பென்று ஓதவில்லை. மேலும் தொல்காப்பியர் உறுப்பென்று ஓதாத தளையினைப்

பிற்காலத்து யாப்பிலக்கண நூலாசிரியரெல்லாம் உறுப்பாக முதி அதற்கு இலக்கணமும் வகுத்துள்ளனர்.

செய்யுள் என்பது பொதுப்பெயர்

தொல்காப்பியர் செய்யுள் என்னும் சொல்லைப் பாட்டு ஒன்றிற்கே வழங்காமல், பாட்டு, உரை, நூல், வாய் மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்னும் ஏழனையும் குறிக்கின்ற பொதுப்பெயராகவே குறித்துள்ளார். இக்கருத்தினை,

எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்

(செய்யுளியல் - 157)

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்

(செய்யுளியல் - 75)

என்னும் நூற்பாவால் உணர்ந்து கொள்ளலாம்.

செய்யுளும் பாட்டும் வேறு

பிற்காலத்து யாப்பிலக்கண நூலாசிரியரெல்லாம் யாப்பு பாட்டு செய்யுள் என்னும் சொற்கள் ஒருபொருளென என்று கருதினாலும், தொல்காப்பியர் செய்யுள் என்பதைப் பொதுச் சொல்லாகவும், பாட்டு என்பதைச் செய்யுள்வகை ஏழில் ஒன்றைக் குறிக்கும் சிறப்புச் சொல்லாகவுமே கருது கின்றனர். பாட்டு என்பது பொருளை அமைத்துச் சொல் லால் பாடுதலால் இப்பெயர் பெற்றது. எழுநிலைச் செய்யுளில் பாட்டு நீங்கலான் நூல், உரை முதலியவற்றிற்கு அகவல் முதலான ஓலிகள் இல்லை.

பாட்டு வேறு பண் வேறு

தேவாரம் முதலிய இசைத்தமிழ்ச் செய்யுள்களையும் பிற்காலத்தே பாட்டு என்று வழங்குகிறோம். அது பண் என்று வழங்கப்படும். "பாட்டரவம் பண்ணரவம்" என்று அறிஞர் வேறு வேறாகவே வழங்குகின்றனர். தொல் காப்பியரும் பண்கலந்த பாடலைப் பண்ணத்தி என்று கூறி அப்பண்ணைத்தியும் பாட்டைப் போலவே வரும் என்றும், அப்பண்ணைத்தி பிசி போல இரண்டடியால் வரும் அடி

நிமிர் கிளவியாயும் அடியிகந்தும் ஆசிரியத்தாழிசை, வஞ்சித் தாழிசை வெண்டாழிசை கலித்தாழிசை என்றும், ஆசிரியத் துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை என்றும், ஆசிரிய விருத்தம், வஞ்சி விருத்தம், வெளிவிருத்தம், கலிவிருத்தம் என்றும் பன்னிரண்டாக வரும் (தொல். செய்யுளியல் - 173, 174, 175 இளம்பூரணர் உரை) என்பர். இவற்றால் ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா என்பன இயற்றமிழ்ப் பாடல்கள் என்றும், பண் முறையால் அமைந்த பண்ணத்தி என்னும் தமிழிசை துறை விருத்தங்கள் இசைத்தமிழ்ப் பாடல்கள் என்றும் நாம் வேறாகப் பிரித்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

பிற்கால யாப்பிலக்கண நூலாசிரியர்கள் தாழிசை துறை விருத்தங்களை இயற்றமிழ்ப் பாடலுக்கு இனமாகக் கொண்டு இலக்கணம் கூறியுள்ளார்கள். இவ்வாறு கூறும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திலே பெருமளவில் இல்லாமையினால் அவற்றை அவர் பண்ணத்தி என்கின்ற பெயராலே குறிப்பிட்டுச் சென்றார்.

பிற்காலப் படைப்பு

இயற்றமிழ்ப் பாடல்களைக் காட்டிலும், இசைத்தமிழ்ப் பாட்டு ஒலிநயம் சிறந்ததாக இருத்தலால், பிற்காலப் புலவர்கள் அப்பாடல்களையே பெரிதும் பாடுவாராயினர். இதற்கு மாறுபட கல்லாடம் நளவெண்பா முதலிய இலக்கியங்கள் இயற்றமிழ்ப் பாடல்களாலேயே எழுந்துள்ளன. வஞ்சிப் பாவும், கலிப்பாவும் அருகிவிட்டன.

இலக்கியம்

தொல்காப்பியர் கூறிய எழுநிலத்தெழுந்த பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும், பிசியும், அங்கதமும், முதுசொல்லும் ஆகிய செய்யுட்களும் பிற்காலத்தெழுந்த தாழிசை துறை விருத்த வகைகளாகிய இசைத்தமிழ்ப் பாடல்களும், நொண்டிச்சிந்து, கும்மிப்பாட்டு, பாம்பாட்டிச் சித்தர் பாட்டு, அம்மானை, கந்துகவரி, தோள்வீச்சாகிய திருத்தோணோக்கம் சாழல் உந்தியார், பள்ளிப்பாட்டு, மஞ்சரி முதலிய நாடகத் தமிழ்ப்பாடல்களும், இன்னும்

இல்லிருபதாம் நூற்றாண்டில் பலரால் வேறுபட்ட யாப்பு முறையில் இயற்றப்பட்டுள்ள பாட்டுகளும் ஆகிய இவை யெல்லாம் தமிழ்நாட்டு இலக்கியங்களாகும்.

தொல்காப்பியர் கூற்றில் காணப்படும் இலக்கியம்

தொல்காப்பியர் பாட்டு முதலான ஏழனையும் செய்யுள் என்று கூறினாலும் அவர் நூலுள் "புலன் நன்கு உணர்ந்த புலமையோர்" என்றும், "குறி அறிந்தோர்" என்றும், "யாப்பறி புலவர்" என்றும், "புலவர் ஆறு" என்றும், "உயர்மொழிப் புலவர்". என்றும், "தொன்மொழிப் புலவர்" என்றும், "நுணங்குமொழிப் புலவர்" என்றும், "நூல்நவில் புலவர்" என்றும், பல இடத்தில் கூறும் இப்பல தொடர் மொழி களைத் தொகுத்து நோக்கினால், புலன், குறி (இலக்கு: இலக்கியம்) வாய்மொழி, யாப்பு, புலவர் ஆறு, நூல், உயர்மொழி, தொன்மொழி, நுணங்கு மொழி என்பன வெல்லாம் இலக்கியத்தைக் குறிப்பதாகக் கருதவேண்டி யுள்ளது. ஆறாம் வேற்றுமை இன்ன இன்ன பொருளில் வரும் என்பதைக் கூறுமிடத்தே செய்யுட் கிழமையை உணர்த்த "தெரிந்து மொழிச் செய்தி" (தொல். சொல். 76) என்று கூறியுள்ளார். இத் தெரிந்து மொழியோடு வாய்மொழி, உயிர்மொழி, தொன்மொழி, நுணங்குமொழி என்பன வற்றையும் கூட்டி உணர்க.

புலனெறி வழக்கம்

தொல்காப்பியம் அகத்திணையியலில்,

நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்

என்றொரு நூற்பா உள்ளது. அது புலனெறி வழக்கம் இன்னதென்பதைக் கூறவந்தது. இங்கே புலன் என்னும் சொல்லினை நூல் என்று கொள்ளலாம். புலம் தொகுத் தோனே என்னும் பாயிரத்தையும், புலன் நன்கு உணர்ந்த புலமையோர் என்ற தொல்காப்பியர் கூற்றையும் காண்க.

அவ்வாறு கொண்டால் புலன்நெறி வழக்கம் என்பது நூல்நெறி வழக்கம் என்று பொருள்படும். தொல்காப்பியர்

"புலவர் ஆறு" என்று குறிப்பதைக் கருதினால் புலன்நெறி வழக்கம் என்பது புலவராற்று வழக்கம் என்றும் பொருள் படும். இப்புலனெறி வழக்கம் சுவைபட வருவனவெல்லாம் தக்க இடத்திலே தக்க காலத்திலே வந்தனவாக நாட்டிக் கூறும் நாடக வழக்கத்தாலும், உலக மக்களது ஒழுக லாற்றோடு ஒத்துவரும் உலகியல் வழக்கத்தாலும் பாடப்படும் என்பர். இவ்வாறு பாடப்படுவது அகப்பொருள் புறப் பொருள் இரண்டிற்கும் ஒக்குமேனும் இந்நூற்பா அகத்திணையில் இருத்தலால், இங்கே புலனெறிவழக்கம் என்று கூறுவது அகத்திணைப் பொருளைக் குறிப்ப இந்நூற்பா விதியைப் பொதுவாகக் கருதினால், அகத்திணைப் புறத்திணைப் பொருள்களைப் புலவன் பாடுவதெல்லாம் புலனெறி வழக்கமே யாகும்.

அம்மை முதலான எட்டு

தொல்காப்பியர் இலக்கியத்தைப் புலனெறி வழக்கம் என்ற பெயரால் பொதுவாகக் குறிப்பிட்டதோடன்றி, அம்மை முதலான எட்டு இலக்கியப் பகுப்பையும் சிறப்பாகக் கூறியுள்ளார். இவ்வெட்டின் இலக்கணங்களைக் கூர்ந்து நோக்கினால் இவற்றிற் பல ஒன்றன் அமைப்போடு ஒன்றன் அமைப்பு மாறுபட்டதாயிருக்கக் காண்கிறோம். அவ்வெட்டுள் ஒன்று அம்மை என்னும் இலக்கியமாகும். இது சிலவாய சொல்லால், மென்மையான சொல்லால் சீர்கள் அமைத்துச், சிறு வடிவத்திலே செய்த பாட்டாகும். இது சில அடிகளாலே வரும். இதற்குவைத்த பெயர் அம்மை என்பனவாகும். இவ்வமைப்பிற்கு மாறுபட்டது தோல் என்பதாகும். இது இழுமென் மொழியால் விழுமியது நுவலப்பட்டு பரந்த மொழியால் சீர்செய்து யாக்கப்பட்டு மிகுதியான அடிகளைப் பெற்று யானை போலியங்கும் பாட்டாகும். செய்யுளுக்குரிய சொற்களால் சீர் புனைந்து யாக்கப்படுவது அழகென்னும் இலக்கியமாகும். இவ்விலக்கிய அமைப்பிற்கு மாறுபட்டது சேரிமொழியால் செவ்விதிற் சொல்லப்பட்டுத் தேர்தல் வேண்டாத தெளிபொருளுடைய புலன் என்னும் இலக்கியமாகும். தொன்மை என்னும் இலக்கியம் பழைமைப் பண்பினையுடையது. இதன் அமைப்

பிற்கு மாறுபட்டது புகுவது புனைந்து கூறும் யாப்பினையுடைய விருந்தென்னும் இலக்கியமாகும். பின்னர் 'இயைபு' என்பது எழுத்ததிகாரத்திலே ஓதப்பட்ட மொழியிறுதி எழுத்துக்களில் உயிரெழுத்தை விட்டு எஞ்சிய நுணைநமன யரலவழள என்னும் பதினோரெழுத்தும் ஈற்றில் வரப்பாடுதல் என்பர். இவ்விதியைக் கூறும் இந்நூற்பா விளக்கமுடையதாக இல்லை.

இப்பதினோரெழுத்துள் ஏதாவது ஒன்றுதான் பாட்டின் ஈற்றில் வைத்தால் அப்பாட்டு பதினொரடியால் முடியும் இவ்விரண்டுள் எவ்வாறு வரும் என்பது விளங்க வில்லை. இயைபு என்னும் இவ்விலக்கியம் செய்யுள் இலக்கணத்தில் இயைபு போல் ஒற்றெழுத்தால் வரும் என்பது மட்டும் நமக்குப் புலனாகிறது.

அம்மை முதலான எட்டில் ஈற்றில் உள்ளது இழைபு என்னும் இலக்கியமாகும். இது வல்லொற்று வரப்பெறாமல் கட்டளை அடியில் குறளடி முதலான ஐந்தடிகளும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து ஓங்கிவரும்படி மொழிவதாகும். இதுவும் செய்யுளிலக்கணத்திலே கூறிய அடியிலக்கணத்தைக் கருத்திற் கொண்டு வந்தவையாகும்.

தொல்காப்பியர் குறிப்பாகக் கூறும் இலக்கியம்

மேற்கூறியவையே யன்றி, வெறியாடற் பாட்டு, கொற்ற வள்ளை (உலக்கைப் பாட்டு), போர் வீரர் போர்க்களத்தில் பாடியாடும் குரவைக் கூத்துப்பாடல் போன்றவை முதலியவற்றையும் தொல்காப்பியர் குறிப்பிடு கின்றார்.

தொல்காப்பியர் காலத்தில் தனிப்பாடல்களே மிகுதி

தொல்காப்பியர், செய்யுள் உறுப்பாகத் திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள்கோள், துறை என்பனவற்றைக் கூறியுள்ளதைக் கருதினால் அவர் காலத்தில் தனிப்பாடல்களே பெருமளவில் பாடப்பட்டிருக்கலாம்

போலும். பொருள்தொடர்நிலைப் பாடல்கள் (காவியங்கள்) எழுந்த பிற்காலத்திலே எழுதப்பட்ட யாப்பருங்கலம் முதலியவை திணை முதலியை உறுப்புக்களை ஓதாது விட்டமையும் ஓர்க. வரலாற்று முறைப்படிப் பார்த்தால் முதன் முதலில் தனிப்பாடல்கள் தாம் தோன்றியிருக்க முடியும். அவற்றைப் பிற்காலத்தார் முறைப்படுத்தித் தொகுத் திருப்பார்கள். தனிப்பாடல்கள் தோன்றிய வெகு காலத் திற்குப் பின் தொடர்நிலை இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். தனிப்பாடல்கள் முழுவரலாற்றையோ, முழுநிகழ்ச்சியையோ கூறமுடியாது. ஏதோ ஒரு நிகழ்ச்சியை மட்டும் அது புனைந்து கூறும். தனிப்பாடல்களில் இக்குறையைப் போக்குவதற்காகப் பின்னர் காவியங்கள் தோன்றலாயின.

தொல்காப்பியர் தம் நூலுள் பொருளியலில் இரண்டாவது நூற்பாவாக,

நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஓட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சோடு புணர்த்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபடி நிறீஇ
இருபெயர் முன்றும் உரிய வாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி

இந்நூற்பா தலைவனும் தலைவியும் கூறும் பகுதிக்கிளவி என்னும் பாற்கிளவி, இன்ன இன்னவகையில் வரும் என்பதைக் கூறவந்தமையாலும், இலக்கிய வகையையும் அறிவிக்கின்ற நூற்பாவாகவும் உள்ளது. எந்த இலக்கியத்தையும் துன்பியல் இலக்கியம், இன்பியல் இலக்கியம் என்ற இரண்டு பகுப்புள் அடக்கலாம்

என்பதை 'நோயும் இன்பமும் இருவகை நிலையில்' என்ற பகுதி அறிவிக்கின்றது. தொல்காப்பியர் மற்றோரிடத்தில் 'இன்பமும் இடும்பையும்' (செய்யுளில் - 200) - என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வின்பமும் இடும்பையும் காமங்கண்ணிய மரபிடை வரும்.

காமங் கண்ணிய மரபு

தொல்காப்பியத்தை மேற்போக்காகப் படிப்பவர் தொல் காப்பியர் அகத்திணை இயலால் காமத்தையும், புறத்திணை இயலால் போரினையும் கூறியுள்ளார், என்று கூறி விடுகின்றனர். ஆனால், தொல்காப்பியர் மக்கள் மனத்தெழும் காமம் என்ற பண்பிலிருந்தே உலகத்திலுள்ள எல்லாச் செயல்களும் தோன்றுகின்றன என்று கருதுகின்றார். அவர் கூறும் முறையைக் கூர்ந்து உணரவேண்டும். அவர் அகத்திணையியலின் தொடக்கத்தே காமம் என்னும் ஒன்றை கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என்னும் ஏழு பிரிவாகப் பிரித்துக் கொள்ளுகின்றார். அவற்றுள், கைக்கிளை என்பது ஒருபாற் காமமாகும். தலைவன் தலைவி என்ற இருபாலருள் ஒருவர் காமம் நுகரும் பருவத்தினராய் மற்றொருவர் காமக்குறிப்பமையாத இளம் வயதினராய் இருப்பர். ஐந்திணை என்பது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்து பிரிவாய் வழங்குதற்குரிய, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் பெயர் பூண்ட, இருவர்பாலும் ஒத்த அன்புடைக் காம மாகும். பெருந்திணை என்பது பருவம் முதிர்ந்தவரிடத்தே தோன்றும் ஒவ்வாக் காமமாகும். ஒருவரை ஒருவர் விரும் பாமையும், வரம்பிற்கு மேற்பட்ட காமமும் இதன்பாற்படும். கைக்கிளை முதலான மூன்றினையும் முறையே ஒருபாற்காமம், ஒத்த காமம், ஒவ்வாக் காமம் என்று கூறுவர். அகத் திணையியலில் இம் மூன்று காமத்தைப் பற்றிய செய்தி களையே கூறியுள்ளார். இதன்பின், புறத்திணையியலால், புறத்திணையை உணர்த்தத் தொடங்கிய ஆசிரியர், இயல் தொடக்கத்தே புறத்திணை இத்தனை என்று கூறாமல், ஏழென்று மேலே கூறிய அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின் என்று தொடங்கி,

வெட்சி தானே குறிஞ்சியது புறன் என்றும் (1),
வஞ்சி தானே முல்லையது புறன் என்றும் (6),
உழிஞை தானே மருதத்துப் புறன் என்றும் (8),
தும்பை தானே நெய்தலது புறன் என்றும், (12),
வாகை தானே பாலையது புறன் என்றும் (15),
காஞ்சி தானே பெருந்திணைப் புறன் என்றும் (18),
பாடாண்பகுதி கைக்கிளைப் புறனே என்றும் (20)

புறத்திணை ஏழினுடன் இயைபுபடுத்திக் கூறியுள்ள முறையினை உய்த்துணர்ந்தால், காமம் என்ற ஒன்று, அகத்திணை ஏழாகி, அவ்வகத்திணை ஏழிலும் ஏழு புறத்திணை தோன்றியுள்ளன என்று தொல்காப்பியர் கருது கின்றார் என்ற உண்மை புலனாகும்.

இக்கருத்துடன் சமயக் கருத்தொன்றினையும் ஒப்பிட் டறிய வேண்டும்.

மகாப்பிரளய காலத்திலே அசத்தும் இல்லை; சத்தும் இல்லை; அந்த ஒன்று இருந்தது. அதன் கண்ணே காமம் ஒன்று. சத்தி முதற்கண் உளதாயிற்று. அதனின்று முறைப்படி உலகம் தோன்றிற்று என்று சமய அறிஞர் கூறுவர். இக்கருத்து ஒப்புமைக்காகத் தரப்படுகிறது.

மேற்கூறியவற்றால் 'காமங்கண்ணிய மரபு' என்பது அகத்திணை ஏழினையும் புறத்திணை ஏழினையும் குறிக்கும் என்று உணர்க.

நான்காக விரிதல்

இவ்வாற்றால், நோயும் இன்பமும் என்றும் துன்பியல் இன்பியல் நிகழ்ச்சிகள் இரண்டும் அகத் துன்பியல், அக இன்பியல், புறத் துன்பியல், புற இன்பியல் என்று நான்காக விரியும் என்க.

முப்பத்திரண்டாக விரிதல்

இந்நான்கு நிகழ்ச்சியும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும்

எட்டு மெய்ப்பாட்டோடு கூட, முப்பத்திரண்டாக விரியும். இவ்வாற்றால் அகத்திணைப் புறத்திணை இலக்கியமெல்லாம் இம்முப்பத்திரண்டு கூற்றுள் ஒன்றன்பாற்பட்டு அடங்கு மென்க.

நோயும் இன்பமும் என்னும் இருவகை நிலையிலும் எட்டு மெய்ப்பாடு

சிலர் எட்டு மெய்ப்பாட்டுள் இன்பத்திற்கு நகை, மருட்கை, பெருமிதம், உவகை வரும் என்றும் துன்பத்திற்கு அழுகை, இளிவரல், அச்சம், வெகுளி வரும் என்று கூறுவர். அவ்வாறு கொள்வது பொருந்தாது. இன்பத்திற்கும் எட்டு மெய்ப்பாடு வரும். துன்பத்திற்கும் எட்டு மெய்ப்பாடு வரும் என்க. நச்சினார்க்கினியரும் "நோயும் இன்பமும் என்னும் இருவகை நிலைக்களத்து எட்டனையும் சேர்க்கப் பதினாறாம். அவற்றை நெஞ்சொடு சேர்க்கப் பலவாம் என்றுணர்க" என்பர். மேற்கூறிய பதினாறினையும் அகத்திணை புறத்திணைகளிற் சேர்க்க முப்பத்திரண்டாம். அம்முப்பத்திரண்டிற்குரிய மெய்ப்பாட்டினைக் கீழே காண்க.

முப்பத்திரண்டு எடுத்துக்காட்டு

அகத்திணையில் நோய்பற்றிய நகைக்கு
நகையா கின்றே தோழி...

.....

தண்டுறை யூரன் திண்டார் அகலம்
வதுவை நாளணிப் புதுவோர் புணரிய
பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்
புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்டு
எம்மனை புகுதந் தோனே; அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினன் எதிர்சென்று
இம்மனை அன்றஃது நும்மனை என்ற
என்னுந் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சிவன் தொழுதுநின் றதுவே.

(அகநானூறு 53)

இது தலைமகன் பரத்தையிற் பிரிவால் நோயுற்றிருந்த தலைவிக்குப் பிறன்கட்டோன்றிய பேதைமை பொருளாக நகை தோன்றிற்று.

அகத்திணையில் நோய்பற்றிய அழுகை

"குன்ற வைப்பின் என்றூழ் நீளிடை
யாமே எமியம் ஆகத் தானே
... ... வருந்தினள் பெரிதழிந்து
பானாட் கங்குலும் பகலும்
ஆனா தழுவோள் ஆய்சிறு நுதலே"

(அகநானூறு - 57)

அகத்திணை நோய் பற்றிய இளிவரல்

திதலை மாமை தளிர்வனப்பு அழுங்கப்
புதலிவர் பீரின் எதிர்மலர் கடுப்ப
பசலை பாய்ந்த நுதலேன் ஆகி
எழுதெழில் மழைக்கண் கலுழ நோய்கூர்ந்து
ஆதி மந்தியின் அறிவு பிறிதாகிப்
பேறுற் றிசினே காதலம் தோழீஇ
....
காடிறந் தனரே காதலர் .....
கலங்கின்று மாதுஅவர்த் தெளிந்தஎன் நெஞ்சே

(அகநானூறு - 135)

அகத்திணை நோய் பற்றிய மருட்கை

மலர்தார் மார்பன் நின்றோன் கண்டோர்
பலர்தல் வாழி தோழி அவருள்
ஆரிருட் கங்குல் அணையோடு பொருந்தி
ஓர்யா னாகுக தெவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே.

அகநா. 82
(மருட்கையில் புதுகை)

அகத்திணை நோய் பற்றிய அச்சம்

ஒருஉநீ ளங்கூந்தல் கொள்ளல்யாம் நின்னை
வெருஉதும் காணுங்கடை

(கலித்தொகை 87)

அகத்திணை நோய் பற்றி வந்த பெருமிதம்

வல்லார்முன் சொல்வல்லேன் என்னைப் பிறன்முன்னர்
கல்லாமை காட்டி யலள்

(கலித்தொகை 141)

அகத்திணை நோய்பற்றி வந்த வெகுளி

செய்தவறு இல்வழி யாங்குச் சினவுவாய்

(கலித்தொகை 97)

அகத்திணை நோய்பற்றி வந்த உவகை

துயிலின்றி யாம்நீந்து தொழுனையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வாள்மன்னோ

(கலி. 39)

அகத்திணை இன்பம் பற்றி வந்த நகை

நள்ளென் கங்குல் கள்வன் போல
அகன்றுறை யூரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பறந்த மாறே

(நற்றிணை 40)

அகத்திணை இன்பம் பற்றி வந்த அழுகை

வேர்ப்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை
கந்துபிணி யானை அயாளயிர்த் தன்ன
என்னூழ் நீடிய வேய்பயில் அழுவத்துக்
குன்றூர் மதியம் நோக்கி நின்றுநினைந்து
உள்ளிளென் அல்லனோ யானே முள்ளெயிற்றுத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
எமதும் உண்டோர் மதிரால் திங்கள்
உரறுகுரல் வெவ்வளி எடுப்ப நிழற்பல
உலவை யாகிய மரத்த
கல்பிறங்கு மாமலை உம்பர∴ தெனவே

(நற்றிணை 62)

அகத்திணை இன்பம் பற்றி வந்த இளிவரல்

பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து
தழையும் தாரும் தந்தனன் இவனென

இழையணி ஆயமொடு தருநாள் தடைஇத்
தைத்திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள் அல்லது
மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே

(நற்றிணை 80)

அகத்திணை இன்பம் பற்றிவந்த மருட்கை

பொன்னும் மணியும் போல

(நற்றிணை 166)

அகத்திணை இன்பம் பற்றி வந்த அச்சம்

சேறும் சேறும் என்றலின் பலபுலந்து
செல்மின் என்றால் யானஞ் சுவலே
செல்லா தீமெனச் செப்பில் பல்லோர்
நிறுத்தெறி புன்சொலின் திறத்தஞ் சுவலே
அதனால்,
செல்மின் சென்றுவினை முடிமின் சென்றாங்கு
அவன்நீ டாதல் ஒம்புமின் யாமத்து
இழையணி ஆகம் வடுக்கொள முயங்கி
உழையீ ராகவும் பணிப்போள் தமியே
குழைவான் கண்ணிடத்து ஈண்டித் தண்ணென
வாடிய இளமழைப் பின்றை
வாடையும் கண்டிரோ வந்துநின் றதுவே.

(நற்றிணை 229)

அகத்திணை இன்பம் பற்றி வந்த பெருமிதம்

மையற விளங்கிய மணிநிற விசும்பின்
கைதொடு மரபின் இளமீன் போலப்
பெருங்கடற் பரப்பின் இரும்புறந் தோயச்
சிறுவெண் காக்கை பலவுடன் ஆடும்
துறைபுலம் புடைத்தே தோழி பண்டும்
உள்ளூர்க் குரீஇக் கருவுடைத் தன்ன
பெரும்போ தவிழ்ந்த கருத்தாட் புன்னைக்
கானலங் கொண்கன் தந்த
காதல் நம்மொடு நீங்கா மாறே.

(நற்றிணை 131)

அகத்திணை இன்பம் பற்றிவந்த வெகுளி

... . ஊர
வெய்ய போல முயங்குதி முளையெழத்
தெள்வார்த் தேய்த்த செவ்வேல் வயவன்
மலிபுனல் வாயில் இருப்பை அன்னளன்
ஒலிபல் கூந்தல் நலம்பெறப் புனைந்த
முகையவிழ் கோதை வாட்டிய
பகைவன் மன்யான் மறந்தமை சிலனே

(நற்றிணை 216)

அகத்திணை இன்பம் பற்றி வந்த உவகை

பாம்பனைச் செறிய முழங்கி அலனேர்பு
வான்தளி பொழிந்த காண்பின் காலை
அணிகிளர் கலாவம் ஐதுவிரித்தியலும்
மணிபுலா எருத்தின் மஞ்ஞை போலநின்
வீடுபெய் கூந்தல் வீசுவளி உறழ
ஏகுதி மடந்தை எல்லின்று பொழுதே
வேய்பயில் இறும்பின் கோவலர் யாத்த
ஆவண் தெள்மணி இயம்பும்
உதுக்காண் தோன்றும்எம் சிறுநல் லூரே

(நற்றிணை 264)

அகத்திணை நோய் பற்றிய அழுகை...

இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தோ றழூந்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண் என்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண

(புறநானூறு 164)

புறத்திணை - நோய்பற்றிய இளிவரல்

தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொல்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே

(புறநானூறு)

புறத்திணை நோய் பற்றிய மருட்கை

கருந்தலையும் வெண்ணினமும் செந்தடியும் ஈளிப்
படுந்தோ டெருவை படர - அருந்திறல்
வேறாய மன்னர் வியப்பக் கடாயினான்
மாறா மறவன் மறம்.

(புறப்பொருள் வெண்பாமாலை)

புறத்திணை நோய் பற்றிய அச்சம்

புறப்பொருள் வெண்பாமாலையுள் வெருவருநிலை என்ற முறையே இதற்கு எடுத்துக்காட்டாம்.

புறத்திணை நோய் பற்றிய பெருமிதம்

வானம் இறைவன் படர்ந்தென வாள்துடும்பா
மானமே நெய்யா மறம் விற்காத் தேளிமிரும்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்
தெள்ளழலுள் வேட்டான் உயிர்.

(புற. வெண்பாமாலை)

புறத்திணை நோய் பற்றிய வெகுளி...

நின்மகன்
பழையழிந்து மாறினள் என்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவன் யான்எனச் சினைஇ

(புறநானூறு 278)

புறத்திணை நோய் பற்றிய உவகை...

படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

(புறநானூறு 278)

புறத்திணை இன்பம் பற்றிய நகை...

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்

(புறநானூறு 72)

புறத்திணை இன்பம் பற்றிய இளிவரல்...

முத்துத்தலை இறைஞ்சிய நின்னொடு யானே
போர்த்தொழில் தொடங்க நாணுவல்

(பேராசிரியர் மேற்கோள்)

புறத்திணை இன்பநிலையில் அச்சம்...

மாணின்மை செய்யுங்கால் அச்சமாம்

(பிறர்மனை சேர்தல் நாலடி)

புறத்திணை இன்பநிலையில் பெருமிதம்

கோட்டங் கண்ணியும் கொடுந்திரா ஆமையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்
ஒத்தன்று மாதோ இவற்கே தெற்றிய
திணிநிலை அலறக் கவை போழ்த்துதன்
வடிமான் எஃகம் கடிநிகத் தேந்தி
ஒம்புமின் ஒம்புமின் இவண்என ஒம்பாது
தொடர்கோள் யானையின் குடர்கால் தட்ப
கன்றமர் கறவை மான
முன்சமத் தொழிந்ததன் தோழற்கு வருமே

(புற. 275)

புறத்திணை இன்ப நிலையில் வெகுளி - 7

உறுதுப் பஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தகை

(புறநானூறு 72)

புறத்திணை இன்பநிலையில் உவகை...

வையை வருபுனல் ஆடல் இனிதுகொல்
செவ்வேற்கோ குன்றம் நுகர்தல் இனிதுகொல்
வைவேல் நுதியன்ன கண்ணார் துணையா
வழியைக் குந்து மருடல் நெடியான்
னெடுமாடற் கூடற் கியல்ப

(பரிபாடல்)

3
இலக்கியப் பாகுபாடு

'தமிழில் காணப்படும் இலக்கியப் பாகுபாடு' என்ற கட்டுரையை எழுதுவதற்கு முன்பு இலக்கியங்களைப் படைப்பதற்குக் கருவியான நூல்கள் இருந்தனவா என்பதைப் பற்றி ஆராய்வோம். கருவி நூல் என்று இங்கே கருதுவது இலக்கண நூலேயாகும். இலக்கண நூலுக்குப் 'புலன்' என்று தொல்காப்பியர் காலத்தில் பெயர் இருந்திருக்கிறது. தொல்காப்பியப் பாயிரம் 'முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோன் தொல்காப்பியன்' என்று கூறுகின்றதை நோக்குக. தொல்காப்பியரே 'புலன்நன்கு உணர்ந்த புலமையோர், (அகத்திணையியல் 14) புலன் உணர்ந்தோர்' (செய்யுளியல் 233) என்று கூறுகின்றனர். இலக்கணத்தைப் புலன் என்று குறித்தமைக்கு ஏற்ப அவ் விலக்கண நெறியைக் கொண்டு செய்யப்படும் இலக் கியத்தைப் புலன்நெறி வழக்கம் என்னும் பெயரால் தொல் காப்பியர் குறிப்பிடுகிறார்.

புலன்நெறி வழக்கம்

'புலன்' என்ற சொற்குப் பொருள்களைப் புலப்படச் செய்யும் அறிவு என்பது பொருள். அச்சொல் இலக்கண நெறிகளைப் புலப்படுத்துகின்ற இலக்கண நூலுக்கும் பெயராக வருகிறது. அவ்விலக்கண நூல்வழி நின்று இயற்றப்படும் இலக்கியங்களைத் தொல்காப்பியர் புலனெறி வழக்கம் என்று குறிக்கின்றார். இதற்குச் செய்யுள் வழக்கம், நூல்நெறி வழக்கம் என்ற பெயரும் உண்டு. புலன் என்ற பண்புப்பெயர் பண்புக்கு ஆகுபெயராக வந்தது என்று கருதினால் புலன் - புலவர்; புலன்நெறி வழக்கம் - புலவர் ஆற்று வழக்கம் என்றும் ஆகும். தொல்காப்பியர் 'நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறு, புலவர் ஆறு என்று கூறியுள்ளனவற்றையும் நோக்குக. எனவே புலனெறி வழக்கம் என்றதை, நூல்நெறி வழக்கம் என்றும், அந்நூலினை உணர்ந்த புலவராற்று வழக்கம் என்றும், இருவகையாகப் பொருள்கொள்ளலாம். தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு

முன்பும் புலன் என்ற இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பது தெரிகின்றது.

புலனெறி வழக்கிற்கு உறுப்பு

"நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" (அகத்திணையியல் 56) என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி, புலனெறி வழக்கிற்கு நாடக வழக்கும் உலகியல் வழக்கும் உறுப்பாகும். இங்கே நாடக வழக்கென்பது: "சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தாலும் குலத்தாலும் ஒழுக்கத்தாலும் அன்பினாலும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும்; அவ்வழிக் கொடுப்போருமின்றி அடுப்போருமின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும்; பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கணவகையினால் வரைந் தெய்தினார் எனவும் பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல். உலகியல் வழக்கமாவது: உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது என்பர் இளம்பூரணர்.

புலனெறி வழக்கம் என்பது, அகப்பொருள் பற்றியதா? புறப்பொருள் பற்றியதா?

'புலவர் ஆறு' (செய்யுளியல் 94) என்றாற்போல, 'புலனெறி வழக்கம்' என்றாதல் 'புலனெறி' என்றும் சொல் பொதுவாக உள்ளது. 'புலனெறி வழக்கம்' என்றாலும் அச்சொல் பொதுவாகக் கருதப்பட்டு அகத் திணை புறத்திணைப் பொருள்களில் வரலாம். ஏன் எனில்? அகத்திணைப் பொருளும் புலனெறி வழக்கிற்குரியது; புறத்திணைப் பொருளும் புலனெறி வழக்கிற்குரியதுதான். புலனெறி வழக்கினைக் குறிப்பிடும் 'நாடக வழக்கினும்' என்ற நூற்பா அகத்திணையியலில் வந்திருப்பது கொண்டு புலனெறி வழக்கம் என்பது அகத்திணைக்கே உரியதென்று கொள்வது பொருத்தமாக இல்லை. நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும் பாடப்படும் புலனெறி வழக்கம் அகப்பொருள் பற்றி வருமேயானால் கலிப்பாவாலும்

பரிபாடலாலும் புலனெறிவழக்கப்படுதலாம் என்பதே அந்நூற்பாவின் பொருளாகும். இளம்பூரணர் மேலே கூறியுள்ள விளக்கத்தில் நாடக வழக்கத்திற்குச் சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல் என்பதும் உலகியல் வழக்கத்திற்கு உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது என்பதும் பொது விளக்கமாகும்.

இலக்கண நூலின்நெறிமுறைப்பட அகப்பொருள் புறப்பொருள் செய்திகளை நாடக வழக்கத்தினாலோ உலகியல் வழக்கத்தினாலோ புலவன் செய்யுள் செய்வது புலனெறி வழக்கமாம். அதனைச் செய்யுள் வழக்கத்தில் ஒரு பகுதி என்றுதான் கூறல் வேண்டும்.

திராவிடப் பிரகாசிகை என்னும் தமிழ் வரலாறு நூல் எழுதிய சிவத்திரு சபாபதி நாவலர் அவர்களும் செந்தமிழ் வழக்கு என்னும் தலைப்பின்கீழ் 'செந்தமிழ் வழக்கு, உலகியல் வழக்கும் புலனெறி வழக்கும் என இரண்டு வகைப்படும். உலகியல் வழக்கெனினும் உரையெனினும் நடையெனினும் ஒக்கும். புலனெறி வழக்கெனினும் செய்யுள் வழக்கெனினும்... ஒக்கும்' என்று எழுதியுள்ளார். ஆனால், தொல்காப்பியர் புலனெறி வழக்கத்தினையும் வாய்மொழியிலக்கியத்தையும் செய்யுள் என்னும் பொதுப்பெயரால் குறித்தலால் புலனெறி வழக்கினைச் செய்யுளில் ஒரு பகுதி என்றுதான் கொள்ள வேண்டும்.

செய்யுள் வகை

பிற்கால இலக்கண நூலார் செய்யுளைப் பா என்றும் பாவினம் என்னும் இரண்டு வகையாகப் பிரிப்பர். 'செய்யுள் தாமே மெய்பெற விரிப்பின் பாவே பாவினம் எனவிரண்டாகும்' என்பது (செய்யுள் இயல் - 1) யாப்பருங் கலம். ஆனால் தொல்காப்பியர், செய்யுளை எழுநிலமா யெழுந்த பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும், பிசியும், அங்கதமும், முதுசொல்லும் என்னும் 'எழுவகை யாகப் பிரிக்கின்றனர்.

'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்'

(தொல் - செய்யுளியல் - 78)

மேற்குறிப்பிட்ட எழுநிலத்தெழுந்த செய்யுட்களை அடிவரையறையுள்ளது என்றும், அடிவரையறையில்லாதன என்றும் இரண்டாகப் பிரித்தோதி, அடிவரையறை யில்லாதன ஆறு என்றும், அவை நூலும் உரையும் பிசியும் முதுமொழியும் மந்திரமும் குறிப்பும் என்னும் பெயரின என்றும் தொல்காப்பியர் கூறுவர்.

மேற்கருத்தைக் கூறும் தொல்காப்பிய நூற்பாவைக் கீழே காண்க.

'எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப'

(157 செய்யுளியல்)

'அவை தாம்
நூலி னான புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான' *(158 செய்யுளியல்)*

எழுவகைச் செய்யுளை வேறு வகையாகவும் பிரிக்கலாம். பாட்டு முதலான எழுவகைச் செய்யுளை அடிபற்றி, அடிவரையறை உடையன அடிவரையறையில்லாதன என்று தொல்காப்பியர் பிரித்து ஓதியுள்ளார். அந்த ஏழின் இயல்பைக் கருதினால் அவற்றைப் பா அல்லது பாட்டென்னும் செய்யுள், இலக்கணம் அல்லது நூல் செய்யுள், உரைச் செய்யுள், பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்பு என நான்கு வகைப்படும். வாய்மொழிச் செய்யுள் நான்கு கூறாகப் பிரிக்கலாம்.

எழுவகைச் செய்யுளில் பாட்டு

எழுவகைச் செய்யுளில் பாட்டு ஒன்றாகும். இப் பாட்டினை எழுவகைச் செய்யுளில் முதலாவதாகத் தொல்

காப்பியர் ஓதுவதைக் கொண்டே இதன் சிறப்பினை உணர்ந்து கொள்ளலாம். இப்பாட்டு அல்லது ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என நான்கு பிரிவாக நடைபெறும் என்பர் அவர்.

'ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே'

(101 செய்யுளியல்)

பாவிற்கு உரிய பொருள் - அறம் பொருள் இன்பம்

எழுவகைச் செய்யுளில் பா என்னும் பாட்டு ஆசிரியம் வஞ்சிவெண்பா கலியென நான்கு வகையாக வரும்பொழுது. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று முதற்பொருட்கும் அவை உரிமையாக வரும் என்பர். தொல்காப்பியர் இவ்விடத்தே நான்கு பாவிற்கும் அறம், பொருள், இன்பம் என்னும் மும்முதற் பொருள்களை உரிமை செய்துள்ளனர் என்பது உணரத்தக்கதாம்.

செய்யுள் வகையில் ஒன்றாகிய நூல், புலம் அல்லது புலன் என்கின்ற இலக்கண நெறியை இயம்புவதாகும். இது தொல்காப்பியர் காலத்தே எழுத்திலக்கணம் சொல் லிலக்கணம், பொருளிலக்கணம் என்று மூன்று பிரிவாகவும், பிற்காலத்தே அம்மூன்றும் யாப்பிலக்கணம் அணியிலக்கணம் என்னும் இரண்டும் கூட ஐந்து பகுப்பாகவும் வழங்குகின்றன.

வாய்மொழி இலக்கியம்

ஏட்டில் எழுதப் பெறாமல் மக்கள் வாய்மொழியாகவே வழங்கிக் கொண்டிருக்கும் இலக்கியங்கள் உள்ளன. அவற்றுள் முதலாவது உரையாகும். இவ்வுரையானது பாட்டின் குறிப்பை உணர்த்துவனவாகவும் உலகமக்கள் வெவ்வேறு வகையாக வழங்கும் கிளவி வடிவாகவும் வரும். பாட்டின் குறிப்பினை உணர்த்தும் பொழுது இப்பாட்டு இன்னபொழுதில் இன்னாரால் இன்னாரைக் கருதிப் பாடப்பட்டதென்றும், இதற்குத் திணை துறை இவை என்றும் கூறி வரும். இங்கே உரை பாட்டிற்குப் பயன்படு

கின்றது. அவ்வாறின்றி உலக மக்கள் கற்பனையாகப் படைத்துக் கூறும் நகைச்சுவை முதலியனவற்றைத் தழுவிய கதை என்னும் கிளவி வடிவாகவும் அது வருகிறது. எனவே 1. உரை பாட்டிற்குப் பயன்பட்டும் வாய்மொழி இலக்கியமாக வந்தும் இரு நிலையை உடையதாக உள்ளது. 2. பிசி என்பது மக்களுக்குள் வாய்மொழியாகவே வழங்கி வரும் விடுகதையாகும். இதனை மக்கள் வெடி என்று வழங்குவர். விடுதல் என்னும் சொல் வெடி என மருவி வழங்குகின்றது. 3. முது மொழியைத் தொல்காப்பியர் ஏது நுதலிய முதுமொழி என்று கூறுகின்றார். முதுமொழி என்றாலும் பழமொழி என்றாலும் ஒரு பொருளன. மக்கள் தங்களுக்குள் உரை யாடல் நிகழ்த்தும் பொழுது தம் கூற்றை வலியுறுத்துவதற்கே இதனைக் கூறுவார். இம்முதுமொழி ஏதுப்பொருளைக் கருதி எழுவதால் ஏது நுதலிய முதுமொழி என்பர். 4. மந்திர மானது மறைமொழி வாய்மொழி என்னும் பெயரைப் பெற்று வழங்குகிறது. வாய்மொழி என்னும் பெயரினைக் கருதின் இது ஏட்டில் எழுதப்படாமல் வாய்மொழியாகவே வழங்கினவே என்பதும் மறைமொழி என்னும் பெயரினைக் கருதி பிறர்க்குப் புலப்படாமல் மறைவாக வழங்குவ தென்பது விளங்கும். 5. குறிப்பு ஒருவரைச் சபிக்கிற தீங்கு மொழியாகும். இதனை அங்கதம் என்பர்.

மேற்கூறிய எழுவகைச் செய்யுளில் முதல் இடத்தைப் பெற்று விளங்கும் பா என்னும் பாட்டே மிகச் சிறந்ததாகும். இது புலனெறி வழக்கு என்று கூறப்படும். இது புலனெறி வழக்கு என்று கூறப்படுவதற்குத் தகுதியாகச் செய்யுள் இலக்கண நெறியைக் கொண்டு இயங்குகிறது.

செய்யுளில் பாட்டென்னும் வகை

'பாட்டரவம் பண்ணரவம்' என்னும் (திணைமாலை நூற்றைம்பது) பாட்டில் பாட்டின் ஓசை வேறாகவும் பண்ணின் ஓசை வேறாகவும் கூறப்பட்டிருக்கிறது. இங்கே பாட்டென்றது ஆசிரியப்பா முதலான இயற்றமிழ்ப் பாடல்களையாகும். பண் என்றது பண்ணத்தி என்னும்

இசைத்தமிழ்ப் பாடல்களையாகும். இயற்றமிழ்ப் பாட்டு ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி என்று நான்கு வகைப்படும்.

'ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே'

(101 செய்யுளியல்)

மேற்கூறிய நான்கு பாவேயன்றி வெண்பாவால் தொடங்கி ஆசிரியத்தால் முடியும் பாட்டும் உண்டு. இதனைப் பிற்காலத்தார் மருட்பா என்பர் (தொல். செய். 115)

ஆசிரியப்பா அகவலோசை உடையது. மூன்றடிச் சிறுமையும் ஆயிரம் அடிப்பெருமையும் உடையது. இவ்வாசிரியப்பாவால் எட்டுத்தொகை நூலுள் ஆறுதொகை நூல்கள் இயன்றுள்ளன. பத்துப்பாட்டும் பெருங்கதையும் மணிமேகலையும் இன்னும் பல நூல்களும் ஆசிரியப்பா வினாலேயே இயன்றுள்ளன.

வஞ்சிப்பா தூங்கலோசையால் வரும் இருசீரடியும் (குறளடியும்) முச்சீரடியும் (சிந்தடியும்) என்னும் இவ்வடி களால் இயன்று ஆசிரியச் சுரிதகம் பெற்று முடியும். பத்துப்பாட்டுள் பட்டினப்பாலை என்னும் பாட்டு ஆசிரிய அடி கலியடி முதலியவை கலந்து வந்து வஞ்சி நெடும்பாட்டாகும்.

வெண்பா அகவலோசையல்லாத ஓசையால் (செப்பல்) வரும். குறுவெண்பாட்டு நெடுவெண்பாட்டு பரிபாடல் கைக்கிளை அங்கதம் என ஐவகையாக வரும் குறுவெண் பாட்டு என்பது குறள் வெண்பா. நெடுவெண்பாட்டு என்பது (தொல்காப்பிய விதியின்படி) சிந்தியல், நேரிசை, இன்னிசை, பஃறொடை வெண்பாக்களைக் குறிக்கும்.

பரிபாடல் என்பது பல உறுப்புக்களைப் பெற்று நடக்கும். இது இரண்டு பிரிவாக வரும். ஒன்று, நான்கு பாக்களின் பகுதியும் வந்து தொகுத்து நோக்கும் வழி ஆசிரியப்பா என்றோ, வஞ்சிப்பா என்றோ, வெண்பா என்றோ கலிப்பா என்றோ கூறப்பெறாமல் பொதுவாய் நிற்கும். மற்றொன்று எழுத்து கொச்சகம் அராகம் ஆறு

உறுப்புக்களைப் பெற்று நடக்கும், கைக்கிளை என்பது ஒரு பாற்காமம், அங்கதம் என்பது வசை. இப்பொருள் பற்றி வெண்பா வரும்

கலிப்பா என்பது துள்ளலோசையைப் பெற்று வரும். இது ஒத்தாழிசைக் கலிப்பா, கலிவெண்பாட்டு, கொச்சகம், உறழ்கலி என நான்கு வகைப்படும். இந்நான்கில் ஒத்தாழிசைக் கலியும் கொச்சகமும் பல உறுப்புக்களைப் பெற்று நடக்கும். கலிவெண்பாட்டு என்பது ஒரு பொருள் நுதலியதாய் வெள்ளடியாய் இயன்று பாடுவோனது பொருள் முடிபே தன் அடி முடிவாக வரும். உறழ்கலி என்பது கூற்றும் மாற்றமுமாய் இயங்கிப் பாடுவோனது பொருள் முடிபே தனக்கு முடிவாகப் பெற்று வருவது.

தொல்காப்பியர் செய்யுளியல் 75ஆம் நூற்பாவில் உரையை இரண்டாவதாக ஓதியிருப்பினும் 158ஆம் நூற்பாவில் நூலை இரண்டாவதாக வைத்தே இலக்கணங் கூறுகின்றார். இந்நூல் என்பது தொல்காப்பியர் கருத்தின்படி எழுநிலத்தெழுந்த செய்யுளில் ஒன்றாகும். இது புலன் என்கிற இலக்கணத்தைக் கூறுவதற்கு எழுந்தது. இது அறம் முதலான முப்பொருளைக் கூறுவதன்று, ஆனால், எழுத்திலக்கணத்தையும், சொல்லிலக்கணத்தையும், அறம் முதலான முப்பொருளின் இலக்கணமாக பொருளிலக் கணத்தையும் கூறுவதாகும்.

இந்நூல் முதலும் முடிவும் மாறுகோளின்றி, முன்னே தொகுத்தோதிப், பின்னர், தொகுத்ததனை வகைப்படுத்திக் கூறி, காண்டிகை அகலம் என்னும் உரைக் கூறுகளோடு பொருந்தி, உணர்த்தும் இலக்கணத்தை நுண்மையாக விளக்கிச் செல்லும் இயல்பை உடையதாக இருக்க வேண்டும் என்பர் (செய்யுளியல் 159). அந்நூல் நூற்பா, முதுது, படலம், பிண்டம் என்று கூறப்படும் நான்கு வகையினைப் பெற்று நடக்கும் (செய். 161). அந்நான்கில் நூற்பா என்பது, "கண்ணாடி தம்முன் எதிர்ப்பட்ட பொருளை உள்ளது உள்ளபடியே காட்டுவதுபோல" எடுத்துக்கொண்ட பொருள் முற்றிலும் தெளிவாக விளங்குமாறு யாத்தமைத்தல் என்பர் (செய்யு. 162) இங்கே கூறிய 'ஆடி நிழலின், என்ற

உவமை மிக அரிய உவமையாகும். அடுத்தது ஒத்து என்ப தாகும். ஒத்தபொருளைக் கூறுவதனால் ஒத்து என்பது காரணப்பெயர். ஒத்த இனமான மணிகளை முறையறிந்து வரிசையாக வைத்தல்போல ஓரினமான பொருளை முறை யறிந்து ஒருவழி வைப்பது ஒத்தாகும் என்பர் (செய். 163). இங்கே கூறிய நேரினமணியை நிரல்பட வைத்தல் என்பதும் அரிய உவமையாகும். ஒன்றன் இலக்கணங்கள் பல திறத்தால் பிரித்துக் கூறப்பட்டு, ஒரு நெறியின்றி இயலுங் காலை அவ்விரவிய பொருட்குப் பொதுவிடமாயிருப்பது படலமாகும். விதி முதலாவனவற்றைக் கூறும் நூற்பா பலவற்றை அடக்கிக் கொண்டிருப்பது ஒத்து அல்லது இயல் என்றும், பல ஒத்தினை அடக்கிக் கொண்டிருப்பது பிண்டம் என்றும் (செய். 165) கூறப்படும்.

இளம்பூரணர் கூறும் மூன்று நூல்கள்

தொல் செய்யுளியல் 165 ஆம் நூற்பாவாகிய "மூன்றும் அடக்கிய தன்மைத் தாயின் தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப" என்னும் நூற்பாவுரையில் இளம்பூரணர் "அவற்றுள் சூத்திரத்தாற் பிண்டமாற்று இறையனார் களவியல்; ஒத்தினாற் பிண்டமாயிற்று பன்னிருபடலம்; அதிகாரத்தாற் பிண்டமாயிற்று தொல்காப்பியம். இவற்றை முறையே சிறுநூல், இடைநூல், பெருநூல் எனப்படும்" என்பர்.

உரை என்னும் செய்யுள்

உரை என்னும் செய்யுள் பாட்டிடை வைத்த குறிப்பென்றும், பாவின் றெழுந்த கிளவி என்றும், பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி என்றும், பொருளொடு புணர்ந்த நகை மொழி என்றும் நான்கு பிரிவாக இருந்தென்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

இவ்வுரைச் செய்யுளுக்குரிய வேறுபாட்டினைப் "பல சொல் தொடர்ந்து பொருள் காட்டுவனவற்றுள் ஓசை (அகவலோசை முதலியன) தழீயவற்றைப் பாட்டென்றார்; அவ்வோசையின்றிச் செய்யுள் தன்மைத்தாய் வருவது நூல் எனப்பட்டது (இதில் அகவல் முதலிய விகற்ப ஓசை யில்லாவிடினும் பாஅவண்ணத்திற்குக் காரணமாகிய ஓசை

யொன்று உண்டு) இவ்விரண்டு வகையுமின்றிவரும் ஓசை செய்யுள்" என்று வேறுபாடு கூறியுள்ளனர் இளம்பூரணர்.

மேலே கூறிய நான்கில் பாட்டிடை வைத்த குறிப் பென்பது "ஊர்க்கால் நிவந்த" என்னும் குறிஞ்சிக் கலிப்பாட்டுள்"இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து" என்றது உரைக்குறிப்பு. சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையுள்

"கயலெழுதிய இமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந்தண் பொழின்மன்னர்
ஏவல் கேட்பப் பாரரசாண்ட
மாலைவெண்குடைப் பாண்டியன் கோயிலுள்
காலை முரசும் கனைகுரலியம்புமாதலின்
நெய்ம் முறை நமக் கின்றாகுமென
ஐயைதன் மகளைக்கூய்க்
கடைகயிறும் மத்துங்கொண்
டிடைமுதுமகள் வந்துதோன்றுமன்"

என்றதும் அது" என்றனர் இளம்பூரணர்.

இளம்பூரணர் பாட்டிடை வைத்த குறிப்பு என்பதற்கு மேலே இரண்டுவகையான உதாரணத்தைக் காட்டியுள்ளார். அவ்விரண்டில் ஒன்று, பாவினிடையே வந்தும் பாக்களுக் குரிய ஓசையைப் பெறாமல் பாட்டின் பொருட்குறிப்பை உணர்த்தும் உரைத்தொடராய் வருவதாகும். மற்றொன்றுக்கு அவர்காட்டிய உதாரணம் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையுள் 'கயலெழுதிய' என்று தொடங்கும் உரை என்னும் செய்யுளாம். இது வாய்மொழியிலக்கியம் பலவகை வடிவில் இயங்குகிறது. இவ்வகையில் ஒன்று பெண்கள் பாடும் ஒப்பாரிச் செய்யுள். அச்செய்யுளை அவர்கள் இரண்டு வகையாகப் பிரித்திருக்கின்றனர். ஒன்று அழுதற்காகப் பாடுவது; மற்றொன்று மார்பில் அடித்துக் கொள்வதற்காகப் பாடுவது. இப்பாட்டு இரண்டு சீராலான வஞ்சிப்பாட்டைப் போல வரும். இது தாள அமைப்பை உடையது. பெண்கள்

இப்பாட்டைச் சொல்லித் தாளம் கொட்டுகின்றார் போல மார்பில் அடித்துக் கொள்வார்கள். இப்பாட்டினை அவர்கள் 'ஒரை' என்று கூறுகின்றார். இது 'உரை' என்பதன் திரிபாகும். அவர்கள் பாடிவரும் உரையில் ஒரு பகுதியைக் காண்க.

"சிட்டுக்கு ருவிகளே!
எங்க, சீதைதான் நூலிழக்க
உங்க சேனைக்குச் சம்மதமோ?"

இவ்வுரை தாலியறுப்பின்போது பாடியது. சிட்டுக் குருவிகளை விளித்து எங்கள் சீதை போன்ற இவள் இன்று தாலியறுக்க உங்கள் கூட்டத்திற்கெல்லாம் சம்மதம்தானா? என்று கேட்கின்றார்கள். இது இருசீர் வஞ்சிப்பாப் போலதான் உள்ளது. 'எங்க'. 'உங்க' என்று அடிமுதலில் கூனையும் பெற்றுள்ளது. 'சிட்டுக்குருவிகளே' என்னும் தொடரைப் பொருளுக்கியையப் பிரிக்காமல் தாளத்திற் கியையப் பிரித்துள்ளார்கள். இப்பாட்டு அகவல் ஓசையாகிய தூங்கலோசையைப் பெற்று நடக்கிறது. வாய்மொழி இலக்கியமாகிய இது உரை என்னும் செய்யுளாய் இருசீரடி வஞ்சிப்பாப் போல் வந்து நோயும் இன்பமும் என்னும் இரண்டில் நோய் பற்றி எழுந்து அழுகைச் சுவைக்கு உரியதாய்ச் சொல்லா மரபினவற்றை முன்னிலைப்படுத்திக் கூறுவதாய் வகையுளியும் தனிச்சொல்லும் வந்துள்ள நிலையை நோக்கினால் இந்த அமைப்பை எல்லாம் கல்வியறிவில்லாத பெண்கள் எப்படிக் கற்று இதனைப் பாடினர் என்னும் வியப்பே தோன்றுகிறது.

உரைச் செய்யுளில் பாவின்றெழுந்த கிளவியை இளம்பூரணர். "வழக்கின்கண் ஒரு பொருளை விளைவாரும் செப்புவாரும் கூறும் கூற்று" என்பர். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் "பாட்டின்றி சூத்திரத்திற்குப் பொருள் எழுவது போல்வன என்றும், ஒழிந்த பாட்டிற்கும் இவ்வாறே பொருள் எழுதின் அதுவும் இதனுள் அடங்கும் என்பர். இளம்பூரணர் தனித்தஉரைநடை இலக்கியத்தை இது குறிக்கும் என்பர். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்

இலக்கண நூற்பாக்களுக்கும் ஆசிரியப்பா முதலிய பாக்களுக்கும் எழுந்த உரையெல்லாம் இதனுள் அடங்கும் என்பர்.

'பொருள் மரபில்லாப் பொய்மொழியானும்' என்பது கட்டுக்கதையே. இது பாக்களுக்கு ஓதிய அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருண்மரபைக் கூறும் முறை போலல்லாமல் கூறப்படுவதாதலின், பொருண்மரபில்லா என்று கூறினர். பொய்ம்மொழி என்றால் நடவாதது. மக்களிடத்தே இப்பொய்மொழியாகிய கட்டுக்கதை பல நெறியால் படைக்கப்பட்டு வழங்குகிறது. இது பண்டு வாய்மொழி இலக்கியமே. இன்று தமிழெழுத்தாளர் பலர் இந்நெறிபற்றிச் சிறுகதை என்னும் பெயரால் நல்ல படைப்பினை எழுதி வருகின்றனர்.

"பொருளொடு புணர்ந்த நகை மொழி" என்பது இளம் பூரணர் மேலதைச் சுட்டி, ஒருவன் பொருண்மரபறியாமல் பொய்க்கட்டுரை எழுதினான், மற்றொருவன் மேற்குறிப்பிட்ட கட்டுரையை எள்ளி நகையாடி உண்மைக்கட்டுரை (பொருளொடு புணர்ந்த) எழுதுவான். அது பொருளொடு புணர்ந்த நகைமொழியாயிற்று என்பர். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இதனை உண்மையோடு கூடிய நகைச்சுவைக் கதை என்பர். வாய்மொழி இலக்கியத்தில் இதனை வேடிக்கைக்கதை என்பர்.

தொல்காப்பியர் நான்கு வகையாகக் குறிப்பிட்ட உரை நடைகளில் முதலிரண்டு புலவராற்று வழக்கிற்கும் உரியதாய் வருகின்றன. பின் இரண்டு பழைய காலத்தில் வாய்மொழி இலக்கியமாகவே வளர்ந்து வந்துள்ளன.

தொல்காப்பியர் உரைநடை வகை நான்கு என்று கூறியுள்ள நூற்பாவை அடுத்து,

'அதுவே தானும் இருவகைத் தாகும்' (168)

என்றும்

'ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே' (169)

என்று இரண்டு நூற்பாக்களைக் கூறியுள்ளனர். அதற்கு இளம்பூரணர் மேற்சொன்ன நான்கில் ஒவ்வொன்றும் இருவகையாக விரியும்; அவ்விரண்டில் ஒன்று செவிலி கூறுதற்கு உரியதாம்; மற்றொன்று எல்லோருக்கும் உரியதாம் என்பர். அவ்வாறின்றி அந்நான்கில் ஈற்றில் நின்ற பொருளொடு புணர்ந்த நகைமொழியானது செவிலிக்குரித் தென்றும் ஏனையோர்க்குரித்தென்றும் இருவகையாம் என்றும் உரை கூறுகின்றனர். பேராசிரியரும் நச்சினார்க் கினியரும் மேற்சொன்ன நான்கும் ஒன்றும் இரண்டும் ஒரு கூறாகவும், மூன்றும் நான்கும் ஒரு கூறாகவும் ஆகி இரண்டு வகையாம். அவ்விரண்டில் செவிலிக்கு மேல் நின்ற அதிகாரத்தால் மூன்றும் நான்கும் செவிலிக்கு உரித்தாகவும் ஒன்றும் இரண்டும் ஏனையோர்க்குரித்தென்றும் கூறுவர்.

பிசி

பிசி என்றால் என்னவெனின், 'ஞாபகமும் பிசியும் அரும்பொருள் நடையே' என்னும் திவாகர நூற்பாவின் படி, உணர்தற்கரிய பொருள் நடையை உடையது எதுவோ, அது பிசியாகும். பிசியோடு ஒத்த ஒன்றினை ஞாபகம் என்று திவாகரம் கூறுகின்றது. யாப்பருங்கல விருத்தியானது சூத்திரவகையில் ஞாபகச் சூத்திரம் என்றொரு வகையைக் குறிப்பிட்டு 'ஞாபகச் சூத்திரமாவது எளிதும் சிறிதுமாக இயற்றற்பாலதனை அரிதும் பெரிதுமாக இயற்றிப் பிறிதொரு பொருளை அறிவிப்பது' என்று விளக்கங் கூறுகிறது. இவற்றையெல்லாம் வைத்து ஆராய்ந்து பார்த்தால், பொருளை எளிதாகப் புரிந்து கொள்ளாதபடி, அதனை மிகவும் கருதி உணருமாறு, அதற்குள்ள நடையில் (அரும் பொருள்நடை) ஒதுவதே பிசி என்பதாகும். பிசியைப் பிதிர் என்றும் வழங்குவர். 'மூதுரைப் பெருங்கதைகளும் பிதிர்களும் மொழிவார்' (கம்பராமா. சுந்தர - ஊர்தேடுபடலம் செய்.139) என்னும் கம்பன் பாட்டை நோக்குக.

பிதிர் என்பதன் பொருளைப் பிங்கலம் 'துவலையும் நொடியும் கதையும் பிதிரே' என்று கூறுகிறது. இக்காலத்தில்

பிதிர் என்பது புதிர் எனத் திரிந்து வழங்குகின்றது. தொல்காப்பியர் பிசியை' நொடியொடு புணர்ந்த பிசியினான' (செய். 158) என்பர். நொடி ஒருவகைச் சொல்நடை, நொடியையும் பிசியையும் வெவ்வேறாகவும் கூறுவர்.

பிசியின் பயன்

நாட்டுப்புற மக்கள் ஒன்றனை நுழைந்து கருதி ஆராய்ந்து உணருமாறு அவர்கள் அறிவதற்குப் பயிற்சி தருவது இப்பிசி என்னும் செய்யுளின் செயலாகும். இதனைக் கற்றோர். பிசி, ஞாபகம், அரும்பொருள் நடை, பிதிர், புதிர் என்று வழங்குகின்றனர். கல்லாதோர் வெடி என்று வழங்குகின்றனர். இது விடு (விடைகூறு) என்னும் சொல்லின் மரூஉவாகும்.

தொல்காப்பியர் கூறும் இலக்கணம்

தொல்காப்பியர் அடிவரையறையில்லாமல், நொடி என்னும் நடையைப் பெற்று ஒப்பொடு கூடிய உவமை யாலும், தோன்றுவது கிளந்த துணிவினாலும் இப்பிசி வரும் என்பர், ஒப்பொடு கூடிய உவமை

'கிண்ணம் போலே பூப்பூக்கும்
கிடாரம் போலே காய் காய்க்கும் அது என்ன?'

என்பது இதனை விடுவிப்பவன் கருதியுணர்ந்து, பரங்கி அல்லது பூசணிக்கொடி என்று விடை கூறுவான். தோன்றுவது கிளந்த துணிவினாலும் என்பது

காயும் கோணற்காய் கொள்ளடா மைத்துனா
கதையும் விடுவித்தேன் சொல்லடா மைத்துனா

என்று வரும், இது கொள் என்னும் செடி காய்க்கும் காயைப் பற்றிக் கூறுகிறான். கொள்ளடா மைத்துனா என்றதில் கொள் என்பது தோன்றுவது கிளந்த துணிவு.

இப் பிசியைத் தொல்காப்பியர் சொல்லதிகாரத்தே 'மெய்ந்நிலை மயக்கு' (எச்சவியல் - 53) என்ற கூறி, இது ஒரு திணைப்பெயர் மற்றொரு திணைக்காய் வரும் என்பர். இந்நூற்பாவுரையில் சேனாவரையர் 'மெய்ந்நிலை மயக்கின் ஆகுபுரவும்' என்றது பொருண்மயக்காகிய பிசிச்செய்யுட்கண்

திணை முதலாயின் திரிந்து வருவனவும் என்றவாறு. அவை

'எழுதுவரிக் கோலத்தார் ஈவார்க் குரியார்
தொழுதிமைக் கண்ணணைந்த தோட்டார் - முழுதகலா
நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
பேணற் களமந்தார் பெரிது'

என்பது புத்தகம் என்னும் பொருள்மேல் திணை திரிந்து வந்தவாறு கண்டுகொள்க' என்பர்.

முதுமொழிச் செய்யுள்

தொல்காப்பியர் 'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே. அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்' (செய். 75) என்னும் நூற்பாவில் முதுசொல் என்று கூறுகின்றார். இளம்பூரணர் இந் நூற்பாவுரையில் 'பழமொழி யாப்பு' எனக் கூறுகின்றார். தொல்காப்பியர் செய்யுளியல் 158ஆம் நூற்பாவில் இதனை ஏதுநுதலிய முதுமொழி என்று குறிப்பிட்டு இது அடிவரையறையில்லாமல் வரும் என்பர். இவர் முன்னர்ச் சொல்லதி காரத்தே 'தொன்னெறி மொழி வயின் ஆசு குர்வும்' (எச்சவியல் 52) என்று குறிப்பிட்டுள்ள இந்நூற்பாவுரையில் சேனாவரையர் 'தொன்னெறி மொழி யின் ஆசுகுரவும்' என்றது முதுசொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும்' என்று கூறி' இவையெல்லாம் வழங்கியவாறே கொள்வதல்லது இலக்கணத்தான் யாப்புறவுடையவல்ல என்பர். இதன் இலக்கணத்தை

'நுண்மையும் சுருக்கமும் ஒளியு டைமையு
மெண்மை மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப'

என்னும் நூற்பாவால் தொல்காப்பியர் நுவன்றுள்ளார். கூரிதாதல் சுருங்கி விளங்கல் விழுமிதாதல் எளிதில் பொருள் தெரிதல் என்னும் நான்கு இலக்கணத்தை உடைய தாகி கருதிய பொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக் கருதிய முதுமொழி என்ப.

'இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்

காப்பவர் கண்டறியார் கொல்லோ - பரப்பில்
துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப
இறைத்தோறும் ஊறும் கிணறு' (378)

என்னும் பழமொழிப் பாடலை நோக்குக. இதில் 'இறைத் தோறும் ஊறும் கிணறு' என்பது பழமொழி.

மந்திரம்

தொல்காப்பியர் மந்திரத்தை வாய்மொழி என்று (செய். 75) குறிப்பிடுகின்றார். ஏட்டிலே எழுதி வைக்கப் பெறாமல் வாய்வழியாகவே வழங்கிவருதலான் மந்திரத்தை வாய்மொழி என்றே கூறுவர். இதனை அவர் பின்னர் 'மறைமொழி கிளந்த மந்திரம்' என்று கூறி, இது அடி வரையறையில்லாமல் வரும் என்பர். இதனைச் சொல் லதிகாரத்தே 'மந்திரப் பொருள்வயின' ஆகுநவும் (எச். 33) என்று கூறியுள்ளார். இந்நூற்பா வுரையுள் சேனாவரையர் மந்திரப் பொருட்கண் அப்பொருட்குரித்தல்லாச் சொல் வருவனவும் என்று கூறி இதற்குதாரணம் மந்திர நூல் வல்லார் வாய்க்கேட்டுணர்க' என்றனர், ஆனால் இளம்பூரணர்,

'திரிதிரி சுவாகா கன்றுகொண்டு
கறவையும் வர்த்திக்கச் சுவாகா'

என்றனர். இது கறவைப்பசு பால் கறக்கவிடாமலும் கன்றினை ஊட்டுவதற்கு விடாமலும் இருக்கும்பொழுது மந்திரிப்பவன் கூறும் மந்திரமாகும். கன்று ஊட்டுதல் கொள்ளவும் கறக்கும் பால் பெருகவும் வேண்டுமென்று மந்திரம் வல்லவன் கருதுகிறான். இம்மந்திரச் செய்யுள் இலக்கணத்தை

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழி தானே மந்திரம் என்ப

என்று தொல்காப்பியம் கூறுகின்றது. மந்திரமாகிய செய்யுளை செய்வதற்கு உரிய ஆசிரியர் நிறைமொழி மாந்த ராவார். நிறைமொழி மாந்தராவார் யார் என்னின்? அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வச் சொற்களின் பொருண்மை யாண்டும் என்றும் குறையின்றி நின்று அவ்வப்

பயன்களை அவ்வப்பொழுதே பயக்கத்தக்க சொல்லாற்றலை யுடைய மேலோராவார். அவர்கள் ஆணையாலே ஒருவன் வாழவும் சாவவும் கருதிச் செய்யப்பட்ட மந்திரம் என்க. இது கருதுவது என்ற பொருளில் மந்திரம் என்னும் ஏட்டில் எழுதினால் ஆற்றல் கெடும் என்று கருதி வாய்மொழியாகவே வழங்குதலின் வாய்மொழி என்றும், மறைந்து வழங்கலின் (இரகசியமாக வழங்கலின்) மறைமொழி என்றும் பெயர் பெற்றது என்க.

தொல்காப்பியர் 75ஆம் நூற்பாவுள் எழுநிலத்தெழுந்த செய்யுளைக் குறிப்பிடும் பொழுது அங்கதம் (செய்யுளியல் 75) என்ற ஒன்றினைக் குறிப்பிட்டுள்ளார். பின்னர் அடிவரை யறையில்லாத செய்யுளைக் கூறும்பொழுது 'கூற்றிடை வைத்த குறிப்பு' (செய. 158) என்று அதனைக் கூறுகின்றார். பின்னர் அக்குறிப்பு மொழியை

'எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே'

என்று கூறுகின்றார். இந்நூற்பாவுரையில் இளம்பூரணர் மேல் அங்கதம் என்று சொல்லி ஈண்டு குறிப்புமொழி என்றதனான் இச்சொல் வசை குறித்து வரும் என்று கூறி, இவ்வங்கதம் புகழ் குறித்து வந்தால் குற்றமென்னையெனில்? என்று வினாயெழுப்பிக் கொண்டு புகழை வெளிப்படை யாகக் கூறக் கேட்டார்க்கும் தனக்கும் இன்பம் பயத்தலின் குறிப்பினால் கூறல் வேண்டுவது வசையென்று கொள்ளப் படும் என்பர்.

இக்குறிப்புமொழி தன்னை உணர்த்துவதற்குரிய எழுத்தொடும் சொல்லொடும் கூடப் பெறாமல் கூறப்பட்ட பொருளுக்குப் புறம்பாய் நிற்கும் என்பர். இதனைக் கூற்றிடை வைத்த குறித்த என்றதனாலும் அங்கதம் என்றத னாலும் ஒருவன் கூறுகின்ற வாய் மொழியில் குறிப்பாய்த் தோன்றுகின்ற வசையே ஆகும் இது. இதற்கு எடுத்துக்காட்டு 'எனக்கு அவன் இன்ன தீங்கு செய்தான் அவன் நன்கு தன் மனைவி மக்களுடன் வாழட்டும்' அழிக என்று பொருள் கருதக் கிடந்தமையை உணர்க.

பாட்டின் வகை இரண்டு

ஒருவாறு எழுநிலத்தெழுந்த செய்யுள் வகையைப் படித்தோம். இனி அச்செய்யுளில் முதலாவதாய் விளங்கும் பாட்டின் வகைகளை ஆராய்வோம். தொல்காப்பியர் பாட்டு, பாக்கள் பற்றியும், பொருள் பற்றியும் இரண்டு வகையாக வரும் என்பர்.

'ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே' (செய். 107)

என்னும் நூற்பாவின்படி, பாட்டானது ஆசிரியப்பா வஞ்சிப்பா வெண்பா கலிப்பா என நான்காகப் பிரிகின்றது. இன்னும் வெண்பாவில் தொடங்கி ஆசிரியத்தால் முடியும் மருட்பாவும் உண்டு.

ஆசிரியத்தைப் பிற்காலத்தார் நேரிசை ஆசிரியப்பா இணைக்குறளாசிரியப்பா மண்டில ஆசிரியப்பா நிலை மண்டில ஆசிரியப்பா அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்காகப் பிரிப்பர். இந்நாலும் இன்னியல் விரவியல் என இரண்டாகப் பிரியும் என்பர்.

வஞ்சிப்பா இருசீரடி வஞ்சிப்பா முச்சீரடி வஞ்சிப்பா என இரண்டு விரிவாகி ஒவ்வொன்றும் இன்னியல் விரவியல் என இரண்டாகப் பிரியும்.

வெண்பாவானது தொல்காப்பியர் காலத்தில் குறுவெண்பாட்டு நெடுவெண்பாட்டு கைக்கிளை அங்கதம் பரிபாடல் என ஐந்து பிரிவினவாகி இயங்கிற்று, பிற்காலத்தே குறள்வெண்பா சிந்தியல் வெண்பா இன்னிசை வெண்பா நேரிசை வெண்பா பஃறொடை வெண்பா என ஐவகையாகி அவ்வொவ்வொன்றும் குறள் வெண்பா விகற்பக் குறள் வெண்பா வென்றும் நேரிசைச் சிந்தியல் வெண்பா இன்னிசை சிந்தியல் வெண்பா ஒரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா ஒரு விகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா, இருவிகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா ஒரு விகற்ப நேரிசை வெண்பா, இரு விகற்ப நேரிசை வெண்பா, ஒரு விகற்ப

இன்னிசை வெண்பா பலவிகற்ப இன்னிசை வெண்பா என்றும் ஒத்த விகற்பப் பஃறொடை வெண்பா ஒவ்வா விகற்பப் பஃறொடை வெண்பா என்றும் பிரிக்கப்பட்டு வழங்குகின்றன.

தொல்காப்பியர் காலத்தில் கலிப்பாவானது ஒத்தாழிசைக் கலிப்பா கலிவெண்பாட்டு கொச்சகம் உறழ்கலி என நான்கு வகையாக வழங்கப்பட்டது. பிற்காலத்தார் உறழ்கலியை நீக்கிவிட்டுக் கலிப்பா மூன்று வகையாக வரும் என்பர். தொல்காப்பியர் ஒத்தாழிசைக்கலி இருவகையாகப் பிரியும் என்று கூறிவிட்டு, அவ்விருவகையில் முதல்வகை தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்னும் நான்கினைப் பெற்று நடக்கும் என்பர். மற்றொரு வகை தேவரை முன்னிலைப்படுத்திப் பரவும் பொருளில் வரும் என்றும், அது வண்ணகம் ஒரு போகு என இருவகைப்படும் என்றும் அவ்வண்ணகம் தரவு தாழிசை எண்வாரம் என நான்கு வகை உறுப்பினைப் பெற்று நடக்கும் எனவும் ஒருபோகு என்பது தரவின் றாகித் தாழிசை பெற்றும்தாழிசையின்றித் தரவுடைத்தாகியும் எண் இடையிட்டுச் சின்னங் குன்றியும் அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியும் யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையதாய் வரும் என்பர்.

அம்போதரங்கம் என்பது கொச்சகம் அராகம் சிற்றெண் அடக்கியலாகிய வாரம் என்னும் ஐந்து உறுப்பினைப் பெற்று முப்பதடிச் சிறுமையும் அறுபதடிச் சிறுமையும் பெற்று வரும்.

கலிப்பாவில் இரண்டாவதாகிய கலிவெண்பாட்டு ஒரு பொருளைக் கருதி வெள்ளடியால் திரிபின்றி வரும் என்றனர் தொல்காப்பியர் (147 செய்)

மூன்றாவதாக் கூறிய கொச்சகக் கலிப்பா என்பது தரவும் சுரிதகமும் இடைஇடை வரப்பெற்றும் ஐந்துசீர் அடி அடுக்கியும் ஆறுவகை உறுப்பினைப் பெற்றும் வெண்பா வாலேயே நடக்கும்.

உறழ்கலி என்பது ஒருவன் கூறும் கூற்றும் அதற்கு மற்றொருவன் கூறும் எதிர் மாற்றமும் இடைஇடையே கலந்து சுரிதகம் இல்லாமல் வரும் என்பர்.

மருட்பா என்பது சமனிலை வியனிலை என இரண்டாகிப் புறநிலை வாயுறை வாழ்த்து செவியறிவுறூ கைக்கிளை என்னும் பொருள் பற்றி நடக்கும்.

பாக்களால் எழுந்த நூல்களில்

ஆசிரியமாலை, பரிபாடல், கலித்தொகை முதலியன பாக்களால் எழுந்த இலக்கியமாம்.

தொல்காப்பியர் ஆசிரியம் முதலிய நான்கும் அறம் முதலான முப்பொருள் பற்றி வரும் என்று கூறுவதால் அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப்பாலென மூன்று பகுப்பினைப் பெற்று இலக்கியம் நடைபெறுவதாயிற்று. அவர் பொருளை அகம் புறம் என இரண்டாகப் பிரித்தலின் அகப்பொருள் பற்றியும் புறப்பொருள் பற்றியும் இலக்கியம் எழுவதாயிற்று.

தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய வகைகள்

தொல்காப்பியர் வாழ்த்தியல்வகை என்ற இலக்கியப் பகுப்பைக் குறிப்பிட்டு அது நான்கு பாவிற்கும் உரித்து என்பர் (105 ஆம் செய்.). இளம்பூரணர் வகை என்றதனால் தெவ்வரை வாழ்த்தலும் முனிவரை வாழ்த்துதலும் ஏனையோரை வாழ்த்தலுமென அது மூவகைப்படும் என்பர். பேராசிரியர் 'வகை' என்றதனால் தனக்குப் பயன்படுதலும் பாரிக்கைப் பொருட்கும் பயன்படுதலுமென இருவகையான வாழ்த்தும் என்பதும் இனி முன்னிலையாக வாழ்த்துதலும் படர்க்கையாக வாழ்த்துதலுமென இருவகைப்படும் என்பதும் கொள்க. அங்ஙனம் வாழ்த்தப்படும் பொருளாவன கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன என்பர். அவற்றுள் கடவுளை வாழ்த்துவது கடவுள் வாழ்த்துச் செய்யுள் எனப்படும். ஏனைய அறுவகை வாழ்த்தெனப் படும் என்பர்.

இவையன்றி புறநிலை வாழ்த்து வாயுறை வாழ்த்து அவையடக்கியல் செவியறிவுறூ என்னும் நான்கு வகை இலக்கியத்தைக் குறிப்பிட்டு இவை கலிப்பாவிலும் வஞ்சிப்பாவிலும் வாரா என்பர். அவற்றுள் இரண்டு

வாழ்த்தாக வரும். வழிபடும் தெய்வம் நின்னை புறத்தே பாதுகாவலாய் நின்று காப்ப பழிப்பற்ற செல்வத்தோடு வழிவழியாகச் சிறந்து பொலிமின் என்று பாடப்படுவது புறநிலை வாழ்த்தாகும்.

வாயுறை

முன்னே கசந்து துவர்த்துப் பின்னே உறுதி பயக்கும் வேம்பும் கடுக்காயும் போன்றவெய்யவாய சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்கும் என்று கருதிப் பாதுகாத்துக் கிளக்கும் கிளத்தலால் உண்மையாக அறிவுறுத்துவது வாயுறை வாழ்த்து எனப்படும்.

(உறை - நீள்நோய் போக்கும் மருந்து. இப்பாட்டு உலக மக்களைத் திருத்துவதற்கென்றே எழுந்ததாம். திருக்குள் வாயுறை வாழ்த்தாகும் (திருவள்ளுமாலை 25)

அவையடக்கியல்

தொல்காப்பியர் அவை என்பதைப் பற்றி பல இடங்களில் கூறியுள்ளார்.

சொல்லதிகாரத்தே அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல் என்றொரு நூற்பா உண்டு. அவை என்பதற்கு இளம்பூரணர் நன்மக்கள் என்ற உரை கூறுவார். தெய்வச் சிலையார் அவைக்களம் என்பர். நன்மக்கள் நிறைந்த அவைக்களத்தே கூறத்தகாத சொல்லை மறைத்துக் கூறுக என்பர். புறத்திணையியலில் இவ்வவையை எட்டுவகை நுதலிய அவையம் என்பர். இதன் உரையில் இளம்பூரணர் குடிப்பிறப்பு கல்வி ஒழுக்கம் வாய்மை தூய்மை நடுவு நிலைமை அழுக்காறாமை அவாவின்மை என்னும் எட்டுப் பாகுபாட்டைக் கருதிய அவை என்பர். இவ்வாறு சிறந்த அவையத்தாளாக்கருதிக் கூறும் சொல் அவையடக்கியல் என்பது.

நச்சினார்க்கினியர் அவையடக்கியல் என்பது அவை அடக்கிய இயல் என விரியும். அஃது அவர் தன் பிழை பொறுத்து அடங்குமாற்றால் தன்னை இழித்துக் கூறி அவரைப் புகழ்வதாகும். அவைக்கண் தான் அடங்குதலாயின் 'அவையடங்கியல்' என்று பாடம் இருக்க வேண்டும் என்பர். அவையடக்கியலின் இலக்கணத்தை,

'அவையடக் கியலே அரில்தமத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தற்றே'

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். 'அவையடக்கியலைக் குற்றமற ஆராயின், வல்லாதனவற்றைக் கூறினாலும் அவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்க என்று எல்லா மாந்தர்க்கும் வழிபடுகிளவி கூறுவதாம்.

இது இலக்கியம் இலக்கண நூல் இவற்றின் முகப்பில் கூறப்படுகிறது. சொற்பொழிவானும் தொடக்கத்தில் அவையடக்கம் கூறுகின்றான். நாடகத்தொடக்கத்திலும் அந்நாடகத்தை நடத்துவோன் அவையடக்கம் கூறுவதுண்டு.

செவி அறிவுறூஉ:

செவி அறிவுறூஉ என்பது ஒருவர்க்குக் கேள்வி அறிவு உண்டாகுமாறு கூறி வாழ்த்துதல். 'கற்றில னாயினும் கேட்க' என்பது திருக்குள்.

'செவியுரை தானே
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே'

என்பது செவியறிவுறூஉவின் இலக்கணமாகத் தொல் காப்பியத்தே கூறப்பட்டுள்ளது. 'வாயுறை' என்றாற்போல ணொடு 'செவியுறை' என்றார். செவியுறை - செவி வழியாக அருந்தும் மருந்து. பெரியார் நடுவண் பெருக்கமின்றி அடங்கி வாழ்தல் கடன் எனச் செவிக்கண் அறிவுறுத்துவது செவியுறையாகும். இங்கே பெரியார் என்றது 'அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய்' என்னும் இவராவார். இந்நூற்பா பொதுவாயிருப்பினும்,

'மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி
அறந்தெரி கோலார் கடியவுரைத்தன்று'

என்னும் செவியறிவுறூஉவை விளக்கும் புறப்பொருள் வெண்பா மாலைக் கொளுவை நோக்கினால் இது அரச னுக்கு உரித்தாதல் புலப்படும். வாயுறைவாழ்த்தும் அரசற் குரியதென்பதைக் 'குஞ்சர வெல்படையான் கொள்ளானோ' என்னும் வெண்பாமாலை வாயுறை வாழ்த்தின் உதாரணச் செய்யுளை நோக்கி அறிக.

செவியுறை என்பது பெரியோரிடத்தே அடங்கி ஒழுக வேண்டும் என்பதை உணர்த்தினாலும் ஓர் அரசன் தன்குடி மக்களிடத்தே நடந்து கொள்ள வேண்டிய முறையையும் கூறுகின்றது. செவியுறைப் பொருளை எல்லா இலக்கியங் களிலிருந்து ஓரிடத்தே தொகுத்துப் படித்தால் நாட்டை ஆள்வோர் நடந்து கொள்ள வேண்டிய முறையெல்லாம் அங்கிருப்பதை உணரலாம். செவி அறிவுறூஉ என்பது புறத்திணையில் பாடாண்திணைத்துறைகளுள் ஒன்றாக வருகின்றன.

இத்துறைப்பாட்டு எட்டு உள்ள புறநானூற்றுள் அவை 2 ,3, 5, 6, 35, 40, 55, 184 என்னும் எண் உள்ளவையாகும்.

அரசநீதியை உணர்த்தும் செவியறிவுறூஉ

புறநூனூற்றில் இரண்டாவது பாட்டு பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது. அவர் கூறுகிறார். சேரலாதனே! நீ அரசியல் அறிவில் மிகச் சிறந்தவனாக உள்ளாய்; மண்திணிந்த நிலனைப் போல பகைவர் செய்யும் கொடுமைகளை அவரை வெல்லும் காலம் வரும்வரை பொறுத்துக் கொள்வாய்; நிலன் ஏந்திய விசும்புபோல அவரை வெல்லும் சூழ்ச்சியதகலத்தினை உடையை; விசும்பு தைவரு வளிபோல் பகைவரை வெல்லும் வலிமைகளை அடைவை; வளித்தலைஇய தீப்போலப் பகைவரை வெல்லுங்காலத்தில் வெல்ல வல்லாய்; தீ முரணிய நீர்போல் அவரை அளிக்க வேண்டிய காலத்தில் அளித்தலையும் செய்வாய். இத்தகைய ஆற்றல் வாய்ந்த பேரரசனாக நீ இருந்தாலும் உன்னுடலிலிருந்து அரசகாரியம் பார்க்கும் அமைச்சர் முதலிய அரசியல் சுற்றத்தினர் உலக இயல்பு மாறுபட்டாலும், அவர்கள் மாறுபடாமல் இருக்க வேண்டுமே அத்தகைய சுற்றத்தினருடன் கூடி நீ அச்சமின்றி வாழ்க என்றனர்.

இச்செவியுறை அரசன் பேராற்றல் வாய்ந்தவனாயினும், அரசியல் சுற்றத்தாராகிய அமைச்சர் முதலியோர் தம் ஒழுக்கத்தில் வேறுபடாமலிருக்க வேண்டும்; வேறுபடின்,

அரசனுக்கு நடுக்கம் உண்டாம் என்று பேருண்மையைப் புலப்படுத்துகிறது.

(2) புறநானூற்றில் மூன்றாவது பாட்டு பாண்டிய மன்னன் ஒருவனை இரும்பிடர்த் தலையார் செவியுறையாகப் பாடியது. புலவர் பாண்டியனைப் பலவகையில் சிறப்பித்துக் கூறிவிட்டுச் செவியுறைப் பொருளாக "நிலம் பெயரினும் நின்சொல் பிழையல" என்று கூறுகின்றார். இங்கே நிலம் என்றது நிலத்திலுள்ள மக்களை. நிலத்திலுள்ள மக்கள் சொல் பிறழ்ந்தாலும் அவர்களை இயக்கும் முதல்வனாகிய நீ சொன்ன சொல்லில் மாறாதே; என்கின்றனர்.

(3) புறநானூற்றில் ஐந்தாவது பாட்டு சேரமன்னன் ஒருவனை நரிவெரூஉத் தலையார் பாடிய செவியுறை. அவர் கூறுவது 'பெரும! நீ ஞாலங்காவலனாக உள்ளாய்; இக்காவல் பெறுதற்கு அரிது. நாட்டில் அருளும் அன்பும் இல்லாதவராய்க் குடிமக்கட்குத் தீங்குபுரிந்து நரகத்தை அடைபவரும் உள்ளனர். நீ அவர்களுடன் சேர்ந்துவிடாமல் உன் குடிமக்களை ஒரு தாய் குழந்தையைக் காப்பாற்றுவது போலக் காப்பாற்றுக" என்று அறிவுறுத்தினர்.

(4) புறநானூற்றில் ஆறாவது பாட்டு பாண்டிய மன்னன் ஒருவனைக் காரிகிழார் என்ற புலவர் பாடிய செவியுறை "பெரும! உன் வெண்கொற்றக்குடை கடவுளின் திருக்கோயிலை நீ வலம் வருங்கால் தாழ்க, உன்தலை உன்னை வாழ்த்தக் கருதி பெரியோர்கள் எடுத்தகை முன்னே வணங்குமாக" என்று கூறியுள்ளார். இது "பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண் அவிதல் கடன்" எனக் கூறிய செவியுறை.

(5) புறநானூற்றில் முப்பத்தைந்தாவது பாட்டாக உள்ளது சோழமன்னன் ஒருவனை வெள்ளைக்குடி நாகனார் பாடிய செவியுறையாகும். இது சிறந்த அரசியற் கருத்தைக் கூறுவதாகும். "கூர்வேல் வளவனே! நினக்கு உரியனவாகக் கூறும் என்னுடைய சில மொழிகளைக் கேட்பாயாக. குடிமக்கள் தங்கள் குறைகளைக் கூறி முறையிடவரின் அவர்கட்கு நீதி வழங்கிய மன்னனே நாடு செழிக்கும்

மழையைப் பெற்றவனாவான்; நீ கொண்டுள்ள வெண் கொற்றக்குடை வெயிலை மறைப்பதற்காகக் கொள்ளப் பட்டதன்று. அக்குடை குடிகளின் துன்பமாகிய வெயிலை மறைப்பதற்காகவே கொள்ளப்பட்டது. போர்க் களத்தில் உன்படைகள் போர்செய்து கொடுக்கும் வெற்றியும் உழவுக் குடிகள் உழுது உண்டாக்கிய உணவுப்பொருளின் பயனே யாகும்' மழை பெய்யுங்காலத்துப் பெய்யாதொழியினும், நாட்டில் விளைவு குறைந்தாலும், மக்களின் இயல்பான நடைமுறை சீர்கேடடைந்தாலும் இந்த உலகம் இவற்றிற்கெல்லாம் காரணம் அரசனே என்று கூறி, அரசன் நெறிமுறையனல்லன் என்று அவனைப் பழித்துக் கூறும் இவற்றையெல்லாம் நீ நன்றாக அறிந்தாயேயானால் உறுதி யறியாதவரது சிறப்பில்லாத சொல்லைத் கேட்காமலிருந்து பாதுகாப்பவராகிய உழவர் குடியை முதற்கண் பாதுகாத்து அவர்தம் உதவியுடன் ஏனைய குடிகளையும் பாதுகாப்பா யாயின் உன்பகைவர் எல்லோரும் உன்னை வழிபட் டொழுகுவர்' என்று கூறினார்.

(6) புறநானூற்றில் நாற்பதாவது பாட்டு சோழமன்னன் ஒருவனை ஆவூர் மூலங்கிழார் பாடிய செவியுறை.

"வயவேந்தே! நீ என்றும் இன்சொல்லையும் எளிய செவ்வியையும் பெறுக" என்றது.

புறநானூற்றிலே ஆறாவது பாட்டு குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆவூர் மூலங்கிழார் பாடிய பாட்டாகும். அவர் "வல்லாளனாகிய வயவேந்தே அரசனாகிய நீ குடி மக்களிடத்தில் இன்சொல் கூறுபவனாக இருக்க வேண்டும்; அவர் மேலும் உன் குடிமக்கள் உன்னிடத்தில் தம் குறையைக் கூறிக் கொள்வதற்கு வரின் அவர்கள் எளிய செவ்வியை உடையாய் நீ விளங்க வேண்டும்" (புறநானூறு 40) என்று கூறுகின்றார்.

புறநானூற்றிலே செவியுறையில் ஏழாவது பாட்டு (புறநானூறு 55) பாண்டியன் நன்மாறனை மருதன் இளநாகனார் பாடிய பாட்டு "பூந்தார் மாற! உன்னிடம் களிறு முதலிய நாற்படையும் மாட்சிமையுடன் இருப்பினும்

அப்படையினாலேயே உனக்கு வெற்றி கிட்டி விடாது. அரச வெற்றி அறநெறியை முதலாகக் கொண்டு தோன்றுகின்றது. அந்தக் காரணத்தினால் நம்முடையவர் என்று கருதி அவர் செய்யும் அநீதிக்கு இயைந்தொழுகிக் கோல் கோடாமலும் இவர் நமக்கு அயலார் என்ற காரணத்தினால் அவருடைய நீதியை அழித்தொழுகாமலும் இருந்து நூயிற்றை யொத்த ஆண்மையும் திங்கள் அன்னசாயலும் வானத்தன்ன வண்மையும் என்னும் மூன்றையும் உடையவனாய் இல்லாதோர் இல்லமாக நீ வாழ்வாயாக' என்றனர்.

புறநானூற்றில் செவியுறையில் எட்டாவதாக உள்ள பாட்டு 'காய்நெல்லறுத்து' (புறநா. 184) என்ற பாட்டாகும். இப்பாட்டு அரசிறையை நெறியறிந்து குடிகளிடமிருந்து வாங்க வேண்டும் என்ற செய்தியை உவமையினால் அழகாகக் கூறுகிறது. யானைக்கு உணவு கொடுத்து வந்தால் ஒரு மாவிற்குக் குறைவான நிலமும் பல நாட்களுக்கு வரும். யானையை அவிழ்த்துவிட்டு அது தனியாகச் சென்று உண்ணத் தொடங்கின் அதன் வாய் புகுவதனினும் அதனுடைய கால் தானே மிதித்துத் துவைத்துப் பாழாக்கும் காரணத்தால் நூறு மாநிலமும் சில நாட்களில் கெடும். நாட்டை ஆள்பவன் அரசியற் சுற்றத்தார் கூறியபடி நடக்கும் மெல்லியனாகி அவரும் வரிசையறியாக் கல்லென்னும் சுற்றமாயிருந்து குடிமக்களிடமிருந்து அன்பு கெட எடுக்கும் பொருள் தர விரும்பின் யானை புக்க புலம்போலத்தானும் உண்ணான் உலகமும் கெடும்.

யாப்பருங்கல விருத்தி 'மேல் யானை மன்னர்', என்னும் பாட்டை எடுத்துக்காட்டி இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் அவிந்து ஒழுகுதல் கடன் என்று அரசற்கு உரைத்தமையால் செவியறிவுறூஉ மருட்பா எனப்படும் என்பர். (கழ-பதி-பக். 213). "பெருவழுதி அன்புடன் என் சொல்லைக் கேட்பாயாக. உன் குடிகளாய் உடைய உழவரிடம் மனம் வருந்தப் பொருள் கொண்டு உன்னை நோக்கி வரும் இரவலர்க்கு உபகாரம் செய்யாதே.

உன் போர்வீரர்கள் பகைவர் நாட்டகத்தே சென்று ஈட்டிவரும் மலைபோன்ற நிதிக் குவியலை உன்முன் நோக்கி வரும் இரவலர்க்கு உபகாரம் செய்யாதே.

உன் போர்வீர்கள் பகைவர் நாட்டகத்தே சென்று ஈட்டிவரும் மலைபோன்ற நிதிக் குவியலை உன்முன் கொண்டுவந்து காட்டும் அமைச்சர்களைத் தக்கவர் என்று தெளியற்க.

ஒருவர் ஈட்டி வைத்திருக்கும் பொருளை முறையின்றிக் கவராதே.

குடிமக்கள் ஈட்டி வைத்துள்ள பொன்னாகிய பெரும்பொருளைப் பெறவேண்டும் என்ற ஆசையால் சென்ற அவர் சோற்றுப்பானையினையே அவர் வருந்த நீ தோண்டி எடுக்காதே.

மக்கள் அறப்புறமாகத் தந்துள்ள வீடு நிலம் முதலிய பொருள்களை நீ ஆசைப் பட்டு அடைய விரும்பாதே.

அறத்தோடு கூடிய அவையினரது வளைந்த நாவைத் திருத்தி துன்பம் ஆகுமாறு நட்டவர் வாழ்வைச் சிதையாதே.

பகைவரிடத்தே கடுஞ்சொல் உடையவனாய்
கற்றார்க்கு இனன் ஆகி
கல்லாதாரை நீக்கி ஒழுகி
பகைவரை அழித்து
உன்னைச் சேர்ந்தவரை வாழ்ந்திடச் செய்

சுற்றத்தை அறிந்த அறிவினனாகி மற்றும் இவை போன்றவற்றைக் கொண்டொழுகின் நிலமகள் உன் ஒருகுடை நிழலிலேயே தங்குவள்.

இவ்வாறு நாட்டிற்கு உயிரென அரசனுக்கு அரசியல் முறைகளை அவன் செவிக்கு மட்டும் கேட்குமாறு உணர்த்துவதால் செவிஅறிவுறூஉ அல்லது செவியுறை என்னும் பெயருடன் பண்டு வழங்கியிருந்தது.

4

பொருளிலக்கணப் பாகுபாடு

தொல்காப்பியரும் பிறரும் கருதுவது

தொல்காப்பியர் 'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' இலக்கணம் கூறியதாகத் தொல்காப்பியப் பாயிரம் கூறுகிறது. அவர் கூறிய என்று சிறப்பித்தோதும் அகப் பொருள் விளக்கப் பாயிரம்.

யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் "வழுக்கில் விகாரம் என்று சிறப்பித்தவதனால் எழுத்துக்குற்றம், சொற் குற்றம், பொருட்குற்றம் யாப்புக் குற்றம், அலங்காரக் குற்றம், ஆனந்தக் குற்றம் என்னும் இவ்வாறு குற்றமும் படாமல் சொல்லப்படுவன செய்யுள்கள் எனக் கொள்க", என்று கூறிப், பொருட்குற்றத்தைக் கூறுமிடத்துப் பொருட் குற்றமாவது பொருளதிகாரத்தோடு மாறுகொள்ளாதது. என்னை?

"பொருளின் வழுவே தமிழ்நடைத் திரிவே" என்றார் ஆகலின் என்பர். அதன் குறிப்புரையாசிரியர் அகமும் புறமுமாகிய பொருள் தமிழுக்கே உரியதாகலின் அதனைத் தமிழ்நடை என்றார். பொருளிலக்கணம் கூறும் நூல் ஒன்றிற்குத் தமிழ்நெறி விளக்கம் என்று பெயரிருத்தலையும் காண்க என்பர்.

இடனே பருவம் பொழுதூண் பொருள்
கடவுள் மாந்தர் களவிழ ஓர் நீர்
மாமரம் புட்பறை யாழென் றிவற்றின்
ஆகிய மரபின் அகனைந் திணைக்கு
முந்தைய மூன்றும் முதல்கரு ஏனை
ஐந்தா நிலைய துரிப்பொரு ளாகும்

என்று யாப்பருங்கல விருத்தியாசிரியர் (கழகப் பதிப்பு - பக். 572) தம் உரையுள் எடுத்தாளுகின்றார். இந்நூற்பா உரிப்பொருளை அடை எதுவுந் தராமல் 'பொருள்' என்றே கூறுகின்றது.

இந்நூற்பா அகனைந்திணையின் முதல் கரு உரி என்னும் மூப்பொருளைக் கூறவந்துள்ளது. இந்நூற்பாவில் கூறப்பட்டிருக்கும் இடன் முதலான பல பொருள்களில் அகன் ஐந்திணைக்கு இடனும் பருவமும் பொழுதும் ஆகிய மூன்றும் முதற்பொருள் ஆகும் என்றும், ஏனையவெல்லாம் கருப்பொருள் ஆகும், ஐந்தாம் எண்ணுமுறைக்கண் நின்ற பொருள் என்பது மட்டும் உரிப்பொருள் ஆகுமென்றும் இது கூறுகின்றது. இந்நூற்பா அவ்வாறு கூறுவதால் **பொருள் என்பது உரிப்பொருள் என்றே பொருள்படும். எனவே பொருளிலக்கணம் என்றால் உரிப்பொருள் இலக்கணம் என்றே கருதவேண்டியுள்ளது.**

பொருளிலக்கணத்தில் பொருள் என்னும் உரிப் பொருளே தலைமையானது. அத்தலைமையான உரிப் பொருள் நிகழ்வதற்கு இடமும் காலமும் இடனாகும். இக்கருத்தை,

ஒரு நெறிப் பட்டாங் கோரியன் முடியும்
கரும நிகழ்ச்சி இடமென மொழிப

என்றும்,

இறப்பே நிகழ்வே எதிர தென்னும்
திறத்தியன் மருங்கில் தெரிந்தன ருள்ளம்
பொருணிகழ் வுரைப்பது கால மாகும்

என்றும் தொல்காப்பியம் செய்யுளியல் (201, 202) கூறுகின்றது.

மேற்கண்ட நூற்பா உரிப்பொருளைக் 'கருமம்' என்றும், 'பொருள்' என்றும் கூறியுள்ளதை உணர்க.

மரபுநிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும் என்ப

- அகத்திணையியல் - 4.

என்னும் நூற்பாவில் பொருள் என்றது உரிப்பொருளை

அறக்கழி வுடைய பொருட்பயம் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்த தென்ப

(பொருளியல் - 22)

என்னும் நூற்பாவில் 'பொருள்' என்றது உரிப்பொருளையே

மிக்க பொருளினுள் பொருளவாகப் புணர்க்க
நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே

(பொருளியல் - 23)

என்னும் நூற்பாவில் மிக்க பொருள் என்றது உரிப் பொருளாகும்

இறைச்சி தானே பொருட்புறத் ததுவே

(பொருளியல் - 33)

என்னும் (நச்சினார்க்கினியர் பாடம்) நூற்பாவில் பொருள் என்றது உரிப்பொருளை

இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியன் மருங்கின் தெரியு மோர்க்கே

(பொருளியல்-34)

இந்நூற்பாவிலும் பொருள் என்றது உரிப் பொருளையே.

இக்காரணங்களால் பொருள் என்னும் உரிப் பொருளையே தலைமையாகக் கொண்டு வருவது தமிழர்தம் பொருளிலக்கணமாகும். இவ்வுரிப் பொருளைக் கூறுவதற்கு இடமாக வரும் நிலமும் காலமாகிய முதற்பொருள், கருப்பொருளெல்லாம் உரிப்பொருட்கு அடையாக வரும். முதற்பொருளை இடமாகப் பெற்று, கருப்பொருளை அடையாகப் பெற்று வரும் உரிப்பொருளுக்கு இலக்கணம் கூறுவதே பொருளிலக்கணமாகும்.

பொருளிலக்கணப்பாகுபாடு - பகுதி-2.

சிவஞான முனிவர் தொல்காப்பியப் பாயிர விருத்தியுள், "ஈண்டுப் பொருளென்றது அகம் புறம்" என்னும் இருகூற்றுப் பதினாற்றிணைப் பகுதியவாய்ச் செய்யுளிற் பாடுதற்குரிய இன்பம் முதலிய உலகியற் பொருளை; மொழித்திறம் உணர்தற் பொருட்டுச் செய்யு ளாராய்ச்சிக்கு ஒருதலையான் வேண்டப்படுதல் பற்றி இயற்றமிழ் ஒழிபாகக் கொண்டு ஓதற்பால்ன அவையே யாகலின், அற்றேல், இஃது (பொருள்) எழுத்தும் சொல்லும் போலச் செந்தமிழியற்கை சிவணுதற்கேதுவாகாமையானும்,

வடமொழியார் வேறோதுதல்லது சத்த நூலுள் (பொருளிலக்கணத்தை) ஓதாமையானும், ஈண்டு ஓதல் வேண்டாம் பிறவெனின், - ஈண்டுக் கூறும் பொருட் **பாகுபாடுகள் பொதுவாகாது, தமிழிற்கே சிறந்த வேறொன்றாற் பெறப்படாமையின்,** இப்பொருள் பற்றி வரும் பரிபாடல், கலி, அகநானூறு, புறநானூறு, ஐங்குறு நூறு, நற்றிணை, குறுந்தொகை, ஆற்றுப்படை, பதிற்றுப் பத்து முதலிய செய்யுள் ஆராயப்புகுந்தார்க்கு இப்பொருட் பாகுபாடு உணராக்காற் குன்று முட்டிய குரீப்போல இடர்ப்பட்டுச் செய்யுள் மொழித்திறம் உணர மாட்டாமையின், செய்யுள் மொழித்திறம் உணர்ந்து செந்தமி ழியற்ற சிவணுதற்கு ஒருதலையான் ஓதல் வேண்டும் என்க" என்பன.

இங்ஙனம் தமிழுக்கே உரியதாய்த் தமிழ்நடை, தமிழ் நெறி, என்றோதப்பட்ட பொருளிலக்கணத்தைத் தொல் காப்பியர் அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாகப் பகுத்துக் கொண்டு, அகப்பொருளைக் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என ஏழாகக் கூறி அவற்றின் பின் கூறும் புறப்பொருள் ஏழினை மேற்கூறிய அகத்திணை ஏழனுடன் இயைபுபடுத்திக் குறிஞ்சியின் புறம் வெட்சி, முல்லையின் புறம் வஞ்சி, மருதத்தின் புறம் உழிஞை, நெய்தலின் புறம் தும்பை, பாலையின் புறம் வாகை, பெருந் திணைப் புறம் காஞ்சி, கைக்கிளைப்புறம் பாடாண் எனக் கூறியுள்ளார். பெரிதும் தொல்காப்பியத்தைப் பின்பற்றிய நம்பி அகப்பொருள் விளக்க நூலாரும்,

> **மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த**
> **அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை**
> **பெருந்திணை யெனஎழு பெற்றித் தாகும்**

எனத் தொல்காப்பியரைப் போலவே அகத்திணை ஏழ் என்று கூறி, இவ்வகத்திணை ஏழும்,

> **புனைந்துரை உலகியல் எனுந்திறம் இரண்டினும்**
> **தொல்லியல் வாழாமற் சொல்லப் படும்**

என்று கூறி,

அவற்றுள்
கைக்கிளை யுடைய தொருதலைக் காமம்
ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்
பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்

என்று அகத்திணை ஏழின் இயல்பினைக் கூறியுள்ளார்.

காமத்தை ஒருதலைக்காமமாகிய கைக்கிளை என்றும்; ஒத்த காமமாகிய ஐந்திணை என்றும், ஒவ்வாக் காமமாகிய பெருந்திணை என்றும் மூன்று வகைப்படுத்தி வழங்குதல், தமிழருக்கே உரியதாதலால் 'தமிழ்நடை' என்று பொருளிலக் கணம் ஓதப்பட்டுள்ளது.

வடநூலார் திருமணமுறையைப் பிரமம் முதலாக எட்டாகப் பகுத்துக் கொண்டு கூறுவர். அது வடமொழி நெறியாகும். அவர் எட்டாகக் கூறுவதும் **காமம் பற்றிய தன்று. அவ்வெட்டும் நடக்கும் நடைமுறை பற்றியதாகும்.**

முன்னே ஒரு தலைவனும் தலைவியும் களவாற் கூடி ஒழுக, அதன்பின் கொடுத்தற்குரியார் கொடுப்பக் கரணத்தொரு நிகழ்வது தமிழ்நாட்டுத் திருமண முறையாகும். சில சமயத்தில் கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்வதுண்டு. தமிழ்நாட்டு மணமுறையில் பெரிதும் தலைவன் தலைவியர் தம் உள்ளப் புணர்ச்சியை அறிந்து கொண்டே திருமணம் நிகழ்த்துவர். சோழன் நலங்கிள்ளி என்பான்,

வருந்தப் பொரே னாயிற் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடை; குழைகவென் றாரே

(புறநானூறு - 73)

என்று காதல் கொள்ளாப் பெண்டிரை மணப்பது அறமன்று என்று வஞ்சினம் கூறியவாற்றாலும் இதனை யறியலாம்.

ஒத்த காமமே சிறப்பாகக் கருதப்பட்ட தென்பதை, சங்க இலக்கியங்களில் இது சிறப்பாக மிகுதியாக ஓதப்பட் டுள்ளதையும் கைக்கிளை பெருந்திணை அவ்வாறு ஓதப் படாமையயும் கருதி உணர்க.

பிற்காலத்தார் கூற்று

இப்பொருள் நெறியைப் பிற்காலத்தார், அகத்திணை ஏழு என்று கூறி, அவ்வகத்திணையுடன் இயைபுபடுத்திப் புறத்திணை ஏழு என்று கூறிய தொல்காப்பிய முறையை விடுத்து, இயைபின்றி அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்று நான்காகப் பிரித்து வழங்குகின்றனர்.

ஆற்றும் அகமே புறமே அகப்புறம் அன்றிவென்றி
போற்றும் புறப்புறம் என்றாப்பொருள்

(வீரசோழியம் - 86)

பொருளாவது அகப்பொருளும், அகப்புறப்பொருளும், புறப்பொருளும், புறப்புறப் பொருளும் என நான்கு வகைப்படும் என்றும், அவற்றுள் முல்லையும், குறிஞ்சியும், மருதமும், பாலையும், நெய்தலும் என்னும் ஐந்தும் அகப்பொருளாம் (வீரசோழியம் - 89) என்றும், 1 முது பாலையும், 2 பாசறைமுல்லையும், 3 வள்ளியும், 4 கர நடையும், 5 இல்லாள் முல்லையும், 6 காந்தளும், 7 குறுங் கலியும், 8 தாபதமும், 9 குற்றிசையும், 10 கைக்கிளையும், 11 தபுதாரமும் 12 பெருந்திணையும் என்றும், பன்னிரண்டும் அகப்புறப் பொருளாம் (வீரசோழியம் - 97) என்றும் வெட்சியும் கரந்தையும் வஞ்சியும் காஞ்சியும் உழிஞையும் நொச்சியும் தும்பையும் ஆகிய ஏழும் புறப்பொருள் (வீரசோழியம் - 98) என்றும், வாகையும் பொதுவியலும் பாடாணும் ஆகிய இவை புறப்புறமாகுமென்றும் (வீரசோழியம் 98) புத்தமித்திரனார் என்னும் புலவர் கூறுகின்றார்.

யாப்பருங்கல விருத்தியுரையும் இனித் திணையாவன நான்கு வகைய; அகத்திணை, அகப்புறத்திணை, புறத்திணை, புறப்புறத்திணை என. என்னை

அகமே அகப்புறம் புறமே புறப்புறம்
எனநான் கென்ப திணையின் படுந

என்றாராகலின். அகத்திணை இருவகைய; களவு கற்பென; இனி, அகப்புறமாவன காந்தள், வள்ளி சுரநடை, முதுபாலை, தாபதம், தபுதாரம் குற்றிசை, குறுங்கலி, பாசறை முல்லை,

இஸ்லாண் முல்லை என்று இவை பத்தும் கைக்கிளை பெருந்திணை என்ற இவை இரண்டும் என்க.

ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்
காந்தள் கவிமடமா வேறுதல் - காமமிக்
காய்ந்தவர் வள்ளி வெறியாட்டாம் - வாய்ந்த
சுரநடை மாதர் வருத்தம் - சுரனுள்
முதுபாலை தன்னை மொழியின் - மதுமலர்த்தார்க்
காவலன் வீயக் கவன்ற ததுவாகும்
பாசறை முல்லை தலைமகன் பாசறைக்கண்
மாசறு மாதரை உள்ளுதல்; மாசற்ற
இல்லவள் முல்லையும் அஃதேயாம்; சொல்லுங்கால்
குற்றிசை கோல்வளை யாளைத் தலைமகன்
முற்றத் துறந்த துறவாம்; குறுங்கலி
முற்றத் துறந்த தலைமகன் முன்னின்று
பொற்றொடி மாதர் பழிதூற்றாம் குற்றந்தீர்
தாபதம் காதற் றலைமகனை நீங்கிய
மேவரு மாதர் நிலையாகும்; மேவருசீர்
நீர்க்கப்பட் டானை யுவந்த தலைமகன்
பார்த்துறூ உந் தன்மை யதுவாம் தபுதாரம்;
பத்தும் அகத்தின் புறம்

கைக்கிளை என்றா பெருந்திணை என்றாங்
கத்திணை யிரண்டும் அகத்திணைப் புறனே

இவை பன்னிருபடலம்

அவற்றுள் கைக்கிளையாவது காட்சி முதலான **கைவ** காமம் என்னை?

கைக்கிளை தானே காணுங் காலைக்
கூட்டமில் கிளவிக் கைக்கிளை அகப்புறம்
பெருந்திணைப் பொருளே பொருந்தக் கூறின்
அறத்தின் இயன்ற அகத்தொடு புணராத்
திறந்த தென்ப திறனறிந் தோரே
நிலையா அன்பின் நீடா இன்பத்
துலகமலை வெல்லாம் பெருந்திணை அகப்புறம்

என்றாராகலின்,

இனிப் புறமாவது,

வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை என்றான்
சித்திர மேழும் புறனென மொழிப
வெட்சி முதலாத் தும்பை யீறாச்
செப்பிய ஏழும் புறப்பொரு ளாகும்

எனக் கொள்க.

வெட்சி ஆ கவர்தலானும், கரந்தை உட்குவரச்சென்று விடுத்தலானும், "வெட்சியும் கரந்தையும் தம்முள் மாறே" என்பது **பன்னிருபடலம்.**

வஞ்சி மேற்செல்லலானும், காஞ்சி அதனெதிர் அஞ்சாது எதிர் சென்று ஊன்றலானும் "வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே" என்பது **பன்னிருபடலம்.**

உழிஞை ஆரெயில் முற்றலானும் நொச்சி விழுமிதின் அவ்வெயிற் காத்தலானும் "உழிஞையும் நொச்சியும் தம்முள் மாறே" என்பது **பன்னிருபடலம்.**

பொருதல் தும்பை புணர்வ தென்ப

இவற்றின் விகற்பமெல்லாம் பன்னிருபடலத்துட் காண்க.

புறப்புறமாவன

வாகையும் பாடாண்பாட்டும் 'பொதுவியற் றிணையும்' எனக் கொள்க. என்னை?

வாகை பாடாண் பொதுவியற்றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புறப் பொருளே

என்றார் தொல்காப்பிய அகத்தியமுடையார்.

மதுவிரி வாகையும் பாடாண் பாட்டும்
பொதுவியற்படலமும் புறமா கும்மே

என்றார் வாய்ப்பியனார்.

இவை ஆமாறு வெண்பாமாலையுள்ளும், பன்னிரு படலத்தினுள்ளும் காண்க' என்பர்.

மேற்குறிப்பிட்ட யாப்பருங்கல விருத்தி உரையினால் தெரிவன. பொருள் என்னும் திணை அகம் அகப்புறம், புறம், புறப்புறம் என்று நான்கு பகுப்பின என்பதும்

அவற்றுள் அகம் என்பது களவு கற்பு என்று கருதப்பட்ட ஐந்திணை என்றும், அன்புடைக் காமம் என்பதும், அகப்புறம் என்பது காந்தள் முதலான பன்னிரண்டென்பதும் புறம் என்பது வெட்சி முதலான ஏழ்திணை என்பதும், புறப்புறம் என்பதும் வாகை முதலான மூன்றென்பதும் ஆம்.

இவற்றை இவ்வாறு கூறுவன அகத்தியரை முதல்வ ராகக் கொண்ட 1 தொல்காப்பியர், 2 அதங்கோட்டாசார், 3 பனம்பாரனார், 4 செம்பூட்சேய், 5 வையாபிகர், 6 அவி நயர், 7 காக்கைப்பாடினியார், 8 துலாலிங்கர், 9 வாய்ப்பியர், 10 கழா அரம்பர், 11 நற்றத்தர், 12 வாமனர் என்னும் பன்னிரு புலவரும் சேர்ந்து இயற்றிய பன்னிருபடலம் என்னும் இலக்கண நூலும், அதனைப் பின்பற்றியெழுந்த புறப்பொருள் வெண்பா மாலையும், தொல்காப்பிய அகத்தியமுடையார் என்னும் இலக்கண நூலும், வாய்ப்பியமும் ஆகும். வீரசோழியம் இவ்வாறு கூறும் நூல்களுள் ஒன்றென்பது முன்னே காட்டப்பட்டது.

ஓங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகுந
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்

என்னும் பன்னிருபடலப் பாயிரத்தானும்

மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரத்தானும் அறியப்படும் செய்திகள்:- வானவர் வேண்டிக் கொள்ள பொதியமலையில் வந்திருந்த அகத்திய முனிவனிடத்தே அகத்தியம் என்னும் முதல்நூலைக்கற்ற தொல்காப்பியன்

முதலாகிய பன்னிரண்டு புலவரும் இயற்றிய பன்னிருபடலம் என்னும் இலக்கணநூல் என்பதாகும். இறையனார் களவியல் பன்னிரு படலத்தை அளவினால் பெயர் பெற்றது என்று கூறுகிறது. இது பன்னிரண்டு புலவரால் இயற்றப்பட்ட பன்னிரண்டு படலத்தை உடையதாதலின் இது தொகை நூலாகும்.

இளம்பூரணர் கூறும் மறுப்பு

பன்னிரு படலம் முதலானவை புறப்பொருளைப் பன்னிரண்டு வகைப்படக் கூறுகின்றன. இவ்வாறு புறப் பொருளைப் பன்னிரண்டு வகைப்படக் கூறில், அகப் பொருளும் பன்னிரண்டாகி மாட்டேறு பெறுதல் வேண்டும் அகத்திணை ஏழாகிப் புறத்திணை பன்னிரண்டாகில், "மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்" (மரபியல் 112) என்னும் தந்திரவுத்திக்கும் பொருந்தாதாகி, மிகைபடக் கூறல், தன்னால் ஒருபொருள் கருதிக்கூறல் (மரபியல், 110) என்னும் குற்றமும்' பயக்கும் என்க.

அன்றியும், பெருந்திணைப் புறனாகிய காஞ்சிய நிலையாமையாதலானும், பொதுவியல் என்பது 'பல்லமா' செய்து படையுள் தப்பிய, நல்லாண் மாக்கள் எல்லாரும் பெறுதலின், திறப்பட மொழிந்து தெரிய விரித்து, முதற்பட எண்ணிய எழுதிணைக்கும் உரித்தே, எனத் தானே (பன்னிருபடலம்) கூறுகின்றாராதலின் (அதனை) மறத்திற்கு முதலாகிய வெட்சியினை எடுத்துக் கோடற்கண்ணும் கூறாமையானும், கைக்கிளையும் பெருந்திணையும் (ஆகிய இவற்றை அகப்) புறம் என்றாராயின் அகத்திணை ஏழ் என்னாது ஐந்து என வேண்டுமாதலானும், பிரமம் முதலாகச் சொல்லப்பட்ட மணம் எட்டனுள்ளும் யாழோர் கூட்டமாகிய மணத்தை ஒழித்து ஏனைய ஏழும் புறப்பொருளாதல் வேண்டுதலானும் (5) முனைவன் நூலிற்கும் கலிமுதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந் தோர் வழக்கிற்கும் (கைக்கிளை பெருந்திணையைப் புறம் என்று கூறுதல் பொருந்தாது என்க என்பர். (புறத்திணையியல் தொடக்கம்).

பன்னிருபடலத்துள் வெட்சித்திணை தொல்காப்பியர் கூறியதன்று

பன்னிரண்டு புலவர் பகர்ந்த பன்னிருபடலத்துள், வெட்சிப் படலத்தைத் தொல்காப்பியர் இயற்றினார் என்று கூறுகின்றனர். இதனை இளம்பூரணர் மறுக்கின்றார். அவர் மறுப்பு:- தொல்காப்பியர் தொல்காப்பியத்தின் புறத்திணை யியலில் வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலத்திலே சென்று களவினால் ஆக்களைத் தந்து ஓம்புதல் வெட்சித்திணை யாகும் என்று கூறுகின்றார் (புறத்திணையியல் -2) ஆனால், தொல்காப்பியர் இயற்றியதாகக் கூறப்படும் பன்னிரு படலமானது தொல்காப்பியத்தில் கூறிய கருத்திற்கு மாறாக "தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்று அன்ன இருவகைத்தே வெட்சி" என்று வெட்சியை இரண்டு பிரிவாகக் கூறுகின்றது. இதன்பின் வருகின்ற வஞ்சித் திணையாகிய எடுத்துச் செலவும் உழைஞைத் திணையாகிய எயில்காத்தலும் தும்பைத் திணையாகிய மைந்துகருதி போர் செய்தலும் தன்னுறு தொழிலாய் வராமல் மன்னுறு தொழிலாய் (அரசர்மேல் இயன்று) வருதலின் வெட்சியில் மட்டும் தன்னுறு தொழில் எனத் தன் நாட்டும் பிறர்நாட்டும் களவின் ஆனிரை கோடலின் இவ்வாறுசெய்யும் இவர் அரசருடைய ஆணையை நீங்கினார் ஆவராதலால் (தொல் காப்பியர்) அவர் பன்னிருபடலத்தே அவ்வாறு கூறினா ரென்பது மிகைபடக் கூறியதாகக் கருதவேண்டி வரும். அதனால் பன்னிருபடலத்தே வெட்சிப் படலத்தைத் தொல் காப்பியர் கூறினார் என்றல் பொருந்தாதென்பர். (புறத்திணையியல் - சூ2)

பன்னிருபடலத்துள் கரந்தைக்கண் புண்ணொடு வருதல் முதலாக வேறுபடச் சிலதுறை கூறினாராகலின், புண்படுதல் மாற்றோர் செய்த மறத்துறையாகலின், அஃது இவர்க்கு மாறாகக் கூறுதலும், மயங்கக் கூறலுமாம். ஏனையவும் இவ்வாறு மயங்கக் கூறலும் குன்றக் கூறலும் மிகைபடக் கூறலும் ஆயவாறு எடுத்துக்காட்டின் பெருகும் என்க (தொல். புறத்திணை.5) என்பர்.

இரண்டு நெறி

தமிழில் பொருளிலக்கணம் கூறும் நெறி இரண்டு பிரிவாக உள்ளது. அகத்திணையாகிய காமம் ஏழாகக் கருதப்பட்டு இவை ஒவ்வொன்றின் புறமாக ஏழு புறத்திணைகள்தோன்றின என்று கூறும் முறையொன்றும், அகத்திணையோடு புறத்திணையை இயைபுபடுத்தாமல் பொருளிலக்கணம் அகம் அகப்புறம், புறம் புறப்புறம் என நான்காகப் பிரிக்கப்பட்டு மேற்கூறிய நான்கில் அகம் ஐந்திணை ஒழிய ஏனைய புறம், வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி உழிஞை தும்பை என ஏழாகவும், புறப்புறம் வாகை பாடாண் பொதுவியல் என மூன்றாவும் அகப்புறம் கைக்கிளை பெருந்திணை என இரண்டாகவும் ஆக பன்னிரண்டு திணைகளைப் புறத்திணை என்று கருதி வகுத்துக் கொண்டு பன்னிரு படலமும் புறப்பொருள் வெண்பாமாலையும் கூறுகின்றன.

இந்நூலிரண்டும் கூறும் முறை தொல்காப்பிய முறைக்கு ஏற்புடையதாகவில்லை. அதனால் பன்னிரு படலத்துள் முதற்கண்ணதாகிய வெட்சிப் படலத்தைத் தொல்காப்பியர் இயற்றினார் என்றல் பொருந்தாது என்று கூறி இளம்பூரணர் மறுக்கின்றார்.

அவர் கூறும் காரணங்களாவன:-

1. புறப்பொருள் பன்னிரண்டு வகைப்படக் கூறில் அகமும் பன்னிரண்டாகி மாட்டேறு பெறுதல் வேண்டும்; அகத்திணை ஏழாகிப் புறத்திணை பன்னிரண்டாகில் மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல் என்னும் உத்திக்கும் பொருந்தாமல் குற்றமாகும்.

2. வஞ்சியின் எதிர் காஞ்சி என்று கூறி, வந்த வேந்தனைக் கண்டு அஞ்சாது எதிர்சென்று ஊன்றல் காஞ்சி எனக் கூறின் பெருந்திணைப்புறன் காஞ்சி என்று கொண்டு, அது பல்வகை நிலையாமைப் பொருள்பற்றி வரும் என்று கூறுதலுக்கு மாறுபடுதலானும்,

3. கைக்கிளை பெருந்திணை (பன்னிருபடலக் கருத்துப் படி) புறன் ஆயின், அகத்திணை ஏழு என்று கூறுதல் பொருந்தாதாம்.

4. யாழோர் கூட்டம் மட்டும் (காந்தர்வ மணம்) அகமாயின் பிரமம் முதலிய ஏழும் புறமாகல் வேண்டும்.

5. கைக்கிளை பெருந்திணையைப் புறம் என்றால், கலித் தொகை முதலிய சான்றோர் செய்யுள் நெறிக்குப் பொருந்தாது.

6. பன்னிருபடலம் பொதுவியல் என்று கூறுவது ஏழ் திணைக்கும் பொதுவாதலின் அதனை போர்த் தொடக்க மாகிய வெட்சிக்கு முன் கூறாது வாகை பாடாணுடன் சேர்த்து புறப்புறம் என்று பகுப்பில் கூறுவது பொருந்தாது.

7. தொல்காப்பியத்தில் வெட்சியில் அரசர் மேற்றாகிய மன்னுறு தொழில் ஒன்றே கூறியிருக்க, தன்னுறு தொழிலும் மன்னுறு தொழிலும் என இரண்டு தொழில் கூறியுள்ள வெட்சித் திணையை வெட்சிப்படலமெனத் தொல்காப்பியர் பன்னிருபடலத்தே கூறியுள்ளார் என்பது பொருந்தாது என்பர்.

இளம்பூரணர் இவ்வாறு கூறுவது ஆராய வேண்டிய செய்தியாகும்.

சிவஞான முனிவர் பாயிர விருத்தியுள் "அகம் புறம் எனப் பகுத்தவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காகப் பகுத்தலும் வெட்சித்திணை, வஞ்சித்திணை, உழிஞைத் திணைகளின் மறுதலைவினையை வீற்றுவினையாதலும் வேற்றுப்பூச் சூடுதலுமாகிய வேறுபாடு பற்றி வேறு திணையாக வைத்தெண்ணுதலும் இன்னோரன்னவை பிறவுமாம். இவையிங்ஙனம் வேறுபடினும் பொருள் முடிவு வேறுபடாமையின் மரபுநிலை திரியாவாயின. இவ்வுண்மை உணராதார் பன்னிருபடலம் முதலியநூல்களை வழீசியின வென்றிகழ்ந்து பன்னிருபடலத்துள் வெட்சிப்படலம் தொல் காப்பியனார் கூறியதன்றெனவும் தொல்லாசிரியர் வழக்கொடு முரணித் தமக்கு வேண்டியவாறே கூறுப" என்று கூறும் மறுப்பு இளம்பூரணர் கருதிய மாறுபாடாகும்.

சிவஞானமுனிவர் "வேறுபடினும் பொருண்முடிவு வேறுபடவில்லை" என்று அமைதி கூறுகிறார். இவ்வமைதி சிறப்புடையதாகத் தெரியவில்லை.

இளம்பூரணர், யாப்பருங்கல விருத்தியாசிரியர் காலம் வரை பன்னிருபடலம் என்னும் நூல் வழங்கி வந்ததாகவே தெரிகின்றது.இவ்விருவரும் அம்முழுநூலை முற்றும் உணர்ந்திருந்ததாகவே கருதி உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. தொல்காப்பியர் கூறும் பொருளிலக்கண நெறியும் பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை கூறும் பொருளிலக்கண நெறியும் வெவ்வேறு ஆகும்.

நச்சினார்க்கினியர் கருத்து

தொல்காப்பியம் அகத்திணையியல் தொடக்கத்தே நச்சினார்க்கினியர் "அகத்திணை புறத்திணை என இரண்டு திணை வகுத்து, அதன்கட் கைக்கிளை முதல் பெருந்திணை யிறுவாய் ஏழும் வெட்சி முதல் பாடாண்டிணை இறுவாய் ஏழுமாகப் பதினான்கு பால் வகுத்து" என்றும், "முற்படக்கிளந்த எழுதிணை என்ப" (அகத்திணையியல்1) எனவே பிற்படக் கூறப்பட்ட புறத்திணையும் ஏழுள வென்றவாறாயின்று. எனவே இப்பதினான்கு மல்லது வேறு பொருளின்றென வரையறுத்தாராயிற்று. பிற்படக் கிளந்த புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை என வரும், ஒழிந்தோர் பன்னிரண்டு என்றாரதலிற் புறத்திணை ஏழென்ற தென்னை எனின், அகங்கை இரண்டு உடையார்க்குப் புறங்கை நான்காகாது இரண்டாயவாறு போல, அகத்திணை ஏழற்கும் புறத்திணை ஏழென்றலே பொருத்தமுடைத்தாயிற்று" என்றும், "வேந்துவிடுமுனைஞர்" (புறத்திணையியல்-2) என்றமையான் இரு பெருவேந்தரும் தண்டத்தலைவரை ஏவி விடுவா ரென்றும், 'ஆதந்தோம்பல்' (புறம்-2) என்றதனால் களவின்கட் கொண்ட ஆவினை மீட்டுத் தந்தோம்ப லென்றும் பொருள் கூறுமாறு சூத்திரஞ் செய்தாராகலின் இருபெரு வேந்தர் தண்டத் தலைவரும் அவர் ஏவலான் நிரைகோடற்கும் மீட்டற்கும் உரியராயினார். ஆகவே, இருவர்க்குங் கோடற்றொழில் உளதாயிற்றாதலின் அடித்துக் கோடலும் மீட்டுக்கோடலும் வெட்சி ஆயின' என்றும் ஆயின் 'மீட்டல் கரந்தை' என்பரால் எனின்; அதனையும் இச்சூத்திரத்தானும் வருகின்ற சூத்திரத்தானும் வெட்சி என்றே ஆசிரியர்

கொண்டார். மீட்டலை வெட்சி கரந்தை என்பாரும் உளர். மீட்டலைக் கரந்தை என்பார்க்கு அது திணையாயிற் குறிஞ்சிக்கும் புறனாகாமை உணர்க" என்றும் "ஒருவன் மண்ணாசையான் மேற்சென்றால் அவனும் அம்மண் ணழியாமற் காத்தற்கு எதிரே வருதலின் இருவர்க்கும் மண்ணாசையான் மேற்சேறல் உளதாகலின் அவ்விருவரும் வஞ்சி வேந்த ராவாரென்றுணர்க. எதிர்சேறல் காஞ்சி என்பாரினின் காஞ்சியென்பது எப்பொருட்கும் நிலையாமை கூறுதலிற் பெரிதும் ஆராய்ச்சிப்படும் பொதுவியற் பொருண்மைப் பெயராற் கூறலாகாமை யுணர்க" (புறத்திணை - 7) என்றும்,

"வேற்று வேந்தன் குலத்துக்கெல்லாம் எஞ்சாது முதலாய் வருகின்ற முழுஅரணைச் சென்ற வேந்தன் வளைத்தலும், இருந்த வேந்தன் கைக்கொண்டு காத்தலுமாகிய இரண்டு வழியாக இலக்கணத்தை உடைத்து உழிஞைத்திணை" (புறத்திணை - 10)

"தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும் அகத்தியமுந் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டும் என்றுணர்க" (புறந் - 35) என்றும் கூறுவர்.

நச்சினார்க்கினியார் 'புதுநூல்' என்பது பன்னிருப டலத்தையும் புறப்பொருள் வெண்பாமாலையையும் கருதியே கூறுகிறார்.

மதிலை முற்றுபவன் உழிஞை அணிதலேயன்றி அதனைக் காப்பவனும் உழிஞை அணியும் வழக்கத்தை,

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொடரு
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்டவிர்
நெடுங்கொடி உழிஞைப் பலரொடு மலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர் கொடிஞ்சி பொலிய நின்றோன்

(புறநா. 77)

என்ற புறநானூற்றுள் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போர் நிகழ்ச்சியால் அறியலாம்.

மேற்காட்டிய அவர் உரைப்பகுதியில் பன்னிருபடல நெறியை மறுப்பதோடன்றி அதனைப் புதுநூல் என்று குறிப்பிட்டு அந்நூல் வழிப் புறநானூற்றுக்குத் துறை கொள்ளுதல் நன்றன்று என்பதையும் குறிப்பிடுகிறார்.

டாக்டர். உ.வே. சாமிநாதையர் அவர்கள் புறநானூற்றுத் திணை துறை விளக்கங்களின் முன்னுரையில் (முதற்பதிப்பு) "புறநானூற்றில் ஒவ்வொரு செய்யுட்களின் ஒழுக்கத்தைப் புலப்படுத்தி அவ்வச் செய்யுட்களின் பின் எழுதப்பட்டுள்ள திணையும் துறையும் தொல்காப்பியப் புறத்திணையியலிற் கூறிய இலக்கணத்தோடு சிறுபான்மை ஒத்திருப்பினும் பெரும்பாலும் ஒவ்வாமையானும் இவை புறப்பொருட் பன்னிரு படலத்தின் வழியே அமைக்கப்பட்டுள்ளனவெனத் தோற்றினும், இப்பொழுது அந்நூல் அகப்படாமையின் அதிலிருந்தெடுத்து யீதொன்றும் எழுதக்கூடாமையாலும், அந்நூலின் வழித்தாகிய புறப்பொருள் வெண்பாமாலையின் கருத்திற்கு இவை பெரும்பாலும் ஒத்திருக்கின்றமையாலும் இத்திணை விளக்கமும் பின்னுள்ள துறைவிளக்கமும் **புறப்பொருள் வெண்பாமாலையின்** படியே எழுதப் பட்டன" என்பர்.

தொல்காப்பியர் பாடாண்திணையிற் கூறியவற்றில், கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் என்னும் துறையையும் வாகைத்திணையில் வாகைவென்றி முதலிய பல வென்றிகளையும் ஐயனாரிதனார் தாம் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலையில் ஒழிபு என்னும் பகுதியில் கூறுகின்றார். இது தொல்காப்பியர் கூறிய விதியைத் தம் கருத்திற்கேற்ப மாற்றிக் கொண்டமைக்குச் சான்றாகும்.

பேராசிரியர் உவமையியல் ஈற்றில் "இனி ஆனந்த உவமை எனச் சில குற்றம் அகத்தியனார் செய்தாரெனக் கூறுபவாகலின் அவற்றை அவ்வாறு கோடுமெனின்? அவைகள் தாம் அகத்துள்ளும் பிற சான்றோர் செய்யு ளுள்ளும் வருதலிற் குற்றமாகா. அகத்தியனாராற் செய்யப்

பட்ட மூன்று தமிழிலும் அடங்காமை வேறு ஆனந்தவோத் தென்பது ஒன்று செய்தாராயின், அகத்தியமும் தொல் காப்பியமும் நூலாக வந்த சான்றோர் செய்யுட் குற்றம் வேறுபடாவென்பது" என்று கூறுவர். இவர் இவ்வாறு கூறுவதைக் கருதினால் அகத்தியர் அகத்தியத்திற்கு வேறாக ஆனந்தவோத்தினைச் செய்தார் என்பதை ஏற்றுக் கொள்ள வில்லை என்பதை அறிகிறோம்.

ஆனால், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் ஆளவந்த பிள்ளையாசிரியரும் அகத்தியனார் ஆனந்த ஒத்து என்னும் நூலைச் செய்ததாகக் கூறி அதிலிருந்து பல நூற்பாக்களை எடுத்துக் காட்டுகின்றார் (யாப்பருங்கல விருத்தியுரை, பக். 557).

மேலும், சிதம்பரப் பாட்டியல் என்னும் நூல், "அகத்தியன் சொல் எழுத்து முதற் குற்றச் செய்யுட்கு அடையாமல் தொடை கொண்டால் அடையும் செல்வம்" என்று அகத்தியனார் ஆனந்த ஒத்தைக் குறிப்பிடுகின்றது.

அகத்தியர்

மேற்கூறிய பலருடைய கருத்துக்களைக் கருதி ஆராய்ந்தால் நமக்குச் சில உண்மைகள் புலனாகும். இருக்கும் இலக்கண நூல்களில் அகத்தியத்தையும், தொல்காப்பியத்தை யும் பழமையானதாக இறையனார் களவியல் உரை கூறுகிறது. மேலும் அவ்வுரை அகத்தியரை முதற்சங்க, இடைச்சங்க காலத்தில் இருந்த புலவராகவும் கூறுகின்றது. மேலும் இராமாயண காலத்தில் அகத்தியர் இருந்ததாக வான்மீகியார் குறிப்பிடுகின்றார். அகத்தியரைப் பற்றித் தமிழ் நாட்டுத் தல புராணங்கள் பலவகையான கதைகளைச் சொல்லுகின்றன. இக்காரணத்தால் அகத்தியர் ஒருவர் அல்லர் என்பது தெளிவாகப் புலனாகின்றது.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே

என்ற திருவாசகம் இறைவனைக் குறித்தல் போல், அகத்தியர் என்ற பெயர் முற்காலத்துப் புலவர் வரிசையிலும்,

பிற்காலத்தே மருத்துவநூல் எழுதிய தேரையர், புலிப்பாணி, போகர் என்னும் புலவர் வரிசையிலும் கேட்கப்படுகிறது.

அகத்தியம்

அகத்தியம் என்ற நூலிலிருந்து இளம்பூரணர், யாப்பருங்கல விருத்தியாசிரியர், மயிலைநாதர் முதலியோர் யாப்பிலக்கணம் பற்றியும் சொல்லிலக்கணம் பற்றியும் சில நூற்பாக்களை உதாரணம் காட்டுகிறார். ஆனால் அந்த நூற்பாக்கள் தொல்காப்பிய நூற்பாப் போலப் பழமையாகக் கருதும் நடையில் இல்லை. அந்நூற்பாக்களில் பொத்தகம் (புஸ்தகம்) பல்லவம் (பல்லவர் நாடு) முதலான பெயர்களை மலையாள இலக்கண நூலாகிய லீலா திலகத்தில்,

எகர ஒகர ஆய்த ழகர
றகர னகரம் தமிழ்பொது மற்றே

என்றொரு நூற்பா அகத்திய நூற்பா என்று காட்டப் பட்டுள்ளது. இது,

றனழள ஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபு
அல்லாச் சார்புந்த தமிழ்பிற பொதுவே

என்னும் நன்னூல் நூற்பாவைப் பெரும்பாலும் அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. இஃது எல்லாம் பிற்கால வழக்கம். இவற்றை எல்லாம் கருதின் அகத்தியம் என்று இப்பொழுதுள்ள நூல் தொல்காப்பியக் காலத்திற்கும் மிகவும் பிற்பட்ட காலத்தில் எழுந்த நூலாகும்.

தொல்காப்பியர் இருவர்

இளம்பூரணர் தொல்காப்பியக் கருத்துடன் மாறு படுவதால் பன்னிருபடலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் செய்திலர் என்று கூறுகின்றார். ஆனால், பன்னிருபடலமும், வெண்பாமாலையும் பன்னிருபடலத்துள் வெட்சிப் படலத்தைத் தொல்காப்பியர் இயற்றியுள்ளார் என்றே கூறுகிறது. இத்தகைய இடரான இடத்தில் ஆராய் வார் தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியர் வேறு, பன்னிருபடலத்துள் வெட்சிப்படலம் பாடிய தொல் காப்பியர் வேறு என்று கருதி உணரவேண்டும். நச்சினார்க்

கினியரும் பன்னிரு படலத்தைப் 'புதுநூல்' என்றே கருதுகின்றார்.

அப் புதுநூல் வானோர் வேண்டத் தென்திசைப் பொதியம் போந்திருந்த அகத்தியமுனிவர் தன்பாற்றண்டமிழ் உணர்ந்த பிற்காலத் தொல்காப்பியன் முதல் பன்னிருபுலவரும் பாடியதாகும். இப்பன்னிருபடலம் பொருளிலக்கணத்தை அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்று நான்காகப் பகுக்கிறது. வெட்சி, வெட்சியின் எதிர் கரந்தை; வஞ்சி வஞ்சியின் எதிர் காஞ்சி; உழிஞை உழிஞையின் எதிர் நொச்சி என்று கூறுகிறது. தொல்காப்பியர் அகத்திணை ஏழ் என்று கூறி, அவ்வேழனுடன் இயைபுபடுத்திக் கூறாமல் வாகை புறத்திணையை ஓதுகின்றது. இவ்வாறு கூறுகின்ற நெறி பன்னிருபடல நெறியாகும். இந்நெறிக்கு முதல்வர் அகத்தியராவார்.

யாப்பருங்கல விருத்தியில் எடுத்துக்காட்டப்பட்ட

தகைபெறு பொதியிலெந் தலைவ னாணையின்
தொகைவகை விரிபடச் சொற்ற நூல்களுள்
வகையுள் சேர்த்து வகுப்பர் ஆதலால்
நகைபெற நாலசை நடப்ப தில்லையே

(யாப்பருங்கல விருத்தி, பக். 437)

என்னும் பாட்டும் அகத்தியர் ஆணையால் சொல்லப்பட்ட நூல்கள் என்று வருவதை நோக்கினால் பன்னிருபடலம் முதலியவை அகத்தியர் ஆணையால் எழுந்த நூல்களாகும். இது தொல்காப்பியத்துடன் பொருளிலக்கண முறையில் மாறுபடுகின்றது.

கூறிய குன்றினும் முதுநூல் கூட்டித்
தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன்
ஆணையிற் றமிழ்அறிந் தோர்க்குக் கடனே

(பேராசிரியர் உரை மேற்கொள் மரபியல் - 95)

என்னும் நூற்பாவால் அகத்தியர் ஆணையால் நூல் செய்தல் போலத் தொல்காப்பியர் ஆணையைப் பின்பற்றி எழுந்த நூல்களும் உள. தொல்காப்பியர் கூறும் பொருளிலக்கண நெறி வேறு என்பது மேலே காட்டப்பட்டது.

அதுபோல் தொல்காப்பியர் கூறும் செய்யுளிலக்கண நெறியும் அகத்தியர் கூறும் செய்யுளிலக்கண நெறியும் வெவ்வேறாகும்.

1. தொல்காப்பியர் மாத்திரை முதல் இருபத்தாறு உறுப்பும் அம்மை முதலான எட்டு யாப்பலங்காரமும் செய்யுட்கு உரியதாகக் கூறுகிறார்.

அகத்தியர் எழுத்து முதல் ஆறு உறுப்புக்களை மட்டும் செய்யுட்குரியதாகக் கூறுகிறார்.

2. தொல்காப்பியர் தளை என்பதை ஓர் உறுப்பாகக் கொண்டிலர். அவர் தளையை ஓர் உறுப்பாகக் கொள்கின்றார்.

3. தொல்காப்பியர் நேர், நிரைபு, நேர்பு, நிரைபு என்னும் நான்கசை சொல்கின்றார். அவர் நேர், நிரை என்னும் இரண்டசையே கொள்கின்றனர்.

4. தொல்காப்பியர் பெரும்பாலும் நாற்சீரடியுள் கட்டளையடிகளையேகொண்டு அவற்றால் ஆசிரியம், வெண்பா கலிப்பாக்களை ஆக்கிக் கொள்கின்றனர். சீர்வகை அடியில் குறளடி, சிந்தடிகளைக் கொண்டு வஞ்சிப்பாவை ஆக்கிக் கொள்கின்றார். பாவினம் கொண்டிலர், அவர் சீர்வகை அடிகளையே கொண்டு, பா, பாவினங்களை யெல்லாம் அவற்றால் அமைத்துக் கொள்வர்.

5. தொல்காப்பியர் ஆசிரியப்பாவையே முதற்பாவாகக் கருதி ஆசிரியநடைத்தே வஞ்சி என்பர். வெண்பாவை ஒன்றாம் நிலையில் நிறுத்தி வெண்பாநடைத்துக் கலி என்று கூறுகின்றார். அவர் வெண்பாவை முதலாக வைத்து வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்ற முறையில் கூறிச் செல்கின்றார். வெண்பாவை முதலாகக் கொள்வது அகத்தியநெறி, ஆசிரியப்பாவை முதலாகக் கொள்வது தொல்காப்பிய நெறி.

இன்னும் இவர் இருவர்க்கும் வேறுபாடுகள் உள்ளன. ஆனால் தொல்காப்பியர் நெறியைப் போல் அகத்தியர் நெறி பழமை வாய்ந்ததன்று. தொல்காப்பியர் நெறிக்குப் பிற்பட வழங்கத் தொடங்கியது அது.

பொருளிக்கணமும் மேற்கூறிய செய்யுளிலக்கண நெறிபோல் இருவர்க்கும் வேறுபட்டே செல்கின்றது.

5

தொல்காப்பியத்திற் சில திறனாய்வு முறைகள்

மிகப் பழைய தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலானது திறனாய்வு முறைகளிற் சிலவற்றை நமக்கு நினைவூட்டுகின்றது. அது நூல்களைப் (இலக்கண நூல்கள்) பற்றிக் கூறத் தொடங்குங்கால், நூல்கள் முதல் நூலும், வழிநூலும் என இரண்டு வகையாகும் என்று கூறுகின்றது.

"மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை இயல
முதலும் வழியுமென நுதலிய நெறியின"

(மரபியல் - 93)

என்பது அந்நூற்பாவாகும். இறையனார் களவியல் உரையும் நன்னூலும், யாப்பருங்கல விருத்தியுரையும் நூல்கள் முதல் நூலும், வழிநூலும், சார்பு நூலும் என மூவகையாகும் என்று கூறுகின்றது.

"முதல்வழி சார்பென நூல்மூன் றாகும்"

என்பது அந்நூற்பாவாகும். தொல்காப்பியர் நூல் இரண்டு என்று சொல்லக் களவியல் உரையாசிரியர் முதலியோர் நூல் மூன்று என்று கூறுவானேன் என்று வினா எழுகின்றது.

தொல்காப்பியர் காலத்தில் முதல் நூல், வழி நூல் என இரண்டே இருந்தன. அதன் பிற்காலத்தில் சார்பு நூலும் எழுந்தது. இலக்கியம் நோக்கி, இலக்கணம் எழுதுதலே முறையாதலின், தொல்காப்பியர் காலத்தில் இருவகை நூலே இருந்ததாதலின், அவர் அவ்விரண்டிற்கு இலக்கணம் வகுத்தார். களவியல் உரை முதலானவற்றின் காலத்தில் மூவகை நூல் எழுந்ததால் அவற்றிற்கெல்லாம் இலக்கணம் எழுதப்பட்டன.

தொல்காப்பியர் தொல்காப்பியத்துள் என்மனார், புலவர், உணர்ந்தோர் கண்ட ஆறு, புலன் நன்கு உணர்ந்த புலமையோர், குறி அறிந்தோர், நூல்நவில் புலவர் நுவன்

றறைந்தனர், தொன்மொழிப் புலவர் என்பன முதலான வற்றால் முதல் நூல் ஆசிரியர்களைக் குறிப்பிடுதல் காண்க. வடவேங்கடம் தென்குமரி ஆயிடையே உள்ள நீண்ட பரந்த தமிழ்நிலப் பரப்பிலே பல முதல் நூல்கள் இருந்திருக்க வேண்டும். அவர்களையெல்லாம் தொல்காப்பியர் பலர்பாற் சொல்லாற் கூறுகிறார். இறையனார் களவியலுரை முதல் நூலின் இலக்கணத்தை,

"முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"
"முனைவன் நூற்குப் பிறன்கோள் கூறாது"
"தந்திரம் சூத்திரம் விருத்தி மூன்றற்கும்
முந்துநூல் இல்லாது முதல்நூல் ஆகும்"

என்று கூறியுள்ளது. இவற்றையெல்லாம் கருதினால், காலத்தை இலக்கணம் எழுதப்பெறாமல் இலக்கியமே வழங்கிய காலமென்றும் இலக்கணம் எழுதப்பட்ட காலம் என்றும் இரண்டு விதமாகப் பிரித்து வழங்கலாம் என்க. இலக்கணம் எழுதப்பட்ட காலத்தையும், முதனூல் மட்டும் வழங்கிய காலம், முதல் நூலின்பின் வழிநூல் எழுந்து வழங்கியகாலம், அவ்விரண்டின் பின் சார்புநூல் எழுந்து வழங்கிய காலம் என்று மூன்றாகப் பிரித்து வழங்கலாம்.

மேற்குறிப்பிட்ட மூன்று வகையான காலத்தில் தொல் காப்பியர் காலம், முதனூலின் பின் வழிநூல் எழுந்து வழங்கிய காலமாகும். முதல் நூல், இலக்கிய காலத்தின் பின் எழுந்ததாதலின், இலக்கியங்களின் அமைப்பை மட்டும் நோக்கியே அது எழுதப்பட்டிருக்கும். வழிநூல் எழுதும் புலவன் இலக்கிய அமைப்பையும், முதனூல் அமைப்பையும் ஆராய்ந்து எழுதுவான். தொல்காப்பியம் தமிழ்கூறு நல் உலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடியும், முந்துநூல் கண்டும், பின்னர் கிடைத்த இலக்கண விதிகளை முறைப்பட எண்ணியும் தொகுக்கப்பட்ட நூல் என்று அதன் பாயிரம் கூறுகின்றது. பாயிரம் முறைப்பட எண்ணி என்று கூறுகின்றது. முறைப்பட எண்ணுதல் திறனாய்வாளன் செய்ய வேண்டிய வேலைகளுள் ஒன்றாகும்.

இலக்கண நூல் எழுதுபவன் முன்னே அதிகாரங்களை முறையாக வைக்க வேண்டும். இதனைத் தொல்காப்பியர் அதிகார வகை என்றும் நன்னூலாசிரியர் ஒத்துமுறை வைப்பு என்றும் கூறுவர். பின்னர் இலக்கணப் பொருள் களைக் கூறும்பொழுது, தொகுத்தும் வகுத்தும் கூறல் வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் 'தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்' என்பர். நன்னூலாசிரியர் 'தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்' என்பர்.

தொல்காப்பியர் தம் நூலுள் எழுத்ததிகாரம், சொல்லதி காரம், பொருளதிகாரம் எனப் பெயர் அமைத்திருப்பதையும், பொருளறிவுறுத்தும் சூத்திரம் போலவே கொண்டு அவற்றிற்குப் பொருளெழுதிச் செல்வர் உரையாசிரியர்.

இளம்பூரணர் எழுத்ததிகாரத் தொடக்கத்தே எழுத் துணர்த்தின காரணத்தால் எழுத்ததிகாரம் என்னும் பெயர் பெற்றதென்பர். அதன் பின் எழுத்து எனைத்து வகையான் உணர்த்தினானோவெனின், எட்டு வகையானும், எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினான் என்பது.

அவற்றுள் எட்டுவகையாவன:- எழுத்து இனைத்து என்றலும், 1 இன்ன பெயர என்றலும், 2 இன்ன முறைய வென்றலும், 3 இன்ன அளவின வென்றலும், 4 இன்ன பிறப்பின வென்றலும், 5 இன்ன புணர்ச்சியவென்றலும், 6 இன்ன வடிவினவென்றலும், 7 இன்ன தன்மைய வென்றலும், 8 என இவை.

இனி எட்டிறந்த பலவகையாவன:- உண்மைத் தன்மையும், குறைவும், கூட்டமும், பிரிவும், மயக்கமும், மொழியாக்கமும், நிலையும், இனமும், ஒன்று பலவாதலும், திரிந்ததன் திரிபது வென்றலும், பிறிதென்றலும், அதுவும் பிரிதுமென்றலும், நிலையிற்றென்றலும், நிலையாதென்றலும், நிலையிற்று நிலையாதென்றலும் இன்னோரன்னவு மென்ன இவை" என்று எழுத்திலக்கணத்தை வகைப்படுத்திக் கூறு கின்றார். இப்படி வகைப்படுத்திக் கூறுதல் திறனாய்வு வகைகளில் ஒன்றாகும்.

இன்னும் அவர் எழுத்திலக்கணத்தைக் கருவி, செய்கை என இரண்டு வகையாகப் பகுத்துக் கொண்டு இவ்விரண்டையும் தனித்தனிப் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என வகைப்படுத்திப் பின் விளக்கிக் காட்டலும் திறனாய்வு முறையாகும்.

இஃதே போல் இளம்பூரணர் சொல்லதிகாரமுகத்தே சொல் எனைத்து வகையான் உணர்த்தினானோவெனின்? எட்டுவகைப்பட்ட இலக்கணத்தான் உணர்த்தினான் என்க.**

அவையாவன இரண்டு திணை வகுத்து, அத்திணைக் கண் ஐந்து பால் வகுத்து, எழுவகை வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, அறுவகை ஒட்டு வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து இரண்டு இடத்தான் ஆராய்ந்தான் என்பர்.

இவ்விரண்டு அதிகாரத்தும் உணர்த்தினாற்போலவே பொருளதிகார முகத்தும் "இவ்வதிகாரத்துள் உரைக்கின்ற பொருளை யாங்ஙனம் உணர்த்தினாரோவெனின், முற்பட இன்பப் பகுதியாகிய கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக அகப்பொருள் இலக்கணம் உணர்த்தி, அதன்பின் புறப்பொருட்பகுதியாகிய வெட்சி முதலாகப் பாடாண்டினை ஈறாகப் புறப்பொருள் இலக்கணம் உணர்த்தி, அதன்பின் அகப்பொருட் பகுதியாகிய களவியல் கற்பியல் என இரண்டு வகைக் கைகோளும் உணர்த்தி, அதன்பின் அகம் புறம் என இரண்டினையும் பற்றி வரும் பொருளியல்பு உணர்த்தி, அதன்பின் அவ்விரு பொருட் கண்ணும் குறிப்புப் பற்றி நிகழும் மெய்ப்பாடு உணர்த்தி, அதன்பின் வடிவும் தொழிலும் பண்பும் பயனும் பற்றி உவமிக்கப்படும் உவமவியல் உணர்த்தி அதன்பின் எல்லாப்

**"வேற்றுமை யெட்டுந் திணையிரண்டும் பாலைந்தும்
மாற்றுதற் கொத்த வழுவேழும் - ஆறொட்டும்
ஏற்றமுக் காலமிட மூன்றோ டிரண்டிடத்தால்
தோற்ற வுரைப்பதாஞ் சொல்."

இவ்வண்ணம் எட்டுவகைப்படுத்திச் சொல்லாராய்ந்தார் தொல்காப்பியனார் என்பர் வீரசோழியவுரையாசிரியர்.

பொருட்கும் இடமாகிய செய்யுளியல் உணர்த்தி, அதன்பின் வழக்கு இலக்கணமாகிய மரபியல் உணர்த்தினார் என்க என்பர்.

இவ்வாறு தொகுத்துக் கூறல் என்னும் திறனாய்வு முறையில், தொல்காப்பியத்தில் மூன்றதிகாரத்தும் கூறியுள்ள பொருள்கள் அனைத்தையும் அவர் கூறியுள்ளதைக் காணலாம்.

மேலும், தொல்காப்பியர் அகத்திணை இயலில் காலம் என்னும் முதற்பொருளைத் திணைக்கு உரிமையாக்கிக் கூறும்பொழுது, கார் என்னும் பெரும்பொழுதும் மாலை என்னும் சிறுபொழுதும் முல்லைத்திணைக்கு உரியதென்றும், கூதிர் முன்பனி என்னும் பெரும்பொழுதிரண்டும் நடுயாமமும் குறிஞ்சித்திணைக்கு உரியதென்றும், வைகறை, விடியல் என்னும் சிறுபொழுதிரண்டும் மருதத்திணைக்குரிய தென்றும், எற்பாடு என்னும் சிறுபொழுது நெய்தலுக் குரியதென்றும் இளவேனில் முதுவேனில் பின்பனி என்னும் பெரும்பொழுது மூன்றும், நண்பகலும் பாலைக்குரியது என்றும் பகுத்துக் கூறியுள்ளார்.

இவர் இவ்வாறு கூறியுள்ளதற்கு இயைபான காரணம் என்னை எனக் கருதி உரையாசிரியராகிய இளம்பூரணர் கூறும் திறன் நாம் ஓதி இன்புறுதற்குரியதாகும். அதனைக் கீழே காணலாம்:- இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ்வைந்திணைக்கு உரியவாறு என்னையெனின், சிறப்பு நோக்கி என்க. என்னை சிறந்தவாறு எனின்? முல்லையாகிய நிலனும் வேனிற் காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினழிந்து கிடந்தன. அவை புயல்கள் முழங்கிப் பெய்யக் கவின்பெறும் ஆதலின் அதற்கு அது சிறந்ததாகும். மாலைப்பொழுது இந்நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலருங் காலமாதலானும், அந்நிலத்துக் கருப்பொருளாகிய ஆனிரை வருங்கால மாதலானும், ஆண்டுத் தனியிருப்பார்க்கு இவை கண்டுழி வருத்தம் மிகுதலின் அதுவும் சிறந்தது ஆயிற்று.

குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற்புணர்ச்சி பொருளாதலின், அப்புணர்ச்சிக்குத் தனியிடம் வேண்டு மென்றே, அது கூதிர்க்காலத்துப் பகலும் இரவும் நுண்டுளி

சிதறி இயங்குவார் இலராம் ஆதலான், ஆண்டுத் தனிப்பாடல் எளிதாகலின், அதற்கு அது சிறந்தது. நடுநாள் யாமமும் அவ்வாறாதலின் அதுவும் சிறந்தது.

மருதத்திற்கு நிலன் பழனஞ்சார்ந்த இடமாதலான் ஆண்டு உறைவார் மேன்மக்கள் ஆதலின், அவர் பரத்தையிற் பிரிவுழி அம்மனையகத்து உறைந்தமை பிறர் அறியாமை மறைத்தல் வேண்டிய வைகறைக்கண் தம் மனையகத்துப் பெயருமின்றி, ஆண்டு மனைவி ஊடலுற்றுச் சார்கிலளாம் ஆதலால் அவை அந்நிலத்திற்குச் சிறந்தன.

நெய்தற்குப் பெரும்பான்மையும் இரக்கம் பொருளாதலின் தனிமையுற்று இரங்குவார்க்குப் பகற்பொழுதிலும் இராப்பொழுது மிகுமாதலின், அப்பொழுது வருதற்கேதுவாகிய ஏற்பாடு கண்டார் இனி வருவது மாலையென வருத்தமுறுதலின் அதற்கு அது சிறந்தது என்க.

பாலைப் பொருளாவது பிரிவு. அப்பிரிவின்கண் தலைமகற்கு வருத்தம் உறும் என்று தலைமகள் கவலுங்கால், நிழலும், நீரும் இல்லாத வழி ஏகினார் எனவும் கவலுமாதலின் (நிழலும் நீரும் அருகித் தோன்றும் வெப்ப காலமாகிய) அது அதற்குச் சிறந்தது என்க" என்பர்.

இளம்பூரணர் இவ்வாறு கூறுதல் உய்த்துணர்ந்து கூறும் திறனாய்வு முறையாகும்.

அகத்திணையியலில் பாலைத்திணையைக் கூறி அதன்கண் நிகழும் பிரிவில் நற்றாய், செவிலி, தோழி, கண்டோர், தலைமகன் என்னும் ஐவர் கூற்று நிகழுமாறு ஐந்து நூற்பாக்களில் உணர்த்தியபின், "எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே" (45) என்று தொல்காப்பியர் கூறுகிறார். இந்நூற்பா உரையில் இளம்பூரணர் இதுகாறும் பிரிவின்கண் கூறுதலுரியார் பலருள்ளும் நற்றாயும் செவிலியும் தோழியும் கண்டோரும் தலைமகனும் கூறும் கூற்றுக் கூறினார். இஃது அவரையொழிந்த தலைமகட்கும், பாங்கற்கும், பார்ப்பார்க்கும், பாணர்க்கும், கூத்தர்க்கும், உழையோர்க்கும் கூற்று நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று என்று கூறினார்.

திறனாய்வு செய்பவருக்கு நூலாசிரியன் கூறும் ஒவ்வொன்றும் பொருந்துமா? பொருந்தாதாயின் அதற்குக் காரணம் எதுவாக இருத்தல் வேண்டும்? என்று ஆய்ந்து உண்மையைக் கூறுதல் கடமையாதலின், அவ்வறி வினையுடைய இளம்பூரணர் ஒரு வினாவை எழுப்பிக் கொண்டு அதற்கு விடைதருதலைக் காண்போம்.

பாங்கன் முதலாயினாரை, "எஞ்சியோர்க்கும் எஞ்சுத லிலவே" (45) என்னும் இச்சூத்திரத்தால் ஆசிரியர் கூறுப. ஆனால், தலைமகள் கூற்று தனித்துக் கூறல் வேண்டும்: ஏன் எனில், தலைவி இவரோடு ஒரு நிகரன்மையின் எனின், அது ஒக்கும்; தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப்பழமையால் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும், என்று கூறியுள்ளார்.

இக்காலத்திலே திறனாய்வு செய்பவர் எடுத்த உடனே நூலாசிரியர் மேல் அது குற்றம், இது குற்றம் என்று பல்வகைக் குற்றத்தைச் சுமத்தி, அறியாமைப் பட்டம் கட்டி விடுதலையும் பார்க்கிறோம். இளம்பூரணர் அவ்வாறு கூற விரும்பவில்லை. அகத்திணையியலில் தொல்காப்பியர் கூறும் உள்ளுறை உவமம் என்பது பலரையும் பலவாறு குழப்பி விடும் ஒன்றாக உள்ளது. அதனை இளம்பூரணர் தெளிவு படுத்திச் செல்கின்றார். தொல்காப்பியர் உவம இயலின் உவமைக்கு இலக்கணம் கூறினாலும், முன்னே அகத்திணையியலில் அவற்றை நான்கு நூற்பாவால் கூறி யுள்ளார். அவற்றைக் கீழே காண்க.

"உள்ளுறை யுவமம் ஏனை யுவமமெனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே" (49)

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே" (50)

"உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் துரைப்பதே உள்ளுறை யுவமம்" (51)

"ஏனை யுவமந் தானுணர் வகைத்தே" (52)

"உள்ளுறைக்கண் வரும் உவமமும் ஒழிந்த உவமமும் என இரண்டு வகையாலும் திணை உணரும் வகை தப்பாதாகும்" என்றும், "உள்ளுறையாவது கருப்பொருளுள் தெய்வம் ஒழிந்த பொருளை இடமாகக் கொண்டு வரும் என்று சொல்லுவர் இலக்கணம் அறிந்தோர்" என்றும், "உள்ளுறுத்துக் கருதிய பொருள் இதனோடு ஒத்து முடிக என, உள்ளுறுத்துக் கூறுவதே உள்ளுறை உவமம்" என்றும், "உள்ளுறை யொழிந்த உவமந்தான் (வெளிப்பட) உணரும் வகையான் வரும்" என்றும் இளம்பூரணர் உரை கூறுகின்றார். "உள்ளுறையுவமம் ஏனையுவமமென்னும் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரை சிறிதும் பொருந்துவதா யில்லை. உவமம் உள்ளுறை உவமமென்றும், ஏனை யுவமமென்றும் இருவகையாக வந்து, அகத்திணைப் பொருளைத் தப்பாது உணர்த்தும் என்று இளம்பூரணர் உரைப்பதே நல்ல உரையாகும்.

அவ்வுள்ளுறை உவமமானது கருப்பொருளுள் தெய்வம் ஒழிந்ததைத் (தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களை) தான் தோன்றுதற்குரிய இடமாகப் பெற்று வரும்.

அவ்வாறு வருங்கால், உள்ளுறுத்துக் கருதிய பொருள் இக்கருப்பொருளுடன் ஒத்து முடிக என உள்ளே குறித்துக் கொண்டு கூறும். அஃதே உள்ளுறை உவமமாம் என்பர்.

இளம்பூரணர், "உள்ளுறுத்து" என்ற நூற்பாவுரையுள் ஏனையுவமத்திற்கும் உள்ளுறையுவமத்திற்கும் நல்ல வேறுபாடொன்றனைக் கூறியுள்ளார். அஃது ஏனை உவமையாற் கொள்ளப்படுவது வினை, பயன், மெய் உருவாகும்; உள்ளுறை உவமையாற் கொள்ளப்படுவது பொருள் என்பர். இங்கே பொருள் என்றது உரிப்பொருளை.

"வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டும் குறுகும் - நிறைமது சேர்ந்து
உண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு".

இப்பாட்டுள் நிறைந்த தேன்பொருந்தி உண்டு ஆடப்பெறும் தனது முகத்தே அழகினையுடைய ஒன்றாகிய

சிறந்த தாமரை மலரைப் பிரிந்த வண்டானது கூட்டமாகிய ஏனைய வண்டுகள் நுகர்ந்து விட்டுச் சென்ற காவிமலரின் குறைபடு தேனையும் விரும்பிச் சேரும் என்று கூறப்பட்டுள்ளது. இங்கே நிறைந்த இன்பத்தைத் தரும் முகச் செவ்வியையுடைய தலைமகளைப் பிரிந்த தலைமகன் பலரால் இன்பம் நுகரப்பட்டுக் குறைந்த இன்பத்தைத் தரும் பரத்தையைக் கருதிப் பிரிந்தான் என்ற ஊடற்பொருள் கூறப்படுகிறது.

புறத்திணை இன்ப நிலையில் பெருமிதம்

கோட்டங் கண்ணியும் கொடுந்திரா ஆமையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்
ஒத்தன்று மாதோ இவற்றே தெற்றிய
தணிநிலை அலறக் கூவை போழ்ந்துதன்
வடிமாண் எஃகம் கடிமுகத் தேந்தி
ஒம்புமின் ஒம்புமின் இவண்என ஒம்பாது
தொடர்கோள் யானையில் குடர்கால் தட்ப
கன்றமர் கரவை மான
முன்சமத் தொழிந்ததன் தோழற்கு வருமே.

புற. 275

புறத்திணை இன்ப நிலையில் வெகுளி

உறுதுப் பஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை.

புறநானூறு - 72

புறத்திணை இன்ப நிலையில் உவகை

வையை வருபுனல் ஆடல் இனிதுசொல்
செவ்வேற்கோ குன்றம் நுகர்தல் இனிதுகொல்
வைவேல் துதியன்ன கண்ணார் துணையா
வழிமயக் குந்து மருடல் நெடியான்
நெடுமாடற் கூடற் கியல்பு

- பரிபாடல்.

6
ஐந்திணைக் காமம்

காமம் என்ற குணத்திலிருந்தே உலகத்திலுள்ள எல்லாப் பொருளும் தோன்றுகின்றன என்று தொல் காப்பியர் கருதுகின்றார். அவர் அகத்திணை புறத்திணை என இரண்டு திணை வகுத்துக்கொணடு அகத்திணையில் ஒருபாற் காமமாகிய கைக்கிளையையும் ஒத்த அன்பு பற்றித் தோன்றும் ஐந்திணையையும் ஒவ்வாக் காமமாகிய பெருந்திணையையும் புறத்திணையில் இக்காமங்கட்குப் புறமாகக் கருதப்பெறும் வெட்சி முதலாகிய புறத்திணை ஏழனையும் கூறுகின்றார். புறத்திணை ஏழற்கும் அகத்திணை ஏழும் அகம் என்பது அவர் கருத்தாகும். அகத்திணையை ஏனைப் புறத்திணையைக் காட்டிலும் அவர் மிக்க சிறப்பான பொருளாகக் கருதுகின்றார்.

மிக்க பொருளினுள் பொருள்வகை புணர்க்க
நாணுத் தலைப்பிரியா நல்வழிப் படுத்தே
(தொல். பொருள். பொருளியல் - 23)

என்னும் மேற்கண்ட நூற்பாவுரையில் இளம்பூரணர் மிக்க பொருள் என்றதை[1] அகப்பொருள் என்று கூறுமாறு காண்க. மிக்க பொருளாகிய அகத்திணை ஏழும் ஐந்திணைக் காமத்தையே தொல்காப்பியர் மிகமிகச் சிறந்த பொருளாகக் கருதுகின்றார். அவர் அகத்திணையியலில் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்று தொடங்கி, ஐந்திணைக் காமத்தினையே மிகுதியான நூற்பாக்களால் கூறுகின்றார். பின்னர் ஐந்திணைக் காமத்தின் கைகோள்களாகிய களவு, கற்பு என்னும் இரண்டனைக் களவியல், கற்பியல் எனத் தனி இயல்களால் உணர்த்துகின்றார். இவற்றிலே சொல்லாது எஞ்சிய ஐந்திணைச் செய்திகள் பலவற்றைப் பொருளியலிலும் கூறுகின்றார். மெய்ப்பாடென்பது அகத்திணை,

---

1. நச்சினார்க்கினியர் வேறுபொருள் கூறுவர்.

புறத்திணைக்குப் பொதுவாயினும் அவ்வியலில் பொது மெய்ப்பாட்டை முன்னே கூறிவிட்டுப் பின்னர் ஐந்திணைக் குரிய மெய்ப்பாட்டினைச் சிறப்பாகக் கூறுகின்றார். அது போலவே, உவமை, அகத்திணை புறத்திணைக்குப் பொது வாயினும், சில நூற்பாக்களில் தலைவன் தலைவி செவிலி தோழி முதலியோர் உவமை கூறுவதைப் பற்றியும், அகனைந்திணைக்கே சிறந்த உள்ளுறை உவமையைப் பற்றியும் நூற்பாச் செய்திருப்பதால் அங்கும் ஐந்திணைக் காமத்தையே சிறப்பாகக் கூறுகின்றாரென்பது புலனாகின்றது. செய்யுள் இலக்கணம், அகப்பொருட்பாட்டு புறப்பொருட்பாட்டு என்னும் இரண்டிற்கும், அகப்பொருளில் கைக்கிளை ஐந்திணை பெருந்திணைகட்குப் பொதுவாயினும், செய்யுளியலில் திணை, கைகோள், கூற்று, கேட்போர் முதலிய ஐந்திணைக் காமச் செய்தியைச் செய்யுட்கு உறுப்பாகக் கூறுவதை நோக்கினால், அங்கும் ஐந்திணைக் காமத்தையே சிறப்பாகக் கருதுகின்றார் என்பது தெரிகின்றது. எனவே அகத்திணை, புறத்திணை என்னும் இரண்டில், அகத்திணை மிக்க பொருளாகிய அகத்திணையியலும் ஐந்திணைக் காமம் மிகச் சிறந்ததென்றும் தொல்காப்பியர் கூற்றிலிருந்தே நமக்குத் தெரிகிறது.

காமம் எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கின்றது. அது பலவகையாக இருக்கின்றது. மண்ணைப் பற்றியும், பெண்ணைப் பற்றியும் பொன்னைப் பற்றியும் மக்கள் விருப்பம் செல்கின்றது. இவையெல்லாம காமந்தான். ஆனால், ஒரு ஆண், ஒரு பெண்ணை விரும்புகின்றான். ஒரு பெண் ஒரு ஆணை விரும்புகின்றாள். இதனையே தொல் காப்பியர் அகத்திணை என்று கூறுகின்றார். ஒரு ஆண் ஒரு பெண்ணை விரும்புகின்றான். ஆனால், அப்பெண் தன்னை விரும்பிய ஆணை விரும்புவதில்லை. ஒரு பெண் ஒரு ஆணை விரும்புகின்றான். ஆனால் அவ்வாண் தன்னை விரும்பிய பெண்ணை விரும்புவதில்லை. ஆண் பெண் என்னும் இருவருள் ஒருவர் காமத்தை நுகரும் பருவம் உடையவராயும் மற்றொருவர் காமத்தை விரும்பும்

எண்ணமேயில்லாத இளமைப்பருவம் உடையவராகவும் இருக்கின்றனர். இதனைக் கைக்கிளைக் காமம் என்பர். ஆண், பெண் என்னும் இருவரில், ஆண் மூப்புடையவ னாகவோ பெண் மூப்புடையவளாகவோ அல்லது இருவரும் மூப்புடையவராகவோ இருந்து நுகரும் காமமும், அளவு கடந்த காமத்தையுடையவராகவிருந்து மற்றவரிடத்தில் மிகமிக முறைகேடாக நடந்து நுகரும் காமமும் உண்டு. இவற்றைப் பெருந்திணைக் காமம் என்பர். மேற்கூறிய இரண்டு காமங்கட்கும் வேறாய் காமம் நுகர்தற்குரிய பருவமுடைய தலைவன், தலைவியாரிருவர் ஒருவர்மேல் ஒருவர் அன்புடையவராகக் கூடி, நுகரும் காமமும் உண்டு. இவ்விருவர் கூட்டத்தை இருவயின் ஒத்த காமக்கூட்டம் என்று கூறுவர்.

மேலே காட்டிய மூன்று வகையான காமத்தில், சிறுமை பற்றிய கைக்கிளைக் காமமும், ஒவ்வாத முறையினை யுடைய பெருந்திணைக் காமமும் உலகத்தில் மிகுதியும் நடப்பனவாகும். ஆனால், அவை பழிப்புடையன. ஐந்திணைக் காமம் எங்கேயோ ஒன்று நடக்கலாம். ஆனால் அது சிறந்தது, புகழுடையது.

காதற் காமம் காமத்துச் சிறந்தது

(9 - 14 அடி) என்று பரிபாடல் கூறுவதைக் காண்க.

கைக்கிளைக் காமமும், பெருந்திணைக் காமமும் உலகில் பெரும்பாலும் நிகழ்பொருளாதலின், தொல்காப்பியர் அவற்றைச் சொல்ல வேண்டும் என்ற முறைக்காகத் தம் நூலுள் குறிப்பிடுகின்றனர். ஆனால், சிறந்த காமமாகிய ஐந்திணைக் காமத்தை மட்டும் அவர் நல்ல முறையில் கூறிச் செல்கின்றார்.

உலக நடைமுறையைப் பார்க்கின்றோம். எங்கும் தன்னலக் கொள்கைகளே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அறிவில்லாதவனை அறிவுடையவன் ஏமாற்றுகின்றான். எளியவனை வலியவன் நசுக்குகின்றான். செல்வனுடைய

பொருளைக் கள்வன் களவு செய்கின்றான். சினம், அழுக்காறு, அவா, பொய்ச்சொல், வன்சொல், இழிசொல், தீச்செயல் என்னும் இவற்றிலேயே பழகி, நற்பண்புகளை அறியாதவராகப் பொதுமக்கள் உள்ளனர். இவற்றை யெல்லாம் புலவன் பார்க்கின்றான். இவையெல்லாம் உலகநடை முறையாயிற்றே என்று அவன் கருதிக்கொண்டு இவற்றையெல்லாம் அவன் பாடுவதில்லை.

உலகம் தன்னலக் கொள்கையிற் சென்றால் புலவன் "உண்டாலம்ம இவ்வுலகம் தனக்கென வாழாநோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என்று பிறர் நலம் விரும்பும் கொள்கையைச் சிறப்பித்துப் பாடுகின்றான். பெரும்பாலும் வாணிபம் செய்வோர் தாம் கொடுக்கும் பண்டத்தை அளவில் குறைத்தும் கலப்படம் செய்தும் கொடுக்கின்றனர். விலைக்கு வாங்குபவரிடம் விலைப் பொருளை மிகுதியாக வாங்குகின்றனர். ஆனால் புலவன் 'கொள்வதூஉம் மிகைபடாது கொடுப்பதூஉம் குறைபடாது' பலபண்டத்தை விலை சொல்லிக் கொடுக்கின்றனர் என்று பாடுகின்றான்.

காம நெறிப்பட்டு நடக்கும், சிலர் பிறர்தம் மனைவியரை விரும்பிக் கூடுவது தம் ஒழுக்கத்திற்கும் உலக நடைமுறைக்கும் தீங்குதரும் என்று சிறிதளவு கூடக் கருதாமல், இருப்பதைப் புலவன் "எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்" என்று எதிர்த்துப் பாடுகிறான்.

இவற்றிலிருந்து தெரிவது என்னவெனில்? "உலக மக்கள் தான் சொல்வதை ஏற்று நடந்தாலும் உலக மக்க ளுக்கு நன்னெறியைப் புகட்டுவது தனது குறிக்கோளென்று புலவன் கருதுகிறான்" என்பது தெரிகின்றது.

தொல்காப்பியர் புறத்திணையியலிலும் (16 நூற்பா) கற்பியலிலும் அறிவர் (13 நூற்பா) என்பதைக் கூறுகின்றார். அவருடைய இயல்பைப் புறத்திணையியலில் "மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்"

என்றும், கற்பியலில் "கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள நல்லவை உணர்த்தலும் அல்லவை கடிதலும் (செவிலிக்கே யன்றி) அறிவர்க்கும் உரிய என்றும்" கூறி, "இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும்" (நூற். கற்பி. 16) என்றும் கூறுகின்றார்.

மேற்காட்டிய நூற்பாக்களிலிருந்து அறிவரென்பார் குற்றமில்லாத செய்திகளை இறந்த காலத்திலும், செய்தார், நிகழ்காலத்தில் செய்கின்றார், எதிர்காலத்திலும் செய்வார் என்பதும், தலைவன், தலைவியர்க்கு, இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அல்லவை கடிந்து, கடிகின்ற, கடியும் நல்லவை உரைத்து, உரைக்கின்ற உரைக்கும் இயல்பினரென்றும், அத்தலைவன் தலைவியர் இவற்றிற்கெல்லாம் திருந்தாதவிடத்து இடித்துக் கூறியாவது நன்னெறிக்கண் நிறுத்துவர் என்றும் அறிந்து கொள் கின்றோம்.

பல்புகழ் நிறுத்த படிமையோன் என்றும், ஒல்காப் புலமைத் தொல்காப்பியனென்றும், புகழ்ந்தோதப்பட்ட தொல்காப்பியரும் அறிவராதலால், உலக நடைமுறை எதுவாயிருப்பினும் நல்லதைச் சொல்லுதல் அவர் கடமை யாயிற்று.

காமம் என்பது எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கின்றது. காமத்திற்குக் கண்ணில்லை என்றொரு பழமொழியும் வழங்குகின்றது. "காமம் வெகுளி மயக்கம் எனும் மூன்றின் நாமம் கெடக்கெடும் நோய்" என்று திருக்குறளாசிரியர் முழங்குகின்றார். காமத்தினையுடைய மக்கள் எத்தனையோ தவறான வழியில் இயங்குகின்றனர். எத்தனையோ தீங்குகள் காமத்தால் அன்றும் நடந்தன. இன்றும் நடக்கின்றன. இவ்வாறு எல்லாக் கேட்டிற்கும் காரணமாகிய கைக்கிளை பெருந்திணைக் காமங்கள் உலகில் பெருவழக்காக இருத்தலால் அவற்றைத் தொல்காப்பியர் தம் நூலுள் ஒருசிறிதே குறிப்பிட்டுவிட்டு ஐந்திணைக்

காமம் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறுபான்மையாக நடப்பினும், அது நல்ல காமமாதலின் அதனையே எடுத்து மிகச்சிறப்பாகக் கூறுகின்றார். இதனாற் பயன், தீய காமப் பயிற்சியுடையோர் இதனைக் கற்றுத் திருந்துதலாகும். தொல்காப்பியமே போக்கறு பனுவல் தானே. காம உலகின் போக்கறவே தொல்காப்பியர் உயர்ந்த காமமாகிய ஐந்திணையைப் பாரித்து உரைத்தாரென்க.

ஆழ்ந்த வளர்ச்சி இல்லாதவர், ஆழ்ந்த உணர்ச்சி இருந்தும் தொல்காப்பியத்திற்கு ஏற்றம் கற்பிக்கக்கூடாது என்று தேற்றமாகக் கருதிக்கொண்டிருப்பவர் என்றும் இவரெல்லாம் தொல்காப்பியத்தில் என்ன இருக்கின்றது? என்மனார் புலவர் என்பது தான் மிகுதியாக இருக்கின்றது என்று கூறிக்கொண்டிருப்பர். தொல்காப்பியர் கூறும் பொருளதிகாரத்தே உலகப்பொருள் அத்தனைக்கும்

---

1. தலைவன் தலைவி என்னும் இருபாலரிடத்தும் ஒத்த அன்பினால் தோன்றும் காமம் உலகில் நிகழாததன்று. இது சிறுபான்மையாக நிகழும் ஆதலின் இது உலகியலே. இறையனார் களவியலுரையாசிரியர், "இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாதலின் இதனை உலக வழக்கத்தினோடு இயையான் என்பது" என்று கூறுவர். அது பொருத்தமன்று. நச்சினார்க்கினியர், "இஃது இல்லதெனப்படாது. உலகியலேயாம், உலகியலின் றேல் ஆகாயப்பூ நாறிற்றென்ற வழி அது கூடக் கருதுவாருமின்றி மயங்கக் கூறினானென்று உலகம் இழிந்திடப் படுதலின், இதுவும் இழித்திடப்படும். இச்செய்யுள் வழக்கினை நாடக வழக்கென மேற்கூறினர். எவ்விடத்தும், எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது. உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரை வகையாற் கூறும் நாடக இலக்கணம் போல, யாதானுமொரோவழி ஒரு சாரார் மாட்டு உலகியலால் நிகழும் ஒழுக்கத்தினை, எல்லோர்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுள் செய்த ஒப்புமை நோக்கி" என்பர். - (தொல். அகத். - 3)

முதலாயிருக்கும் காமம், அக்காமத்தின் உயர்ந்த பகுதி கூறப் பட்டிருக்கிறது. இனி அவர் கூறும் முறையினை அறிந்து கொள்ள முயலுவோம்.

தொல்காப்பியர் அகத்திணையியலின் தொடக்கத்தே அகத்திணைப் பொருளாகிய காமத்தைக் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என ஏழ்திணையாகும் என்றனர். இவற்றுள் கைக்கிளை ஒருபாற் காமம் என்றும், நடுவண் ஐந்திணை என்பது, நிலமும் காலமும், கருப்பொருளும் அடுத்தும் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்று சொல்லப்பட்ட ஐந்து உரிப்பொருள், ஒத்த அன்பும் ஒத்த குலனும் ஒத்த வடிவும் ஒத்த குணமும் ஒத்த செல்வமும் ஒத்த இளமையும் உளவழி நிகழுமாதலின் ஐந்திணைக் காமம் என்று கூறப்பட்டுச் சிறப்புடையதாக உள்ளது. அது, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் நடுவண் ஐந்து திணையாக வழங்கப்படுதலின், நடுவண் ஐந்திணை எனப் பெயர் கூறப்படும் என்றனர். அந்நடுவண் ஐந்திணையுள் பாலைத்திணை என்பது, எல்லா நிலத்திற்கும் பொதுவாக (நடுவணதாக) ஓதப்படுதலின் நடுவணது என்று பெயர் பெறும். பாலைத்திணை எல்லா நிலத்திற்கும் பொது ஆதலின் அதனைத் தவிர்த்து ஏனைய நாற்றிணைமாட்டுக் கடல் சூழ்ந்த இவ்வுலகம் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

பாடலுள் வந்துள்ள பொருள்களைப் பிரித்தல்

அகத்திணைப் பாடலுள் வந்துள்ள பொருள்களை ஆராய்ந்து பார்த்தால் முதற் பொருளென்றும் கருப்பொருள் என்றும் உரிப்பொருள் என்றும் மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். உலகத்துப் பொருளெல்லாம் இம்மூன்று பகுப்பில் அடங்கி நிற்கும். அவற்றுள் முதற் பொருள் என்றது, தோன்றும் பொருள்கட்குரிய இடமும், காலமும் ஆதலின், அது இடம், காலம் என இருவகை யாயிற்று. காடும் காடும் சார்ந்த இடமும் முல்லைத்திணைக்கு உரியன என்றும், மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சித் திணைக்கு உரியன என்றும், இனிய புனல் நிறைந்த இடமும் அது சார்ந்த இடமும் மருதத் திணைக்கு உரியனவென்றும், கடல் மணற் பரப்புடைய நிலமும் அது

சார்ந்த இடமும் நெய்தல் திணைக்கு உரியனவென்றும் இடமாகிய முதற்பொருள் வகுக்கப்பட்டது.

காலத்தினை யாண்டின் பிரிவாகிய பெரும் பொழுதென்றும்,ஒருநாளின் பிரிவாகிய சிறுபொழுதென்றும் இரண்டாகப் பிரித்துக்கொண்டு கார்காலமாகிய பெரும் பொழுதும் மாலைக்காலமாகிய சிறுபொழுதும் முல்லைத் திணை என்றும், கூதிர் முன்பனி என்னும் பெரும்பொழுதும் இடையாமமாகிய சிறுபொழுதும் குறிஞ்சித்திணை என்றும், வைகறை, விடியல் என்னும் சிறுபொழுது மருதத்திணை என்றும், எற்பாடு என்னும் சிறுபொழுது நெய்தல் திணை என்றும்,சிறுபொழுதுகளுள் நண்பகலுள் பெரும்பொழுது களுள் பின்பனியும் இருவகை வேனிலும் பாலைத்திணை என்றும் காலமாகிய முதற்பொருள் வகுக்கப்பெற்றுள்ளது.

பின்னர் ஒவ்வொரு திணையிலும் காலம் பற்றியும் இடம் பற்றியும் தோன்றுகின்ற உணவுப் பொருள், மா, மரம், புள், பறை செய்தி, யாழின் பகுதி முதலியனவும் அவ்வத்திணையில் வாழ்மக்களும் அவரால் வழிபடப்பெறும் தெய்வமும் கருப்பொருளென்று வழங்கப்படுமென்றும், குறிஞ்சித்திணைக்குப் புணர்தலும், பாலைத்திணைக்குப் பிரிதலும், முல்லைத் திணைக்கு இருத்தலும், நெய்தல் திணைக்கு இரங்கலும் மருதத்திற்கு ஊடலும் உரிப்பொரு ளென்று வகுக்கப்பட்டுள்ளன.

ஐந்திணைக் காமத் தலைமக்களும் கைக்கிளை பெருந்திணைக்குரிய தலைமக்களும்

அவ்வத்திணையில் தொன்றுதொட்டு வந்த பொருள் வளமும், தொழில் வளமும் நிறைந்த ஆயர் வேட்டுவர் கிழார் மறவர் பரதவர் என்பவரே ஐந்திணைக் காமத்திற்குரிய தலைமக்களாவார் என்றும், அடியோரும், வினைவலரும் ஐந்திணைக் காமத்திற்கு உரியராகார் என்றும், அவர் கைக்கிளை பெருந்திணைக்கே உரியவரென்றும் தொல் காப்பியர் உணர்த்துகின்றார்.

"அடியோர் பாங்கினும்" (அகத்திணையியல் - 25) என்னும் நூற்பாவுரையில் இளம்பூரணர் "இவர் (அடியோரும்

வினைவலரும்) அகத்திணைக்கு உரியரல்லரோ எனின்? அகத்திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும். அவையியல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் (அடியோரும் வினைவலரும்) நாணுக் குறைபாடுடையவராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுவராகலானும், இன்பம் இனிது நடாத்து வோர் பிறர் ஏவல் செய்யாதவர் என்பதனாலும், இவர் புறப்பொருட்கு உரியராயினார் என்க" என்று எழுதிச் செல் கின்றார். இதனால் ஐந்திணைக் காமத்தின் சிறப்பு புலப்படும்.

ஐந்திணைக் காமத்தைப் பாடுவதற்குரிய பாடல்கள்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்

(அகத்திணையியல் - 35)

என்ற நூற்பாவுரையுள் இளம்பூரணர் புலனெறிவழக்கம் என்பது அகத்திணை ஏழினையும் குறிக்கும் என்று கொள் கின்றார். நச்சினார்க்கினியர் இந்நூற்பாவை அடுத்து ஐந்திணை பற்றிய இலக்கணமே வருதலால் புலனெறி வழக்கம் என்றது ஐந்திணைக் காமத்தையே அவ்வைந்திணைக் காமம் கலியும் பரிபாடலும் என்கின்ற அவ்விரண்டு கூற்றுச் செய்யு ளிடத்தும் நடத்தற்கு உரியதாம் என்பர். அவ்வாறு கூறவே ஐந்திணைக் காமமானது முதல் கரு உரி என்று நாட்டிக் கூறும் நாடக வழக்காலும் வெறும் உரிப்பொருளொன்றுமே கூறும் உலகியல் வழக்காலும் பாடப்படும் என்பதாயிற்று.

ஐந்திணைப் பாட்டில் இயற்பெயர் வரலாகாது

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்

(அகத்திணை - 59)

மக்களே தலைமக்களாகக் கருதுதற்குரிய நடுவண் ஐந்திணைக் கண்ணும் திணைப்பெயராற் கூறினன்றி ஒருவனையும்

ஒருத்தியையும் விதந்து கூறி அவரது இயற்பெயர் கொள்ளப் பெறார். எனவே நாடன், ஊரன், வெற்பன், துறைவன், கொடிச்சி, கிழத்தி என்பன போன்ற பொதுப்பெயராற் கூறவே ஐந்திணைக்குச் சிறந்ததாம்.

காமக்கூட்டம்

தொல்காப்பியர் ஐந்திணைக் காமத்தை 'காமக்கூட்டம்' என்ற பெயரால் குறிப்பிடுகின்றார். அவ்வாறு கூறுகின்ற அவர், அதனை இரண்டு தொடர்மொழியால் சிறப்பிக் கின்றார். இன்பமும் பொருளும் அறனும் என்று சொல்லப் பட்டவற்றுடன் கூடிய காமக்கூட்டம், அன்பொடு புணர்ந்த காமக்கூட்டம் என்பன அவர் சிறப்புரையாகும். ஐந்திணைக் காமத்திற்குரிய தலைவன் தலைவி என்னும் இருவரும் ஒத்த அன்பினராகிக் காமத்தால் கூடுகின்ற இக்கூட்டம், முதலில் இருவர்க்கும் இன்பத்தைத் தந்து, அடுத்து இவர் ஒன்றியிருந்து செய்யும் குடும்ப வாழ்க்கையால் பொருளையும் அறத்தையும் தருகின்றது என்பது அச்சிறப்பால் உணரப்படுகின்றது.

இவ்வாறு ஐந்திணைக் காமத்தைச் சிறப்பிக்கவே, ஏனைய கைக்கிளையும், பெருந்திணையும் இத்துணைச் சிறப்பில என்றாராயிற்று. சிறப்புக்கும் சிறப்பின்மைக்கும் காரணம் ஐந்திணையுள் அன்பு இருபாலாரிடத்தும் ஒத்திருத்தலும் கைக்கிளை, பெருந்திணையுள் அன்பு ஒவ்வாமையுமே ஆகும். அன்பிற்குக் காமவாயில் என்றொரு பெயர் உண்டு. இறையனார் களவியலும், 'அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது' என்றும், 'களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர் உளம்நிகழ் அன்பின் உயர்ச்சி மேன' என்றும் கூறுகின்றது.

காம இலக்கியத்தில் பேசப்படும் இருவகை நிலை

எனவே, ஒருவன், ஒருத்தியான அன்புடையிருவர் புணர்தலாற் றோன்றும் இன்ப நிலையும், அவர் பிரிந்த பொழுதும், பிரிந்த காலைத் தலைவி ஆற்றியிருக்கும் பொழு தும், ஆற்றியிராமல் தலைவி இரங்கும் பொழுதும் தலைவன் பரத்தையிற் பிரிந்த பொழுது தலைவி ஊடும் பொழுதும்

உண்டாகும் துன்பநிலையும் ஆகிய[1] இரண்டனையும் "காமங்கண்ணிய நிலை' என்றே தொல்காப்பியர் கூறுவார்.

ஐந்திணைக் காமத்தையுடைய தலைமக்களுக்கு இருக்கவேண்டியவை

ஒரு செயலுக்குத் தலைமை நிலை ஏற்பவர்க்கு நிர்வாகத் திறன், தம்கீழ்ப் பணிபுரிபவரைக் கடிய வேண்டுமிடத்துக் கடிந்தும், இன்சொல் கூறித் தழுவ வேண்டுமிடத்துத் தழுவியும் நடந்து கொள்ளும் நடைமுறை முதலியன வேண்டும். அதுபோலவே பணி புரிபவர்க்குத் தலைமையாளருக்கு அடங்கியொழுகும் தன்மை, சோம்பலின்றிப் பயன் தருமாறு பணிபுரிதல் முதலியன அமையவேண்டும். அதனைப் போலவே தொல்காப்பியரும் சிறந்த ஐந்திணைக் காமத்திற்குரிய தலைமக்களுக்கு இருக்க வேண்டியவைகளைப் பற்றிக் கூறியுள்ளார். களவியல் இரண்டாம் நூற்பாவில் "ஒத்த தலைவனும் தலைவியும் காண்ப" என்று கூறுகின்றார்.

அவ்வொப்புமை, "பிறப்பும்,[2] குடிமையும், ஆண்மையும், யாண்டும், உருவும், காம வாயிலாகிய அன்பும் நிறையும், அருளும், உணர்வும், திருவும் எனப் பத்தாம் என்று மெய்ப்பாட்டியலில் கூறுகின்றார். இங்கே பிறப்பென்றது நற்குடியிலே பிறந்திருப்பது, குடிமை என்பது அக்குடிக்குள்ள நற்பண்புகளையெல்லாம் பெற்றிருப்பது. ஆண்மை என்பது இங்கே ஆண்தன்மையைக் குறிக்கவில்லை. ஒரு செயலை ஏற்ற ஆளும் தன்மையைக் குறிக்கின்றது. இது

---

1. **நோயும் இன்பமும் இருவகை நிலையில்**
   காமம் கண்ணிய மரபிடை தெரிய -
   (தொல், பொருளியல் -2)

2. **பிறப்பே குடிமை ஆண்மை யாண்டொடு**
   உருவு நிறுத்த காம வாயில்
   நிறையே அருளே உணர்வோடு திருவென
   முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே
   (தொல். மெய்ப்பாட்டியல் - 25)

ஐந்திணைக் காமத் தலைமக்கட்கே உரிய சிறந்த பண்பாகும். அடியோர் வினைவலரிடத்தில் அடங்கிப் பணியாற்றும் தன்மையே உண்டு. யாண்டு என்பது காமம் நுகர்வதற்குரிய பருவம். உருவம் வடிவழகு. காமவாயில் காமத்திற்கு ஏதுவா யிருக்கின்ற இருவரது அன்பு. நிறை என்பது மறை புலப்படாமல் நிறுத்தும் உள்ளம், என்பர் நச்சினார்க்கினியர். காப்பன காத்து கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம் என்பர் களவியல் உரையாசிரியர். அருள் என்பது பிறர் வருத்தத்திற்கு உதவ எண்ணல், உணர்வு என்பது காமவுணர்ச்சியை அறிதல். திரு என்பது ஆக்க முயற்சி.

மேற்கூறிய ஒப்புமை பத்தும் ஐந்திணைக் காமத்திற்கு ஆக்கம் தருவனவாம். ஐந்திணைக் காமத்திற்கு ஆக்கம் தராத (அழிவினைச் செய்யும்) மெய்ப்பாடும் உள்ளன. அவற்றை நிம்பிரி1, கொடுமை2, வியப்பு3, புறமொழி4, வன்சொல்5, பொச்சாப்பு6, மடிமை7, குடிமை8, இன்புறல்9, ஏழைமை10, மறப்பு11, ஒப்புமை12 என்று கூறுகின்றார். அவற்றுள் நிம்பிரி என்பது காதலருள் ஒருவர் மேல் ஒருவர் பொறாமைப்படுதலாம். இதனை மனக்கசப்பு என்றும் கூறலாம். கொடுமை என்பது ஒருவர்க்கொருவர் கேடு சூழ எண்ணும் தீவினையுள்ளம். கடுஞ்சினமும் இதனுள் அடங்கும். வியப்பு என்பது ஒருவரிடத்தில் ஒருவர் வியக்கத்தக்க குணங்களிருப்பதாகக் கருதுதல். இது ஒத்துப் பழகுதற்குத் தடையாகும். புறமொழி என்பது ஒருவரை ஒருவர் காணாதவிடத்தே பழித்துக் கூறுதல். வன்சொல் என்பது கண்ணோட்டமின்றிச் சொல்லும் சொல். பொச்சாப்பு என்பது தம் ஒழுக்கத்தைக் கடைப்பிடியாமை. மடிமை என்பது சோம்பல். குடிமை என்பது இருவருள் ஒருவர் தம் குடியை மேலாக மதித்தொழுகுவது. ஏழைமை என்பது ஒப்புவகையிற் கூறிய திருவின்மை. பேதைமை என்றும் கூறுவர். மறப்பு என்பது ஒருவரை ஒருவர் மறந்து விடுவது. தலைவனோ தலைவியோ பிரிந்தால் ஒருவரை ஒருவர் நினைவின்றி மறந்துவிடுவது. துஷ்யந்தன் சகுந்தலையை மறந்தாற் போன்றதும் ஆகும். ஒப்புமை என்பது ஆண் பாலாயினும் பெண்பாலாயினும் தன்னால் காதலிக்கப் பட்டவர் போல் எதிர்ப்பட்டவரையும் விரும்புதல். இது

கீழ்மக்கள் மாட்டு நிகழும். மேற்கூறிய தீயகுணங்கள் தலை மக்களிடத்தே உண்டாகின் ஒத்த அன்பால் தோன்றுகின்ற ஐந்திணைக் காமம் அழிந்து போகும்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருளைக் கூறிய திருவள்ளுவர் காமத்துப்பாலில் ஒவ்வாக் காமங் களாகிய கைக்கிளை பெருந்திணைகளைக் கூறாது, சிறந்த காமமாகிய ஐந்திணைக் காமத்தையே கூறியுள்ளார். அதனைக் கூற்றும்பொழுது,

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்

என்றொரு குறட்பாவினைக் கூறுகின்றார். இங்கே காமம் என்றது ஐந்திணைக் காமத்தை. அக்காமம் மென்மையான பொருளில், மிகச்சிறந்த மென்மையுடையது மலர். அம்மலரினும் மெல்லிது ஐந்திணைக் காமம் என்பர்.

தலைவனின் சில ஒழுகலாறு

தலைவன் ஓரையும் நாளும் கருதியொழுகான். களவொழுக்கத்தில் ஓரையும் நாளும் பார்த்துக்கொண்டு தலைவியைக் கூடுவதென்பது உலகியலில் இயலாததென்பதை நாம் அறிவோம். இது உலகியல் பற்றிக் கூறியது.

களவொழுக்கத்தில் பகற்குறி இரவுக்குறியிடத்தே தலைவியைக் கூடுதற்குச் செல்லும் தலைமகன் அங்கு செல்லும் வழியின் அருமையையும் அங்கு உண்டாகும் அழிவு, அச்சம், இடையூறு என்னும் இவைகளைக் கருத வில்லை; உரன் நிறைந்தவன் ஆதலின் (களவு 46).

ஐந்திணைக் காமக் களவினை வெளிப்படுத்தற்குக் கருவியாயிருப்பன இரண்டாகும். ஒன்று அம்பல்; மற்றொன்று அலர். அம்பல் என்பது பேச்சு நிகழ்ச்சியில் வராமல், இவர்களிடத்தே களவொழுக்கம் நிகழ்கின்றது போலும் என்று சிலருடைய கருத்து நிகழ்ச்சியில் மட்டும் நிகழ்வது. அலர் என்பது இன்னானோடு இன்னாளிடை இது போலும் நிகழந்ததென விளங்கச் சொல்லி நிற்பது. இவற்றால் களவு வெளிப்படும். தலைவன், தலைவியைத் தலையளி செய்தலே களவு வெளிப்படுவதற்குக்காரணம் ஆயிற்று. அதனால்,

அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவ னாகும்

(களவியல் - 49)

என்று தலைவனுக்குரியதாக நூற்பாச் செய்துள்ளார். தலைவி அச்சமும் நாணும் உடையவளாதலால் அவள் செயலால் களவு வெளிப்படுமாறில்லை.

வரைந்து கொள்ளும் முயற்சியைத் தலைவன் தொடங்கித் தலைவியை வரைந்து கொள்வான். இதுதான் தமிழர் மரபு. தோழியும் தலைவியும் வரைந்து கொள்ளும் முயற்சியை மேற்கொள்ளுமாறு தலைவனைத் தூண்டி விடலாம். வெளிப்படையாக வரைந்து கொள்ளும் முயற்சியைத் தலைவனே செய்வன். இது களவு வெளிப்படா முன் வரைதல் களவு வெளிப்பட்ட பின் வரைதலென இருவகைப்படும். இவ்விருவகையாலும் வரைந்து கொள்ளும் முயற்சி தலைவன் கண்ணது.

களவொழுக்கம் நிகழும்பொழுது தலைவன் நாடிடை யிட்டும் காடிடையிட்டும் தலைவியைப் பிரியாமல் இரவிலும் பகலிலும் சந்தித்ததற்கு உரியதாகுமாறு ஓரிடத்திலே பிரிந்திருப்பன். இதற்கு ஒருவழித்தணத்தல் என்று பெயர். அவன் அப்பொழுது வரைதற்குப் பொருள் இல்லாத பொழுது அதற்காகப் பிரிதலும் உண்டு. இதற்கு வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு என்று பெயர் உண்டு. ஓதல் தூது பகை என்னும் பிரிவுகளெல்லாம் கற்பொழுக்கத்தில் நிகழ்வன வாகும். களவு வெளிப்பாடு கற்பைப்போல் கருதப்பட்டாலும் வரைந்து கொண்ட பின்னர்தான் ஓதல் முதலானவற்றில் தான் பிரிவன். வரையாது பிரிதல் ஐந்திணைத் தலைமக னிடத்தில் நிகழாது என்பர்.

வெளிப்படை தானே கற்பினோ டொப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக
வரையாது பிரிதல் கிழவோற் கில்லை

(களவியல் - 51)

தெய்வத்தால் (நற்பாலால்) இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகனும், தலைமகளும் பாங்கன் நிமித்த

மாகவும், பாங்கி வாயிலாகவும் கூடியொழுகுவர். அவ்வாறின்றித் தாங்களே வாயிலாகக் (களவொழுக்கத்தில்) கூடுவதும் உண்டு.

காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவ ராகலும் உரித்தே

(களவியல் - 29)

தலைவன் ஊடுதலும் உண்டு

தலைமகன் பரத்தையிற் பிரிந்த காரணத்தால் தலைவிக்கு ஊடல் நிகழும். தலைவன் தன்மேல் தலைவி ஊடுதற்குக் காரணமில்லை என்று உணர்த்துவான். அவன் பலவகை யாலும் உணர்த்தியும் தலைவி ஊடல் நீங்காமலிருந்தால் அது காரணமாகத் தலைவனுக்கும் தலைவிமேல் புலவியும் ஊடலும் தோன்றும். இன்னும் களவுக்காலத்தில் தலைவி செய்த குறி பிழைத்தவிடத்தும் தலைமகனுக்குத் தலைவிமேல் புலவியும் ஊடலும் நிகழும்.

உணர்ப்புவரை யிறப்பினும் செய்குறி பிழைப்பினும்
புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய

(கற்பியல் - 14)

தலைமகனிடம் பணிந்த கிளவி

தலைமகனிடத்தில் பணிந்தொழுகுதல் தலைமகளுக்கு இயல்பான பண்பாகும். பெருமையும் உரனும் உள்ள தலைமகனானவன் தனக்குக் காமம் கைகடந்தபொழுது தலைவியினிடத்தே பணிந்து கூறும் சொல்லையும் கூறுதற் குரியன்.

காமக் கடப்பினுள் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான *(கற்பியல் - 19)*

தலைவன் பழைய காலத்து நிகழ்ச்சியைக் கருதிக் கலங்கலும் செய்வன்.

தலைமகன் ஐந்திணைக் காமத்தாற் கொண்ட தலைவி யிருக்கவும் பின்முறையாக ஆக்கிய பெரும் பொருள் விளைக்கும் வதுவையை (இரண்டாம் திருமணம்) நிகழ்த்திய

பொழுது பழைய அந்த மனைவி வெறுக்காமல் ஏற்றுக் கொண்ட பொழுதும், புதல்வனையே ஊடல் தீர்க்கும் வாயிலாகக் கொண்டு தலைவி புகுந்தபொழுதும் தலைமகன் பழைய காலத்தே தலைவிக்கும் தனக்கும் நிகழ்ந்த அன்புடைச் செயல்களையெல்லாம் கருதிப் பெருமையும் உரனும் உள்ள அவன் கலங்குதலையும் செய்வான்.

பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்
இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்
இறந்தது நினைஇக் கிழவோன் ஆங்கண்
கலங்கலும் உரியன் என்மனார் புலவர் *(கற்பியல் 31)*

தலைமகன் பகைவயிற் பிரிவில் பெண்ணுடன் புணரான் என்பது

தலைமகன் போர் காரணமாகப் பிரிந்து பாசறை யிடத்தே தங்கியிருப்பான். அது கூதிர்ப்பாசறை[1] என்றும் வேனிற் பாசறை என்றும் இரண்டு வகையாக இருக்கும். தலைமகன் பாசறையிடத்தே தங்கியிருக்கும்பொழுது தலைவி முதலான பெண்களுடன் புணர்தலைச் செய்யான் என்பதை,

எண்ணரும் பாசறைப் பெண்ணொடுமை புணரார்
(தொல். கற்.)

என்னும் நூற்பா நுவல்கின்றது. புறத்திணை இயலில் பாசறை நிலைக்கு இளம்பூரணர்,

கவலை மறுகில் கடுங்கண் மறவர்
உவலைசெய் சுறை ஒடுங்கத் - துவலைசெய்
கூதிர் நலியவும் உள்ளான் கொடித்தேரான்
மூதில் மடவாள் முயக்கு

என்ற பாட்டினை மேற்கோள் காட்டியுள்ளார்.

---

1. **கூதிர் வேனில் என்றிரு பாசறை**
காதலின் ஒன்றிக் கண்ணிய நிலையினும் (தொல். புற. 17)

புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சியுள் பாசறை நிலையையும் வாகையுள் கூதிர்ப்பாசறை வாடைப்பாசறை என்னும் இரண்டு பாசறை நிலைகளையும் கூறியுள்ளது.

தலைமகன் கடல்வழியாகப் பிரியும்பொழுது தலைவியை அழைத்துச் செல்வான் என்றல்

தலைமகன் பிரியும் பிரிவு காலிற் பிரிதலென்றும் கலத்தில் பிரிதல் என்றும் (கலம் - மரக்கலம், கப்பல்) இருவகைப்படும். அவற்றுள் காலத்திற் பிரியுங் காலத்துத் தலைவியை உடன் கொண்டு பிரியான் என்பதை,

முந்நீர்[1] வழக்கம் மகடூஉவோ டில்லை (அகத். 37)

என்னும் நூற்பா உணர்த்துகிறது.

தலைவன் தலைவி முன் தன்னைப் புகழ்ந்து கூறும் இடம்

ஒருவர் பிறரால் புகழப்படுமாறு வாழ வேண்டும். அவர் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுதல் கூடாது.

மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னுடை ஆற்றல் உணரா ரிடையினும்
தன்னை மறுத்தலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே

---

1. `முந்நீர் வழக்கம்' என்னும் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் "ஓதலும் தூதும் பொருளுமாகிய மூன்று நீர்மையாற் செல்லுஞ் செலவு தலைவியோடு கூடச் சேறலின்று" என்று உரை கூறி, இந்நூற்பாவிற்குப் பொருள் வயிற் பிரிவின்கண் கலத்திற் பிரிவு தலைவியுடன் சேரவில்லை. எனவே காலிற் பிரிவு தலைவியுடன் சேறல் உண்டு என்று பொருள் கூறுவார்க்குச் சான்றோர் செய்த புலனெறி வழக்கம் இன்மை உணர்க" என மறுப்பர். ஆனால் தலைவியுடன் தலைவன் காலிற் பிரிவுண்டென்பதையும் அவ்வாறு பிரிந்த காலத்தே தலைமகன் சுரவழியிடத்தே இறந்து போன செய்தியையும் "நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்பிய முதுபாலையும்" (புறத்திணை - 24) என்னும் பகுதியால் கருதியுணரலாம்.

என்னும் நன்னூல் நூற்பாவில் புலவன் சிலவிடங்களில் தன்னைப் புகழ்ந்து கூறலாம் என்னும் விதியுள்ளது. அதுபோலத் தலைவனும் கல்வி கொடை பொருள் செயல் பற்றியும் முற்றகப்பட்டோனை முற்றுவிடுத்தலும் முதலிய தொழில்களை நிகழ்த்தற்குப் பிரியுங் காலத்திலே தலைவன் தலைவியிடத்தே தன்னைப் புகழ்ந்து கூறுவன். இத்தகைய ஆள்வினைச் சிறப்பை யான் எய்துவலெனத் தன்னைப் புகழவே அது பற்றித் தலைவி பிரிவாற்றுதல் பயனாயிற்று என்பர் நச்சினார்க்கினியர். இதனை,

கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் விழைவயின் உரிய என்ப *(கற்பியல் - 40)*

என்ற நூற்பா இயம்பும்.

தலைவி தலைவன் பிரிவால் துன்புறும்பொழுது வற்புறுத்தியே பிரிவன் என்பது

தலைவன் கற்பின்கண் ஓதல் முதலிய வினைபற்றிப் பிரியுங்காலத்தே தலையளி செய்து குறிப்பாற் பிரிவுணர்த்திப் பிரிவன். அவ்வாறின்றித் தலைவி துன்புற்ற காலத்தே அவளைப் பல்லாற்றாலும் வற்புறுத்தி ஆற்றியிருக்குமாறு கூறியே பிரிவன் என்க. இக்கருத்தினை,

துன்புறு பொழுதிலும் எல்லாம்கிழவன்
வன்புறுத் தல்லது சேறல் இல்லை *(கற்பியல் - 43)*

என்னும் நூற்பா உணர்த்தும்.

தலைவன் செலவழுங்கிப் பின் பிரிவன் என்றல்

ஓதல் முதலானவற்றில் தலைவன் பிரியுங் காலத்தே தலைவி தன் பிரிவால் மிகவும் வருந்துவாள் என்று கருதினால் சில காலம் செல்லாதிருப்பன். இதற்குச் செல வழுங்குதல் என்று பெயர் உண்டு. தலைவன் கருதிய ஓதல் முதலான பிரிவினை இடையிலே தவிர்ந்திருத்தல் பிரிந்துபோக ஆற்றாமையாலன்று தலைவியை ஆற்றுவித்துப் பிரிதற்குத் தவிர்ந்த தவிர்ச்சியேயாகும். இதனை,

செலவிடை அழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்

(கற்பியல் - 44)

என்னும் நூற்பாவால் உணரலாகும்.

தலைவன் வினைவயிற் பிரிந்து வினைமுடித்து மீளுங்கால் இடையிலே எங்கும் தங்காமல் தலைவியை வந்தமைவன் என்பது

வினையே ஆடவற்கு உயிராதலின் வினை செயத் தலைவியைப் பிரிந்த தலைமகன் வினையை[1] முற்ற முடித்த பின்னர்தான் தலைவியைக் கருதத் தொடங்குவான். அவன் தலைவியைக் கருதித் திரும்பி வருங்காலத்திலே வழியிடையில் மகிழ்ச்சியாகத் தங்கியிருந்துவிட்டு வருதல் என்பது ஒத்த அன்புடைய ஐந்திணைக் காமத் தலைவனிடம் இல்லையாம். தலைவன் மேற்கொண்ட வினை முடிவுற்றபின் அவன் உள்ளம் ஒன்றையும் அடையாமல் தலைவியையே அடைந்து விட்டது. அவ்வுள்ளம் உற்ற இடத்தை அடைவதற்கு உதவுகின்ற புள் போலச் செல்லும் எழுச்சி வாய்ந்த குதிரையைத் தலைவன் பெற்றிருத்தலால் அதனை ஊர்ந்து இடையே எங்கும் தங்காமல் தலைவியை வந்தடைவான். இக்கருத்தினை,

வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவருங் கால்
இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான

(தொல். கற்பியல். 53)

என்னும் நூற்பாவால் உணரக்கூடும். ஐந்திணைக் காமத் தலைவர் அடியோரும் வினைவலரும் அல்லாத பெருந்திருவினர் என்பதை மேற்கண்ட நூற்பாவாலும் உணரக்கூடும். இன்னும் ஐந்திணைக் காமத்தலைவர்

---

1. **கிழவி நிலையே வினையிடத் துரையார்**
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்

(தொல். கற்பியல். 45)

களவொழுக்கம் நிகழ்த்துமிடத்துத் தேரும் யானையும்[1] குதிரையும் பிறவும் ஊர்ந்து இயங்குவர் என்று தொல் காப்பியர் கூறுவதால் இத்தலைவரின் செல்வக் குறை பாடின்மையைக் கூறுகின்றார்.

தலைவன் தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்ளுதல்

புகழ் என்பது ஒருவரை ஒருவர் உயர்த்திக் கூறுவது. இகழ் என்பது தாழ்த்திக் கூறும் பழிமொழி. ஒவ்வாக் காமமாகிய கைக்கிளை பெருந்திணைத் தலைமக்களுள்ளே ஒருவரை ஒருவர் பழித்துக் கூறுதலே இடம் பெறும். ஆனால், ஐந்திணைக் காமத் தலைமக்களிடத்தில் புறமொழி வன்சொல் முதலியன நிகழா என்ற செய்தி முன்னே கூறப்பட்டது. ஆனால் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கூறும் நிலவி தோன்றும். அது எப்பொழுது என்னில் நற்குணம் நிகழுமிடத்தென்க.

நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியில்
புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே

என்னும் நூற்பா கூறுகின்றது. இந்நூற்பாவிற்குப் பொருள் கூறுமிடத்தே தகை நிகழ் மருங்கின் என்று சொல்லை மாற்றித் 'தகை' என்பதன் பொருளை 'அருளும் குணமும் தளர்வும் தகையே' என்னும் பிங்கல நிகண்டால் அறிந்து கொள்ளலாம். தலைவன் தலைவியரிடத்தே நிகழும் புகழ்ச்சி கற்புக்கால நிகழ்ச்சியாகும். இப்புகழ்ச்சி ஒருவருக்கொருவர் எழுச்சியை ஊட்டுவதாக அமையும்.

ஐந்திணைக் காமத் தலைவி

இனி ஐந்திணைக் காமத் தலைவியின் இயல்பினை ஆராய்வோம். தலைமகனுக்குப் பெருமையும் உரனும் வேண்டும் என்று மேலே கூறினோம். அது போலவே

---

1. **தேரும் யானையும் குதிரையும் பிறவும்**
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப
(தொல். பொருளியல் - 18)

ஐந்திணைக் காமத் தலைவிக்கு அச்சமும்[1] நாணும் மடனும் முதலியன பெண்பாற்கு உரியன என்பர் தொல்காப்பியர். நச்சினார்க்கினியர் அச்சம் என்பதை அன்பு காரணத்தாற் றோன்றிய உட்கு என்றும் நாண் என்பதை காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப்படுவதோர் உள்ளவொடுக்கம் என்றும் மடன் என்பதை செவிலியர் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என்றும் கூறுவர்.

தலைவன் இயற்கைப்புணர்ச்சியில் தலைவியைக் கண்டு முன்னிலையாக்கல் முதலிய சொற்களைத் தலைவியை நோக்கிக் கூறுவன். அதுபோலத் தலைவியும் தலைவனை முன்னிலைப்படுத்திக்கூறும் கூற்று உண்டோ எனின்? நாணமும்[2] மடமும் பெண்மைக்கே உரிய பண்பாகலான் தலைவி ஐந்திணைக் காமத்தினிடத்தே அவள்தன் வேட்கை குறிப்பானதால் சொல்லுதற்குத்தக்க இடத்தினானாதல் புலப்படுமே யல்லது தலைவன் கூற்றைப் போலத் தலைவி கூற்று புலப்பட நிகழாது என்பர்.

தலைவன்[3] இயற்கைப் புணர்ச்சி கருதிக் கூறும் சொல்லெதிர் தலைவிதான் வேட்கைக் குறிப்பினளாயினும் அதற்கு உடம்பட்ட நெறியைக் கூறுதல் அருமை யுடைத்தாகலால் புணர்ச்சிக்கு உடம்பாடல்லாத கூறுபாடு டைய சொற்களே தலைவி கூறுவாள். இப்பண்பு கைக்கிளை பெருந்திணைத் தலைவியாரிடம் நிகழாததாம்.

---

1. அச்சமும் நாணமும் மடமும் முந்துறத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்பா - களவியல் 9

2. காமத்திணையிற் கண்ணின்று வரூஉம்
நாணமும் மடமும் பெண்மைய வாதலின்
குறிப்பினும் இடத்தினு மல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னான - களவியல் 17

3. சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள் வயினான - களவியல் 20

களவில் தோழி கூற்று

மேலே தலைவியின் கூற்று குறிப்பினும் இடத்தினுமல்லது நெறிப்பட வாரா என்று கூறினார். அத்தகைய நாணமும் மடமும் நிறைந்த தலைவி சில பொழுதில் தானாகவே கூற்று நிகழ்த்துதலும் உண்டு. எப்பொழுதெனின்? தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபொழுது உன்னை இன்ன காலத்தில் வரைந்து கொள்வேன் என்று கூறிப் பிரிந்து சென்றான். சென்றவன் பாங்கியின் கூட்டத்திற்கும் முயல வில்லை. அதனால் தலைவி தன்னொழுக்கத்தைப் பாங்கிக்குத் தெரியாமல் மறைத்தொழுக வேண்டியவளானாள், அப்பொழுது தலைவி அவன் வருந்துணையும் ஆற்றாது வருத்தமுற்ற காலத்திலே தானே கூற்று நிகழ்த்துவாள். தலைவன் வரைந்து கொள்ளாமல் களவொழுக்கத்திலேயே இயங்குங் காலத்துச் செவிலி முதலானவரை எதிர்ப்பட்ட பொழுதும் தலைவி தானே கூற்று நிகழ்த்துவாள். தலைவன் தானே . தலைவியிடம் நம் களவொழுக்கத்தை தோழிக்குக் கூறு என்று கூறியவிடத்தும் தலைவி கூற்று நிகழ்த்துவாள்.

தலைவியின் பெருமை

கற்பொழுக்கத்தை[2] மேற்கொண்டபொழுது தலைமகள் பிரிந்த காலத்திலே அப்பிரிவால் தலைவி மிகவும் வருந்தினாள். அதனால் அவள் உடம்பும் உயிரும் வாட்டமுற்றன. அப்பொழுது கூட அவள், இவைகள் எதற்கு வருகின்றன

---

1. வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
   வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
   உரையெனத் தோழிக்கு ரைத்தற் கண்ணும்
   தானே கூறும் காலமும் உளவே (களவியல் - 22)
2. உடம்பும் உயிரும் வாடியக் காலும்
   என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
   கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை
   (பொருளியல் - 8)

என்று கூறுவாளேயொழிய தலைமகன் உள்ள இடத்தை நாடிச் சேர்தல் ஐந்திணைத் தலைவிக்கில்லை.

தலைவி தலைவன் உள்ள இடத்திற்குச் சேறலும் அகப்பொருளே என்றல்

அத்தகைய பெருமை தங்கிய தலைவிதானும் களவொழுக்கம் நிகழ்ந்த காலத்திலே செய்யத்தகாத அதனைச் செய்திருக்கிறாள். களவிற் கூடிய தலைமகன் தலைவியை வரைந்து கொள்ளாமல் வரைவு நீட்டிக்கின்றான். அப்பொழுது நொதுமலர் தலைவியை வரைந்து கொள்ள விரைந்து முயல்கின்றனர். அப்பொழுது தலைவி தன் கற்பொழுக்கத்தைக் காத்துக் கொள்ளவேண்டியவளா கின்றாள். எல்லாப் பொருளிலும் சிறந்தது உயிராகும். அவ்வுயிரினும்' சிறந்தது நாணமாகும். அந்த நாணத்தைக் காட்டிலும் கற்புச் சிறந்ததென்று முன்னுள்ளோர் கூறிய கூற்றினை உறுதியாகக் கொண்ட நெஞ்சமொடு, தலைவி, தலைவன் உள்ள இடத்திற்கே சென்றுவிடுதலும், அங்ஙன மின்றித் தலைவன் உள்ள இடத்திற்குப் போய்விடுவோம் என்று கூற்று நிகழ்த்தினும் இவையெல்லாம் ஐந்திணை அகப்பொருளாகவே கொள்ளப்படும் என்பர்.

ஐந்திணைக் காமத்தலைவி சிறந்த நாணத்தை உடையவ ளாதலால் தான் உற்ற காம வேட்கையைத் தலைவன் முன் கூறுதல் இல்லவே இல்லை. ஏனைய கைக்கிளை, பெருந் திணைக் காமத்தலைவியராயின் அவர்தம் வேட்கையைத் தலைவன் முன் கூறுவர். அவர் போல் இவள் கூறாள்.

---

1. உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
நாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே
(களவியல் - 22)

இங்கே தொல்காப்பியர் பெருந்திணைக் காமத் தலை மக்களைப் 'பிறநீர் மாக்கள்' என்று கூறியதைக் கருதுக!

தலைவி தற்புகழ்ச்சி

தலைவன் வினைமேற்கொண்டொழுகும் பொழுது, வினை செய்யப் பிரியும் பிரிவிற்குத் தலைவியை இசையச் செய்வதற்காகத் தலைவன் தன்னைத் தலைவி முன் புகழ்ந்து கூறுவான் என்ற செய்தியை மேலே உணர்ந்தோம். அது போலவே தலைவியும் சிலவிடத்துத் தான் தலைவன் முன் தன்னைப் புகழ்ந்து கூறுவாள். அதனைக் கூறுகின்ற நூற்பாவைக் கீழே காண்க.

தற்புகழ் கிளவி கிழவிமுன் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக் கில்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே

(கற்பியல் 39)

தலைவியானவள் தலைவன்முன் தன்னைப் புகழ்ந்து கூறும் கூற்றினைக் கூறுதலென்பது எத்தகைய வினைக் கூறுபாட்டிலும் இல்லை. நிச்சயமாக இல்லை. ஆனால், இரந்து கேட்டுக் கொள்ளும்பொழுதும், தன் மேல் குற்றமில்லை என்று கூறி, அதனைத் தெளிய உணர்த்தும் பொழுதும் ஆகிய இரண்டிடங்களில் மட்டும், தன்னைப் புகழ்ந்து கூறுவாள். அவள் என்ன நோக்கத்தோடு புகழ்ந்து கூறுகின்றாள் எனின், மாயப் பொய்மையே கூறிப் பொருளொன்றினையே கருதியொழுகும் பரத்தையர் தம் அன்பற்ற நிலையையும், வாழ்விலும் தாழ்விலும் ஒன்றி யிருந்து தலைவன் மேல் நீங்காத அன்பு கொண்டொழுகும் தன் நிலையையும் தலைவன் கருதியுணருமாறு இரத்தலும் தெளித்தலுமாகிய இரண்டிடத்தில் தலைவி தன்னைப் புகழ்ந்து பேசிக் கொள்ளுகிறாள்.

---

1. **தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்**
   எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை
   பிறநீர் மாக்களின் ஆறிய ஆயிடைப்
   பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப (களவியல் 28)

தலைவியின் அறம் தலைவனது வரம்பிறவாமை

களவு நீட்டிக்க விரும்பும் தலைமகன் தலைவி வந்து தன்னைக் கூடுதற்குரிய இடத்தைத் தலைமகளையே தெரிந்தியம்பச் சொல்வான். தலைவன் விரும்பும் இடத்திற் கெல்லாம் தலைவி வாராள். அவளால் வரவும் முடியாது. அதனால், அவள் வந்து கூடுமிடத்தை அவளே அறிந்து கூறுமாறு தலைவன் கூறுவான். ஆனால், தலைவி களவினை.. நீட்டிக்க விரும்பவில்லை. தம் ஒழுக்கம் அலராவதன்முன் விரைந்து வரைந்து கொள்ளவே விரும்புகின்றாள். தலைவன் களவினை நீட்டிக்க விரும்பித் தலைவி வந்து தன்னைக் கூடுதற்குரிய இடத்தினைத் தானே அறிந்து கூறுமாறு கேட்கின்றான். களவொழுக்கத்தை நீட்டிக்கத் தலைவிக்கு விருப்பம் இல்லாவிடினும் தலைவன் தன்னைக் கேட்டுக் கொள்ளும்பொழுது என்ன செய்வதென்று கருதுகின்றாள். நமக்கு அறமாவது தலைவன் கருத்தின்படி நடப்பதே என்று உறுதி செய்து கொண்டு தனக்கு விருப்பமில்லாவிடினும் அவன் விருப்பத்திற் கிணங்கிக் குறியிடம் கூறுகின்றாள்.

கோவலன் கண்ணகியை மறந்து மாதவியினிடத்தே வாழ்ந்து வந்தான். ஏதோ சில நிகழ்ச்சியால் உவர்ப்புற்று அவன் மாதவியினீங்கிக் கண்ணகியை அடைந்து பொருளீட்டி வாழ்வதற்காக நாம் இருவரும் மதுரை செல்வோம் என்று கண்ணகியிடம் கூறினான். கண்ணகியும் மறுத்துரைப்பது அறனன்று எனக் கருதி உடன்பட்டுச் சென்றாள். இவற்றால் ஐந்திணைக் காமத்தலைவியின் அறம் விளங்குகின்றது.

இவைபோல் தலைவியின் மாண்புகள் பலவற்றைத் தொல்காப்பியத்தால் உணரக் கூடியன பல உள்ளன. இனி வாயில்களைப் பற்றி ஆராய்வோம்.

அகத்திணை இலக்கியத்தில் வருபவர்

ஐந்திணை இலக்கியத்தில் வருபவரைத் தலைவன், தலைவி, வாயில்கள் என மூன்று பிரிவினராக வகுத்துக் கொள்ளலாம். ஐந்திணைத் தலைவன் தலைவியர் இயல்பைப்

பற்றி மேலே எழுதினோம். இனி ஐந்திணைக் காமத்தில் வரும் வாயில்களையும் நாம் காண வேண்டும். கைக்கிளை, பெருந்திணைக் காமத்தில் வரும் வாயில்கள் ஐந்திணைக் காமத் தலைவர்கள் போலவே மிகச் சிறந்தவராவார். ஐந்திணைக் காமத்தலைவர் எவ்வாறு அன்பு முதலான வற்றாற் சிறந்து விளங்குகின்றனரோ அது போல் இவ்வாயில் களும் சிறந்தவராவார். வாயில்கள் ஆவார் யாவர் என்பதை,

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணர் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப

(தொல். கற்பியல் - 52)

என்னும் நூற்பாவால் உணர்ந்து கொள்ளலாம்.

மேற்கண்ட நூற்பாவில் தாய் என்றது நற்றாயை. பாட்டி என்றது பண்பாடும் பாணிச்சி அல்லது விறலியைக் குறிக்கும். மேற்கண்ட வாயில்களுள் தோழி தலைமையானவள் என்பதைத் "தோழி உள்ளுறுத்து வாயில் புகுப்பினும்." *(8)* *(தொல். கற்பியல்)* என்று தோழியை முதலில் வைத்தும் தலைமையாக்கியும் கூறுவதால் உணர்ந்து கொள்ளலாம்.

வாயில்கள் கூற்று நிகழ்த்தும் முறை - வெளிப்படைக் கூற்று

மேற்கூறிய தோழி முதலிய வாயில்கள் எல்லாம் தமக்குத் தலைமக்களாக விளங்கும் தலைவன் தலைவியரிடத்தே நடந்து கொள்ள வேண்டிய பொது இயல்புகளை ஆராய்வோம். வாயிலராயுள்ளோர் தம் தலைமக்களிடத்தே சொற்களைக் கூறுவதானால் சிறந்த தோழி தவிர, ஏனையோரெல்லாம், ஏன் தோழி கூட குறிப்புச் சொல்லைக் கூறாமல் வெளிப் படைச் சொல்லையே கூறவேண்டும் என்பர் தொல்காப்பியர்.

வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின் றுரிய தத்தம் கூற்றே

(தொல். பொருளியல் - 45)

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையினைக் கீழே காண்க. "தத்தம் கூறுபாட்டினால் வாயில்கள் கூறும் கிளவி வெளிப்படக் கூறுதல் கேடின்றி உரிய என்றவாறு. தம்தம் கூறாவது அவரவர் சொல்லத்தகும் கூறுபாடு. எனவே வாயில்களல்லாத தலைமகளும் நற்றாயும் மறைத்துச் சொல்லப்பெறுவர் என்றவாறு, வருகின்ற சூத்திரம் மறைத்துச் சொல்லும் உள்ளுறை சொல்லுகின்றாராதலின், அவ்வுள்ளுறை வாயில்களை விலக்கியவாறு. இவர் வெளிப்படக் கூறாமல் மறைத்துக் கூறினால் குற்றமென்னை எனின், இவர் குற்றவேல் முறைமையராதலானும் கேட்போர் பெரியோராதலானும் வெளிப்படக் கூறாக்காற் பொருள் விளங்காமையாலும், அவ்வாறு கூறினால் இவர் கூற்றிற்குப் பயனின்மையானும் வெளிப்படவே கூறும் என்ற" என்பர்.

வாயில்கள் தலைவனிடம் கூறுவன

மேற்கூறிய வாயில்கள் தலைவனிடம் சென்று தலை மகளைப் பற்றிப் பேசினால் என்ன பேச வேண்டும் என்பதை,

கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையிற் கிழவோர்க் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய

(தொல். பொருளதிகாரம் - 150)

என்ற நூற்பாவால் உணரலாம். வாயில்களை இருவகையாகப் பிரிக்கலாம். புறத்தேயிருந்து செயல் செய்பவரும், அகத்தே புகுந்து செயல் செய்பவருமென, இவ்விருவருள் அகம் புகுந்து தலைவன் தலைவியரிடத்தே செயல் செய்யும் வாயில்களாக உள்ளவர்கள், தலைவனுடைய முகம் விரும்பும் வகையில், தலைவியைப் பற்றிப் பேச்சு நிகழ்த்துவதானால், அவருடைய கற்பொழுக்கம், காமம் பண்பு, பகுதிப்பட்ட நல்லொழுக்கம், மென்மையான இயல்பு வாய்ந்த பொறுமை, மன அடக்கம், தகுதியாக விருந்தினரை வரவேற்று உபசரித்தல், உறவினரைப் பாதுகாத்தல் முதலிய நல்ல இயல்புகளையே எடுத்துக் கூறிப்பேசவேண்டும். அது

போலவே அவ்வாயில்கள் தலைவியிடம் சென்று தலை மகனைப் பற்றிப் பேச்சு நிகழ்த்தினால் தலைமகனுடைய நல்ல பண்புகளை எடுத்துக் கூறிப் பேச வேண்டுமே தவிர அவனைப் பற்றிய கொடுமைச் சொற்களைப் பேசுதல் கூடாது என்பதனை,

மனைவி தலைத்தாள் கிழவோன் கொடுமை
தம்முள[1] வாதல் வாயில்கட் கில்லை

(தொல். பொருளதிகாரம் - 163)

என்னும் நூற்பா உணர்த்துகிறது.

வாயில்கள் மகிழ்ச்சிப் பொருள்

மேற்கூறிய எல்லா வாயில்களும், தலைவன் தலைவி என்னும் இருவரிடத்தும் மகிழ்ச்சிப் பொருட்டு ஏதுவாக இருத்தல் வேண்டுமேயன்றி, மகிழ்ச்சி இல் பொருட்டு ஏதுவாயிருத்தல் கூடாது என்பதனை,

எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப

(தொல். பொருளதிகாரம் - 176)

என்னும் நூற்பாவால் உணரலாம். மேற்கூறிய வாயில்கள் தலைவன் தலைவியரிடத்தேயன்றித் தமக்குள் பேசிக் கொள்ளுமிடத்தேயும் தலைவியின் உயர்ந்த பண்புகளையும் தலைமகனுடைய சிறந்த பண்புகளையும் மேற்கூறியவாறு பேசிக் கொள்ளவேண்டுமேயன்றித் தலைவன் தலைவியைப் பற்றிப் புறம் பழித்துக் கூறாதவராயிருக்க வேண்டும் என்பதைப் பற்றி,

வாயி[2]லுசாவே தம்முள் உரிய (தொல். செய்யுளியல் 19) என்ற நூற்பாவால் உணரலாம்.

---

1. தம் உள ஆதல் - தம் உரைக்கண் உளதாக்கிக் கூறல்

2. இளம்பூரணர் "கற்புங்காமமும்" (தொல். பொருளதிகாரம் - 150) என்பதன் உரையுள், "செய்யுளியலுள் "வாயிலுசாவே தம்முளுரிய" என்பதனால், தலைவியின் பண்புகளையெல்லாம் தலைமகனுக்கு உரைத்தலே யன்றித் தம்முள் தாம் கூறுதலும் உரியர்.

தொகுப்புரை

எனவே ஐந்திணைக் காமத்தில் வரும் பணியாட்களெல்லாம் (வாயில்களெல்லாம்) தலைவனிடத்தே பேசும் போது தலைவியின் உயர்ந்த மாண்புகளையே பேசியும் தலைவனிடத்துப் பேசும்போதும் தலைவனின் சிறந்த மாண்புகளையே பேசியும், தமக்குள் பேசுமிடத்தும் இருவர் கொடுமைளைக் கூறாமல் இருவர்தம் பண்புகளையே பேசல் வேண்டும் என்பதும் எல்லா வாயில்களும் தலைவன் தலைவியரின் மகிழ்ச்சிக்கே ஏதுவாயிருந்து தம் சொற்களை வெளிப்படையாகப் பொருளுணரும் சொற்களாகவே கூறல் வேண்டும் என்பதையும் தொல்காப்பியர் உணர்த்துகிறார். பிசிராந்தையாரும் பணியாட்களை 'யான் கண்டனையர்' என்று குறிப்பிடுகின்றார்.

ஐந்திணைக் காமமல்லாத காம ஒழுக்கத்தில் அத் தலைவன் தலைவியர்க்கு வரும் ஏவலரெல்லாம் பெரும் பாலும் தலைவனிடத்திலே சென்று தலைவியைப் பழித்துக் கூறலும் தலைவியிடத்தே சென்று தலைவனைப் பழித்துக் கூறலும் உடையராய்த் தமக்குள் பேசிக் கொள்ளும் பொழுதும் இருவர்தம் பழிப்புரையினையே பேசிக் கொள்பவராயிருப்பர்.

ஒரு தகுதியற்ற மந்தரை என்னும் தோழி, கைகேயி என்னும் தலைவியிடம் சென்று தலைவனைப் பழித்துக் கூறிச் செய்த சூழ்ச்சி ஒன்றே, எத்தனையோ பேருக்கு அளவற்ற துன்பத்தைக் கொடுத்தது என்பதை இராமாயணக் கதையால் உணர்கிறோம்.

7
உலகப் பொருள்
எல்லாவற்றிற்கும் காமமே முதல்

தோற்றுவாய்

தொல்காப்பியம் சொல்லதிகாரம் தொடக்கத்தே அதன் பழைய உரையாசிரியராகிய இளம்பூரணர் 'சொல்' என்பதை விளக்குமிடத்தே, "சொல் என்பது எழுத்தோடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை" என்றனர். அவரே பொருளதிகாரத் தொடக்கத்தே பொருள் என்பதை விளக்குமிடத்தே, பொருள் என்பது யாதோவெனின், மேற் சொல்லப்பட்ட சொல்லால் உணரப்படுவது என்று கூறி, அப்பொருள் முதல், கரு, உரிப்பொருள் என மூவகைப்படும் என்பர்.

முதற்பொருளாவது நிலமும் காலமும் என இருவகைப்படும். நிலன் எனவே நிலத்திற்குக் காரணமாகிய நீரும் நீர்க்குக் காரணமாகிய தீயும் தீக்குக் காரணமாகிய காற்றும் காற்றிற்குக் காரணமாகிய ஆகாயமும் பெறுதும். காலமாவது மாத்திரை முதலாக நாழிகை யாமம் பொழுது நாள் பக்கம் திங்கள் இருது அயவம் யாண்டு உகம் எனப் பலவகைப்படும்.

கருப்பொருளாவது இடத்திலும் காலத்திலும் தோன்றும் பொருள். அது தேவர் மக்கள் விலங்கு முதலியனவும் உணவு செய்தி முதலாயினவும் யாழ் பறை முதலாயினவும் இன்னவான பிறவும் ஆகிப் பலவகைப்படும்.

உரிப்பொருளாவது மக்கட்கு உரிய பொருள். அஃது அகம் புறம் என இருவகைப்படும். அகமாவது புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவும் கைக்கிளை பெருந்திணை எனவும் இருவகைப்படும். புறமாவது நிரை கோடற்பகுதியும் பகைவயிற் சேறலும் எயில்வளைத்தலும் இருபெருவேந்தரும் ஒருகளத்துப் பொருதலும் வென்றி வகையும் நிலையாமை வகையும் புகழ்ச்சி வகையும் என எழுவகைப்படும்.

அஃதற்றாக அறம் பொருள் இன்பம் வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற பொருள் யாதனுள் அடங்குமெனின் அவையும் உரிப்பொருளினுள் அடங்கும்.

அஃதற்றாக இது பொருளதிகாரமாயின் உலகத்துப் பொருள் எல்லாம் உணர்த்தல் வேண்டும் எனின், அது முதல் கரு உரிப்பொருள் எனத் தொகை நிலையால் அடங்கும்" என்று கூறியுள்ளார்.

இவ்வாறு பொருள் என்பதற்கு இளம்பூரணர் கூறிய விளக்கம் அறிஞரால் கருதி உணரத்தக்கது.

'சொல்லானது பொருளை உணர்த்துகின்றது' என்னும் உண்மை எந்த நாட்டு அறிஞரும் ஒத்துக்கொள்ளும் ஒரு உண்மைக் கருத்தாகும். சைவ சமயத்தில் சொல்லைச் சத்தியாகவும் பொருளைச் சிவமாகவும் கூறுகின்ற முறை உண்டு. இடைக்காடர் என்னும் புலவரொருவர் பாண்டிய மன்னன் ஒருவன் மேல் பாடல் புனைந்துகொண்டு சென்றார். அப்பாண்டியன் அதனைக் கேட்காமல் புலவரை இகழ்ந்து அனுப்பிவிட்டான். அப்புலவர் மிகவும் வருந்தி மதுரையில் சொக்கநாதன் கடவுளைக் கண்டு "மன்னிய சொல் உன் மாது; மாசறு பொருள் நீ" என்று குறிப்பிட்டுச், சொல் வடிவாகிய சத்தியையும், பொருள் வடிவாகிய உன்னையும் பாண்டியன் இகழ்ந்தான் என்று கூறினார் என்ற கதை நம்பி திருவிளையாடலில் கூறப்பட்டுள்ளது.

மதுரையிலே இருந்தது தமிழ்ச்சங்கம். அச்சங்கத்திலே இருந்த புலவர்கள் அழகான தமிழ்ப்பாடல்களைப் பாடினர். அத்தமிழ்ப்பாடல்கள் சொல்லாகிய பொலிவுள்ள மலரைத் தோன்றச் செய்து பொருள் என்னும் தாது நறுமணத்தைத் தருதலால் அப்பாடல்கள் மல்லிகை மாலையை ஒத்துள்ளதாம்.

சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால் - மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்

(பட்டினப்பாலையின் ஈற்றிலுள்ள பாடல்)

என்று, சொல்லிலே உள்ள பொருள் மணத்தைக் கூறுகின்றார் ஒரு புலவர்.

பொருளிலக்கணம்

தொல்காப்பியர் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி இலக்கணம் எழுதினார். அவற்றுள் ஒன்று பொருளிலக்கணம் ஆகும். "எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம் எனச் சொல்லா நிற்ப" என்னும் இறையனார் களவியல் உரைப் பகுதியால் பொருளதிகாரத்தின் சிறப்பை உணரலாம். "உலகியல் நிறுத்தும் பொருள் மரபு" என்று கல்லாடம் என்னும் இலக்கியம் பொருளிலக்கத்திணைச் சிறப்பிக்கின்றது.

பொருளிலக்கணத்தைத் தொல்காப்பியர் கூறும் முறை

மேற்கூறிய பொருண்மரபினைத் தொல்காப்பியர் எவ்வாறு கூறுகின்றார்? என்பதை ஆராய்வோம். மக்கள்தம் மனத்தில் எழும் காம உணர்ச்சியே உலகத்திலெழும் எல்லாப் பொருளுக்கும் காரணம் என்பது தொல்காப்பியர் தம் கருத்தாகும். காமம் என்னும் சொல் பொருளதிகாரத்தில் பல இடங்களில் தொல்காப்பியரால் எடுத்தாளப்பட்டுள்ளது. அகத்திணையியலில் முதல் நூற்பாவில் காமத்தைக் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என அவர் மூன்றாகப் பிரித்துள்ளார்.

காமத்தின் பிரிவு

ஒருவன் ஒருத்தியினிடத்திலே தோன்றும் காம உணர்வை, இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பும் ஒத்த காமம் என்றும், ஒருவன் விரும்பி ஒருத்தி விரும்பாததும் ஒருத்தி விரும்பி ஒருவன் விரும்பாததும் ஆகிய ஒருபாற் காமமென்றும், ஒருவரை ஒருவர் விரும்பாத பொருந்தாக் காமமென்றும் மூன்றாகப் பிரிக்கலாம். இம்மூன்றுள் ஒருபாற் காமம் கைக்கிளை என்று வழங்கலாயிற்று.

இன்னும் இக்காமத்தைப் பருவம் கருதி மூன்றாகப் பிரித்தலும் உண்டு. காமக் குறிப்பிற்கு ஒவ்வாத இளமைப் பருவம் வாய்ந்த ஒருவன் ஒருத்தியை மற்றவர் விரும்பிக் கூறுவது ஒருபாற்காமமென்றும், காமக்குறிப்பிற்கு ஒத்த பருவமுடைய இருவர்தம் கூட்டம் ஒத்த காமமென்றும், காமக்குறிப்பிற்கு ஒவ்வாத முதிர்ந்த பருவத்தினரின் கூட்டம் பொருந்தாக் காமம் என்றும் வழங்கப்படுதலும் உண்டு. இவையும் முறையே கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்ற பெயரால் வழங்கும்.

இன்னும் சிறிய அளவுள்ள காமத்தைக் கைக்கிளை என்றும் ஒத்த அளவுள்ள காமத்தை ஐந்திணை என்றும் அளவிற்கு மேற்பட்ட மிக்க காமத்து மிகல் முதலியவற்றைப் பொருந்தாக் காமமென்றும் வழங்குவதுண்டு.

கைக்கிளை என்ற சொற்குச் சிறுமை பற்றிய உறவு என்று பொருள் காண்பர் இளம்பூரணர். 'கை' என்பது சிறுமை என்று பொருள்படும் தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல் என்றும், 'கிளை' என்பது உறவென்றும், பெருமையில்லாத தலைமக்கள் உறவே கைக்கிளை என்று கூறப்படும் என்றும், இது ஒருபாற்காமம் என ஒருமருங்கு பற்றிய கேண்மை எனப் பெயர் பெறுமென்றும் அவர் கூறுவர்.

ஐந்திணை என்ற சொற்கு ஐந்து ஒழுக்கமாகப் பிரிக்கப்பட்டு வழங்கும் ஒத்த காமம் என்று பொருள் கூறுவர். இதற்கு அன்புடைக்காமம் என்றும் நடுவண் ஐந்திணை என்னும் பெயர் உண்டு. இந்த ஐந்திணை "சுவைபட நிகழ்வனவெல்லாம் ஓரிடத்து நிகழ்வனவாகத் தொகுத்து ஐந்திணைக்கு நிலமும் காலமும் ஆகிய முதற்பொருளும் தெய்வம் உணா முதலிய கருப்பொருளும் அடுத்துப், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனச் சொல்லப்பட்ட அவ்வுரிப்பொருள், ஒத்த அன்பும் ஒத்த குலமும் ஒத்த வடிவும் ஒத்த குணமும் ஒத்த செல்வமும் ஒத்த இளமையும் உளவழி நிகழுமாதலின் அது

பெருங்கிளைமை ஆயிற்று" என்பர் இளம்பூரணர். (தொல். அகத்திணை 1)

கைக்கிளையும் பெருந்திணையும் ஐந்தாகப் பிரித்து வழங்கப்படாமை

ஒத்த காமம் ஐந்து ஒழுக்கமாகப் பிரிக்கப்பட்டு வழங்குதலால் ஐந்திணை எனப் பெயர் பெற்றது என்றோம். அங்ஙனமாயின் கைக்கிளை, பெருந்திணை என்பனவற்றையும் ஐந்தொழுக்கமாகப் பிரித்து வழங்கப்படாமை என்னை எனின்?

ஐந்திணை என்பது ஒத்த அன்புடைக் காமமாதலின் அதனை உடைய தலைவன் தலைவியர்க்குப் புணர்வின்கண் இன்பமும் ஏனைய பிரிவு இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் இவற்றில் துன்பமும் உண்டாம். இவ்வாறு உண்டாகப் பெறுவதே முறையுமாகும்.

ஆனால், கைக்கிளை ஒருபாற் காமமாதலால் அங்கு புணர்தல் செம்மையாய் இயலாது. செம்மையாய் இயலாத அப்புணர்வு ஒருபாலார்க்கு இன்பத்தையும் மற்றொரு பாலார்க்குத் துன்பத்தையும் உண்டாக்கும். ஏனைய பிரிவு முதலானவை ஒரு பாலார்க்குத் துன்பமாகவும், மற்றொரு பாலார்க்கு இன்பமாகவும் இருக்கும்.

அதுபோல், பெருந்திணை என்பதும் இருவரும் மனம் விரும்பாத காமமாதலால் புணர்வு இருவருக்குமே மகிழ்வா யிராது, பிரிவு முதலாயின இன்பமாகவே இருக்கும்.

இக்காரணங்களால் ஒத்த காமமே ஐந்து திணையாகப் பிரித்து ஓதுதற்குச் சிறந்ததாயிற்று.

அகனைந்திணைச் சிறப்பு

தொல்காப்பியர் அகத்திணை புறத்திணை என்ற இரண்டில் அகத்திணையை முதலாவதாகவும், அகத்திணை ஏழில் நடுவணதாகிய அகனைந்திணையைச் சிறப்பாகவும் கருதுகின்றார். அவர் அகத்திணையை "மிக்க பொருள்" (பொருளியல் - 23) என்று குறிப்பிடுதலைக் காண்க.

மேலும் அவர் அகனைந்திணை பற்றிய செய்தியை அகத்திணையியலில் கூறியதோடமையாது அவற்றில் கைகோள்களுக்குக் களவியல் கற்பியல் என வேறு இயல்கள் வகுத்துக்கொண்டு ஓதுவதிலிருந்தும் செய்யுள் உறுப்பாகத் திணை கைகோள் கூற்று கேட்போர் காலம் பயன் மேம்பாடு எச்சம் முன்னம் பொருள் துறை என்னும் பன்னிரண்டையும் கூறுவதிலிருந்தும் உணர்ந்து கொள்ள லாம். இன்னும் எட்டுத்தொகையுடன் நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு அகநானூறு என்னும் நான்கும் அகனைந்திணை இலக்கியமாக இருப்பதும் கலித்தொகையில் சிலபாடல்களொழியப் பலபாடல்கள் அகனைந்திணைப் பாடலாக இருப்பதும் கீழ்க்கணக்கு நூல்களுள் ஐந்திணை என்பவையும் முப்பாலான திருக்குறளில் காமத்துப்பால் முற்றிலும் அகனைந்திணையாக இருப்பதும் மேற்கருத்தை வலியுறுத்தும்.

அகத்திணையிலிருந்து புறத்திணைத் தோற்றம்

தொல்காப்பியத்தில் புறத்திணையியலைப் படிக்கத் தொடங்கும் இக்காலத்து அறிஞர் சிலர், புறத்திணையைத் தொகுத்துணர்த்தும் நூற்பா இயல் தொடக்கத்தில் இருந் திருக்க வேண்டும் என்றும், அந்நூற்பா காலப்பழமையால் ஏடுபெயர்த்தெழுதுவோரால் விடுபட்டது போலும் என்றும் கூறுகின்றனர். அப்படி ஒரு நூற்பா இருந்து விடுபட்டதாகக் கருதுவதற்கு இடமேயில்லை என்க, தொல்காப்பியர் அகத்திணை இயலின் தொடக்கத்தே கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என ஏழு அகத்திணைகளைக் கூறி, அதன்பின் அளவு பற்றிய செய்திகளையெல்லாம் கூறிவிட்டுப் புறத்திணையியலின் தொடக்கத்தே

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்

என்னும் நூற்பாவால் அகத்திணை ஏழிலிருந்தே புறத்திணை ஏழும் தோன்றுகிறது என்றும் கூறுகிறாராதலால் புறத்திணை இத்துணை என்று உணர்த்தும் நூற்பாவொன்றைத் தொல் காப்பியர் யாத்திலர் என்க.

புறத்திணையைக் கூறத் தொடங்கிய தொல்காப்பியர் அகத்திணையியலில் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்று கூறிய முறைக்கேற்பக் கைக்கிளையின் புறப் பாடாண் என்று, பாடாண் திணையை முதலாக வைத்துப் புறத்திணைகளைக் கூறியிருக்கலாம். அவர் அவ்வாறு கூறாமல் ஏழுதிணையிற் சிறந்தவை ஐந்திணை; ஐந்திணையிற் சிறந்தது புணர்ச்சிப் பொருளாகிய குறிஞ்சியாதலின், அக்குறிஞ்சியை முன்னர் எடுத்துக் கொண்டு குறிஞ்சியது புறம் வெட்சி என்று கூறி அதன்பின் முல்லையது புறன் வஞ்சி மருதத்துப் புறன் உழிஞை நெய்தலது புறன் தும்பை பாலையது புறன் வாகை பெருந்திணைப் புறன் காஞ்சி கைக்கிளைப் புறன் பாடாண் என்று கூறியுள்ளார்.

தொல்காப்பியர் ஐந்திணையைக் கூறும் முறை

தொல்காப்பியர் முதல் கரு உரி என்ற மூன்றில் முதற் பொருளாகிய நிலத்தையும் காலத்தையும் கூறும்பொழுது முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற முறையிலும், உரிப்பொருள்களைக் கூறும்பொழுது குறிஞ்சி (புணர்தல்), பாலை (பிரிதல்), முல்லை (இருத்தல்), நெய்தல் (இரங்கல்), ஊடல் (மருதல்) என்ற முறையிலும் புறத்திணை களைக் கூறும்பொழுது குறிஞ்சி (வெட்சி) முல்லை (வஞ்சி) மருதம் (உழிஞை) நெய்தல் (தும்பை) பாலை (வாகை) என்ற முறையிலும் கூறுகின்றனர். இங்ஙனம் அவர் கூறும் மூன்று முறைக்கும் நல்ல காரணம் உண்டு.

தமிழ்நாட்டிலே வேனிற்காலத்தின் பின்வரும் கார்காலம் உணவிற்கு அடிப்படையான உழவு முதலாகிய தொழில் நிகழ்வதற்குரிய காலமாதலின், அக்காலத்தின் முதலாகிய ஆவணித்திங்கள் தமிழர்தம் யாண்டில் தொடக்க மாதலின் அக்காலத்திற்குரிய முல்லைத் திணையை முதற் கூறி, அதன்பின் கூதிர் முன்பனிக்குரிய குறிஞ்சித்திணையைக் கூறி, பெரும்பொழுது வரையறையில்லாத மருத நெய்தல்களை அதன்பின் கூறி, பிரிந்து வெளியுலகத்தில் தொழில் செய்வதற்குரிய பாலையை ஈற்றிலே கூறினார். இவ்வாறு முல்லையை முதலாகக் கூறியது தமிழ்நாட்டு மக்கள்தம் தொழிலியற்று முறையை அடியாகக் கொண்டதாகும்.

அடுத்து புணர்தல் பிரிதல் முதலான முறை உரிப்பொருள் நிகழும் முறையாகும்.

புறத்திணையியலில் குறிஞ்சியை முதலாகக் கூறியது போர் இயற்றும் முறையாகும். எந்த நாட்டிலும் போர் இயற்றும் முறை நான்கு பகுப்புள் அடங்கும். ஒரு நாட்டு மன்னன் மற்றொரு நாட்டுப்பகை மன்னனிடம் போர் தொடங்கும் பொழுது போரின் முன்னோடியாகச் சில செயல்கள் நிகழும். அது பகைவர் நாட்டுள்ள ஏதாவது ஒரு பொருளைக் கவரும் முறையில் தொடங்கும். அந் நிகழ்ச்சியைத்தான் தொல்காப்பியர்,

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும்

(புறத்திணை - 2)

என்று தமிழ்நாட்டு முறைக்கேற்ப நிரை கவர்தலாகக் கூறியுள்ளார். அதனை அவர்,

வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்நசைஇ வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே

(புறத்திணை - 6)

என்று கூறுகின்றார். பகைவன் மண்ணைக் கவரும் போர் நிகழ்ந்தபின், பகைவனை அழித்தற்காக அவன் வாழும் நகரத்தை அரண்மனையை முற்றுகை செய்து நடத்தும் போர் நடைபெறும், இதனை அவர்,

உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற் றாகு மென்ப

(புறத்திணை - 8)

என்று கூறுகின்றார். இம்முறையின்றிப் பகைமன்னர் இருவரும் வலிமையுடையவராக இருப்பின் அவர்தம்முள் யார் மிக்க வலிமையுடையவர் என்பதை அறிந்து கொள்வதற்காக இருவரும் களம் குறித்துப் படையணி வகுத்துப் போர் புரிவர். இதனைத் தொல்காப்பியர்,

தும்பை தானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனை
சென்றுதலை யழிக்கும் சிறப்பின் றென்ப

(புறத்தினை - 12)

என்று கூறுகின்றார்.

இவ்வாறு போர் நிகழ்ச்சிக்கு முன்னோடியான செயலும் அதன்பின் பகைவர்தம் மண் கருதிய போரும், பின்னர் அவர் வாழுமிடத்தை முற்றுகையிட்டுச் செய்யும் போரும் அவையின்றாயின் தம் வலிமையை நிலைநாட்டிச் செய்யும் போரும் என உலகத்து நிகழும் போரெல்லாம் நான்கு வகையுள் அடங்கும். இவற்றினைத் தொல்காப்பியர் தமிழ் நாட்டின் வழக்குக்கேற்பக் குறிஞ்சி என்றும் அகத்திணைப் புறனாய்ப் பகைவர்தம் ஆனிரையைக் கவர்வது வெட்சி என்னும் புறத்திணையாகும் என்றும், முல்லை என்னும் அகத்திணைப் புறனாய்ப் பகைவர்தம் மண்ணினைக் கொள்வது வஞ்சி என்னும் புறத்திணையாகும் என்றும், மருதம் என்னும் அகத்திணைப் புறனாய்ப் பகைவர் வாழிடத்தை முற்றி அழிப்பது உழிஞை என்றும், நெய்தல் என்றும் அகத்திணைப் புறனாய்ப் பகைவர்தம் வலிமையை அழிப்பது தும்பை என்னும் புறத்திணையாகுமென்றும் கூறுகிறார். போர் முடிவிலே கிட்டுவது ஒரு சாரார்க்குத் தோல்வியும் மற்றொரு சாரார்க்கு வெற்றியும் ஆகும். தோல்வியைச் சிறப்பித்துப் புலனெறிவழக்கம் செய்தல் இலக்கிய மரபில்லை. அதனால் அதற்கொரு இலக்கணம் எழவில்லை. ஓர் அரசன் தன் பகைவரைப் போரிட்டு வெல்லின் அவ்வெற்றி நிலையைப் புலவர் பாடுவர்.

செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயின் நன்றுமன் என்ற நின்
ஆடுகொள் வரிசைக் கொப்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே

(புறநா. 53)

இந்நிகழ்ச்சியைச் சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பொருந்தில் இளங்கீரனார் பாடிய பாட்டால் உணரலாம்.

இவ்வெற்றி நிலையைத் தொல்காப்பியர் வாகை என்று குறிப்பிட்டு அதனைப் பாலை என்னும் அகத்திணையின் புறன் என்று கூறுகிறார்.

பிறரெல்லாம் "போர்க்களத்து மிக்கோர் செருவென்றது வாகையாம்" என்று அரசர்க்குரியதாகக் கூறியுள்ளார். ஆனால், தொல்காப்பியர் அவ்வாறு கூறாது,

வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப

(புறத்திணையியல் - 15)

"வாகை என்னும் புறத்திணைதான் பாலை என்னும் அகத்திணையின் புறனாகும்; அது உலகத்திலுள்ள ஒவ்வொரு வரும் குற்றமில்லாத கொள்கையையுடைய தம்தம் தொழிற் கூறுபாட்டை வகைபட மிகுதிப்படுத்திக் காட்டுதலாகும்" என்று உலகமக்கள் எல்லோருக்கும் பொதுவாக ஓதி யுள்ளனர். அவர்தம் காலத்திலிருந்த மக்கள் நிலையைக் கருத்தில் வைத்துக் கொண்டு, பார்ப்பனரும், அரசரும், வணிகரும், வேளாளரும், அறிவனும், தாபதரும், பொருநரும், இவர்தவிர நாட்டிலுள்ள ஏனைய மக்களும் ஆகிய நாட்டுவாழ் மக்கள் எல்லோரும் குற்றமில்லாத கொள்கையை யுடைய தம்தம் தொழிற்கூறுபாட்டைப் பாகுபட மிகுதி படுத்திக் காட்டுதலே வாகை என்பதாகும் என்று கூறுவது, மிகச் சிறந்த, உலகத்திற்கு உயிரான கொள்கையாம். உலகியல் நிமித்தம் பொருள் மரபில் இவர் கூறும் வாகைத்திணைப் பொருள் மிகச் சிறந்ததாகும்.

பார்ப்பனர் ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்பனவற்றில் மிகுதலும்,

நாட்டையாளும் அரசர், ஓதலும், வேட்டலும் ஈதலும் படை வழங்குதலும் குடியோம்புதலும் ஆகிய இவற்றில் மிகுதலும்,

வாணிகர் ஓதல் வேட்டல் ஈதல் உழவு வாணிகம் நிரையோம்புதல் என்னும் தொழிலில் மிகுதலும்,

வேளாளர் உழவு, ஏனைய தொழில், விருந்தோம்பல், பகடு புறந்தருதல், தொண்டு செய்தல், கல்வி கற்றல் என்னும் இத்தொழிலில் மிகுதலும்,

அறிவன் குற்றமில்லாத நல்லொழுக்கத்தை மூன்று காலத்திலும் செய்து அதனின் மிகுதலும்,

தாபதர் தங்கள் தவ ஒழுக்கத்தில் மிகுதலும்,
போர் செய்வோர் தங்கள் செயலில் மிகுதலும்
ஏனையோர் தம்தம் செயலில் மிகுதலும்

ஆகிய இவையெல்லாம் வாகை என்பர்.

பிங்கலநிகண்டும்,

கல்வியிற் வேள்வியிற் கொடையிற் படையில்
வெல்லுநர் அணிவது வாகை யாகும்

என்று கூறுகின்றது. இவற்றால் வாகைத்திணை அரசர்க்கே யன்றி எல்லோருக்கும் உரிமையாதல் விளங்கும்.

வாகைத்திணையின் பின் பெருந்திணை என்னும் அகத்திணையின்புறனாகக், காஞ்சி என்னும் புறத்திணையைத் தொல்காப்பியர் கூறுகின்றார். இது பல்வகை நிலை யாமையைப் பொருளாக உடையது. தொல்காப்பியர்,

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பின் பன்னெறி யானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே

என்று கூறுகிறார். பெருந்திணை என்னும் அகத்திணைக்குக் காஞ்சி என்னும் திணை புறனாம்; அது பாங்காதல் அரிய சிறப்பினால் பலநெறியாலும் நிலைபேறில்லாத உலக நிலையைப் பொருந்திய நெறியை உடைத்து என்பர்.

தொல்காப்பியர் இத்திணையிற் கூறியுள்ள இருபது துறைகளை இளமை நிலையாமை செல்வம் நிலையாமை யாக்கை நிலையாமை என மூன்று வகையுள் அடக்குகிறார் இளம்பூரணர். பெருந்திணைக்குக் காஞ்சித்திணை புறனாயவாறு என்னை யெனின்? ஏறிய மடற்றிறம் (அகத்திணை - 54) முதலாகிய நோந்திறக் காமப்பகுதி (பெருந் திணைக்குரியவை) அகத்திணை ஐந்தற்கும் புறனாயவாறு

போல, இக்காஞ்சித் திணை வெட்சி முதலிய புறத்திணை ஐந்திற்கும் புறனாகலானும் இக்காஞ்சித்திணைபோல் அப்பெருந்திணையும் நோந்திறம் பற்றி வருதலாலும் அதற்கு இது புறனாயிற்று என்றனர் அவர். (புறத்திணையியல் - 18).

கைக்கிளை செந்நிறம் பெருந்திணை நோந்திறம்
அத்திறம் இரண்டும் அகத்திணை மயங்காது
அத்திணை யானே யாத்தனர் புலவர்

(இளம்பூரணர் மேற்கோள் - பொருளதிகாரம் - 55)

என்னும் நூற்பா பெருந்திணையானது நோயும் இன்பமும் என்னும் இரண்டில் நோயினையே தரும் என்று கூறுகின்றது. அதனால் அதனைப் பொருந்தாக் காமம் என்று கூறுதல் பொருந்துவதாகும். காஞ்சித்திணை முற்றிலும் துன்பமே ஆதலின், அதனை நோந்திறமாகிய பெருந்திணைப் புறன் என்று கூறுதல் மிகப் பொருந்துவதாம்.

ஒருபாற் காமமாகிய கைக்கிளை என்னும் அகத் திணை யின் புறன் பாடாண் என்று கூறுகின்றார் தொல் காப்பியர்.

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே

(புறத்திணை - 20)

என்பது அவர் கூறும் நூற்பா. இந்நூற்பா உரையுள் இளம்பூரணர் "பாடாண் பகுதியாகிய எட்டுவகையாவன; - கடவுள் வாழ்த்துவகை வாழ்த்தியல் வகை மங்கலவகை செவியறிவுறுத்தல் ஆற்றுப்படைவகை, பரிசிற்றுறைவகை, கைக்கிளை வகை, வசை வகை என்பன" என்று கூறி,

கைக்கிளைக்குப் பாடாண் புறானாயவாறு என்னை எனின்? கைக்கிளையாவது ஒருநிலத்திற்கு உரித்தன்றி ஒருதலைக் காமமாகி வருமன்றே; அதுபோல இதுவும் ஒருபாற்கு உரித்தன்றி ஒருவனை ஒருவன் யாதானும் ஓர் பயன் பகுதியவழி, மொழிந்து நிற்பது ஆதலானும், கைக்கிளையாகிய காமப்பகுதிக்கண் மெய்ப்பெயர் பற்றிக் கூறுதலாலும், கைக்கிளை போலச் செந்திறத்தாற்

கூறுதலாலும் அதற்கு இது புறனாயிறற்று. நோந்திறமாவது கழிபேரரிக்கம்; செந்திறமாவன அஃது அல்லாதன" என்பர்.

புறத்திணையில் போர்ச்செய்தியே கூறப்பட்டுள்ளன என்பவரெல்லாம் வாகை, காஞ்சி, பாடாண் துறைகளை ஊன்றிப் படிக்கவேண்டும்.

மேலே கூறியவற்றையெல்லாம் கருத்தில் அமைத்துக் கொண்டு பார்த்தால் காமம் என்ற ஒன்றிலிருந்தே மக்களுடைய அகவாழ்வு புறவாழ்வுகளெல்லாம் தோன்றுகின்றன என்று தொல்காப்பியர் கருதுகிறார் என்பது நமக்குப் புலனாகின்றது.

தொல்காப்பியர் அன்பின் ஐந்திணையை இன்பம் பற்றியது என்று கூறாமல், இன்பம் பொருள் அறன் என்னும் முப்பொருள் பற்றியது என்று கூறுகின்றார்.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம்

(அகத்திணையியல் - 1)

என்பது அவர் கூறும் நூற்பா. இந்நூற்பா உரையுள் இளம்பூரணர் அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்றதனால் கைக்கிளை பெருந்திணையை ஒழிந்து நின்ற முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் எனக் கொள்ளப்படும். அவை அன்பொடு புணர்ந்தவாறு என்னை எனின்? கைக்கிளை பெருந்திணையைப் போலாமை, ஒத்த அன்பினராகிப் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும் நிகழ்த்துப ஆதலாலும் அவை நிகழுங்கால் அகத்திணைக்கு உறுப்பாகிய இடமும் காலமும் கருப்பொருளும் துணையாகி நிகழுமாதலாலும் இவை அன்பொடு புணர்ந்தன என்க.

அஃதேல், ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவும் அன்பொடு புணர்ந்தனவாம் எனின்,

அவையும் அன்புடையார் பலர் கூடி நிகழ்த்துபவை யாதலின் அன்பொடு புணர்ந்தவையாம்,

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

(திருக்குறள் - 72)

என்பதனாலும் கொள்க.

இனி இவ்வைந்திணை இன்பம் மட்டும் ஆகாமல் இன்பமும் பொருளும் அறமும் ஆயினவாறு என்னை எனின்? புணர்தல் முதலாகிய ஐந்து பொருளும் இன்பந் தருதலின் இன்பமாயின. முல்லை முதலாகிய ஐந்திணைக்கும் உறுப்பாகிய நிலமும் காலமும் கருப்பொருளும், இவற்றின் புறமாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்பனவும் வாகையின் ஒரு கூறும் பொருளாதலாகும். புணர்தல் முதலாகிய உரிப்பொருளால் வருவதோர் கேடின்மையாலும் பொருளாயின. இவ்வொழுக்கங்கள் அறத்தின் வழி நிகழ்வதாலும், பாலையில் புறமாகிய வாகைப்படலத்துள் அறநிலை கூறுதலாலும் இவை அறமாயின" என்பர்.

8

செய்யுள் அல்லது பாட்டு

செய்யுள் என்பது எதனை? என்று வினாவுவோம். அதற்கு அறிஞர் தரும் விடையினை ஆராய்வோம். "உறுப்பியலிற் கூறிய எழுத்து அசை முதலிய அறுவகை உறுப்புகளினால் சொற்செறிவும் பொருட்செறிவும் பொருந்த, சொல்லணியும் பொருளணியும் அமைய, தொடையின்பமும் நடையின்பமும் என்ற ஓசை நலத்துடன் செய்வது செய்யுள்" என்பவர் புலவர் குழந்தை அவர்கள். (யாப்பதிகாரம் - பக்கம். 45) செய்யப்படுவது தான் கெய்யுள். எதன்மேற் செய்தல் வேண்டும் என்று வினாவின் அதற்கு விடையிருத்தல் வேண்டும். உலகியலில் இத்தெய்வத்தின் மேற்பாடு; இந்த வள்ளல் மேற்பாடு; இந்த நீதி பற்றிப்பாடு, இந்த நிகழ்ச்சி பற்றிப் பாடு என்பார்கள். இப்பல பொரு ளெல்லாம் அடங்க ஏதாவது ஒரு பொருள்மேல் பாடப் படுவது என்றோ செய்யப்படுவது எனறோ குறிப்பிட்டு அப்பொருள்மேல் பாடப்படுவது பாட்டு, செய்யப்படுவது செய்யுள் என்று நாம் பாட்டிற்கும் செய்யுட்கும் இலக்கணம் கூறிக்கொள்ளுதல் வேண்டும். அ.கி. பரந்தாமனார் என்னும் அறிஞர் "கவிதை என்பதும் செய்யுள் என்பதும் ஒன்றே கவிதை என்பது சொல்லாலே உருப்பெற்றுப் பொருளாலே விருப்பூட்டுவது. அதனோடு ஓசைநயமும் சேர்ந்திருக்க வேண்டும்" என்பர். (கவிஞராக - பக்கம். 182).

புலவர் குழந்தை அவர்களும், அ.கி. பரந்தாமனார் அவர்களும், முறையே பொருட்செறிவு என்றும், பொருளாலே விருப்பூட்டுவது என்றும் கூறுவது நேரடியாகப் பாடுபொருளை நமக்கு அறிவிக்கும் சொற்றொடராக இல்லை.

மேலே கூறிய இருவரேயன்றி முற்காலப் புலவரில் நற்றத்தனாரும்,

யாப்பெனப் படுவது யாதென வினவின்
தூக்கும் தொடையும் அடியுமிம் மூன்றும்
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே

என்பர். இவர் தூக்கும் தொடையும் அடியும் சேர்ந்தது யாப்பு என்பர்.

பல்காயனாரும்,

யாப்பியல் தானே யாப்புற விரிப்பின்
எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு
இழுக்கா மரபின் இவற்றொடு பிறவும்
ஒழுக்கல் வேண்டும் உரைத்திசி னோரே

என்பர். இவர் எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு கூடியது யாப்பு என்பர்.

யாப்பருங்கலமும்,

எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு
இழுக்கா நடையது யாப்பெனப் படுமே

என்றும்,

செய்யுள் தாமே மெய்பெற விரிப்பின்
பாவே பாவினம் எனவிரண் டாகும்

என்றும் கூறுகிறது. இந்நூல் யாப்பெனப்படுவது எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு கூடியது யாப்பு என்றும் அந்த யாப்பாகிய செய்யுள் பாவும் இனமும் என்று இரண்டு வகைப்படும் என்றும் கூறுகின்றது.

ஆனால் நன்னூலாசிரியர் மட்டும் இவ்வாறு கூறவில்லை. அவர்,

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

என்பர், இரத்தம் முதலிய பலவகைத் தாதுக்களினால் உயிராகிய ஒன்றற்கு இடனாக அமைந்த உடம்பினைப் போலப் பலவகைச் சொற்களால் பொருட்கு இடனாக உணர்வினின் வல்லவர் அணி பெறச் செய்யப்படுவன செய்யுள் என்பர். இந்நூற்பா பாடு பொருளை உயிர்போலச் சிறப்பித்துக் கூறுகிறது.

பாடுபொருளைக் குறிப்பிடாமல் பாடற்கு இலக்கணம் சொல்வது நன்றன்று

பாடற்கு இலக்கணம் கூறுங்கால் பாடுபொருளைக் குறிப்பிட்டே இலக்கணம் சொல்லவேண்டும். அப் பொருளைக் குறிப்பிடாமல் எழுத்து அசை சீர்தளை தொடை அடிகளால் ஆனது பாட்டு அல்லது செய்யுள் என்று மட்டும் இலக்கணம் கூறின் மூட்டை என்பது எப்படியிருக்கும் என்று வினாவியவனுக்கு உள்ளே ஒரு பொருளையோ பல பொருளையோ வைத்து சாக்கு முதலானவற்றால் மூடிக்கட்டியது மூட்டை என்று கூறாமல், சணல் நாரினால் இழைக்கப்பட்ட இழையால் செய்யப் பட்டுள்ள சாக்கின் வடிவமாயிருப்பது மூட்டை என்று சொல்வதைப் போன்றதாம்.

பாட்டு அல்லது பா

பாட்டு அல்லது பா என்றால் பொருள் என்ன? என்பதை நாம் ஆராய முற்படுவோம். தொல்காப்பியர் செய்யுட்குச் சிறந்த உறுப்பாக இருபத்தாறு உறுப்புக்களைக் கூறியுள்ளார். அவற்றுள் எட்டாவது உறுப்பு தூக்கு என்பதாகும். பதினோராவது உறுப்பு பா என்பதாகும்.

பேராசிரியர் உரை

மேலே கூறிய தூக்கு, பா என்னும் இரண்டுள் தூக்கு என்பது பாக்களைத் துணித்து நிறுத்துதல் என்றும், பா என்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருத்தன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லு கின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற்கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை என்றும் அவற்றிற்கு விளக்கங்கூறியுள்ளார் பேராசிரியர். இவர் கூறுவது பொருந்துமா என்பதை ஆராய்வோம்.

தூக்கு

தொல்காப்பியர் 'தூக்கு' என்னும் உறுப்பினைப் பற்றி ஏழு நூற்பா கூறியுள்ளார். அவை வருமாறு:-

அகவ லென்ப தாசிரி யம்மே (81)
அஃதன் றென்ப வெண்பா யாப்பே (82)
துள்ள லோசை கலியென மொழிப (83)
தூங்க லோசை வஞ்சி யாகும் (84)
மருட்பா ஏனை இருசா ரல்லது
தானிது வென்னும் தனிநிலை இன்றே (85)
அவ்வியல் பல்லது பாட்டாங்கு கிளவார் (86)
தூக்கியல் வகையே ஆங்கென மொழிப (87)

மேற்கண்ட நூற்பாக்களின் தொடக்கத்திலே இளம்பூரணர் "இது தூக்காமாறு உணர்த்துவார் அவற்றுள் ஆசிரியத்திற்குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று" என்று கருத்துரை கூறிவிட்டு, "அகவல் என்னும் ஓசை ஆசிரியத் திற்கு என்றவாறு; தூக்கெனினும் ஓசை எனினும் ஒக்கும்" என்று உரை கூறியுள்ளார். இவர் தூக்கென்பதை ஓசை என்றே கருதுகிறார். இவர் இவ்வாறு உரை கூறுவதற்குத் "துள்ளலோசை கலியென மொழிப" "தூங்கலோசை வஞ்சி யாகும்" என்னும் நூற்பாக்கள் அரண் செய்கின்றன.

பேராசிரியர் நிறுத்த முறையானே தூக்கு உணர்த்து வான் எழுந்தான். அஃதாவது பா துணிக்கப்படுவதாகலான் அப்பாவினை உணர்த்துகின்றான் என்பது என்பர். இவர் கருத்துப்படி பா என்னும் ஓசை அகவலாகவும் செப்ப லாகவும் துள்ளலாகவும் தூங்கலாகவும் துணிக்கப்படுகின்றது என்பர். தூக்கினை உணர்த்த வந்த ஏழு நூற்பாக்களையும் நாம் படித்துப் பார்த்தால் பா என்னும் பரந்துபட்ட ஓசை அகவல் முதலியனவாய்த் துணிக்கப்பட்டு நிற்கும் என்ற கருத்துடைய சொற்கள் வெளிப்படையாகவும் இல்லை. குறிப்பாகவும் இல்லை. பதினோராவது உறுப்பாகப் பாவினைப் படிக்கப் போகிறோம். அப்பாவினைத் துணிக்கும் தூக்கை எட்டாவது உறுப்பாக நிறுத்தி ஓதுவதற்கு என்னும் இயைபில்லையே. அதனால் மேலே தூக்கினை உணர்த்த வந்த ஏழு நூற்பாக்களும், இளம்பூரணர் கருதுகிறபடி, ஆசிரியப்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா என்னும் பாக்கள் முறையே அகவலோசை செப்பலோசை

துள்ளலோசை தூங்கலோசை செப்பலும் அகவலும் கலந்த கலப்போசை என்னும் இவ்வோசைகளைப் பெற்றுவரும் என்பதை உணர்த்துதற்கு வந்தன என்றே கொள்ளவேண்டும்.

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியரும் "செப்பல் இசையன வெண்பா" என்னும் நூற்பாவுரையில் "பிறரும் வெண்பாவிற்கு ஓசை இவ்வாறே கூறினார்" என்று கூறி,

அகவல் என்ப தாசிரி யம்மே
அதாஅன் றென்ப வெண்பா யாப்பே

என்றார் தொல்காப்பியனார் என்று தூக்கினை உணர்த்தும் இந்நூற்பாக்களையே எடுத்துக் காட்டியுள்ளார். எனவே தூக்கென்னும் உறுப்பு ஆசிரியப்பா முதலானவற்றுக்குரிய ஓசையை உணர்த்துமேயானால் பா என்னும் உறுப்பு எவ்வாறு வரும் என்று வினா எழுகின்றது.

பா என்னும் உறுப்பு

தொல்காப்பியர் 'பா' என்னும் உறுப்பினை, "ஆசிரியம் வஞ்சி" (101) என்னும் நூற்பாவிலிருந்து, "கூற்றும் மாற்றமும்" (149) என்னும் நூற்பா வரை உள்ள நாற்பத்தொன்பது நூற்பாக்களால் கூறிச் செல்கின்றார். இங்கே கூறப்படும் செய்திகள் அனைத்தும் பா என்னும் உறுப்பினுக்குரிய செய்திகளாகும். பேராசிரியர் இந்த நாற்பத்தொன்பது நூற்பாப் பொருள்களெல்லாம் பா என்பதற்குரியவென்று கருதாமல் மிக எளிதாகப் 'பா' என்பது பரந்துபட்ட ஓசை என்று கருதிவிட்டார். இவர் கூறுகின்ற ஓசை என்பது எட்டாவது உறுப்பாகிய தூக்கென்பதே என்னும் செய்தி மேலே கூறப்பட்டது. இனிப் 'பா' என்னும் உறுப்பினைப் பற்றி ஆராய்வோம்.

'பா' என்னும் .உறுப்பினைப் பற்றிக் கூறத்தொடங்கிய தொல்காப்பியர் முதற்கண்,

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே (101)

என்ற நூற்பாவினை ஓதியுள்ளார். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் "நிறுத்த முறையானே பாவாமாறு உணர்த்து

வான் எடுத்துக் கொண்டார். அவை இனைத்தென வரை யறுத்துதல் நுதலிற்று" என்று கருத்துக் கூறிவிட்டு, "ஆசிரிய மெனவும் வஞ்சி எனவும் கலி எனவும் நான்கு இயல்பினை யுடைத்து என்று சொல்வர் பாவினது வகையை விரிக்கு மிடத்து என்றவாறு" என்று பொழிப்புரை கூறியுள்ளார். எனவே இத்தொடக்க நூற்பா 'பா' என்னும் உறுப்பு பரந்துபட்ட ஓசையையுடையது என்று கூறாமல் அது நான்கு பகுப்பினையுடையது என்னும் செய்தியையே நமக்குக் குறிப்பிடுகின்றது. இதனை அடுத்த நூற்பா,

அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப (102)

என்னும் நூற்பாவாகும். இந்த நூற்பாவினை ஆழ்ந்து கருதிப் படிக்கவேண்டும். இதன் உரை வருமாறு: பா என்பது ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலி என்னும் அந் நிலை மருங்கினவாய் வரும்பொழுது அப் பாக்கள் அறம் முதலிய மும்முதற் பொருட்கும் உரியனவாய் அவற்றினைப் பாவி (பொருந்தி) வரும்" என்பதாம்.

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியரும் "செய்யுள் தாமே" என்னும் நூற்பா உரையில் "அறம் பொருள் இன்பம் வீடு என இவற்றைப் பாவி நடத்தலின் பா என்பதும் காரணக்குறி" என்று கூறுகிறார். (யா - வி - கழகப்பதிப்பு. பக். 211) யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியரும் "இனி எழுத்து முதலாகிய எட்டினையும் காரணக் குறியான் வழங்குமாறு, என்று கூறிவிட்டு "எழுதப்படுதல் எழுத்தே" என்ற நூற்பா வொன்றினைக் காட்டுகின்றார். அந்நூற்பாவும் "பாவி நடத்தலில் பாவே" என்று கூறுகிறது. பாவுதல் வினைக்கு அறம் முதலான முதற் பொருள்கள் செயப்படு பொருளாதல் வேண்டும்.

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் மேலும் "வெண்பா ஆசிரியம் கலியே வஞ்சியெனப் பண்பாய்ந் துரைத்த பாநான் காகும்" என்னும் நூற்பா வுரையில்,

அறமுதனான் கென்றும் அகமுதனான் கென்றும்
திறனமைந்த செம்மைப் பொருண்மேல் - குறைவின்றிச்

செய்யப் படுதலால் செய்யுள்; செயிர்தீரப்
பையத்தாம் பாவுதலாற் பா

என்னும் பாட்டினைத் தந்து "இதனைப் பிரித்து உரைத்துக் கொள்க" என்று எழுதியுள்ளார். மேற்கண்ட பாட்டின் பிரித்துரை வருமாறு: அறம் பொருள் இன்பம் வீடு என்றும், அகம் புறம் அகப்புறம், புறப்புறம் என்றும் கூறப்படும் கூறுபாடமைந்த நல்ல பொருள்கள் மேல் குறைவின்றிச் செய்யப்படுவன செய்யுளாம். குற்றம் நீங்க மேலே கூறிய நான்கு நான்கான பொருண்மேல் பாவி நடத்தலால் பா வாகும்' என்பதாம்.

நன்னூலாசிரியரும்,

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

என்று கூறுதலைக் காண்க. செய்தல், பாவுதல் என்ற வினைக்கு அறம் முதலான பொருள்கள் அல்லது அகம் முதலான பொருள்கள் செயப்படு பொருளாகும். எனவே செய்யப்பட்டது செய்யுள் பாவியது பா அல்லது பாட்டு என்று ஆகும்.

இக்கருத்தினை உட்கொண்ட தொல்காப்பியர் பா என்பது ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலி என நான்காய்வரும் என்று கூறி, அப் பா நான்காக வரும் அந்நிலை மருங்கில் அறம் முதலான பொருள்களுக்கு உரியனவாய் வரும் என்றனர். எனவே பொருளுக்கு இடனாகப் பொருளைப் பாவி வருவது பாவிற்கு இலக்கணம் ஆயிற்று. மும்முதற் பொருளைப் பாவி வருதலாகிய இச்செய்தி வேறு எந்த உறுப்பிற்கும் உரியதாக ஓதப்பெறவில்லை. பா என்னும் உறுப்பிற்கு உரியதாகவே ஓதப்பட்டுள்ளமையைக் காண்க.

யாப்பு என்னும் உறுப்பு எழுத்து முதலா ஈண்டிய அடியில் குறித்த பொருளை முடிய நாட்டுதலாகும். பா என்பது பொருள்களைப் பாவி நடப்பதாகும்.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் மருட்பாவினைப் பற்றி எழுதும் பொழுதும், "கங்கை யமுனைகள் சங்கமம்

போலவும், சங்கர நாராயணரது சட்டகக் கலவியே போலவும் வெண்பாவும் ஆசிரியமுமாய் விராஅய்ப் புறநிலை வாழ்த்து முதலாகிய பொருள்கள் மேல் யாப்புற்று மருட்சி உடைத் தாகப் பாவிநடத்தலின் மருட்பா என்று வழங்கப்படும் என்பாரும் உளர்" என்று கூறியிருத்தலையும் காண்க.

காரிகை முதலியன

காரிகை என்னும் யாப்பிலக்கண நூல் செய்யுட்குரிய எழுத்து அசை சீர் தளை அடி தொடை என்னும் ஆறு உறுப்புக்களையும் முறையே உறுப்பியலில் உணர்த்துகின்றது. பின்னர் பாவையும் இனத்தையும் செய்யுள் இயலில் உணர்த்துகின்றது. அவ்வியலில் பாவையும் இனத்தையும் உணர்த்தத் தொடங்கும் பொழுது பாவும் இனமும் பாடு பொருளைப் பாவிவரும் என்று கூறுதல் வேண்டும். அந்நூல் அவ்விடத்தும் பிறவிடத்தும் பாக்கள் பாடு பொருளைப் பாவிவரும் என்று கூறவேயில்லை. ஆனால் மருட்பாவிற்கு இலக்கணம் கூறும்பொழுது மட்டும்,

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை ஊனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றாய்
வண்பான் மொழிமட வாய்மருட் பாடெவனும் வையகமே

என்று மருட்பா இன்ன இன்ன பொருளில் வரும் எனக் கூறுகிறது.

யாப்பருங்கலம் என்னும் யாப்பிலக்கண நூலும் காரிகையைப் போலவே செய்யுள் உறுப்புக்களையெல்லாம் உறுப்பியலில் கூறிவிட்டுப் பாவையும் பாவினத்தையும் செய்யுளியலில் கூறுகின்றது. அந்நூலும் பாக்கள் பாடு பொருளைப் பெற்றுவரும் என்று கூறவேயில்லை. ஆனால் உரையாசிரியர் மட்டும் பா என்பதன் காரணத்தை உணர்த்தும் பொழுது அறம் முதலான பொருள்களைப் பாவிநடத்தலால் பா என்பதும் காரணக்குறி என்றனர்.

பாடுபொருளைக் கருதாமல் யாப்பிலக்கண நூல்கள் எழுந்துள்ளனவே என்று இச்செய்தியை ஓர் அறிஞரிடம்

நான் கூறியபொழுது பாட்டென்றால் ஏதாவது பொருள்கள் மேல் பாடத்தானே போகிறோம்; அதனால் பாக்கள் பாடுபொருளைப் பெற்றுவரல் வேண்டும் என்று செய்தி கூறவேண்டுவதில்லை என்றார். உலக வழக்கிலே வழங்கும் சொல்லும் செய்யுள் வழக்கிலே வழங்கும் சொல்லும் பொருள் குறித்து வரும் என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி யாயினும் இலக்கணம் எழுதுபவர் இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும் உணர்த்தி நிற்பது சொல் என்று கூறத்தான் வேண்டியுள்ளது. தொல்காப்பியரும் சொல்லதி காரத்திலே எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று பொதுவாகவும் ஓதியுள்ளார்.

செய்யுளும் பாட்டும்

தொல்காப்பியர் வழங்குகிற செய்யுள் என்னும் சொற்கும் பிற்காலத்தார் வழங்குகிற செய்யுள் என்னும் சொற்கும் வேறுபாடு உண்டு. தொல்காப்பியர் பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும், பிசியும், அங்கதமும், முதுசொல்லும் ஆகிய ஏழினையும் செய்யுள் என்பர். செய்யுளில் பாட்டு என்பது ஒரு பிரிவாகும் தொல் காப்பியர்க்கு.

பிற்காலத்தார் பாக்களையும் இனத்தினையும் செய்யுள் அல்லது பாட்டு என்பர். காரிகை ஆசிரியர் "யாப்பும் பாட்டும் தூக்கும் தொடர்பும் செய்யுளை நோக்கின் றென்ப நுணங்கி யோரே" என்றொரு நூற்பாவினைக் காட்டுகிறார்.

பிற்காலத்தார் யாப்பிலக்கண நூலில் செய்யுளியல் என்ற இயலினை வகுத்துக் கொண்டு அங்கு கூறப்படும் செய்தியினையே தொல்காப்பியர் செய்யுள் இயலில் பா என்னும் உறுப்பில் கூறுகின்றார்.

9

செய்யுள் வழக்கு

தோற்றுவாய் - மொழி வழக்கு இருவகை

உலக வழக்கும் செய்யுள் வழக்கும் என மொழியின் வழங்குகள் இரு வகைப்படும். இவ்விருவகை வழங்குகளை "செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்" (தொல். எச்சவியல் - 67) "கிளந்த வல்ல செய்யுளும் திரிநவும் வழக்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்" என்று (குற்றியலுகரம் - 77) தொல்காப்பியம் குறிப்பிடுவதைக் காணலாம். இவ் விரண்டால் உலகவழக்கென்பது பேச்சு வழக்காம். ஒருவன் பேசத் தொடங்கிய காலத்திலிருந்து தன்னைச் சார்ந்துள்ள மக்கள் பேசும் வகையினைக் கேட்டுக் கேட்டுத், தன் உள்ளத்திலே பதியவைத்துக் கொள்கிறான். வேண்டிய பொழுது அம்முறைப்படி பேசத் தொடங்குகிறான். பேச்சு வழக்குத் தோன்றுதற்குரிய இடம் பேசுமவன் வாழுமிடத்தின் சுற்றுச் சார்பும், அவனுடைய உள்ளமுமாகும். உலகவழக்கு பேச்சுவடிவத்திலிருக்கும். செய்யுள் வழக்கு எழுதப்பட்ட ஏட்டு வடிவத்திலிருக்கும். பேச்சு வழக்குப் பேசுபவன் வாழும் காலம் வரையிருக்கும். ஏட்டு வழக்கோவெனின் வெகுகாலம் வரை வாழ்ந்திருக்கும்.

செய்யுள் வழக்கு

மேலே கூறிய இரண்டில் செய்யுள் வழக்கினை ஆராய்வோம். தன் கருத்தைப் பிறர்க்கு உணர்த்தவும் பிறர் கருத்தைத் தான் உணர்ந்து கொள்வதற்கும் மொழி கருவியாகும். அங்ஙனமாயின் பேச்சுவழக்கு செய்யுள் வழக்கு என்னும் இரண்டிற்கும் கருத்துணர்வே முக்கியப் பொருளாக உள்ளது. கருத்துணர்வைப் பொருளுணர்ச்சி என்றும் கூறலாம்.

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

என்னும் நன்னூல் நூற்பா (267) இருவகை வழக்கில் செய்யுள் வழக்கினைச் செப்புகிறது. பலவகைத் தாதுப்

பொருளால் அமைந்த உடம்பு உயிர்க்கு இடமாக இருத்தல் போல, பலவகைச் சொல்லால் பொருளுக்கு இடனாக, அறிவினில் வல்லவர் அழகுபெறச் செய்வன செய்யுளாம், என்று மேல் நூற்பா கூறுகின்றது.

உலக வழக்காகிய பேச்சு மொழியைப் பேச ஊமையன் நீங்கலாக எல்லா மக்களும் உரியவராவார். ஆனால், செய்யுளைச் செய்ய உணர்வினில் வல்லவர் வேண்டும். அத்தகைய அறிஞர் பல சொற்களைக் கொண்டு செய்யுள் செய்கின்றனர். அவர் உணர்த்த வேண்டும் பொருள்களை அச்செய்யுளில் அமைப்பர். பலவகைச் சொல்லால் பொருளுக்கு இடமாகச் செய்யுள் செய்யும் பொழுது அதனை அழகுபடச் செய்வர். எனவே, செய்யுள் செய்வதற்கு அறிவினில் வல்லவரும், பலவகைச் சொற்களும், உணர்த்தும் பொருளும், அழகுபட உணர்த்தும் முறையும் ஆகிய நான்கும் வேண்டுவனவாம்.

செய்யுள் திறனாய்வு செய்பவர் அல்லது இலக்கியத் திறனாய்வு செய்பவர் ஆக்கியோன், சொல்லமைப்பு, பொருளமைப்பு, உணர்த்தும் முறை ஆகிய நான்கு பாகுபாடுகளைச் செய்து கொண்டு திறனாய்வு செய்ய வேண்டும் என்பதை, மேலே காட்டிய நன்னூல் நூற்பா உணர்த்துகிறது.

ஆக்கியோன் அல்லது ஆக்குவோன்

மேற்கூறிய நான்கு பாகுபாட்டில் முதலாவதாக நிற்கும் ஆக்கியோனைப் பற்றி ஆராய்வோம். நன்னூல் நூற்பா செய்யுளைச் செய்வோனை 'உணர்வினின் வல்லோன்' என்று குறிப்பிடுகின்றது. இச்சொல் புலமையுடையவனைக் குறிப்பதாகும். தமிழ் நூல்கள் கவி', கமகன், வாதி, வாக்கி என்னும் நான்கும் புலமைக்கியல்பு எனப் புகலுகின்றது.

---

1. **கவியே கமகன் வாதி வாக்கியென்**
றிவையொரு நான்கும் புலமைக் கியல்பே
(3 - 49) பிங்கலம்

அப்புலமையுடையார் புலவராவார். அவருள் கவி செய்வோர் கவிஞர் என்று வழங்கப்படுவார். அரிய பொருளை எளிய நடையில் உரைப்பவர் கமகன் என்று கூறப்படுவான். மேற்கோளும் ஏதுவும் எடுத்துக் காட்டித் தன் கொள்கையை நிலைநாட்டிப் பிறர் கொள்கையை மறுப்பவன் வாதி[2] எனப்படுவான். அறம் பொருள் இன்பம் வீடெனும் உறுதிப் பொருள்களை உலகமக்கள் விரும்பிக் கேட்டுப் பயனடையுமாறு சொற்பொழிவாற்றும் திறம் படைத்தவன் வாக்கியாவன்[3]. அவர்களுள் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கு வகைப் பாடல்களைப் பாடுவோன் கவிஞன், பாவலன் என்று கூறப்படுவான். அக்கவிஞருள் ஒருவன் இன்னபொருளில் இன்ன பாவில் இன்னவாறு பாடுக எனக் கூறியவுடன் அவன் கேட்டுக் கொண்டவாறு விரைந்து பாடுவோன் ஆசுகவியாகும். பொருட்பொலிவும் சொல்திறனும் தொடையும் தொடை விகற்பமும் பொருந்தி நிற்க உருவகம் முதலிய அலங் காரத்தோடு ஓசைப் பொலிவுடைத்தாய் உய்த்துணர் வோர்க்கு அமிழ்தம்போல் இனிக்குமாறு பாடவல்லவன் மதுரகவியாகும். மாலைமாற்று முதலிய சித்திர கவிகளைப் பாடுவோன் சித்திர கவியாகும். சிற்றிலக்கியம் பேரிலக்கியம் முதலான இலக்கியங்களையெல்லாம் விரித்துப் பாட வல்லோன் வித்தாரகவி அல்லது அகலக்கவி யாகும். புலமையுடையவரை இவ்வாறு பலவகையினராகத் தோன்று

---

1. ஞாபகம் செம்பொருள் நடையினெப் பொருளும்
காசின் றுரைப்போன் கமக னாவான்
(51 - 3) பிங்கலம்

2. ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டித்
தன்கோ ணிறீஇப் பிறர்கோண் மறுப்போன்
மன்பதை மதித்த வாக்கி யாகும்
(52 - 3) பிங்கலம்

3. அறம் பொருள் இன்பம் வீடெனும் திறங்கள்
கேட்க வேட்க இனியன கூறும்
ஆற்ற லுடையான் வாக்கி யாகும் *(52 - 3) பிங்கலம்*

மாறு தமிழ்நூல்கள் கூறினாலும் மேற்கூறப்பட்ட பலவகை இயல்பும் ஒருங்கமையப் பெற்ற சிறந்த புலவர்களும் வாழ்ந் திருக்கின்றனர். தனி இயல்பு வாய்ந்த புலவர்களும் இருந் திருக்கின்றனர். இப்புலமையுடையவரை மேலோர், பண்டிதர்[1], புலவர், ஆசிரியர், புந்தியர், மேதையர் என்னும் பெயரால் அழைப்பர். இவரின் மேலான அறிஞர் அல்லது அறிவரை ஆன்றோர்[2], சான்றோர் என்று கூறுவர்.

புலமைக்கும் அறிவிற்கும் நுட்பமான வேறுபா டொன்றினைக் கற்றோர் கூறுகின்றனர். நிகழ்வில் புலப்படு மவற்றை மட்டும் உணர்தல் புலமையென்பதும், முக்காலச் செய்திகளை உணர்தல் அறிவுடைமை என்பதும் அவ்வேறு பாடாகும். இவ்வறிவுடையவரைப் புலவர், அறிவர் என்று வழங்குவர். தொல்காப்பியர் அறிவன் இலக்கணத்தை,

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியில் ஆற்றிய அறிவன் தேயமும்

என்று கூறியுள்ளார். இந்நூற்பாப் பகுதிக்குக் 'காமம்' வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வுமென்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைத்த முழுதுணர்வுடையோன் பக்கமும்" என்று உரை கூறி, அகத்தியர் முதலானவரை உதாரணமாகக் காட்டுவர், நச்சினார்க்கினியர். இலக்கியங்களைப் படைக்கும் ஆசிரியன் கவி, கமகன், வாதி, வாக்கியாகவும் இருக்கலாம். ஆசு மதுர சித்திர வித்தாரப் புலவனாகவுமிருக்கலாம். இவர்களில் மேலான அறிவனாகவும் இருக்கலாம்.

நெஞ்சில் ஒளியில்லாத புலவர் பாடல்

முற்காலத்தே யாப்பிலக்கணம் கற்பதும் அவ்விதிப்படி செய்யுள் இயற்றுவதும் அரிய செய்கையாகவே கருதப்

---

1. மேலோர் பண்டிதர் புலவர் ஆசிரியர்
   புந்தியர் மேதையர் புலமை யோரே
   (123 - 5 - பிங்கலம்)

2. ஆன்றோர் சான்றோர் அறிஞர்தம் பெயரே
   (124 - 5 - பிங்கலம்)

பட்டன. இக்காலத்தே உரைநடை எழுதுவதை விடக் கவி பாடுதல் மிக எளிமையாகக் கருதப்பட்டுச் சொல் முடிவு இல்லாமலும் அசை அமைப்பு சீரமைப்புகளைக் கருதாமலும் தொடையும் தொடை விகற்பமும் அமையாமலும் பாட்டியற்றுவோர் பல்கியுள்ளனர். பாட்டு எவ்வாறு இருப்பினும் அதில் அமைந்துள்ள பொருள் சிறப்பாக அமைவதில்லை. காரணம் என்னையெனின்? பாடுகின்றவன் உள்ளம் தூய்மையாக ஒளிபடைத்ததாக இருப்பதில்லை. அதனால் அவனுடைய பாடல் உலகிற்கு நலம் பயப்பதாக அமைவ தில்லை. திருவள்ளுவர், "மனத்தூயார்க் கெச்சம் நன்றாகும்" மனம் தூயவர்க்கு எஞ்சிய சொல்லும் செயலும் நன்றாகும் என்று கூறுகிறார். பாரதியார் "உள்ளத்தில் ஒளியுண்டானால் வாக்கினில் ஒளியுண்டாகும், வாக்கினில் ஒளியுண்டாகின் அவ்வாக்கிலிருந்து கவிதை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். அந்நிகழ்ச்சியால் தாழ்ந்த உலகம் உயர்ந்து வாழும் என்று கூறுகின்றார். தீய உள்ளம் படைத்தவர் தமிழ்ப் பாட்டைப் பாடுதல் நன்றன்று என்பதைப் பிற்காலப் புலவர் ஒருவர்,

சீற்றம் காமம்அழுக்காறு சிறந்து நிற்க மனத்திற்கண்,
ஏற்ற பொய்யும் கடுமொழியும் இகழ்ந்து கூறும் தீச்சொல்லும்
மாற்ற முரைக்கும் நாவதனில் மண்டிக் கிடக்கும் மாண்பில்தோய்
நாற்றம் வீசும் நின்வாயால் நல்ல தமிழைக் கூறாதே

என்று பாடியுள்ளதைக் காண்க.

சொல்லமைப்பு

மாத்திரை வகையால் எழுத்தும், எழுத்தால் அசையும், அசையால் சீரும், சீரால் அடியும், அடியால் பாட்டும் தோன்றும். இலக்கண முறைப்படி அமைந்த இப்பாடலில் நல்ல ஓசையின்பத்தினைக் காணலாகும். அதுபோல், எழுத்தால் தனிமொழியும், தனி மொழிச்சேர்க்கையால் தொடர்மொழியும், பல தொடர்மொழிச் சேர்க்கையால் செய்யுளும் தோன்றுகின்றது. இலக்கண முறைப்படிச் சொல்லமைந்த இப்பாடலில் பொருள் இன்பத்தைக் காணலாகும். செய்யுள் தோன்றுவதற்குச் சொற்கள் கருவியாக

இருத்தலால் அவை செய்யுட்கு உடலுறுப்புப் போன்றவை என்பதை மேற்காட்டிய நன்னூல்[1] நூற்பாவால் உணர்ந்துள்ளோம்.

"சொற்களை உடலாகவும் உணர்த்தும் பொருளை உயிராகவும் வண்ணங்களை (ஓசையை) உடம்பின் நிறமாகவும் நடையைச் (செய்யுள்நடை) செல்வமாகவும் பெற்ற செய்யுளாகிய மனிதனுக்கு அலங்காரமானவை ஆடை அணிகளைப் போன்றன" என்று வீரசோழியம் விளம்புகின்றது.

தொல்காப்பியம் இயல்பாகிய[3] சொல்லும் (இயற்சொல்), திரிந்துவரும் சொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லும் என்று கூறப்படும் அந்நான்கும் செய்யுள் செய்வதற்குரிய சொல்லாகும் என்று கூறுகின்றது. நால்வகைச் சொல்லும் செய்யுள் செய்வதற்குரிய சொல்லாயினும் செய்யுள் செய்வதற்கு இயற்சொல்லே மிகச் சிறந்ததென்பதும் அடுத்துத் திரிசொல்லும் ஆகும் என்பதும், திசைச்சொல்லும் வடசொல்லும் சிறுபான்மை ஆகும் என்பதும் முறைவைப்பால் உய்த்துணரப்படும்.

தொல்காப்பியம் செய்யுளியலில்,

மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று

என்றொரு நூற்பா இருக்கின்றது. இது செய்யுட்குக் கூறிய முப்பது நான்கு உறுப்புள் மரபென்னும் உறுப்பைக் கூறவந்ததாகும். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், "குறித்த

---

1. நன்னூல் - 398
2. உரையுட லாக உயிர்பொரு ளாக உரைத்தவண்ணம்
   நிரைநிற மாநடை யேசெல வாநின்ற செய்யுட்களாம்
   தரைமலி மானிடர் தம்மலங் காரங்கள்
   (வீரசோழியம் - 143)
3. இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
   றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே
   (சொல்லதிகாரம் - 391)

பொருள் முடிவு பெறுமாறு சொல் தொடுக்குங்கால், இயற் சொல்லாகிய பெயர் வினை, இடை உரியானும், திணை வழு முதலான எழுவகை வழுவும் படாமல் அப்பொருளைப் புணர்ப்பது" என்று கூறி, "அவற்றுள் இயற்சொல் மரபாவது சொல்லதிகார இலக்கணத்தோடு பொருந்துதல். திரிசொல் மரபாவது தமிழ்நாட்டகத்து தத்தமக் குரித்தாக வழங்கும் மரபு. திசைச்சொல் மரபாவது செந்தமிழ் சூழ்ந்த பன்னிரு நிலத்தினும் வழங்கும் மரபு. வடசொல் மரபாவது திரிந்தவகையாகி சொல் மரபு" என்று கூறி, "யாதானும் ஒரு செய்யுள் செய்யுங்காலத்துப் பொருளுணர்த்தும் சொற்கள் இவையாதலின், இவை ஒரு பொருட்கண் வாராமையான் அவற்றை அவ்வம் மரபினாற் கூறுதலும், ஒருமை பன்மை மயங்காமையும், பெயரும் வினையும் முடிவு பெறக் கூறுதலும் வேண்டுதலின் மரபென்னும் இவ்வுறுப்பும் செய்யுட்கு வேண்டுவதாயிற்று" என்று கூறியுள்ளார்.

பேராசிரியர் மேற்கண்ட நூற்பாவிற்கு வேறுபடப் பொருள் கூறியுள்ளனர். அவர் கூறுவது வருமாறு:- "அங்ஙனம் கூறப்பட்ட மரபுதானும், பெயர்ச்சொல், வினைச் சொல் இடைச்சொல், உரிச்சொல் அல்லது இயற்சொல் திரிசொல், திசைச்சொல் வடசொல்லென்னும் நான்கு சொற்களையும் உலகத்தார் வழங்கும் வழக்கு, வடிவினான், மேல் நூற்பாவில் பகுத்த பாட்டு, உரை, நூல், வாய்மொழி பிசி அங்கதம் முதுசொல் என்னும் யாப்புவழிப் பொருத்த முடைத்தாக அமைப்பது" என்னும் உரைகூறி, "வழக்கின்கண் வழங்குகின்றபடியே செய்யுளின்கண்ணும் அச்சொற்களை யாத்தல்வேண்டும்" என்றனர். அவர் மேலும், "எனவே சொல்லும் பொருளும் அவ்வக்காலத்தார் வழங்குமாற்றானே செய்யுள் செய்க" என்பதாயிற்று என்பர்.

நச்சினார்க்கினியர் பேராசிரியரையே பின்பற்றி "மரபென்ற உறுப்புத்தானும் நான்கு சொல்லையும் உலகத் தோர் எழுவகை வழுவும் படாமல் வழங்குகின்ற வழக்கு வழுவாதனவாய் அமைய, முற்கூறிய யாப்பின் வழியிலே பொருத்தமுடையனவாய்க் கிடப்பனவாம் என்று கூறி,

இந்நான்கு சொல்லானும் காலந்தோறும் இடந்தோறும் வழங்குகின்ற வழக்கும் செய்யுளும் இடை தெரியாமல் தொடர்புபடுத்தி முறை பிறழாமல் செய்யுள் செய்க" என்பர். அவர் மேலும், "ஒரு காலத்து வழங்கிய சொற் களும் பொருள்களும் அணிகளும் கோலமும் முதலியன ஒரு காலத்து வழங்காதனவுமுள. வழங்கும் காலமும் இடமும் பற்றி ஏற்றவாற்றாற் செய்யுள் செய்க என்றவாறு, இனித் தமிழ் நூற்கண் வழுவமைத்தவாறன்றி, ஆரியமும் பிறபாடை மாக்களும் தாம் வேண்டுமாற்றால் தமிழ்ச் செய்யுள் செய்தல் மரபன்று என்றுணர்க" என்பர்.

வீரசோழியம் என்னும் இலக்கண நூல், "உலக[1] வழக் கோடு பொருந்தியதாயும், வடமொழி எழுத்துடன் பொருந் தாமலிருப்பதாயும், தேர்ந்துணர்பவர்க்கு இனிமையைத் தருவனவாயும், சான்றோரால் தம் செய்யுளுள் எடுத்தாளப் பெற்றுள்ளதாயும், முறையே பொருளைக் கருதியுணரப் படுவதாயும் உள்ளசொற்களே செய்யுளுக்குக் குற்றமற்ற உறுப்பாகும்" என்றும், "நன்முறையில்[2] வழங்கப்படாதன வாயும், தேர்ந்துணர்வார்க்கு இன்பம் செய்யாதனவாயும், வடமொழி எழுத்தொடு பொருந்தியிருப்பனவாயும், சான் றோர் செய்யுளுள் பயிலாதனவாயும், பொருட்டெளிவினைத் தராதனவாயும் உள்ளசொற்கள் செய்யுட்குக் குற்றமுள்ள உறுப்பாகும்" என்று கூறுகின்றது.

சொற்றொடர்களைத் தனித்தனி நோக்கப் பொரு ளுடையனவாயிருந்து கூட்டி நோக்கப் பொருளுணர்த்

---

1. சார்ந்த வழக்கொடு தப்பா வடவெழுத் தைத்தவிர்த்து தேர்ந்துணர் வார்க்கும் இனிமையைத் தந்துசெய் யுட்களினும் நேர்ந்து சொலப்பட் டுயர்ந்தவ ராள்நிர லொருபொருளை ஓர்ந்து கொளப்படும் சொல்குற்ற மற்ற உறுப்பென்பரே *(143)*
2. நெற்றி வழக்கொடு தேர்ந்துணர் வார்க்கின்பம் செய்யலின்றிப் பற்றி வடநூ லெழுத்துக்க ளோடு பயின்றுரைப்பின் மற்றிவை யில்லென்று வாங்கவும் பட்டுப் பொருள்மருண்டிப் பெற்றி யுடைச்சொல் பழித்த உறுப்பென்று பேசுவரே

தாததாகிய பிரிபொருட் சொற்றொடரும், முன்மொழிந்த சொற் பொருளோடு பின்மொழியும் சொற்றொடர் ஒன்றாமலிருப்பதாகிய மாறுபடு பொருண்மொழியும், முன்னே கூறியவதனையே மீண்டும்ம கூறி அதனால் வேறொரு பொருளைத் தராதாகிய மொழிந்தது மொழிவும், ஒரு பொருளைத் தெளிவாக உணர்த்த வேண்டிய இடத்தில் பலபொருள் தருமாறு கூறும் கவர்படு பொருண்மொழியும் ஆகாத சொற்றொடர்களென்று தண்டியலங்காரம் கூறும்.

இதுவரை கூறியவையெல்லாம் சொல்லமைப்புப் பற்றிய செய்தியாகும். இனிச் செய்யுட்கு உயிர் என்று கூறும் பொருளமைப்பைப் பற்றி ஆராய்வோம்.

பொருளமைப்பு

செய்யுளுக்குப் பொருள் அமைப்பு உயிராகும் என்னும் செய்தி முன்னரே கூறப்பட்டது. 'பல்வகைத் தாதுவின்' என்னும் நன்னூல் நூற்பாவுரையுள் பொருள் என்றது அகம், புறம் என்று இரண்டு கூறாக இருக்கும் என்பர் சங்கர நமச்சிவாயர். இளம்பூரணர் தொல்காப்பியப் பொருளதிகாரத் தொடக்கத்தே, "பொருள் என்பது யாதோவெனின்? மேலதிகாரத்தே இலக்கணம் கூறப்பட்ட சொல்லால் உணரப்படுவது. அது முதல் கரு உரி என மூவகைப்படும். முதற் பொருளாவது நிலமும் காலமும் என இருவகைப்படும். நிலம் எனவே நிலத்திற்கு முதலாகிய நீரும் நீர்க்கு முதலாகிய தீயும், தீக்கு முதலாகிய காற்றும், காற்றிற்கு முதலாகிய ஆகாயமும் பெறுதும். காலமாவது மாத்திரை முதலாக நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயனம், யாண்டு, உகம் எனப் பலவகைப்படும். கருப்பொருளாவது இடத்தினும் காலத் தினும் தோற்றும் பொருள். அது தெய்வம் உணா முதலியன. உரிப்பொருள் மக்கட்கு உரிய பொருள். அஃது அகம் புறம் என இருவகைப்படும். அகமாவது புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவும் கைக்கிளை பெருந்திணை எனவும் ஏழுவகைப்படும். புறமாவது நிரை கோடற் பகுதியாகிய வெட்சியும் பகைவர் மண் மேற் சேறலாகிய வஞ்சியும், எயில் வளைத்தலாகிய மருதமும்,

இருபெரு வேந்தரும் மைந்து கருதி ஒரு களத்துப் பொருத லாகிய தும்பையும், வென்றி வகையாகிய வாகையும் நிலையாமை வாகையாகிய காஞ்சியும் புகழ்ச்சி வாகையாகிய பாடாண் திணையுமென ஏழுவகைப்படும்.

அஃதற்றாக, அறம், பொருள், இன்பம், வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற பொருள் யாதனுள் அடங்கும் எனில்? அவையும் உரிப்பொருளினுள் அடங்கும். அஃதற்றாக, இது பொருளதிகாரமாயின் உலகத்துப் பொரு ளெல்லாம் உணர்த்தல் வேண்டுமெனின் அது முதல் கரு உரிப்பொருள் எனத் தொகை நிலையால் அடங்கும்" என்பர்.

பாக்களில் அமைக்கும் பொருள்

அன்றியும், தொல்காப்பியர், செய்யுளியலில், "ஆசிரியம் வஞ்சிவெண்பாக் கலியென நாலியற் றென்ப பாவகை விரியே" என்று நான்கு பாக்களைக் குறிப்பிட்டு, "அந்நிலை மருங் கின் அறுமுதலாகிய, மும்முதற் பொருட்கும் உரிய என்ற" என்னும் நூற்பாவால், அப் பாக்கள் நான்கும் பொதுப்பட நின்றவழி, அறம் பொருள் இன்பம் (வீடு கூறப்படவில்லை) என்னும் மூன்று முதற் பொருட்கும் உரிய என்பர்.

காமம் எல்லாப் பொருள்கட்கும் முதல்

தொல்காப்பியர் பொருளதிகார முகப்பில் அகத்திணையை வைத்து, அவ்வியல் முகப்பில் கைக்கிளையும் ஐந்திணையும் பெருந்திணையும் என அகத்திணை ஏழு வகைப்படும் என்று கூறியுள்ளார். அவற்றுள் கைக்கிளை என்பது, தலைவன் தலைவி என்னும் இருவருள் ஒருவர் மட்டும் அன்பு செய்கின்ற ஒருபாற் காமமாகும். காமம் நுகர்வதற்குரிய பருவம் நிரம்பாத இளமையானவரிடத்தே நிகழும் காமமும் அதன்பாற்படும். ஐந்திணை என்பது தலைவன் தலைவி என்னும் இருபாலாரும் ஒருவரை ஒருவர் விரும்புகின்ற அன்புடைக் காமமாகும். காமம் நுகர்வதற்குரிய பருவம் நிரம்பியவரிடத்தே இது நிகழ்வதாம். பெருந்திணை என்பது பொருந்தாக் காமமாகும். இது

நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வரும் ஒவ்வாக் கூட்டமாகும். தலைமகன் முதியனாகித் தலைமகன் இளமையாதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மனம் நிகழ்தலன்றிக் காமத்தின் மேல் மனம் நிகழ்தலும், தேறுதலொழிந்த காமமும், மிக்க காமத்தின் மிடலும் ஆகிய இவையெல்லாம் பெருந்திணைப் பாற்படும்.

அவற்றுள் ஐந்திணை என்பது, நிலமும் காலமும் கருப்பொருளும் அடுத்துப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என உரிப்பொருள் வகையால் ஐந்தாகி, முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் எனப் பெயர்பெற்று நிற்கும். இவ்வேழும் அகத்திணைப் பொருளாம்.

அகத்திணைப் பொருளை நன்கு ஆராய்ந்து தெரிந்து கொண்டு புறத்திணையைக் காணப் புகுந்தால் அங்கே குறிஞ்சித்திணையின் புறமே மாற்றாரது ஆநிரை கொள்ளும் வெட்சித்திணை. முல்லைத்திணையின் புறமே மாற்றார் மண்கொள்ளும் வஞ்சித்திணை. மருதத் திணையின் புறமே மாற்றார்தம் மதிலைப்பற்றும் உழிஞைத்திணை. நெய்தல் திணையின் புறமே இரண்டு பேரரசரும் மைந்தினைக் கருதிப் போர்புரியும் தும்பைத்திணை. பாலைத் திணையின் புறமே அரசனுடைய வெற்றியையும் ஏனைய மக்களின் தொழில் வெற்றியையும் குறிக்கின்ற வாகைத்திணையாகும். பெருந்திணையின் புறமே உலகமக்களின் பல்வேறு நிலை யாமையைக் கூறும் காஞ்சித் திணையாகும். கைக்கிளையின் புறமே புகழ்ச்சி முதலானவற்றைக் கூறுகின்ற பாடாண் திணையாகும்.

இவ்வாறு தொல்காப்பியர் கூறும் கருத்தினை ஆராய்ந் தால் காமம் என்ற ஒன்றிலிருந்தே பலவகை அகப்பொருளும், புறப்பொருளும் தோன்றுகின்றன என்பது தொல்காப்பியர் கருத்தால் அறியப்படும். இப்பொரு ளெல்லாம் செய்யுட்குரிய பொருள்களே ஆகும்.

குற்றமில் பொருளும் குற்றமுடைடப் பொருளும்

கேட்பவர்க்கு இன்பத்தைத் தருவனவும், ஒவ்வொரு வரும் கருதும் கருத்திற்கியைந்த பொருளைத் தோற்றுவனவும் சான்றோர் கூறும் குற்றமில்லாதனவும் ஆன பொருள் செய்யுட்கு உயிராம் என்றும்[1], பொருள்[2] அறிவது அரிதென்று போமாறும், குற்றம் சொல்பவனது குற்றத்திற்கும் உரிய தாமாறும் முற்றுப் பொருளாகாமல் குறைப் பொருளாகக் கூறுவனவெல்லாம் பொருட்குற்றம் என்றும் வீரசோழியம் கூறும்.

குற்றமுடைடச் சொல்லாலும் குற்றமுடைடப் பொருளாலும் விளைபயன்

வீரசோழிய உரையாசிரியர் சொற்குற்றம் அமைந்த பாட்டினைப் பெற்ற தலைமகனுக்கு, சொல் உடலாதலின் உடலுக்கு ஊனமும், பொருட்குற்றம் அமைந்த பாட்டினைப் பெற்ற தலைமகனுக்கு, பொருள் உயிராதலின் உயிர்க்கு ஊனமும் உண்டாகும். அதனால் சொல்குற்றத்தை விடப் பொருட்குற்றம் தவிர்தல் சிறப்பென்றும் கூறுவர்.

இதுவரை செய்யுளில் வைக்கப்படும் பொருளைப்பற்றி ஆராய்ந்தோம். இனிப் புலவன் செய்யுளிடமாகப் பொருள்களே உணர்த்தும் முறையைப் பற்றி ஆராய்வோம்.

---

1. ஆக்குதல் கேட்டவர்க் கின்பத் தினையன்றி அவ்வவரே
போக்குதல் செய்த கருத்திற் பொருளாய்ப் புராதனரால்
நீக்குதல் செய்தகுற் றத்தைக் கடத்தல் நெறிமுறையே
தாக்குதல் செய்த பொருள்காண் சிறப்புயிர் தாழ்குழலே
(146 - வீரசோழியம்)

2. தெரிவான் அரிது பொருளெனப் போதல் சிதைவுசொல்லப்
புரிவான் பொருளுக்கு மேறுதல் மற்றும்பொருளுண்பெற்று
பரிவா னுடன் சொல்ல வேண்டுதல் என்றிந்தப் பாட்டில்
வைத்த
விரிவாம் பொருளென்னும் ஆவியின் குற்றம் விளங்கிழையே
(147 - வீரசோழியம்)

நான்காவது உணர்த்தும் முறை

உணர்வினில் வல்லவனாகிய புல்வன் பொருத்தமான நால்வகைச் சொற்களால் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இரண்டில் தான் விரும்பிய பொருளை உணர்த்தும் பொழுது அப்பொருளுக்கு இடமான செய்யுளை அணி பெறச் செய்யவேண்டும் என்று பவணந்தியார் பகர்வர். 'அணிபெறச்செய்வன' என்றதனால், அணி என்பது உவமை உருவகம் முதலிய அணிகளையும் குறிக்கும். அவற்றையன்றி அவ்வணிகளின் வேறாய்ப் பொருளை உணர்த்துகின்ற முறையினையும் குறிக்கும்.

உணர்த்தும் முறையும் உயிர்

வீரசோழியம், "செய்யுளுக்குச் சிறந்த பொருளே உயிராதலின், அப்பொருளையே தன்மை, உவமை, உருவகம் முதலான அணிகளாகச் சொல்லுக. சொல்லும் பொருளும் இளகித் தோன்றாமல், அவை முற்றிய பொழுதே, அச்செய் யுளில் வைத்த உவமை முதலான அணிகள் அணிகளாகத் தோன்றும். அல்லாதபொழுது அணிகளாகத் தோன்றா. என்போலவெனின், மூக்கும் கண்ணும் முதலிய உறுப்புக் குறைந்தாளும் சாகைக்கண் முதலிய உயிர் நோவுகளை உடையானாம் அணிகளால் விளங்காதவாறு போலக் கொள்க" என்று விளம்புகிறது.

மேலே கூறியவற்றால், உயிராகிய பொருள் வேறல்ல உணர்த்தும் முறையாகிய அணி வேறல்ல என்பது விளங்கும்.

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்

என்னும் திருக்குறளில் வந்துள்ள உவமை, தாழ்ந்தார் அவைக்கண் ஒருவழியும் சொற்களைச் சொல்லற்க என்ற பொருளை நன்கு உணர்த்துகிறது.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்

என்னும் திருக்குறளில் வந்துள்ள உருவகம் சினந்தவர்க்கு விளையும் தீங்கினைக் கூறுகிறது.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பெற

என்னும் திருக்குறளில் வந்துள்ள பிறிதுமொழிதல் என்னும் அணி பகைவர் தந்நிலத்தினில் வலியர் என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு அணிகளெல்லாம் பாட்டிற்கு உயிரான பொருளையே அழகுபட உணர்த்தலின், வீர சோழியம் "ஒப்பார் பொருளே உயிரானமையின் உரைத்த வற்றைத் துப்பார் அலங்காரமாகத் தொகுக்க" என்று சொன்னது ஏற்புடைத்தாதல் அறியலாம்.

இதனால், பொருள் உயிரன்றி அதனை உணர்த்து கின்ற முறையினையும் உயிரென்றல் பொருந்துமாறறிக.

10
எழுத்து

1. யாப்பருங்கல விருத்தி எழுதப்படுதலின் எழுத்தே என்று கூறும்,

2. எழுத்து என்பது அத்தொழிலை உணர்த்தின் இயற் பெயராம்.··'எழுத்தறியத் தீரும் இழிதகைமை யென' அத்தொழிற் பொருளை உணர்த்தின் ஆகுபெயராம் என்பர் மயிலைநாதர். (நன்னூல் - 289).

3. எழுதப்படுவது என்னும் பொருட்கள் 'எழுது' என்னும் முதனிலை உரிச்சொல்லின் முன்னர்ச் செயப்படு பொருண்மை உணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து "செய்யாய் என்னும் முன்னிலைவினைச் சொல்" என்னும் சூத்திரத்து மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்னும் உத்தியான் அவ்வைகாரம் கெட்டுக் கெட்டவழித் தகரம் இரட்டித்து 'எழுத்தென' முடிந்தது.

இவ்வாறன்றி, எழுது என்னும் முதனிலை எழுத்து எனத் தானே திரிந்து நின்றதென்றும் அஃது ஆகுபெயரால் செய்யப்படு பொருளை உணர்த்திற்றென்றும் கூறுவாரும் உளர். அது பொருந்தாது; ஒரு காரணமின்றித் திரிதல் கூடாமையானும் நடவா மடிசீ முதலிய முதனிலை எல்லாம் விகுதியோடன்றித் தனித்தியங்க லாற்றாமையானும், இம்முதனிலைகள் உரிச்சொல்லாகில் பெயர்த் தன்மைப் பட்டுழியல்லது ஆகுபெயராதற் கேலாமையானும் என்பது" என்பர் சிவஞான முனிவர் (தொல். முதல் சூத்)

4. எழுத்தென்பது எழுதப்படும் எழுத்துக்களைக் குறிப்பதன்றி ஓவியத்தையும் குறிக்க வரும், 'இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்' (பரிபாடல் - 19 - 53) என்பதால் உணர்க.

5. எழுத்தென்பது ஆகுபெயர் சங்கரநமச்சிவாயர்.

6. 'எழுத்து' என்னும் தொழிற்பெயர், அப்பொருளை விட்டுப் பால்பகா1 அஃறிணைப் பொருள் பொதுப்

பெயராம். அப்பொருளைவிட்டு ஓவியம் முதலியன போலன்றி அகரம், னகரம் முதலியன வடிவை உணர்த்தும் சிறப்புப் பெயராய்2, அப்பொருளை விட்டு ஓலியை உணர்த்தும் ஆகுபெயராய்3, அப்பொருளை விட்டு அவ் வொலியின் இலக்கணத்தை உணர்த்தும் இருமடி யாகுபெயராய்4, அப்பொருளை விட்டு அவ்விலக் கணத்தை யுணர்த்தும் நூலினை உணர்த்தும் மும்மடி ஆகுபெயராய், அப்பொருளை விட்டு இங்ஙனம் கூறிற்று எழுத்து, இங்ஙனம் அறிவித்த தெழுத்து எனக் கரும கருத்தாவையும், கருவிக் கருத்தாவையும் உணர்த்தும் நான்மடி ஆகுபெயராய் நின்று பலபொருட் பட்டது காண்க.

(இலக்கணக் கொத்துரை - வினையியல் - 36)

7. முதலெழுத்து முப்பது என்றும் (தொல்காப்பியர் முதலானவர் கொள்கை) ஆய்தத்தைக் கூட்டி முப்பத் தொன்று (வீரசோழியம், நேமிநாதம் முதலியவற்றின் கொள்கை) என்றும்,

சார்பெழுத்து மூன்று (தொல்) என்றும்,

சார்பெழுத்து பத்து (நன்னூல்) என்றும் கருதுகின்றனர்.

8. எழுத்து காற்றின் குணமென்றும், ஆகாயத்தின் குணமென்றும், ஒலியணுக்களால் ஆகியதென்றும், சுத்த மாயையின் காரியமென்றும் பலரும் பலவிதமாகக் கருதுவர்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு (392)

என்பது திருக்குறள். எண் என்று சொல்லுவனவும், மற்றை எழுத்தென்று சொல்லுவனவும் ஆகிய கலைகள் இரண் டனையும் அறிந்தார், வாழ்ந்திருக்கும் உயிர்கட்கெல்லாம் கண் என்று சொல்லுவர் என்பர் பொய்யாமொழியார். திவாகரமும், பிங்கலமும் "எழுத்தும் எண்ணும் கண் ணெனப்படும்" என்று கூறுகின்றது.

கலக்கென்ற பெயரால் குறிக்கப்படும் எழுத்தும், எண்ணும் மக்கள் உயிர்க்குக் கண்ணாக உள்ளன.

இவ்விரண்டின் 'எழுத்து' என்பது எழுதுதலாகிய தொழிலை உணர்த்தும் பொழுது இயற்பெயரென்றும், எழுதப்பட்ட தொழிற்பொருளை உணர்த்தும்பொழுது ஆகு பெயர் என்றும் வழங்கப்படும் (நன்னூல் - மயிலைநாதர்).

எழுதுதல் பலவகைத் தொழில்களுள் ஒன்றாகும். தெரித்தல், வரிதல், திட்டல், பொறித்தல், வரைதல், கீறல், கிறுக்குதல் என்னும் சொற்கள் எழுதுதல் என்ற பொருளில் வரும் என்பர்.

'எழுதப்படுதலின் எழுத்து' என்று யாப்பருங்கல விருத்தியுரை கூறுகிறது. அவ்வெழுத்திற்கு வரி, பொறி, அக்கரம், இரேகை என்ற பெயர்களைப் பிங்கல நிகண்டு கூறுகின்றது. இவற்றுள் வரியும், பொறியும் நல்லதமிழ்ச் சொல். வரித்தல் - எழுதுதல், பொறித்தல் அடையாளம் செய்தல் என்று பொருள் கூறலாம்.

மிகப் பழைய நிகண்டாகிய திவாகரமும் அதனைப் பின்பற்றிய பிங்கலமும் நன்னூல் மயிலைநாதர் உரையும் வடிவழுத்தென்றும்1, பெயரெழுத்தென்றும்2, தன்மையெழுத் தென்றும்3, உள்முடிபெழுத்தென்றும் எழுத்தினை நான்கு விதமாகக் கூறுகின்றது.

பெயரெழுத்து முடிவெழுத்து வடவெழுத்து தன்மை
எழுத்தென எழுத்தின் பெயரியம் பினரே

(திவாகரம் - பழையபதிப்பு - பக். 175)

வடிவு பெயர் தன்மை முடிவுநான் கெழுத்தே

(பிங்கலம் - பழைய பதிப்பு - பக். 306)

வடிவுபெயர் தன்மை உண்முடிவு
நடைபெறும் நாவலர் நாடிய எழுத்தே

(மயிலைநர்தர் - உரை - நன். 256).

இவற்றுள் நன்மையும் வடிவும் ஆசிரியன்றான் உணரு மெனினும் நமக்கு உணர்த்த வருமையின் ஒழிந்த ஆறுமே இதனான் உணர்கின்றான் என உணர்க என்பர் - இளம்பூரணர் தொல். எழுத். - 1

பிங்கல நிகண்டின் உரை இந்த நான்கினையும்,

வடிவெழுத்து:- "செவிப்புல ஒலியைக் கண்களுக்குப் புலப்பட எழுதும் எழுத்து" என்றும்,

மயிலைநாதர் உரை, "கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும், சட்டகம் போலச் செவிப்புல வொலியைக், உட் கொணற் கிருமுரு பாம் முடிவெழுத்தே" என்றும்,

பெயரெழுத்து:- "வடிவெழுத்து முதலாக வழங்கும் எழுத்துக்களுக்கு இடும் பெயர்" (பிங் - உரை) என்றும், "வடிவு முதன் மும்மையின் வழங்குமெழுத்தில், படுபல பகுதிக் கிடுபெயர் பெயரே" என்றும் (மயிலை - உரை).

தன்மை எழுத்து:- "செவிப்புலனாகிய ஒலியெழுத்து" என்றும் (பிங் - உரை), "தானம் முயற்சி தரக்கொளச் செவிப்புலன், ஆயவொலி தன்மை எழுத்தா கும்மே" என்றும், (மயிலைநாதர் - உரை).

முடிவெழுத்து:- (பிங் - உரை) தன்மையெழுத்து பெயரெழுத்து வடிவெழுத்து முதலாகவுள்ள எழுத்தினை மனத்தாற் றுணிவது" என்றும் (மயிலை - உரை) "உருவ முதல் மும்மையோ டொன்றிய வியல்பை, மருவவுளந் துணிவது உண்முடி வெழுத்தே" என்றும் கூறும்.

மேற்கூறிய நான்கினையன்றி, வேறு நான்கெழுத்தினை யாப்பருங்கல விருத்தி உரையும் மயிலைநாதர் உரையும் கூறுகின்றன.

இனி எழுத்து நான்கு வகை:- உருவெழுத்தும், உணர்வெழுத்தும், ஒலியெழுத்தும், தன்மையெழுத்துமென; என்னை? "அவற்றுள், உருவே உணர்வே ஒலியே, தன்மை யென, இருவகை எழுத்தும் ஈரிரண்டாகும்" என்றும், (மயிலை - உரை) "உருவே உணர்வே ஒலியே தன்மை எனவீ ரெழுத்தும் ஈரிருபகுதியே" என்றும் கூறுகின்றன.

உருவெழுத்து

யாப்பருங்கல விருத்தியுரை அவற்றுள் உருவெழுத் தாவது எழுதப்படுவது என்னை? "காணப்பட்ட உருவம்

எல்லாம், மாணக் காட்டும் வகைமை நாடி, வழுவில் ஓவியன் கைவினை போல, எழுதப்படுவது உருவெழுத்தாகும்" என்றாராகலின் என்றும் (மயிலை - உரையும்) இந்நூற் பாவினையே எடுத்தாளுகிறது.

உணர்வெழுத்தாவது (யா-வி)

கொண்டவோர் குறியாற் கொண்ட அதனை
உண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்

மயிலைநாதர் உரையும் இந்நூற்பாவினையே கூறும்.

ஒலியெழுத்தாவது யாப்பருங்கல விருத்தியுரையும் மயிலைநாதர் உரையும்,

இசைப்படு புள்ளின் எழால் போல
செவிப்புல னாவது ஒலியெழுத் தாகும்

என்று கூறும்.

தன்மை எழுத்தாவது

யாப்பருங்கல விருத்தியுரையும் மயிலைநாதர் உரையும்,

முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய உணர்வும்
அவற்றொடு புணர்ந்த அகத்தெழு வளியின்
மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை எழுத்தே

என்று கூறும்.

திவாகர நிகண்டாசிரியரும், யாப்பருங்கல விருத்தி யாசிரியரும் கூறும் நால்வகை எழுத்து:-

வடிவெழுத்தும் உருவெழுத்தும் ஒன்றே

கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
உட்கொளற் கிருமுரு பாம்வடி வெழுத்தே
காணப் பட்ட உருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்

இந்நூற்பாக்களால் வடிவெழுத்தும் உருவெழுத்தும் ஒன்றென்றே கருத வேண்டியுள்ளது.

உணர்வெழுத்தும் உண்முடிவெழுத்தும் ஒன்றே

கொண்டவோர் குறியால் கொண்ட வதனை
உண்டென் றுணர்வது உணர்வெழுத் தாகும்

என்று உணர்வெழுத்தின் இலக்கணத்தினை யாப்பருங்கல விருத்தியுரை கூறுவதும்,

உருவ முதல் மும்மையோ டொன்றிய வியல்பை
மருவவுளம் துணிவது உண்முடி வெழுத்தே

என்று உண்முடி வெழுத்தென்ற பெயரால் மயிலைநாதர் உரை கூறுவதும் முடிவெழுத்தென்று பிங்கல நிகண்டின் உரைகூறுவதும் கருத்தால் ஒத்துள்ளன.

தன்மை எழுத்து

திவாகரம், பிங்கலம், மயிலை உரை கூறும் தன்மை யெழுத்தும் யாப்பருங்கல விருத்தியும் மயிலைநாதர் உரை கூறும் தன்மைஎழுத்தும் ஒன்றாகவே உள்ளன.

செவிப்புல னாகிய ஒலியெழுத்துத் தன்மை எழுத்து (பிங்கலம்)

முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய உணர்வு
அவற்றொடு புணர்ந்த அகத்தெழு வளியின்
மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை எழுத்தே

(மயிலைநாதர் உரையும், யாப்பருங்கல விருத்தியும்)

இவை உள்ளோசையாகும். புற ஓசையை ஒலி எழுத்தென்று மயிலைநாதர் உரையும் யாப்பருங்கல விருத்தியும் கூறுகின்றன.

பெயரெழுத்து

திவாகரம் முதலியன பெயரெழுத்து என்று ஒன்றினைக் கூறும் பிங்கல நிகண்டு உரை வடிவெழுத்து முதலானவை களுக்கு இடும் பெயரே பெயரெழுத்து என்று கூறும்.

தொல்காப்பியப் பாயிர உரையுள் நச்சினார்க்கினியார் எழுத்தினைப் பற்றிக் கூறும் செய்தி கருதுதற்குரியதாகும். "எழுத்தென்றது யாதனை எனின்? கட்புலனாகா உருவும்,

கட்புலனாகிய வடிவும் உடைத்தாக வேறு வேறு வகுத்துக் கொண்டு, தன்னையே உணர்த்தியும், சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையையாம்.

கடலொலி, சங்கொலி முதலிய ஓசைகள் பொருள் உணர்த்தாமையானும், முற்று, வீளை, இலதை முதலியன பொருளுணர்த்தினவேனும் எழுத்தாகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளாராயினர்.

ஈண்டு உருவென்றது மனணுர்வாய் நிற்கும் கருத்துப் பொருள்.

இது செறிப்பச் சேறலானும், செறிப்ப வருதலானும் இடையறிப்படுதலானும், இன்ப துன்பத்தை ஆக்கலானும், உருவும் வடிவும் கூடிப் பிறத்தலானும், உந்தி முதலாகத் தோன்றி எண்வகை நிலத்தும் பிறந்து, கட்புலனாற் தன்மை யின்றிச் செவிக்கட் சென்று உறும் உறுமையானும் விசும்பிற் பிறந்து இயங்குவதோர் தன்மை உடைமையானும் காற்றின் குணமாவதோர் உருவாம். வன்மை மென்மை இடைமை கோடலானும் உருவேயாயிற்று. இதனைக் காற்றின் குணமே என்றல் இவ்வாசிரியர் கருத்து.

இதனை விசும்பின் குணம் என்பாரும்உளர்.

இவ்வுரு "உருவுருவாகி" எனவும் (எழுத். - 17) "உட்பெறு புள்ளி உருவாகும்மே" எனவும் (எழுத். - 16) காட்சிப் பொருட்கும் சிறுபான்மை வரும்.

வடிவாவது கட்புலனாகியே நிற்கும். அது வட்டம் சதுரம் முதலிய முப்பத்திரண்டனுள் ஒன்றை உணர்த்தும்.

மனத்தால் உணரும் நுண்ணுணர்வு இல்லோரும் உணர்தற்கு எழுத்துக்கட்கு வேறு வேறு வடிவங்காட்டி எழுதப்பட்டு நடத்தலில் கட்புலனாகிய வரிவடிவம் உடையவாயின. இதற்கு விதி "உட்பெறு புள்ளி உருவாகும்மே" (எழுத். - 14) என்னும் சூத்திரம் முதலியனவாம். இவற்றாற் பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினார். "எகர ஒகரத் தியற்கையும் அற்றே" (எழுத். - 16) என உயிர்க்கும் சிறுபான்மை வடிவு கூறினார்.

இனித் தன்னை உணர்த்தும் ஓசையாவது தன் பிறப்பையும் மாத்திரையையுமே அறிவித்துத் தன்னைப் பெற நிகழும் ஓசை.

சொற்கு இயையும் ஓசையாவது ஓரெழுத்தொருமொழி முதலியவாய் வரும் ஓசை என்பர்.

இளம்பூரணர்

வன்மை மென்மை கூறலின் எழுத்து அருவன்றி உருவாதல் பெறப்பட்டது. உயிர்க்கும் குறுமை நெடுமை கூறலின் உருவென்பதும் பெறுதும் என்பர் (தொல்.எழுத். 20).

நன்னூலாசிரியர்

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்து

என்பர். இந்நூற்பா உரையில் மயிலைநாதர் "மொழிக்கு முதற்காரணமாகிய பரமாணுக்களது இயைபினால் ஆகுவதான ஒலி எழுத்தெனப்படும். ஈண்டு ஒலியெழுத்துச் சிறப்புடைமையின் எடுத்தோதினார். சிறப்புடைப் பொருளைத் தானெடுத்து மொழிதல் என்பது தந்திர வுத்தியாதலின் என்பர்.

அரசஞ்சண்முகனார்

இனி எழுத்தெனப்படுவது யாதோ வெனில்? கண் முதலாய பிறவற்றுக்குப் புலனாகாது செவிப்புலனே யாகும் ஒலிவடிவும், செவி முதலாய பிறவற்றுக்குப் புலனாகாது கண்ணுக்கும் மெய்க்கும் புலனாகும் வரிவடிவம் உடைத்தாய்த் தனித்து நின்றாயினும், சார்ந்து நின்றாயினும் தன்னை யுணர்த்தலுடன், பொருளுணர்த்தும் சொல்லாகவும், அகச் சொல்லுக் குறுப்பாகலுமாகிய இருதன்மையும் ஒருங்கு பெற்றாயினும், அன்றி உறுப்பாக இயைதற்றன்மை யொன்றே பெற்றாயினும் நிற்கும் ஒலியாம்" என்பர். (தொல்காப்பியப் பாயிரவிருத்தி பக்கம் - 170).

நச்சினார்க்கினியர் - உருவும் வடிவும்

கட்புலனாகா உருவும் கட்புலனாகிய வடிவும் என்று உருவிற்கும் வடிவிற்கும் வேற்றுமை கூறினும் தொல்காப்பியர் உருவென்னும் சொல்லைக் கட்புலனாகும் பொருள் வடிவத்தைக் குறித்துக் கூறிய இடங்களும் உண்டு. அவர் நூன்மரபில் உயிர்மெய்யிலக்கணத்தைக் கூறும்பொழுது "ஏனை உயிரொடு உருவுதிரிந் துயிர்த்தலும்" என்று கூறுவதால் உணரலாம்.

'உருவுதிரிந் துயிர்த்தல்' என்பதற்கு இளம்பூரணர் கட்புலனாகும் வரி வடிவத்தையே கருதி, "மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்றுயிர்த்தலும், கோடு பெறுவன கோடு பெற்றுயிர்த்தலும், புள்ளி பெற்றுயிர்த் தலும், புள்ளியும் கோடும் உடன்பெறுவன உடன் பெற்றுயிர்த்தலுமெனக் கொள்க" என்பர்.

நச்சினார்க்கினியர் "கி, கீ முதலியன மேல்விலங்கு பெற்றன; கு, கூ முதலியன கீழ் விலங்கு பெற்றன; கெ, கே முதலியன கோடு பெற்றன. கா, ஞா முதலியன புள்ளி பெற்றன; அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர்; கொ, கோ, ஙொ, ஙோ முதலியன புள்ளியும் கோடும் உடன் பெற்றன" என்பர். (தொல்.எழு. 17).

எழுத்துக்களின் வரிவடிவத்தை வேறுபடுத்திக் காட்ட மேல் விலங்கும் கீழ் விலங்கும் கோடும் புள்ளியும் பயன் படுத்தப்பட்டன.

'விலங்கு' என்பது குறுக்கு வளைவு என்று பொருள்படும். 'புள்ளி' என்பது வட்டவடிவமான பொட்டு. 'கோடு' என்பது கொம்பு என்று பொருள்படும்.

அகநானூறு 343ஆம் பாட்டில் 'கோடு' என்பதைப் பற்றிச் செய்தியொன்று கூறப்படுகிறது. உமணர் செல்லும் வண்டியின் தலைப்பு மோதி மோதிச் சிதைத்து விட்ட வலிய இடத்தில் நடப்பட்டுள்ள நடுகல்லில் கூரிய உளியால் குயிலப்பட்ட (செதுக்கப்பட்ட) எழுத்துக்களில் கோடு தேய்ந்து விட்ட காரணத்தால் அவ்வழிச் செல்லும் புதியவர்கள் அந்நடுகல் எழுத்தைப் படிக்கத் தொடங்க,

கோடு மாய்ந்த காரணத்தால் வேறு பொருளைத் தரும் கவர்ந்த வழிகளையுடைய காடு என்பர்.

இங்கே கோடு என்பது எழுத்தின் கோட்டையும் குறிக்கலாம். கொம்புச் சுழியையும் குறிக்கலாம்.

மற்றொரு அகநானூற்றுப் பாட்டில் (297) எழுத்தைப் பற்றி மற்றொரு செய்தி கூறப்பட்டுள்ளது.

இயைபு

அழகில்லாத பெரும்பல் தாடியையுடைய கடுங்கண் மறவன் தன் அம்பினை நடுகல்லின் மருங்கே நீட்டிக் கொண்ட காரணத்தால் மருங்கு சுருங்கிப் போன அச்சம் முதிர்ந்த அக்கல்லில் பெரிய பொருள் தோன்றுமாறு செதுக்கிய எழுத்துக்கள் பொருளைத் தரும் இயைபுடன் படிக்க முடியாமையால் அங்குவந்த வம்பலர் பலமுறை முயன்று முயன்று படிக்கத் தொடங்கிப் படிக்க முடியாமல் விட்டுக் கழியும் சுரம் என்று கூறுகிறது.

இதனால் ஒரு சொல்லுடன் ஒரு சொல் சேர்வதற்குத் தகுதி வேண்டுதல் போல ஓரெழுத்துடன் மற்றொரு எழுத்துக் கூடிப் பொருள் தருவதற்கு இயைபு வேண்டும் என்று தெரிகின்றது.

தொல்காப்பியர் கூறும் எழுத்து

தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என்று இலக்கணத்தை மூன்று கூறாக்கி மொழிகின்றார். அம்மூன்றுள் எழுத்திலக்கணத்தினை எழுத்ததிகாரத்தே இயம்பியுள்ளார். தொல்காப்பியர் எழுத்திலக்கணத்தினை இத்தனை என்று கூறவில்லை. இளம்பூரணர் முதலியோர் எட்டுவகையாலும் எட்டிறந்த பல்வகையாலும் எழுத் திலக்கணம் இயம்பப்பட்டுள்ளதென்பர். அவிநயனார் எழுத் திலக்கணத்தினை ஏழுவகையால் இயம்பியுள்ளார் என்று நேமிநாத உரையாசிரியர் கூறுவர். நன்னூல் ஆசிரியர் பன்னிரண்டு பகுதியாகக் கூறுவர்.

எழுத்தால் ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி தொடர்மொழி என மூன்று மொழியாதலையும், மொழிகள் நிலைமொழி வருமொழியாய் நின்று, நிலைமொழி

ஈற்றெழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் புணர்தலையும், தொல்காப்பியர் எழுத்திலக்கணமாகவே ஓதுகின்றார்.

அவர் எல்லா வகை எழுத்துக்களையும் 'எழுத்து' என்ற பொதுப்பெயராலேயே குறிப்பிடுகின்றார். எழுத்துக் களைச் சார்ந்து வராத எழுத்தென்றும் சார்ந்துவரும் எழுத்தென்றும் இரண்டு வகையாக அவர் பிரித்துள்ளார்.

சார்ந்து வராத எழுத்தைப் பிற்காலத்தார் முதலெழுத் தென்ற பெயரால் வழங்குவர்.

சார்ந்து வராத எழுத்து முப்பதென்றும் அவை அகரமுதலாகிய முப்பது னகர இறுவாயாகிய முப்பது என்று பெயர் பெறும் என்றும் கூறுவர். அம்முப்பதுள் ஒளகார இறுவாய்ப் பன்னிரண்டும் உயிர் என்றும், அப் பன்னிரண்டுள் அ, ஈ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் ஓரள பிசைக்கும் குற்றெழுத்தென்றும் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஔ என்னும் ஏழும் ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்றும் மேற்கூறிய முப்பதுள் னகார இறுவாயாகிய பதினெட்டும் மெய் எனப் பெயர் பெறும் என்றும் பதினெட்டுள் க, ச, ட, த, ப, ற ஆறும் வல்லினமென்றும் ஙஞணநமன ஆறும் மெல்லினமென்றும், யரலவழள ஆறும் இடையினமென்றும் பெயர் பெறும் என்பர். தொல்காப்பியர் உயிரளபெடையை அளபெடை என்றே வழங்குவர். ஒற்றளபெடுப்பதை மட்டும் ஒற்றளபெடை என்பர்.

பிறரெல்லாம் மெய்யும் உயிரும் கூடி ஒலிக்கும் உயிர்மெய் எழுத்தின் இலக்கணத்தைச் சார்பெழுத்துள் வைத்து ஓதியிருந்தாலும் தொல்காப்பியர் அவ்வாறு ஓத வில்லை. உயிர்மெய் எழுத்தின் இலக்கணத்தைச் சார்பல்லா எழுத்துக்களின் இலக்கணத்தைக் கூறும் நூன்மரபின்கண் 'புள்ளியில்லா' (தொல்.எழு. 17) என்னும் நூற்பாவால் ஓது கின்றார். ஆனால், உயிர்மெய்யெழுத்து என்ற பெயரால் கூற வில்லை. இங்கே கூறாவிடினும் புணரியலில் "உயிர்மெய்யீறும் உயிரீற் றியற்றே" என்ற நூற்பாவில் உயிர்மெய் என்று பெயர் கூறுகின்றார்.

சார்பெழுத்து

தொல்காப்பியர் கூறும் சார்பெழுத்து குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றாகும். சார்பல்லாத எழுத்தினை நூன்மரபிலும் சார்பெழுத்தினை மொழி மரபிலும் கூறியுள்ளார்.

இன்னும் நூல்மரபில் சார்பல்லாத உயிரெழுத்துள் அ, இ, உ, மூன்றும் சுட்டென்றும் ஆ, ஏ, ஓ அம்மூன்றும் வினாவென்றும் கூறுகிறார்.

மொழி மரபில் அகர இகரம் ஐகாரமாகும் என்பது முதலான நூற்பாக்களால் கூறப்படுவனவற்றை உரை யாசிரியர்கள் எழுத்துப்போலி என்பர்.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை மொழி முதலெழுத்தென்றும் ஈற்றில் வரும் எழுத்துக்களை ஈற்றெழுத்தென்றும் கூறுவர்.

உந்தி முதலா முந்து வளியால் எழுத்துக்கள் தோன்றும் என்பர் தொல்காப்பியர். நன்னூலாசிரியர் உயிர் முயற்சியால் உள்வளி துரப்ப எழும் பரமாணுக்களால் தோன்றும் ஒலியே எழுத்தென்பர்.

நன்னூலார் கூறும் எழுத்து

பவணந்தியார் எழுத்தாகிய அது முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் இருவகை என்பர். முதலெழுத்து உயிரெழுத்தென்றும் மெய்யெழுத்தென்றும் இரண்டு பிரிவினதாகும். உயிரெழுத்து அகர முதற் பன்னிரண்டாம். மெய்யெழுத்து ககரம் முதல் பதினெட்டாம் என்றும் உயிரெழுத்துள் அ, இ, உ, எ, ஒ ஐந்தும் குற்றெழுத்தாம் என்றும் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஏழும் நெடில் எழுத்தாம் என்றும் அ, இ, உ சுட்டெழுத்தென்றும் ஏ, யா முதலும் ஆ, ஓ ஈற்றும் ஏ இருவழியும் வினா ஆகும் என்றும் கூறுவர்.

மெய் பதினெட்டுள் கசடதபற ஆறும் வல்லின மென்றும் ஙஞணநமன ஆறும் மெல்லினமென்றும் யரலவழள ஆறும் இடையினமென்றும் பெயர் பெறும் என்பர்.

முதலெழுத்து முப்பதுள் ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்திற்கு உகரமும் இனமாகப் பொருந்த மற்றவை இரண்டிரண்டு ஓரினமாய் வரும் என்பர்.

நன்னூலார் கூறும் சார்பெழுத்து

தொல்காப்பியர் சார்பெழுத்து மூன்று என்றனர். நன்னூலாசிரியர் சார்பெழுத்துப் பத்து என்றனர் (நன். 59). உயிர்மெய்யும் ஆய்தமும் உயிரளபெடையும் ஒற்றள பெடையும் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் என்னும் இருபதும் சார்பெழுத்து என்றனர்.

இந்நூற்பாவுரையில் மயிலைநாதர் "என்னை? எழுத்தெனப்படுப, அகர முதல் னகர விறுவாய் முப்பஃ தென்ப, சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே" (தொல். நூன். 1) என ஆசிரியர் தொல்காப்பியனாரும் இவ்வாறு முதல்சார்பென வகுத்துக் கொண்டாரென்க. அஃதே, அவர் சார்பெழுத்தென மூன்றே கொண்டாராலோவெனின் அஃதே, ஒன்று சொன்னாய் ஒழிந்தவை எப்பாற்படும் என்றார்க்கு மூன்றாவதோர் பகுதி சொல்லலாவதின்மை யானும் முதலெழுத்தாந்தன்மை அவற்றிற் கின்மையானும் சார்பிற் றோன்றுதலானும் இப்பத்தும் சார்பாகவே கொள்ளப்படும் என்பது" என்பர்.

முதல் சார்பு என்ற காரணம்

மயிலைநாதர் தாமே தனித்து நிற்கையில் முதலெழுத் தென்றாயின. அவையே தம்மோடு தாம் சார்ந்தும் இடம் சார்ந்தும் இடமும் பற்றுக்கோடும் சார்ந்தும் விகாரத்தால் வருதலிற் சார்பெழுத்தென்றாயினவெனக் கொள்க (நன். 66) என்பர்.

முதலெழுத்து முப்பத்தொன்று

தொல்காப்பியர் "அகரமுதல் னகரவிறுவாய் முப்பஃ தென்ப" என்று சார்பல்லாத முதலெழுத்தை முப்பது என்பர். வீரசோழியமும், நேமிநாதமும் சார்பெழுத்தாகிய ஆய்தத்தை முதலெழுத்துள் ஔகாரத்தின் பின் வைத்து முதலெழுத்து முப்பத்தொன்று என்று கூறும்,

"அறிந்த எழுத்தாம்முன் பன்னிரண் டாவிகள் ஆனகம்முன், பிரிந்த பதினெட்டு மெய்; நடு ஆய்தம்" என்றும் (வீரசோழியம் 1)

"ஆவி அகர முதல் ஆறிரண்டாம் ஆய்தமிடை
மேவுங் ககரமுதன் மெய்களாம் - மூவாறும்
கண்ணும் முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று
நண்ணுமுதல் வைப்பாகும் நன்று" (நேமிநாதம் 1)

என்பனவற்றால் அறிக.

ஆத்திச்சூடியில் ஔவியம் பேசேல் என்பதன் பின் அஃகம் சுருக்கேல் என்று வருவதையும் திருநாவுக்கரசர் தேவாரத்துள் சித்தத்தொகையுள் ஔகாரத்தின் பின் ஆய்தம் கூறப்பட்டிருத்தலையும் கருதினால் முதலெழுத்து முப்பத் தொன்று என்று பிற்காலத்தார் கருதினர் என்னும் செய்தி புலப்படும்.

பிற்காலத்தார் ககரம் முதலானவற்றை க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ என்று கூறி ஈற்றில் க் என்ற மெய்யெழுத்தைச் சொல்லுதல் போல், அகரம் முதலானவற்றை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்று கூறி ஈற்றில் ஃ என்று ஆய்தத்தைக் கூறும் வழக்கத்தையுடையவராக இருந்தனர்.

எழுத்துக்களின் பெயர்

மயிலைநாதர் "ஆவி, உயிர், மெய், உடம்பு என்பன இடுகுறிப் பொதுப்பெயர். அ, ஈ, க, ங என்றற் றொடக்கத்தன இடுகுறிச் சிறப்புப்பெயர். குறில், நெடில், வல்லினம் மெல்லினம் இடையினம் என்றற்றொடக்கத்தன காரணப் பொதுப்பெயர். குற்றிகரம், குற்றுகரம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்றற்றொடக்கத்தன காரணச் சிறப்புப் பெயர். இவ்வாறே பிறவும் ஆராய்ந்தறிக" என்பர்.

ஆனால் நச்சினார்க்கினியர் ஔகார இறுவாய்ப் பன்னிரண்டெழுத்தினையும் உயிர் என்றதும், னகார இறுவாய்ப் பதினெண்ணெழுத்தினையும் மெய் என்று வழங்குவதும் ஆட்சியும் காரணமும் நோக்கிய குறி என்று கூறி, மெய் பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய்

வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. பன்னீருயிர்க்கும் தான் இடங்கொடுத்து அவற்றான் இயங்கும் தன்மை பெற்ற உடம்பாய் நிற்றலின் மெய்யாயிற்று என்று உயிர், மெய் என்ற பெயர்க்குக் காரணங்கூறி இவை காரணப் பெயரே என்று கூறினர் (தொல். எழுத். 8, 9).

சங்கரநமச்சிவாயரும் ஆவியும், மெய்யும் போறலின் இவ்விருவகை எழுத்திற்கும் ஆவி மெய் என்பன உவம ஆகுபெயராய்க் காரணப் பொதுப் பெயராயின என்பர் (நன்னூல் 63).

அளபெடை

தமிழ் நூலார் இசைவிளி பண்ட மாற்றாதியில் வருவனவற்றை இயற்கையளபெடை என்றும், "கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர், படாஅ முலைமேற் றுகில்" எனக் காரிய முன்வழிவரும் அசை ஆகும் நிலையில் உள்ள அளபெடையைச் செயற்கை அளபெடை என்றும், உவாஅப்பதினான்கு இராஅப் பகல் என்னும் எழுத்துப் பேறுகள் குன்றிசை மொழி வயின் நின்றஇசை நிறைப் பனவற்றைப் புலுதசந்தி (அளபெடைப் புணர்ச்சி) என்றும் பிரயோக விவேக நூலார் கூறுவர்.

எழுத்துப்போலி

தொல்காப்பியத்துள்,

அகரம் இகரம் ஐகாரம் ஆகும் (54)

அகரம் உகரம் ஔகாரம் ஆகும் (55)

அகரத் திம்பர் யகரப் புள்ளியும்

ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் (56)

இகரம் யகரம் இறுதி விரவும் (58)

என்னும் நூற்பாக்களுக்கு இளம்பூரணர் போலி எழுத்து ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று என்று கருத்துக்கூறி "அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல ஆகும்" என்றும், "அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல ஔகாரம் போல ஆகும்" என்றும், "அகரத்தின் பின்னர்

இகரமேயன்றி யகரமாகிய புள்ளியும் ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவுபெறத் தோன்றும்" என்றும், இந்நூற்பாவுள் 'மெய்பெற' என்ற இலேசான், "அகரத்தின் பின்னர் யகரமேயன்றி வகரப் புள்ளியும் ஔகாரம் போல வரும் எனக் கொள்க" என்றும், இகரவீற்று மொழிக்கண்ணே யகரமும், அதுபோல இகரமும் விரவிவரும்; இதுவும் ஓர் போலி எழுத்தென்றும்," என்றும் உரைகூறி, முறையே அஇவனம், ஐவனம் எனக் கொள்க; அஉவை, ஔவை எனக் கண்டு கொள்க; ஔவை, அவ்வை எனக் கண்டு கொள்க; நாய் நாஇ எனக் கண்டு கொள்க என்று எடுத்துக் காட்டுக் கூறுவர்.

நச்சினார்க்கினியரும் மேற்கண்ட நூற்பாக்களுக்கு இவ்வாறே உரைகூறுவர்.

சந்தியக்கரம்

ஆனால், சிவஞானமுனிவர் தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தியுள் "இனி எகரமாவது அகரக் கூறும் தம்முள் ஒத்திசைத்து நரமடங்கல் போல் நிற்பதொன்றாகலானும், ஒகரமாவது அகரக்கூறும் உரைக்கூறும் தம்முள் ஒத்திசைத்து அவ்வாறு நிற்பதொன்றாகலானும், அவை அவற்றின் பின்னர் முறையே வைக்கப்பட்டன. அகரமும் யகரமும் இகரமும் தம்முள் ஒத்திசைத்து நிற்பதொன்றாகலின், எகர, ஏகாரங் களின் பின்னர் ஐகாரமும், அகரமும் வகரமும் உகரமும் தம்முள் ஒத்திசைத்து நிற்பதொன்றாகலின், ஒகர ஓகாரங் களின் பின்னர் ஔகாரமும் வைக்கப்பட்டன. இவ்வாறாதல் பற்றி ஏ, ஒ, ஐ, ஔ என்னும் நான்கினையும் மடங்கல் போல என்று உவமையும் கூறினார். இக்கருத்தே பற்றித் தொல்காப்பியர் "அகர இகரம் ஐகாரம் ஆகும்", "அகர வுகரம் ஔகாரம் ஆகும்" எனக் கூறி, ஐ என்னும் நெட்டெழுத்தின் வடிவு புலப்படுத்தற்கு அகர இகரங்களே யன்றி அவற்றிடையே யகரமும் ஒத்திசைக்கும் என்பார். "அகரத் திம்பர் யகரப் புள்ளியும் ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" என்றும், 'மெய்பெற' என்ற இலேசானே ஔவென்னும் நெட்டெழுத்து வடிவு புலப் படுத்தி அதற்கு அகர உகரங்களே யன்றி அவற்றிடையே

வகரமும் ஒத்திசைக்குமென்றும், இம்பர், உம்பர் என்றாற் போல்வன காலவரை இடவகைகளான் மயங்குமாகலின் இவற்றின் முதற்கண் நிற்பது யாதோ இறுதிக் கண் நிற்பது யாதோ என்னும் ஐயம் நீங்குதற்கு "இகர யகரம் இறுதி விரவும்" என்றும் கூறினார். மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால் எகர ஏகாரங்கள் ஒகர ஓகாரங்கள் அவ்வாறாதலும் கொள்ள வைத்தார்.

மாபாடியத்துள் ஊகாரத்தின் பின் நின்ற வடவெழுத்து நான்கு உயிர்க்கும் இடையே ரகர லகரக் கூறுகள் ஒத்துநிற்கும் என்ற ஆசிரியர் பதஞ்சலியார்க்கு ஐ, ஔ என்புழியும் இடையே யகர வகரக் கூறுகள் விரவி நிற்கும் என்பது உடன்பாடாதல் பெற்றாம்" என்பர்.

இலக்கணக் கொத்துரை

'அகரம் இகரம் ஐகார மாகும்' என்பனவற்றிற்கு இளம்பூரணர் உரையையும் சிவஞான முனிவர் கருத்தினையும் மேலே கண்டோம். இது பற்றிச் சுவாமிநாத தேசிகர் தம் இலக்கணக் கொத்துரையில் கூறும் செய்தியையும் பார்ப் போம். அவர் தம் நூலுள் ஒழிபியலில்,

போலி எழுத்தைப் போற்றுதல் கடனே (91 - 5)

என்று நூற்பா எழுதி, அதன் உரையுள் "ஈறெழுத்துக் கள் கூடி ஓரெழுத்துபோல வருவனவற்றைத் தள்ளாது கொள்க என்றவாறு,

தள்ளில்,

ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்நடு நிலையும் மிகுநிறை கோற்கே

கையி னாற்சொலக் கண்ணினிற் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேம்

கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி

ஔவிய நெஞ்சத்தா னாக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்

இவை போல் வரும் செய்யுளெல்லாம் மோனைத் தொடை யொடும் எதுகைத் தொடையொடும் மாறுபட்டு இலக்கண வழுவாதல் காண்க.

வடநூலார் இவ்விலக்கணத்தை (போலியெழுத்தினைப்) பற்றிய இலக்கணத்தைத் தள்ளாது சமானாக்கரம் என்று பெயரிட்டு இவ்விரண்டனையுந் தழுவினார். அது பற்றித் தமிழ் நூலார் இணையெழுத்தென்று மொழிபெயர்க்க மறந்து போலி எழுத்தென்று மொழி பெயர்த்ததனால் (நன்னூலாரா) போலிச்சரக்கு, போலியிலக்கணம், போலியுரை என்னும் சொற்களைப் போல இதனையும் கரு முன்னும் பின்னும் பாராது தள்ளினார் (யார்) அதுபற்றிப் 'போலி யெழுத்தைப் போற்றுதல் கடனே' எனச் சூத்திரம் செய்தோம் என்பர்.

"சார்பிற் றோன்றும் தன்மைய என்று மிகுத்துச் சொல்லிய அதனால், அகரத்தோடு யகர ஒற்று வந்தும், ஆய்தம் வந்தும் ஐகாரத்தின் பயத்தவாம். அகரத்தோடு உகரம் வந்தும், வகரவொற்று ஔகாரத்தின் பயத்தவாம். என்னை?

ஆய்தமும் யவ்வும் அவ்வொடு வரினே
ஐயென் எழுத்தொடு மெய்பெறத் தோன்றும்
உவ்வொடு வவ்வரின் ஔவியலாகும்

என்றார் அவிநயனார்.

வரலாறு

அய்யன், கய்தை, தய்யல், மய்யல், கய்யன் என, அகரத்தோடு யகரவொற்று வந்து? ஐயன், கைதை, தையல், மையல், கையன் என்னும் ஐகாரத்தின் பயத்தவாயின.

கஂசு, கஂதம், கஂசம் என அகரத்தோடு ஆய்தம் வந்து, கைசு, கைதம், கைசம் என்னும் ஐகாரத்தின் பயத்த வாயினவாறு. அவ்வை, நவ்வி, அஉவை, நஉலி என அகரத்தோடு வகரவொற்றும், உகரமும் வந்து, ஔவை, நௌவி என்னும் ஔகாரத்தின் பயத்தவாயினவாறு என்பர்,

எழுத்துக்களைப் பலவாகக் கூறினும் மூன்றாய் அடங்கும் எழுத்துக்களை உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில், அளபெடை, வன்மை, மென்மை இடைமை சார்பில் தோன்றுவன. ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் பதினைந்து வகையாகக் கூறினும் அவையெல்லாம் உயிரும் ஒற்றும் உயிர் மெய்யுமென மூன்றில் அடங்கும் என்பர் *(யாப்.வி.பக்.30)*

யாப்பருங்கலமும் யா. காரிகையும் எழுத்துக்களைக் கூறுவதில் மாறுபாடு

இளம்பூரணர் தொல். செய்யுளியலில் செய்யுட்கு உறுப்பாம் எழுத்துக்களைக் கூறும்பொழுது "எழுத்தியலாவது;- உயிரெழுத்து, மெய்யெழுத்து, சார்பெழுத்தென மூவகைப்படும்.

மேற்கூறிய உயிரெழுத்து குற்றெழுத்து, நெட்டெழுத்து, அளபெடை மூவகையாம், மெய்யெழுத்து வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும். சார்பெழுத்து குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆய்தமென மூவகைப்படும், மெய்யினும் சிலவும் ஆய்தமும் அளபெடுக்கப்படும் என்றனர்.

எனவே இளம்பூரணர் 'எழுத்து' என்ற மூன்றாக வகைப்படுத்தி ஒவ்வொன்றையும் மூன்றாக விரித்து ஒன்பது விரியாக்கி அவற்றுடன் ஒற்றளபெடையும் ஆய்த அளபெடையும் கூட்டிச் செய்யுட்கு வருவன பதினொன்று என்பர்.

பேராசிரியர் ஈண்டுப் (செய்யுளியலில்) பதினைந்து எழுத்தென்று கூறிப் பயங்கோடுமாயினும் ஆண்டை முப்பத்து மூன்றெழுத்தின் வேறுபடப் பிறந்தன சிலவெழுத்து மல்ல வென்பான் மேற்கிளந்தன்ன என்றான் என்பது.

மற்று எழுத்தியல் வகையினை 'மேற்கிளந்தன்ன' (தொல். செய் - 2) என்ற மாட்டேற்றான் முப்பத்து மூன்றெனக் கொள்வதன்றிப் பதினைந்தெனக் கொண்டு மாறென்னையெனின், எழுத்தோத்தினுள் குறிலும் நெடிலும், உயிரும், மெய்யும், இனம் மூன்றும் சார்பெழுத்து மூன்றும் எனப் பத்தும் இயல்புவகையான் ஆண்டுப் பகுத்தோதினான். உயிர்

மெய்யும், உயிரளபெடையும் தத்தம் வகையாற் கூடுமாறும் ஐகாரம் ஔகாரம் போலி வகையாற் கூடுமாறும் யாழ்நூலகத்து ஒற்றிசை நீடுமாறும் ஆண்டுத் தோற்றுவாய் செய்தான். செய்யவே அவை ஈண்டுக் கூறும் எழுத்தியல் வகையோடு ஒக்குமென்று உய்த்துணர்ந்து கொள்ளுமாறு வைத்தான் என்பது, இவற்றோடு மகரக் குறுக்கமும் கூட்டிப் பதினாறெழுத்து என்பாரும் உளர்.

அதனாற் பயன் என்னை எனின்? (மகரக்குறுக்கத்தால்) பாட்டுடைத் தலைவன் கேட்டிற்குக் காரணமாம் என்பார். மற்று உயிர்மெய்த் தொடக்கத்து ஐந்தினையும் மேல் (எழுத்ததிகாரத்தில்) எழுத்து என்றினாகலான் ஈண்டு (செய்யுளியலில்) எழுத்தியல் வகையுள் எழுத்தாக்கி அடக்குமாறு என்னை எனின்? ஈண்டு 'மேற்கிளந்தன்ன' எனவே, ஆண்டு உயிர் மெய்யை இரண்டெழுத்தின் கூட்டமெனவும், அளபெடையைக் 'குன்றிசை மொழி ' (தொல். எழுத்து - 41) எனவும், ஐகாரம், ஔகாரங்களை போலி எனவும் (தொல். எழுத். 54,55,56,58) கூறினானாயினும், அவற்றை எழுத்தியல் வகையெனப் பெயர் கொடுப்பவே, ஆண்டு நின்ற வகையானே ஈண்டு எழுத்தெனப்படும் என்பதாயிற்று.

இதன் கருத்து, 'இயல்' (தொல். செய் - 2) என்ற தனான் இயற்றிக் கொள்ளும் வகையால் எழுத்து இனைய தென்றானாம். 'எழுத்தியல் வகை' (தொல். எழுத்து. 2) என்பதனான் முப்பத்து மூன்றெழுத்தினைக் குறிலும் நெடிலும் என்றற் றொடக்கத்துப் பெயர் வேறுபாட்டால் பத்து வகைப்பட இயற்றுதலும் கூட்ட வகையான் இரண்டும், போலி வகையான் இரண்டும், யாழ் நூல் வேண்டும் வகையால் ஒன்றும் (ஒற்றளபெடை, தொல். எழும். 33) ஐந்துவகையான் இயற்றுதலும் என இருவகையும் கொள்ளப்படும் என்பர். (செய்யுளியல் -2)

யாப்பருங்கலம்,

உயிரே மெய்யே உயிர்மெய் என்றா
குறிலே நெடிலே அளபெடை என்றா
வன்மை மென்மை இடைமை என்றா

சார்பில் தோன்றும் தன்மைய என்றா
ஐஔ மகரக் குறுக்கம் என்றா
ஐம்மூ வெழுத்தும் ஆம்அடைக் குறுப்பே (2)

உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் உயிர்மெய்எழுத்தும் உயிரெழுத்தின் வகையாகிய குறிலும் நெடிலும் உயிரெழுத்து மெய்யெழுத்தால் வரும் உயிரளபெடை ஒற்றளபெடை என்னும் அளபெடையும், வல்லெழுத்தும் மெல்லெழுத்தும், இடையெழுத்தும், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூன்று சார்பெழுத்தும், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கும் மகரக் குறுக்கம் என்னும் பதினைந்தும் அசைக்கு உறுப்பாம் என்பர்.

யா.க. விருத்தியாசிரியர் எழுத்தெல்லாம் ஒற்றும் உயிரும் உயிர்மெய்யுமென மூன்றாய் அடங்குவனவற்றை இவ்வாறு விகற்பித்துச் சொல்லியது. எழுத்துக்களது பெயர் வேறு பாடுகள் எல்லாம் அறிவித்தற்கும், அப்பெயரால் பெயராக்கி ஆளுதற்கும் எனக் கொள்க என்றனர்.

பெரியபம்மம் என்னும் இலக்கண நூலும்

உயிர் உறுப்பு உயிர்மெய் தனிநிலையெனாக்
குறில் நெடில் அளபெடை மூவினம் எனாஅ
அஃகிய நாலுயிர் மஃகான் குறுக்கமொடு
ஐந்துதலை யிட்ட ஐயீ ரெழுத்தும்
அசைசீர் தளை தொடைக் காகும் உறுப்பென
வசையறு புலவர் வகுத்துரைத் தனரே

என்று கூறும்.

யாப்பருங்கலக் காரிகை

குறிலும், நெடிலும், ஆவியும் குறுகிய மூவுயிரும், ஆய்தமும், மெய்யும் மூவினமும் உயிர்மெய்யும், அளபெடையும் ஆகிய இவை அசைக்கு உறுப்பாம் என்கின்றது.

காக்கைப்பாடினியார்

காக்கைப் பாடினியாரும் குறில் நெடில், அளபெடை, உயிர், உறுப்பு, உயிர்மெய் வலிய மெலிய இடைமையோடு ஆய்தம் இ,உ,ஐ என்னும்மூன்று குறுக்கமோடு பதின்மூன்றும் அசைக்குறுப்பாம் என்பர்.

காரிகை உரையாசிரியர் அறிஞர் உரைத்த அளபும் என்ற விதப்பினால் எழுத்திற்கு மாத்திரை கொள்ள வேண்டும் என்று கூறிக் குற்றெழுத்து ஒரு மாத்திரை நெட்டெழுத்து இரண்டு மாத்திரை, உயிரளபெடை மூன்று மாத்திரை, ஆய்தமும் மெய்யும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஒரோவொன்று அரைமாத்திரை ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் ஒரோவென்று ஒன்றரை மாத்திரை, ஒற்றளபெடை ஒரு மாத்திரை, ஆய்தக் குறுக்கமும். மகரக் குறுக்கமும் ஒரோவென்று கால் மாத்திரை எனக் கொள்க" என்பர், இங்கே இவர் ஆய்தக் குறுக்கத்தைக் கூறுகிறார்.

சிறுகாக்கைப் பாடினியார்,

குறிய நெடிய உயிர் உறுப்பு உயிர்மெய்
வலிய மெலிய இடைமையோடு அளபெடை
மூவுயிர்க் குறுக்கமும் ஆம்அசைக் கெழுத்தே

என்பர்.

அவிநயனாரும்,

நெடிய குறிய உயிர்மெய் உயிரும்
வலிய மெலிய இடைமை அளபெடை
மூவுயிர்க் குறுக்கமோடு ஆம்அசைக் கெழுத்தே

என்பர்.

இளம்பூரணரிலிருந்து பல ஆசிரியர்களும் செய்யுட்குப் பயன்படும் எழுத்துக்களை,

10,15,16,13,12,11 என்று கூறுகின்றனர். இவையெல்லாம் தொல்காப்பியர் கூறும் உயிர், மெய் சார்பெழுத்து என்னும் மூன்றுவகை எழுத்துக்களிலிருந்து பிரிந்தவையேயாகும்.

ஆய்தக் குறுக்கம் இவற்றில் இடம்பெறவில்லை. காரிகை உரையாசிரியர் மட்டும் குறிப்பிடுகின்றார்.

நேமிநாதம் 'காலாம் குறுகுமங்கு ஆய்தம்' என்று மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் கால் மாத்திரை என்று கூறும். (நேமி.5)

யா, காரிகை உரையாசிரியர் ஆய்தக் குறுக்கத்திற்கு மாத்திரை கூறுகிறார். ஆய்தக் குறுக்கம் இவ்வாறு வரும் என்பதை அவர் கூறவில்லை. நேமிநாதம் ஆய்தக் குறுக்கத் திற்குக் கால் மாத்திரை என்று கூறுகிறது. ஆனால் ஆய்தக் குறுக்கம் இவ்வாறுவரும் என்று கூறவில்லை.

நேமிநாதம் 17 ஆம் நூற்பாவில் (எழுத்ததிகாரம்) உரையில் 'உண்டு' என்று மிகையால், தனிக்குற்றெழுத்தின் கீழ் ளகார லகாரங்கள் நிற்க ஒற்றழியில் இடையே ஆய்தமும் புகுந்து முடியும் அவை ஆய்தக் குறுக்கமென உணர்க.

வரலாறு

முள், கல் என நிறுத்தித் 'தீது' என வருவித்து மூஃடீது, கஃறீது எனவும், அல், பல் நிறுத்தித் திணை, தொடை என வருவித்து அஃறிணை, பஃறொடை எனவும் முடிக்க" என்பர் அதன் உரையாசிரியர்.

நன்னூலாசிரியர் 'அஃகிய தனிநிலை' (59) என்று ஆய்தக் குறுக்கத்தைக் கூறி, "ஆய்தம் இரண்டொடு" (60) என்று, அவ்வாய்தக் குறுக்கம் இரண்டு என்று குறிப்பிட்டு, "பனவீற் றியைபினாம் ஆய்தம் அங்கும்" (96) என்று ஆய்தக் குறுக்கும் வருமாற்றையும் அதுகால் மாத்திரையளவாய் வரும் என்பதை "கால்குறள் மக்கான் ஆய்த மாத்திரை" (99) என்ற நூற்பாவால் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்னும் மூன்றையும் சார்பெழுத்தென்றதன்றி ஆய்தம் குறுகி மற்றொரு சார்பெழுத்தாகும் என்று கூறவில்லை.

சார்பெழுத்து மூன்றேயன்றிப் ஏனைய சார்பெழுத்தல்ல என்பர் சிவஞானமுனிவர்

இனிச், "சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே" (தொல் - நூன் - 1) எனவும், "சார்ந்து வரின் அல்லது தமக்கியல்பிலவெனத் தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும் (தொல், பிற - 19) எனவும் வரையறுத்து ஓதியவாறே சார் பெழுத்து மூன்று என்னாது சில உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் உடன்சேர்த்து எண்ணுதலும், மரபுநிலை திரிதலின், வழிநூல் சார்புநூல் ஆதற்கு ஏலாவாய் இழுக்கப்படும் என்பது என்பர் சிவஞான முனிவர் (தொல். பாயிர விருத்தி)

அம்முனிவரே பிறிதோரிடத்தில், இனி இம் மூன்றுமே யன்றி உயிர்மெய்[1] முதலியவற்றையும் சார்பெழுத்தென்பாரும் உளராலோவெனில்; 'ஆல்' என்பழி உயிர் முன்னும் மெய் பின்னும் நின்று மயங்கினாற் போலவே 'லா' என்புழியும் மெய்பின்னும் உயிர் பின்னும் நின்று மயங்கினவேயல்லது உயிரும் மெய்யுமாகிய தந்தன்மை திரிந்து வேறாகாமைக்கு "மெய்யோ டியையினும்உயிரியல் திரியா" என்றற் றொடக்கத்துச் சூத்திரங்களே சான்றாகலின், உயிர் மெய் யாகிய காலத்தும் குறின்மை, நெடின்மை என்னும் உயிர்த் தன்மையும், வன்மை, மென்மை, இடைமை என்னும் மெய்த்தன்மையும் தம்மியல்பில் திரிவுபடாமையானும், உடன்மேல் உயிர்வந் தொன்றுதல் 'பொன்மணி' போல இயல்பு புணர்ச்சியே யாமென்ப ஆகலானும்,ஒற்றுமை யதான் உயிர்மெய் என்பதனைத் 'தகர ஞாழல்' போல உம்மைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்பார்க்குத் தகரமும் ஞாழலும் கூடிய சாந்து பின்னர்த்தகரமும் ஞாழலும் ஆகாதவாறு போல, மெய்யுயிர் நீங்கில் தன்னுருவாதல் பொருந்தாமையாலும், 'துணங்கை'

---

1. கூறுபவர் நன்னூலாசிரியர்.
   உயிர்மெய் யாய்தம் உயிரள பொற்றளபு
   அஃகிய இ,உ,ஐ,ஒள மஃகான்
   தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும் (59).

என்பது மெய்ம்முதல், உயிரீறு, மெய்ம்மயக்கமெனவும், வரகு என்பது உயிர்த்தொடர் மொழிக்குற்றியலுகர மெனவும் கொள்வதன்றி உயிர் மெய்முதல், உயிர் மெய்யீறு, உயிர்மெய்மயக்கம், உயிர்மெய்த் தொடர்மொழிக் குற்றியலு கரமெனக் கொள்ளாமையின் ஒற்றுமை நயம் பற்றி ஒன்று என்பதனால் ஒருபயன் இன்மையாலும், மெய்களெல்லாம் உயிர்வந்தொன்றாது தனித்து நின்றவழியே மாத்திரை கொள்ளவும் எழுத்தெண்ணவும் படுமென்பது அவற்றியல் பாகலின், அதுபற்றி ஒன்றெனல் வேண்டாமையானும், அவ்வியல்பறிந்து கோடற்குத் தனித்து நின்ற மெய்யை ஒன்றெனவும், புள்ளியெனவும் உயிரொடு கூடிய மெய்யை உயிர்மெய்யெனவும் சிறப்புப் பெயரிட்டாராதல் ஆசிரியர் கருத்தாகலானும் உயிரோடு கூடியவிடத்து வரிவடிவு வேறுபடுதலின் அதுபற்றி "புள்ளியில்லா எல்லா மெய்யும்" என மெய்மேல் வைத்துச் சூத்திரம் செய்து வடிவெழுத் திலக்கணங்கூறினாரன்றி, ஒலியெழுத்திலக்கணம் வேறுபடக் கூறாமையானும்,

அளபெடை சார்பெழுத்தென வேறாகாமை முன்னர்க் காட்டப்பட்டதாகலானும்,

ஐகாரக் குறுக்கம் முதலியன ஒருகாரணம் பற்றிக் குறுகினவாகலிற் சிறுமரம் பெருத்துழியும் பெருமரம் சிறுத்துழியும் வேறொருமரம் ஆகாதவாறு போல வேறெழுத் தெனப்படாவாகலானும், வடநூலாரும் வடவெழுத்துள் உயிரெழுத்தின் இறுதிக்கண் வைத்த இரண்டும் ஒற்றெழுத்தின் இறுதிக்கண் வைத்த இரண்டுமாகிய நான்கெழுத்தும், வல்லெழுத்தின் முன் மெல்லெழுத்து வந்து மயங்குழி அவ்வவ் வல்லெழுத்தோடொப்ப இடையே தோன்று மெனப்பட்ட வியம எழுத்தும் என்னும் இவை மாத்திரையே சார்பெழுத்தென வேறுகோடலன்றி, உயிர் மெய், உயிரள பெடை, ஐகாரக் குறுக்கம் முதலிய எழுத்துக்களைச் சிறிது திருந்தமைபற்றி வேறெழுத்தென யாண்டும் கொள்ளாமை யானும் அது பொருந்தாதென மறுக்க.

வன்றொடர் மொழிக் குற்றியலுகரம் வல்லெழுத்து வருவழிக் கான் மாத்திரையாய்க் குறுகலின், அது பற்றி

அதனைக் குற்றியலுகரத்தின் வேறு என்னாமையின், அவர்க்கும் (தொல்காப்பியர்க்கும்) அது கருத்தன்று போலும் என்க. (இவ்வாறு எழுதுவது ஆய்தக் குறுக்கத்தைக் கருதி போலும்)

இன்னும் அவர் ஐகாரம் மொழிமுதற்கண்ணும் குறுகுமெனவும், கை, மை முதலியனவும் பொருளைச் சுட்டியவழிக் குறுகுமெனவும் கூறினார்.

இடையன், மடையன், தினை, பனை என்றவழிக் குறுகுதல் போல, "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்புழி ஐகாரம் முதற்கட் குறுகாமை செவி கருவியாக உணரப் படுதலானும், அன்றியும் 'வைகலும் வைகல்' என்புழிக் குறுகுமாயின் வைகலென்பதனை குறி வினை ஒன்றென்று அசை கொள்ள வேண்டும்; வேண்டவே வெண்டளை சினத்தாலானும், "மொழிபடுத் திசைப்பினும் தெரிந்து வேறிசைப்பினும், எழுத்தியல் திரியா என்மனார் புலவர்" என எல்லாவெழுத்திற்கும் பொதுப்படக் கூறிய விதியோடு முரணி ஐகாரம் தெரிந்து வேறிசைத்தற்கட் டிரியாதெனவும், மொழிப்படுத்திசைப்பின் யாண்டு வரினும் திரியுமெனவும் கூறுதல் பொருந்தாமையானும், "ஓரள பாகும் இடனுமா ருண்டே" என்ற உம்மையான் ஓரளபாகா இடனுமாருண்டு என்பது தானே பெறப்படுதலானும் ஈண்டு இடன் என்றது மொழி இடை கடை என மூன்றேயன்றி வேறலின்மை யானும், ஐகாரம் மொழி முதற்கட் குறுகாதெனவே கொள்க.

குறுக்கம் இன்னது எனல்

எழுத்தின் குறுக்கமாவது ஓதிய முயற்சியின் மெலிதாக உச்சரித்தல். வடநூலாரும் இதனை சிலகூச்சாரணம் என்பர். (தொல். முதற். விருத்தி. பக். 33, 34)

அளபெடை சார்பெழுத்தென வேறாகாமை

சிவஞான முனிவர் அளபெடை சார்பெழுத்தென வேறாகாமை முன்னர்க்காட்டப்பட்டது என்பர். காட்டப் பட்டதைக் கீழே காண்க:- "நெட்டெழுத்துக்கள் மொழிக் காரணமாய் வேறு பொருள் தந்து நிற்றலின், அது பற்றி வேறு எழுத்து எண்ணி உயிர் பன்னிரண்டெழுத் தெனப்பட்டன.

அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்துநின்று நீண்டிசைப்பதொன்றாயினும் மொழிக் காரணமாய் வேறு பொருள் தராது இசை நிறைத்தன் மாத்திரைப் பயத்ததாய் நிற்றலின், வேறு எழுத்தென வைத்து எண்ணப்படாதாயிற்று என்பது நுண்ணுணர்வால் ஓர்ந்துணர்க.

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே

என்றதூஉம் இக்கருத்தே பற்றி என்க.

இப்பெற்றி அறியாதார் நெடிலும் குறிலும் விரலும் விரலும் சேரநின்றாற் போல இணைந்து நின்று அளபெடுக்குமெனவும், அளபெடை எழுத்து உயிரெழுத்துள் அடங்காதெனவும், சார்பெழுத்தென வைத்து வேறு எண்ணப்படுமெனவும் தமக்கு வேண்டியவாறே கூறுப.

மறுப்பு

நெடிலும் குறிலும் அவ்வாறு நின்று அளபெழும் என்றல் பொருந்தாமைக்கு எழுத்தென என்னாது அளபெடை என்னும் குறியீடே சான்றாத லறிக.

அன்றேல் ஓரெழுத்தினையே இரண்டு மாத்திரையும் ஒரு மாத்திரையுமாகப் பிரித்தசைத்துச் சீர் செய்தல் பொருந்தாது எனின், அற்றன்று; எழுத்து வகையான் என்னாது "மாத்திரை வகையாற் றளைதம கெடாநிலை, யாப்பழி யாமை என்று அளபெடை வேண்டும்" என்றமை யின் எழுத்திற்கு மாத்திரை கோடலும் அசைத்தலும் சீர் செய்தலும் தளையறுத்தலும் ஓசை பற்றியல்லது எழுத்துப் பற்றியல்லவென மறுக்க.

இன்னும் வடநூலார் அ என்னும் ஓரெழுத்தே ஒரு மாத்திரையாய் உச்சரிக்குங்கால் குற்றெழுத்தென்றும் இரண்டு மாத்திரையாய்க் கூட்டி உச்சரிக்குங்கால் நெட்டெழுத் தென்றும், மூன்று மாத்திரையா யுச்சரிக்குங்கால் அளபெடை எழுத்தென்றும், மூவகைப்படும் எனவும், அம்மூன்றும் எடுத்தல், படுத்தல், நலிதல் என்னும் ஓசைவேறுபாட்டால்

ஒன்று மூன்றாய் ஒன்பது வகைப்படும் எனவும் அவ் வொன்பது வகையும் மூக்கின் வளியொடு சார்த்தியும் சார்ந் தாலும் உச்சரிக்குமாற்றால் ஒவ்வொன்று இவ்விருவளத்தாய்ப் பதினெட்டாமெனவும் கூறுப. இவ்வாறே ஏனை எழுத்திற்கும் கொள்வர். அவ்வாறு வேறுபடினும் உயிரெழுத்தாற் தன்மையிற் றிரியாவாய்ப் பதினெட்டும் ஓரினமென்றே கொள்வர்.

இதனாலும் உயிரளபெடை உயிரின் வேறாகாமை உணர்க. இதனானே ஒற்றளபெடையும் ஒற்றின் வேறன்மை உணர்க" என்பர். (தொல். முதற். விருத்தி. பக். 26, 27)

பன்னிருபாட்டியல் பகரும் எழுத்து

பன்னிரு பாட்டியலில் எழுத்தியல் சில எழுத்திலக் கணங்களைக் கூறும் பிறப்பு என்ற தலைப்பில் பன்னிரண்டு உயிரெழுத்துக்களையும் முதல்வன் படைத்தான் என்றும், பதினெட்டு மெய்யெழுத்துக்களை இரண்டிரண்டாகக் கண்ணுதலும், திருமாலும், முருகனும், இந்திரனும், ஞாயிறும், திங்களும், நிதிக்கோளும், கூற்றுவனும், வருணனும், என்னும் தெய்வங்கள் படைத்தனர் என்று கூறுகிறது.

சாதி எழுத்து

அந்தணர் சாதி எழுத்து உயிர் பன்னிரண்டும் மெய்யுள் களுவும் சளுவும் டணவும் ஆகும். இவற்றை மேற்கூறியபடி முதல்வன் என்னும் நான்முகனும் கண்ணுதலும் திருமாலும் முருகனும் படைத்தனர்.

அரசர் சாதி எழுத்து தநவும் பமவும் யரவும் ஆகும். இவற்றை இந்திரனும் ஞாயிறும் திங்களும் ஆகிய தெய்வங்கள் படைத்தனர்.

வணிக சாதிக்குரிய எழுத்துக்கள் லவ, றன ஆகும். இவற்றை வருணனும்குபேரனும் படைத்தனர்.

சூத்திர சாதிக்குரிய எழுத்துக்கள் ழள. இவற்றை கூற்றுவன் படைத்தனன்.

அவ்வச் சாதியார்க்கு அவ்வச் சாதி எழுத்தை முதலாக வைப்பது வருணப் பொருத்தமாம்.

கதி எழுத்து

வானவர், மக்கள், நரகர், விலங்கு எனக் கதி நான்கு.

உயிருள் அ, இ, உ, எ; மெய்யுள் வல்லினத்தில் கசடதப ஆகிய ஒன்பதெழுத்தும் வானவர் கதி.

உயிருள் ஆ, ஈ, ஊ, ஏ, மெய்யுள் மெல்லினத்தில் ஙஞணநம ஆகிய ஒன்பதெழுத்தும் மக்கட்கதி.

உயிருள் ஒஓவும் மெய்யுள் யரலறழவும் ஆகிய ஏழு எழுத்தும் விலங்கின் கதி.

எஞ்சிய ஐ, ஔ, ஆய்த எழுத்தும் மெய்யுள் வ, ள, னவும் நரகர் கதி.

கதிப் பொருத்தமாவது தேவர், மக்கள், செய்யுள் முதற்சீரில் வருதல் நன்று. விலங்கும் நரகரும் வருதல் நன்றன்று.

உண்டி

அமுதம் என்றும் நஞ்சு என்றும் உணவு இரு வகைத்தாகும். அ, இ, உ, எ என்னும் நான்கு உயிரும், க, ச, த, ப, ந, ம, வ, என்னும் மெய்யெழுத்தும் இவ்வுயிர் மெய்யும் அமுத எழுத்தாகும்.

ஆ, ஓ இரண்டும் ய, ர, ல மூன்றும் இவ்விருவகை உயிர்மெய்யும் அளபெடையும் ஆய்தமும் ஐவகைக் குறுக்கமும் நஞ்சு எழுத்தாம். இழை பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார்ந்து நிற்பின் துஞ்சலும் நடுக்கமும் செய்யும்.

பால்

ஆண்பால், பெண்பால், அலிப்பால் என மூன்றே பால்கள். உயிரும் மெய்யும் என்னும் இருவகை ஐங்குறிலும் ஆண்பாலாம்.

உயிரும் உயிர்மெய்யும் என்னும் நெடில் ஏழும் பெண் பாலாம்.

ஒற்றும் ஆய்தமும் அலிப்பாலாம்.

அவ்வன் எழுத்தே அப்பாலுக்கு ஆகும்.

அலியெழுத்து நீங்கலாக மற்றவை விரவவும்படும்.

தானம்

அஆ, இஈஐ, உஊஔ, எஏ, ஒஓ என்று ஐவகையாகப் பிரித்துக் கொள்க. பாட்டுடைத் தலைவனுடைய இயற் பெயரில் முதலெழுத்திலுள்ள உயிர் மேற்காட்டிய ஐந்து குழுவில் எந்தக் குழுவில் வருகின்றதோ அக்குழுவை முதலாக வைத்துப் பால குமார அரச மூப்பு மரணம் என்று எண்ணிடில் பாட்டின் முதலெழுத்திலுள்ள உயிரெழுத்து பால குமார அரசு என்னும் நட்புத்தானத்தில் வருதல் நன்று மூப்பு உதாசீனமாம். மரணம் பகையாம். உதாசீனமும் பகையும் நன்றல்ல.

எ

சோமன்

வடக்கு 24

கன்னல்

7

வருணன் மேற்கு பிரமன் கிழக்கு பரிதி

2 ஒ-30 அ-6

18

தெற்கு

இயமன்

இ

12

8

புள் அ இ உ எ ஒ

ஐம்புள், வல்லூறு ஆந்தை வலியன் கோழி மயில்

9

நாள்

அசுவதி	சு - சூ - செ - சே - சை
பரணி	சொ - சோ - செள
கார்த்திகை	அ - ஆ - இ - ஈ
ரோகிணி	வ - வா - வி - வீ
மிருகசீரி	வெ - ஙவே - வை - வெள
திருவாதிரை	கு - கூ
புனர்பூசம்	கெ - கே - கை
பூசம்	கொ - கோ - கௌ
ஆயில்யம்	மெ - மே - மை
மகம்	ம - மா - மி - மீ - மு - மூ
பூரம்	மொ - மோ - மௌ
உத்திரம்	ப - பா - பி - பீ
அத்தம்	பு - பூ
சித்திரை	பெ - பே - பை - பொ - போ - பௌ
சுவாதி	த - தா
விசாகம்	தி - தீ - து - தூ - தெ - தே - தை
அனுஷம்	ந - நா - நி - நீ - நு - நூ
கேட்டை	நெ - நே - நை
மூலம்	யூ - யோ
பூராடம்	உ - ஊ - எ - ஏ - ஐ
உத்திராடம்	ஒ - ஓ - ஔ
திருவோணம்	க - கா - கி - கீ
அவிட்டம்	(ஞ - ஞா - ஞி) ஞா - ஞெ - ஞொ
சதயம்	தொ - தோ - தௌ
பூரட்டாதி	நொ - நோ - நௌ
உத்திரட்டாதி	யா
ரேவதி	ச - சா - சி - சீ

எழுத்து

யாப்பருங்கலம் நூல் உரைக்கும் ஆசிரியனது பெருமையை உணர்த்தும்வழி அவன் அறிந்திருக்கவேண்டிய

பல பொருள்களையெல்லாம் தொகுத்து உணர்த்துமிடத்து "எண்வகை மணமும் எழுத்தும் சொல்லும்" என்று குறிப்பிடுவதில் எழுத்தும் ஒன்றாகும்.

இனி எழுத்து நான்கு வகை; உருவெழுத்தும் உணர் வெழுத்தும், ஒலியெழுத்தும் தன்மையெழுத்தும் என எழுத்தினது விகற்பமும் எழுத்தினது புணர்ச்சியும் எழுத்ததி காரத்துட் காண்க.

அ, க, ச, உ, த, ப, ய முதலிய ஆயவெழுத்தும் அ, ச, ல, வ, ர, ங, ய முதலிய இராசி எழுத்தும், கார்த்திகை முதலிய நாள்எழுத்தும், தோபம் முதலிய நால்வகை எழுத்தும், சாதி முதலிய தன்மை எழுத்தும் உச்சாடனை முதலிய உக்கிர எழுத்தும், சித்திர காருடம் முதலிய முத்திற எழுத்தும், பாகியல் முதலிய நால்வகை எழுத்தும், புத்தேள் முதலிய நாற்கதி எழுத்தும், தாது முதலிய யோனி எழுத்தும் மாகமடையம் முதலிய சங்கேத எழுத்தும், கலி முதலிய சங்கேத எழுத்தும், பார்ப்பான் வழக்காகிய பதின் மூன் றெழுத்தும் என்ற இத்தொடக்கத்தனவும், கட்டுரை எழுத்தும், வச்சிரம் முதலிய வடிவெழுத்தும் மற்றும் பலவகையும் காட்டப்பட்ட எல்லா எழுத்தும் வல்லார்வாய்க் கேட்டுணர்க என்பர் (யா. விருத்தியாசிரியர் - பக். 577)

இவற்றுள் ஆய எழுத்து என்பது கூட்டு எழுத்தை உணர்த்தும். ஆ என்பது உயிரெழுத்தின் கூட்டத்தையும் க, ச, ட, த, ப, என்பன ஒவ்வொன்றின் வகையான நான் கெழுத்தையும் ய என்பது ய, ர, ல, வ, என்னும் நான்கையும் உணர்த்தும், அதனால் இவை ஆயவெழுத்து என்று கூறப்பட்டன.

11
உணர்தல்

'உணர்தல்' என்பது ஒருவன் உலகப் பொருள்களைப் புலனாலும், மனத்தாலும் அறிந்து கொள்ளுதலாம். எனவே அவ்வுணர்ச்சி புலனுணர்வு என்றும் மனஉணர்வு என்றும் இருவகைப்படுகிறது. உலகில் அப்பொழுது நேர்படும் பொருளைப் புலனால் உணர்வதெல்லாம் புலனுணர்ச்சி யாகும். ஐவகைப் புலனும் அவ்வப்பொழுது அறிந் துணர்த்தியவற்றைத் தன்னிடத்தே வைத்துக்கொண்டு புலன் இன்று உணர்ந்து தரும் பொருளை அன்றறிந்தவற்றோடும் இன்று அறிபவற்றோடும் கூட்டி உணர்வது மனஉணர்வாகும்.

'மனிதன்' என்னும் சொற்கு மனஉணர்வைச் சிறப்பாக உடையவன் என்று அறிஞர் பொருள் கூறுகின்றனர். தொல்காப்பியர்,

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

என்று ஐம்புல அறிவைக் கூறிவிட்டுப் பின்னர்,

ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே

என்று ஆறாவதாக மன அறிவைக் கூறுகின்றார்.

இந்நூற்பா உரையுள் இளம்பூரணர் இவ்வாறு அறிதலாவது:- **உடம்பினால்** வெப்பம் தட்பம் வன்மை மென்மை முதலியன அறியும். **நாவினால்** கைப்பு காழ்ப்பு துவர்ப்பு உவர்ப்பு புளிப்பு மதுரம் என்பன அறியும். **மூக்கினால்** நன்னாற்றம் தீநாற்றம் என்பன அறியும். **கண்ணினால்** வெண்மை செம்மை பொன்மை பசுமை கருமை நெடுமை குறுமை பருமை நேர்மை வட்டம் கோணம் சதுரம் முதலியன அறியும். **செவியினால்** ஓசை வேறுபாடும் சொற்படும் பொருளும் அறியும்.

மனத்தினால் அறிவது ஐம்புலனால் அறிந்தவற்றுள் இதுபோல்வன வேண்டுமெனவும் இது செயல் வேண்டுமெனவும் இஃது எத்தன்மைத்து எனவும் அனுமானித்தறிதல் என்பர். ஒன்றனோடு ஒன்றை ஒப்பிட்டறிதலும் மன அறிவின்பாற்பட்டவையாகும்.

திருவள்ளுவரும் ஐம்புலனால் உணர்ச்சி ஆகும் என்று கூறாமல், மனத்தான் ஆம் மாந்தர்க்குணர்ச்சி என்றே கூறுகின்றார்.

தொல்காப்பியர் உத்திவகையைக் கூறுகின்ற நூற்பாவில், உத்திவகையையெல்லாம் கூறிமுடித்தபின், "மனத்தின் எண்ணி அறத் தெரிந்து கொண்டு, இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்" என்று கூறுகின்றார். எனவே, எண்ணுதலும் தெரிதலும் உணருகின்ற மனத்தில் செயலாகின்றன.

மேலும் அவர் "புலன் நன்கு உணர்ந்த புலமையோர்" (அகத்திணையியல் - 14) என்றும், "நேரிதின் உணர்ந்தோர்" என்றும், "நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறு" என்றும் கூறுதலைக் கருதினால் ஒன்றை நன்றாக உணர்தலும் முறையாக உணர்தலும், நுணுகி உணர்தலும் ஆகிய இவையெல்லாம் உணரும் முறையினை உணர்த்துவதாகக் கொள்ள வேண்டும். உத்திவகையுள் உய்த்துணர்தல், அல்லது உய்த்துக் கொண்டுணர்தல் என்பது ஒன்று. அது புலவன் கூறிய பொருள் தெளிவாக விளங்காதபொழுது அப்பொருளை அறிதற்கு வேண்டிய நெறிகளிலெல்லாம் அறிவைச் செலுத்தி உணரும் முறையாகும். புலவர்கட்கு உய்த்துணர்வு வேண்டும் என்பதை,

எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்து
உய்த்துணர்வு இல்லெனின் இல்லாகும்

என்று குமரகுருபரர் கூறுதலைக் காண்க.

இந்த உய்த்துணர்வு பலரிடத்தில் இருப்பதில்லை. பரிமேலழகரிடத்தில் அந்த உய்த்துணர்வு இருந்ததாக அறிஞரொருவர் கூறுகின்றார்.

வடநூல் துறையும் தென்திசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பருள் நாண்ஒப் புரவுகண் ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவ முடையோன்
இத்தகை யன்றி, ஈசன தருளால்
உய்த்துணர் வுடையவோர் உண்மை யாளன்;
பரிமே லழக னெனப்பெயர் படைத்துத்
தரைமேல் உதித்த தலைமை யோனே

(திருக்குறள் - உரைப்பாயிரம்)

பர்மேலழகர் பெற்றிருந்த உய்த்துணர்வு இறைவன் திருவருளால் தோன்றியதென்று இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. திருவள்ளுவர் மேலே குறிப்பிட்ட நுணுகி உணர்தலைக் குறித்து,

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று

என்று கூறுகிறார். இக்குறளில் நுழை என்பதற்கு ஆராய்தல் என்றும், புலம் என்பதற்கு அறிவு என்றும் பொருள் கொள்ள வேண்டும். நுண்ணிதாய் மாட்சிமை யுடைத்தாகி நூல்களை ஆராய்ந்து பார்க்கும் அறிவு நுண்மாண் நுழை புலம் ஆகும்.

எனவே, ஒன்றை நன்றாக அறிதலும், முறையாக உணர்தலும் நுணுகி உணர்தலும் உய்த்துணர்தலும் ஆகிய இவையெல்லாம் மனஅறிவின் வகைகளாகின்றன. இந்த வகையாக அறியும் அறிவுவகையால் மக்கட்கு உணர்ச்சி கிடைக்கிறது. இந்த உணர்ச்சியால் மனிதன் பலவகையில் முன்னேற்றமடைகின்றான்.

திருவள்ளுவர் மக்களைக் கற்றவரென்றும் கல்லாதவர் என்றும் இரண்டாகப் பிரித்துக் கொள்கின்றார். கற்றவருடன் கல்லாதவரை ஒப்புக் கருதினால் அது மக்களையும் விலங்கையும் ஒப்புக் கருதினாற் போலும் என்று கூறுகிறார்.

சிந்தாமணியாசிரியர் கற்றல், கற்றதின் மேல் கட்டுரை கூறுதல், தன்மேற்கவி பாடுதல் எனக் கலை மூன்று. இவற்றில் வல்லவர் நால்வரை, குபேர மித்திரன் என்னும்

வணிகன் தன்மகள் குணமாலையைச் சீவகனுக்கு மணம்பேசி வருமாறு அனுப்பினான் என்று கூறுகின்றார்.

கற்றார், மற்றும் கட்டுரை
வல்லார்; கவியென்னும்
நற்றோர் மேலார் நால்வரை
விட்டாற் கவர்சென்றார் *(சிந்தாமணி - 1054)*

இப்பாட்டில் நச்சினார்க்கினியர் கருத்துப்படி நூல்களைக் கற்பது ஒருகலை; மற்றும் என்றதனால் கற்றதற்கு கட்டுரையில் வல்லராதல் ஒருகலை; கவிபாடுதலில் வல்லராதலும் ஒருகலை. இப்பாட்டின் உரையில் நச்சினார்க்கினியர் இம்மூன்று கலையும் வல்லவர் நால்வர் என்று குறிப்பிட்டுவிட்டு, இவர் நால்வரை நற்றோர் மேலாராய் அனுப்பினான் என்கின்றார். ஆனால் பாடல் செல்லும் நெறியைக் கருதினால் கற்றோரும், கட்டுரை வல்லாரும், கவி என்னும் நற்றோர் மேலாரும் ஆகியவருள் நால்வரை மணம்பேச அனுப்பினான் என்று கொள்ளலாம். எங்கனமாயின் கற்றல் ஒருகலை, கட்டுரைத்தல் ஒருகலை, கவிபாடுதல் ஒருகலை, அக்கலைகளுள் கவிபாடுதல் என்பது மிகச் சிறந்த கலையாகக் கருதப்படுகிறது.

நான்கு புலமை

புலமை என்னும் சொற்கு அறிவுடைமை என்று பொருள். சங்க இலக்கிய காலத்திற்குப் பின் அறிஞர் புலமையை நான்காகப் பகுத்து வழங்கியுள்ளனர்.

கவியே கமகன் வாதி வாக்கியென
இவையொரு நான்கே புலமைக் கியல்பே

கவிப்புலமை கமகப்புலமை வாதிப்புலமை வாக்கிப் புலமை எனப் புலமை நான்கு வகைப்படும் என்று திவாகரம் கூறுகிறது.

இந்நான்குள் கவிப்புலமையைப் பின்னர் கூறுவோம். அடுத்த கமகப் புலமையாவது; அரிய நடையாகிய ஞாபக நடையானும், தெளிந்த நடையாகிய செம்பொருள் நடையானுந் தான் நன்கு கற்ற நூலாலும் நன்கு கல்லாத நூலாலும் உணர்த்தவேண்டிய பொருளை உணர்த்தலாம்.

ஞாபகம் செம்பொருள் நடையினெப் பொருளும்
காசின் றுரைப்போன் கமக னாவான்

(திவாகரம்)

கல்லாத நூல்களும் கற்றோர் விரும்பக்
கவிக்கும் நெறியோன் கமக னாவான்

(நவநீதப் பாட்டியல்)

வாதிப் புலமையாவது; மேற்கொளும் ஏதுவும் எடுத்துக்காட்ட, அளவை நூல் இலக்கணத்தில் மாறு படாமல் தன் கொள்கையை நிலைநாட்டிக் கொள்கையை மறுக்கும் மூதுணர்வுடைமையாம்.

ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டி
போதி வளைவும் செய்துதன் சொன்னிறீஇ
வாதில் பிறர்கோள் மறுப்பான் வாதி

(திவாகரம்)

மேற்கோள் ஏது விடைநெறி காட்டி
நாட்டிய அளவை நன்னூல் வழாமைத்
தன்கோள் நிறீஇப் பிறர்கோள் மறுக்கும்
மூதுணர் வுடையோன் வாதி யாகும்

(நவநீதப் பாட்டியல்)

வாக்கிப் புலமையாவது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்களை உலகமக்கள் மனம் விரும்பிக் கேட்குமாறு இனிமையைகக் கூறும் ஆற்றலுடைமையாம்.

அறம்பொருள் இன்பம் வீடெனும் திறங்கள்
கேட்க வேட்க இனியன கூறும்
ஆற்ற லுடையோன் வாக்கி யாகும்

அறமுத நான்கின் திறந்தமை யிருந்து
கேட்போர் சித்தமும் விரும்பக் கிளக்கும்
தோற்ற முடையோன் வாக்கிய மாகும்

(நவநீதப்பாட்டியல் மேற்கோள்)

இனி முதற்கண் கூறிய கவிப்புலமையை ஆராய்வோம். மேலே சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் கற்றல் கட்டுரைத்தல் கவிபாடுதல் என்று மூன்று கலையினைக்

குறிப்பிட்டார். இங்கே கூறிய கமகப்புலமை வாதிப் புலமை வாக்கிப் புலமை என்னும் மூன்றும் அங்கே கூறிய கட்டுரைத்தல் என்னும் கலையில் அடங்கும். இங்கே முதலிற் கூறிய கவிப்புலமை அங்கே ஈற்றிற் கூறிய கவிக்கலையுள் அடங்கும்.

'கவி' என்பது பாவிற்குப் பெயர். **"தூக்கும் யாப்பும் செய்யுளும் கவியும், பாட்டும் கவிதையும் பாவெனப் டுமே"** என்னும் திவாகர நூற்பாவின் படி தூக்கு முதலிய ஆறுபெயர்களும் பாவிற்கு உரிய பெயராகும். அவற்றுள் ஒன்று கவி, கவிதை.

தூக்கு தாளத்தோடு கூடிய பாட்டு. இது ஓசை பற்றிய பெயர்.

யாப்பு எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு இவற்றால் யாப்பது; கட்டுவது. இது யாத்தலால் யாப்பாயிற்று.

செய்யுள் நால்வகைச் சொல்லால் பொருட்கு இடனாக வல்லவர் அணிபெறச் செய்வது, செய்யுளாம். இதுவும் தொழிலாற் பெற்ற பெயராகும். பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற் பல சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினில் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்.

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் (நன்னூல்)

பாட்டு பரந்த ஓசையை யுடையது.

கவி, கவிதை கருத்தினை உடையது, பல்வகை அறிவிதி திறன் அமைந்தது என்றபொருளில் இச்சொற்கள் வருகின்றன. இவை பண்படியாக வந்த பெயர்.

குதிரை வாய்பெய் கருவியும் குரங்கும்
புலமையில் ஒன்றும் வெள்ளியும் கவியெனல்

என்ற **பிங்கல நிகண்டின்படி** கவி என்னும் சொல் கடிவாளத்திற்கும், குரங்கிற்கும், புலமையில் ஒன்றிற்கும் வெள்ளி என்னும் கோளற்கும் பெயராகும். புலவன்

பாடுகின்ற பாடலுக்குப் பெயராக வரும்பொழுது கருத்து அறிவு என்னும் இரண்டு பொருளில் வரும். கருத்தை அறிவிப்பது கவி. அறிபொருளை அறிவிப்பது கவி.

எனவே, தூக்கு, யாப்பு, செய்யுள், கவி, பாட்டு, கவிதை என்பன கருத்தினை உட்பொருளாக வைத்துத், தாளத்துடன் கூடிய பரந்துபட்ட ஓசை அமையுமாறு எழுத்து அசை சீர் தொடை என்னும் இவை அமைந்த சொல்லால் ஆக்கப்பட்ட அடிகள் அமைய, உவமை முதலான அணிநலமும் மெய்ப்பாடும் விளங்கப், புலவன் பாடும் பாட்டாகும்.

கல்லாத மக்கள் தம் கருத்தைத் தாம் உரைக்கும் உரைநடையாற் கூறுவர். இதனை உலக வழக்கென்பர். கற்ற புலவன் தன் கருத்தைச் செய்யுள் நடையாற் கூறுவன். இதனைச் செய்யுள் வழக்கென்றும் புலனெறி வழக்கென்றும் கூறுவர். இவ்விரண்டில் புலனெறி வழக்கோ ஏட்டில் எழுதப்பெற்றுச் சிறந்ததாகக் கருதப் படுகின்றது.

மறைமலை அடிகளார் கருத்து

"அறிவுநிலை உணர்வுநிலை என்னும் இரண்டு நிலைகளைத் தந்து மிகுந்த பயனைத் தருவது பாட்டாம்.

உரை, பாட்டு என்ற இரண்டில் உரையும் அறிவுநிலை உணர்வுநிலையைத் தரும். பாட்டிற்கு மட்டும் ஏற்றம் என்ன வெனின்? பால் கறந்த மாத்திரையே உண்பார்க்கு அது சுவைபயக்கும் ஆயினும், பாலினை வற்றக் காய்ச்சி சருக் கரை முதலியன உடன்சேர்த்து உண்ணின் சிறந்த சுவையைப் பயக்கும். அதுபோல உரையினை வழு வில்லாமற் செய்து அச்சொல்லால் தொடை நலம்பட அணி தோன்ற நல்ல ஓசைபடப் பொருளினை அமைத்துச் செய்யுள் செய்யின் அப்பாட்டு மிக்க சுவையை விளைவிக்கும்" என்று பட்டினப்பாலை ஆராய்ச்சி உரையில் தவத்திரு மறைமலை அடிகளார் கூறியுள்ளார்.

திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை

இக்கவிதைத் துறை என்பது கருத்தும் கலையும் ஒருங்கு விளங்கும் இடம் ஆகும். கவிதையோ மக்களது துன்பம்

துடைத்து ஊன்றும் தூணாக நின்று அவர்களது வாழ்க்கைக்கு இனிமையளித்து உறுதியளிப்பதாயுள்ளது" என்று புறத்திரட்டு முன்னுரையில் உயர்திரு எஸ். வையா புரிப்பிள்ளை அவர்கள் கூறுகின்றார்கள்.

டாக்டர் சுப. மாணிக்கம்

பாட்டு என்றால் உணர்ச்சி துள்ள வேண்டும். கற்பனை செறிய வேண்டும், உவமை கலக்க வேண்டும். எதுகை மோனை இணைய வேண்டும். நயம் கனிய வேண்டும். நோக்கு இருக்க வேண்டும்" என்பர் இலக்கிய விளக்கத்தில் உயர்திரு டாக்டர் சுப. மாணிக்கம் அவர்கள்.

பிறர் கருத்து

புலவர்தம் நாவித்தகத்து நலம் அவரியற்றிய பாவினைச் சேர்ந்து உலகமெல்லாம் பரவுகின்றதாம்.

நாற்பா நடைதெரிந்த நன்னூற் பெரும்புலவர்
நூற்பால் நயந்த நுழைபொருளைப் - பாச்சார்த்தி
பாவித்துப் பார்மேல் நடத்தப் படருமே
நாவித் தகத்து நலம்

(யாப்பருங்கல விருத்தி - கழகம் - பக். 446)

புலவர் நாவினுள் கலந்துறை கலைமகள் அப்புலவர் இயற்றும் கவிதையைப் பற்றுக் கோடாகக் கொண்டு உலகமெல்லாம் வணங்கப் புறப்படுகின்றாள்.

புலந்துறை போகிய புலவர் நாவினுள்
கலந்துறை கலைமகள் கவிதை கந்தமா
நிலந்தொழப் புறப்படும் நிலையள் ஆருமி
லங்கிழை பெருமையை எண்ண வேண்டுமோ?

(யாப்பருங்கல விருத்தி - கழகம், பக். 441).

கவி தோன்றுவதற்குக் காரணம்

உள்ளமாகிய கடலுள் நூல்களாகிய மலையை நாட்டிக் கேள்வியைக் கயிறாக இட்டு இகழ்ந்திராமல் கடைய அப்பொழுது கவிதையாகிய அமிழ்தம் தோன்றுகின்றது.

உள்ளப் பரவையின் நூல்வரை
நாட்டியொண் கேள்வி தாம்பா
உள்ளப் படாமை இயையக்
கடையின் இசைபெ ருக்கும்
வள்ளற் குணநாவலர் வானோர்
களைவள மைப்ப டுக்கும்
வெள்ளக் கவிதை அமிழ்தமெல்
லார்க்கும் வெளிப்ப டுமே (யா - விரு - கழகம்)

மேற்பாட்டு முன்னோர் இலக்கியங்கள் சான்றோரிடத்தே கேட்ட கேள்விகள் என்னும் இவற்றால் முயலக் கவி தோன்றும் என்கிறது.

நிறையுடைக் கல்வி பெறுமதி மாந்தர்
ஈன்றசெங் கவி

(கல்லாடம்)

'நிறைந்த கவியைப் பெற்ற புலவர் இயற்றிய செம்மையான கவி, என்று கல்லாடம் கூறுவதை நோக்கினால் நிறைந்த கல்வி கவி தோன்றுவதற்குக் காரணம் என்பது புலனாகிறது.

இவ்வாறன்றிக் "கவிஞனிடத்திலே ஒரு ஆவேச உணர்ச்சி தோன்றுகிறது; அப்பொழுது அவன் கவி பாடுகிறான்; அந்த ஆவேச உணர்ச்சி இல்லாத பொழுது கவி தோன்றுவதில்லை" என்று மேனாட்டிறிஞர் சிலர் கருதுகின்றனர்.

அக்கருத்திற்கிசைய **உமாபதிசிவம்** என்னும் பெரியார் தாம் இயற்றிய சிவப்பிரகாசம் என்னும் நூலுள்,

விளம்பியநூல் அவையிரண்டும் விரும்பி நோக்கிக்
கருத்திலுறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்து பொது உண்மையெனக் கருதி யானும்
அருத்திமிக உரைப்பன்வளர் விருத்தம் நூறு

என்பர், தம் பரம்பரையில் முன்னோர் நூலாகிய சிவஞான போதம், சிவஞான சித்தி என்னும் இரண்டு நூல்களையும் விரும்பி நோக்கி, **என் கருத்தில் உரை திருவருளையும்** சிவாகமங்களையும் கலந்து சிவப்பிரகாசம் என்னும் பெய

ருடைய நூலை இயற்றுகின்றேன் என்கின்றனர். **உமாபதி சிவம்** கவி தோன்றுவதற்குக் கூறிய காரணம் நான்கில் திருவருளும் ஒன்றாகும்.

பத்தி உணர்ச்சியிற் கவிபாடிய மாணிக்க வாசகர் என்பவரும் **இறைவன் திருவருளால்** செம்புலச் செல்வர் ஆயினர் என்று திருக்கோவையார் உரைப்பாயிரம் உரைக்கும் செய்தியாம்.

தில்லை மூதூர்ப் பொதுவினிற் றோன்றி
எல்லையி லானந்த நடம்புரிகின்ற
பரம காரணம் திருவரு ளதனால்
திருவாத வூர்மகிழ் சிவமறை முனிவர்
ஐம்பொறி கையிகந்த தறிவாய் அறியாச்
செம்புலச் செல்வர் ஆயினர்

பாரதியார்,

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கம் மேவு மாயின்
பல்லத்தின் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வர்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் .கண்டார்

என்று கூறுகிறார்.

முறையாக இலக்கிய இலக்கணப் பயிற்சி பெற்றுச் சான்றோருடன் பழகிக் கேள்வி அறிவு பெறுவதும், தெய்வத் திருவருள் விளங்கப் பெறுவதும், உள்ளத்தில் ஒளி தோன்றப் பெறுவதும், ஆகிய இவையெல்லாம் கவி தோன்றுவதற்குக் காரணங்களாகக் கருதப்படுகின்றன, என்பதைக் கண்டோம்.

கவிவகை

இனிக் கவியின் வகைகளைப் பார்ப்போம். **யாப் பருங்கல விருத்தி ஆசிரியர்** கவி என்பார் **நான்கு வகைப்** படும். முதலாமவன் ஆசு கவி; அவன் கொடுத்த

பொருளும் தொகுத்த குழலும் அடுத்த தொடையும் வழுவாமல் கருத்து (ஆசு - விரைந்து) பாடுவர்; இவனுக்குக் கடுங்கவி என்றும் பெயர் உண்டு.

இரண்டாமவன் மதுர கவி; இவன் சொற் செல்வமும் பொருட்பெருமையும் உடைத்தாய்த் தொடையும் தொடை விகற்பமும் செறிந்து உருவகம் முதலிய அணிகளை உட்கொண்டு ஓசைப் பொலிவு உடைத்தாய், உய்த்துணரும் புலவர்கட்குச் செய்யுள் ஓசை கடல் அமிழ்தம் போல இன்பம் பயப்பதாய்ப் பாடுபவன்; இவனுக்கு இன்பம் பயப்பப் பாடுவதால் **இன்கவி** என்றும் பெயர் உண்டு.

மூன்றாமவன் சித்திர கவி; மாலைமாற்று முதலிய அருங்கவிகளைப் பாடும் இயல்பினன். இவனுக்கு அருங்கவி என்றும் பெயர் உண்டு.

நான்காமவன் வித்தார கவி; இவன் மும்மணிக் கோவையும் பன்மணிமாலையும் மறமும் கலிவெண்பாவும் மடலூர்ச்சியும் முதலாகிய நெடும்பாட்டுக் கோவையும் பாசண்டமும் கூத்தும் வித்தகமும் கதை முதலாகிய செய்யுளும் இயல் இசை நாடகங்களோடும் கலை நூல்க ளோடும் பொருந்தப்பாடும் பெருங்கவியாவான். இவனுக்கு அகலக்கவி. முத்தமிழ்க் கவி என்றும் பெயர் உண்டு" என்பர்.

மேலே நால்வகைக் கவிஞர்க்குக் கூறிய இலக் கணத்திலேயே நால்வகைக் கவிகட்கும் (பாடல்கட்கும்) இலக்கணம் அமைந்திருத்தலின் அவர் அவர் இலக்கணமே இங்கு கூறப்பட்டுள்ளன.

தனிப்பாடலும் தொடர்நிலைப் பாடல்களும்

மேலே கூறிய நால்வகைக் கவிகளுள் ஆசு மதுரம் சித்திரம் என்பன தனிப்பாடல்களாம். **யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்** ஒருபொருட்பாட்டு என்ற தனிப்பாடல் வகையைக் குறிப்பிட்டு அது ஒரு பாட்டிலே ஒன்றனையே வருணித்துப் பாடுவது என்பர். (கழகப்பதிப்பு யா-வி- பக்.542,543) வித்தார கவி அல்லது அகலக்கவி என்பது தொடர்நிலைச் செய்யுள்களாம்.

சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலைச் செய்யுள் களைக் **காப்பியம்** என்று வழங்கலாம் என்று கூறுகிறார். அடியார்க்கு நல்லார் (சிலப்-பதி8) எல்லாப் பாட்டுகளையும் **தண்டியாசிரியர்** முத்தகம் என்றும் குளகம் என்றும் தொகைநிலை என்றும் தொடர்நிலை என்றும் நான்காகப் பிரிக்கலாம் என்பர். **தண்டியாசிரியர்க்கு முற்பட்ட அணியியலார்** தனிநிலைச் செய்யுள் தொடர்நிலைச் செய்யுள் அடிபல தொடுத்த தனிப்பாச் செய்யுள் உரையிடை மிடைந்த பாட்டுடைச் செய்யுள் இடைநுவல் மரபின் செய்யுள் சாதி (இனம்)ச் செய்யுள் என அறுவகைப்படுத்திக் கூறுவர். (யா -வி-பக். 566)

கவி இலக்கு அல்லது காவிய இலக்கு

பாடல்களில் நல்லொழுக்க நெறி அல்லாதவற்றைப் பாடு பொருளாக அமைத்துப் பாடக்கூடாதென்பது தொல் **காப்பியர்** கருத்தாகும்.

அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே
வழக்கென வழங்கலும் பழித்த தென்ப
(தொல்-பொருளியில்-23)

ஒருவன் பிறன்மனைவி ஒருத்தியைக் களவில் நால்வகைப் புணர்ச்சியாலும் புணர்கிறான் என்று அகப்பொருள் பற்றிப் பாடுவதும், களவு முதலான தீய தொழில்களை இன்னின்ன வாறு செய்து இன்னார் பொருளீட்டி வாழ்ந்தார் என்று புறப்பொருள் பற்றிப் பாடுவதும் அறக்கழிவுடையனவாகும். மாண்பற்ற பொருள் பாடற் பொருளாக இருத்தல் கூடாதென்று அறிஞர் கருதுகின்றனர். கற்பனைப் புலவராகிய சிவப்பிரகாசர் தாருகன் என்ற அசுரன் போரில் முடியிழந்து அழகொழிந்த செய்தியைக் கூறவரும் பொழுது,

பொறையறு தவமும், மாட்சிப்
பொருளறு கவியும், ஆன்ற
மறையறும் உரையும், செரிய
மகவறும் வாழ்வும் நீதி
இறையறும் உலகும் அன்போ
டியைபறும் அறமும் போல

முறையறும் அவுணர் கோமான்
முடியிழந் தழகெ ழிந்தான்

(திருக்கூவப்புராணம்)

மாண்பற்ற பொருளைப் பெற்றால் கவி அழகழியும் என்கின்றார்.

காவியமாகிய பெருநூலின் இலக்கு மக்களை இல்லற நெறியிலோ அல்லது

துறவற நெறியிலோ புகுத்துவதாக இருத்தல் வேண்டும் என்பதை,

ஈதற்குச் செய்க பொருளை; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை - யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லைஇம் மூன்றும்
இருளுலகம் சேராத வாறு

என்னும் பாட்டில் அறநெறி சேர்தற்குச் செய்க பெருநூலை என்னும் சொற்றொடரால் திரிகடும் என்னும் நூல் கூறுகின்றது.

கவிக்குற்றம்

புலவர்கட்கு வடமொழியில் **தோஷஜ்ஞன்** என்றொரு பெயருண்டு. இப்பெயரின் பொருள் குற்றங்களை அறிபவன் என்பதாகும். தமிழில் ஆசிரியன் என்றொரு பெயர் உண்டு. இது குற்றங்களைப் போக்குபவன் என்ற பொருளுடையது. புலவர்தம் வேலையாவது எழுத்துச் சொல் பொருள் முதலானவற்றில் குற்றம் நிகழாமல் பாதுகாவலர் ஆக இருப்பதாகும். அதனால் புலவரை **மொழிக்காவலர்** என்றும் கூறுவதுண்டு.

பாடப்படும் கவியில் குற்றம் இருத்தல் கூடாது. குற்றம் இல்லாமல் அமைந்த கவியே சிறந்த கவியாகும் என்பது அறிஞர்தம் கருத்தாகும். குற்றங்களைப் பொதுவாக எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருட்குற்றம் என்று கூறிவிடலாம். யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் இன்னின்ன குற்றங்கள் கவியில் இருக்கக் கூடாதென்று விளக்கமாகக் கூறுகின்றார்.

பிரிபொருள் தொடர்மொழியும் முரண்மொழியும் ஒருபொருள்மொழியும் ஐயமொழியும் சொல்லிலக்கண வழுவும் என்னும் சொற்குற்றமும், முறை பிறழ வைத்தலாகிய வைப்புமுறைக் குற்றம் யாப்பில் வழுவும் நடை வழுவும் பொருளில் வழுவாகிய பொருள் வழுவும் புணர்ப்பு வழுவாகிய எழுத்துக்குற்றமும் கலையொடு, காலத்தொடு, உலகியலொடு, இடத்தொடு, மேற்கோளொடு, ஏதுவொடு, எழுத்துறையொடு, நூலொடு, மாறுபடும் மாறுபாட்டுக் குற்றமும், வெளிப்படக் கூறாமல் உய்த்துணர்வாகவே கூறுதலும் பலவாறு பொருள்படும் ஒட்டுப் பிரிமொழியாற் கூறுதலும் பிறிதுபடுமொழியும், பிசியும், உத்திமறுதலையும் ஆகிய இவையும் இடக்கர் இசையவும், இடக்கர்ப் பொருளவும் இடக்கர்ப்பட வரூஉம் சந்தி இசையவும் இன்னா இசையவும் எனக் கூறும் இவற்றுடன் மேற்கூறியவை யெல்லாம் சேர்ந்து இருபத்தேழு குற்றங்கள் கவியில் வரத்தகாதவையாகும். ஒருபுலவன் இக்குற்றங்கள் நிகழாமற் பாடினால் அப்பாட்டு சிறப்பாயிருக்கும். அவ்வாறின்றி மேற்கூறிய குற்றங்கள் விரவப் பாடின்,

அடங்காப் புதல்வர்ப் பயந்த பரத்தையின்
புறஞ்சொற் பெறூஉம் புலவ ரானே

என்று கூறுவர்.

சிறந்த கவி

எத்தகைய கவி சிறந்ததாகக் கருதப்படும் எனின், கற்பவர் தம் மனத்தைக் கவருகின்ற பொருள் அமைய, பலமுறை பாடினாலும் அவ்வப்பொழுதும் கேட்க விரும்புகின்ற ஓசைப் பொலிவும், சொற்களெல்லாம் இனிமையைத் தருவ தாய் விளங்கி உணர்த்தும் பொருளைத் தெளிவாக உணர்த் தும் தகுதியும் புதிய புதிய உவமைகளும் கற்பனைகளும் அமைய நல்ல மெய்ப்பாடும் தோன்றிப் பாடல்களைப் பாடினால் அப்பாட்டு சிறந்த பாட்டாகக் கருதப்படும் என்க.

கற்பார் மனத்தை இழுக்கின்ற
கருத்தும் கேட்க மிகவிரும்பும்
சொற்பால் அமைந்த நல்லிசையும்
சொற்கள் இனிதாய்த் தெளிவாகப்

பொற்பார் பொருளைத் தருந்திறனும்
புதிய உவமமும் புனைந்துரையும்
நற்பால் அமைந்த மெய்ப்பாடும்
நண்ணத் தொடுப்பின் நற்கவியாம்

இப்பாடல், தொடுப்பின் என்றதனாலே தொடைவகை அமையுமாறும் பாடுதல் சிறப்பென்க.

உணரும் திறஞ்சால் மனத்தகத்தே
உணர்ச்சி வெள்ளம் மிகுத்தோட
இணரும்மலரும் நறுமணமும்
இசைந்தாற் போலச் சொற்றிரளும்
புணரும் பொருளும் மெய்ப்பாடும்
பொருந்தி நிற்கப் புனைவுற்று
வனரும் வண்ணப் பெருக்கதனை
வார்க்கும் பாட்டே பாட்டம்மா

12
உணர்த்தும் முறை

செய்யுள்

நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர உரையுள் செய்யுளாவ்து, "பாட்டுரை நூலே" (செய்யுளியல்-78) என்னும் செய்யுளியற் சூத்திரத்தாற் கூறிய ஏழு நிலமும்,

அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப

(செய்யுளியல்-102)

என்னும் நூற்பா விதியின்படி அறம் முதலிய மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது என்பர்.

நன்னூலாசிரியர் பலவகைத் தாதுப்பொருளால் உயிர்க்கு இடமாகப் படைக்கப்பட்ட உடம்பினைப் போல, பல சொல்லால், பொருளுக்கு இடனாக, உணர்வினின் வல்லவர் அணிபெறச் செய்வன செய்யுள் என்பர். இவர் செய்யுள் உணர்த்துபவனை உணர்வினில் வல்லோன் என்று கூறி, அவன் சொற்களைக் கருவியாக எடுத்துக் கொண்டு, பொருளுக்கு இடம் ஆகுமாறு, அணிபெறச் செய் கின்றான் என்பர்.

எனவே செய்யுளை ஆக்குவதற்கு உணர்வினில் வல்லவன் நிமித்த காரணன் ஆகின்றான். அவனுடைய உணர்ச்சி முதலியவை துணைக்காரணம் ஆகின்றன. பலவகைச் சொல் முதற்காரணம் ஆகும். இக்காரணங்களால் இயன்றசெய்யுள் உடம்பு அல்லது சட்டகம் என்று கூறப்படும். பாடுதற்கு எடுத்துக்கொண்ட பொருள் உயிராகும். புலவன் பலவகைச் சொல்லுள் பொருளை வைத்து அணிபெறச் செய்வது உணர்த்தும் முறை ஆகும். குமரகுருபரரும் செய்யுளை உடம்பென்று கூறியதை அவர் பாட்டால் அறியலாம்.

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்

வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு
(இவர் - தமிழ்ப்புலவர், செய்யும் உடம்பு - செய்யுள்)

செய்யுள் என்பது ஒரு மானிடன்

வீரசோழிய நூலார் சொற்களே உடம்பாகவும், பொருளை உயிராகவும் செய்யுளில் உள்ள வண்ணமே உடம்பின் நிறமாகவும், செய்யுளின் நடையே (நெறி) செலவாகவும் அமைந்த செய்யுளாகிய மானிடன்; அவன் அணிந்து கொள்ள தன்மை முதலான அணிகளைக் கூறுவேன் என்று அலங்காரப் படலத்தின் முகப்பில் கூறுகிறார். இதனால், செய்யுள் என்னும் மானிடனுக்குச் சொற்கள் உடல்; உணர்த்தும் பொருள் உயிர்; ஓசை அல்லது வண்ணம் உடல் நிறம்; அப்பாட்டின் நெறியே அம் மானிடனின்இயக்கம் என்று கருத வைக்கிறார்.

அவனுடைய நல்ல உறுப்பும் பழித்த உறுப்பும்

மேலும் அவர், அச்செய்யுள்மனிதனுக்கு இது இது நல்ல உறுப்பென்றும், இது இது பழித்த உறுப்பென்றும் கூறுகின்றார். நாடக வழக்கு உலகியல் வழக்கொடு பொருந்தி, வடமொழி எழுத்தினை நீக்கி, உணர்பவர்க்கு இனிமையைத் தந்து, உயர்ந்தோரால் தம் செய்யுளுள் எடுத்தாளப்பட்டு, முறைப்படி உண்மைப் பொருளுணர்ச்சியைத் தருகின்ற சொற்களே நல்ல உறுப்பாம். அவ்வாறின்றி மாறுபட்ட வழக்கொடு கூடி, உணர்பவர்க்கு இன்பம் செய்தலின்றி, வடமொழி எழுத்துக்களோடு கூடி, இது சான்றோர் செய்யுளுள் பயிலாதன என்றுகூறப்பட்டுத், திரிபுப் பொருளையும், ஐயப்பொருளையும் தருகின்ற சொற்க ளெல்லாம் பழித்த உறுப்பாம்.

அவனுடைய சிறப்பான உயிரும், சிறப்பில்லாத உயிரும்

மற்றும் அவர், அச்செய்யுள் மனிதனுக்குச் சிறப்பான உயிர் இன்னது, சிறப்பில்லாத உயிர் இன்னது என்பதையும் அடுத்துக் கூறுகின்றார். கேட்பவர்க்கு இன்பத்தினைத் தரு வதும், அவர் கருதும் உயர்ந்த பொருளாகக் காட்சி

யளிப்பதும், குற்றங்கள் இல்லாததும் ஆகிய பொருள் அமைவே செய்யுள் என்னும் மனிதனுக்குச் சிறப்புயிராம், கேட்பவர்க்கு வெறுப்பைத் தருவதும் தெளிவாக விளங்காமையும் குற்றம் நிறைந்ததும் ஆகிய பொருள் அமைவே அவனுக்குக் குற்றமான உயிராகும் என்பர்.

அணிபெற உணர்த்துலும் உயிராகும்

மேற்கூறியவற்றால், செய்யுள் என்னும் மனிதனுக்குப் பொருளே உயிரென்று கருதப்படுகிறது. அப்பொருள் என்னும் உயிரையே அலங்காரமாகச் (அணிபெறச் செய்வன) செய்க என்று வீரசோழியம் (147) கூறுவதால் பொருளை உணர்த்தும் முறையும் பொருளை உணர்த்தும் காரணத்தால் உயிரென்றே கூறப்படுகிறது.

தன்மையும் கற்பனையும் என்று இரு வகைத்து

அணியினைத் தன்மை என்றும், கற்பனை என்றும் இரண்டு கூறாக வகுத்துக் கொள்வோம். ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே கூறினால் அது தன்மை நவிற்சி என்னும் அணி முறையாகும். அவ்வாறின்றி, எடுத்துக் கொண்ட பொருளுக்கு உவமை கூறுதலும், உவமையும் பொருளும் வேற்றுமை ஒழித்து ஒன்றென உருவகித்துக் கூறுதலும், இன்னும் வெவ்வேறு வகையாகக் கூறுதலும் ஆகிய இவை எல்லாம் கற்பனையின் பாற்படும்.

கற்பனையில் மகிழ்ச்சி

உலகம் கற்பனையில் சுவை காண்கின்றது. இவ்வுலகத்துள் சில குழந்தைகள் கூட, கற்பனை செய்து களிக்கிறது. அது ஏனைய குழந்தைகளுடன் கூடி விளையாட்டு நிகழ்த்தும்பொழுது, தெருவில் உள்ள கற்கள் கிளிஞ்சல்கள் முதலியவற்றைப் பொறுக்கி எடுத்து வைத்துக்கொண்டு, அதற்குக் காசுகள் என்று பெயர் சூட்டி, அக்காசு என்ற நினைவுடனே கொடுக்கல் வாங்கல் செய்து மகிழ்வடையக் காண்கின்றோம். இவ்வாறு கற்பனை செய்து

மகிழ்வடையுமாறு அக்குழந்தைகட்குக் கற்பித்தவர் யார்? கற்பனையில் மகிழ்ச்சி பெறுதல் எல்லோருக்கும், அதிலும் கற்றுவல்ல புலவனுக்கு இயல்பாக உள்ளது.

1. பாப்பா செய்யும் காரியங்கள்
   பலபே ருக்கும் வியப்பாகும்
   கேட்பா ரற்றுக் கிடக்கின்ற
   கிளிஞ்சிலைக் கல்லைப் பொறுக்கிக்கொள்ளும்

2. காசுக ளென்றே கருதிக் கொள்ளும்
   கருத்தாய்க் கொடுத்து வாங்கிக் கொள்ளும்
   தூசினைப் போலே சிலர்கூறித்
   தொட்டால் அவரைக் கடிந்து கொள்ளும்

3. ஒன்றை ஒன்றாய்க் கருதிடுதல்
   உயர்ந்த புலவன் கருத்தென்பர்
   என்றும் அந்தக் கருத்தினையே
   இயற்றிக் களிக்கும் குழந்தையினம்

கற்பனை என்பது என்ன? " ஆரோபம் அத்தியாசம் கற்பனை ஆவதெல்லாம் ஓரோர் வத்துவினை வேறே ஓரோர் வத்துவென ஓர்தல்' என்று கற்பனைக்கு விளக்கம் கூறுகிறது **கைவல்ய நவநீதம்** என்னும் வேதாந்த நூல்.

ஆரோபம், அத்தியாசம் என்பன வடமொழிச் சொல், கற்பனை என்பது தமிழ்ச்சொல் இம்மூன்றும் கற்பனையைக் குறிக்கும் சொல்லாகும். ஒரு பொருளை மற்றொரு பொரு ளாகக் கருதும் உணர்ச்சியே கற்பனை என்று கூறப்படுகிறது. ஒரு வெண்கல் துண்டினைப் பார்த்துப் பனிக்கட்டி என்று கருதினால், இது உள்ளதை உள்ளவாறு அறியும் அறிவு நிலைக்குச் சிறிதும் பொருந்தாது. அவ்வாறு அறிபவனை அறிவுத்திரிபுடையோன் என்று கருதுவோம். ஆனால், ஒரு சிறுபெண் குழந்தையொன்று விளையாடிக் கொண் டிருக்கிறது. அதை ஒருவர் கண்டு என்ன செய்கிறாய் என்று வினாவுகிறார். அவரும் குழந்தையும் பேசிக்கொள்ளும் உரையாடலைக் கீழே காண்க.

1. சின்ன பாப்பு! சின்ன தங்கம்!
என்ன செய்கிறே?
சீக்கி ரமாய்ப் பாலைக் காய்ச்ச
அடுப்பு மூட்டுறேன்

2. பாலைக் காய்ச்சிப் பசியும் தீரக்
குடிக்கப் போறியா?
பானையிலே தயிரைத் தோய்த்துக்
கடையப் போறியா?

3. குடிப்ப தற்கும் கடைவ தற்கும்
பாலைக் காய்ச்சலே
குழந்தைக் காகப் பாலைக் காய்ச்சிக்
கொடுக்கப் போகிறேன்.

4. யார்கு ழந்தை? எங்கி ருக்குது?
அதனைச் சொல்லணும்?
யாரும் அதனை வளர்ப்ப தற்கே
எண்ண வில் லையா?

5. தாயும் இல்லை! தந்தை இல்லை!
மிகவி ரங்கணும்
தச்சன் செய்து விற்று விட்டான்
தயவும் இன்றியே

6. காசு கொடுத்து ஆசை யாக
நானும் வாங்கினேன்
கவலை கொண்டு அன்று முதல்
நான் வளர்க்கிறேன்.

மேற்கண்ட பாடலில், அச்சிறு குழந்தை மரப்பாவை ஒன்றினை குழந்தையாகக் கற்பனை செய்துகொண்டு, குழந்தையைத் தாயர் எவ்விவவ்வாறு வளர்ப்பார்களோ அது போன்ற செயலைச் செய்து, விளையாடிப் பெரு மகிழ்ச்சி அடைகின்றது. இக்குழந்தை தெருவில் மரப்பாவை விற்றுக்கொண்டு போன தச்சனைக் கண்டு அழைத்து, தனக்கு விருப்பமான மரப்பாவை ஒன்றைப் பார்த்து ஆராய்ந்து எடுத்துக் கொண்டது. இப்பொழுது அதன் உள்ளத்தில் மரப்பாவை என்று கருதும் உண்மை அறிவே, இருக்கக் காண்கின்றோம். ஆனால் அக்குழந்தைக்கு அம்

மரப்பாவையை வைத்து விளையாடும்பொழுது அந்த அறிவில்லை. அப்பொழுது விளையாடுவதற்குரிய, விளையாட்டு இன்பமாய் நிகழ்வதற்குரிய வேறொரு விதமான உணர்ச்சியைக் கையாள்கிறது. அதுபோலப் புலவனும் இலக்கணம் முதலான நூல்களைக் கற்கும்பொழுதும் படைக்கும்பொழுதும் உண்மை அறிவில் இயங்குகின்றான். அதைவிட்டு, இன்புறுத்தும் இலக்கியத்தைக் கற்கும் பொழுதும், படைக்கும் பொழுதும், கற்பனை உணர்வில் முழுகுகின்றான். அவன் எவ்வளவுக்கு எவ்வளவு கற்பனை உணர்வில் நினைக்கின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு அவன் படைக்கும் இலக்கியம் இனிப்பைத் தருவதாக அமைகிறது.

புனைந்துரை

கற்பனைக்குப் புனைந்துரை என்றபெயரும் உண்டு. யாப்பருங்கல விருத்தி ஆசிரியர், (கழகப்பதிப்பு - 424) "புனைந்துரை இரு திறத்தன; பெரியதனைச் சுருக்கிச் சொல்லுதலும், சிறியதனைப் பெருக்கிச் சொல்லுதலுமென" என்பர். தொல்காப்பியரும் அக்கருத்தினை,

பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்
குறிப்பின் வரூஉம் நெறிப்பா டுடைய

(உவமம் -10)

என்னும் நுற்பாவால் புனைந்துரையாகிய பெருமையும் சிறுமையும் சிறப்பின் வரூஉம் வழக்கப்பாட்டினையுடைய என்று கூறுவர். அந்நூற்பாவுரையில் இளம்பூரணர் வழக்கின்கட்பயின்று வாராத இறப்ப உயர்தலும் இறப்ப இழிதலும் ஆகா என்பர். அவ்விரண்டும் சிறப்பொடு கூடி வரல் வேண்டும் என்பர்.

உவமை

தொல்காப்பியர் காலத்திலே உவமை எடுத்துக் கொண்டதினைப் பொருளைத் தெளிவு பெற உணர்த்து வதற்காகவே எழுந்தது.அவர்,

உள்ளுறை உவமம் ஏனைஉவம மெனத்
தள்ளா தாகும் திணைபுணர் வகையே

(அகத்திணையியல் - 49)

என்றே கூறியுள்ளார். அந்நூற்பாவுரையில் உள்ளுறைக்கண் வரும் உவமமும், ஒழிந்த உவமமும் என இருவகையாலும் திணை உணரும் வகை (திணைப்பொருளை உணரும் வகை) தப்பாதாகும் என்பர். தொல்காப்பியர் உவமை அணி குறித்து வரும் என்று எங்கும் கூறவில்லை. தருக்க நூலார் உவமையை ஓர் அளவையாகக் கூறி, அது ஒப்புமை உணர்வால் பொருளைப் புலப்படுத்த வரும் என்பர்.

இளம்பூரணர் உவமையியல் தொடக்கத்தே, உவமை கூறுவதால் பயன் என்னை என்று வினாவிக்கொண்டு, புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும் பயனாமென்பர். பிற்காலத்து அணியிலக்கண நூலாரெல்லாம் உவமையை அலங்காரம் கருதியே கூறுகின்றனர். (அலங்காரம்; அலம் கிருதம்; அலங்காரம் அலங்கிருதம் என்னும் இரண்டிற்கும் அழகினைச் செய்வது என்றே பொருள்)

உவமை என்னும் சொல்

'உபமானம்' என்னும் வடசொல் உவமை எனத் திரிந்தது என்பர் வடமொழியறிவுடையோர். வடமொழி அலங்கார நூலார் உவமையை உபமானம் என்றும், பொருளை உபமேயம் என்று வழங்குவர். உபமானம் என்றால் பொருள் என்ன? 'உப' என்றால் அண்மை, பிரதானமில்லாதது என்று பொருள் கூறுவர். ஒரு பொருளையும் மற்றொரு பொருளையும் அண்மையில் நிறுத்தி, ஒப்புக் கூறுவதற்குப் பொருந்தி வருவது உபமானம் என்பர். அந்த உபமானத்தால் உணர்த்தப்படுவது உபமேயம் என்பர். அந்த உபமானம் என்னும் சொல்லையே உவமானம், உவமை என்று திரித்துக் கொண்டனர் என்பர். இந்த இடத்தில் ஒரு வினா தோன்றுகின்றது. என்னவெனில்? தொல்காப்பியர் உபமானத்தை உவமை என்கின்றனர்; உபமேயத்தைப் பொருள் என்கின்றனர். **உபமானம் என்னும் உவ சொல்லை உவமை என்று திரித்து எடுத்துக் கொண்டாராயின் உபமேயம் என்னும் சொல்லையும் உவமேயம் என்று** திரித்து வழங்க வேண்டும். எங்கும்

அவர் அவ்வாறு வழங்கியதாகத் தெரியவில்லை. அவர் உபமேயத்தைப் 'பொருள்' என்றே கூறுகின்றார்.

உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும் (உவம -6)

பொருளே உவமஞ் செய்தனர் மொழியினும் (உவம-9)

சுட்டிக் கூற உவமம் ஆயின்
பொருளெதிர் புணர்த்து (உவம-7)

என்னும் நூற்பாக்களிற் காண்க.

அவ்வாறாயின், 'உவமை' என்ற சொல் எதனடியாகப் பிறந்திருக்கும் என்று வினாவின், 'உவ' என்னும் சுட்டிடைச் சொல் அடியாகப் பிறந்தது.

உவக்காணெனங் காதலர் செல்வார் இவக்காணென்
மேனி பசப்பூர் வது

என்னும் திருக்குறளை நோக்குக, உவக் காண் - உங்கே பார். எம் காதலர் செல்வார் - எம் காதலர் எம்மைப் பிரிந்து செல்வாராயினர். இவக்காண் - இங்கே பார். எம்மேனி பசப்பூர்வது.

மேற்கண்ட குறளில் உவ, இவ என்ற சுட்டுச் சொல்லை நோக்குக. அவ்விரண்டு சொல்லில், 'உவ' என்ற சுட்டுச் சொல்லின் அடியாக 'உவமை' என்ற சொல் பிறந்தது. உவமை என்பது, ஒரு உயர்ந்த பொருளை எடுத்து நிறுத்திக்கொண்டு, அதன் பின் தான் கூறக்கருதிய பொருளைக் கூறி, அப்பொருளிலே உள்ள இன்னதன்மை, இப்பொருளிலே உள்ள இன்ன தன்மையோடு ஒப்பா யுள்ளதென, அன்ன, போல முதலான சொற்களால் சுட்டிக் கூறுவதாகலின், அது 'உவ' என்னும் சொல்லினடியாகப் பிறந்த சுட்டுச் சொல்லால் உண்டாகிய உவமை என்னும் சொல்லாற் குறிக்கப்பட்ட தென்க. உவமையில் சுட்டிக் கூறும் வழக்கம் உண்டு என்பதை 'சுட்டிக் கூறா உவமம் ஆயின்' (உவமவியல் -7) என்னும் நூற்பாவால் உணர்க. உவமையிலிருந்து தோன்றியவையே உருவகமும் பிற அணிகளுமாகும்.

எடுத்துக்கொண்ட பொருளைச் சொல் உணர்த்து கின்றது. உவமப் பொருளையும், உருகவப் பொருளையும்,

பிற அணிப்பொருளையும் அச்சொல்லுடன் கலந்து கற்பனை அழகு தோன்றப் புலவன் உணர்த்துகிறான்.

புலவன் தான் கருதிய பொருளை வினைபற்றி, பயன் பற்றி, பண்பு பற்றி உணர்த்தக் கருதிய பொழுது, அதற்கேற்ற உவமைப்பொருளை வைத்து அணிபெற உணர்த்துகின்றான். அவ்வாறு உணர்த்தும்பொழுது தாமரை போலுள்ளது, முகம். புலி போலும் சாத்தன், பவழம் போன்றது வாய், துடி போன்றது இடை என்று ஒப்புமை ஒன்றையே கருதி போல என்னும் சொல்லால் முற்றிலும் உவமை கூறிக் கொண்டு போனால், அது கற்பவர்கட்குச் சுவையைக் குறைத்து விடும். தாமரை மதிக்கும் முகம் தாமரையை வெல்லும் முகம், தாமரையை ஒட்டும் முகம், தாமரையைக் கடுக்கும் முகம், தாமரை மருளும் முகம், தாமரையைக் காய்க்கும் முகம், தாமரையை உறழும் முகம் என்று உவமையைப் பல சுவைப்படி மாற்றிக் கூறுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

தாமரையை எள்ளும் முகம் என்றால் பொருளாகிய முகம் உயர்ந்ததாகிய தாமரையை எள்ளக்கூடிய வகையில் சிறந்திருக்கின்றது. தாமரை விழையும் முகம் என்றால் உயர்ந்ததாகிய உவமையும் விரும்பும் வகையில் பொருள் ஆகிய முகம் சிறந்திருக்கின்றது. இவ்வாறு உவமைக்கும் பொருளுக்கும் பலதிறச் செயல்களைக் சொல்லி கற்போர் காமுறுமாறு உவமையாகக் கூறவேண்டும்.

உவமை மெய்ப்பாடு

மெய்ப்பாட்டியலை அடுத்துப் பின்நிற்பது உவம இயல்; உவம இயலை அடுத்து முன் நிற்பது மெய்ப் பாட்டியலாகும். அதனால், உவமை கூறும்பொழுது எட்டு மெய்ப்பாடும் தோன்றுமாறு கூறுதல் வேண்டும். இதனைத் தொல்காப்பியர்,

பெருமையும் சிறுமையும் மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்றும் என்ப (19)

என்பர்.

உவமை உணர்த்துவது

வினை, பயன் , மெய், உரு என்பனபற்றி உவமை தோன்றினாலும் அது ஒன்றைச் சிறப்பிக்கவும் ஒன்றானது நலனைச் சொல்லவும் காதலைக் கூறவும் வலிமையைச் சொல்லவும் வரும். அவ்வாறன்றி ஒன்றின் கீழ்மையைப் புலப்படுத்தவும் உவமை வரும்.

உள்ளுறை உவமை

உவமையில் உள்ளுறை உவமை என்பதொன்றுண்டு. அது உவமை ஒன்றனையே செயற்படுத்திக் கூற அதைச் சிந்தித்துப் பொருளின் செயல்முறையை அறிந்து கொள்வது உலக வழக்கில் உவமை மிகுதியும் தோன்றுகின்றது. அது போல உள்ளுறையும் மறைத்துக்கூற வேண்டிய இடத்தில் ஆளப்படுகின்றது. நான் உறவினர் ஒருவர் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அவருக்கு இரண்டு மனைவி. அப்பொழுது இளைய மனைவியிடத்தில் அவர் உணவுண்டு வருகின்றார். மூத்த மனைவிக்கும் இளைய மனைவிக்கும் பகை உண்டு. அவர் வீட்டிற்குச் சென்ற யான் அவர் மூத்த மனைவியிடத்தில் பேசிக் கொண்டிருந்தேன். அவ்வம்மையாரின் கணவனும் வந்து அப்பேச்சில் கலந்து பேசிக் கொண்டிருந்தார். இதனை இளையமனைவி பார்த்தாள். மூத்தவளோடு எந்தப் பேச்சும் பேசக்கூடாதென்று அவள் கருதுகிறாள். கருதியதை வெளிப்படையாக உணர்த்த முடியவில்லை. பக்கத்தில் பசு ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதன் கன்று அதனிடம் முட்டி முட்டி விளையாடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து இளையமனைவி, "என்ன கண்ணுக்குட்டி! உங்க கிழட்டு ஆத்தாளே (அப்பசு கிழப்பசு) முன்ன பின்னே கண்டதில்லையா? சும்மா சும்மா உங்க ஆத்தாக்கிட்ட குழையிறையே" என்று கூறி அதட்டினாள். கணவனும் மூத்தமனைவியிடம் பேச்சை நிறுத்திக் கொண்டு எழுந்து சென்றுவிட்டார். நான் அப்பொழுது கருதிக் கொண்டேன். உள்ளுறை உவமை அகத்திணை இலக்கியத்தில் புலவரால் ஆளப் படுவது. அது செய்யுள் வழக்கிற்கே உரியது என்று கருதுகின்றனர். ஆனால் அது உலக வழக்கதிலேயே நன்றாகக் காணப்படுகின்றது என்று கருதிக் கொண்டேன்.

உணர்த்தும் முறையில் உள்ளுறை

சில சொற்களை நாம் கேட்கும்பொழுது சில இலக்கியங்களை நாம் படிக்கும்பொழுது கருத்தாழமில்லாதவற்றை வெள்ளைச்சொல், வெள்ளைக்கவி என்று கூறி வருகிறோம். சாதாரண அறிவுடையவருக்குப் புலப்படாமல் ஆழ்ந்த அறிவினருக்குப் புலப்படுமாறு உள்ளுறைப் பொருள் அமைந்த இலக்கியமே மிகச் சிறந்த இலக்கியமாகப் புலவர்களால் கருதப்படுகின்றது. தொல்காப்பியர் உள்ளுறைப் பொருள் தருவனவற்றைத் தொகுத்து உடனுறை, உவமை, சுட்டு, நகை, சிறப்பு என கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்து என்று கூறுகின்றனர். அவ்வைந்தில் 'உவமம்' என்பது உள்ளுறை உவமமாகும். உள்ளுறை உவமமும் ஏனை உவமமும் திணைப்பொருளை உணர்த்தும் என்று தொல்காப்பியர் அகத்திணைஇயலில் கூறுகிறார்.

இறைச்சிப் பொருள்

மேற்கூறிய உள்ளுறைப் பொருள் தரும் ஐந்தில் 'உடனுறை' என்பது ஒன்று. அதனை நச்சினார்க்கினியர் " உடனுறை - நான்கு நிலத்தும் உள்ளவாய் அந்நிலத்துடன் உறையும் கருப்பொருளால் பிறிதொன்று மறைத்துக் கூறும் இறைச்சியும்" என்று விளக்கம் தந்துள்ளார்.

13

மொழிநடை

இயலிசை நாடக மெனுமுத் தமிழின்
இயல்பும் இயலும் நடையும் வேறாம்
இயற்றமிழ் தம்முள்
தொல்காப் பியர்தம் காலத் தெழுந்த
செய்யுள் நடையைச் செப்பிடின் இருவகை
அடிவரை உடையன அடிவரை இலவென
வகுக்கப் பட்டு, வழங்கிடும் உலகில்
அடியின் ஈட்டத் தழகுபெற் றியலும்
அடிவரை யுடைய அழகிய தொடைபுணர்
பாட்டின் நடையே பற்பல வகையாம்
அவற்றுள்,
அகவிக் கூறும் ஆசிரிய நடையும்
செப்பிக் கூறும் வெண்பா நடையும்
தூங்கி இசைக்கும் வஞ்சி நடையும்
துள்ளி ஒலிக்கும் கலிப்பா நடையும்
செப்பலும் அகவலும் சேர்ந்து மயங்கிய
மருட்பா நடையும் பலபா வுறுப்பினைப்
பரிந்துநின் றேத்தும் பரிபாடல் நடையும்
வெவ்வே றாக விளங்கி நடக்கும்
அடிவரை இலாத செய்யுள் யாவும்
நூற்பா நடையெனும் இலக்கண இயல்நடை
உரையின் வகையென உரைக்கும் பலநடை
பிசியின் நடையே மந்திர நடையே
அங்கத நடையே முதுமொழி நடையென
உலகின ரிடத்தே வழங்கப் பட்டு
வழங்கின அன்று வகைவகை யாக
பிற்கா லத்தே பெருகிய நடையுள்
பாநடை வேறே; இனநடை வேறே;
பாநடை நிற்க; இனநடை தானே
புலவரைக் கவர்ந்த புதுநடை யாகும்;
இலக்கிய நடையை இனிதுறக் கிளப்பின்

தனிப்பாடல் நடையே தகமுதல் எழுந்தது
அதனுள்
சான்றோர் என்னும் சங்கப் புலவரின்
பாடல் நடையே பண்புள நன்நடை;
அதுவே,
அகப்பொருள் நடையாம் காதல் நன்னடை
புறப்பொருள் நடையாம் பொருள்செய் நன்னடை
என்னும் இரண்டாய் எழுந்துநின் றதுவே;
பின்னர் வந்த பெருமைசால் புலவர்
தொடர்நிலைப் பாடல் தோன்ற இசைக்கக்
காப்பிய நடையே கவின்பெற எழுந்தது
சிற்றிலக் கியநடை சேர எழுந்தது
பொருள்வேறு பாட்டால பாவேறு பாட்டால்
பலவா யினவே சிற்றிலக் கியநடை
இவையன்றி,
செம்மை குறையாச் செந்தமிழ் நடையாம்
சேரன் தமிழ் சிலம்பை இசைத்தது
செந்தமிழ் நடையே, செப்பினர் அவர்தாம்
கோடி வழங்கும் கொடுந்தமி ழாலே
கூறும் இலக்கியம் கொடுந்தமிழ் நடையே
புலவர்க் குரிய பொருள்நிறை மொழியால்
செய்யுள் செய்வது செந்தமிழ் நடையே
உலக மக்கள் உரைத்திடும் மொழியால்
செய்யுள் செய்யின் சிறந்ததன் றேனும்
எளிய நடையாய் எளிதில் பொருள்வரும்
சிலதள நோக்கிச் செம்மை யிலாத
கொடுந்தமிழ் நடையெனக் கூறினர் அதனை
உரைத்த பொழுதே உணர்ச்சி எழுந்திட
மெய்ப்பா டெட்டினை மேவிநிற் கின்ற
புலமை மிகுநடை பொருட்சுவை நடையாம்;
உணர்ச்சி நடையென உரைப்பர் அறிஞர்
இதனை,
நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென

எண்வகை யாக இயம்பினர் நன்றே!
மடக்கே முதலாம் மாண்புறு சொல்லால்
சொல்லப் படுவது சொற்சுவை நடையாம்;
பிறமொழி கலவாப் பீடுசால் நன்னடை
தனித்தமிழ் நடையாம் தக்கஈ தொன்றே
மொழியின் இயல்பை முற்றுறக் காக்கும்
வடவர் மொழியும் பிறர்பிறர் மொழியும்
வந்து கலப்பின் தமிழ்நெறிக் கியைய
திரித்து வழங்கினும் தெரிதமிழ் நடையாம்
திரிந்து விலாதது கலவை நடையே
மொழிப்பற் றில்லார் முன்னுவ திந்நடை;
மோனை முதலிய தொடைநிலை பொருந்தச்
செய்யுளை, வழக்கைச் செப்பிடின் அவையே
"மலர்த்தொடை போன்ற" மாண்புற தொடைநடை;
தொடைக ளிலாமல் தொடுப்பின் அவற்றைச்
செந்தொடை என்று செப்புவர் அறிஞர்
அகப்பொருள் நடை பல; அவற்றை விரிப்பின்
ஒருபால் உளதாம் காமத்தை உரைக்கும்
கைக்கிளை எனும்நடை கவர்ச்சி நடையே
ஒத்த தலைவனும் தலைவியும் விரும்பும்
அன்பியல் நடையாம் ஐந்திணை நடையே
அதுவே
குறிஞ்சி நடையெனப் பாலை நடையென
முல்லை நடையென நெய்தல் நடையென
மருத நடையென மலர்ந்து மணக்கும்;
பொருந்தாக் காம வகைநடை பலவாம்
பெருந்திணை நடையெனப் பேசினர் அதனை
காமம் மிகுந்தவன் கையா றெய்தி
மடன்மா ஊர்தலும் மலையேறி வீழ்தலும்
முதலிய செய்து மூதுயிர் துறப்பன்
காமம் மிகுந்தவன் கையா றெய்தி
வெறிபிடித் தலைவன் வியலகத் தாங்கள்
இருவரும் இயங்கும் இடையாச் சுரத்தே
காதலி இறப்பக் காதலன் புலம்புவன்

அன்றியே
காதலன் இறப்பக் காதலி புலம்புவள்
தொழில்செயச் சென்றோன் தொழில்முடியாமல்
மாதரை எண்ணி மனம்மிக மறுகுவன்
அங்கண்
இல்லினுள் இல்லாள் இரங்கி அரற்றுவள்
தீதுதீர் மனைவியைக் காணவும் விரும்பான்
தீர்ந்து விலகித் துறந்து நிற்பன்
தீர்ந்துநின் றவனைத் தெரியிழை நல்லாள்
தெரிவுறக் கிட்டிப் பழிபல உரைப்பாள்
கணவன் இறக்க காதலி வருந்தி
கைம்மை நோற்றுக் கையற வடைவாள்
காதலி இறக்கக் காதலன் வருந்தி
வேறுமணந் தன்னை விரும்பா திருப்பான்
கணவன் இருக்க அவனை விட்டே
வேற்றான் ஒருவனுடன் விரும்பி வாழ்வாள்
கணவன் இறக்கத் தாலியை நீத்து
வேற்றான் ஒருவனை விரும்பி மணப்பாள்
காதலி இறக்கக் கையறல் நீக்கி
வேறொரு மாதரை விளங்க மணப்பன்
மூத்த தலைவன் இளையளை மணப்பன்
இவற்றினைப் போல எழுந்திடு கின்ற
பொருந்தாக் காமம் பலவும் பெருந்திணை
புறத்திணை நடையினைப் பொருந்துற விரிப்பின்
பகைவர்தம் பொருளைப் போர்தொடங் கற்காக்
களவினிற் கொள்ளும் கால்கோள் வெட்சியும்
பகைவர்மண் பற்றும் பாங்குடை வஞ்சியும்
பகைவர்வா ழிடத்தை முற்றுகை யிட்டுப்
பகைவரை அழிக்கும் பாங்குடை உழிஞையும்
பகைவர் ஆற்றலை அழித்திடு தும்பையும்
கூறிய இவற்றில் வெற்றிகொள் கின்ற
மறக்கூ றான வாகையின் வகையும்
உலகில் வாழும் ஒவ்வொரு மக்களும்

இலகுதம் தொழிலில் இயங்கிநின் றனராய்
உழைத்துப் பயன்தோற்றும் ஒளிபெறு வாகையும்
இரப்போர் வகையும் புரப்போர் வகையும்
புகழ்வோர் வகையும் பழிப்போர் வகையும்
வாழ்த்தின் வகையும் அங்கத வகையும்
பரவும் வகையொடு பாங்குறப் பெற்று
பலவாய் வருமெனப் பகர்ந்தனர் புலவர்
எனவே
சொல்லால், பொருளால், சுவைதரு யாப்பால்,
பல்வகை யாகப் பகர்ந்திடும் வகையால்,
எல்லா நடையும் எழில்பெற நடக்கும்.

14
நோக்கு

நோக்கல்

நோக்கல் என்பது ஒரு தொழிற்பெயர். இதனை நோக்கு என்றும் வழங்குகிறோம். இச்சொல் பார்த்தல், பாதுகாத்தல் என்னும் பொருளில் வருகின்றது. இது அழகு என்னும் பொருளில் வரும்பொழுது இதனைப் பண்புப் பெயராகக் கொள்ள வேண்டும்.

நோக்கல் தெரிசித்தல் பார்த்தல் காண்டல்
காட்சி என்பது கண்ணுற லாகும்.

என்பது பிங்கலம். இந்நூற்பா நோக்கல் என்பது கண் ணுறல் (பார்த்தல்) என்ற பொருளில் வரும் என்று கூறுகின்றது.

திதிநிலை பெறுதல் நோக்கல் புரத்தல்
காத்தல் என்னக் கழறப் படுமே

என்பது திவாகரம். இந்நூற்பா நோக்கல் என்பது காத்தல் என்னும் பொருளில் வரும் என்று கூறுகின்றது.

நோக்கினாள் நோக்குளதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து

என்னும் குறளில் **பரிமேலழகர்** நோக்கினாள் என்னும் சொற்கு அழகுடையவள் என்று பொருள் கூறுவர். **பிங்கல நிகண்டாசிரியர்** 'செழுமையும் பந்தமும் தேசிகமும் நோக்கும்' முதலிய சொற்கள் அழகினை உணர்த்தும் என்பர். **இளம்பூரணர்** நோக்க என்பது உவமைப் பொரு ளிலும் வரும் என்பர் (உவமவியல்)

தொல்காப்பியர்

தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமைப் பொருளைத் தொகுத்துக் கூறும் பொழுது 'நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றாஎன' நோக்கலையும் கூறியுள்ளார்.

இதற்கு இளம்பூரணர் செய்யை நோக்கும் எனப் பாதுகாத்தற் பொருளில் எடுத்துக்காட்டிக் கூறுகிறார்.

சேனாவரையர் பார்த்தல் என்னும் பொருளில் கணையை நோக்கும் என்று எடுத்துக் காட்டுக் கூறுகின்றார். வேற்றுமை மயங்கியலில்

இரண்டன் மருங்கில் நோக்கல் நோக்கம்
இரண்டன் மருங்கின் ஏதுவு மாகும்

என்னும் நூற்பாவுரையில் சேனாவரையர், "நோக்கலின் அஞ்சலின்" (சொல்-72) என இரண்டாவதற் கோதிய நோக்கப் பொருண்மை நோக்கிய நோக்கமும் நோக்கல் நோக்கமுமென இரண்டு வகைப்படும் நோக்கியநோக்கம் என்பது கண்ணால் நோக்குதல், நோக்கல் நோக்கம் என்பது மனத்தால் ஒன்றனை நோக்குதல் என இரண்டு பிரிவாக வகுத்தோதியுள்ளார்.

மேற்கூறிய செய்திகளால் நோக்கு என்பது எவ்வெப் பொருளில் வரும் என்பதை உணர்ந்து கொண்டோம். தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுட்குக் கூறும் உறுப்புக் களில் நோக்கு ஓர் உறுப்பாக வரும் என்று கூறி அதற்கு இலக்கணமும் வகுத்துள்ளார்.

நோக்கு என்னும் செய்யுளுறுப்பு

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளைத் தொகுத் தோதும் வழி "நோக்கே பாவே அளவிய லெனாஅ" (செய்யுளியல் -1) என்று நோக்கினையும் ஓர் உறுப்பாக எடுத் தோதியுள்ளார். பின்னர் நோக்கிற்கு இலக்கணம் கூறுங்கால்,

மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே (100)

என்று கூறுகிறார். நோக்குதல் என்பது செயப்படு பொருள் உள்ள வினைச்சொல் அல்லவா? எவற்றை நோக்குதல் என்று வினாவின் மாத்திரையை, எழுத்தியலை அசைவகையை, யாத்த சீரை, அடியை என்னும் ஐவகை உறுப்பினையும் மனத்தால் நோக்குதற்குக் காரணமானவை நோக்கு என்பதாம்.

இருவர் உரை

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரை, பேராசிரியர் உரை, நச்சினார்க்கினியர் உரை என்னும் மூவர் உரை உள்ளன. நச்சினார்க்கினியர் பேராசிரியர் உரையினைத் தழுவியே

இந்நூற்பாவிற்கு உரை கூறுவதால் இருவர்தம் உரையினையே ஆராய்வோம்.

இளம்பூரணர் இந்நூற்பா நோக்கென்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று என்று கருத்துக் கூறிக் கொண்டு "மாத்திரை முதலாக அடிநிலை யளவும் நோக்குதலாகிய கருவி நோக்கென்று சொல்லப்படும் என்றவாறு, என்று பொழிப்புரை கூறிவிட்டு, "காரணம் எனினும், கருவி யெனினும் ஒக்கும். நோக்குதல் காரணம் என்பதனை உண்டற் றொழில் என்றாற் போலக் கொள்க" என்று விளக்கம் எழுதி யுள்ளார். அவர் காட்டிய உண்டற்றொழில் என்பது உண்ணுத லாகிய தொழில் என்று இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாகப் பொருள்படும். அது போல நோக்குதலாகிய கருவி என்று கொண்டு நோக்குதலையே கருவியாகக் கொள்ள வேண்டும் என்று இளம்பூரணர் கருதுகிறார்.

மேலும் அவர், "அஃதாவது யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங் காலும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்கும் நிலை. அடிநிலை காறும் என்றதனால் ஓரடிக் கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒரு நோக்காக ஓடுதலும் பலநோக்காக ஓடுதலும் இடை யிட்டு நோக்குதலும் என மூன்று வகைப்படும்.

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று (நாலடியார் -1)

இஃது (செல்வநிலையாமை) என்னும் ஒரு நோக்காக ஓடிற்று.

அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மைஎஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல் (நாலடியார் -172)

இப்பாட்டு பலநோக்காகி வந்துள்ளது (பலபொ ருளைக் கூறும் நோக்கமாக வந்துள்ளது என்று பொருள் கொள்ள வேண்டும் போலும்).

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு
ஒவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்

(திருமுருகாற்றுப்படை 1-6)

என்றவழி 'ஒளி' என்பது அதனயற் கிடந்த தாளை நோக்காது கணவனை நோக்குதலின் இடையிட்டு நோக்கிற்று பிறவுமன்ன" என்பர்.

இளம்பூரணர் மேலே "யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் நிலை நோக்கு " என்றார். நோக்கி நிற்பது எது? என்ற வினா எழுகின்றது.

பேராசிரியர் "நோக்கென்பது மாத்திரை முதலாகிய உறுப்புக்களைக் கேட்டார்க்கு நோக்குப்பட்ச் செய்தல்" என்று விளக்கம் கூறிவிட்டு, " நாற்சொல் வழக்கினையும் பாவிற்படுப்பது மரபென்றான், எனவே, ஆண்டு நோக்கி உணரப்படுவதன்றிச் செய்யுளுள்ளும் உலகவழக்கின் இயல்பினவாகி வெள்ளைமையாய்க் காட்டுவனவாயின். அவ்வாறன்றி நோக்கென்பதோர் உறுப்புப் பெற்றவழியே அது செய்யுளாவதாகலான் அது கூறுகின்றான் என்று நூற்பாவிற்குக் கருத்து எழுதிவிட்டு " மாத்திரையும் எழுத்தும் அடைநிலையும் சீரும் முதலாக அடி நிரம்புந் துணையும் நோக்குடையவாகச் செய்தல் வன்மையாற் பெறப்படுவது நோக்கென்னும் உறுப்பாவது" என்று பொழிப்புரை கூறி, கேட்டார் மறித்து நோக்கிப் பயன் கொள்ளும் கருவியை நோக்குதற் காரணமென்றான் என்பது. அடிநிலை காறும் என்பது ஓரடிக் கண்ணே யன்றியும் செய்யுள் வந்த அடி எத்துணையாயினும் அவை முடிகாறும் என்றவாறு என்று விளக்கம் எழுதினர்.

இளம்பூரணர் 'நோக்குதல் காரணம்' என்றதை நோக்குதலாகிய காரணம்' என்றனர். பேராசிரியர் 'நோக்கு உடையவாகச் செய்யும் கருவி' என்றனர். நச்சினார்க்கினியர்

பேராசிரியர் கருத்தினையே விளக்கி 'நோக்கிப் பயன் கோடலையுடையவாகச் செய்யும் கருவி' என்றனர்.

இங்கே நோக்கி என்பது மனத்தால் நோக்குதல் 'இரண்டன் மருங்கின்' என்னும் நூற்பாவுரையில் வான் நோக்கி வாழும் உயிரெல்லாம் என்றவிடத்து வானை நோக்கி வாழும் என இரண்டாம் வேற்றுமையும் விரிக்க லாம். ஏதுப்பொருள் வைத்து வானால் நோக்கி வாழும் வானின் நோக்கி வாழும் என மூன்றாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் விரிக்கலாம். ஏதுவாயினவாறு என்னை எனின் உயிர் வானை நோக்குவது, வானத்தினால் விளையும் பயன்பற்றி அப்பயனை இன்றியமையாமையன்றே அவ்வின்றியமையாமைக்கு வான் ஏதுவாதலும் உடைத்து, என்பர். அதுபோல் மாத்திரையை எழுத்தை அசையை சீரை அடிநிலையை ஆகிய அவற்றை அவற்றால் விளையும் பயன்கருதி நோக்குதல் நோக்கு என்க. இளம்பூரணர் கருதுகிறவாறு பொருள் முடிவு கருதியோ நோக்குதலே நோக்காயின் அக்கருத்திற்கு மாத்திரை முதலானவற்றை யெல்லாம் குறித்துக் கூறவேண்டியதில்லை. பேராசிரியர் கருதுகிறவாறு, நான்கு சொற்களை வழக்கியல்பினவாகி வெள்ளையமையாற்றொடுக்காது கேட்டார் மறித்து நோக்கிப் பயன்கொள்ளுமாறு கூறப்படுவது என்று கொள்ளின் சொல்லைச் சுட்டுகின்றாற் போற் கூறின் அமையுமே இதற்கு மாத்திரை முதலானவற்றை யெல்லாம் குறித்துக் கூறல் வேண்டுமா?

மாறனலங்காரம் என்னும் அணி இலக்கண நூல் பேராசிரியர் உரைக் கருத்தினைத் தழுவி இவ்வாறு கூறுவது பரிகரம் என்னும் அலங்காரம் என்று கூறி இதற்கு நுட்பம் என்று பெயர் உண்டு. இது நோக்கு என்னும் யாப்புக்கால் ஆகும் என்றும் காரணம் விட்டு நீங்காத நிலைமொழியில் உண்டாகிய ஐயத்தின் காரியம் விட்டு நீங்காது வருமொழி அதற்கு உரிமை யெய்தப் பாதுகாக்குந் திடமுடையது எனச் சொல்பற்றியே ஓதுவர். அவர் கூறும் விளக்கம் " நோக்கென்பது மாத்திரை முதலாக நிரம்பும் அடிகளாலாய தொடையுடையவாஞ் செய்யுள் நடந்தவடி எத்துணைய வாயினும் அவை முடியுங் காறும் வெள்ளை மையும் பிள்ளைமையுமின்றி வந்த வாக்கியம் கேட்டோர்

மறித்து நோக்கிப் பயன் கொள்வதோர் கருவியாகிய யாப்புக்கால். என்னை? மாத்திரை முதலா அடிநிலை காறும் நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே என்றாராகலின் அதற்குச் செய்யுள் 'முல்லை வைந்நுனை தோன்ற' என்றனர். எனவே பேராசிரியர் உரைக் கருத்தினை வைத்துக் கொண்டே பரிகாரம் என்னும் பெயருடைய அணியைப் படைத்துவிட்டது. எனவே, பேராசிரியர் உரையைக் கருதி எழுந்த வினாவே இவ்வணிக்கும் எழுகின்றது.

பின்னை நோக்கென்பது எது என்று வினாவின், மாத்திரை முதலாக அடி நிலைகாறும் உள்ள ஐந்து உறுப்பும் தனித்தனி மனத்தால் நோக்கப்பட்டு வழுவின்றித் தமக்குரிய இலக்கணத்தைப் பெற்று ஓசையைத் தருகின்றனவா? பொருளினைத் தருகின்றனவா என்பதை உணர்ந்து கொள்ளுதலாம். செய்யுளுக்குத் 'தெரிந்து மொழிச் செய்தி' என்று ஒரு பெயர் உண்டு. ஒவ்வொன்றையும் தெரிந்து தெரிந்து மொழிய வேண்டும் என்ற பொருளை அச்சொல் உணர்த்துகின்றது. இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறுமான பாட்டுக்களைப் பாடிக் கொட்டிவிடுவது செய்யுளன்று, மாத்திரையை எழுத்தை அசையை சீரை அடியை தெரிந்து மனத்தால் நோக்கி அமைப்பதே நோக்காதல் வேண்டும். செய்யுளுக்குரிய ஏனைய உறுப்புக்கட் கெல்லாம் இந்நோக்கினை உறுப்பாகக் கூறாமல் மாத்திரையிலிருந்து அடிநிலைவரை உள்ளஐந்து உறுப்பிற்கு மட்டும் நோக்கு வேண்டும் என்று கூறுவதால் செய்யுள் இவ்வைந்தும் சிறந்தனவாம் என்க.

15

ஓசைப்பொலிவு

பொருளின் பொலிவும் சொல்லின் செல்வமும்
தொடையும் தொடைக்கண் விகற்பமும் துதைந்து
உருவகம் முதலாம் அலங்கார முட்கொண்டு
ஓசைப் பொலிவுற் றுணர்வோ டுளங்கட்கும்
மாகடல் அமிழ்தம்போல் பாடுதல் மதுரகவி

பொருட்பொலிவும் சொற்செல்வமும் தொடையும் விகற்பமும் பொருந்த, உருவகம் முதலான அணிகள் அழகு செய்ய, ஓசைப் பொலிவோடு பொருந்தி உணர்வோர் உளங்கட்கு அமிழ்தம் போல் இனிக்குமாறு பாடுவது மதுரம் என்னும் கவி வகையாகும் என்று திவாகர நிகண்டு கூறுகிறது.

மேற்குறிப்பிட்ட மதுரகவி இலக்கணத்துள் ஒன்று ஓசைப்பொலிவாகும்.

உரையுட லாக உயிர்பொரு ளாக உரைத்த வண்ணம்
நிரைநிற மாநடை யேசெல வாநின்ற செய்யுட்களாம்
தரைமலி மானிடர் (141)

என்னும் வீரசோழியப் பாடல் செய்யுள் என்பது ஒரு மனிதனை ஒத்தது. அம்மனிதனுக்குப் பலவகைச் சொற் களெல்லாம் உடம்பாகும். அப்பாட்டில் கூறப்படும் பொருளே உயிராகும் வண்ணம் ஓசையே நிறமாகும் நடையே செல்லுதல் என்னும் இயக்க மாகும் என்று கூறுகின்றது.

யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர்: மதுரகவியின் இலக்கணத்தை மேற்கூறிய திவாகர நூற்பாவை கருத்தில் வைத்துக் கொண்டு " மதுரகவியாவான் சொற்செல்வமும் பொருட் பெருமையும் உடைத்தாய்த் தொடையும் தொடை விகற்பமும் துதைந்து உருவகம் முதலாகிய அலங்காரங்களை உட்கொண்டு ஓசைப்பொலிவு உடைத்தாய், உய்த்துணரும் புலவர்கட்கு ஒலி, கடல் அமிழ்தம் போன்று இன்பம் பயக்கப்பாடுவான்" என்று கூறுகின்றார்.

இவர் கருதுவது, பாட்டில் ஓசைப் பொலிவு இருக்க வேண்டும்; அவ்வோசைப் பொலிவு அமிழ்தம் போல் இருக்க வேண்டும் என்று கருதுகிறார்.

பாட்டிற்கு அமிழ்தம் போன்ற ஒலியைப் புலவர்கள் எப்படி உண்டாக்குகின்றார்கள் என்பதைச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஓசை மூன்று

தமிழ்ப் பாடல்களில் உள்ள ஓசையைத் தலைமை பற்றி இயற்றமிழ் ஓசை, இசைத்தமிழ் ஓசை, நாடகத் தமிழ் ஓசையென மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளலாம்.

இவற்றில் முதற்கண் நிற்பது இயற்றமிழ் ஓசையாகும். தொல்காப்பியர் பாட்டு, உரை, நூல், பிசி, முதுசொல் வாய்மொழி, அங்கதம் என்று ஏழுபிரிவாகச் செய்யுளைக் கூறுகிறார். அவற்றில் பாட்டிற்கே அவர் ஓசை கூறுகின்றார். ஏனையவற்றிற்கு அவர் ஓசையைக் கருதிக் கூறவில்லை.

பாட்டின் ஓசை

ஆசிரியப்பா அகவல் ஓசையால் வரும், வெண்பா செப்பல் ஓசையால் வரும், வஞ்சிப்பா தூங்கல் ஓசையால் வரும், கலிப்பா துள்ளலோசையால் வரும் என்பர்.

மாறுபாடான ஓசை

அகவல் ஓசையும் செப்பல் ஓசையும் தமக்குள் மாறுபாடுடையன.

'அகவல் என்பது ஆசிரி யம்மே' (செய்.77)
'அஃதன் றென்ப வெண்பா யாப்பே' (செய்.78)

அகவலோசையல்லாதது வெண்பா யாப்புக்குரிய ஓசை என்பர்.

மெலிந்த ஓசையாகிய வஞ்சியோசையும், உயர்ந்த ஓசையாகிய துள்ளலோசையும் தம்முள் மாறுபாடுடையன.

அகவல் ஓசை

"அகவல் என்பதூம் அழைத்த லாகும்" என்பது பிங்கல நிகண்டு. பேராசிரியர் அகவிக் கூறுதலான் அகவல் எனக் கூறப்பட்டது. அஃதாவது கூற்றும் மாற்றமுமாகி,

ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறாது தாங் கருதியவாறெல்லாம் வரையாது செல்வதோர் ஆறும் உண்டு. அதனை வழக்கிலுள்ளார் அழைத்தலென்றும் சொல்லுப; அங்ஙனம் சொல்லுவார் சொல்லின்கண் எல்லாம் தொடர்ந்து கிடந்த ஓசை அகவலெனப்படும். அவை தச்சவினை மாக்கள் கண்ணும் களம்பாடும் வினைஞர் கண்ணும் கட்டும் சுமங்கும் இட்டு உரைப்பார்கண்ணும் தம்மில் உறழ்ந்துரைப் பார் கண்ணும், பூசலிசைப்பார் கண்ணும் கேட்கப்படும்.

சுமங்கிட்டுரைப்பார் அங்ஙனமே வழக்கினுள்ளதாய்க் கூறும் ஓசை ஆசிரியப்பா வோசை எனப்படும் என்றவாறு என்பர்.

அகவல் ஓசைக்குக் காரணம்

அகவற்பா ஐவகை அடியாலும் வரும் ஆசிரியப் பாவிற்குமுள்ள இலக்கணங்களைப் பெற்ற பாவில் அகவல் ஓசையைக் காணலாம். ஆசிரியப்பா பெரும்பான்மை இயற் சீராலும் ஆசிரியர் உரிச்சீரானும் ஆசிரியத் தளையானும் அகவலோசையானும் நாற்சீரடியானும் சிறுபான்மை ஒழிந்த சீரானும் தளையானும் அடியானும் வருவது என்பர் இளம்பூரணர் (தொல். செய். 113).

யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியர் அகவலோசை யோடு அளவடித்தாகியும் இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும் தன்றளை தழுவியும் பிறதளை மயங்கியும் நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் வருதலை ஆசிரியப்பா என்று கூறுகிறார்.

இயற்சீரும் ஆசிரிய உரிச்சீரும் வந்து ஆசிரியத்தளை பெற்று வருதலே அகவலோசைக்குக் காரணம் என்று இளம்பூரணர் கூறுதலை மேலே பார்த்தோம். பிற்கால நூலாகிய யாப்பருங்கல விருத்தியாசிரியர் " இயற்சீருள் தோன்றும் அகவல்" என்பர்.

யாப்பருங்கல விருத்தியாசிரியர், காரிகை உரையாசிரியர் முதலியோர் நேர் நேர் இயற்றளையான் வரின் ஏந்திசை அகவல் என்றும் நிரை, நிரை இயற்றளையான் வரின்

தூங்கிசை என்றும் இரண்டு தளையும் விரவிவரின் ஒழுகிசை அகவலாமென்றும் கூறுவர்.

இவற்றிற்கு முறையே,

போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதர் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே

என்பதும்,

அணிநிழ லசோகமர்ந் தருணெறி நாடத்திய
மணிதிக ழுவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பலரே

என்பதும்

குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையறை மகளிர் புரையும் சாயலின்
ஐய ளரும்பிய முலையள்
செய்ய வாயினன் மார்பினள் சுணங்கே

என்பதும் எடுத்துக்காட்டாம்.

இன்னும் அகவல் ஓசை இயற்சீராலே வந்தும் அயற்சீர் கலந்து வந்தும் ஒன்றினைத் தழுவியும் பிறதளை தட்டும் வந்தும் முடியும் என்பர் (யா.வி. ப. 268)

இன்னும் சீர்தோறும் அகவலோசை பிழையாது வருவது சித்திர அகவல் என்றும், அகவற்பாவில் வரும் நாற்சீரடியும் இருபதெழுத்தின் மேல் வரில் ஏந்திசை அகவல் என்றும் பெயர் பெறும் என்பர் (யா,வி.ப. 285). இவை எல்லாம் ஓசை வேறுபாட்டிற்குக் காரணங்களாம்.

செப்பலோசை

வெண்பா என்னும் பாட்டு செப்பல் ஓசை உடையது என்பர். பேராசிரியர் " அகவிக் கூறாது ஒருவற்கொருவன் இயல்பு வகையானே ஒரு பொருண்மை கட்டுரைக்குங்கால் எழும் ஓசை செப்பலோசை எனப்படும் (சொல்.செய்.82) என்பர்.

செப்பலோசை உண்டாகக் காரணம்

வெண்பா - அளவு சிந்தால் வரும்; வெண்பாவிற்குரிய இலக்கணத்தினைப் பெற்று வரும் 7,8,9,10,11,12,13,14.

இளம்பூரணர் வெண்பாவாவது, பிறதளையோடு மயங்காமையானும் மிக்கும் குறைந்தும் வராத அடியான் வருதலானும் என்றும் (தொல். செய். 101) வெண்பா யாப் பாவது, வெண்சீரானும் இயற்சீரானும் வெண்டளையானும் செப்பலோசையானும் அளவடியானும் மூச்சீர் ஈற்றடியானும் வருவது (தொல். செய். 114) என்றும் கூறுவர்.

காரிகை உரையாசிரியர் செப்பல் ஓசைத்தாய், ஈற்றடி முச்சீராய், ஏனையடி நாற்சீராய், வெண்சீரும் வந்து வெண்டளைதட்டு, வேற்றுத்தளை விரவாது காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டால் இற்று முடிவது வெண்பா என்பர்.

யாப்பருங்கலம் செப்பலோசை

வெள்ளையுள் பிறதளை விரவா என்று கூறும். இயற்சீர் விகற்பத்தாலும் வெண்சீர் ஒன்றலாலும் (இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை) உண்டாகும்.

செப்பலோசை வகை

ஒரு சாரார் வெண்சீரே வந்து வெண்டளை பெற்று வருதலை ஏந்திசைச் செப்பலென்றும் இயற்சீரே வந்து இயற்சீர் வெண்டளை பெற்று வருதலை ஒழுகிசைச் செப்பல் என்றும், வெண்சீரும் இயற்சீரும் வந்து வெண்சீர் வெண் டளையும் இயற்சீர் வெண்டளையும் பெற்று வருவதைத் தூங்கிசைச் செப்பல் என்றும் கூறுவர்.

மற்றொரு சாரார் 1. வெண்சீர் வெண்டளையால் வரும் யாப்பு ஏந்திசைச் செப்பல் 2. இயற்சீர் வெண்டளையால் வரும் யாப்பு தூங்கிசைச் செப்பல் என்றும், 3. வெண்சீர் ஒன்றி இயற்சீர் விகற்பித்து வருவது ஒழுகிசைச் செப்பல் என்றும் கூறுவர்.

வஞ்சிப்பா தூங்கலோசை

வஞ்சிப்பா தூங்கலோசையான் வரும் என்பர். இளம் பூரணர் தூங்கலோசை என்பது சீர்தோறும் அறுதியாய் ஓசைத்தாகி வரும் என்பர் (செய்யுளியல் 80).

பேராசிரியர் அடியிற் றூங்காது சீர் தொறும் தூங்கலோசையை வஞ்சிப்பா பெறும் என்பர்.

நச்சினார்க்கினியர் அடியிறுதியிற் றூங்காது சீர்தொறும் தூங்கும் ஓசையையுடையது வஞ்சிப்பா என்பர்.

மேலும் அவர் துள்ளலும், தூங்கலும் வழக்கின்கண் நிகழாவென்று கொள்க என்பர்.

தூங்கலோசை வருதற்குக் காரணம்

இனி வஞ்சிப்பா ஆவது வஞ்சியுரிச்சீரானும் ஏனைச் சீரானும்இருசீரடியானும் முச்சீரடியானும் வரும். அங்ஙனம் வருதலே தூங்கலோசை தோன்றற்குக் காரணமாம் என்பர் இளம்பூரணர்.

பேராசிரியர் தூங்கலோசை அவைபோல நாற்சீரடி களன்றி இருசீர்க் கண்ணும் சிறுபான்மை முச்சீர்க்கண்ணும் தூக்குக் கொள்ளப்படும் என்பர் (செய்யுளியல் 87, வஞ்சியுரிச்சீர் அறுபதாலும் தூங்கலோசை பிறக்கும் "ஆசிரிய நடைத்தே வஞ்சி" (செய்யுளியல் 108) என்பதனால் ஆசிரிய உரிச்சீராலும் தூங்கலோசை பிறக்கும்.

வீடுபேறு மிகவிழைந்து
நீடுநினைத்து நெடிதிருந்து

என அகவற் சீரான் வஞ்சித் தூக்கும் பிறந்தது என்பர் பேராசிரியர் (செய். 108).

தூங்கலோசை

தூங்கலோசையும் மூன்று விதமாகும். ஒன்றிய வஞ்சித் தளையான் வந்தது ஏந்திசைத்துள்ளலோசை என்றும், ஒன்றாத வஞ்சித் தளையான் வந்தது அகவல் தூங்கலோசை என்றும், பல தளையும் விரவிவரின் பிரிந்திசைத் தூங்கல் ஓசை என்றும் கூறப்படும்.

கலிப்பாவோசை துள்ளல்

கலிப்பா துள்ளலோசையான் வரும் என்பர். கலித்த ஓசையை உடையது கலிப்பா ஆகும். கலித்தல் - துள்ளல் (வெண்பாவோசையின்) வெண்சீரின் விகற்பம் கலிப்பா ஆகும் (விகற்பம் கலிப்பா) என்று கூறும் பிங்கலநிகண்டு.

துள்ளுதலாவது ஒழுகு நடைத்தின்றி இடைஇடை உயர்ந்து வருதல். கன்று துள்ளிற்று என்றாற்போலக் கொள்க என்பர் இளம்பூரணர். "வெண்சீரில் செப்பல் பிறக்கும் விகற்பத்துப் பண்பாய்ந்த துள்ளல் படும்" என்பது யா.வி. மேற்கோள். பேராசிரியர் துள்ளலோசை என்பது வழக்கியலாற் சொல்லாது முரற்கைப்படுமாற்றால் துள்ளச் சொல்லும் ஓசை என்பர்.

துள்ளலோசைக்குக் காரணம்

'கலிப்பா, நேரீற்று இயற்சீரும், நிரைநடுவாகிய வஞ்சி யுரிச்சீரும் வாராது, நிரை முதலாகிய வெண்பாவுரிச்சீரும் மிக்கு நேரடித்தாய் தன்றளையும் பிறதளையும் தட்டுவரும். அது பதின்மூன்றெழுத்து முதலாக இருபதெழுத்தின்காறும் உயர்ந்த எட்டுநிலம் பெற்று வரும் என்பர் (யாக. விருத்தி யாசிரியர்). துள்ளல் ஓசை மூன்று: 1. கலித்தளையே இயைந் துவரின் ஏந்திசைத் துள்ளல் ஆகும். 2. வெண்டளையும் கலித் தளையும் இயைபில் அகவல் துள்ளல் ஆகும். 3. தன்றளையும் பிறதளையும் விரவிவரின் பிரிந்திசைத் துள்ளல் ஆகும்.

பரிபாடல்

இயற்றமிழ்ப் பாட்டில் வெண்பாவின் வகையைச் சார்ந்து வருவது பரிபாடலாகும். இது வெண்பாவின் வகையைச் சார்ந்தது என்பதால் இதனைச் செப்பலோசை யுடையது என்றே கூறல் வேண்டும். ஆனால் இது பல உறுப்புக்களுடன் தொடர்ந்து, கலிப்பாவின் வேறுபட்டு வரும்.

இளம்பூரணர் பரிபாட்டாவது பரிந்த பாட்டாம். அஃதாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பலவுறுப்புக் களோடும் தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப்பெறுவது என்பர்.

பேராசிரியர் பரிபாடலென்பது பரிந்து வருவது. அஃதாவது கலியுறுப்புப் போலாது பல அடியும் ஏற்று வருவது என்பர்.

நச்சினார்க்கினியர் பரிபாடல் என்பது பரிந்து வருவது; அது கலியுறுப்புப் போலாது நான்குபாவானும் வந்து பல அடியும் வருமாறு நிற்கும் என்றுணர்க என்பர்.

மேற்கூறிய உரையாசிரியரெல்லாம் 'பரி' என்பதற்குப் பரிந்து என்று விரித்து அதற்குத் தொடர்ந்து, ஏற்று, பல அடியும் வருமாறு எனப் பொருள் கூறுகின்றனர். ஆனால் 'பரி' என்பதற்குச் செல்கை, கதி என்று பொருள் கூறலாம். பரிபாடலில் 'இன்னியல் மாண்ண தேர்ச்சி இசை பரிபாடல்' (11-137) என்று வருவதைக் கருதின் இடைப் போக்கில், இசை நடையில் அமைந்த பாட்டு என்று கூறல் பொருந்தும் இது பாலையாழ், நோதிறம், காந்தாரம் என்றும் இடைகளில் வரும் என்று கூறப்படுவதும் மேற்கருத்தை வலியுறுத்தும்.

மருட்பா

வெண்பாவில் தொடங்கி ஆசிரியப்பாவால் முடிவதே மருட்பா ஆகும். (மருள்) என்பது மயக்குதல், கலத்தல் என்ற பொருளில் வரும். வெண்பாவும் ஆசிரியப்பாவும் இயைந்த செப்பலோசையும் அகவலோசையும் கலந்து வருவது மருட்பாவாகும். இப்பாட்டில் கலப்போசையைக் காணலாம்.

அகவல் முதலிய நான்கோசையுள் வரும் ஓசைகள்

ஆசிரியப்பா அகவலோசையைப் பெற்றும் அதன் நடையைப் பெற்று வரும். வஞ்சிப்பா தூங்கலோசையைப் பெற்றும் வெண்பா செப்பலோசையைப் பெற்றும் அதன் நடையையுடைய கலிப்பா துள்ளலோசையைப் பெற்றும் வரும் என்று பொதுவாகக் கூறினாலும், அகவலோசை நேரிசை ஆசிரியப்பாவில் இணைக் குறளாசிரியப்பாவில் மண்டில ஆசிரியப்பாவில் சிறிது வேறுபட்டு வரும். அது போன்றே தூங்கலோசை குறளடி வஞ்சிப்பாவில் சிந்தடி வஞ்சிப்பாவில் சிறிது சிறிது வேறுபட்டு வரும்.

வெண்பாவுள் குறள் வெண்பாவில் சிறிய செப்ப லோசையைக் காணலாம். நேரிசைக் சிந்தியல் வெண்பாவிலும் நேரிசை வெண்பாவிலும் ஒருவகையான செப்பலோசை யினையும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவிலும் இன்னிசை வெண்பாவிலும் மற்றொரு வகையான செப்பலோசை யினையும் காணலாகும். இவ்வோசைகள் நடுநிலையான செப்பலோசைகளாம்.

பஃறொடை வெண்பாவில் நீண்ட செப்பலோசையைக் காணலாகும். பரிபாடலிலே வரையறையற்ற கலப் போசையைக் காணக் கூடும்.

கலிப்பா துள்ளலோசையைப் பெற்று வந்தாலும் தரவு மிகவும் எடுப்பான துள்ளலோசையைப் பெற்றும் தாழிசைகள் தரவோசையிற் றாழ்ந்தும், அம்போதரங்க உறுப்பும் வண்ண வுறுப்பும் முற்றிலும் வேறுபட்ட ஓசைகளைப் பெற்றும், சுரிதகம் அகவல் ஓசையினையோ அல்லது வெண்பா ஓசையினையோ பெற்றும் கலிவெண்பா ஒரு பொருள் நுதலி நீண்ட செப்பலோசையைப் பெற்றும், உறழ்கலி இடையிட்ட செப்பலோசையைப் பெற்றும் கொச்சகம் பிறழ்ந்த ஓசையைப் பெற்றும் வரும்.

செந்துறை வெண்டுறை

இயற்றமிழ் ஓசையை இதுவரை ஆராய்ந்தோம். இனி இசைத்தமிழ் ஓசையையும் நாடகத் தமிழ் ஓசையையும் பார்ப்போம்.யாப்பருங்கலம் செந்துறை மார்க்கமும் வெண்டுறை மார்க்கமும் என்ற இரண்டு மார்க்கத்தைக் கூறியுள்ளது. அந்நூலின் விருத்தியுரையாசிரியர்,

"நாற்பெரும் பண்ணும் இருபத்தொருதிறனும் ஆகிய இசையெல்லாம் செந்துறையாகும். ஒன்பது மேற்புறமும் பதினொராடலும் என்ற இவையெல்லாம் வெண்டுறையாகும் என்பது வார்ப்பியம் என்றனர், புறப்பொருள் வெண் பாமாலை ஒழிபில் பாடல் வென்றி துறை என்னும் துறையில்,

வண்டுறையும் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்
வெண்டுறையும் செந்துறையும் வேற்றுமையாக் - கண்டறியா
கின்னரம் போலச் சினையமைந்த தீந்தொடையாழ்
அந்நாட்டில் அச்சுவையும் ஆய்ந்து

என்று வெண்பா, ஒருத்தி வெண்டுறைப் பாட்டும் செந்துறைப் பாட்டும் கூறுகின்றது. இங்கே பாடுதல் பிற்றுப்பாடல், அப்பாடலை யாழ் நரம்பிசைக்குத் தக்கவாறு பாடினாள். எவ்வாறு பாடினாள் எனின்?

"வெண்டுறின், "செந்துறைப் பாட்டே பாடற் கேற்பது"அப் பாட்டே ஆடற்கேற்பது" ஆதலின் (பிங்கலம் - ப. 222) இவ்விரு பாட்டிற்கும் வேற்றுமை தெரியுமாறு யாழ் நரம்போசைக்குத் தக்கவாறு மந்த இசை மத்திய இசை உச்ச இசை இவைகளை எல்லாம் ஆராய்ந்து பாடினாள் என்பர். இங்கே பாடுதல் தலைமையாகும்.

புறப்பொருள் வெண்பா மாலையில் ஆடல் வென்றி

கைகால் புருவம்கண் பாணி நடைதூக்குக்
கொய்பூங் கொம்பன்னாள் குறுக்கொண்டு - பொய்பூப்
படுகளிவண் டார்ப்பப் பயில்வ ளைநின் றாடும்
தொடுகழன் மன்னன் துடி

கொய்பூங்கொத்தை ஒத்த ஆடுமகள் கையாலும் காலாலும் புருவத்தாலும் கண்ணாலும் தாளத்தையும் நடையையும் இசைக்கும் பாடலையும் கருதிக்கொண்டு ஆடினாள். இங்கே ஆடல் தலைமை. பாடல் முதலியன அதற்கு உறுப்பு.

மேற்கூறியவாற்றால் பாடற்கேற்பது செந்துறைப் பாட்டென்பதும், இதற்குத் தாளம், யாழ், குழல் முதலியன வெல்லாம் துணை உறுப்புகள் என்பதும் மிடற்றுப்பாட்டே தலைமையாகும் என்பதும், ஆடற்கேற்பது வெண்டுறைப் பாட்டென்பதும் இதற்குக் கையாலும் புருவத்தாலும் கண்ணாலும் அபிநயமும் குறிப்பும் செய்து காலால் சீர் என்னும் சதி அமைய ஆடுவதே தலைமை என்பதும் தாளம் பாட்டு முதலியனவெல்லாம் துணை உறுப்புக்களாம் என்பதும் புலனாகின்றன. எனவே செந்துறை மார்க்கத்தில் பாடல் தலைமை பெற்றும் வெண்டுறை மார்க்கத்தில் பாட்டு ஆடலுக்குத் துணை புரிந்தும் இயங்கும்.

பாணி தள்ளாத பாடல்

இசைத்தமிழ்ப் பாட்டிற்கும் நாடகத் தமிழ்ப் பாட்டிற்கும் தாளம் நன்கு அமைய வேண்டும். "பாணிதள் ளாத பாடல் அழுதுகப் பாடுவாரும்" (கம்ப. சுந்தர. 282) என்பது கம்பராமாயணம்.

பண்

'பண் என்னாம் பாடற்கு இயைபின்றேல்' என்பது திருக்குறள். 'பண்' என்றது இசைத்தமிழ். இசையை பரிமேலழகர் அப்பண் நூற்று மூன்று என்பர். அந்த நூற்று மூன்று பண்ணும் பாடல் தொழிலொடு பொருந்தாதாயின் பயனில்லை என்பர்.

பண்ணைத்தி

பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத் தியே"

என்னும் (தொல்.செய.173) நூற்பாவுரையுள் இளம்பூரணர் பண்ணைத்தி என்பது பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுள் என்றும், பண்ணைத் தோற்றுவித்தலால் பண்ணத்தி எனப் பெயர் பெற்றதென்றும், அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன" என்பர்.

இசைப்பாடல்கள்

சிலப்பதிகாரம் கடலாடு காதையில் "மாயோன் பாணியும்" (35) என்ற பகுதிக்கு அடியார்க்கு நல்லார் மாயோன் என்றது திருமாலை பாணி என்பது பாட்டு. அது தேவரைப் பரவுதலாயிற்று. என்னை? தொல்காப்பியர் "ஏனையொன்றே தேவர்ப்பராய முன்னிலைக் கண்ணே" என்றாராகலின் தேவ பாணி என்னும் பாட்டு முத்தமிழ்க்கும் பொது. அது இயற்றமிழில் வரும்பொழுது கொச்சக ஒரு போகாய் வரும். அவ்வாறு வரும்பொழுது அது பெருந்தேவ பாணி சிறு தேவபாணி என இருவகைத்தாய் வரும்.

இனி இசைத்தமிழில் வரும்பொழுது முகநிலை, கொச்சகம் முசி என்ப ஒரு சாராசிரியர். அன்றி இசைப்பா இசையளவு பா என்னும் இரு பகுதியுள் இத்தேவபாணி இசைப்பாவின் பகுதியுள் அடங்கும்.

இசைப்பாக்கள் பத்து வகைப்படும்; செந்துறை, வெண்டுறை, பெருந்தேவ பாணி, சிறுதேவ பாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல் வரி, விரிமுரண், தலை போகுமண்டிலமென (இசை நுவைஃமுடைய சிகண்டியார்).

இன்னும் சுத்தம் சானகம் தமிழ் என்னும் சாதி யோசைகள் மூன்றினுடனும், கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகை என்ப. அவை; சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருத்தம், செந்துறை, வெண்டுறை பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம் என்ப (பஞ்ச மரபுடைய அறிவனார்).

இனி நாடகத்தமிழில் தேவபாணி வருங்கால் பெருந் தேவபாணி பல தேவரையும், சிறுதேவபாணி வருகைப் பூதனாயும் மூவடி முக்கால் வெண்பாவால் துதிக்கப்பட்டு வரும் என்பர் (சிலப்பதிகாரம் - கடலாடு - ப. 190).

நாடகத்தமிழ்

நாடகத் தமிழில் வரும் சொல் உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல் என மூன்று வகைப்படும் என்பர் அடியார்க்கு நல்லார் (அரங்கேற்று காதை 87) அவற்றுள் உட்சொல் என்பது நெஞ்சொடு கூறல் என்றும், புறச்சொல் என்பது கேட்போர்க்குரித்து என்றும், ஆகாயச்சொல் என்பது தானே கூறல் என்றும் கூறுவர்.

நாடகத்தமிழ் சொல்வகை நான்கு

நாடகத்தமிழில் சொல்வகை 'சுண்ணம் என்றும் சுரிதகம் என்றும் வண்ணம் என்று வரிதகம் என்றும் நான்கு வகைப்படும் எனவும், சுண்ணம் நான்கடியாலும், சுரிதகம் எட்டடியாலும் வண்ணம் நானான்குஅடியாலும் வரிதகம் முப்பத்திரண்டடியாலும் வரும் என்பர்.

வண்ணம்மற்றொரு வகையால் மூன்றுவகைப்படும். பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பு வண்ணம் என. அவற்றுள் பெருவண்ணம் ஆறாகவும் இடைவண்ணம் இருபத்தொன்றாகவும் வனப்பு வண்ணம் நாற்பத் தொன்றாகவும் வரும் என்பர்.

வரி கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர் வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி என எட்டு வகைப்படும் என்பர்.

மேற்கூறிய வரியை பல்வரிக் கூத்தென்பாரும் உளர். பல்வரிக் கூத்தாவன.

சிந்து	பிழுக்கை
சந்தியோர்முலை	கொந்தி கவுசி
குடப்பிழுக்கு	கந்தன் பாட்டு
ஆலங்காட்டாண்டி	பருமண னெல்விச்சி
சூல நட்டம்	தூண்டில்
ஆண்டி	அமண்
புனவேடாளச்சி	கோப்பாளி (கோப்பாளம்)
பாண்பிழுக்கை	பாம்பாட்டி
கடவுட் சடை	வீரமாகேசம்
காமன்	சிந்து
வாமனரூபம்	விகடம்
நெடும்பத்திரம்	கொற்றி
பலகை	வாள்
பப்பரப்பெண்டு	அத்தசம்பாரம்
தருணிச்சம்	கத்துமுறை
சித்து	முண்டிதம்
மன்னப்பறை	பண்டிதன்
புட்பபாணம்	இறைபரவுபத்தன்
சூரவை	பப்பறை
காவதன்	பித்தன்
மாணி	பெரும்பிழுக்கை
கட்களி யாண்டு	விளையாட்டு
கோத்தபறைக் குடும்பு	கோல்கூத்து - கோலாட்டமா?
மூத்திகிழவன் கிழவி	கிள்ளுப் பிறாய்டி
அழகுடைய பள்ளி	விகடாங்கம்
செம்பொன்	அம்மனை

பந்து
காளி
தனிவண்டு
பிச்சி சாந்தமுடைய
விடை
தளிப்பாட்டு
சோணாண்டு
வேதாளி
குதிரை
ஆடு
சிவப்பு
திருக்குன்றயிற் பெண்டு
பகடி
நல்லார்நோன்வீச்சு
உந்தி
ஊராள்
குணலைக்கூத்து
கொய்யும் முள்ளிப்பூ
ஆடும் படுபள்ளி
நாட்டம் குணாட்டம்
சம்மைப்பூ
மஞ்சரி
பறைமை
கழங்காடல்
விறற்கொத்தி
வாரிச்சி
கடாதாரி
பிடார நிர்த்தம்
சாதுரங்கம்
மலையாளி
வாணி
சிலை
வேடு
தலையில் திருவிளக்குப்பிச்சி
இருண்ட முகத்தும் பேதை
பகவதியாள்
சாழல்
அவலிடி
யோகினிச்சி
அந்திக்களி
ஐயனுக்குப் பாடும் பாட்டு
கும்பிடல்
குணாலையே
சோனகம்
உழைமை

பல்வரிக் கூத்தில் தற்காலம் காணும் இலக்கியம்

மேலே குறிப்பிட்ட பல்வரிக் கூத்தின் பெயரால் அமைந்த நாடக இலக்கியங்கள் பல உள்ளன. அவை வருமாறு: காவடிச் சிந்து முதலியன. ஆனால் பெயருக்கேற்ப ஈரடி

முக்காலாகு வரல் வேண்டும் 'கோப்பாளி' என்பது கோப்பாளம் என்னும் சொல்லிலிருந்து வந்ததாகும். கோப்பாளம் - பிச்சை.

'பாம்பாட்டி' என்பது பாம்பினை ஆட்டுபவன் மகுடி இயக்கிக் கூறும் பாட்டு. பாம்பு ஆடும் ஆட்டத்திற்குத் தகுதியாகுத் தாளம் இருக்கும்.

சிந்து, வாமனரூபம் என்பது குள்ளர்கள் கூறும்பாட்டு.

விகுட்டம், நகைச்சுவைக் கூத்திற்கு ஏற்ற பாட்டு விகாடங்கம்.

நெடும்பத்திரம் - நீண்ட வாளை வீசி ஆடுவதற்குரிய பாட்டு.

கொற்றி - கொற்றவை வேடங்கொண்டாடுபவர்

சிந்து - சித்தராடல்

குரவை - குரவைக்கூத்து

பித்தன் - பித்துக் கொண்டவன் நடிப்பு

பிழுக்கை, குடப்பிழுக்கை, பாண்டிப் பிழுக்கை, பெரும்பிழுக்கை என்னும் முற்றேவலர் வேடம் கொண்டு ஆடும் ஒருவகைக் கூத்து.

கூட்களி - கள்ளைக் குடித்தவன் வேடத்தில் ஆடும் ஆட்டம்

கோல்கூத்து - கோலாட்டம்

திருவாசகத்தில் அம்மனையும், தனிவண்டும் (திருக்கோத்தும்பி) சாழலும், உந்தியும் வந்துள்ளன. குதிரை - பொய்க்கால் குதிரையாட்டம்.

16
செவியில் தேறும் திறன்

தோற்றுவாய்

பிங்கலம் என்ற நிகண்டின் ஆசிரியர் தம் நூலுள் பண்பிற் செயலின் பகுதி வகையுள் 'செவிவகை' என்ற ஒன்றைக் கூறுகிறார். அவ்வகையின் தொடக்கத்திலுள்ள நூற்பா செவியினால் அறிந்து தெளிபவைக்குப் பெயர் கூறுகின்றது.

செவியில் தேறும் திறன்இனி துரைக்கின்
உறுதியும் கேள்வியும் ஓதியும் கலையும்
பனுவலும் கல்விப் பெயரெனப் பகரும்

மேற்கண்ட நூற்பா, செவியில் தேறும் திறனாகிய கல்வி உறுதி என்றும் கேள்வி என்றும் ஓதி என்றும் கலை என்றும் பனுவல் என்றும் பெயர்பெறும் என்பதையும் கூறுகின்றது. இவை காரணப் பெயராகும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறத்தக்க பொருளை உறச் செய்தலால் உறுதி என்றும், கேட்கப்படும் பொருளைக் கேட்கச் செய்தலால் கேள்வி என்றும், ஓதி உணரவேண்டிய பொருளை ஓதச் செய்தலால் ஓதி என்றும் கற்க வேண்டிய பொருளைக் கற்கச் செய்தலால் கலை என்றும், பன்ன வேண்டிய பொருளைப் பன்னச் செய்தலால் பனுவல் என்றும் கருவி கருத்தவாகக் கொண்டு காரணம் உணர்க.

அன்றியே உறப்படுவது உறுதி, கேட்கப்படுவது கேள்வி, ஓதப்படுவது ஓதி, கற்கப்படுவது கலை, பன்னப்படுவது பனுவல் எனக் கருமமாகவும் கூறலாம். மேற்கண்ட ஐந்துள் மிகுதியும் வழக்கிலிருப்பவை கேள்வி, கலை, பனுவல் என்னும் மூன்றுமாம்.

செவியினால் தேறுவது

செவியினால் தேறுவது, அல்லது அறிவது ஓசை. ஒலி என்னும் இரண்டினை மட்டுந்தான் என்று நாம் கருதுகிறோம். ஆனால் பிங்கல நிகண்டாசிரியர் ஐம்புல அறிவையும் செவி அறிகின்றது என்று கொண்டு, ஐம்புல அறிவையும் செவி அறிகின்றது என்று கூறுகிறார்.

சத்தம் பரிசம் பேரச கந்தமென்று
ஒத்தலும் புலனும் செவியறி வென்ப

என்பது அந்நூற்பாவாகும். எனவே செவி என்பது தனக்குரிய ஒலிப்பொருளை அறிந்து கொள்ளுதலேயன்றி பிற புலன்களுக்குரிய ஊறு, உருவம், சுவை, மணம் என்னும் நான்கினையும் அறிந்து கொள்ளுகின்றது, இன்னுங்கூடக் கூறினால் மன அறிவும் அறிந்து கூறப்படும்பொழுது அதனையும் செவி அறிகின்றது. இதனால் செவிச் செல்வம் செல்வத்துள் செல்வம் என்று ஓதப்படும் சிறப்பினை உணர்ந்து கொள்ளுகின்றோம்.

அந்தகக் கவி வீரராகவ முதலியாரும் இரட்டைப் புலவரில் ஒருவரும் பிறவிக் குருடராவார். அவர்கள் அங்ஙன மிருந்தும் செவியறிவினால் சிறந்து பெரும் புலமை பெற் றிருந்தமை உலகம் அறிந்த செய்தியாகும்.

வீரராகவ முதலியார் தாம் பாடிய சீட்டுக்கவி ஒன்றில்,

கனதமிழ்த் துறையறி மரக்கலம்; காதல்கூர்
கன்னிகா மாடம்; நன்னூல்
கட்டுபொற் கொட்டாரம்; வாணிசிங் காதனம்;
கவிநாட கஞ்செய் சாலை;
வினவுசிவ கதையிற் சரக்கறை

எனத் தம்மைச் சிறப்பித் தோதுதல் காண்க. இதனால் கற்பவர்க்கு ஏனைய புலன் உணர்வைக் காட்டிலும் செவிப் புலன் உணர்வு சிறப்பாக அமைய்மேயானால் அது சிறந்து புலமை எய்துவதற்கு வழியாகின்றது. "செவிவாயாக நெஞ்சு களனாகக் கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து" என்று நன்னூல் நூற்பாவைக் கருதி உணர்வோம்.

கேள்வி

திருவள்ளுவர் கற்றலையும் கேட்டலையும் வெவ்வேறாகப் பிரித்து அவற்றை முறையே கல்வி என்ற அதிகாரத்தும், கேள்வி என்ற அதிகாரத்தும் கூறியுள்ளனர். கல்வி என்றால் என்னவெனின், கற்கத்தகும் ஒருவன் மாணவநிலையில் நின்று, கற்பிக்கத் தகும் ஆசிரியன் காலமும் இடமும் வாலிதின் நோக்கியிருந்து பாடம்

சொல்ல அதனைச் செவி வாயாக நெஞ்சு களனாகக் கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்தலாகும். எனவே கற்றல் என்பதும் கேள்வியே ஆகின்றது. அங்ஙனமாயின், கேள்வி என்றால் என்ன? கல்விக்கும் கேள்விக்கும் வேறு பாடென்ன என்றவினா எழுகின்றது.

கல்விக்கும் கேள்விக்கும் வேறுபாடு

ஒருவன் மாணவ நிலையிலிருந்து, தொடக்க நிலையில், ஆசிரியன் ஒருவனிடம் முறையாகப் பாடம் கேட்டுப் பயில்வது கல்வியாகும். கற்றபின், கற்றவற்றில் தெளிவு வருதற்காகவும், கல்லாதனவற்றைத் தெரிந்து தெளிவு வருதற் காகவும், தெரிந்து கொள்ள வேண்டியும், கற்று வல்ல சான்றோர் பலரிடம் கேட்க வேண்டியவற்றைக் கேட்டு நீங்கப் பெறுவது கேள்வியாகும்.

.... **கணக்கினை**
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலின் கேள்வியே நன்று

என்று பழமொழிப்பாடல் கணக்கினை பகல் முற்றிலும் முனியாது இனிது ஓதுதலைக் கற்றலாகவும், அஃங்ஙனமின்றி வேண்டிய பொழுது வேண்டிய பொருளைச் சான்றோர்பால் கேட்டலைக் கேள்வி என்றும் வேறுபடுத்தி ஓதுதலைக் காண்க.

கேள்வி என்பது

கற்றலுக்கும், கேள்விக்கும் வேறுபாடிருப்பினும், ஊன்றிக் கருதும்பொழுது, ஆசிரியனொருவன் சொல்லக் கேட்டுக் கற்பதும் கேள்வியே யாகும்; இதன்பின் சான்றோர் பாற் சென்று கேட்பதும் கேள்வியே யாகும்; இவ்விரண்டிற்கு மேல், கற்று, கேட்டு, கற்ற வழியிலே கேட்ட வழியிலே நிற்றலும் கேள்வியால் விளைந்ததாதலால், அதனையும் கேள்வி என்றே கொள்ள வேண்டும். இதற்குமேல், கற்றுக் கேட்டு, அறிந்து பொருள் வழிநின்று, அப்பொருளாகவே ஆகிவிடும் நான்காம் நிலையை எய்துவதும் கேள்வியால் விளைந்ததாதலால் அப்பொருளாக ஆகும் ஒத்தலையும் கேள்வி என்றே கொள்ளவேண்டும் எனவே கேள்வி

என்பது ஒன்றுக்கொன்று காரணமாய் நான்கு வகையாக இருக்கின்றது. இதனைப் பிங்கல நிகண்டு,

கற்றல்கேட்டல் அவ்வழி நிற்றல்
ஒத்தல் நால்வகைக் கேள்வியாகும்

என்று கூறுகின்றது.

கற்றல் - ஆசிரியனிடம் பாடம் கேட்டலாகிய கேள்வி

கேட்டல் - சான்றோர்பால் கேட்க வேண்டியவற்றைக் கேட்டலாகிய கேள்வி

அதன் வழி நிற்றல் - கற்ற வழி கேட்ட வழி நிற்றல்

ஒத்தல் - கேட்டு நின்று கேட்டவற்றோடு வேறுபடாமல் ஒத்து ஒழுகுதல்

எனவே மேலே கூறிய நூற்பாவின் கருத்துப்படி, கேட்டலில் கற்றல் முதல் நிலை, கேட்டல் இரண்டாம், நிலை, அதன்வழி நிற்றல் மூன்றாம் நிலை, ஒத்தல் நான்காம் நிலை ஆகும். இந்த நான்கும் கேள்வியாகும் என்பது.

ஒருவற்கு இந்த நான்கு நிலையும் கைவரல் வேண்டும்

ஒருவன் ஓர் இலக்கியத்தை முதன் முதல் ஓராசிரியனிடம் கேட்டுக் கற்றுக் கொண்டான் அதன் பின் அதனைப் பிற சான்றோரிடமும் கேட்டான். இருவகைக் கேள்வியினாலும் அவ்விலக்கியத்தைப் பிறர்பால் கேட்ட அவன் அதனைத் தானே படித்து அதன்வழி நின்றான். அதன் வழி நின்றதன் பயனாக அவ்விலக்கியத்தில் அறியப்படாதது ஒன்றில்லை யாக எல்லாவற்றையும் உணர்ந்து ஒத்து ஒழுகுகிறான். ஓரிலக்கியத்தைக் கற்கத் தொடங்கிய ஒருவர்க்கு இந்த நான்கு நிலையும் கைவந்த பின்னரே அவரை அவ்விலக் கியத்தில் புலமை உடையவராகக் கருத வேண்டும். ஒரு சிலர் ஒவ்வொன்றில் முழுப்புலமை எய்தியபின்காரணமாக அவரைப் பெரியபுராணம் வருகின்றது. கம்பராமாயணம் வருகின்றது. தொல்காப்பியம் வருகின்றது, நன்னூல் வருகின்றது என்று உலகமக்கள் கூறுகின்றனர்.

கற்கும் நிலையிலும்

மேலே கேள்வியின் நான்கு நிலைகளை அறிந்தோம். அந்த நான்கு நிலையிலும் முதல் நிலையாகிய கற்கும் நிலை அடிப்படை ஆதலின் அது ஒருவர்க்கு நன்றாக அமைதல் வேண்டும். ஒரு நல்ல மாணவன் நல்லாசிரியன் ஒருவனிடம் ஓர் இலக்கியத்தை ஒருமுறை பாடம் கேட்கிறான். ஒருமுறை பாடம் கேட்டலாகிய அவ்வொன்றினாலேயே அவனுக்கு அவ்விலக்கியத்தில் நல்ல பயிற்சி வந்துவிடுதில்லை. ஒரு முறைக்கு மேல் இரண்டாவது முறையும் மூன்றாவது முறையும் கூடப் பாடம் கேட்க வேண்டும் என்பர்

பவணந்தியார்

ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலில் பிழைபா டிலனே
முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்

என்று கூறுவர் அவர். கற்கும் பொழுதும் தன்போன்ற மாணவருடன் கூடித் தான் ஐயுற்ற பொருளை அவரிடம் வினாவி உண்மை உணர்ந்தும் அவர் ஐயுற்று வினாவிய வற்றிற்கு விடை கூறி உண்மை உணர்த்தியும் இவ்வாறு கற்றலால் ஒருகாற் பங்கு புலமை எய்துகிறது என்பர் பவணந்தியார்.

கற்றபின்

மேலே கூறியவாறு கற்றபின் சான்றோர் பலரிடம் கேட்டல் வேண்டும் என்பது மேலே கூறப்பட்டது. இவையெல்லாம் உணரும் முறையார்கும். இலக்கிய அறிவு உணரும் முறையாலும் உண்டாகும். பிறர்க்கு உணர்த்தும் முறையாலும் உண்டாகும். ஒருவன் உணர்த்தும் முறையைத் தொடங்கிய பொழுதுதான் அவன் அறிவு நன்கு வளரத் தொடங்குகின்றது. உணர்த்தும் முறையில் தான் உணர்ந்ததை பிறர் விளங்கிக் கொள்ளும் முறையில் உணர்த்தியாக வேண்டும். அப்பொழுதுதான் ஒருவன் தான் உணர்ந்ததைப் பிறர்க்குப் புரியவைக்கும் முறையில் இலக்கியப் பொருளை ஆய்கிறான். அந்தநிலையில் அவனுக்குத் தான் உணர்ந்த இலக்கியத்திலே முழுப் புலமை கிடைக்கிறது. அப்புலமையும்

தான் ஆசிரியனாக இருந்து தன்பால் கற்கும் மாணவர்க்கு உணர்த்தும் பொழுது ஒரு காற்பங்கு, தன்னைப் போல கற்றோர் அவைக்களத்தில் உணர்த்துவதால் ஒரு காற்பங்கு ஏற்படுகின்றன.

எனவே, ஒருவனுக்கு ஆசிரியனிடம் மூன்று முறை பாடங்கேட்டலால் ஒரு காற் கூறு புலமையும், தன்போன்ற மாணவரிடம் பயிலுதலால் ஒருகாற் கூறு புலமையும் உணரும் முறைக் கல்வியால் கிடைக்கின்றன. பின்னர் தன் மாணவர்க்குப் பாடம் சொல்வதால் ஒரு தாற் கூறும், கற்றறிந்தோர் நிறைந்த அவைக்களத்தில் பேசுவதால் ஒருகாற் கூறும் உணர்த்தும் முறைக் கல்வியால் கிடைக்கின்றன.

பல்காற் பழகுதல்

ஓர் இலக்கியத்தில் நல்ல பயிற்சி அறிவு வர ஒருவர்க்குப் பல்காற் பயிற்சி வேண்டும்.

பல்காற் பயின்றும் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்

என்ற இலக்கணக் கொத்துரைப் பகுதியில் அவ்வாசிரியர் "முக்காற் பார்த்து நல்லோர் பலருடனும் பலகாலும் பயின்று பிறர்க்குறிவித்தல் முதலான எல்லாம் அடங்கப் 'பல்காற் பழக்கம்' என்றாம் என்பர். இங்கே இவர் உணரும் முறை யால் புலமை பெறுதலையும் உணர்த்தும் முறையால் புலமை பெறுதலையும் குறிப்பிட்டிருத்தலைக் காணலாம்.

இலக்கணக் கொத்துரையாசிரியர் ஒருவன் நூல்களில் எவ்வாறு பயில வேண்டும் என்பதைத் தொகுத்துணர்த்தி யுள்ளார். அவை வருமாறு:-

(1) **சூத்திரம் சிலசில நோக்குதற் கரிதேல்**
முன்பின் பார்த்துப் பின்பே நோக்குக

சில நூற்பாவிற்கு, அல்லது சில பாடல்களுக்குப் பொருள் விளங்காதாயின், அப்பொழுது அவற்றில் அழுந்தியுணராமல் விடுக. அந்நூலில் முன்னாவது, பின்னாவது தான் முன்பு கற்ற நூலினிடத்தாவது, பின்பு கற்கும் நூலினிடத்தாவது அவற்றின் பொருள் விளங்கிக் கிடக்கும்.

(2) விதிகளிற் சிலசில வெளிப்படா தாயின்
உபலக் கணத்தினை ஓர்ந்தே உணர்க

உபலக்கணம் என்பது ஒன்றன் இலக்கணம் பக்க உதவி யால் துணியப்படுவது. 'ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே' என்னும் விதியும் உபலக்கணமாம். இவ்விதியினால் பொருள் உணரவேண்டிய இடங்களும் உண்டு ஆதலின் இது பயில்பவர்க்கு வேண்டும் என்பது. எவ்வாறெனின்? "கோள்இல் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" என்ற குறள் தலை ஒன்றனைக் கூறினாலும் காணாத கண், பேசாத நா முதலியவையும் கொள்ளுதல் உபலக்கண விதியாம் என்க.

(3) தாம்முன் அறிந்ததற்கு ஈதுமா றாயின்
என்னூல் விதியோ எனவே எண்ணுக

கச்சியப்பர் தாம் பாடிய கந்தபுராண முதற்பாட்டில் 'திகழ் தசக்கர' என்னும் ழ கர வீற்றுப் புணர்ச்சியைத் 'திகடசக்கர' என்று புணர்த்துக் கூறினார். இதற்குக் கற்றவரெல்லாம் மிகவும் பயிலும் தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களில் விதியில்லை. 'திகடசக்கர' என்னும் தொடர்க்கும் தொல்காப்பியம் முதலானவற்றில் விதியில்லை யாயினும் அது வேறொரு நூலின் விதிப்படி புணர்ந்ததாம். அந்நூல் வீர சோழியம் என உணர்ந்து கொள்வது.

(4) சிலநாள் பழகில் சிலவும் பலியா
பலநாள் பழகில் பலிக்கும் என்க

கூர்த்த மதியுடையராயினும் ஒரு நூலில் சிலநாள் மட்டும் அவர் பயிலின், சில செய்திகள் கூடத் தெளிவாய் அறிந்து கொள்ள முடியாதவராவர். மந்தராயினும் ஓர் நூலில் பல நாள் பயிலின் அவர் அந்நூலில் சிறந்த பயிற்சி உடையவராய் அந்நூலிற் கூறியுள்ள எல்லாப் பொருளையும் தெளிவுற அறியும் திறத்தினராவார் என்க.

(5) விரைவால் பார்க்கில் தெரியா தொன்றும்
விரையா தேற்கிற் கருகா தென்க

கூர்த்த மதியுடையவராயினும் ஒரு நூலினை விரைந்து கற்கில் ஒரு செய்தியையும் ஐயம் திரிபற உணர்ந்து கொள்ள மாட்டாதவராவார். மந்தராயினும் மன அமைதி உடையவ

முழுவதும் விரையாமல் எடுத்துக் கொண்ட நூலினைக் கற்பின் அவர்க்கு அந்நூலில் விளங்காதது ஒன்றுமில்லை என்க. நன்னூலாசிரியரும் உணர்த்துகின்ற ஆசிரியனுக்கு "விரை யாஎன் வெகுளான் விரும்பி முகமலர்ந்து" என்பதனைக் கூறி னாலும் உபலக்கணத்தால் உணர்பவர்க்கும் அவ்விலக்கணம் வேண்டும் என்க.

(6) வருவதில் கருத்தினை மட்டுப் படுத்தி
வந்ததிற் சிந்தையைச் சிந்தா திறக்குக

எல்லோர்க்கும் கற்றதைக் கருதாமல் இனிமேல் கற்பதில் தான் கருத்து இறங்கும். அது நன்மை யன்று ஏன் எனில்?! அரிது பெற்றிடினும் பெற்றதில் விருப்பம் அறப் பெறாதது எளிதாயிருப்பினும் அதனையே விரும்புதல் பொதுமக்களின் இயல்பாகும். கற்கின்ற ஒருவன் அவ்வியல்பினைப் பெறின், கற்ற அரிய நூலில் உண்டாகும் பலமுறைப் பயறலால் தோன்றும் தெளிவை இழந்துவிடுவான்; ஆதலால் கற்பவன் வருவதில் கருத்தினை மட்டுப்படுத்தி, வந்ததில் சிந்தையைச் சிந்தாது சிறக்க வேண்டும்.

(7) நூலினை மீளவும் நோக்க வேண்டா
சூத்திரம் பல்காற் பார்க்கவே துணிக

சிலர் ஒரு நூல் முழுவதையும் ஒரு முறையின்றி, இரண்டு முறை, மூன்று முறை, நான்கு முறை என்று கணக்கு வைத்துக் கொண்டு படிப்பார்கள். அவ்வாறு படிக்காமல் படிக்கத் தொடங்கிய ஒரே முறையிலேயே ஒவ்வொரு நூற்பாவையும் அல்லது ஒவ்வொரு பாடலையும் நன்கு ஆராய்ந்து, ஐயப்பொருளையும் திரிபுப் பொருளையும் நீக்கிவிட்டு, உண்மைப் பொருளை உணர்ந்து இவ்வாறு வரம்பு செய்து கொண்டு படிப்பின், அந்நூலை ஒருமுறை படித்தாலே போதும்.

---

1. "அரிதுபெற் றிடினும் பெற்றதில் விருப்பம் அறம்
பெறாதன விரும்புயிர்கள்"
(வைராக்கிய தீபம் - சாந்தலிங்க அடிகள்)

(8) மாரிபோற் கொடுப்பினும் மந்தனை விட்டுக்
கூரிய னுடவே கொடுத்தும் பழகுக

ஒருவன் கற்கும் பொழுது உடன்பயிலும் மாணவருடன் பயிலவேண்டும் என்பது விதி, ஆனால், அவருள் மந்தரும் இருப்பர், கூர்த்த மதியினரும் இருப்பர். அம் மந்தர் மழை போல் கைம்மாறு கருதாமல் கொடுப்பினும் அக்கொடை யைக் கருதாமல் அவருடன் பயில்வதை விடவேண்டும். கூர்த்த மதியினையுடைய மாணவருடன் இன்சொற் சொல்லியும், பணிந்தும், உற்றுழி உதவியும் கூடிப்பழகின் கல்வி அறிவு பெருகும்.

(9) வேறொரு கருமத் தினைமனத் தெண்ணின்
ஆரிய னாயினும் அப்பொழு தொழி

கற்கும் பொழுது பசி துன்பம் வரின், கல்விமேல் கருத்துச் செல்லாதாகலின், கற்பிக்கும் ஆசிரியனாயினும், கற்கும் மாணவனாயினும் கற்றலை அப்பொழுது நிறுத்தி விட்டுச் சோறு முதலியவற்றை உண்டல் முதலியன செய்து அவை தீர்ந்தபின் கற்க. பசி முதலியன உள்ள பொழுது அவ்வுடல் துன்பால் கற்றலில் கருத்துச் செல்லா தென்க.

(10) சொற்பயில் விப்பவன் எப்படிச் சொற்றனன்
அப்படி ஒழுகி அரும்பொருள் பெறுக

கற்பதற்குப் பிணியும் வறுமையும் இன்றி, இளமையும் பொருளும் இருத்தல் வேண்டும். இவையெல்லாம் கற்பதற்குச் சிறந்த கருவியாயினும் கற்பிக்கும் ஆசான் எவ்வாறு கூறி னானோ அவ்வாறு ஒழுகி செல்வப் பொருளைக் காட்டிலும் சிறந்த அரும் பொருளாகிய கல்வியை உறுபொருளாக ஒருவன் அடைய வேண்டும்.

இவ்வாறு கல்வி பயிலும் முறையை வகுத்தோதி யுள்ளார் இலக்கணக் கொத்து செய்த சுவாமிநாத தேசிகர் என்பர்.

17
பயன்
(செய்யுள் உறுப்பு)

தோற்றுவாய்

ஒருவன் எண்ணுவதாயினும் சொல்லுதாயினும் செய்வ தாயினும் பயனுடைய வற்றையே எண்ணுக; பயனுடைய வற்றையே சொல்லுக; பயனுடையவற்றையே செய்க என்பது சான்றோர் விதி. இப்பயன் தனக்குப் பயனென்றும் பிறர்க்குப் பயனென்றும் இருவகையாக இருக்கும். தனக்குப் பயன்பட வாழ்வதைக் காட்டிலும் பிறர்க்குப் பயன்படும் செயல்களை எண்ணி, மொழிந்து, செய்து வாழ்வது பேரறம் என்பது சான்றோர் கருத்தாகும்.

பயன் என்பது, பயன்தரும் பொருளை உணர்த்திப் பெயர்ச்சொல்லாகவும், (பயன்றிகழ் வைப்பின் பிறர் அகன்றலை நாடு - புறநானூறு -7) பயத்தல், பயக்கும், பயந்த, பயந்து என்று பல்நெறிய வினைகளை உணர்த்தி வினைச்சொல்லாகவும் வழங்கி வருகின்ற நல்ல தமிழ்ச் சொல்லாகும்.

பயனில சொல்லாமை

திருவள்ளுவர் பயனில சொல்லாமை என்ற அதி காரத்தை எண்ணுதலுக்கும் செய்தலுக்கும் நடுவாய் விளங்கு மாறு சொல்லில் வைத்து உணர்த்தியுள்ளார். அவ்வதிகாரத்தில் வந்த குறள் ஒன்று.

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்

என்பதாகும். "மயக்கம் நீங்கிய குற்றமற்ற அறிவினையுடைவர், பயன் நீங்கிய சொல்லை மறந்தும் சொல்லார்" என்று அக்குறள் கூறுகின்றது. இது பயனைப் பொருள் என்று சொல்லுகின்றது. மயக்கம் நீங்கிய குற்றமற்ற அறிவினை யுடையோர் பயனுடைய சொற்களையே சொல்லுவர்; இதனை எதிர்மறுத்தால் மயங்கிய அறிவுடையவரும் குற்றமற்ற

அறிவினையுடையவருமாகிய மக்கள் பயனில்லாதவற்றைத் தான் எண்ணுவார். பயனில்லாதவற்றைத்தான் பேசுவார் ,பயனில்லாதவற்றைத்தான் செய்வார் என்றதாயிற்று. எனவே, பய்னுடையவற்றை எண்ண, பேச, செய்ய, ஒருவற்கு மயக்கமற்றதாகிய, குற்றமற்றதாகிய நல்லறிவு வேண்டும் என்க.

சிறப்புப்பாயிர உறுப்புள் பயன் என்பதும் ஒன்று

இலக்கண நூல்களுக்குக் கூறப்படும் சிறப்புப்பாயிரம் பதினொரு உறுப்புக்களைப் பெற்று வரும். அப்பதி னொன்றில் ஒன்று பயன் என்பது.'வடவேங்கடம் தென்குமரி, என்ற தொடக்கத்தையுடைய பாடல் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரமாகும். அப்பாயிரத்துள் 'எழுத்தும் சொல் லும் பொருளும் நாடி' என்பது பயன் என்று உரையாசிரியர் கூறுவர். எனவே தொல்காப்பியங் கற்றலுக்குப் பயன் எழுத்திலக்கணத்தினையும் சொல்லிலக்கணத்தினையும் பொருளிலக்கணத்தினையும் ஆராய்தலாம்.அதனைப் போல நன்னூலைக் கற்பவர்க்குப் பயன் மொழித் திறத்தின் முட்டறுத்தல் என்று கூறப்படுகிறது. சிவஞான முனிவர் அந்நூல் உரையுள் பயனுக்குப் பயன் என்று ஒன்றைக் கூறி

> **எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தால்**
> **மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் - மொழித்திறத்தின்**
> **முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து**
> **கட்டறுத்து வீடு பெறும்.**

என்பர்.

களவியலுரையாசிரியர் கூறும் பயன்

இறையனார் களவியல் உரையாசிரியர் அந்நூற்குப் பாயிரம் உரைக்கும் பொழுது, பயனைக் கருதி இது கற்க நாற்பொருளும் பயக்கும் என்பது என்று கூறி இனி இக்களவியல் புகழ், பொருள், நட்பு, அறன் என்னும் நான்கினையும் பயக்கும், இதுவல்லனாக, என்னை? கற்று வல்லன் என்பதனின் மிக்க புகழ் இல்லை, உலகத்தாரானும் சமயத்தாரானும் ஒருங்கு புகழப்படுமாகலான் என்பது, இனிப், பொருளும் பயக்கும்; என்னை? பொருளுடையாரும்

பொருள் கொடுத்துக் கற்பராகலினென்பது, இனி நட்பும் பயக்கும்; என்னை? கற்றாரைச் சார்ந்து ஒழுகவே எமக்கும் அறிவு பெருகும் என்று பலரும் சார்ந்து ஒழுகலின் என்பது. இனி அறனும் பயக்கும்.என்னை? ஞானத்தின் மிக்க கொடையின்மையான் என்பது. இது பயன், என்பர், இவ்வுரையாசிரியர் களவியல் கற்றால் பொருளிலக்கண அறிவைப் பெறுவது பயன் என்று கூறாமல், பொதுவாகக் கற்றோர்க்கு உண்டாகும் பயனையே களவியல் நூலுக்குப் பயன் என்று கூறுகிறார்.

நூற்பயன்

நன்னூலாசிரியர் பொதுப்பாயிரத்தில் நூலின் இலக்கணத்தினைக் கூறும் பொழுது 'நாற்பொருட் பயத்தோடு' என்று தொகைச் சூத்திரத்திலே ஓதிப் பின்னர் விரிச் சூத்திரத்தே 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற் பயனே' என்று கூறியுள்ளார்.

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் நூலாவது மூவகைத்தாய், மூவரின் நடை பெற்று நால்வகைப் பயத்ததாய் என்று கூறி, நால்வகைப் பயனாவன அறம் பொருள் இன்பம் வீடு என்பன என்பர் (யாப்பருங்கல விருத்தியுரை - கழகப்பதிப்பு - பக். 425, 426).

வீரசோழியம்

வீரசோழியம் என்ற இலக்கண நூல் அறம் பொருள் முதலானவற்றை நூற்பயன் என்று கூறாமல், செய்யுட்பயன் என்று கூறுகின்றது.

.... செய்யுளின் பயனே
அறம் பொருள் இன்ப மொடுவீ டெனவறி ஆரணங்கே

(181) என்னும் காரிகையை நோக்குக.

தொல்காப்பியர் கூறுவது

தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுட்குக் கூறிய பலவகை உறுப்புள் 'பா' என்னும் உறுப்பினை,

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே

என்னும் நூற்பாவால் கூறிவிட்டு, இந்நூற்பாவினை அடுத்து,

அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப

என்று கூறுகின்றார். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் மேற் கூறப்பட்ட பாக்கள் பொருட்கு உரியவாமாறு உணர்த்துதல் நுதலிற்று என்று கருத்தெழுதுவர். பேராசிரியர் இது, பாவினைப் பொருட்குரியவாற்றான் வரையறை கூறுவான் தொடங்கிப் பொருட்குரிமை பொது வகையான் உணர்த்து கின்றது; இது பொருளதிகாரமாகலின் இங்ஙனம் கூறு கின்றான் என்று கூறுவர்.

தொல்காப்பியர் வீட்டினை நீக்கி அறம் முதலான மும்முதற் பொருள்களைப் பாவிற்கு உரிமையாக்குகிறார். இந்த இடம் பாவென்னும் உறுப்பினைச் சொல்லுகின்ற இடம். அப்பாக்கள் இம் மும்முதற் பொருளுக்கும் உரிமை யாகி வருதலும் பாவின் இலக்கணமாகவே கருதுகிறார் தொல்காப்பியர்.

தொல்காப்பியர் மரபியலில் நூலின் இலக்கணத்தைக் கூறும்பொழுது நூற் பொருளை நூலின் பயனாகக் கூற வில்லை.

நன்னூலாசிரியர் முதலிய பிற்காலத்தார் இலக்கண நூலுக்கு நாற்பொருளைப் பயனாகக் கூறுகின்றனர். இலக்கிய மாயிருந்தால் அவற்றிற்குப் பொருந்தலாம். இலக்கணத் துள்ளும் பொருளதிகாரமாயின் அறம் முதலான முப்பொருட்கே பொருந்தும் எழுத்தும் சொல்லும் முதலான இலக்கணங்களுக்குப் பயனுக்குப் பயனாய்க் கொண்டா லல்லது அவை நேராய்ப் பயனாகாவே.

தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுட்குக் கூறும் உறுப்புள் பயன் என்பதும் ஒன்றாகும்.

இதுநனி பயக்கும் இதன்மாறு என்றும்
தொருநிலைக் கிளவி பயன்எனப் படுமே

என்பது பயன் இன்னதென்பதைக் கூற வந்ததாகும். இப்படிச் சொல்லுவதால் இன்ன பயன் விளையும் என் பதைக் கருதிக் கொண்டு அப்பயன் விளைதற்குக் காரண மான சொற்களை யெல்லாம் தொகுத்துச் சொல்வதே பயன் என்னும் உறுப்பு என்கின்றார். எடுத்துக்காட்டாக

சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் வரினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே

என்னும் பாட்டினை எடுத்துக் கொள்வோம். இப்பாட்டுடைத் தலைவியோ தோழியோ வரைவு கடாவுதற் குறிப்பாய்க் கூறுகின்றனர். தலைவனைப் பார்த்து வரைந்து கொள் என்று கூறாமல் அக்கருத்தை உண்டாக்குகின்ற சொற்களை யெல்லாம் தொகுத்துக் கூறியுள்ளனர். சாரல் நாடனே! நீ வரும் வழி ஏதமுடைத்து. என் ஏதமென்னின்? வரும் வழியில் சிறு காட்டாறு உண்டு. அது நடப்போர் தம் காலைப் பின்னிக் கொள்ளும் சூரல் பம்பியது; மேலும் சூரர மகளிர் ஆர் அணங்கினராய் அவ்வழியில் இயங்கு கின்றனர்; அக்காரணத்தால் அவ்வழியில் வராதே; நீ வரின் உனக்கு என்ன ஏதம் உண்டாகுமோ என்று நான் அஞ்சுகின்றேன்" என்று கூறுகின்றனர். இப்படிக் கூறுவதனால் இவ்வாறு வருதலைவிட்டு வரைந்து கொள் என்பது தானே பயனாக உள்ளது.

பேராசிரியரும்,

மாறாக காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே

என்னும் பாட்டு தோழியைத் தூது விடுவாளாதற் பயன் பட வந்தது. இவ்வாறு எல்லாப் பாட்டும் பயன் உறுப்பாகவன்றி வாரா என்க. இவை புறத்திற்கும் ஒக்கும் என்பர். உலக வழக்குச் செய்யுள் வழக்கு என்னும்இரண்டில் உலக வழக்கிலேயே பயன்தரும் சொற்களைத்தான் கூறவேண்டும், பயன்தராத சொற்களைக் கூறக்கூடாது என்று திருவள்ளுவர்,

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல் (200)

என்னும் குறளால் கூறுவாரேயானால், தெரிந்து மொழிச் செய்தி என்று கூறப்படும் செய்யுளிடத்தே பயன் தராத சொற்களை வைத்து வழங்கலாமோ? இலக்கண நூலுள் வரத்தகாதென்ற குற்றங்களுள் பொருளில மொழிதல் என்பதும் ஒன்றாகும். பொருள் இல மொழிதல் என்பது பயனில்லாத சொற்களைக் கூறுதலாம். எனவே இலக்கியச் செய்யுளுள்ளும் இலக்கணச் செய்யுளுள்ளும் பயன்தரும் சொற்களையே கூறுதல் வேண்டும் என்னும் கருத்தால் தொல்காப்பியர் செய்யுளுக்கு உறுப்பாகப் பயனையும் குற்றங்களுள் ஒன்றாகப் பொருளில மொழிதலையும் கூறி யுள்ளார்.

எனவே இன்னசொல் சொன்னால் இன்ன பயன் விளையும் என்று முன்னரே கருதிக் கொண்டு அப்பயன் தோன்றுவதற்கும் வேண்டிய வகையில் அமைந்த சொற்களைக் கூறுதல் என்னும் செய்யுளுறுப்பாகும். இவ் வாறு கூறுவதற்கு முன்னுணர்வும் நுண்ணுர்வும் வேண்டும்.

18

காவிய உலகில் - அகவற்பா

ஒரு புலவனது காவியத்தைப் பற்றிய உண்மைகளை அறிய வேண்டுமாயின் அக்காவியம் எழுந்தபோது நிலவிய காலச்சூழ்நிலையை ஆராய்தல் வேண்டும்.

சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் எழுந்த பாடல்கள் பலவும் அகவற்பாக்களாலேயே ஆக்கப்பட்டன. அகவற்பா உச்ச நிலை பெற்றிருந்த காலம் அது. இக்காலச் சூழ்நிலையில் இரண்டு முக்கிய உண்மைகளை நாம் அறிதல் வேண்டும். ஒன்று: புலவர்கள் பலரும் தம் பாடல் களை அகவற் பாக்களால் அமைப்பதையே சிறந்ததாகக் கருதினர். இரண்டு: தொடர்நிலைச் செய்யுள்கள் அக் காலத்தில் ஏற்றம் பெறவில்லை; தனிச் செய்யுள்களே பாடப் பெற்று வந்தன. பின்னர், அவை ஆய்ந்து சான்றோர்களால் தொகுக்கப்பட்டுத் தொகை நூல்களாயின.

தொடர்நிலைச் செய்யுளின் தொடக்கம் பத்துப் பாட்டில் காணப்படுகிறது. அகத்துறைப் பாடல்கள் பலவும் ஒவ்வொரு துறை பற்றியே எழுதப்பட்டு வந்த நிலையில் ஒரு மாற்றம் தோன்றத் தொடங்கியது. தலைவன் தலைவி யரது களவொழுக்க நிகழ்ச்சிகளைக் கோவையாகத் தொகுத்து, பண்டை அடிச்சுவடு மாறாமல் அகவற்பாவில் முதன்முதலாக அளித்திருக்கும் முயற்சியில் தோன்றியது குறிஞ்சிப்பாட்டு. தொடர்நிலைச் செய்யுளின் துவக்கக் கால்கோள் விழாவை இங்குக் காணலாம். இதனை அடியொற்றியே சங்க காலத்தை அடுத்துச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இயற்றப்பட்டன. அக்காலத்தெழுந்த தொடர்நிலைச் செய்யுட்கள் பல. அகவற்பாவில் எழுதப் பட்டன. பெருநூலாகிய மாபாரதத்தை அகவற்பாவில் தமிழில் ஆக்கியமைத்துள்ள முயற்சியைக் காணலாம்.

சிலப்பதிகார காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய நூல் களில் மணிமேகலையும் பெருங்கதையும் குறிப்பிடத்தக்கவை.

யுகசந்தி

பெருங்கதை தோன்றிய காலத்தை ஒரு 'யுகசந்தி' எனலாம். மறுமலர்ச்சிக் காலம் ஒன்று சிலப்பதிகாரத்துக்குப் பின்னர்த் தோன்றியது. பழைய மரபில் ஒரு மறுமலர்ச்சி தோன்றிப் பாவின வகைகள் பெருகி, விருத்தப்பா வீறுபெறத் தொடங்கியது. விருத்தப்பாவின் மேதக்கவளத்தினை, திருத்தக்க தேவர் இயற்றிய சிந்தாமணியில் காணலாம்.

இதற்கு முன்னர்த் தோன்றிய நூல்களில் அகவற்பா, வெண்பா, கலிப்பா என்னும் மூன்றுமே கையாளப்பட்டு வந்தன. சங்கநூற் பாடல்கள் பெரும்பான்மையும் ஆசிரியப் பாவிலும், நீதிநூல்கள் வெண்பாவிலும், கலித்தொகை போன்றவை கலிப்பாவிலும் இயற்றப் பட்டன. அகவற்பா தோன்றிய காலத்திற்கும், விருத்தப்பா தோன்றத் தொடங்கிய காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்த நூல் பெருங்கதை. இதற்குப் பின்னர் எழுதப்பட்ட காவியங் களிலும், இதிகாசங்களிலும், புராணங்களிலும் விருத்தப் பாடல்களையே காண்கிறோம்.

சித்திரக் கவி

பிற்காலத்தெழுந்த பெருநூல்களில் 'சித்திரக் கவி' எனப்படும் மிறைக்கவிகள் இடம்பெற்றன. பாடல்களின் எழுத்துக்கள், நாகம், முரசம், கடகம், இரதம் போன்ற உருவங்களில் அமைத்தனர். புலமையின் அளவுகோலாகவும் இவ்வகைக் கவிகள் அக்காலத்தில் கருதப்பட்டன. சித்திரக் கவிகள் பாடுவது மெத்தக் கடினம் எனக் கருதப்பட்டது.

இத்தகைய மிறைக் கவிகள் வடமொழியினின்றும் தமிழில் வந்து பரவத் தொடங்கின. காவியத்திற்கு வேண்டிய பல உறுப்புக்களில் சித்திரக் கவியும் ஒன்று என்பது வடநூற் கொள்கை. கி. பி. ஆறாம் நூற்றாண்டில் சாளுக்கிய நாட்டில் வாழ்ந்தவர் எனக் கருதப்படும் வடமொழிப் பெருங்கவிஞர் பாரவி, 'கிராதார்ஜுனியம்' என்ற தம் நூலில் யமகம் திரிபு என்னும் தொடைகளை அமைத்துப் பாடினார். பலவகையான திரிபுகள் அமைந்த சித்திரக் கவிகளையும் இயற்றினார். ஒரு செய்யுள் முழுவதும் 'ந'

என்ற ஓர் எழுத்தே வருமாறு பாடியுள்ளார். இவ் வருமைப் பாடு அந்நாட்களில் புலவரால் பாராட்டப் பெற்றது.

வடமொழித் தண்டியலங்காரத்தில் சக்கர பந்தம், முரசு பந்தம், கோமூத்திரிகாபந்தம், சருப்பதோ பத்திரம் போன்ற ஏராளமான சொல்லணிகள் கூறப்படுகின்றன. இவை அனைத்தும் அமைந்த நூல் சிசுபால வதம். வட மொழியில் ஐம்பெருங்காவியங்களுள் ஒன்றெனக் கருதப்படும் இந்நூல் மாக கவியால் இயற்றப்பட்டுள்ளது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய தேவாரப் பாக்களில் யமகம் போன்ற திரிபுகளும் சொல்லணிகளும் இடம் பெற்றுள்ளன. இக்கால நூல்களில் சிலேடைகளை அமைத்துப் பாடும் முறை பல்கலாயிற்று.

இங்குக் குறிப்பிட்ட கவிவகைகள் தோன்றுவதற்கு முன்னரே பெருங்கதை தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் எவ்வகையான சித்திரக் கவியோ, சிலேடை போன்றவையோ இந்நூலில் காணப்படவில்லை. சொல்லடுக்கி வித்தையைக் காட்டும் முறையை இவர் கையாளவில்லை. சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய நூல்களைத் தழுவி அகவற்பாவிலேயே தம் நூலை ஆக்கினார் என்ற ஒன்றே உளங்கொளத் தக்கது. எனவே, சிலம்பு, மேகலை ஆகிய இரு நூல்களையும் பெருங்கதையின் முன்னோடிகள் எனக் கூறுதல் பொருந்தும்.

அகவற்பாவின் அருமை

தொடர்நிலைச் செய்யுளாக அமைவதற்கு அகவற்பாவே ஏற்றது; படிப்பதற்கும் பாடுவதற்கும் எளிதாக இருப்பது இதன் சிறப்பியல்புகளில் ஒன்று. சொல்லணிகள் ஒருவாறிருப் பினும் பொருளணிகளை அமைத்துக் காட்ட இப்பா மிகவும் சிறந்தது. பிற்காலத்தெழுந்த விருத்தம், கட்டளைக் கலித்துறை போன்ற பாவினங்களில் பொருளணிகளை அமைத்துக் காட்டினர். இவை படித்துணர்வதற்குச் சற்றுக் கடினமாய் உள்ளன. ஆனால், ஆசிரியப் பாவில் அமைக்கப்படும் அணிகள், விளங்கிக் கொள்வதற்கு மிகவும் எளிதானவை. ஒரு கருத்தை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறுவதற்கும் இதுவே ஏற்றது. சங்கச் சான்றோரும் அருந்தமிழ்ப் புலமை

ஆன்றோரும் தாம் கூறக் கருதிய அரிய உண்மைகளை எடுத்துரைக்க ஆசிரியப் பாவையே மேற்கொண்டனர். அரசர் போன்றாரது செவிகளில் செவியறிவுறூவாக ஆணித்தரமாக எடுத்துரைக்க அகவற்பாவே துணைசெய்தது. எனவே தம் நூலை முன்னோர் சென்ற முறையினை ஒட்டிக் கொங்கு வேளிர் அகவற்பாவால் ஆக்கினார். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றைப் போலவே பெருங்கதையும் பொருட்செறிவும், நடையழகும், அணிநயமும் பெற்று விளங்குகின்றது.

இடைக்காலச் சோழர்களின் ஆட்சிக் காலம் வரை ஆசிரியப்பாவின் செல்வாக்கு இருந்து வந்தது. சோழ மன்னர்கள் தமது மெய்க்கீர்த்திகளை ஆசிரியப்பாக்களில் அமைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேனாட்டு யாப்புகள்

தமிழ்ப் புலவர்களேயன்றி, முற்காலத்தில் காவியங்கள் இயற்றப் புகுந்த மேலைநாட்டுப் புலவர்களும் அகவல் அமைப்பினையுடைய ஒருவகை யாப்பையே கையாண்டு வந்தனர் என்று அறிகிறோம்.

ஆங்கிலம் போன்ற மொழிகளில் கவிஞர்கள் தனிப் பாடல்களை நாலடி முதலியனவாக அமைத்தனர். தொடர் நிலைச் செய்யுள்களைப் பல நீண்ட அடிகளால் அமைத்தனர். நாலடிப் பாடல்களில் எதுகை, மோனை போன்ற அமைப்பினை உடைய ஓர் இயைபுத் தொடை (Rhyme) யினை அமைத்தனர். ஆனால், தொடர்நிலைச் செய்யுட்களை எதுகை மோனை வேண்டாது வெறும் யாப்பிலேயே (Blank Verse) அமைத்தனர். எதுகை மோனைகளைக் காட்டிலும் தொடர்நிலைச் செய்யுள்கட்கு வெறும் யாப்பே சிறந்ததெனக் கருதப்பட்டது. செகப்பிரியரின் நாடகங்கள் முதலிய புகழ் பெற்ற நூல்கள் வெறும் யாப்பில் அமைத்தெழுதப்பட்டன. இத்தகைய யாப்பு முறை அறிஞர்களாலும் திறனாய் வாளராலும் பாராட்டப்பெற்றது.

இயைபுத் தொடை அமைந்த யாப்புகள் அடிஇறுதியில் எதுகை மோனைகள் அமையப் பெற்றவை. தமிழக

நாட்டுப் பாடல்கள் பலவற்றிலும், சிற்றிலக்கியப் பாடல் களிலும் இத்தகைய யாப்பு அமைதியைக் காணலாம். ஆங்கிலக் கவிஞர் கோல்டு ஸ்மித்து எழுதிய 'பாழடைந்த சிற்றூர்'; வில்லியம் மாரிசு என்பார் எழுதிய 'நிலவுலகத் துறக்கம்' என்பவை இத்தகைய இயைபு யாப்பில் எழுதப் பெற்ற நூல்கள்.

வடமொழி நூல்களில் இதுபோன்ற யாப்பமைப்பு இல்லை. மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களும் முழுக்க முழுக்க இத்தகைய யாப்பைத் தழுவியன என்று கூறிவிட முடியாது. ஓரளவு ஒப்புமையுடைய இதுபோன்ற யாப்பை உடையன இந்நூல்கள். இவற்றை அடியொற்றி நூலியற்றப் புகுந்த கவிஞர் வேளிர் பெருமானும் தமது நூலே இயைபு யாப்பில் அமைத்துப் பாடியுள்ளதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், முந்திய நூல்களில் கையாளப்படாத சில வேறுபாடுகளையும் இவர் கையாண் டுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் காணப்படாத அந்தாதித் தொடை இவர் நூலில் கையாளப் பெற்றுள்ளது. பெருங்கதைப் பாடல்கள் அனைத்தும் நிலைமண்டில ஆசிரியப் பாக்கள். ஒவ்வொரு பாடலும் 'வ' கர ஒற்றில் முடிவது. சிலம்பு மேகலை இவற்றிலும் இம்முறையே பின்பற்றப்பட்டுள்ளது.

அம்மை முதலியனவாக எண்வகை வனப்புகள் தொல்காப்பியரால் கூறப்பட்டுள்ளன. ஞகரம் முதலாக னகரம் ஈறாக உள்ள மெய்களுள் ஒன்றை இறுதியாகக் கொண்டு முடியும் ஆசிரியப் பாக்கள் 'இயைபு' எனப்படும்.

'ஞகாரை முதலா னகாரை யீற்றுப்
புள்ளி யிறுதி இயைபெனப் படுமே' - தொல். செய். 240

என்பது தொல்காப்பிய விதி. னகார வொற்றை இறுதியாகக் கொண்டு முடியும் ஆசிரியப்பாக்கள் சொற்றொடராகவும் பொருட்டொடராகவும் அமையலாம்.

"னகரப் புள்ளியை இறுதியாகக் கொண்டு சொல்லும் பொருளும் இயைந்து வந்தன மணிமேகலையும் கொங்கு வேளிரால் செய்யப்பட்ட உதயணன் கதையும்" என உரை யாசிரியர்கள் கூறினர்.

அகலக் கவி

சிலம்பும் மேகலையும் காதை என்னும் பகுதிகளைக் கொண்டன. பெருங்கதையும் அத்தகைய அமைப்பையே உடையது. ஒவ்வொரு நீண்ட அகவற்பாடலும் ஒரு காதை யாக அமைந்துள்ளது. முன்னையன கதைத் தொடர்பாகிய பொருள் தொடர்ச்சி மட்டுமே உடையவை. பெருங்கதை, இதில் மட்டும் சிறிது வேறுபடுகின்றது. பொருள் தொடர்ச்சியோடு அந்தாதி எனப்படும் சொல் தொடர்ச்சியும் இக்காப்பியத்தில் அமைந்துள்ளது.

பெருங்கதையில் இப்போது கிடைத்துள்ள காதைகளின் மொத்தத் தொகை 99. இதன் சிற்றுறுப்புகள் காதை எனப் படும் வழக்குண்மையை முகவெழுத்துக் காதை, மனம்படு காதை என்ற இரண்டு சிற்றுறுப்புகளுக்குத் தரப்பட்டுள்ள பெயர்களாலும், காண்டங்களின் இறுதியில், 'ஆகக் காண்டம் இத்தனைக்குக் கூடிய காதை இத்தனை' என்ற குறிப்பு காணப்படுவதாலும் அறியலாம். கிடைத்துள்ள அகவற் பாக்கள், 35 அடி சிற்றெல்லையையும் 390 அடி பேரெல்லையை யும் உடையன.

19

அம்மை முதலான எட்டு

அம்மை முதலான எட்டின் பொதுப்பெயர்

தொல்காப்பியர் செய்யுளியலின் முதல் நூற்பாவில் மாத்திரை முதல் வண்ணம் ஈறாக இருபத்தாறினைக் கூறி, அவற்றை 'யாப்பியல் வகையின் ஆறுதலை யிட்ட அந்நாலைந்து' என்று கூறிவிட்டு, அதன்பின்,

"அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனப்
பொருந்தக் கூறிய எட்டு"

என்று கூறி, மேற்கூறிய இருபத்தாறினோடு இவ்வெட்டையும் சேர்த்து முப்பத்து நான்கையும் நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பெனக் கூறி வகுத்துரைத்தார் என்று கூறியுள்ளார். மாத்திரை முதல் வண்ணம் ஈறானவற்றை 'யாப்பியல் வகை யிவ் ஆறு தலையிட்ட அந்நாலைந்து (இருபத்தாறு) என்று கூறிய தொல்காப்பியர், அம்மை முதலானவற்றைப் 'பொருந்தக் கூறிய எட்டு' என்று மட்டும் கூறினாரேயொழிய அவ் வெட்டிற்கும் சேர்த்து என்ன பெயர் என்பதைக் கூறாது விட்டார்.

இதனைப் போலவே **யாப்பருங்கலம்** என்னும் நூலும் "அம்மை முதலிய ஆயிரு நான்மையும்" (நூற்பா - 95) என்றே கூறியுள்ளது. இதற்கு உரையெழுதிய யாப்பருங்கல விருத்தியாசிரியர் "அம்மை முதலாகிய எட்டு **யாப்பலங்காரம்**" என்று உரை எழுதியுள்ளார். இதனால் **அம்மை முதலிய எட்டிற்கும் யாப்பலங்காரம்** என்றொரு பெயர் இருப்பதாகத் தெரிகிறது.

யாப்பருங்கலக் காரிகை ஒழிபியல் "மருள்தீர் விகாரம் வகையுள் வாழ்த்து வகை வனப்பு" என்று கூறுகின்றது. இதன் உரையில் காரிகையுரையாசிரியர் இனி வனப்பு எட்டுவகைப்படும்; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என என்னை?

அம்மை அழகு தொன்மை தோல்விருந்
தியைபு புலனிழை யெனவனப் பெட்டே"

என்றாராகலின் என்பர். காரிகைக் கூற்றிலிருந்தும், அதன் உரையாசிரியர் கூற்றிலிருந்தும் அம்மை முதலானவற்றிற்கு வனப்பென்றும் ஒரு பெயருண்டு என்பதைத் தெரிந்து கொள்ளுகின்றோம். அவர் மேலே காட்டிய நூற்பா எந்த நூலைச் சார்ந்தது என்று தெரியவில்லை. திருவள்ளுவமாலை எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு வழுக்கில் வனப்பணி வண்ணம் (45) என்ற பாட்டில் வனப்பையும் கூறியுள்ளது.

மேற்கண்ட ஆராய்ச்சியிலிருந்து தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா அம்மை முதலானவற்றைப் 'பொருந்தக் கூறிய எட்டு' என்று புகல்கின்ற தென்பதும், யாப்பருங்கலம் என்னும் நூல் 'அம்மை முதலிய ஆயிரு நான்மையும்' என்று கூறுகின்றதென்பதும், அதன் உரையாசிரியர் 'யாப்பலங்காரம்' என்று அதனைக் கூறுகின்றாரென்பதும், காரிகையாசிரியர் வனப்பு என்று குறித்ததனை அதன் உரையாசிரியர் வனப்பென்பது அம்மை முதலான எட்டென்று கூறி, அதற்குமேற்கோள் நூற்பாவொன்றும் தந்து விளக்குகிறாரென்பதும் நமக்கும் புலனாகின்றது.

இதன்பின், அம்மை முதலானவற்றிற்குத் தனித்தனி இலக்கணம் கூறும் நூற்பாக்களுக்கு வருவோம். முதலுரையாசிரியராகிய இளம்பூரணர் செய்யுளில் முதல் நூற்பாவில் "பிற்கூறிய எட்டும் மேற்கூறிய இருபத்தாறினோடு ஒரு நிகரன அன்மையின் வேறு தொகை கொடுக்கப்பட்டது. அவையாமாறு தத்தஞ் சூத்திரத்துட் காட்டுவதும்' என்று மட்டும் கூறியுள்ளார். அம்மை முதலான எட்டிற்கு யாப்பலங்காரம் என்றோ, வனப்பென்ற பெயரோ இருப்பதாக அவர் கூறவில்லை. அதுவுமன்றி அம்மை முதலானவற்றிற்கு இலக்கணம் கூறுபவர் தனித்தனி நூற்பாக்களிலும் குறிக்கவில்லை.

அவர், அந்நூற்பாக்களின் முகப்பில் நிறுத்த முறையானே அம்மையாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று,

அழகென்னும் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று, தொன்மைச் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று, தோலாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று, விருந்தென்னும் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று, இயைபாமாறு உணர்த்துதல் நுதலிற்று, புலன் என்னும் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று, இழையாமாறு உணர்த்துதல் நுதலிற்று என்றே எழுதிச் செல்கின்றார். இவ்வாறு அவர் கூறுவனவற்றில் யாப்பலங்காரம் என்ற பெயரோ வனப்பென்ற பெயரோ காணப்பெறவில்லை. அவர் அம்மை முதலானவற்றிற்கெல்லாம் தனிச் செய்யுளையே மேற்கோளாக எடுத்துக்காட்டுவர். ஆனால், தொன்மைக்கு மட்டும் இராம சரிதமும் பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின் மேல்வரும் செய்யுள் என்பர். இவையும் நச்சினார்க்கினியர் புறத்திணையியலில் எடுத்துக்காட்டாகக் காட்டும் பாரதக் கதை பற்றி வந்த தனிப்பாடல்கள் போல் வனவற்றையும் குறிக்கலாம். எனவே இளம்பூரணர் உரையைக் கருதினால் அம்மை முதலிய எட்டும் தனிச்செய்யுளுக்கே ஓதிய இலக்கணம் என்பது புலனாகின்றது. இளம்பூரணர் கருத்தினையே யாப்பருங்கல விருத்தியுரை யாசிரியரும் காரிகை உரையாசிரியரும் கொண்டனர் என்பது அவர்கள் உரையால் நமக்குப் புலனாகின்றது.

ஆனால் பேராசிரியரும், பெரும்பாலும் அவர் கருத்தைப் பின்பற்றியொழுகும் நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கருத்திற்கு மாறுபட்டு, அம்மை முதலாயின பெரும்பாலும் தொடர்நிலைச் செய்யுள் வனப்பையும் சிறுபான்மை தனிச்செய்யுள் வனப்பையும் கூற வந்தன என்றே கருதிக் கொள்கின்றனர். பேராசிரியர் செய்யுளியல் முதற்பாவுரையிலேயே இக்கூறப்பட்ட எண்வகை வனப் பொடு முன்னர்க் கூறிய இருபத்தாறும் தொகுப்ப முப்பத்து நான்கு உறுப்பாம் என்றவாறு. மற்றிவற்றை வனப்பென்று கூறற்கு (யார் கூறற்கு?) அவற்றைக் கூறும்வழிச் சொல்லுவதும் என்றனர்.

அம்மை முதலானவற்றைத் தனித்தனி கூறும் நூற்பாவிற்கு இளம்பூரணர் முதலியோர் கருதும் உரை

தொல்காப்பியர் அம்மை முதலான எட்டினைத் தனித்தனியே கூறும் நூற்பாக்கள், இளம்பூரணர் முதலான உரையாசிரியர்கள் உரையில் வெவ்வேறு பாடங்களுடன் காணப்படுகின்றன.

இளம்பூரணர்,

"சின்மென் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே அடிநிமிர் வின்றே"

என்று மூலபாடத்தை எழுதி, "சிலவாய மெல்லிய வாகிய மொழியினானே தொடுக்கப்பட்ட அடிநிமிர்வில்லாத செய்யுள் அம்மையாம்" என்றெழுதி 'அறிவினான் ஆகுவ துண்டோ' என்றும் திருக்குறள் ஒன்றினை மட்டும் மேற் கோளாகக் காட்டியுள்ளார்.

யாப்பருங்கல விருத்தியாசிரியர்

"சின்மென் மொழியால் சீரிது நுவலின்
அம்மை தானே அடிநிமிர் வின்றே"

என்று பாடம் ஓதி, அம்மையானது சிலவாய மெல்லியவாய சொற்களால் ஒள்ளிய வாய பொருள்மேற் சில வடியாற் சொல்லப்படுவது என்று கூறி, 'அறிவினால் ஆகுவதுண்டோ, என்னும் பாட்டினையே எடுத்துக்காட்டுவர்.

காரிகை உரையாசிரியரும் யாப்பருங்கல விருத்தி ஆசிரியரைப் போலவே பாடம் கொண்டு அவர் போலவே உரையெழுதி எடுத்துக்காட்டும் காட்டியுள்ளார்.

ஆனால், பேராசிரியர், அம்மை இலக்கணம் கூறும் நூற்பாவினை,

"வனப்பிய றானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவலடோ
டம்மை தானே அடிநிமிர் பின்றே"

என்று பாடம்கொண்டு, இவற்றை வனப்பென்று கூறுமா றென்னை? அச்சூத்திரத்துப் (முதல் நூற்பா) பெற்றில

மாலெனின்* வனப்பென்பது பெரும்பான்மையும் பல உறுப்புந் திரண்டவழிப் பெறுவதோர் அழகாகலின் அவ்வாறு கோடும், அதனால் பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலையதே வனப்பென்னும் பெயர்ப் பகுதி வகையான் ஏற்பதென்பது. இனி இவற்றைச் சூத்திரத் தான் வனப்பென்னும் குறி எய்துவிக்க வேண்டுவானாகச் சூத்திரத்தை.

"வனப்பிய றானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவலின்"

என்பது பாடமாக உரைத்தானென்க. அதுவும் அறிந்தவாறே (அறிவித்தவாறே) கொள்க, என்றனர்.

ஆனால், நச்சினார்க்கினியர்,

"சின்மென் மொழியால் தாய பனுவலின்
அம்மை தாமே அடிநிமிர் வின்றே"

என்று பாடமோதி, இந்நூற்பாவுரையில், இப்பெயர் (வனப்பென்னும் பெயர்) சூத்திரத்தாற் பெற வேண்டுவார் "வனப்பிய றானே வகுக்குங் காலைச் சின்மென் மொழியால்" எனப் பாடமோதுப என்று கூறுவதைக் கருதினால், "வனப்பியல் தானே வகுக்குங் காலை" என்பது பேராசிரியர் கற்பித்துக் கொண்ட பாடம் போல் தெரிகிறது. அறிஞர் கருதுக.

அழகு

"செய்யுள் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே"

என்பது அழகினைச் சொல்லும் நூற்பாவாகும். இந்நூற் பாவிற்குப் பாடவேறுபாடில்லை. இளம்பூரணர் செய்யுள் மொழியால் என்பதற்குச் 'செய்யுட் சொல்லாய்' என்பர். யாப்பருங்கல விருத்தியாசிரியரும் காரிகை உரையாசிரியரும் 'செய்யுட் சொல்லாகிய திரிசொல்லால்' என்பர். பேராசிரியர் 'வழக்குச் சொல் பயிலாமல் செய்யுள் பயின்றுவரும் சொல்லால்' என்பர். இளம்பூரணர் முதலிய மூவரும் 'துணையிரும்பரப்பாம்' என்ற தனிப்பாடலைக் காட்டுவார்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் நெடுந்தொகை முதலிய தொகை எட்டும் என்பர்.

தொன்மை

"தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

மேற்காட்டியது இளம்பூரணர் கொண்ட பாடம். மற்று எல்லோரும் "தொன்மை தானே, உரையோடு புணர்ந்த பழமை மேற்றே" என்ற பாடமே கருதினர். இளம்பூரணர் தொன்மையாவது உரையொடு பொருந்திப் போந்த பழைமைத்தாகிய பொருண்மேல் வருவன. அவை இராம சரிதமும் பாண்டவ சரிதமும், முதலாகியவற்றின் மேல் வரும் செய்யுள் என்பர். விருத்தி ஆசிரியர் 'தொன்மை யாவது பழைமைத்தாய் திகழ்ந்த பெற்றி உரைக்கப் படுபவனவற்றின் மேற்' என்று கூறி, 'செறிதொடி உவகை கேளாய்' என்பது போல்வனவும் பாரதமும் இராமாயணமும் கொள்க என்பர். காரிகை உரையாசிரியரும் அவ்வாறே எழுதி பாரதமும் காந்தமும் கொள்க என்றனர்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தொன்மை என்பது உரை விராஅய்ப் பழைமையவாகிய கதை பொருளாகச் செய்யப்படுவது அவை பெருந்தேவனாராற் செய்யப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன என்பர். நச்சினார்க்கினியரும் இவ்வாறே எழுதிச் சிலப்பதி காரமும் அது என்பர்.

தோல்

"இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்"

இந்நூற்பாவிற்குப் பாடவேறிபாடில்லை. தோல் என்னும் பலபொருள் ஒரு சொல்லிற்கு 'வனப்பு' என்ற

---

*பேராசிரியர் வினாவிற்கு ஏற்ற விடையினைக் கூறவில்லை.

பொருளும் உண்டு. (பிங்கல நிகண்டு). இந்நூற்பாவிற்கு இளம்பூரணரும், விருத்தி உரையாசிரியரும் காரிகை உரையாசிரியரும் இழுமென்மொழியால் விழுமியது நுவன்றதற்கு 'பாயிரும் பரப்பகம்' என்னும் மாக் கண்டேயனார் காஞ்சிப் பாட்டும் அடிநிமிர்ந்தெ தாழுகியதற்கு மலைபடுகடாம் பாட்டும் எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மெல்லென்ற சொல்லால் அறம் பொருள் இன்பம் வீடென்னும் விழுப் புறம் பயப்பக் கொச்சகத்தாற் செய்வனவும் ஆசிரியப் பாட்டால் ஒரு கதை மேல் தொகுக்கும் பொருட்டொடர் நிலையும் தோல் ஆகும் என்பர். நச்சினார்க்கினியர் சிந்தாமணி, தேசிகப்பா இவற்றை எடுத்துக்காட்டுவர்.

விருந்து

விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்று

இளம்பூரணரும் விருத்தி உரையாசிரியரும் 'புதுவது புனைந்த' என்ற பாடமே கொண்டுள்ளனர். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் காரிகை உரையாசிரியரும் புதுவது கிளந்த என்று பாடம் ஓதுவர்.

இளம்பூரணர், விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறிபோய், புதிதாகச் சொன்ன யாப்பின் மேற்று என்பர். விருத்தியுரை ஆசிரியரும் காரிகையுரையாசிரியரும் விருந்து என்பது புதியவாயினவற்றின் மேற்று அவை இப் பொழுதுள்ளாரைப் பாடுவது என்பர் பேராசிரியரும், நச்சி னார்க்கினியரும் விருந்து தானும் புதிதாகத் தொடுக்கப் படும் தொடர்நிலைச் செய்யுள்மேற்று என்று கூறி முத்தொள்ளாயிரம் அந்தாதி கலம்பகம் முதலானவற்றைக் காட்டுவர்.

இயைபு

ஏகார முதலா ளகார வீற்றுப்
புள்ளி யிறுதி இயைபெனப் படுமே

இளம்பூரணர் இதற்கு எழுதிய உரையினைக் கருதாமல் ஏடு எழுதியவர் 'னகார வீற்று' என்று பாடம் கொண்டனர். அது ஏடு எழுதுவோரால் நிகழ்ந்த பிழையாகும். 'ஏகார முதலா ளகார வீற்று' என்பது இளம்பூரணர் கொண்ட பாடமாகும். மற்ற எல்லோரும் ஞாகாரை முதலா ளகாரை யீற்று என்று பாடம் கொண்டுள்ளனர்.

இளம்பூரணர் 'ஞணநமன யரலவழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வரும் செய்யுள் இயை பென்னும் செய்யுளாம்' என்று கூறி உதாரணம் வந்தவழிக் காண்க என்பர்.

விருத்தியாசிரியர் இயைபு என்பது ஞணநமன யரலவழள எனப்பட்ட பதினொரு புள்ளியும் ஈறாய் வந்த பாட்டெல்லாம் அவை பதினோருதாரணமும் வந்தவழிக் கண்டு கொள்க என்றனர். காரிகையுரையாசிரியரும் அவ்வாறே கூறுவர்.

பேராசிரியர் இயைபு என்றதனால் பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வரும் கருத்து. மணிமேகலை யும் கொங்குவேள் மாக்கதையும் போல்வன னகாரை ஈற்றால் வந்தன என்பர்.

புலன்

'தெரிந்த மொழியால் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிப்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே'

மேல் நூற்பாவிற்கு இளம்பூரணரும், விருத்தியுரை யாசிரியரும் காரிகையுரையாசிரியரும் கொண்ட பாடம், "தெரிந்த மொழியால்" என்பதாகும். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம் 'சேரி மொழியால்' என்பதாகும். இளம்பூரணர் 'வழக்கச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமல் பொருள் தோன்றுவது புலன்' என்பர். அதற்கு அவர் காட்டும் உதாரணம் 'பாற்கடல்' என்ற பாட்டாகும். விருத்தியுரை ஆசிரியரும் காரிகையுரையாசிரியரும், 'இயற்சொல்லால்

பொருள் தோன்ற செய்யப்படும் பாட்டு' என்று கூறி இளம்பூரணர் காட்டிய பாட்டினையே மேற்கோள் காட்டுவர். பேராசிரியர் சேரிமொழி என்பது பாடி மாற்றங்கள் அவற்றால் பொருட்டொடராதனே செய்யுள் செய்வது என்பர். நச்சினார்க்கினியரும் அவ்வாறே கூறுவர்.

இழைபு

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியால் ஆங்கன் மொழியின்
இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்.

இழைபின் இலக்கணத்தைக் கூறும் இந்நூற்பா இளம்பூரணர் கொண்ட பாடப்படி மேலே எழுதப் பெற்றுள்ளது. மேற்கோடிட்டுக் காட்டிய இடங்களில் விருத்தியுரையாசிரியர் 'அடக்காது', 'ஆங்கனம்' என்று இரண்டிடங்களில் பாடம் வேறுபட்டுள்ளார். காரிகையுரையாசிரியன் வல்லெழுத்தடக்காது, ஐந்தடி காறும், ஆங்கன மொழுகின் என்று மூன்று பாட வேறுபாடு கொண்டுள்ளார். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் வல்லெழுத்தடக்காது, ஆங்கன மொழுகின் என்று இரண்டிடத்தே பாட வேறுபாடு கொண்டுள்ளனர்.

இளம்பூரணர் ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடங்காது ஆசிரியப்பாவிற் கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின் காறும் உணர்ந்த பதினெழு நிலத்து ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது இழைபு என்னும் செய்யுளாம் என்பர். விருத்தியுரையாசிரியரும் காரிகையுரையாசிரியரும் இதே கருத்தில் உரை எழுதுவர். நச்சரும் 'பேர்ந்து பேர்ந்து' என்ற ஒரு பாட்டினை மேற்கோள் காட்டுவர். ஆனால் பேராசிரியர் 'ஒற்றெடுத்த வல்லெழுத்துப் பயிலாது, இருசீரடி முதலாக எழுசீரடியளவு வந்த அடி ஐந்தனையும் ஒப்பித்து, ஒப்பித்த வென்பது பெரும்பான்மையான நாற்சீரடி பகுக்கப்பட்டு என்றவாறு, ஓங்கிய மொழியான் - நெட்டெழுத்தும் அந்நெட்டெழுத்துப் போல் ஓசையெழும் மெல்லெழுத்தும் லகார ளகாரங்களும் உடைய சொல்லான். ஆங்கனம் ஒழுகின் - இவையும்

சேரிமொழியால் பொருள் புலப்படச் சென்று நடப்பின் இழைபென்று சொல்லப்படும் என்று கூறி, அவையாவன கலியும் பரிபாடலும் போலும் இசைப் பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன என்பது என்று இளம்பூரணர் முதலான மூவர் கருத்திற்கு முற்றிலும் மாறுபடப் புதுப்பொருள் எழுதுவர்.

அம்மை முதலிய எட்டினைப் பற்றிய கருத்து

இளம்பூரணர் நூற்பாக்களுக்கு ஆற்றொழுக்கு முறையில் நேரிதாகப் பொருள் எழுதுவதில் சிறந்தவர். அவரும், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும், காரிகையுரையாசிரியரும் அம்மை முதலியன தனிச்செய்யுளின் வனப்பைக் கருதி எழுந்தென்றே கருதுகின்றனர். வலிந்து, தம்மனத்தில் வனப்பைக் கருதி எழுந்ததென்றே கருதுகின்றனர். வலிந்து, தம்மனத்தில் ஒரு கருத்தை வைத்துக் கொண்டு அதற்கியையப் பொருளெழுதும் நச்சினார்க்கினியர் பேராசிரியர் முதலியோர் அம்மை முதலியன தொடர்நிலைச் செய்யுளைப் பற்றி எழுந்ததென்று கருதுகின்றனர். தொல்காப்பியர் காலத்தில் தொடர்நிலைச் செய்யுள்கள் (காப்பியம்) இருந்தனவா என்பது சரியாக நிலைநாட்டப்படவில்லை. ஆகையினாலே இளம்பூரணர் முதலியோர் கருத்தே தகுதியுடையதாயிருக்க வேண்டும்.

20
கற்பனையும் நாடக வழக்கும்

தோற்றுவாய்

"இலக்கியக் கலைக்கு உணர்ச்சியும், கற்பனையும் வடிவும் இன்றியமையாத உறுப்பென்பர். இம்மூன்றுடன் கருத்து என்ற ஒன்றும் தலைமையாக வேண்டப்படும். பாட்டுடன் கூடாத தனித்த ஒலிவடிவ இசைகட்குமட்டும் கருத்து தேவையில்லை என்பர்" என்று கூறுவர் உயர்திரு. டாக்டர் மு.வ. அவர்கள்.

மேலே இலக்கியக் கலைக்கு இன்றியமையாத உறுப்புக் களாகக் குறிப்பிட்டவற்றுள் ஒன்று கற்பனையாகும். அது என்ன என்பதைப் பற்றி ஆராய்வோம்.

கற்பனை என்பது பற்றிப் பேராசிரியர் க. கைலாசபதி அவர்களும், கவிஞர். முருகையன் அவர்களும் எழுதிய கவிதை நயம் என்ற நூலில் கூறியுள்ள கருத்து வருமாறு:

கவிதை நயங் கூறும் கற்பனை

கவிதையைப் பற்றியும் கவிஞரைப் பற்றியும் பொது வாகப் பேச்சு எழும்பொழுது கற்பனை என்ற சொல் அடி படுவதைக் கேட்கலாம். உணர்ச்சி, ஒலிநயம், அணிச்சிறப்பு, யாப்பமைதி, கற்பனை முதலிய பல உறுப்புக்கள் ஒன்று சேர்ந்தே கவிதைக்கு அரணாகின்றன என்று முந்திய அதிகாரம் ஒன்றிலே குறிப்பிட்டிருந்தோம். அது பற்றியே பல்வகைத் தாதுவினால் அமைந்தது கவிதை என்னும் பொருள்படப் பவணந்தி முனிவர் இலக்கணம் வகுத்தார் என்றும் கூறியிருந்தோம். அவ்வாறு இருப்பினும் பொதுவாகக் கவிதை என்றதும் கற்பனையே பலருக்கும் நினைவு வருகிறது. கவிதையின் பல பண்புகளிலும் கற்பனையே பிரசித்தமாயுள்ளது என்பதையே இந்நிலைமை தெளிவுறுத்துகிறது. அதாவது கற்பனையே கவிதையின் மூச்சாகக் கருதப்படுகிறது.

கற்பனை என்றால் என்ன? என்னும் கேள்விக்கு இலகுவில் விடை கூறிவிடல் முடியாது. கவிதைகளிலே கற்பனை துலங்கும் சந்தர்ப்பங்களைக் காட்டலாம். கற்பனையின் தொழிற்பாட்டுக்கு எடுத்துக்காட்டுகள் கூறலாம். ஆயினும் கற்பனைக்கு வரைவிலக்கணம் கூறுவது எளிதன்று. பொதுவாகக் கூறுமிடத்து நமது அனுபவங்கள் ஐம்புலன்களை அடிப்படையாகக் கொண்டவை.

அவ்வனுபவங்கள் வாயிலாக வரும் அறிவைப் புலனுணர்வு அல்லது புலப்பாடு என்பர். புலன்கள் மூலமாகவன்றி, கருத்தளவிலும் ஒரு பொருளை எண்ணி அனுபவிக்கக் கூடிய நிலையும் உண்டு. அதுபற்றி வரும் அறிவைக் கருத்துப் பொருளுணர்வு என்பர். பின்னதாகிய கருத்துப் பொருள் உணர்வின் செறிந்த உயர்நிலையினையே கற்பனையாற்றல் என்கிறோம். இவ்வடிப்படைக் காரணத்தினால் கற்பனை என்பது இல்லாதது ஒன்றைக் கட்டாகக் கூறுதல் என்று பொருள்படும். பொருள்களுடன் நிகழ்வுகளும் சாதாரணமாகப் புலன்களுக்கு இடமானவை யாதலால், அவற்றையே மெய்ம்மை என்பது இயல்பாகி விட்டது. புலன்களைச் சாராமலும் உணர்வானது பொருள்கள் பற்றியும் நிகழ்ச்சிகள் பற்றியும் தோன்றுமாயின் அவற்றை உண்மைக்குப் புறம்பானவையாகக் கொள்ளுதலும் இயல்பாகி விட்டது. இயற்கை உணர்விற்குப் புறம்பான வற்றை மன உணர்விற்கு இடமானவையாகப் படைப்பதே கற்பனையாற்றல். இலக்கியத்தைப் பொறுத்த வரையில், " நிகழாதது ஒன்றை நிகழ்ந்தது போலச் சிருட்டிப்பது கற்பனை என்று கருதப்படுகிறது" என்பர். (கவிதை நயம் - கற்பனையின் பாங்கு - 34-35 பக்)

அவர் ஆராய்ந்தாற் போல நாமும் கற்பனையைப் பற்றி ஆராய்வோம்.

கற்பனை

மாலையம் பொழுது நிகழ்கிறது. அப்பொழுது நாம் வேலி யோராமாக நடந்து கொண்டிருக்கிறோம். ஒரு வளைந்த உருவம் நம்கண்ணுக்குப் புலப்படுகிறது. அதனைப்

பார்த்த நாம் பாம்பாகவே கருதிவிட்டோம். உடனே அஞ்சித் துள்ளிக் குதித்து அப்பாற் சென்று சற்றுத் தூரமான இடத்தில் நின்று கொண்டு அவ்வுருவத்தை உற்றுப் பார்த்தோம். அவ்வுருவம் அசையாமலேயே கிடந்தது. இந்த நிலையில் இது பாம்போ கயிறோ என்று இருபாற் கவர்வுற்று இடையூசலாடி ஒரு பாற்படாத உணர்வோடு நின்றோம். பின்னர் ஒரு கல்லினை எடுத்து அதன் மேல் வீசினோம். அப்பொழுதும் அவ்வடிவம் அசையாமற் கிடந்தது. உடனே ஒரு கோலால் அதனைத் தூக்கிப் பார்த்த பொழுது அது ஒரு நார்க்கயிறாக இருந்தது. இந்த நிலையில் நம்மிடம் மூன்றுவகையான உணர்வு ஒன்றன்பின் ஒன்றாய் நிகழ்ந்துள்ளன. முதலில் கயிற்றினைப் பாம்பென்றே கருதிய உணர்வும், இரண்டாவது பாம்போ கயிறோ என்ற உணர்வும் மூன்றாவது பாம்பன்று இது கயிறே என்று உணர்ந்த உணர்வும் என்பனவாம் அவை. இந்த மூன்று உணர்வு நிலையில் பழுதையைப் பாம்பென்று கருதிய திரிபு நிலைக்குத்தான் கற்பனை என்று பெயர்.

ஆரோபம் அத்தியாசம் கற்பனை யான வெல்லாம்
ஒரோர்வந் துவினைவேறே ஒரோர்வத் துருவன வோர்தல்
நாரூடு பணியாய்த் தோன்றல்

கைவல்லியம் ஆரோபம் அத்தியாசம் கற்பனை என்று சொல்லக்கூடிய எல்லாம் ஒரு பொருளை மற்றொரு பொருளாக உணர்ந்து கொண்ட திரிபுணர்வாகும். கால விசேடம் பற்றி இட விசேடம் பற்றி நார்க் கயிறொன்றனைப் பாம்பாக உணர்ந்து கொண்டது போன்றதாம் என்பது மேற்பாட்டின் பொருளாகும்.

பாரத நாட்டில் உள்ள பலவகை மதங்களுள் சங்கரரால் நிலைநாட்டப்பட்ட அத்துவித மதம் கற்பனா வாதத்தை அடிப்படையாகக் கொண்டதாம். சத்து சித்து ஆனந்த மயமான பிரம வடிவம் ஒன்றே நிலைபேறாக உள்ளது. கிளிஞ்சிலில் வெள்ளி தோன்றுகின்றாற் போல அப்பிரம வடிவத்தில் நாம பேதக் கிரியை என்னும் மாயா கற்பனையால் இவ்வுலகம் தோன்றியுள்ளது என்றல் அவர்தம் கருத்தாகும்.

குழந்தை விளையாட்டும் கற்பனையும்

சிறு குழந்தையொன்று விளையாடத் தொடங்குகின்றது. தெருவிலே சென்று மணலால் சிறுவீடு கட்டிக் கொள்கின்றது. அதனை உண்மையான வீடென்றே கற்பனை செய்து கொள்கின்றது. தனக்குக் கிடைக்கின்ற கிளிஞ்சில் சிறுகல் என்னும் இவற்றையெல்லாம் பொறுக்கி வைத்துக் கொண்டு அவற்றைக் காசுகள் என்று கற்பனை செய்து கொண்டு மிக மகிழ்ச்சியாக விளையாடுகிறது. அது பற்றிய பாடலைக் கீழே காண்க:-

பாப்பா செய்யும் காரியங்கள்
பார்க்கப் பலர்க்கும் வியப்பாகும்
கேட்பா ரற்றுக் கிடக்கின்ற
கிளிஞ்சிலைக் கல்லைப் பொறுக்கிக் கொள்ளும் - 1

காசுக ளென்றே கூறிக்கொள்ளும்
கருத்தாய்க் கொடுத்து வாங்கிக் கொள்ளும்
தூசினைப் போல சிலர்நினைந்து
தொட்டால் அவரைக் கடிந்து கொள்ளும் - 2

ஒன்றை ஒன்றாய்க் கற்பித்தல்
உயர்ந்த புலவன் கருத்தென்பர்
என்றும் அந்தக் கற்பனையை
இயற்றி மகிழும் குழந்தையினம் - 3

கம்பர் கூறும் அவையடக்கம்

கற்பனை நிறைந்த பெருங்காப்பியம் கம்பராமாயணம். அக் காப்பியத்தின் தொடக்கத்திலே கம்பர் அவையடக்கம் கூறுகின்றார். சிறு குழந்தைகள் விளையாடி மகிழ்வதைக் கருதி கற்பனையின் அடிப்படையில் நிலத்திலே வீட்டினைப் போலக் கோடு கிழித்துக் கொண்டு விளையாடுகின்றன. அதனைக் கண்ட தச்சர் அக்குழந்தைகள் கற்பனை உணர்வுடன் விளையாடுதலைப் பார்த்து மகிழ்வரேயன்றிச் சினப்பரோ? அதனைப் போல என் கவியைப் பார்த்துப் பேரறிஞர் முனிய மாட்டார்கள் என்று கூறுகின்றார்.

அறையும் ஆடரங் கும்படப் பிள்ளைகள்
தரையிற் கீறிடத் தச்சரும் காய்வரோ?
பொறையிற் கேள்வியில் லாதவன் புன்கவி
முறையில் நூலுணர்ந் தோரும் முனிவரோ?

அப்பாடலில் குழந்தைகள் கற்பனை உள்ளம் படைத்து விளையாடி மகிழ்வதைப் போல யானும் கற்பனையின் அடியில் கவிபாடுகிறேன் என்பதைக் குறிப்பாக உணர்த்தி யுள்ளமையை நாம் உணர வேண்டும்.

பொய்தல் என்னும் சொல்

நற்றிணையில் உள்ள ஒரு பாடல். தலைமகன் வினைவயிற் பிரிவான் போலும் என்று கருதிய தலைவி அதனால் மனம் வேறுபட்டாள். அதனை உணர்ந்த தலைமகன் அவள் ஐயத்தைப் போக்குவதாக அப்பாட்டு அமைந்துள்ளது.

பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதும்பும்
போதும் பணையும் போலும் யாழநின்
மாதர் உண்கணும்வனப்பின் தோளும்
இவைகாண் தோறும் அகமலிந்து யானும்
அறநிலை பெற்றோர் அனையன்; அதன்தலைப்
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத் திலனே; நினையின்
யாதனிற் பிரிவாம் மடந்தை!
காதல் தானும் கடலினும் பெரிதே

மடந்தையே! நின் மேனியும் கூந்தலும் பொன் போலவும் நீலமணி போலவும் காட்சியளிக்கின்றன. நின் மையுண்ட கண்ணும் அழகிய தோளும் முறையே மலர் போலவும் மூங்கில் போலவும் விளங்குகின்றன. இவ்வேறுபுக்களைப் பார்க்குந் தோறும் பார்க்குந் தோறும் அறத்தின் பயனை நுகர்பவர் போல் யான் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். இவற்றிற்கெல்லாம் நம்முடைய பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் செய்து (கற்பனை செய்து) விளையாடத் தொடங்கி விட்டான். எனக்கு இப்பொழுது வேற்றுப் புலத்தில் வேலையும் இல்லை. யான் எதனாற்

பிரிவேன் என்று நீ ஐயப்படுகிறாய்? இவற்றிற்கெல்லாம் மேலாக என் காதல் தானும் கடலினும் பெரிதாக உள்ளது. (166) இப்பாட்டில் குழந்தை விளையாட்டிற்குப் 'பொய்தல்' என்று ஒரு பெயர் இருத்தலை உணர்க. பொய்தல் என்பதும் கற்பனை என்பதும் ஒன்றே.

கற்பனையில் வாழ்பவர்

ஒருபொருளை மற்றொரு பொருளாகக் கருதுவது கற்பனை. அது சங்கரர் பரப்பிய அத்துவித மதத்திற்கு அடிப்படையானது. குழந்தைகளும் ஒரு பொருளைத் தாங்கள் விரும்பிய மற்றொரு பொருளாகக் கற்பனை செய்து கொண்டு விளையாடி மகிழ்கின்றன. புலவனும் தன் கவிதை விளையாட்டில் ஒரு பொருளைத் தனக்கு வேண்டிய மற்றொரு பொருளாகக் கற்பனை செய்து விளையாடுகிறான்.

கற்பனை என்பது வடசொல்லா தமிழ்ச் சொல்லா?

ஒன்றை மற்றொன்றாகக் கருதும் திரிபுணர்ச்சியை உணர்த்தும் கற்பனா என்ற சொல்லை வடமொழியாகக் கருதல் வேண்டும். கற்பு, கற்பித்தல் என்று வரும் சொற் களெல்லாம் தமிழ்ச் சொற்களே. கற்பனை என்ற சொல்லிற்குப் புனைந்துரை என்பதைப் பொருளாகக் கூறுகின்றனர். இப் பொருளில் வரும் கற்பனைதான் புலவன் கருதிய கற்பனையாகும்.

பாரதியார் குயிற்பாட்டின் ஈற்றில்,

சோலைக் குயில் காதல் சொன்னகதை யத்தனையும்
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையுன் சூழ்ச்சியென்றே கண்டுகொண்டேன்

குயிற்பாட்டுக்கதை மாலை அழகின் மயக்கத்தால் மனத்தில் தோன்றிய கற்பனை என்று குறிக்கின்றார். எனவே, புலவன் மேற்கொள்ளும் கற்பனை என்பது, இயற்கை அழகிலும், உலகியல் நிகழ்விலும் ஈடுபட்ட புலவனின் பல்நெறிப் புனைந் துரையாகும். ஆனால் புனைந்துரை என்ற பொருளில் வரும் கற்பனை என்ற சொல் பழைய தமிழிலக்கியங்களில் வழங்கவில்லை. அங்ஙனமானால் பழந்தமிழ்ப் புலவர் கற்பனையை அறியாதவரோ எனின்? சங்கப் புலவர் தம்

கற்பனை மிகச் சிறந்த கற்பனையாகும். அவர்கள் கற்பனைக்கு வழங்கிய பெயர் நாடக வழக்கு அல்லது புனைந்துரை என்பனவையாகும். ஒரு புலவன் கற்பனை கலவாத உலகியல் வழக்காலும் கற்பனை செறிந்த நாடக வழக்காலும் செய்யுட்களைப் பாடலாம் என்பர் தொல்காப்பியர். நாடக வழக்கு என்றால் புலவரால் நாட்டிக் கொள்ளப்படும் வழக்காகும். இதனை நாற்கவிராச நம்பி என்பவர் புனைந்துரை வழக்கம் என்பர்.

கற்பனையும் நாடக வழக்கும்

கற்பனை என்ற சொல்லுக்கு முன்னே கட்டுரைத் தொடக்கத்தில் தெளிவாகப் பொருள் கூறப்பட்டுள்ளது. அதன்படி ஓர் உண்மைப் பொருளை மற்றொரு பொய்ப் பொருளாகக் கருதிக் கொள்வது கற்பனையாகும். நாடக வழக்கு என்பதற்குச் "சுவைபட வருவனவெல்லாம்" ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்" என்று இளம்பூரணரும் புனைந்துரைப்பது என்று நாற்கவிராச நம்பியும், இவ்வதி காரத்து நாடக வழக்கென்பன புணர்ச்சி உலகிற்குப் பொது வாயினும் மலை சார்ந்து நிகழுமென்றும், காலம் வரைந்தும், உயர்ந்தோர் காமத்திற்கு உரியன வரைந்தும், மெய்ப்பாடு தோன்றவும், பிறவாறும் கூறும் செய்யுள் செய்யும் வழக்காகும்" என்று நச்சினார்க்கினியரும் கூறுவதைக் கருதின் இவ்வளவு பொருளையும் கற்பனை என்ற சொல் அச்சொல்லின் அடிப்படைப் பொருட் காரணத்தினாற் பெற்று வருவதாகத் தெரியவில்லை. அது எங்ஙனமாயினும் தொல்லோர் நாடக வழக்கு, புனைந்துரை வழக்கு என்று கூறியவற்றைத்தான் இக்காலத்தார் கற்பனை என்று கூறுகின்றனர் என்று அமைத்துக் கொண்டு, நாடக வழக்கு, புனைந்துரை வழக்கு என்பனவற்றிற்குக் கொள்ளும் பொருளையும் கற்பனை என்ற சொல்லிற்குக் கூறிக்கொள்ளு வதே இப்பொழுது தக்கதாகும்.

கற்பனை பயன்படுவது

இவ்வுலகத்தை நாம ரூபக் கிரியை என்ற வடிவத்தில் கற்பனைக் கண்கொண்டு பார்ப்பது பந்தத்திற்கு ஏது

வென்றும், அக்கண் நீங்கிச் சத்துசித்து ஆனந்த மயமான பிரமமாகுப் பார்ப்பது உண்மை அறிவாகையால் இது வீடுபேறு பெறுவதற்கு ஏது என்றும் அத்துவித மதத்தவர் கூறுகின்றனர். அவர்தம் கருத்துப்படி கற்பனை உணர்வால் உலக பந்தம் ஏற்படுகிறது. சிறு குழந்தைகள் ஒரு பொருளைத் தங்கட்கு வேண்டிய மற்றொரு பொருளாகக் கற்பனை செய்து விளையாடுவதால் அவர்கட்கு அளவற்ற மகிழ்ச்சி பிறக்கிறது. பேரறிவு படைத்த புலவன் ஒருவன் இயற்கை அழகிலும் உலகியல் நிகழ்ச்சிகளிலும் உள்ளத்தை நிறுத்தி உணர்ந்து கவிதையைக் கற்பனை நலம் மிக்கு விளங்கப் பாடுவதால் அதனைப் படிக்கும் மக்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சி உண்டாகின்றது.

தொல்காப்பியர் கூறும் நாடக வழக்காகிய கற்பனை

எந்த நிகழ்ச்சியும் ஓர் இடம் பற்றிக் காலம் பற்றி அவற்றில் தோன்றிய பொருளில் நிகழ்ச்சிக்கு வேண்டும் பொருள்களைத் துணையாகப் பெற்று அது நிகழும் என்பது உலகியல் முறையாகும். ஆனால் மேற்கூறிய இடத்தையும் காலத்தையும் அவற்றில் தோன்றிய கருப் பொருள்களையும் ஐந்துதிணைக்குரியனவாகக் கற்பித்துக் கொண்டது கற்பனையாகும்.

ஒருதலைக் காமமாகிய கைக்கிளையும் பொருந்தாக் காமமாகிய பெருந்திணையும் உலகில் மிகுதியாக நடை பெறுகின்றது. ஒத்த காமமாகிய ஐந்திணை உலகில் மிகுதியாக நடைபெறுவதில்லை. தொல்காப்பியர் கைக்கிளை பெருந் திணைகளைச் சில நூற்பாக்களால் கூறிவிட்டு அன்பின் ஐந்திணையைத்தான் மிக விரித்துக் கூறுகிறார். அன்பின் ஐந்திணையைப் பாடுவதற்குப் பரிபாடலும் கலியும் சிறந்தன என்று அமைத்துக் கொள்கிறார். இவையெல்லாம் புலவனால் நாட்டிக் .கொள்ளப்பட்ட நாடக வழக்குத்தானே.

நாடக வழக்கு

பொருளியலில் இரண்டாவது நூற்பாவை எடுத்துக் கொள்வோம்.

நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்;
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரிய வாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி

(தொல் - பொருளியல் - 2)

நச்சினார்க்கினியர் 'நாடக வழக்கிலும்' (அகத்திணை 56) என்ற நூற்பாவுரையில், "மெய்ப்பாடு தோன்றப் பிறவாறும் கூறும் செய்யுள் வழக்கு" என்னும் நாடக வழக்கினை இந்நூற்பா கூறுகின்றது.

தொல்காப்பியர் உலகவழக்கில் வழங்கும் இலக்கணத்தில் பக்கச் சொல்லைக் கிளவியாக்கத்தில்

தகுதியும் வழக்கும் தழீஇன ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை சிலவே (17)

என்னும் நூற்பாவால் கூறுகின்றார். செய்யுள் வழக்கில் வழங்கும் இலக்கணத்தில் பக்கச் சொல்லைப் பொருளியலில் மேற்காட்டிய நூற்பா முதலானவற்றிற் கூறுகின்றார். இலக்கணத்தில் பக்கச் சொல் என்பது இலக்கண நெறியொடு கூடாது, பகுதிப்பட்ட, ஒருகூற்றுச் சொல்லாம். அவை பொருளியலில் வருவதை நோக்குவோம். மரபு பிறழாத காமப் பொருளைக் கருதிய இடத்தே இன்பநிலை துன்ப நிலை என்னும் இருவகை நிலையிலே எட்டு மெய்ப்பாடும் விளங்கும்படி இவ்விலக்கணத்திற் பக்கச் சொல் வரும்.

இச்சொல் நெஞ்சொடு புணர்த்தும், சொல்லா மரபின வற்றொடு பொருந்தியும், அவரவர் உறுபிணி தம்போற் சேர்த்தியும், உவம வாயிற்படுத்தும் வரும்.

நெஞ்சொடு புணர்த்தல்

உடம்பு, சொல், உள்ளம் என்னும் மூன்று கருவிகளில் உள்ளம் என்னும் நெஞ்சு நமக்கு ஒரு கருவியாகும். அந்நெஞ் சத்திற்கு உறுப்பு இருப்பது போலவும், தனியாக உணர்வு இருப்பது போலவும் நாம் சொல்வதை மறுத்து உரைப்பது போலவும் இலக்கியங்களில் கூறப்படுவதுண்டு. இது நெஞ் சோடு புணர்த்துக் கூறும் இலக்கணத்தில் பக்கச் சொல்லாகும்.

கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரைத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறநசைஇச் சென்றவென் நெஞ்சே

(அகநானூறு - 9)

இப்பாட்டில் நெஞ்சிற்குக் கைமுதலான உறுப்புக்கள் இருத்தல் போல வைத்து தலைவனின் வரவைக் கருதி மாலையம் பொழுதில் மனையகத்து நின்றிருந்த தலைவியின் பின் அவளறியாமல் கைகவித்துக் கொண்டு சென்று அவளுடைய கண்ணைப் புதைத்துக் கொண்டு குறுகி சடைப்பின்னலுடன் கூடிய தலைவியின் முதுகைத் தீண்டி, அவள் தொடியணிந்த கையைத் தடவிப் பார்த்து உணரு மாறு அவளுடன் கூடிற்றோ என வினைமுடித்துத் திரும்பிவரும் தலைவன் பாகனொடு கூறுவது போல் உவப்பு என்னும் மெய்ப்பாடு தோன்றிப்பாட்டு புனைந்து கூறுகிறது. இதனை இக்காலத்தார் கற்பனை என்று பெயர் வைத்தழைக்கின்றனர்.

குறுநிலக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்களி பெறூஉங் கவின்பெறு காலை
அல்வளை நெகிழ்த்தோர்க்கு அல்லல் உறீஇச்

சென்றளன் நெஞ்சம் செய்வினைக்கு உசாவாய்
ஒருங்குவரல் நசையொடு வருந்துங் கொல்லோ?
அருளா னாதலின் அழிந்திவண் வந்து
தொன்னலன் இழந்தளன் பொன்னலம் நோக்கி
ஏதிலாட்டி இவளெனப்
போயிற்று கொல்லோ நோய்தலை மணந்தே

(நற்றிணை - 56)

இப்பாட்டு, வரைவிடை வைத்துப் பொருள்தேடப் பிரிந்த தலைமகனைக் கருதித் தலைவி மெலிய, மெலி வாற்றுவிக்குந் தோழிக்கு அவள் கூறியது.

குறிதாக வளர்ந்து நிற்கும் குராமரத்தின் சிறிய அரும்புடன் கூடிய நறுமணமுள்ள மலரில் வண்டு சென்று தின்றபடி வெளிப்படுத்தும் மணத்தோடு காற்று கலந்து தருதலால், இக்காட்சியைக் கண்டவர்தம் கண் களிப்பினைப் பெறும் அழகிய இக்காலத்திலே, ஒளிபெற்று வளையை நெகிழ்த்தோர்க்கு அல்லல் உற்று அவரிடம் சென்ற என் நெஞ்சம், அவர் செய்யும் வினைக்கு உசாத்துணையாய் அவரிடம் தங்கியிருந்து, அவரோடு ஒருங்கு வருதலை விரும்பி என் துன்பத்தையும் கருதி வருந்தியிருக்குமோ? அல்லது, சென்ற என் நெஞ்சை அத்தலைவர் அக் குறையைக் கேட்டு அருளாமையால் உள்ளம் அழிந்து என்னை நாடி இவண் வந்து பழைய நலத்தை இழந்து பீர்க்கம் பூப்போன்ற நிறத்தைப் பெற்று மாறுபாடடைந்த என்னை நோக்கி அடையாளம் தெரியாமையால் இவள் வேறொருத்தி போலும் என்று கருதிக் கொண்டு, என்னைத் தேடிக்கொண்டு தாங்கருந் துன்பத்துடன் வேறிடம் சென்றுவிட்டது போலும்" என்று கூறுகிறாள். இங்கே நெஞ்சத்திற்கு நசை, வருத்தம், நோயொடு கூடல் முதலான உணர்விருத்தலாகக் கூறப்பட்டுள்ளன. இப்பாட்டில் இளிவரல் என்னும் மெய்ப்பாடு அமைந்துள்ளன. புலவன்றன் நாடக வழக்காகிய புனைந்துரை மிகச் சிறப்பாக இப்பாடலில் பொருந்தியுள்ளது.

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீயெமக் காகா தது

என்னும் குறளில் தலைவியின் நெஞ்சம் தலைவியின் ஏவலைக் கேட்காமல் மறுத்துரைப்பது போல் கூறப்பட்டுள்ளது.

சொல்லா மரபினவற்றைச் செய்யாத தொழிலைச் செய்வனவாகக் கூறுதல்

சொல்லா மரபின என்பவை,

ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்பது பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்

செய்யுளில் சொல் சொல்லா முறைமையுடையனவாகிய ஞாயிறு திங்கள் முதலானவற்றுடன் அவை சொல்லுவன போலவும் செய்யாத தொழிலை அவற்றின் மேல் ஏற்றி அவை செய்தனவாகவும் கூறப்படுவதுண்டு.

கானலும் கழறாது கழியும் கூறாது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிதியாதும் இலனே
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்
கமழஇதழ் நாற்றம் அமிழ்தென நசைஇ
தண்டா தூதிய வண்டினம் களிசிறந்து
பரிசிய தளரும் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ!

தலைவி சொல்லா மரபினையுடைய நண்டொன்றினைப் பார்த்து, காமம் மிக்க கழிபடர் கிளவியால், தலைவனிடம் தூதாகச் சென்று யான்படும் துன்பத்தை எல்லாம் கூறிவருதல் வேண்டும் என்று கூறுகின்றாள்.

அலவனே! யான் உற்ற வருத்தத்தினை தலைவனிடத்து சென்று இக்கானலும் எடுத்துச் சொல்லாது. இக்கடற்கழியும் கூறாது. இந்த நறுமலர்ப் புன்னையும் மொழியாது. தூதுரைப்பதற்கு ஒன்றாகிய நின்னை யல்லது வேறு

யாரையும் யான் பெற்றேனில்லை. ஆகையால் நீயே சென்று என் துன்பத்தைத் தலைவனுக்கு எடுத்துச் சொல் என்று கூறுகின்றாள். இப்புனைந்துரை வரிகளால் தலைவியின் உள்ளம் தெளிவற்றிருப்பதனை உணர்கிறோம்.

அவரவர் உறுபிணி தமபோற் கூறுதல்

பாய்திரை பாடோவாப் பரப்பநீர்ப் பனிக்கடல்
தூவறத் துறந்தனன் துரிறவருனன் றவன்நாம
நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ எம்போல
காதல்செய் தகன்றாரை உடையையோ நீ

இப்பாட்டு கடல் உற்ற பிணியைத் தம் பிணிக்கு வருந்தின வாகச் சேர்த்தி உயர்திணையாக்கி உவம வாயிற்படுத்தது.

அறிவும் புலனும் வேறுபட நிறுத்தி உவம வாயிற்படுத்திக் கூறல்

ஓங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லும்
காந்தட் சிவரும் கருவிளம் பூக்கொண்டும்
மாந்தளிர்க் கையில் தடவரும் மாமயில்
பூம்பொழில் நோக்கிப் புகுவன பின்செல்லுத்
தோளெனச் சென்று துளங்கொளிவேய் தொடும்
நீங்கதுப் பிஃதெவு நீரறல் உட்புகும்
வாளொளி முல்லை முகையை முறுவலென்று
ஆள்வலி மிக்கான் அஃதறி கல்லான்

தலை, இடையும் கையும் கண்ணும் மேனியும் சாயலும் தோளும் கதுப்பும் முறுவலும் ஆகிய தலைவி உறுப்புக் களைப் பற்றிய உவம வாயிற்படுத்தறியும் அறிவையும், அறியப்படும் (புலன்) பொருளையும் வேறுபட நிறுத்தி உவமம் பொருந்திய வழிக் கூறியவாறு உணர்க. வேயைத் தோள் போலும் என்று உவம வாய்பாடாகக் கருதாது உருவகம்படத் தோளென்றே தொட்டமையால் அறியப்படும் பொருள் வேறுபட்டது. அதனைத் தியக் காண்டலால் அறிவு வேறுபட்டது.

பித்தும் களியும் போல, முலையெனச் சென்று வேயைத் தொடும் என்னாது, தோளெனச் சென்று

வேயைத் தொடும் என்றமையால் உவமம் ஒன்றியவழி அறிவும் புலனும் வேறுபட உவமவாயிற் படுத்தலாம்.

இப்பாட்டு உவமையின் அடிப்படையில் எழுந்த நாடக வழக்கு. எனவே காமங் கருதிய மரபில், நோய், இன்பம் என்னும் இருவகை நிலையில் மெய்ப்பாடு தோன்றுமாறு, உறுப்புடையது போல் உணர்வுடையது போல் மறுத் துரைப்பது போல், இம்மூன்றும் இல்லாத நெஞ்சோடு புணர்த்ததும் சொல்லும் செய்கையும் இல்லாத புள், கழி, கானல் முதலானவற்றொடு மேற்கூறியவாறு கூறுவதும், ஏனையவை உற்றபிணி தமபோற் சேர்த்தியும், அறிவும் புலனும் வேறுபட உவம வாயிற் படுத்தலும் ஆகிய இந்நான்கும் இலக்கண நெறியுடன் கூடியன அல்ல. இவை நாடக வழக்கத்தைச் சார்ந்த (புனைந்துரை) இலக்கணத்தில் பக்கச் சொல்லாம்.

இவ்வாறு கூறுவது தலைவன் தலைவிக்கும் சில சமயத்தில் தோழிக்கும் நற்றாய்க்கும் செவிலிக்கும் உரித்தாய் வரும் என்ற செய்தி மேற்காட்டிய 'நோயும்' இன்பமும்' என்ற நூற்பாவாலும் அடுத்த சில நூற்பாவாலும் நமக்குப் புலனாகின்றது.

இளம்பூரணர் பாற்கிளவி என்பது, யாண்டும் பயிலாது வரும் ஒரு கூற்றுச் சொல் என்னப்பட்டது. அதனைக் கெழுமிய சொல் 'பால்கெழுகிளவி' (பொருளியல் - 5) யாயிற்று. ஆண்டு நற்றாய் கூறியதற்குச் செய்யுள்,

கருமணல் கிடந்த பாவை என்
அருமகளே என் முயங்கினள் அழுமே

(அகநானூறு - 165)

செவிலி கூறியதற்குச் செய்யுள்,

தான்தாயாக, ... வந்து.

(திணைமாலை 150)

எனவரும். தோழி கூறியதற்குச் செய்யுள் வந்த வழிக்காண்க என்பர். இவை போன்ற பகுதிகளைத் தான் பிற்காலத்தார் கற்பனை என்று கூறிவருகின்றனர்.

இன்னும் சில நாடக வழக்கு

தலைமகன் வினைகருதிப் பிரிவான். அப்பொழுது தலைவி நிறம் மாறுபட்டுப் புலம்புவாள். அத்தகைய நிலையில் தலைமகள் வாயில் சில சொற்கள் வரும். அது எத்தகைய சொல் என்றால் தனிமை வருத்தத்தைத் தன் அக உறுப்பும் புறவுறுப்பும் உணர்ந்துள்ளன போல் பொருந்தக் கூறுவாள். எடுத்துக்காட்டாக.

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்

தலைவனைப் புணர்ந்த காலத்தே பூரிப்பால் மிகப்பருத்த தோள் அவன் பிரிந்த காலத்தே வாட்டத்தால் மிகவும் வாடி அவன் பிரிந்து வெகுகாலம் ஆயிற்று என்பதை அறிவிப்பன போலும் என்ற குறட்பாவில் அறியலாம். இது அகவுறுப்பு.

தண்ணந் துறைவன் தணந்தமை நம்மிலும்
முன்னம் உணர்ந்த வளை

இது புறவுறுப்பு.

இது ஒரு நாடக வழக்கு

உண்ணுதற் றொழிலுக்கு உரியவல்லாத பொருளை உண்ணுதல் தொழில் செய்வனவாகக் கூறுவதும் உண்டு.

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே! இவை என்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று

மனமே நீ தலைவனிடம் செல்வையாயின் உனக்கு வாயிலாகிய கண்ணையும் உடன் அழைத்துக் கொண்டு செல்; ஏன் என்றால்? இக்கண்கள் தலைவனைப் பார்க்க வேண்டும்; பார்க்க வேண்டும் என்று என்னை பிடுங்கித் தின்கின்றன" என்று கூறுவது ஒருவிதமான நாடக வழக்காம்' இவ்வழக்கு உலக வழக்கிலும் பயின்று வருகின்றது.

புனைந்துரை

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் பெரியதனைச் சுருக்கிச் சொல்லுதலும் சிறியதனைப் பெருக்கிச் சொல்லுதலுமென புனைந்துரை இருவகைப்படும் என்பர். அவர்காட்டும் நூற்பா.

உரைக்கப் படும்பொருட் கொத்தன எல்லாம்
புகழ்ச்சியின் மிக்க புனைந்துரையாகும்

என்பதாம்.

அயிர்ப்பாகு நோக்குவேன் கண்டேன் மயிர்ப்பாகில்
பாகத்திற் பாகம் நுசுப்பு

இது பெரியதனைச் சுருக்கிற்று.

பொன்மலி கூடல் பூமலி கச்சி
மாரி ஈகை மணியணி மாடம்

இது சிறியவற்றைப் பெருக்கின.

கற்பனை

ஒன்றை மற்றொன்றாக வழங்குவது கற்பனை என்றால், உருவகமும் தற்குறிப்பேற்றம் முதலிய சிலவே கற்பனையாக வேண்டும். அங்ஙனமின்றிச் சுவைபடச் சொல்வனவெல்லாம் கற்பனை எனில், "நாடக வழக்காவது சுவைபட வருவன வெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுவதே" என்று இளம்பூரணர் கூறும் கூற்றின்படிக் கற்பனை என்பது நாடக வழக்காதல் வேண்டும்.

21

பாடுபொருள்

ஒரு பாட்டிற்குப் புற அமைப்பென்றும் அக அமைப்பென்றும் இருவகை அமைப்பு உண்டு. சொற்களை விழுமிதாக எடுத்துக் கையாளும் முறை, தொடை யமைப்பு முறை, அசையாலும் சீராலும் ஓசைபெற அமைக்கும் முறை, எழுத்து முதலானவற்றால் பலவகை வண்ணம் படைக்கும் முறை, எடுத்துக்கொண்ட பொருளை ஆற்றுநீர்ப் பொருள் கோள் முதலான பொருள்கோள் வகையில் அமைத்துச் சொல்லும் முறை உவமை முதலான அணி தோன்றச் செய்யும் முறை என்னும் இவை போன்றன வெல்லாம் ஒரு பாட்டின் புற அமைப்பாகும். பின்னர் அப்பாட்டில் மக்கள் வாழ்வில் நிகழ்வதற்குரிய பொருளைப் பாடுபொருளாக வைத்து, பொருள் நிகழ்ச்சிக்குத் தகுதியான மெய்ப்பாடு கற்பவர்க்குத் தோன்றுமாறு பாடுவது ஒரு பாட்டின் அக அமைப்பாகும்.

ஒரு பாட்டிற்கு இவ்வாறு இரண்டுவகை அமைப்பு உண்டு என்பதை,

பெறுவது கொள்வர் தோள்போல் நெறிப்பட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளியநூல் - மற்றும்
முறிபுரை மேனியர் உள்ளம்போன் றியார்க்கும்
அறிதற் கரிய பொருள் (நாலடியார் 37)

என்னும் பாட்டு கூறுகின்றது. "பொருள் கொடுப்பவரை ஏற்றுக்கொள்ளும் பரத்தையர்தம் அழகமைந்த தோள் போல, புறநெறி அமைப்பெல்லாம் அழகியதாக அமைந்து, கற்பவர்தம் உள்ளத்தை எல்லாம் எளிதாகக் கவருகின்ற நூலானது, அப்பரத்தையர்தம் அரிதற்கரிய உள்ளம்போல, உணர்தற்கரிய உட்பொருளை உடையதாக இருக்கும்" என்று நூலின் இருவகை அமைப்பு கூறப்படுகிறது.

உளவியற் கூறாகிய மெய்ப்பாடு கற்பவர்க்குத் தோன்றுமாறு பாடுபொருள் அமைப்பு இருக்க வேண்டும். கற்பவர்க்கு மெய்ப்பாட்டினைப் பாட்டு வழங்காதாயின்,

பாடுபொருள் அமைப்பு அப்பாட்டில் நன்கமையவில்லை என்பனவாகவே காட்டும். உயர்திரு மு. வரதராசனார் எழுதிய ஓவச்செய்தி என்ற நூலில் "ஓசைச் சிறப்பு சொற்சிறப்பு முதலியவை இலக்கியத்தின் வாழ்வுக்கு உடையும் அணியும் போன்றவை. பொருட்சிறப்பே உயிர் போன்றது. ஆதலின் இலக்கியம் ஆராய்வோர் ஒருபாட்டின் ஓசையின்பத்திலும் சொல்லின்பத்திலும் மயங்கி நிற்காமல், அதன் கருத்தின் பத்தில் திளைக்க முயலுவதே சிறந்த கடமையாகும்.

"பாட்டின் அகத்தே வேறு என்ன உணர்வது என்று அறியாதபோது, அதன் புற அமைப்பில் கருத்தைச் செலுத்து கிறோம் என்று ரிச்சர்ட்ஸ் என்னும் அறிஞர் உணர்த்தும் உண்மையும் இங்கு கருதத்தக்கது" என்பர் (ஓவச்செய்தி, ப-ள். 32-33).

உயர்திரு வரதராசனார் அவர்கள் பாட்டின் இருவகை அமைப்பைக் கூறி விட்டுப் பொருளிலக்கணம் என்ற தலைப்பில் எழுதுவதையும் காண்போம். பண்டைத் தமிழ்ச் சான்றோர் இந்த உண்மையைத் தெளிந்த பெருமக்களாவர். அதனால், எழுத்திலக்கணத்தையும், சொல்லிலக்கணத்தையும் விட, விரிவுடைய பொருளிலக்கணம் கண்டு போற்றினார். தாம் இயற்றிய இலக்கியத்திலும் அகப்பொருள் புறப்பொருள் பற்றி கருத்துக்களை அமைப்பதில் வரம்பு கடவாமல் நின்றனர். கட்டுப்பாடு குறைந்ததும் ஓசையின்பம் குறைந்ததும் ஆகிய ஆசிரியப்பாவைப் பலரும் கருவியாகக் கொண்டு பாட்டெழுதியவர். திணை துறை முதலாய வரையறைகளைப் போற்றுவதைக் கடமையாகக் கொண்டனர். உவமையை ஆராயின் திணை துறை முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முதலியன இலக்கண நூல்களோ இலக்கிய நூல்களோ விதிக்கும் கட்டுப்பாடுகள் அல்ல; வாழ்க்கை உணர்த்தும் வரையறைகளே அவை" என்பர் (ஓவச்செய்தி ப. 33).

இனிப் பாட்டினைப் பிற நாட்டினர் எவ்வாறு கருது கின்றனர் என்பதை ஆராய்வோம்.

"பாட்டு என்பது இயற்கைப் பொருள்களின்படியாக இருக்க வேண்டும்" என்பர் பிளாட்டோ.

"பாட்டு என்பது இயற்கையின் படி அன்று; இயற்கைப் பொருளை ஊடுருவி உணர்ந்து கொடுப்பதேயாம்" என்பர் அரிஸ்டாடில்.

ஆனால் தமிழ்ப்புலவர் பழங்காலத்தில் இயற்கைப் பொருளை நேராகப் பாடுவதில்லை. அவர்கட்கு உலக மக்கட்குழுவில் வாழ்வியற் கூறுகள்தாம் பாடுதற்கேற்ற உரிப்பொருளாகும். இயற்கைப் பொருள்களை அவ்வுரிப் பொருட்குத் துணையாக வைத்துக் கொண்டு பாடுவர். இவ்வுண்மையை ஆராய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியம் பொருளதிகாரத் தொடக்கத்தே, பொருளாவன: "அறம் பொருள் இன்பமும், அவற்றது நிலையின்மையும், அவற்றினீங்கிய வீடுபேறாம் பொருளெனப் பொதுப்படக் கூறவே, அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும், காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும் அவற்றின் பகுதியாகிய இயங்கு திணையும் நிலைத்திணையும் பொருளாம்" என்பர் நச்சினார்க்கினியர்.

ஆனால் இளம்பூரணர் பொருளதிகாரத் தொடக்கத்தே "பொருள் என்பது யாதோவெனின்? மேற்சொல்லப்பட்ட சொல்லில் உணரப்படுவது. அது முதல் கரு உரிப்பொருள் என மூவகைப்படும். ... ... அஃதற்றாக அறம் பொருள் இன்பம் வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற பொருள்யாதனுள் அடங்கும் எனின், அவையும் உரிப்பொருளில் அடங்கும்" என்பர்.

மேற்கண்ட உரையாசிரியர் இருவருள் நச்சினார்க்கினியருக்குப் பொருள் என்ற உடனே அறம், பொருள், இன்பம் வீடுபேறு என்னும் இவையே முதலில் நினைவிற்கு வருகிறது. இளம்பூரணர்க்குப் பொருள் என்றவுடனே, முதல் கரு உரி என்பனதாம் நினைவில் வருகின்றன. உளவியல் முறைப்படி இருவர்தம் உள்ளப்பாங்கை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியவராக இருக்கின்றோம்.

சிவஞான முனிவருக்கு இளம்பூரணரைப் பிடிப்பதில்லை. அதனால், அவர் தாம் எழுதிய தொல்முதற்சூத்திர விருத்தியில் தமிழ்நூல் ஒன்றேவல்ல உரையாசிரியர் என்று இளம்பூரணரைக் குறிக்கின்றார். இவர் கூற்றிலிருந்து இளம்பூரணர் தமிழ் நூலில், தமிழிலக்கியங்களில், தமிழ் மரபறிவதில் வல்லவர் என்பது நமக்குப் புலனாகின்றது.

தொல்காப்பியர் தம் நூலுள் பொருட்படலத்தே

முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை

(அகத்திணையியல் - 2)

என்று ஒரு நூற்பா கூறியுள்ளார். இந்நூற்பாவை நன்கு கருதினால், தமிழ்நாட்டில் இலக்கியத் திறனாய்வு என்ற பெயரால் பழைய காலத்தில் நூல்கள் ஒன்றும் எழாமலிருந் தாலும், இலக்கியத்தில் வந்துள்ள பொருள்களைப் பாகுபாடு செய்யும் முறை தமிழ் நாட்டில் முன்பே இருந்து வந்தது என்னும் உண்மை நமக்குப் புலனாகின்றது. இவ்விலக்கண நூற்பா திறனாய்வு வகையுள் பகுப்பு முறைத் திறனாய்வு முறை பற்றிப் பாடலுள் வந்துள்ள பொருள்களைப் பகுக்கின்றது. தொல்காப்பியரோ அவர்கள் முன்பிருந்த இலக்கண ஆசிரியரோ தமிழிலக்கியப் பாடல்களையெல்லாம் நன்கு நாடினார்கள். நாடியபொழுது பாடலுள் பயின்று வந்துள்ள பொருளெல்லாம் முதல், கரு, உரி என்ற மூன்று பகுப்பில் அடங்கும் என்பதையும் அம்மூன்றுள் முதலில், கருவும் உரியும் சிறந்தன என்பதையும் கண்டனர். தொல்காப்பியர் நாடுங்காலை என்று ஈண்டு கூறுவதையும் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" என்று பாயிரத்தில் வருவதையும் தொல்காப்பியத்துள் பிறப்பியலில் "நெறிப்பட நாடி" (1) என்றும், 'அகத்தெழு வளியிசை அரில்தப நாடி" (20) என்றும், "வழக்கியல் மருங்கின் உணர்ந்தவர் ஒழுக்கல் நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்" (77) (குற்றியலுகரப் புணரியல்) என்றும், உரியியலில் " முன்னும் பின்னும் வருபவை நாடி" (93) என்றும், அகத்திணையியலில் " என்றிவை எல்லாம்

இயல்புற நாடிய" என்றும், " உணர்திற நாட்டம் கிழவோன் மேன" (46) என்றும், மெய்ப்பாட்டியலில் " தவத்தக நாடில்" (22) என்றும் செய்யுளியலில் 'ஒப்பநாடி உணர்தல் வேண்டும்" (142) என்றும், " செய்யுள் மருங்கில் மெய்பெற நாடி, இழைத்த இலக்கணம்" (236) என்றும் மரபியலில் " புணர்ந்தவை நாடிப் புணர்க்கவும் பெறுமே" (101) என்றும் " சொல்லிய வகையால் சுருங்க நாடி" (112) என்றும் கூறுவனவற்றை யெல்லாம் கருதுக. இவர் ஆராய்தல் என்று பொருளில் தேடுங்காலை, நினையுங்காலை என்பது போன்ற சொற்களை எடுத்தாண்டுள்ளாராயினும் இந்நாடல்போல் ஏனைய சொற்களை மிகுதியாக எடுத்தாள வில்லை. நாடல் என்றால் பலவிடங்களில் வந்துள்ள பொருளையெல்லாம் தேடித் தொகுத்தலாகும் " நாடலும் தேடலும் தேட லாகும்" என்பது பிங்கல நிகண்டு. தொல்காப்பியரும் பிறரும் பாட்டிலுள்ள பொருளையெல்லாம் தேடி அவற்றை மும்பொருளாகத் தொகுத்தார்.

மும்பொருளில் முதற்பொருள்

முதல் கரு உரி என்ற மும்பொருளில் முதற் பொருளை நிலமும் காலமும் என்ற இரண்டாகப் பகுத்துக் கூறுகின்றனர். இந்த நிலமும் காலமுமாகிய இரண்டினைத் தொல்காப்பியர் அகத்திணையியலின்றி முன்னர் வேற்றுமை மயங்கியலிலும் பின்னர் செய்யுளியலிலும் குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர் சொல்லுக்குக் காரணமானவற்றையெல்லாம் வேற்றுமை மயங்கியலில் தொகுத்து,

> வினையே செய்வது செயப்படு பொருளே
> நிலனே காலம் கருவி என்றா
> இன்னதற்கு இதுபயன் ஆக என்னும்
> அன்ன மரபின் இரண்டொடும் தொகை,
> ஆயெட் டென்ப தொழின்முத னிலையே (29)

என எட்டாகக் கூறியுள்ளார். அவ்வெட்டுள் இரண்டாக நிலமும் காலமும் ஓதப்பட்டுள்ளன. பின்னர் செய்யுளியலில் செய்யுட்கு உறுப்புக்களைக் கூறும் முதல் நூற்பாவிலும்

'கலனே காலவகையெனா' என்று உறுப்பாக ஓதி, அக்களன் இன்னதென்பதைச் சிறப்புச் சூத்திரங்களால்,

ஒரு நெறிப் பட்டாங் கோரியல் முடியும்
கரும நிகழ்ச்சி இடமென மொழிப (193)

என்றும்,

இறப்பே நிகழ்வே எதிர தென்னும்
திறத்தியல் மருங்கின் தெரித்தனர் உணரப்
பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்

என்றும் கூறியுள்ளார்.

மேற்காட்டியவற்றால் இடமும், காலமும் என்பன, உலகில் நிகழும் எல்லாத் தொழிலுக்கும் தொழில் முதனிலை என்ற காரணப்பொருளாக இருக்கும் என்பதும், அவற்றுள் இடம் என்பது புலவன் பாடும் கருமம் நிகழ்வதற்கு இடமா யிருக்கும் என்பதும், அவற்றுள் காலம் என்பதும் புலவன் பாடும் கரும நிகழ்ச்சி என்றும் பொருள் நிகழ்ச்சி இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்றும் முக்காலத்தில் எந்தக் காலத்தில் நிகழ்ந்தது என்பதைக் காட்டுவதாயிருக்கும் என்பதும் போந்தன.

அத்தகைய நிலமும் காலமுமே பாடலும் பயின்ற முப்பொருளில் முதல் என்று பெயர் கூறப்பட்ட பொருளாய், அகத்திணை புறத்திணை நிகழ்ச்சிக்கு இடமாயிருக்கின்றன.

நிலநூல் வல்லவர் நிலத்தை அதன் தன்மை கருதிப் பல கூறாகப் பகுப்பர். இலக்கியம் படைக்க வந்த புலவரும் தமிழகத்தில் காடு செறிந்த பகுதியைப் பிரித்து அதற்கு முல்லை என்றும், மலையுள்ள பகுதியைப் பிரித்து குறிஞ்சி என்றும், இனிய புனல் பாய்ந்து வளஞ்செய்யும் பகுதியைப் பிரித்து மருதமென்றும், கடற்கரை ஓரத்தில் அலை கொழித்து மணல் திரண்ட பகுதியைப் பிரித்து நெய்தலென்றும் அழகான பெயர் வைத்து வழங்கலாயினர்.

தொல்காப்பியர் காலம் பொழுது என்னும் பொதுச் சொற்களையும் யாண்டு, திங்கள், நாள் இமை, நொடி, மாத்திரை என்னும் சிறப்புச் சொற்களையும் எடுத்தாண்

நல்லனார். இச்சொற்களுள் காலம் என்ற சொல்லையே இவர் மிகுதியாகத் தம் நூலில் ஆள்கின்றார். மேலும் அவர் தொலியாக்கத்தே காலம் உலகம் என்ற நூற்பாவில் காலம் என்பது உயர்திணைச் சொல்லாயினும் அது வழக்கில் அஃறிணைப் பொருளைக் கூறுவது போன்று வரும் என்று கூறுகின்றார். காலம் என்பதை உயர்திணைப் பொருளாகக் கருதிய கருத்தினால்தான் அதனைத் தெய்வ உயர்திணை யாகக் கருதி, திவாகரம் முதலிய நிகண்டாசிரியரெல்லாம் காலம் பற்றிய எல்லாப் பெயர்களையும் தெய்வப் பெயர்த் தொகுதியில் வைத்துக் கூறியுள்ளனர்.

தொல்காப்பியர் சிறப்புக் காலத்துள் யாண்டினை எடுத்துக்கொண்டு ஆறாகப் பிரித்து பாலை குறிஞ்சி என்னும் முத்திணைக்கு உரிமை செய்கின்றார். ஓர் நாளை எடுத்துக்கொண்டு அதனையும் ஆறாகப் பிரித்து ஐந்து திணைக்கும் உரிமை செய்கின்றார்.

உரிமை செய்யும் வகை

தொல்காப்பியர் கருத்துப்படி முல்லைக்குச் சிறந்தன கார் காலமும், மாலையும் ஆகும். குறிஞ்சிக்குச் சிறந்தன பெரும்பொழுதுள் கூதிரும், முன்பனியும், சிறுபொழுதும் நடுயாமமும் ஆகும். பாலைக்குச் சிறந்தன பெரும்பொழுதுள் பின்பனியும், இளவேனிலும், முதுவேனிலும், சிறுபொழுதுள் நண்பகலும் ஆகும்.

மருதம் நெய்தலுக்குப் பெரும்பொழுதும் வரையறை யில்லை. மருதத்திற்குச் சிறுபொழுது வைகறையும் விடியலும், நெய்தலுக்குச் சிறுபொழுது எற்படு காலை எல்லாத் திணைக்கு எல்லாக் காலமும் உரியதேனும் சிறப்புப் பற்றி இன்ன திணைக்கு இன்ன பொழுது உரியது என உரிமை செய்துள்ளார் தொல்காப்பியர். பாலைக்கு மட்டும் பெரும் பொழுதில் மூன்று உரித்தாக இருத்தலைக் கருதினால் பாலைத்திணையின் பெருமை நமக்குப் புலப்படும். பழைய காலத்திலே மக்கள் தங்கள் மனைவியைப் பிரித்து வேறிடத் திற்குத் தொழில் செய்யச் செல்வர். அக்காலம் மாசி பங்குனியாகிய பின்பனிக் காலமும், சித்திரை வைகாசியாகிய இளவேனிற் காலமும், ஆனி ஆடியாகிய முதுவேனிற்

காலமும் ஆம். இந்த ஆறு திங்களில் வினை முடித்துக் கொண்டு கார்காலத் தொடக்கத்தில் தங்கள் மனைவியை உடைய மனையகம் வந்து சேர்வர். வந்தவர் கார்காலத்திற் குரிய ஆவணி புரட்டாசியும், குறிஞ்சிக் குரிய கூதிர் காலத் திங்களாகிய ஐப்பசி கார்த்திகையும், முன்பனித் திங்களாகிய மார்கழியும் தையும் மனையகத்திருந்துப் பின்னர் பின்பனிக் காலம் வர முன்போற் பிரிவர். இவ்வாறு மனையில் உறை தற்கு ஆறு திங்களும், வெளிநாட்டிற் சென்று தொழில் புரிதற்கு ஆறு திங்களுமாக பழங்காலத் தமிழர்க்கு ஓர் யாண்டு பயன்பட்டது.

கருப்பொருள்

ஓர் இடத்தில் காலம் பற்றித் தோன்றும் பொருளைக் கருப்பொருள் எனலாம். ஆனால் இளம்பூரணர் இடத்திலும் காலத்திலும் தோன்றும் பொருள் கருப்பொருள் என்பர். ஒரு நாட்டில் அல்லது இடத்தில் காலம் பற்றி என்னென்ன பொருள்கள் தோன்றுகின்றன என்று அறிந்து, அவற்றை வகைப்படுத்திக் குறிக்கும் அறிவைப் பழைய காலத்திலேயே தமிழர் பெற்றிருந்தனர்.

ஓர் நாட்டிலே நிகழும் தெய்வ வழிபாடு, அந்நாட்டவர் தம் உணவுப் பொருள், அந்நாட்டின் விலங்கு பறவை, தாவரம், மலர் முதலியனவும் அந்நாட்டவர் பயன்படுத்தும்[1] பறை, யாழ் முதலியனவும் அந்நாட்டவர் செய்யும் தொழில் வேறுபாடுகளும் ஆகிய இவையெல்லாம் கருப்பொருள் என்ற தலைப்பில் அடங்குகின்றன.

உரிப்பொருள்

மூன்றாம் நிலையில் நிற்பது உரிப்பொருளாகும். இதனை இளம்பூரணர் மக்கட்கு உரிய பொருள் என்பர். சொல்லிலக்கண நூலாவது மக்கட் சுட்டை உயர்திணை என்று கூறுகின்றது. அந்த உயர்திணையாகிய மக்கட் சுட்டிற்கு

---

1. யாழ், பறை என்றும் இவற்றைக் குறிப்பதைக் கருதினால், தமிழர்தம் இசை நாடக விருப்பம் புலனாம்.

உரிய பொருள் எதுவோ அது உரிப்பொருளாகச் சொல்லப் படுகின்றது. தமிழ்ப்புலவர் இந்த உரிப்பொருளையே பாடு பொருளாகக் கொண்டுள்ளனர். தமிழ்ப்புலவர் உரிப் பொருளை முதன்மையான பாடுபொருளாகக் கொண் டுள்ளனர். தமிழ்ப்புலவன் உரிப்பொருளை முதன்மையான பாடுபொருளாக எடுத்துக்கொண்டு அதனை அதற்குப் பொருத்தமான இடங்காலங்களில் வைத்து, வேண்டும் கருப் பொருள்களை உரிப்பொருளுக்கு அடையாக நிறுத்தி, மரபமைந்த சொல்லால் அசையும் சீரும் அமைத்துக்கொண்டு, தொடையழகு பொருத்த, வண்ண ஓசை உண்டாக, உவமை முதலாக அணிகளுடன் மெய்ப்பாடு தோன்றப் பாடுவான்.

உரிப்பொருள் என்றால் என்ன?

மக்களுக்குரிய பொருள் உரிப்பொருள் என்றோம். அது எது என்பதைக் கூறி அப்பொருள் மக்கட்கு உரிமை பூண்டுள்ளது எவ்வாறு என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அவ்வுரிப் பொருள் அகம் புறம் என இருவகைப்படும். அவற்றுள் அகமாவது புணர்தல், புரிதல்,. இருத்தல், இரங்கல், ஊடல் எனவும், கைக்கிளை, பெருந்திணை எனவும் ஏழு வகைப்படும்.

புறமாவது போர்த்தொடக்கமான நிரை கோடற் பகுதியும், பகையிடம் சேர்த்தும், எயில்வளைத்தலும், இருபெரு வேந்தரும் மைந்து கருதி ஒரு களத்துப் பொருதலும், வெற்றிவகையும், நிலையாமை வகையும், புகழ்ச்சி வகையுமென ஏழு வகைப்படும் என்பர்.

தொல்காப்பியர் பழைய தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்பக் கூறிய இவை, உலகில் எல்லாச் சமுதாயத்திற்கும் ஏற்குமாறு எங்ஙனம் எனில்,

காமம் என்பது அஃறிணை உயிர்க்கும் உயர்திணை மக்கட்கும் உரியதொரு பொருளாகும். தொல்காப்பியர் மக்களையே கருத்தில் வைத்துக் கொண்டு பொருளிலக்கணம் கூறுவதால் அஃறிணை உயிரினத்தை நீக்கிவிட்டு, உயர்

திணை என்னும் மக்கள் சமுதாய காமத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

காமம் என்பது ஒருவரை விரும்புதல் என்று பொருள்பட்டாலும் ஒரு ஆணும் பெண்ணும் விரும்பி மணவாழ்வில் ஈடுபடுதலையே காமம் என்கின்றோம்.

இக்காமத்தைக் காம நுகர்ச்சிக்குத் தகுதியற்ற இளமைப் பருவத்தாரிடத்தே நிகழ்வதென்றும் காம நுகர்ச்சிக்கு ஏற்ற பருவத்தாரிடத்தே நிகழ்வதென்றும் காமப் புணர்ச்சிக்குத் தகுதியற்ற முதுமைப்பருவத்தாரிடத்தே நிகழ்வதென்றும் பருவங்கருதி மூன்றாகப் பிரிக்கலாம்.

இன்னும் இக்காமத்தைச் சிறிதனவாய் நிகழும் காமம், ஒத்த அளவில் நிகழும் காமம், மிகவும் பெருக்கெடுத்தோடும் காமம் என்று அளவுகருதி மூன்றாகவும் பிரிக்கலாம்.

இன்னும் இக்காமத்தை ஆடவர் மகளிர் என்னும், இருவரில் ஒருவர் மட்டும் விரும்புங் காமம்; இருவருமே ஒருவரை ஒருவர் விரும்பும் காமம், இருவருமே ஒருவரை ஒருவர் விரும்பாமல் நிற்கும் காமம் என விருப்பம் கருதி மூன்றாகவும் பிரிக்கலாம்.

இவற்றைத்தான் தமிழ்ப்புலவர் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை எனப் பெயர் வைத்தழைக்கின்றனர்.

தொல்காப்பியர் காமத்தினை மேற்கண்டவாறு பகுத்துக்கூறுவது எல்லா உலக மக்களுக்கும் பொருந்துவதாக உள்ளது. கைக்கிளை என்றாவது சிறுமை பற்றிய காமம், ஐந்திணை என்பது ஐந்து பிரிவாக வழங்குதற்குரிய காமம். பெருந்திணை என்பது முதிர்ந்த காமம் என்று பொருள் படும்.

அவற்றுள் ஐந்திணை என்பது அன்பு முதலியன ஒத்த தலைவனும் தலைவியும் கூடும் குறிஞ்சி எனவும், தலைவியை விட்டுத் தலைவன் தொழில் காரணமாகப் பிரியின் அது பாலை என்றும், தலைவன் பிரிந்த பொழுது தலைவி ஆற்றியிருப்பது முல்லை என்றும், ஆற்றாமல் புலம்பியிருப்பது நெய்தல் என்றும், தலைவன் பரத்தை

காரணமாகப் பிரிந்த பொழுது தலைவிக்கு உண்டாக்கும் பிணைக்கு என்னும் ஊடல் மருதம் என்றும் கூறப்படும். அன்புடையவராகிய இருவருடைய வாழ்வில் எல்லா இடங்களிலும் அன்பே காணப்படும். அதுவும் ஒருவரை ஒருவர் பிரிந்து நின்றபொழுது இருவருடைய உள்ளத்திலும் ஆர்வவெள்ளம் கரைகடந்து ஓடும். அதனால் ஒத்த காமத்தை ஐந்தாகப் பிரித்து வழங்குகின்றனர்.

கைக்கிளை பெருந்திணைகள் ஒத்த காமத்தைப் போல ஐந்தாகப் பிரித்து வழங்க முடியாதவையாம். ஏன் எனில்? ஒத்த காமத்தில் தலைவனும் தலைவியும் கூடுவது இன்பமாக இருக்கும்; பிரிதல் துன்பமாக இருக்கும்; ஆனால் கைக்கிளையில் புணர்வு ஒருவர்க்கு இன்பமாகவும் மற்றொருவருக்குத் துன்பமாகவும் இருக்கும். அதுபோல் பிரிவு ஒருவருக்குத் துன்பமாகவும் மற்றொருவருக்கு இன்பமாகவும் இருக்கும். அதுபோலப் பெருந்திணையில் புணர்வு இருவருக்கும் துன்பமாகவும், பிரிவு இருவருக்கும் இன்பமாகவும் இருக்கும். இக்காரணங்களால் கைக்கிளை ஐந்திணையை ஐந்தாகப் பிரித்து வழங்கும் வழக்கமில்லை.

தொல்காப்பியர் சிறுமை பற்றிய காமம் ஒத்த காமம் ஒவ்வாக் காமம் என முறைப்படுத்தி, அவற்றுள் பிரித்து வழங்குதற்குத் தகுதியான ஒத்த காமத்தை ஐந்தாகப் பிரித்துக்கொண்டு, கைக்கிளை எனவும்,ஒத்த காமத்தில் ஐந்திணை புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனவும், ஒவ்வாக் காமத்தைப் பெருந்திணை எனவும் கூறி அகத்திணை ஏழு என்றும் கூறுகின்றார். இதனை,

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

என்று அகத்திணையியல் தொடக்க நூற்பாவால் உணரலாம். உலகில் நிகழும் எல்லாக் காம வகைகளும் இந்த ஏழுள் அடங்கும்.

புறத்திணை

தொல்காப்பியர் புறத்திணையியலில் தொடக்கத்தே அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோருக்குப்

புறத்திணை இலக்கணத்தைக் கூறுபடக் கூறுகின்றேன் என்று கூறுகின்றார்.அவர் அறிவுரையின் படி அகத்திணை ஏழினைப்பற்றி விளக்கம் தெரிந்து கொண்ட பின்னரே புறத்திணைச் செய்தியைப் பற்றிப் படிக்கவேண்டும் என்பதை உணர்கிறோம்.

அவர் அகத்திணை ஏழுள் குறிஞ்சி என்னும் திணை யிலிருந்து பகைவர் ஆநிரையைக் கவருதலாகிய வெட்சிப் போரும், முல்லைத் திணையிலிருந்து பகைவர்தம் நாட்டினைக் கவர்தலாகிய வஞ்சிப்போரும், மருதத் திணையிலிருந்து பகைவர்தம் வாழிடத்தைப் பற்றி அவரை அழித்தலாகிய உழிஞைப் போரும், நெய்தல் திணையிலிருந்து மைந்து கருதி இருவரும் களம் குறித்துப் போர் செய்தலாகிய தும்பைப் போரும், பாலைத் திணையிலிருந்து அரசன் வெற்றியையும் உலக மக்கள் எல்லோருடைய தொழில் வெற்றியையும் குறிக்கும் வாகைத் திணை துறையும் ஒவ்வாக் காமமாகிய பெருந்திணையிலிருந்து நிலை யாமையைப் பற்றிக் கூறும் காஞ்சித் திணையும் ஒருதலைக் காமமாகிய கைக்கிளையிலிருந்து ஒருவரைப் புகழ்ந்து கூறிப் பரிசில் பெறும் பாடாண் திணையும் தோன்றின என்று கூறுகிறார்.

இவர் கூறுகின்ற புறத்திணை உரிப்பொருள்கள் எல்லா நாட்டு மக்களுக்கும் பொருந்துகின்றனவா என்பதை ஆராய்வோம். எந்த நாட்டிலும் ஓர் நிகழ்ச்சியான சில செயல்கள் நிகழ்வதைப் பார்க்கிறோம், எல்லையைக் கடந்து அங்குள்ள பொருள்களைக் கவர்தலும், அங்குள்ள வர்களுக்குத் துன்பம் செய்தலும் போன்ற செயல்களைச் செய்வதைப் பார்க்கிறோம். இவை மறைவாயியங்கிச் செய்யப்படும். இப்போர் முன் நிகழ்ச்சியைத்தான் தொல் காப்பியர் ஆநிரை கவர்தலென்று கூறி, அதற்கு வெட்சி யென்று பெயர் சூட்டி, அது குறிஞ்சியின் புறத்ததாய் வரும் என்று கூறுகிறார். பின்னர் போர் தொடங்கின் பகைவ னுடைய நாட்டினைக் (மண்ணினை) கவர்தற்காகவும், அவ னுடைய நகரை வளைத்து அவனைக் கொல்வதற்காகவும் அது நிகழும்.

தொல்காப்பியர் பகைவர் நாட்டைக் கவர்தல் கருதிச் செய்கின்ற போருக்கு வஞ்சி என்று பெயர் சூட்டி அது முல்லை என்னும் அகத்திணைக்குப் புறனாய் வரும் என்று கூறியுள்ளார். அவர் பகைவன் வாழும் நகரத்தை முற்றுகை யிட்டு அந்நகரத்தின் அரண்கள் பலவற்றையும் அழித்துப் பகைவன் வாழும் மனையகத்துச் சுற்றி அவனை அழிக்கின்ற போருக்கு உழிஞை என்று பெயர்தந்து, அது மருதம் என்ற அகத்திணையில் புறனாம் என்பர். பகைவன்றன் நாட்டினைப் பற்றவும், அவனை அழிக்கவும் செய்யப்படும் போர்களை யன்றி, ஆற்றல் வாய்ந்த இரண்டு பேரரசர் உறழ்ந்து தம் ஆற்றலின் மிகுதியை நிலைநாட்ட வேண்டிக் களம் குறித்துக் காலங்குறித்துப் போர் செய்வர். தொல்காப்பியர் இதனைத் தும்பை என்று கூறி இது நெய்தல் என்னும் அகத்திணையின் புறனாம் என்பர்.

அவர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்னும் நான்கினையும் போர்க்குரிய புறத்திணையாகக் கூறி, இவை வேந்தர்க்கு[1] உரியனவாகும் என்றனர். ஆனால், ஏனைய மூன்று திணைகளைப் பற்றிக் கூறும்பொழுது வேந்தர்க் கென்றோ மக்களுக்கென்றோ கூறாமல், பொதுவாகக் கூறிச் செல்கின்றார்.

அரசன் ஒருவன் போர் செய்து வெற்றியடைதல் வாகை என்று கூறாமல் அரசராயினும் மக்களாயினும் தாம் தாம் செய்யும் தொழிற் கூறுபாட்டில் ஒப்புணர்ச்சியின்றி, உறழ்

---

1. வெட்சியைக் கூறும்பொழுது 'வேந்துவிடு முனைஞர்' என்று கூறியுள்ளார். வஞ்சியைக் கூறும் பொழுது 'வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்றே' என்றனர். உழிஞையைக் கூறும்பொழுது வேந்தன் என்று கூறாவிடினும் முன்திணை நூற்பாவிலுள்ள சொல்லை வருவித்து ஒருவேந்தன் மற்றொரு வேந்தனுடைய முழுமுதல் அரணை முற்றலும் கோடலும் என்று கொள்ளுமாறு வேந்தர் செயலின் இடை வைத்தார். தும்பையைக் கூறும் பொழுது " மைந்து பொருளாக வந்து வேந்தனைச் சென்று தலையழிக்கும் சிறப்பிற்று" என்றனர்.

வுணர்ச்சி கொண்டு மிக்கு விளங்குதல் வாகை என்று பெயர் பெறும். இது பாலைத் திணைக்குப் புறனாகும் என்கின்றனர்.

அகத்திணை உலகில் பாலைத்திணை மிக மிகச் சிறந்ததாகும். எதனால் எனின்? ஒரு தலைவனும் தலைவியும் கூடி இன்பம் துய்க்கின்றனர். அந்த இன்பத்தையே இருவரும் கருதினால், மனையில் நீங்கி நாட்டில் நீங்கித் தொழில் செய்ய முடியாத நிலை தலைவனுக்கு ஏற்ப டுகின்றது. தலைவன் இன்பத்தையே கருதித் தொழில் செய்யாதவனாயிருப்பின் தங்கள் வாழ்வினையும் நன்கு நடத்த முடியாமையுடன் உற்றார் உறவினர்க்கும் உதவ முடியாத நிலையை அடைகின்றான். இவன் இன்பத்தை விரும்பாமல் தொழிலை விரும்பிடில் அவனுக்கு எல்லா வகையான பொருள்களும் எளிதில் கிடைக்கிறது. அப்பொருளால் தங்கள் குடும்ப வாழ்வும் சிறப்படைகிறது; உறவினர் வாழ்வும் சிறப்படைகிறது. இதனை நன்கு கருதிய திருவள்ளுவர்,

இன்பம் விழையான் வினைவிழைவான் தம் கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

என்ற அருமையான திருக்குறளைப் படைத்துள்ளனர். இன்பம் விழைபவன் வினைவிழையான்; வினை விழையா விடில் கேளிர்தம் துன்பத்தைப் போக்க இயலாதவனாகிறான். அதனால் தலைவியிடத்தே தான் துய்க்கும் இன்பத்தைக் கருதாமல் தலைவன் பிரிதல் வேண்டும்.

பிரிந்து 'வினையே ஆடவற்கு உயிரே' என்று சிறப்பித்த வினையை நன்றாக, பலர் செய்யும் வினையில் சிறந்ததாகச் செய்ய வேண்டும். தொல்காப்பியர் தலைவன் வினை செய்தற்காகத் தலைவியைப் பிரிதலைப் பாலை என்று கூறிப் பிரிந்த தலைவன் தொழில் செய்து மேம்படுதலை வாகை என்று கூறுகின்றார். பாலையொழுக்கமும் வாகை யொழுக்கமும் எந்த நாட்டில் இல்லை. தமிழிலக்கியத்தில் பாலையும் வாகையுமே மிகுதியாக உள்ளன.

"கைக்கிளை செந்திறம் பெருந்திணை நோந்திறம்" என்று இளம்பூரணர் எடுத்துக்காட்டும் நூற்பாவின்படி,

(அகத்திணையியல் - 58) பெருந்திணைக் காமம் துன்பம் பயப்ப வரும் என்று உணர்கின்றோம். அத்துன்பக் காமத்தி லிருந்து யாக்கை நிலையாமை இளமை நிலையாமை செல்வம் நிலையாமை முதலான, நிலைபேறில்லாமையைப் பற்றிய துன்ப உணர்ச்சி தோன்றுகின்றது. இது காஞ்சி என்னும் புறத்திணையாம் என்கின்றார்.

கைக்கிளை சிறிய அல்லது ஒருபாற் காமமாயினும் செந்திறம் .. என்று கூறப்பட்டு ஒருபாலார்க்கு இன்பம் பயப்ப வரும் என்பர். அவ்வொருதலைக் காமத்திலிருந்து தன்னைமையுடையானைப் புகழ்ந்து பாடுகின்ற புகழ்ச்சிவகை என்னும் இன்ப உணர்ச்சி தோன்றுகின்றது. இதனைப் பாடாண் திணை என்கின்றார்.

முடிவுரை

எனவே தொல்காப்பியர் பாடலுள் வருகின்ற பொருளெல்லாம் முதல், கரு, உரி, என்ற மூன்று பகுப்புள் அடங்கும் எனவும், முதற்பொருள் என்பது எடுத்துக் கொண்ட பொருளுக்கு இடமாய்ப் பொருள் நிகழ்வைக் கூறும் என்பதும், கருப்பொருளாகிய இறைச்சிப் பொருள் உரிப்பொருளுக்கு அடையாகி வரும் என்பதும், உரிப் பொருள் என்பது மக்கள் சமுதாயத்திற்கெல்லாம் உரிய பொருளாய் அகத்திணை புறத்திணை என்று பிரிக்கப்பட்டு ஒருபாற் காமமாய் ஐந்தாகப் பிரித்தோதுதற்குரிய ஐந் திணைக் காமமாகியும் ஓவ்வாக் காமமாகிய பெருந்திணைக் காமமாகியும் அகத்திணையில் வரும் என்பதும், அகத் திணைக் காமத்தானே புறத்திணையில் போரின் முன் நிகழ்ச்சியாகிய வெட்சி என்றும், பகைவர் மண்ணைப் பற்றும் வஞ்சி என்றும், பகைவரை அழிக்கும் உழிஞை என்றும், ஆற்றலை அழிக்கும் தும்பை என்றும், எல்லா மக்களுடைய வினை மிகுதியைக் கூறும் வாகை என்றும், நிலையாமையைக் கூறும் காஞ்சி என்றும், புகழ்ச்சியைக் கூறும் பாடாண் திணை என்றும் பாடுபொருள் பதினான் காகப் பகுத்தோதப்பட்டுள்ளன. இப்பதினான்குள் அடங்காத பொருள் உலகத்தில் எதுவும் இல்லை என்க.

22

நூற்கு உரை கூறுதல்

பொது உரை என்பது - தொல்காப்பியர் கூறுவது

தொல்காப்பியர் நூலுக்கு இலக்கணம் கூறுமிடத்து, "உண்ணின்று அகன்ற உரையொடு புணர்ந்து" என்று கூறியுள்ளார். இதனாலே நூலின் அகத்துநின்றும் விரிந்து உரையுடன் கூடி நிற்பது நூல் என்பது பெற்றாம்.

உரை இருவகை

தொல்காப்பியர் மேற்கூறிய உரையினைக் 'காண்டிகை என்றும், உரை (விருத்தியுரை) என்றும் மரபியலில் இரு வகையாக வகுத்தோதுவர்.

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்
(மரபியல் - 103)

குற்றமில்லாத சூத்திரத்தில் உள்ள பொருள்களை யெல்லாம் விடாமல் கூறுவது காண்டிகையுரையாகும். சூத்திரப் பொருளைக் காணச்செய்வது என்று பொரு ளுடையது.

விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே
(தொல் - மரபியல் - 104)

சூத்திரத்திற் படும் சொற்பொருளை விட்டு நீங்குதலின்றி, விரிவோடே பொருந்தி, சூத்திரப்பொருளைக் காரணங் காட்டியும், எடுத்துக்காட்டுக் கூறியும் உண்மைப்பொருளை உணர்த்துவதாக அக் காண்டிகை உரை அமையவேண்டும் என்பர்.

இரண்டாவதாய் இயம்பின உரை (விரிவுரை) என்பது சூத்திரத்துட் பொருளொழியவும், அந்நூலகத்துக் கூறிய

பொருட்கு இன்றியமையாதனவற்றையெல்லாம் கொணர்ந்து பொருந்த உரைப்பது உரையாகும். அது அந்நூற் பொருளுக்கு மாறுபட்டவர் கூறும் வினாவும், அதனை மறுத்துக் கூறும் மாற்றமும் உடையதாகித் திரிபுப் பொருளையும் ஐயப் பொருளையும் நீக்கித் தனது நூலானும் தன் நூற்பொருள் முடிந்ததிற்கும் ஒத்த நூலானது உண்மைப் பொருளைக் காட்டிப் பொருள் துணிபு தர நிற்பதாய் அமைதல் வேண்டும். இக்கருத்துக்களை,

சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே
மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென வொருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்

என்னும் மரபியல் நூற்பாக்கள் (105-106) உணர்த்துகின்றன.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் கூறுவது

சூத்திரப் பொருள் உரைக்கின்றுழிப் பலதிறத்தானும் உரைப்ப. என்னை?

முத்திறத் தானும் மூவிரு விகற்பினும்
பத்துவிதத் தானும் பதின்முன்று திறத்தானும்
எழுவகை யானும் இரண்டுகூற் றானும்
வழுவுநனி நீங்க மாண்பொடும் மதத்தொடும்
யாப்புறுத் துரைப்பது சூத்திர உரையே

என்பது ஆகலின், அவற்றுள் **முத்திறமானவன:-** பொழிப்பு, அகலம், நுட்பம் என இவையாம், **மூவிரு விகற்பமாவன:-** எடுத்துக்காட்டல், பதம் காட்டல், பதம் விரித்தல், பதப் பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல் என இவையாம், **பதின்மூன்று திறமாவன:-** சூத்திரம், தோன்றுதல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடம்காட்டல், உதாரணம் காட்டல், ஆசிரிய வசனம் காட்டல், அதிகார வரவு காட்டல், தொகுத்து முடித்தல்,

விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனொடு புணர்த்தல் என இவையாம்.

எழுவகையாவன:- பொழிப்பு, அகலம், நுட்பம், நூல் எச்சம், பதப்பொருள் உரைத்தல், ஏற்புழிக்கோடல், எண்ணல் என இவையாம்.

இரண்டு கூற்றாவன:- தொகுத்துக் கண்ணழித்தல், விரித்துக் கொணர்ந்துரைத்தல் என இவையாம்.

வழுவாவன:- குன்றக் கூறல் முதலிய பத்தாம்

மாண்பாவன:- சுருங்கச் சொல்லல் முதலிய பத்தாம்.

எழுவகை ஆசிரிய மதமாவன:- உடன்படல் முதலிய ஏழு

இவ்வகையே புகுந்தன பரப்பி உரைப்பான் புகில் இகந்துபட்ட உரையிற்றும் அதனால் எடுத்துக்கொள்ளப் பட்ட பொருளவற்றுள் யாதானும் ஒருவகையாற் கேட்போர் உணர்வு புலன் கொள்ளுமாற்றால் எடுத்துக்கொண்ட சூத்திரப்பொருள் உரைக்க வேண்டும் என்பது ஈண்டுத் துணிபு.

இளம்பூரணர் தொல்காப்பிய முகப்பில் (சிறப்புப் பாயிர உரையுள்) கூறுவன:

சூத்திரத்திற்கு உரை கூறுதல் நான்கு வகை:

பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே
அவற்றுள்
பாடம் கண்ணழிவு உதாரணம் என்றிவை
நாடிற் றிரிபில வாகுதல் பொழிப்பே
தன் னூன் மருங்கினும் பிறநூன் மருங்கினும்
துன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம்
பன்னிய அகலம் என்மனார் புலவர்
ஏதுவின் ஆங்கவை துடைத்தல் நுட்பம்
துடைத்துக் கொள் பொருளை எச்சம் என்ப
படைப்பவன் அல்லது ஆக்கியோன் யார் யார்

இலக்கண நூற்பாவை எழுதுபவனும், அந்நூற்பாவிற்கு உரை எழுதுபவனும் படைப்பவனே, இக்கருத்தினை,

சூத்திரம் உரையென் றாயிரு திறப்
படத் தோற்றல் படைத்த லென்ப
நூற்பய னுணர்ந்த நுண்ணி யோரே

என்னும் நூற்பாவால் உணரலாம். இதனால் இலக்கியத்தை ஆக்குபவனும், அவ்விலக்கியத்திற்கு உரை வகுப்பவனும் படைப்பவனே. படைப்பவன் எவ்விலக்கணமுடையவனாய் அமையவேண்டும் என்பதை,

அப்புலம் அரிதப அறிந்து முதனூற்
பக்கம் போற்றும் பயனறிந்த துலகத்
திட்ட முடைய தெளிவர புடையோன்
அப்புலம் படைத்தற் கமையு மென்ப

இளம்பூரணர் கூறிய பொழிப்பு முதலிய நான்கு வகை உரையினைத் திருக்குறள் பரிமேலழகர் உரைப்பாயிரம்.

பொழிப்பக லத்தொடு நுட்ப எச்ச
விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்தனன்

என்று குறிப்பிடுகின்றது, மேலும், நாலடியாரும்,

பொழிப்பகலம் நுட்பம்சா லெச்சமிந் நான்கிற்
கொழித்தகலம் காட்டாதார் சொற்கள் - பழிப்பில்
நிரையாமா சேர்க்கும் நெடுங்குன்ற நாட
உரையாமோ நூற்கு நன்கு (319)

என்று கூறுகின்றது. இப்பாட்டிற்குப் **பதுமனார்** என்னும் உரையாசிரியர் '**பொழிப்பு**' திரண்ட பொருளைச் சொல்லுதல், '**அகலம்**' விரித்துரைத்தல் '**நுட்பம்**' கடாவும் விடையுமாகச் சொல்லுதல் '**எச்சம்** இலேசானே பொருளை உரைத்தலும் எச்ச உம்மைகளால் பொருளை உரைத்தலும் என்பர்

சிவஞான முனிவர்

சிவஞான முனிவர் பாடிய உரையுள் பொழிப்புரை பிண்டப் பொழிப்பு என்றும் வார்த்திகப் பொழிப்பு என்றும் இருவகைப்படும் என்று கூறி, அவற்றுள் பிண்டப்

பொழிப்பாவது:- பொழிப்பெனப்படுவது பொருந்திய பொருளைப் பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே" (திவாகரம் - ஒலி - 90) என்பதாகும். வார்த்திகப் பொழிப்புரையாவது " பாடம் கண்ணழிவு உதாரணம் என்றிவை நாடிற் றிரிபில வாகுதல் பொழிப்பே" என்பதாகும் என்பர்.

அகப்பொருள் உரையாசிரியர்

சொற்றொறும் சொற்றொறும் துணிபொருள் உரைத்தல்
கற்றறி புலவர் கண்ணழி பென்ப

என்பர்.

இறையனார் களவியலுரையாசிரியர் உரை நான்கு வகைப்படும் என்பர். கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என.

அவற்றுள், கருத்துரைத்தல் - சூத்திரக் கருத்தை உணர்த்தல்.

கண்ணழித்தல் - பதப்பொருள் சொல்லுதல்.

பொழிப்புரையைப் பொழிப்புத் திரட்டல் என்பர்.

அகலம் என்பது சூத்திரப் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடா விடை உள்ளுறுத்து உரைக்கும் உரை யெல்லாம் அகலவுரை என்பர்.

பிங்கல நிகண்டு கூறுவது

பொழிப்புரை, விரித்துரை என இரண்டு. அவற்றுள் "பொழிப்புரை பிண்டம் பொருளதென்ப" (2071)

விரித்துரை பதவுரை விரித்த சூரணை
தொகுதி பகுதிப்பொருள தாகும் (2073)

நன்னூல் கூறும் ஈரேழ் உரை

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகார துணிவு பயனோடு
ஆசிரியவசனம் என்று ஈரேழுரையே (21)

காண்டிகையுரை

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை (22)

விருத்தியுரை

சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை எஞ்சா திசைப்பது விருத்தி (23)

இளம்பூரணர் தொல்காப்பியம் - எழுத்ததிகாரப் பாயிரம்

பாயிரம் இன்றியமையாச் சிறப்பினையும், அலங்கார மாதற் சிறப்பினையும் பெற்றுள்ளது. அத்தகைய பாயிரம் கொளாதே ஒருவன் நூலை மட்டும் கேட்குமே எனில் அவன் இடர்ப்படும் என்பர் இளம்பூரணர்.

அவர் மேலே கூறிய மூன்றற்கும் மூன்று எடுத்துக் காட்டினைக் கூறுகின்றார். இன்றியமையாச் சிறப்பிற்குக் "கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள் போல" என்பது உவமை. ஒருவன் கற்று வல்லவனாக உள்ளான். இல்லறம் இனிது நடத்த வேண்டித் திருமணம் செய்து கொண்டான். கற்று வல்லவனாதலின் கற்றபின் அதற்குத் தக நிற்க விரும்புவனாதலின், கற்றவாறு இல்லறம் நடாத்த வாழ்க்கைத் துணை என்னும் மனைவி வேண்டும். ஆனால், அவள் கற்பொழுக்க முடையவளாக இருந்தால்தான் இல்லறம் இனிது நடக்கும் "இல்லறம் இனிது நடத்த விரும்பும் கற்றுவல்ல கணவனுக்கு எல்லாவகையிலும் உதவும் கற்புடைய மனைவியைப் போல" ஒரு நூலைக் கற்பவர்க்கு அந்நூலுக்குப் பாயிரம் என்னும் முகவுரையானது எல்லாவகையிலும் உதவக்கூடியதாக அமையவேண்டும். அஃதாவது ஒரு நூலினை நன்கு கற்க விரும்புபவர்க்கு அதனை எளிமையாகத் தெளிவாகக் கற்பதற்குரிய செய்தி

யெல்லாம் அந்நூலின் முகப்பிலுள்ள முகவுரையில் அமைந்திருக்க வேண்டும் என்பதாயிற்று.

அடுத்து, அலங்காரமாதற் சிறப்பிற்கும் ' திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம் உவமை. இங்கே கூறிய நகரம் சாதாரணமான நகரமன்று, எல்லாச் செல்வங்களும் நிறைந்த நகரமாகும்அதற்குப் பாதுகாவலாக அகழியும் அரணும் இருக்கும். அந்நகரத்துள் மக்கள் நுழை வதற்கு வாயில் வேண்டும். அதற்கு வாயில் மாடம் என்றும், கோபுர வாயில் என்றும் பெயர். ஒருவர் வாயில்மாடத்தின் முன்வந்து நின்று புகுந்துசெல்லும் பொழுது அவ்வாயில் மாடத்தின் அழகியதோற்றம் (அலங்காரத் தோற்றம்) வருபவரை மிகவும் கவர்வதாய், அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றாற் போல, திருவமைந்த மாநகரத்தின் அழகினையெல்லாம் முன்னே உணர்த்துவதாய் அமைய வேண்டும். அதுபோலவே பாயிரமும் சிறந்த நூலின் உட்பகுதிப்பொருளை உணர்த்தும் பெரும்பொருளை முந்துறக்கூறி நூலினுள் நுழைபவர்க்கு வாயிலாய் நூலினை அழகுபடுத்தி அழகுற நிற்கும்.

பாயிரத்தைக் கற்காமல் நூலை மட்டும் கற்கப்புகும் மாணவன் இடர்ப்படும் அதற்கு உவமை குறிச்சி புக்க மான் ஆகும். குறிச்சி என்று குறிஞ்சி நிலத்து ஊர் குறவர் வாழும் ஊர். மான் முல்லை நிலக்காட்டில் வாழும், அது மலைப் பாங்கான குறிச்சியில் குறவர் வாழும் குறிச்சியில் புகுந்தால் இயங்க முடியாமல் தடைப்படும். இது போலப் பாயிரம் கற்காமல் நூலைக் கற்கப்புகின் நூலைக் கற்கமுடியாமல் மாணவன் இடர்ப்படும் என்க.

இளம்பூரணர், ஒரு இலக்கண நூலிற்கு அல்லது இலக்கியத்திற்கு எழுதப்படும் முகவுரை எல்லாம்; இன்றி யமையாச் சிறப்பிற்றாயும், அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் அமையுமாறு எழுதப்படுதல் வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றார். அந்நூலானது எதிர் காலத்தில் சிறந்த இலக்கண நூற்களுக்கும், இலக்கியத்திற்கு அவற்றைப் படிப்பவர்க்கு நன்கு உதவிபுரியும் வகையில் அவற்றின்

கட்பொருளை ஒருவாறு முன்னே உணர்ந்து கொள்ளும் வகையில், மிக ஆழமாக ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்ட முகவுரை வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றார்.

பாயிரம் இருவகைத்து.

1. பொதுப்பாயிரம்.

2. சிறப்புப் பாயிரம்.

அவற்றுள் பொதுப்பாயிரம் எல்லா நூன்முகத்தும் பொதுவாக உரைக்கப்படும். நூலுட் சொல்லும் பொருளல்லாத புறப்பொருளைக் கூறும் மகளிர்க்கு அணிபோல நூலிற்கு அணியாயிருப்பது.

சிறப்புப் பாயிரம் ஒரு நூன்முகத்தே சிறப்பாக உரைக்கப்படும் நூலுள் சொல்லப்படும் பொருள் முதலியன உணர்த்தும் மகளிர்க்கு அணியிற் சிறந்த ஆடைபோல எடுத்துக்கொண்ட நூற்குச் சிறப்பாயிருப்பது.

இளம்பூரணர் பதம் பிரித்துப் பதப் பொருளை எழுதவில்லை. பொழிப்புரையே எழுதுகின்றார். பாயிரத்திற்கு உரை எழுதுங்கால் இப்பாயிரம் இன்னார் செய்ததென்று கூறிப் பாயிரத்தை எடுத்துக்கூறி, உரை எழுதியுள்ளார். விளாவிக் கொண்டு அதற்கு விடையாக உரை எழுதும் பழக்கம் இவரிடம் உண்டு. பாயிரத்திற்கு சொன்முடிபும் பொருள்பெறுமாறும் சொல்லை முதல் முதலான இடங்களில் வைத்தமைக்குக் காரணமும், இன்றியமையாத சொல்லிற்கு இலக்கணக் குறிப்பும் எழுதுகிறார்.

உவமை அணி குறித்தும் வரும், பொருளுணர்த்தவும் வரும். ஆசிரியர் இருவகையினர். கற்கப்படும் ஆசிரியர், கற்கப்படாத ஆசிரியர் என

மாணவர் இருவகையினர். கற்பிக்கப்படுவோரும், கற்பிக்கபடாதோருமென. அவர்கள் இயல்பை உவமையினாலேயே கூறிவிடுகிறார்.

ஆசிரியன் பாடம் சொல்லும் முறை

அவன் பொழிப்பு அகலம் நுட்பம் எச்சம் என்னும் பல உரைகளையும் பயின்ற நாவினனாய் தெளிந்த அறிவின

னாய் இருந்து கொள்வோன் கொள்வகை அறிந்து கொடுத்தல் வேண்டும்.

மாணவன் பாடங்கேட்கும் முறை

1. நெஞ்சு களனாகச் செவி வாயாகக்
   கேட்டவை கேட்டவை வல்லனாகி
   கேட்ட பாடத்தைப் போற்றிக் கொள்ள வேண்டும்
2. செல்வன் தெரிந்து கொள்ளும் ஆற்றலுடையவனாய்
   உண்மையை நோக்கி அறிபவனாய்
   பல உரையும் கேட்கும் விருப்பினனாய் இருத்தல்
   வேண்டும்.

3. உலக வழக்கு செய்யுள் வழக்கு இரண்டையும் அறிந்து
   பாடம் போற்றுதல்
   கேட்டவை நினைத்தல்
   முன் கேட்டவற்றில் ஐயம் நிகழின் திரும்பக் கேட்டல்
   தன்னைப் போன்ற மாணவருடன் பழகல்
   தான் வினாதல்
   பிறர் வினாவியவற்றிற்கு விடை தருதல்

என்னும் இவையெல்லாம் வேண்டும்.

இளம்பூரணர், அதிகார முகப்பில் அதிகாரத்தின் பெயர் அதற்கு என்ன காரணத்தாற் பெயர் வந்தது? என்பவனவற்றை வினா நிகழ்த்திக் கொண்டே விடை கூறுவர்.

இயல் முகப்பிலும் அவ்வாறே எழுதுவர். நூற்பா முகப்பில் இந்நூற்பா என்னுதலிற்று என வினாவிக் கொண்டு நுதலிய பொருளைக் கூறிவிட்டே உரை எழுதுவர்.

இளம்பூரணர், முதல் நூற்பா உரையுள், எழுத்து எனைத்து வகையினான் உணர்த்தினான் என வினா நிகழ்த்திக் கொண்டு, எட்டு வகையானும், எட்டிறந்த பல வகையானும் உணர்த்தினான் என்பர். இப்படி பகுத்துக் கொண்டு உணர்த்துவது திறனாய்வு முறையாகும்.

நூன்மரபில் உணர்த்துவ தனிநின்ற எழுத்திற்கும் மொழிமரபில் உணர்த்துவன மொழியிடை எழுத்திற்கும் உள்ள இலக்கணமாம் என்பது இளம்பூரணர் கருத்து.

'எழுத்தெனப்படுப' என்ற சிறப்பால் (நூற்பா - 17) அகரமுதல் முப்பதெழுத்தும் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற மூன்றும் சிறந்த எழுத்துக்களாம். சிறவாத எழுத்துக்கள் அளபெடையும் உயிர்மெய்யும் வரிவடிவும் என்பர். ஆனால் (2) எழுத்தோரன்ன என்றதால் குற்றியலுகரம் முதலிய மூன்றும் சிறவாத எழுத்தென்றே கருத்தமைத்தான் என்பர்.

முதல் நூற்பாவுள் 'அகரம் முதல்' என்று அகரஎழுத்து முதலாக ஓதப்பட்டுள்ளது. 'னகரஇறுவாய்' என்று னகர எழுத்துப் பின் வைக்கப்பட்டது. இளம்பூரணர் அகரந் தானுமியங்கித் தனிமெய்களையும் இயக்குதற் சிறப்பான் முன் வைக்கப்பட்டது. னகாரம் வீடு பேற்றிற்கேற்ற ஆண் பாலை உணர்த்துதற் சிறப்பாற் பின் வைக்கப்பட்டது என்பர்.

குற்றிகரக் குற்றுகரம் சார்பெழுத்தென வேறாதற்குக் காரணம் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் என்பர். (உ - நு - உரை)

மூன்றாம் நூற்பா, அஇஉஎஒ குற்றெழுத்து என்று கூறும் நூற்பாவாகும், அந்நூற் பாவுரையுள் இளம்பூரணர், "இவன் காரணம் பற்றியன்றிக் குறியிடான் ஆகலின் இது தன் குறுமையால் இக்குறி பெற்றது" என்பர். இவன் என்னுஞ் சுட்டுத் தொல்காப்பியரைக் கருதியதாகும். ஆனால் நூற்பாவுள், 'என்ப' என்னும் சொல் வந்துள்ளமையால் 'குறில்' என்பது தொல்லாசிரியர் வைத்த குறி என்றே கொள்ள வேண்டும்.

(4ஆவது நூற்பா) ஐகார ஔகாரங்கட்குக் குறிலாகிய இனம் இல்லை எனினும் மாத்திரை ஒப்புமையான் நெட்டெழுத்தெனப்பட்டன என்பர்.

தொல்காப்பியர் எழுத்திற்குக் கூறும் மாத்திரைக்கு அளவு கருவியாகக் கண்ணிமையையும் கைந்நொடியையும் கூறியுள்ளார். இளம்பூரணர் எழுத்தினை உண்டாக்க முயலும் தொழிலுக்கு இமைக்கும் தொழிலையும், ஒலிக்கு நொடித்துத் தோற்றுவிக்கும் ஓசையையும் உவமை கூறியுள்ளதாகக் கருதுகிறார். அந்நூற்பாவுள் இமையை முன் கூறியதற்குக்

காரணம் குறிப்பின்றி நிகழ்தலின் இமை முன் கூறப்பட்டது என்பர்.

இளம்பூரணர் (7) அளவை நிறுத்தளத்தல் பெய்தளத்தல் நீட்டியளத்தல் தெறித்தளத்தல் தேங்க முகந்தளத்தல் சார்த்தியளத்தல் எண்ணி அளத்தல் என அளவை ஏழு. கண்ணிமையாலும், கைந்நொடியோசை யாலும் எழுத்தினை அளப்பது சார்த்தியளத்தல் என்பர்.

"இளம்பூரணர் பொருளுணர்ச்சிக்குக் கருவியாக உள்ள நயத்தினைப் பல இடத்திலும் கூறுகின்றார். இந்நூற்பாவில் ஒற்றுமை நயம் வந்துள்ளது. "மெய்யின் வழிய உயிர்தோன்று நிலையே" என்பதனுள் வேற்றுமை நயம் கருதப்பட்டதென்பர்.

இளம்பூரணர் (18 நூற்பா) கலப்பினை பாலும் நீரும் போலக் கலந்த உடனிலைக் கலப்பும் விரல் நுனியும் விரல் நுனியும் தலைப்பெய்தாற் போல வேறுநின்று கலந்த கலப்பும் என இரண்டுவகையாகக் கூறி, மெய்யும் உயிரும் கலந்த கலப்பு விரல் நுனியும் விரல் நுனியும் கலந்தாற் போன்றதென்பர்.

23

அகப் பாடல்களுக்கு உரை காண்பது

தொல்காப்பியர் செய்யுளியல் முதல் நூற்பாவில் செய்யுள் உறுப்பினைக் கூறும்பொழுது,

திணையே கைகோள் கூற்றுவகை எனாஅக்
கேட்போர் களனே காலவகை எனாஅப்
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ

என்று ஒரு பன்னிரண்டினைக் கூறுகின்றார்.

இறையனார் களவியல், முன்னம், துறை என்னும் இரண்டையும் நீக்கிவிட்டுத்

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோளென் றாங்கப் பத்தே
அகனைந் திணையும் உரைத்த லாறே

என்று கூறுகின்றது. இந்நூற்பாவில் அதன் உரையாசிரியர் "இந்நூற்பா என்னுதலிற்றோவெனின், மேற் களவும் கற்பும் உணர்த்தினார், இனி அவ்விரண்டும் பற்றி வருகின்ற பாட்டினை இக்கூறப்பட்ட[1] பத்திலக்கணத்தாலும் உரைக்க (உரைகூறுக) என்பது உணர்த்துதல் நுதலிற்று" என்று கூறுகிறார். அதனாலே இவை பாட்டிற்கு உரைகூறும் முறை என்று கருதவேண்டும்.

---

1. யாப்பருங்கல விருத்தி "அகவல், அகப்பா, புறப்பா நூற்பா சித்திரம் உறுப்பு ஏந்திவையென ஆறுவகையாம் என்கின்றது. அவற்றுள் அகப்பா அகவலானது அகப் பொருளைத் தழுவி ஐயீருறுப்பினவாய் வஞ்சிவிரவாது வந்து முடியும்" "அகப்பா அகவல், ஐயீருறுப்பின் ஆசிரியம்மே. அவைதாம் முன்னும் பின்னும் சாங்கல் இன்றி, செங்னெறி மரபிற் சென்றிசைக்கும்மே" (கழகப் பதிப்பு. பக். 286).

தொல்காப்பியரைத் தவிர்த்து எவரும் திணைமுதலான பன்னிரண்டனையும் செய்யுட்கு உறுப்பாக ஓதியதாகத் தெரியவில்லை. இறையனார் களவியல், நம்பி அகப்பொருள் முதலிய அகப்பொருளிலக்கண நூல்கள் மட்டும் இவற்றை எடுத்துக்கூறி, இவை அகப்பொருள் பாடற்கு உரைகூறும் முறை என்று குறிப்பிடுகின்றது.

வீரசோழியம் என்னும் இலக்கணநூல் இவற்றையும் இன்னும் பலவற்றையும் எடுத்துக்கொண்டு இவை அகப்பொருளுக்கு உரையாம். அகப்பொருளல்லாதவற்றிற்கு இவற்றிலே பலவற்றை நீக்கியும் சிலவற்றைக் கொண்டு உரைகூறுவதுண்டு என்று கூறுகின்றது. அவற்றைக் கீழே காண்க.

அகப்பொருள் பாடல்கள் வீரசோழியம் கூறும் உரை

முல்லை குறிஞ்சி மருதத்தொடு பாலை நெய்தலைந்தும்
சொல்லும் அகமாம்; அதனுக் குரைதொரு சட்டகமோ
டெல்லை நிகழு மிருபதோ டேழுள ஏனையவற்
றொல்லை நிகழும் உரையும் அறிந்துகொள் நண்ணுதலே

முல்லை குறிஞ்சி மருதம் பாலை நெய்தல் என்னும் ஐந்து நிலமும் அகப்பொருளுக்கு அடையாளம் எனக் கொள்க. இப்படியுள்ள அகப்பொருளுக்குச் சட்டகம் முதலாக இருபத்தேழு உரை உள. ஒழிந்த அகப்புறப் பொருளுக்கும், புறப்பொருளுக்கும் என்பது புறப்புறப் பொருளுக்கும் ஏற்கும் உரை அறிந்து கொள்க" என்பது மேற்காரிகையின் உரையாகும்.

ஒத்த காமமாகிய முல்லை முதலான ஐந்து திணைக் குரிய பாடல்கட்கு மட்டும் சட்டகம் முதலான இருபத்தேழு உரைத்திறன் உள்ளன. ஏனைய அகப்புறம் முதலிய மூன்றற்கும் இவ்விருபத் தேழுள் பொருந்தும் உரையைக் கொள்க என்று மேற்பாட்டு கூறுகின்றது.

சட்டகம் முதலான உரைத்திறன்

சட்டக மேதினை கைகோள் நடைசுட் டிடங்கிளவி
ஒட்டிய கேள்வி மொழிவகை கோளும் பெறுபொருளென்

நிட்டிகச் சொற்பொருள் எச்ச மிறைச்சி பயன்குறிப்பு
கட்டக மெய்ப்பாடு காரணங் காலங் கருத்தியல்பே

ஏற்றும் விளைவொ டுவம் மிலக்கண மேய்ந்த தொல்லோர்
போற்றும் புடையுளா யேமொழி சேர்தன்மை யேயுமன்றி
ஆற்றும் பொருடை வென்றா முரையல் லவற்றினுக்கு
மாற்றும் உரையும் வகுக்கும் உரையும் மதித்தறியே

இப்பாடல் இரண்டு அகப்பொருள் பாடல்கட்குக் கூறப்படும் உரைவகைகளை உரைக்கின்றன. அவ்வுரைவகை சட்டகமும், திணையும், கைகோளும், நடையும், சுட்டும், இடனும், கிளவியும் மொழியும், கோளும், உட்பெறு பொருளும், சொற்பொருளும், எச்சமும், இறைச்சியும், பயனும் குறிப்பும், மெய்பாடும், காரணமும், காலமும், கருத்தும், இயல்பும், விளையும், உவமமும், இலக்கணமும், புடையுரையும், மொழிசேர் தன்மையும், பொருளடைவும் என இருபத்தேழும் அகப்பொருளினும் உரையாம். அகப்புறப் பொருளுக்கும், புறப்பொருளுக்கும், புறப்புறப் பொருளுக்கும் ஏற்கும் உரை அறிந்து கொள்க.

முதலாவது சட்டகம் என்பது

மேற்கூறிய இருபத்தேழில் 'சட்டகம்' என்பது ஒன்று. சட்டகம் என்றால் உடம்பு என்பது பொருள். பலவகைத் தாதுக்களால் உயிர்க்கு இடமாக அமைந்த உடம்பு போல பல சொல்லால் பொருட்கு இடனாக இயற்றப்பட்ட பாடலே ஈண்டு சட்டகம் ஆகும். இவ்வகப் பொருள் பாட்டு என்ன சட்டகம் எனின்? இது வெண்பா; இது ஆசிரியப்பா; இது கலிப்பா; இது பரிபாடல் என்று கூறுவதாகும். இதனைத் தொல்காப்பியர் கூறவில்லை.

இரண்டாவது திணை

இவ்வகப் பொருள் எந்நிலம் பற்றி வந்தது? என்று வினாவின், இது குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐந்து நிலத்தில் இன்ன நிலம் பற்றி வந்தது என்று கூறுதல். ஐந்து திணைக்குரிய முதலும், கருவும், தலைமையான

உரிப்பொருளும் கூறுதல் வேண்டும். இதனைத் தொல் காப்பியர் செய்யுள் உறுப்பென ஓதுவர்.

மூன்றாவது கைகோள்

'கைகோள்' என்பது ஒழுக்கம் என்று பொருள்படும். அது களவென்றும் கற்பென்றும் இருவகைப்படும். களவு என்பது ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் திருமணச் சடங்காகிய கரணத்தினைச் செய்வித்துக் கொள்ளாமலேயே கூடியொழுகுவதாகும். கற்பாவது திருமணச் சடங்கை நிகழ்த்திக் கொண்டு அவர் கூடி வாழ்வது. இப்பாட்டு களவைக் கொண்டதோ கற்பைக் கொண்டதோ என்று ஆய்ந்து, இது இவ்வொழுக்கத்தைக் கூறுகின்றது என்று உரைத்தல். தொல்காப்பியர் இதனைச் செய்யுள் உறுப்பென்று கூறுகிறார்.

நான்காவது நடை

நடையாவது ஒழுக்கம் என்று பொருள்படும். மேற் கூறிய களவு கற்பென்னும் ஒழுக்கத்தில் இந்த நடை முறை குறிஞ்சியைப் பற்றியது, பாலையைப் பற்றியது, முல்லையைப் பற்றியது, நெய்தலைப்பற்றியது, மருதத்தைப் பற்றியது எனப் பகுத்துணர்தல்,மேலே கைகோள் என்பது தொகை. நடை என்பது வகையும் விரியுமாகும். தொல்காப்பியர் இந்த நடையை உறுப்பாகக் கூறவில்லை.

மேற்கூறிய நடையில் குறிஞ்சி நடை

தலைவன் தலைவியைக் கண்டு செப்பலும், அவள் அழகைப் புகழ்தலும், அவள் நாணுதலும், அவளைப் புணர்தலும், பிரியக் கருதுதலும், பிரிவின்மை பேசலும், பெருமைப் படுதலும், பெறுதற்கரிதென்றலும், ஊழ்வினையை வலியுறுத்தலும், தெய்வத்தைப் பேணலும், தோழனை நினைத்தலும் பிரிதலும் பின்பு அவ்விடம் அணுகலும், இடத்தொடு புலம்பலும், தலைவியை வினவலும் தலைவியைக் காண்டலும், புலம்பகற்றலும் ஆர்வமாய் நோக்கலும், நாணிக் கண் புதைத்துத் தலைவி இறைஞ்சுதலும், ஆற்றான் மொழிதலும் அஞ்சிய நோக்கமும், உவகையுடன் அவள் முறுவலித்தலும் ஆங்கவன் புணர்தலும் முதலிய பல நடைகள் கூற்பட்டுள்ளன.

இது போலவே ஏனைய திணைகட்கும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவது சுட்டு

ஐந்தாவதாகிய சுட்டு என்பது இடத்தைக் கருதியதாகும். இப்பாட்டு தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றில் இன்ன இடத்தைக் கருதி வந்தது என்று கூறுவது. **இறையனார் களவியல் உரையாசிரியர்** இதனை இடம் என்பர். அவர் கூறுவது: இடம் என்பது அவ்வாறு ஒருவர் கூற ஒருவர் கேட்கும் இடம் என்றறிவது. அவை தன்மை முன்னிலை படர்க்கை என்பன. அவற்றுள் யான் என்பது தன்மை, நீ என்பது முன்னிலை, அவன் என்பது படர்க்கை. அவற்றுள் இன்னது பற்றி வந்ததென்று அறிவது. தொல் காப்பியர் (களன்) என்ற ஒன்றைச் செய்யுள் உறுப்பாகக் கூறியுள்ளார். அதற்கு இளம்பூரணர் முதலிய உரையா சிரியரெல்லாம் வேறு பொருள் கருதிக் கூறுகின்றனர்.

இறையனார் களவியல் களனுக்குப் பதில் இடனைக் கூறுகின்றது.

ஆறாவது இடன்

வீரசோழியம் சுட்டின் வேறாக இடன் என்ற ஒன்றைக் கூறுகிறது. இடனாவது கைகோள் ஆகிய காமஒழுக்கம் நிகழும் அகவிடனும் புறவிடனும் என இரண்டு வகைப்படும். அவற்றுள் அகவிடனாவது, மனையும் வளாகமும் பற்றி வருவது, புறவிடனாவது மலையும் பழனும் சோலையும் கடலும் நெறியும் ஆறும் பற்றி வருவது.

ஏழாவது கிளவி

கிளவி என்றாலும் கூற்று, கூறுதல் என்றாலும் ஒன்றே. அக்கிளவி,

1. நெஞ்சிற்குக் கூறுதலும்,
2. வானை நோக்கிக் கூறுதலும்
3. கேட்டோர்க்குக் கூறுதலும்

என மூன்று பிரிவாக உள்ளன. இக்கூற்று தலைமகன், தலைவி தோழி நற்றாய், தோழி செவிலி பாங்கன் பாணன்

கண்டோர் கட்டுரைப்போர் வேலன் விறலி ஊரவர் சேரி யோர் அயலோர் என்னும் இவரெல்லாம் நிகழ்த்துபவராவர். இதனைத் தொல்காப்பியர் கூற்று வகை என்பர்.

எட்டாவது கேள்வி

மேலே கூறிய கூற்றினைக் கூறும்பொழுது அதனைக் கேட்பவரைக் கேள்வி என்று வீரசோழியம் கூறுகிறது. தொல்காப்பியர் கேட்போர் என்னும் செய்யுள் உறுப்பாகவே கூறுகின்றது. தொல்காப்பியர் பாணன் கூத்தன் விறலி பரத்தை அறிவர் கண்டோர் பார்ப்பார் பாங்கன் தோழி செவிலி என்ற கூறுகின்றார். (செய்யுளியல் - 196) ஆனால் வீரசோழிய உரையாசிரியர் உயர்திணையில் இவர் கேட்டார் என்றும், அஃறிணையில் இது கேட்டதென்றும் இரு வகையாகக் கொள்ள வேண்டும் என்பர்.

ஒன்பதாவது மொழிவகை

இப்பாட்டு எந்தச் சொல்லினாலே செய்யப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்து கூறுதல். உலக வழக்காகிய இயற் சொல்லாலா? செய்யுள் வழக்காகிய திரி சொல்லாலா? இவையிரண்டு அன்றி வடசொல்லாலா? திசைச்சொல்லாலா? என்று தெரிந்து கூறுவது. இதனைத் தொல்காப்பியர் மரபேதானும் நாற்சொல்லியலான் என்பர்.

பத்தாவது பொருள்கோள்

தொல்காப்பியர் செய்யுள் உறுப்பு முப்பத்து நான்கில் 'பொருள்வகை' என்று கூறி, அது இன்னதென்பதனைப் புலப்படுத்த சிறப்பு நூற்பாவும் கூறியுள்ளார். அந்நூற்பா,

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை யிழுக்குநெறி யின்றி
இதுவா கித்திணைக் குரிப்பொரு ளெனாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை யென்ப

என்பதாகும். இதற்கு இளம்பூரணர் "இன்பமும் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமும் என்று சொல்லப்பட்டவை வழுவுநெறியின்றி, இத்திணைக்குரிய பொருள் இப்பொருள் என்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும்

பொருளே பொருள்வகையாம்" என்பர். இவர் நூற்பாச் செல்லும் இயல்பில் உரைகூறிவிட்டு எந்தவிதமான விளக்கமும் எடுத்துக் காட்டும் கூறவில்லை.

பேராசிரியர் "இன்பமும் துன்பமும் புணர்தலும் பிரிதலும் ஒழுக்கமுமெனப்பட்ட இவை இழுக்காதவாற்றான் இத்திணைக்கு இதுபொருளென்று ஆசிரியன் ஓதிய உரிய பொருளன்றி, அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலவனால் செய்யப்படுவது பொருட்கூறெனப்படும்" என்று உரை கூறி, 'வகை' என்றதனால் பலவன்றான் வகைத்ததே பொருள் என்று கொள்க; அஃதின்றிச் செய்யுள் செய்தல் ஆகா தென்பது இதன் கருத்து. அவை,

கைக வியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகத் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அத்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் செறனசைஇச் சென்றவென் னெஞ்சே

(அகநானூறு-9)

என்றாற் போலச் செய்யுள் எய்தவன் தானே வகுப்பன வெல்லாம் கோடல்; இது பாலைப்பாட்டினுள் வந்ததாயினும் முல்லை முதலாயவற்றுக்கும் பொதுவாம் என்பது. பொதுமை என்பது எல்லாவுரிப் பொருட்கும் ஏற்பப் பலவேறு வகையாற் செய்தல்" என்று உரையும் விளக்கமும் எழுதி யுள்ளனர்.

நச்சினார்க்கினியர் பேராசிரியர் கருத்தையே பின்பற்றிக் கூறினாலும், இதனைப் **புறத்திற்குங்** கொள்க என்பர்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் 'பொருள்வகை' என்பது திணைக்குரிய உரியபொருளன்று. புலவன் தானாகக் கற்பனை செய்து கூறுகின்ற பொருள்நெறியாகும் இது. இப்பொருள்வகை எல்லாவற்றிற்கும் பொதுவாகும். உரிப்பொருள் போல் திணைக்குரிமை பூண்டதன்று என்பர்.

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் நூற்பாவின் வழியே சென்று சொற்படுபொருளைக் கூறி விட்டு விளக்கம்

தராமல் சென்றுவிட்டார். பேராசிரியரும் நச்சினார்க் கினியரும் பொருள்வகை என்பது திணைக்குரிய உரிப் பொருளன்று; புலவன் அகப்பொருள் புறப்பொருள்களை உணர்த்தும் திறன் என்பர்.

இன்பமும் இடும்பையும் என்ற தொல்காப்பிய நூற்பாவிற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மேற் கண்டவாறு உரைகூறுவது ஒருவகையில் பொருந்தும். தொல்காப்பியர் செய்யுள் உறுப்பாகக் கூறும் திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப் பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை என்னும் பன்னிரண்டில் முன்னம் துறை என்னும் இரண்டையும் ஒழித்து எஞ்சிய பத்தினையும் இறையனார் களவியல்,

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோளென் றாங்கப் பத்தே
அகனைந் திணையும் உரைத்த லாறே

என்று கூறுகின்றது. இப்பத்துள் தொல்காப்பியர் கூறிய பொருள், அல்லது பொருள்வகை என்பதைக் களவியல் கோள் என்று கூறுகின்றது. களவியலுரையாசிரியர், "கோள் என்பது ஒரு பாட்டினத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை. அஃது ஐந்து வகைப்படும். விற்பூட்டு விதலை யாப்பு பாசி நீக்கு கொண்டு கூட்டு ஒருசிறைநிலை என்றவற்றுள், இன்னதோர் பொருள் கொண்டு நின்றது இப்பாட்டு என அறிவது" என்பர்.

இது நிற்க வீரசோழியம் அகப்பாடல்கட்கு உரை கூறு மாற்றை இருபத்தேழாகக் கூறி, அவற்றுள் பத்தாவதாகக் 'கோள்' என்பதையும், இருபத்தேழாவதாகப் பொருள் அடைவு என்பதையும் கூறுகின்றது. அவற்றுள் கோள் என்பது பொருள்கோளாகும். இப்பொருள்கோளும் ஈற்றில் கூறிய பொருள்அடைவும் வெவ்வேறு என்பது வீரசோழிய நூலார் கருத்தாகும். அவ்விரண்டில் முதலிலுள்ள கோள் என்னும் பொருள்கோளானது ஒரு அகப்பொருள் பாட்டில் கொழுங்கொடி வள்ளி போல, முதலிற் பொருளிற் சிறந்தும், செழுங்குலை வாழையைப் போல, ஈற்றிலே பொருள்

சிறந்திருந்தும், இன்தீங் கரும்பு போல, இடையிலே பொருள் சிறந்தும், வன்தாள் பலாப் போல, முதலும் இடையும் பொருள் சிறந்தும், நற்பூ அசோகு போல, நடுவண் பொருள் சிறந்தும், விற்பூட்டுப் போல, மேலும் கீழும் பொருள் சிறந்தும் இரும்புனலாறு போல பாட்டின் எல்லா இடமும் பொருள் சிறந்தும் விளங்குவது என்பர்.

பாட்டிலே பொருள் சிறந்திருக்குமிடத்தைக் கண்டு பிடித்து அதனை வகைசெய்துணர்தலே இப்பொருள் கோளாகும் என்றும் ஈற்றிலே சொல்லியுள்ள பொருள் அடைவு வேறு என்றும் இவ்வுரையாசிரியர் கருதுகிறார்.

பதினொன்றாவது உட்பெறு பொருள்

ஒரு பொருளைச் சொல்லும்பொழுது மற்றொரு பொருளும் வந்து நிற்பது உட்பெறு பொருளாம் என்பர்.

சொற்பொருள்

சொற்பொருள் என்பது தனிச்சொல் பொருள் உணர்த்தல் தொடர்ச் சொற் பொருளுணர்த்தல் என இரு வகையாம். தனிச்சொல் எல்லாம் தம்பொருளை உணர்த்து வதும் ஆகுபெயர்ப் பொருளை உணர்த்துவதும் என இரண்டாம் புணர்மொழி முன்மொழியும் பின்மொழியும் அனைத்து மொழியும் அன்மொழியும் என நான்கு வகையாற் பொருள் உணர்த்தும்.

எச்சமாவது

சொல்லெச்சம் குறிப்பெச்சம் என இரண்டு வகை என்பர் சொல்காப்பியர் வீரசோழிய உரையாசிரியர் பெயரெச்சம் வினையெச்சம் என்பர்.

பதினான்காவது இறைச்சி

இறைச்சிப் பொருள் என்பது கருப்பொரு ளாகும். அகப்பொருட்பாட்டில் வந்துள்ள பொருள்களைப் பிரித்தால் முதற்பொருளென்றும் கருப்பொருளென்றும் உரிப் பொருளென்றும் மூன்று வகையாக இருக்கும். அவற்றுள் முதற்பொருளைத் திணை என்பதிற் கூறினார். உரிப்பொருளை

நடை என்பதிற் கூறினார். கருப்பொருளை இறைச்சிப் பொருள் என்று கூறுகின்றார். இறைச்சிப்பொருள்,

1. அங்க இயற்பொருள்
2. திணைநிலைப் பொருள்
3. வன்புலப் பொதுப்பொருள்
4. மென்புலப் பொதுப்பொருள்
5. பெருமைப் பொதுப்பொருள்
6. விருந்துப் பொதுப்பொருள்

என ஆறுவகையாகப் பிரிக்கப்பட்டு வழங்கும் என்பர்.

அங்கியற் பொருள்

அங்கியற் பொருளாவது அந்நிலத்தில் ஓர் அங்கமாகக் கருதப்படும் பொருள் என்க. அவை குறிஞ்சி நிலத்திற்குச் சந்தனமும் பொன்னும் வெள்ளியும் முதலியன. நெய்தல் நிலத்திற்கு உப்பும் இப்பியும் நந்தும் அலவனும் வலையும் முதலியன. பாலை நிலத்திற்குச் சீழ்கு நாய் குருவி சிள்வீடு அறுபுள்ளி கோம்பி முதலாயின. மருதநிலத்திற்கு கரும்பு, வாழை , தெங்கு முதலாயுள்ளன. முல்லை நிலத்திற்கு பூவை, பூனை, தும்பி, காவளை கார் போகி முதலாயுள்ளன என்பர்.

திணைநிலைப் பொருளாவன

குறிஞ்சிக்கு மூங்கில் மஞ்ஞை வேங்கை செங்காந்தள் இலவம் தேன், தினை, யானை இவற்றுடன் முருகனும் பாலைக்கு அகில், வேடர் கலை செந்நாய் மருந்து குறும்பர் என்னும் இவற்றுடன் கன்னிகையாகிய தெய்வமும், முல்லைக்கு இடையர் முதிரை முல்லை கொன்றை ஆனிரை, குருந்தம் தோன்றி புன்கு என்னும் இவற்றுடன் திருமாலும் மருதத்திற்குச் செந்நெல், எருமை, நீர்நாய், மகன்றில், கடையர் கடைசியர், செங்கழுநீர் என்னும் இவற்றுடன் இந்திரனாகிய தெய்வமும் நெய்தலுக்கு மீன் திமிங்கிலம், புன்னை கண்டல், அன்னம், சுறா, உப்பு முதலை நுளையர், கைதை இவற்

துடன் வருணனாகிய தெய்வமும் திணை நிலைக் கருப் பொருளாம் என்பர்.

வன்புலப் பொதுப்பொருள்

வன்புலமாவது முல்லை குறிஞ்சி பாலையாகும். இவற்றின் பொதுப்பொருள் ஆர், புன்கு,அரசு கிளிஞ்சில் காளா பருத்தி கரும்பு முதலாயின.

மென்புலப் பொதுப்பொருள்

மென்புலம் என்பன மருதமும் நெய்தலும் இவற்றின் பொதுப்பொருள் கீரை வழுதளை, கிடை சணப்பு வேரி தணைக்கு மருதம் முதலியன.

பெருமை பொதுப்பொருள்

தாளி பூவல் நாவல் கழஞ்சு வேலியு மானும் பதடியும் கோளாயும் குரையும் சுரையும் அரும்பும் வண்டும் துவரையும் அத்தியும் ஐம்பெரு முத்திரையும் என்னும் இவை பெருமை பொதுப்பொருளாம்.

சிறுமை பொதுப்பொருள்

ஒரு திணைக்குரியன ஒரு திணைச் சேரின் விரிநூற் புலவர் விருந்தென மொழிவர்.

பதினாறாவது குறிப்பு

அகப்பாடல்களில் வந்துள்ள குறிப்பு என்பது, ஆடவராயினும் மகளிராயினும் வேட்கை உள்ளத்தே நிற்ப, அதை முதலாகக் கொண்டு, தாம் நிகழ்த்தும் செய்தியாகும், அச்செய்தி பலவாகும்.

பதினேழாவது மெய்ப்பாடு

அகப்பாடலில் வந்துள்ள மெய்ப்பாடு எது என்று ஆராய்ந்து கூறுதல் வேண்டும். மெய்ப்பாடு என்பது உள்ளத்தில் உள்ள குறிப்பு மெய்க்கண்பட்டு விளங்கிய தோற்றமுடையது மெய்ப்பாடு என்பர். மெய் என்றால் பொருள் நகை முதலான பொருள் தோன்றுவது மெய்ப் பாடாகும் என்பர் பேராசிரியர் (மெய்ப்பாடு - பொருட்பாடு)

மன்மதன் சுப்பிரயோகம் விப்பிரயோகம் சோகம், மோகம் மரணம் என்றும் ஐந்து அம்பினை ஒருவரிடம் எய்திக் காமத்தை உண்டாக்குகின்றான். அவற்றுள் சுப்பிரயோகம் என்பது சொல் நினைப்பு, விப்பிரயோகம் என்பது வெய் துயிர்ப்புறுதல், சோகம் சோறுண்ணாமை வெப்பு, மோகம் மயக்கம் மொழிபல பிதற்றல், மரணம் அணங்கல் மயங்கல் அவற்றுள் முதற்கணையொழிய பிற்கணை நான்கும் வீசிய பொழுது மெய்ப்படப்பட்டு வருந்தி விளம்பலே மெய்ப்பாடு. அது 1. அக மெய்ப்பாடு, 2. புற மெய்ப்பாடு என இரு வகையாம்.அவற்றுள் அகமெய்ப்பாடு 32.

1. விளர்ப்பு, 2. பசப்பு, 3. மெலிவு, 4. விதிர்ப்பு, 5. துளக்கம், 6. துயர்தல், 7. தும்மல், 8. சோர்தல், 9. வேர்த்தல், 10. வெருவுதல், 11. விம்முதல், 12. விரும்புதல், 13. ஒப்பிலாமை, 14. உருகுதல், 15. மயங்குதல், 16. மூரி, 17. உயிர்ப்பு, 18. மூர்ச்சினை, 19. முறுவல், 20. சாரிகை கடத்தல், 21. கழிகண்ணோட்டம், 22. இருந்துழியிராமை, 23.இராகமிகழ்தல் 24. வருந்திக் காட்டுதல், 25. வாய்நனியுறுத்தல் 26. சிந்தனை கூர்தல், 27. சேர்துயிலின்மை, 28. கண்டது மறுத்தல், 29. காட்சி விரும்பல், 30. உண்டி விரும்பாமை, 31. உரைத்தது மறுத்தல், 32. கண்ணீர் வழிதல், 33. கனவு ஒளி காண்டல்.

புறமெய்ப்பாடாவது அக்காமம் என்பது கருத்து வேறுபட்டு மற்றும் நகை முதலிய ஏழாகித் தன்னையும் கூட்ட எட்டாய் வருவது. அவை,

1. சிருங்காரம் இன்மை வனப்பு வளமை கல்வி
2. நகை மயக்கம் பெயர்ப்பு இகழ்வு நோக்கம்
3. வியப்பு தறுகண்மை புலமை பொருள் பண்பு
4. அச்சம் மாற்றலர் விலங்கல் மற்றவர் சேருதல்
5. வீரம் பகை செரு இகல் முனிவு
6. உட்கோள் ஐவகைக்குரவர் தேவர் மன்னர்
7. இரக்கம் வருத்தம் இகழ்வு வலியின்மை பெருமை
8. இழிப்பு நாற்றம் சுவை தோற்றம் ஊறு

பதினெட்டாவது காரணம்: இப்பாட்டு தோன்று வதற்கு இது காரணம் எனக் காரணம் கூறுவது.

காலம் என்பது யாண்டு முதலான இதற்கு இக்காலம் பொருந்துமெனக் கூறுவது. அன்றியும் இறப்பு நிகழ்வு எதிர்வு எனும் காலம் உரைத்தலும் ஒன்று.

கருத்துரை

1 அறிதல், 2. அறியாமை, 3. ஐயுறல் என மூன்று வகையில் வரும். இவை, 1. அறிந்தறியாமை, 2. அறிந்தவை ஐயுறல், 3. அறியாதது அறிதல், 4. ஐயுற்றில்லாமை எனவும் வரும்.

இயல்புரை

இயல்புரை என்பது, 'இன்ன இடத்தில் இன்னது இவ்வாறு இன்னாது, என்பதைக் கூறுவது.

விளைவு

'விளைவு' என்பது முன்னே கூறிய பயனைப் போலவே தோன்றி, தாம் விரும்பியதை விளைப்பது விளைவெனப்படும். அது 1. இடையூறிலாமை, 2. இன்பம், புணர்ச்சி, 3. நெடு நிலைப்படாமை, 4. கற்பு, 5. காவல், 6. கடன், 7. நாணம், 8. இற் செறிந்திருக்கை, 9. இருஞ்சுரம் போதல், 10. பாசறை முடித்தல், 11. பார்த்தலின் விழவு, முதலியனவாக வரும்.

உவமை

அகப்பொருள் பாடலில் வரும் உவமை புகழும், பழியும், நன்மையும் கருதி ஒப்புமை கூறப்பட்டு வரும்.

அவ்வுவமை கண், செவி, மூக்கு, நா, மெய், மனம் எனச் சொல்லிய ஆறினும் வரும். இவ்வாறுடன் புகழ் பழி நன்மை என்ற மூன்றையும் உறழப் பதினெட்டாம். அவற்றுள், கண்ணின் ஒப்பு வடிவு, வண்ணம் பற்றி வருவனவாகும். செவி எழுத்தின் ஒலியாலும் எழுத்தின் ஒலியாலும் வரும். மூக்கு நறுநாற்றம் தீநாற்றம் பற்றி வரும். நா அறுவகைச் சுவையொப்புமை பற்றி வரும். உடம்பின் ஒப்பு எண்வகை மாறு பற்றி வரும். மனம் வினை, பயன், குலன், குணம்,

அளவு, நிறம், எண் என்னும் ஏழினைப் பொறியுதவி கொண்டு நாடலின் வரும்.

வினை, பயன், குலன், குணன், அளவு, நிறம், எண் என மொழிந்த ஏழுடன் முதலும் சினையும் ஏனைய பண்பொடு பத்தினையும் கொண்டு ஐவகையாக உவமையைக் கூறினர் (குறிப்பு: இங்கே ஐவகை என்பது சிறப்பு, நலன், காதல், வலி, கிழக்கிடு பொருள் என்னும் ஐவகையாகுமா?) இல்பொருட் கேள்வி துணிவை முறையறிந்து கூறுக. உவமை: 1. பாட்டில் கூறப்பட்ட பொருளோடு கூட்டி நோக்கிப் பொருள் உணர்த்துவதாயும் 2. புனைந்துரையாய் வந்து அழகு செய்தும், 3. அல்லது இருவகை இயல்பும் ஏற்றும் வரும்.

ஒப்பிக்கப்படும் உவமமும் பொருளும் இரண்டாகாமல் சொல்லுவான் காதலால் ஒன்றாகியும் (உருவகமாகியும்) வரும். ஒருகுணம் ஒப்பிக்கப்படாமல் இரண்டு மூன்று குணங்கள் ஒப்பிக்கப்படும். முடிக்கப்படுவதும் முடிவதும் ஆகிய இரண்டில் ஒன்று மிகுகுணம் அடுக்கிவரின் சொல்வது கேட்போர்க்குத் தக்கன வாயிருக்கவேண்டும் என்னும் விதிப்படி உணர்தல் வேண்டுவதை கண்ணினாலே காட்டுவது போல் காட்டுவனாயின் அது அறிவுடைமையாம்.

இலக்கணம்: இலக்கணம் என்பது சட்டகம் முதலியன எல்லாவற்றிற்கும் இலக்கணம் கூறுவது.

புடையுரை: பாட்டினில் உணர்த்தப்படும் பொருளன்றி இன்றியமையாத புறப்பொருள்களையும் கொண்டுவந்து கூறுதல்.

மொழிசேர் தன்மை: சொல்லின் இயல்பு உணர்தல்.

பொருள் அடை: பொருள் அடைவு என்பது பாட்டிற்கும் பொருள் கூறும் முறை. அது அளைமறி, மொழிமாற்று, கொண்டுகூட்டு, நிரனிரை, சுண்ணங்கோடல்.

24

பாலையும் வாகையும்

தொல்காப்பியனார் வகுத்துக்கொண்ட அகனைந் திணையுள் நடுவுநிலைத்திணை என்று சிறப்பிக்கப்பட்ட பாலைத்திணையும் ஒன்றாகும். இதன் சிறப்பைக் கருதி நடுநாயகத்திணை என்கின்ற பொருளில் நடுவுநிலைத்திணை என்று பெயர் அமைக்கப்பட்டது போலும். இதற்குப் புறமாய்க் கருதப்பட்ட புறத்திணை வாகைத் திணையாகும்.

தொல்காப்பியனார் இப்பாலைத்திணைக்கு நிலம் பகுத்தோதவில்லை. பிற்காலத்தே மதுரைக்காஞ்சியில் "பாலை சான்ற சுரம் சேர்ந்த தொருசார்"[1] என்று வருதலைக் கொண்டு நச்சினார்க்கினியர் "பாலை சுரனும் அதனைச் சார்ந்த இடத்தையும் இடமாகப் பெற்றுவரும்" என்று கூறுகின்றார்.

தொல்காப்பியனார் இருவகை வேனிலையும் பின் பனிக்காலத்தையும் பாலைத் திணைக்கு உரிமை செய்துள்ளார். ஓர்யாண்டில் மூன்று பெரும் பொழுதை அஃதாவது ஆறு திங்களைப் பாலை பெற்றுள்ளது. மாசியில் தொடங்கி இடைவிடாமல் மாசியும் பங்குனியும் சித்திரையும் வைகாசியும் ஆனியும் ஆடியும் ஆகிய ஆறு திங்கள் பாலைக்குரியன.

ஒரு நாளின் கூறாகிய சிறுபொழுதுள் நண்பகல் எல்லும் சிறுபொழுது மட்டும் பாலைக்குரியது.

முன்காலத்தே தமிழ்நாட்டு ஆடவரெல்லாம் தம் நாட்டினை விட்டு வேற்றுநாடு புக்குத் தொழில் செய்து பொருளீட்டும் ஆள்வினை உடையவராய் இருந்தனர்.

அவர் மாசித்திங்களில் தம் பதியை விட்டுப் பிரிந்து வெளிநாடு புக்கு ஆறு திங்கள்வரை வினைசெய்து பொருளீட்டினராய் கார்காலத் தொடக்கமாகிய ஆவணியில் தம் பதிக்கு வருவார். அவர் ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி தை வரை தம் வீட்டில் மனைவியுட

னிருந்து தம் மனையகத்திற்கு வேண்டுவனவற்றைச் செய் திருப்பர்.

ஓர் யாண்டாவது தமிழருக்கு மேற்கூறியவாறு வீட்டில் தங்கியிருந்து மனையறம் நடாத்துவதற்கு ஆறு திங்களும், வேற்றுநாட்டில் பிரிந்திருந்து தொழில் செய்வதற்கு ஆறு திங்களுமாகப் பயன்படும் முறையை நோக்கி விக்கிராமாதித்தன் கதை எழுதப்பட்டது போலும், அவன் தன்நாட்டில் ஆறு திங்களும், வேற்றுநாட்டில் ஆறு திங்களும் வாழ்ந்தான் என்று அக்கதையில் எழுதப் பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் வழியில் வந்த மாங்காட்டு மறையவனை மதுரை செல்வதற்கு நல்லவழியைக் கூறு எனக் கேட்ட கோவலனுக்கு அம்மறையவன்

கோந்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய லிழந்த வியனிலம் போல
வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தாலைந் திருகத் தம்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்
காலை எய்தினர் காரிகை தன்னுடன்

என்றும் கூறியுள்ள பாடற்பகுதியில் வேனிற்காலத்தொடு வெங்கதிர் கூடித் தன்னலம் மாறுபட்ட தன்மையினால், முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல் பிழந்து நடுங்குதுயர் செய்யும் பாலை என்ற வடிவத்தைக் கொள்ளும் காலமாக உள்ளது என்று இளங்கோவடிகள் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலையாதலை அழகாகக் கூறியுள்ளார். இவ்விடம் அறிவுநிலை, கலைநிலை என்னும் இரண்டும் கலந்து காட்சியளிக்கிறது.

பாலையை நடுவுநிலைத் திணை என்றதற்கு நச்சினார்க்கினியார் கூறும் காரணம்

பாலை என்பது அகனைந்திணையில் ஒன்றாகும். அகனைந்திணைக்கு நடுவண் ஐந்திணை என்று பெயர்

டைத்தாடு. அது கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் நடுவண் நிற்பதால் வழங்கப்பட்ட பெயராகும். ஆனால், பாலையை 'நடுவண் ஐந்திணையில் நடுவணது (அகத்திணை - 2) என்றும், நடுவுநிலைத்திணையே (அகத்திணை - 11) என்றும் தொல்காப்பியனார் வழங்குகின்றார். இதற்குரிய காரணத்தை இளம்பூரணர் விளக்கவில்லை. ஆனால், நச்சினார்க்கினியர், 'அப்பாலை ஏனைய போல ஒருபாற்படாது நால்வகை நிலத்திற்கும் உரியனவாகப் புலனெறி வழக்கம் செய்யப்பட்டு வருதல் பற்றிப் பாலைக்கு நடுவணது என்னும் பெயர் ஆட்சியும் குளிறும் காரணமாகப் பெற்ற பெயர் பின்னர் 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு என' ஆள்ப.

(1) புணர்தல் இருத்தல் இரங்கல் ஊடல் என்பவற்றிற்கு இடையே பிரிவு நிகழ்தலானும் (2) நால்வகை நிலத்திற்கு மிடையிடையே "முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து, நல்லியல்பிழந்து நடுங்கு துயருறுத்துப், பாலை என்பதோர் படிவங் கொள்ளும்" என முதற்பொருள் பற்றிப் பாலை நிகழ்தலானும் (3) நடுவண தாகிய நண்பகற்காலம் தனக்குக் காலமாகலானும் (4) புணர்தற்கும் பிரிதற்கும் இடையே பிரிவு வைத்தலானும் (5) உலகியற் பொருளான அறம் பொருள் இன்பங்களுள் நடுவணதாகிய பொருட்குத் தான் காரணமாகலானும் நடுவணது எனக் குணம் காரண மாயிற்று" என்பர்.

ஐந்து திணையுள் நடுநாயகம் பாலை

ஐந்து திணையை வழங்குமிடத்து முல்லை முதலியன வற்றை முதலில் வைத்துப் பல முறைப்படிச் சொன்னாலும் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற முறையில் வழங்குவதே தகுதியாக இருக்கும். என்னை எனில்? தலைவன் தலைவி இருவரும் கூடுவது குறிஞ்சியாகும். அடுத்துத் தலைவியைத் தலைவன் பிரிதல் பாலையாகும். தலைவன் பிரிந்த இடத்துத் தலைவி ஆற்றியிருப்பது முல்லையாகும். ஆற்றாமல் அவள் இரங்கின் நெய்தலாம். தலைமகன் பரத்தையிற் பிரிந்தபொழுது தலைவி ஊடுவாள் அது மருதமாம். இவற்றிள் குறிஞ்சி இருவர் செயல். பாலை தலைவன் செயல், முல்லையும் நெய்தலும் மருதமும்

தலைவி செயல். எனவே இருவர் செயலாகிய குறிஞ்சிக்கும் தலைவி செயலாகிய முல்லை நெய்தல் ஊடல்கட்கும் இடையே பாலை நிற்றலால் இதனை நடுநாயகம் என்று கூறுவது நன்கு பொருந்தும்.

தொல்காப்பியனார் ஐந்திணைக் காமத்தில் நிகழ்வன வற்றை 'நோயும் இன்பமும் இருவகை நிலையில்' என்று இரண்டாகப் பகுத்துள்ளார்.

ஐந்திணையுள் தலைவனும் தலைவியும் கூடி வாழ்வது இன்பமாகும். தலைவியைத் தலைவன் பிரிவது துன்பமாகும். பிரிந்த தலைவி ஆற்றியிருப்பது துன்பமாகும். ஆற்றியிராமல் இரங்குவது பெருந்துன்பமாகும். தலைவனுடைய பரத்தைமை ஒழுக்கம் காரணமாகத் தலைவி ஊடிக் கொள் வதும் துன்பந்தான். உலக வாழ்வில் இன்பம் சிறிது; துன்பம் பெரிது என்பதை மேற்கூறியவை எடுத்துக்காட்டுகின்றன.

எனவே ஐந்திணைக் காமத்தில் இன்பமும் உண்டு; துன்பமும் உண்டு. ஆனால் துன்பமே அதிகம்.

துன்ப இலக்கியத்திலே சுவை மிகுதி

அகனைந்திணை இலக்கியப் படைப்பில் அன்புடைய இருவர் கூடி வாழும் இன்ப நிலையைப் பற்றிப் பேசினால் அது கற்பவர்க்கு இனிமையைத் தருவதாயிருக்கும். ஆனால், அன்புடைய இருவரில் தலைமகள் பிரிதலையும், அப்பொழுது தலைவி தன் துன்பங்களையெல்லாம் அடக்கிக் கொண்டு ஆற்றியிருத்தலையும் அவள் ஆற்ற முடியாத நிலையை உடையவளாய் இரங்குதலையும், ஊடி வருந்துதலையும் வைத்து இலக்கியம் எழுதப்பட்டால், அவ்விலக்கியம் மிகமிகச் சுவையுடையதாயிருத்தலை உணர்கிறோம். இதற்குக் காரணமென்னவெனில், இருவரும் பிரிந்துறை நிலையில் ஒருவர் மேல் ஒருவர்க்கு அன்பு மிகுந்து தோன்றுவதேயாகும். ஒருவரை ஒருவர் மிக விரும்பியிருக்கும் உள்ளநிலை அன்பு மிகுந்து தோன்றுவதேயாகும். ஒருவரை ஒருவர் மிக விரும்பியிருக்கும் உள்ளநிலை பாலைத் திணையில் நன்கு தோன்றும். அகனைந்திணையில் பாலை, முல்லை, நெய்தல்,

மருதம் என்பன துன்பம் நிலையினவாயினும் பாலைத் திணையைப் பற்றிய இலக்கணங்களும் இலக்கியங்களுமே மிகுதியாக உள்ளன. தொல்காப்பியர் அகத்திணை ஏழிற்கும் பொதுவான இலக்கணங்களை அகத்திணை இயலில் ஐம்பத் தெட்டு நூற்பாக்களால் கூறியுள்ளார். அவற்றுள் பாலைக்கு மட்டும் இருபத்துமூன்று நூற்பாக்களால் இலக்கணம் கூறப்படுகின்றது. சங்க இலக்கியம் என்று கூறப்படும் எட்டுத்தொகை பத்துப்பாட்டுள் 2381 பாடல்கள் உள்ளன. இவற்றில் முக்காற்பாங்கு (1862) அகத்திணைப் பாடல் களாகவே உள்ளன. அவ்வகத்திணைப் பாடல்களுக்குள்ளும் பாதிக்கு மேல் பாலைத்திணைப் பாடல்களே உள்ளன. பாலைத்திணை ஓர் யாண்டில் பாதியான காலத்தைத் தனக்குரியதாக எடுத்துக்கொண்டாற்போலவே இலக்கியங் களிலும் மிகுதியான பங்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. பாலைக் கௌதமனார் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் புலவரெல்லாம் பாலைத் திணையை அடையாகப் பெற்று விளங்குகின்றனர்.

ஆடவர் வினை செய்யப் பிரிவது பாலை

திருவள்ளுவர் தான் சொல்லக் கருதிய பொருளில் மற்றொரு பொருளும் தோன்றும்படிக் கூறுவார். அவர் ஆள்வினையுடைமை என்னும் அதிகாரத்தே

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்

என்றொரு குறளைக் கூறியுள்ளார். பரிமேலழகர் இக்குறட்கு " தனக்கு இன்பத்தை விரும்பானாகி வினை முடித்தலையே விரும்புபவன் தன் உறவினராகிய பாரத்திற்கு உண்டாகும் துன்பத்தினை நீக்கி, அதனைத் தாங்கும் தூணாம்" என்று உரை எழுதிவிட்டு, இன்பமாகிய காரியத்தை விரும்பானாகி வினை முடித்தலாகிய காரணத்தையே விரும்புபவன், சுற்றத் தார் நட்டாரது வறுமையும் தீர்த்து அவர்க்குஏமம் செய்யும் ஆற்றலை உடையனாம் எனவே தன்னைக் கூற வேண்டாவாயிற்று.

இன்பமாகிய காரியத்தை விழைந்து, வினை முடித்தலாகிய காரணத்தை விரும்புபவன் எல்லாப் பயனும் எய்தும் என்றதனால், வினைமுடித்தலாகிய காரணத்தை விரும்பாமல் இன்பமாகிய காரியத்தை மட்டும் விரும்புபவன் யாதும் எய்தான் என்பதும் பெற்றாம் என்று இரண்டு கருத்தினை எழுதிக் காட்டுகிறார்.

எனவே திருவள்ளுவர் இன்பமாக இருக்கமட்டும் விரும்பி, ஆனால் வருத்தித் தொழில் செய்தலை விரும்பாத மக்கள் ஒருவகையினரென்றும், எப்பொழுதும் வருந்தித் தொழில் செய்தலையே விரும்பித் தம் இன்பத்தைக் கருதாத மக்கள் மற்றொரு வகையினரென்றும் இரண்டு வகையின ராகப் பிரித்துக் கொள்ளுகின்றனர். இவருள் இரண்டாமவரே பிறர்க்குப் பயன்பட வாழக் கருதுபவராவார். வினையே ஆடவர்க்கு உயிர் என்றபடி ஆக்கமான வினைகளை வெளி யுலகிற் சென்று செய்தலை விரும்பிய ஆடவர் தம் அன்புடைக் காதலியை இல்லிருத்திப் பிரிவர். அப்பிரிவு பாலைக்கு உரிப்பொருளாயிற்று.

மற்று, தமர் வரைவு உடன்படாது காரணத்தால் தலைவன் தலைவியை உடன் அழைத்துக்கொண்டு பிரிவன். இப்பிரிவையும் பாலையும் உரிப்பொருளென்றே தொல் காப்பியர் ஓதுகின்றார்.

களவொழுக்கத்தில் ஒழுகிய தலைமகன் தலைவியை மணந்து கொள்ள முயன்றான். தமர் உடன்படவில்லை. அதனால் அவன் தலைவியை உடன்கொண்டு பிரிய வேண்டியதாயிற்று. இது, இல்வாழ்விற்குச் சிறந்த துணையான இல்லாளைத் தருதற்கேதுவான பிரிவாயிற்று. தலைமகனுடைய பிரிவுக்கூற்றை எடுத்தோதுகின்ற "ஒன்றாத் தமரினும் என்னும் நூற்பா தலைமகளை உடன்கொண்டு தமர்வயிற் பிரிதலையே முதலாக வைத்து ஓதுகிறது. அடுத்து பொருள் ஈட்டவும் அறப்புறம் காத்தற்காகவும் தூது உரைத்ததற்காகவும் வேந்தர்க்கு உற்றுழி உதவு வதற்காகவும் பகைதணி வினைக்காகவும் தலைவன் பிரிந்து செல்வான் போன்ற செய்திகள் அந்நூற்பாவில் அடுத்துக் கூறப்படுகின்றன. எனவே,

நாளும் நாளும் ஆள்வினை மழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையாற் புகழென

என்பதைக் கருதியும்,

கேள்கே டூன்றவும் கிளைஞர் ஆரவும்
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்
ஆள்வினைக் கெதிரியே ஊக்கமொடு புகல்சிறந்து

என்றவாறும் ஆள்வினை கெடாமல் ஆள்வினை சிறக்கக் கருதி வினையினையே தமக்கு உயிராகக்கருதும் ஆடவர் தலைவியை இல்லிருக்கப் பணித்துப் பிரிந்து வேற்றுநாடு புகுந்து பயன்தரும் பல்வகை வினைகளை நன்கு முடித்து வந்து தம் வாழ்க்கைத்துணைவி, புதல்வர், கேளிர் முதலானவர்க்கு உதவுபவராக இருந்து வாழ்வதற்கு ஏதுவாயிருப்பது பாலைத்திணை என்பதைக் கருதும் பொழுது இதன் சிறப்பு நமக்கு நன்குபுலனாகின்றது.

வாகை

எனவே, அகனைந்திணையிற் சிறந்தது பாலைத்திணை என்பதையும் அது உலகியல் வாழ்வதற்கு முதலான வினைக் கருவை உடையதென்பதையும் மேலே ஆராய்ந்து கண்டோம்.

அன்புடைய ஒருவனும், ஒருத்தியும் கூடி வாழத் தொடங்கினர்; அவர்தம் குடும்பத்தை நன்கு நடத்தவும், உற்றார் உறவினர்க்கு உதவவும் அறம் செய்யவும், புகழ்பட வாழவும் எண்ணினர். இவற்றிற்கெல்லாம் பொருள் வேண்டுமல்லவா? தலைவியை இல்லிருந்து அங்கு செய்ய வேண்டிய செயல்களைச் செய்து கொண்டிருக்குமாறு கூறிவிட்டுத் தலைமகன் பொருளீட்டும் வினையை மேற்கொண்டு பிரிவன்.

ஆறனும் ஈகையும் அன்பும் கிளையும்
புகழும் இன்பம் தருதலில் புறம்பெயர்ந்து
தருவது துணிந்தமை பெரிதே
விரிபூங் கோதை விளங்கிழை பொருளே

என்னும் பாட்டு பொருள்மேற் பிரியக் கருதிய தலைமகன் கூற்றாகும். தலைமகன் பொருள் வருவாயிற் சிறந்தவனா

யிருப்பினும் உயர்ந்த நூல்களைக் கற்பது கருதியும் அறம் புறத்தைக் காப்பது நினைந்தும், நாட்டிற்குப் பகைவரால் ஏற்பட்ட ஏதத்தை நீக்கிப் பாதுகாக்கக் கருதியும் தூது போதலைத் துணிந்தும் அரசன் ஒருவனுக்கு உற்றுழி உதவக் கருதியும் இவை போன்ற வெவ்வேறு வினையாக்கங் கருதியும் தலைமகன் தலைவியைப் பிரிவன். இது பாலை.

பிரிந்த தலைமகன், தான் செல்லும் வழியின்னாமை முதலானவற்றிற்கெல்லாம் சிறிதும் அஞ்சாதவனாய் புறத்தே சென்று வினையிலே கருத்தை வைத்தவனாய் மெய்வருத்தம் பாராமலும் பசியைக் கருதாமலும் கண்ணுறங்காமலுமிருந்து, வினைத்தூய்மை வினைத்திட்பம் உடையவனாய்த் தொழில் புரிவன். செய்த தொழிலில் மற்றவரைக் காட்டிலும் வெற்றி பெற்று விளங்குவன். இதனைத்தான் தொல்காப்பியர் புறத்திணையியலில் வாகைத்திணை என்று கூறுகின்றார்.

வினை கருதித் தலைவன் தலைவியைப் பிரிவது அகனைந்திணையில் பாலை என்று கூறப்படுகிறது. பிரிந்து அவன் புறத்தே சென்று வினை புரிந்து, வினை வாய்க்கப் பெற்று வெற்றியுடையவனாய் விளங்குவது புறத்திணையில் வாகை என்று கூறப்படுகின்றது. இந்த இயைபினால், தொல் காப்பியர் புறத்திணையியலில்

வாகை தானே பாலையது புறனே

என்று கூறுகின்றார்.

அகனைந்திணை அனைத்தும் மக்களுக்கே உரிய காமமாகும். தொல்காப்பியர் 'மக்கள் நுதலிய அகனைந் திணையும்' என்று கூறுதலைக் காண்க. இங்கே மக்கள் என்பது அந்தணன் அரசன் வணிகன் வேளாளன் ஆகிய எல்லா மக்களையும் குறிக்கும். எல்லா மக்களுக்கும் உரிமை பூண்ட குறிஞ்சி முல்லை மருதம் நெய்தலிலிருந்து அரசர்க்குரிய போருணர்ச்சியாகிய வெட்சியும் வஞ்சியும் உழிஞையும் தும்பையும் தோன்றும் என்று கூறிய தொல் காப்பியர் வாகைத்திணையை அரசர்க்கே உரித்தாக்கிக் கூறாமல், எல்லா மக்களுக்கும் உரிய பாலைத்திணையின் புறனாய் எல்லா மக்களுக்கும் உரிய வாகைத்திணை தோன்றும் என்று கூறியுள்ளார்.

தாவில் கொள்கை தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப

கேடில்லாத கொள்கையையுடைய தங்கள் தங்கள் வினைக் கூறுபாட்டைப் பகுப்புத் தோன்றச் செய்து மிகுதிப்படுத்தல் வாகைத்திணைப் பொருளாம் என்று இந்நூற்பா கூறுகிறது. 'வேந்துவிடு முனைஞர்' என்று வெட்சிக்கும், 'வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்று' என்று வஞ்சிக்கும் 'உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பென்று' உழிஞைக்கும், " மைந்து பொருளாக வந்த வேந்தனை அஞ்சுதகத்தலைச் சென்று அடல் குறித்தன்று என்று தும்பைக்கும் வேந்தனைத் தலைவனாக்கியது போல் வாகைத்திணைக்கு வேந்தனைத் தலைவனாக்கவில்லை. இங்கே' தத்தம்' என்றது அடுத்த நூற்பாவில் கூறும் ஏழு கூற்று மக்களையும் குறிக்கின்றது. எனவே, வாகைத்திணை என்பது மக்கள் சமுதாயம் அனைத்திற்கும் உரியதாகின்றது.

இளம்பூரணர் பாலைக்கு வாகை புறனாயவாறு என்னை எனின்? என்று வினாவை எழுப்பிக் கொண்டு பாலையாவது ஒரு நிலனின்றி எல்லா நிலத்திலும் காலம் பற்றிப் பிறப்பது போல வாகையும் எல்லா நிலத்திலும், எல்லாக் குலத்திலும் காலம் பற்றி நிகழ்வதாதலானும்" என்று காரணம் கூறுவர்.

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் கால்மும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்
பாலறி மரபில் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோடு ஆங்கெழு வகையால்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்

வாகைத்திணையில் மக்கள் சமுதாயத்தின் பல்துறைத் தொழில் வகைகளை எல்லாம் பார்க்கின்றோம். 1. பார்ப்பனர் சமுதாயத்தில் ஓதும் தொழிலும் ஓதுவிக்கும் தொழிலும் வேட்டல் தொழிலும் வேட்பித்தற்றொழிலும் ஈதல் தொழி

லும் ஏற்றல் தொழிலும் நிகழும். 2. அரசர் சமுதாயத்தில் ஓதல் வேட்டல் ஈதலாகிய பொதுத் தொழிலும், படை வழங்குதல் குடியோம்புதல் என்னும் சிறப்புத் தொழிலும் நிகழும். 3. வணிகர் சமுதாயத்தில் ஓதல், வேட்டல், ஈதல் என்னும் பொதுத் தொழிலும், உழவு வாணிகம் நிரையோம்பல் என்னும் சிறப்புத் தொழிலும் நிகழும். 4. வேளாளன் சமுதாயத்தில் ஓதலாகிய பொதுத் தொழிலுடன் உழுதலும், ஏனைய தொழில் புரிதலும், பகடு புறந்தருதலும் பணி செய்தலும், விருந்து புறந்தருதலும் நிகழும். 5. அறிவன் தேயத்தில் வெயிற்காலம் மழைக்காலம் பனிக்காலம் என்னும் மூன்றுகாலத்திலும் நிகழும் வானத்தின் குறிப்புகளை ஆராய்ந்து உலக மக்களுக்கு உலகில் நிகழ்பெறும் உண்மைப் பொருள் நிகழ்ச்சி உரைத்தல் நிகழும். 6. தாபதப் பக்கத்தில் நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடைபுனைதல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டிற் கிடைப்பனவற்றை உணவாகக் கோடல், அதிதி பூசை முதலியன தவத்திற்கு உறுப்பாக நிகழும். 7. பால்அறி மரபின் பொருநர் பக்கத்தில் மல் வென்றி, ஏறுகோள் வென்றி, கோழி வென்றி, தகர் வென்றி யானை வென்றி பூழ்வென்றி, சிவல் வென்றி, கிளிவென்றி, பூவை வென்றி, குதிரைவென்றி, தேர் வென்றி, யாழ் வென்றி பிடி வென்றி முதலிய பொருதல் தொழிலில் வெற்றிகாண் நிகழ்ச்சிகளெல்லாம் நிகழ்வுறும். இவை அனைத்து மக்களுக்கும் பொதுவாம்.

திவாகர நிகண்டு பண்பு பற்றிய பெயர்த்தொகுதியில் "வலனே கொற்றம் ஆடு வகை விசயம் புகலென ஆறும் வெற்றி" என்று கூறுகிறது. அதனால், இது உள்ளத்தின் குறிப்பாய்க் கருதப்பட்டுப் 'பெருமிதம்' என்னும் மெய்ப் பாட்டுக்குரியதாகி வரும்.

தொல்காப்பியர் வாகையை ஏழு வகையாக் கூறிய தோடன்றிப் பின்னர் பதினெட்டுத் துறையாகவும் விரித்தோதுகின்றார்.

அப்பதினெட்டுள் 1. பாசறை நிலை, 2. களவழிவாழ்த்து, 3. முன்றேர்க் குரவை, 4. பின்றேர்க் குரவை, 5. பெரும்பகை

தாங்கும் வேல், 6. அரும்பகை தாங்கும் ஆற்றல், 7. வல் லாளர் பக்கம், 8. அவிப்புலி, 9. ஒல்லாரிடவயிற் புல்லிய பாங்கு என்னும் ஒன்பதும் மறத்திற்கு உரிய வாகையாகச் சான்றோர் பக்கமும் கடிமனை நீத்தபாலும் எட்டுவகை நுதலிய அவையமும் கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையும் இடையில் வண்புகழ்க் கொடைமையும் பிழைத் தோர்த்தாங்கும் காவலும் பொருளொடு புணர்ந்த பக்கமும் அருளொடு புணர்ந்த அகற்சியும் காமம் நீத்தபாலும் என்னும் ஒன்பதும் அறத்தின்பாற்பட்ட வாகையாகும்.

எனவே வாகை, மறம் அறம் என இருகூறுபட்டு விளங்குதலையும் காண்க.

அறப்பகுதியுள் கடிமனை நீத்த பாலும், கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையும். இடையில் வண்புகழ்க் கொடைமையும் பிழைத்தோர்த் தாங்கும் காவலும் என்பவை இல்லறத்தின்பாற்படும். பொருளொடு புணர்ந்த பக்கமும், அருளொடு புணர்ந்த அகற்சியும் காமம் நீத்தபாலும் என்பவை துறவறத்தின்பாற்படும். எனவே வாகை இல்லறம் துறவறம் என்னும் இரண்டினையும் தன்பாற் கொண்டுள்ளது.

எட்டுவகை நுதலிய அவையம்

அவை என்னும் சொல் தமிழ்மொழியில் மிகப் பழங் காலத்திலிருந்தே பொருட்பெயராகவும் தொழிற்பெயராகவும் வழங்கி வருகின்றது. அது பொருட்பெயராக வருமிடத்து 'அ' என்னும் சுட்டடியாகப் பிறந்த பலவின்பால் அஃறிணைப் பெயராகவும், உயர்திணையாகிய மக்கட்கூட்டத்தை உணர்த் தும் பெயராகவும் கொள்ளப்படும். தொழிற்பெயராக வரு மிடத்து அவைத்தல் அதாவது தீட்டுதல் (அரிசியைத் தீட்டுதல்) என்ற பொருளிலும் வரும். திருவள்ளுவர் திருக்குறளில் அவையறிதல் என்று ஓரதிகாரம் கூறுகிறார். அவர் அவ்வதிகாரத்தே நல்லவை என்றும் புல்லவை என்றும் இரண்டாகப் பகுத்துள்ளார். 'கூத்தாட்டவை' என்ற குறளில் கூத்து நிகழுமிடத்தே வந்து குழுமியுள்ள மக்கட் கூட்டத்தையும் அவை என்றே கூறுகின்றார். வேத்தவை என்பது வேந்தனைத் தலைவனாகக் கொண்டு விளங்கும்

அவையாகும். இங்ஙனம் வரும் பல்வகை அவைகளுள் ஒன்றாக' எட்டுவகை நுதலிய அவையும்' என்னும் ஒன்றைத் தொல்காப்பியர் கூறுகின்றார். இவ்வகையார் நற்குடியிற் பிறந்தவர் நன்கு கற்றவர் நல்லொழுக்கம் வாய்மை தூய்மை நடுவுநிலைமை என்னும் உயர்ந்த பண்புகளை உடையவர் பொறாமைப்படாதவர் அவா இல்லாதவர். இவரை,

குடிப் பிறப் புகுத்தும் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையின்
காதலின் பத்துள் தங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்காறு இன்மை அவா வின்மையென
இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்
தோலா நாவின் மேலோர் பேரவை

என்று ஆசிரியமாலை என்ற நூல் சிறப்பிக்கின்றது. இந்த அவைக்கு அறங்கூறவை அறனிலை திரியா அவை எனவும் பெயர் கூறப்படும். நாட்டிலே மக்களுக்கு நியாயம் வழங்கக் கூடியது இது. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக

என்று வஞ்சினங் கூறியுள்ளான். இப்பாடலை நோக்கினால் அந்த அவையின் சிறப்புப் புலனாகின்றது. இந்த அவை அரசியல் ஆதரவுடன் வளர்ந்து வந்தது. அரசர் தம் செங்கோல் வளர்வதற்கு ஏதுவாயிருந்தது என்பதனை மேற்கூறிய புறநானூற்றுப் பாடலாலும்,

கருங்கழல் வெண்குடையான் காவல் விரும்பான்
ஒருநாள் மடியின் உலகின்மேல் நில்லா
இருநாள் வகையால் இயல்பு 22

என்னும் பாடலாலும் அறிதல் கூடும். எனவே வாகைத் திணையில் வந்துள்ள எட்டுவகை நுதலிய அவையம் நாட்டிலே நன்னெறி நடப்பதற்கு ஏதுவாக உள்ளது என்பதை

அறியும் போது வாகைத்திணையின் சிறப்பு நமக்குப் புலனா கின்றது.

வாகை பொது

வாகை அரசர்க்கே உரித்தன்றி எல்லா மக்கட்கும் உரியதென்பதை,

ஆள்வினை முதலாம் செய்கையும் நலனும்
கைவலம் முதலாம் கல்வியும் ஆண்மையும்
சால்பு முதலாம் பண்பும் ஈகையும்
ஒழுக்கம் முதலாம் தவமும் அறத்துறையும்
ஒருவரின் ஒருவர் வென்றி மிகுதியும்
வருவன வெல்லாம் வாகையென் னும்பெயர் 23

என்னும் திவாகர நூற்பாவால் உணர்ந்து கொள்ளலாம்.

25

பேராசிரியர் உரைத்திறன்

தோற்றுவாய்

தொல்காப்பிய உரையாசிரியருள் பேராசிரியரும் ஒருவர். இவர் பொருளதிகாரத்துள் மெய்ப்பாடு உவமம் செய்யுள் மரபு என்னும் நான்கு இயல்களுக்கு உரை எழுதி யுள்ளார். நச்சினார்க்கினியர் பல இடங்களில் இவர் உரையைத் தழுவியே உரை எழுதியுள்ளார். அத்தகைய இவர்தம் உரைத்திறனைப் பார்ப்போம்.

பேராசிரியர் 1. முன்னே உரை எழுத வேண்டிய இயல் அல்லது நூற்பா இவற்றைத் தந்து, இவை கருதிய பொருள் இன்னதென்றுரைப்பர். இது நூல் உத்தியுள் முதற்கண் நிற்கின்ற நுதலிய தறிந்துணர்த்தல் என்னும் உத்தியாகும்.

எடுத்துக்காட்டு: இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மெய்ப்பாட்டியல் என்னும் பெயர்த்து, மெய்ப்பா டென்பன சில பொருள் உணர்த்தினமையின் அப்பெயர்த் தாயிற்று, ஒத்து நுதலியதும் மெய்ப்பாடு உணர்த்துதல் என்பது பெற்றாம். என்றும் இதன் தலைச் சூத்திரம் என்னு தலிற்றோவெனின் அம்மெய்ப்பாடு பிறர் வேண்டுமாற்றான் இத்துணைப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

2. எடுத்துக்கொண்ட பொருள் இயலாயின் அந்த இயலின் பெயர்க் காரணத்தை விளக்குவர். இயலின் இயைபு உரைப்பர்.

(எ-டு) மெய்ப்பா டென்பன சில பொருள் உணர்த் தினமையின் மெய்ப்பாட்டியல் என்னும் பெயர்த்து மேல் ஒத்தினோடு இவ்வோத்தினிடை இயைபு என்னையோ வெனின் மேலைஒத்துக்களுள் கூறப்படும். அகத்திணை புறத்திணை ஒழுகலாற்றிற்கும் ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, ஏர், எழில், சாயல், நாண், மடன், நோய் வேட்கை, நுகர்வு எனவரும் காட்டலாகாப் பொருள் என்றவற்றிற்கும் பொது வாகிய மனக்குறிப்பு இவ்வியலில் கூறும் நகை முதலியன

வாகலின் இவற்றை வேறாகப் பிரித்து ஓரினமாக்கி மெய்ப் பாட்டியலென வேறோர் ஒத்தாக வைத்தமையின் எல்லா வற்றோடும் இயைபுடைத்தாயிற்று.

3. எடுத்துக்கொண்டது நூற்பாவாயின் அதன் சரியான பாடத்தை எழுதித் தொகுத்துக் கண்ணழித்து உரை கூறுவர்.

(எ-டு)

"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப"

(இதன் பொருள்) பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் - முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காம நுகரும் இன்பவிளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும். கண்ணிய புறனே நானான்கு என்ப - அவை கருதிய பொருட்பகுதி பதினாறாகி அடங்கும் நாடக நூலாசிரியர்க்கு (எ-று).

இந்நூற்பாவைத் தனித்தனிச் சொல்லாகக் கண்ணழிக் காமல், இரண்டே பகுப்பாகத் தொகுத்துக் கண்ணழித்துக் கொண்டார்.

'பண்ணை' என்றால் விளையாட்டு என்பது நேரான பொருள். ஆனால் ஆசிரியர் பண்ணை என்னும் சொற்கு விளக்கமாக 'முடியுடை மன்னரும் குறுநில மன்னரும் முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காம நுகரும் இன்ப விளையாட்டு' என்று மிக விளக்கமாக உரை எழுதியுள்ளார். பண்ணைத் தோன்றியவை முப்பத்திரண்டு பொருளும் முதனூலாற் சொல்லப்படுவன போலும். அவற்றைப் பதினாறாகக் கருதுவது நாடக நூல் போலும்.

4. பேராசிரியர் உரையுள் விளக்கம் கூறுதல் என்ப தொன்று. அது பலவகையில் அமைந்திருக்கும். பொழிப்பு, அகலம், நுட்பம், எச்சம் என்று நான்கு வகையான உரையுள் நுட்பம் என்பது ஒன்று. அது வினாவும் விடையுமாக அமைந்து பொருளை விளக்கும். (எ-டு) முப்பத்திரண்டாவன

யாவை எனின்? என்று வினாவிக் கொண்டு 'ஒன்பது சுவையுள் உருத்திரம் ஒழித்து ஒழிந்த எட்டனையும்' கூறுங்கால் சுவைக்கப்படும்பொருளும் அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துட்பட்டவழி உள்ளத்து நிகழும் குறிப்பும், குறிப்புப் பிறந்த உள்ளத்தால் கண்ணீரரும்பல் மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலியனவாய் உடம்பின்கண்வரும் வேறு பாடாகிய சத்துவங்களுமென நான்காக்கி, அச்சுவை எட்டோடும் சுட்டி ஒன்று நான்கு செய்து உறழ முப்பத்திரண்டாமென்பது. எனவே ஒவ்வொரு சுவையும் சுவைப் பொருள், சுவையுணர்வு, குறிப்பு, விறல் என நான்காயின. என்று விளக்கம் கூறுகின்றார்.

சுவைப்பொருளுக்கு விளக்கம் - சுவையுணர்வுக்கு விளக்கம்

5. "இருவகை நிலத்தின் இயல்வது சுவையே" என்பது செயிற்றிய நூற்பா. இதற்குப் பேராசிரியர் முதலில் தன் கருத்தைக் கூறுகிறார். சுவைப் பொருளைச் சுவையுணரும் பொறி கூடினாலல்லது சுவை தோன்றாது என்பாலெனின், வேம்பு என்னும் பொருளும், நாவென்னும் பொறியும் தலைப்பெய்துழியல்லது கைப்புச்சுவை பிறவாதது போல, அதனால் நகை முதலானவற்றுக்கு ஏதுவான பொருளைக் கண் முதலிய பொறி தலைப் பெய்தபொழுதே நகை முதலிய சுவை பிறக்கும். இக்காரணத்தால் 'இருவகை நிலத்தின் இயல்வது சுவையே' என்று செயிற்றியம் கூறுகின்றது என்பர். ஆனால் இளம்பூரணர் ' நகையே அழுகை, என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திர உரையில், " மெய்ப்பாடென்பது யாதோவெனின்? "உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல் மெய்ப்பாடென்ப மெய்யுணர்ந்தோரே" எனச் செயிற்றியினார் ஓதுதலின், அச்சமுற்றான்மாட்டு நிகழும் அச்சம் அவன்மாட்டுச் சத்துவத்தினாற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாந்தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப்படும்" என்பர். பேராசிரியர் இதனை மறுக்கின்றார்.

இனி இருவகை நிலன் என்பன உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதலன்றோவெனின், (மறுப்பு) சுவை

என்பது ஒப்பின் ஆகிய பெயர் ஆகையால் வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்வினால் பிறன் உணரான்; இவன் கைப்புச் சுவைத்தானெனக் கண்ணறிவினால் அறிவதன்றி, அது போல அச்சத்திற்கு ஏதுவாகிய ஒரு பொருளைக் கண்டு அஞ்சி ஓடி வருகின்றான் ஒருவனை மற்றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற் றரிமா முதலாயினகண்டு அஞ்சினான் என்றறி வதல்லது வள்ளெயிற் றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான் கண்டானாயின் அதுவும் சுவை யெனவே படும். ஆகவே அஞ்சினானைக் கண்டு நகுதலும் கருணைசெய்தலும் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான், உய்ப்போன் செய்தது காண்போன் உய்த்த (உய்த்தறிந்த) அறிவின் பெற்றியால் (காண்போனிடம்) செல்லாதாகலின் இருவகை நிலம் என்பன சுவைப்பொருளும் சுவைத்தோனுமென இருநிலத்தும் நிகழுமென்பதே பொரு ளாதல் வேண்டும் என்பர். இவர் இவ்வாறு கூறுவது முடிவுமுறைத் திறனாய்வு ஆகும்.

பேராசிரியர் முடிவு முறைத் திறனாய்வு வகையில் பல செய்திகளை எடுத்துக்கொண்டு, அவற்றைத் தர்க்க முறையில் ஆராய்ந்து, உண்மைப்பொருளை உணர்த்தி யுள்ளனர். அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

தொல்காப்பியர் காலத்தில் இலக்கணம் எழுத்து சொல் பொருள் என மூன்று பகுப்பாகவே இருந்தது. அகப்பொருளும் புறப்பொருளும் செய்யுளியலாகிய யாப்பும் அணியின் பகுதியாகிய உவமையும் மெய்ப்பாடும் பிறவுமாகிய இவையெல்லாம் பொருளதிகாரத்தினுள்ளேயே சுறப்பட்டிருக்கின்றன. பிற்காலத்தே இறையனார் களவிய லும் நம்பி அகப்பொருளும் புறப்பொருளும் யாப்பருங் கலமும் யாப்பருங்கலக் காரிகையும் அணியியலும் தண்டி யலங்காரமும் தனித்தனியாக எழுந்தன.

அவற்றுள் அணியியலும் தண்டியலங்காரமும் அணி பற்றியனவாகும். இவ்விரண்டுள் தண்டியலங்காரத்திற்கு முன் எழுந்தது அணியியல். இது உருவகத்தை முதலிலே

தொடங்கி விரவியலீறான அணிகளைக் கூறும் தண்டியலங்காரம் தன்மையிலிருந்து தொடங்கிப் பாவிகம் ஈறான அணிகளைக் கூறும்.

இங்ஙனம் எழுந்த அணியிலக்கண நூல்கள் கூறும் அணியைப் பற்றிப் பேராசிரியர் கூறுவது கருதத்தக்கதாம். அவர் தொல்காப்பியம் உவம இயல் கடைசியில் கூறுவன வருமாறு:

இனி, இவ் உவமவியலில் கூறுகின்ற உவமங்களுள் சிலவற்றையும், சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்றனவாகிய சில பொருள்களையும் வாங்கிக் கொண்டு, இவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாரும் உளர். அவை ஒரு தலையாகச் செய்யுட்கு அணி என்று இலக்கணம் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும்; தாங்காட்டாய இலக்கணத்திற்கு சிதையாவழியும் என்பது என்னை?

நாயகர்க்கு நாய்கள்போல் நட்பிற் பிறழாது
கூஉய்க் குழாமுடன் கொட்கு - மாய்படை
பன்றி யனையர் பகைவேந்தர் ஆங்கவர்
சென்றெவன் செய்வர் செரு

என்று உவம அணி தோன்றக் கூறியவழி நாயகர்க்கு நாய்கள் போல நட்பிற் பிறழாது நிற்கும் ஆய்படை என்பது வினையுவமம். பன்றியனையர் பகைவேந்தர் என்பதும் நாய்க்குப் பகையாகிய பன்றி போன்றவர் என்று கொள்ளப்பட்டு அவ்வேந்தர் பகைவராதலால் அவ்வாறு கூறும் உவமையும் விலக்கரிது. அவ்வாறு ஆயினும் மேற்கூறிய அஃது அணியெனப்படாது; உவமைதான் 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" என்ற நூற்பாவின்படி உயர்ந்ததின்மையின்; அஃதுஉவமைக் குற்றமன்றோ என்று கூறினால்,

"பேரூர் அட்ட கள்ளிற்கு
ஓரில் கோயில் தேருமால் நின்னே" (300)

என்னும் புறநானூற்றுப் பாடல் 'கோய்' என்னும் கள் வார்த்துண்ணும் பாத்திரத்தைத் தலைவனெருவனுக்கு உவமை கூறியது உயர்ந்ததில்லாமையாகக் கருதப்பட்டுக் குற்றமாகக் கருதப்படவேண்டும். சான்றோரால் செய்யப்பட்டுள்ள இப்பாட்டில் வந்துள்ள உவமை குற்றமன்றாகலின் மேல் காட்டிய (நாயகர்க்கு) என்னும் பாட்டில் வந்துள்ள உவமையும் குற்றமற்றதாகவே கொள்ளவேண்டும் எனின், இப்புறநானூற்றுப் பாட்டு பொன்மாலை, பூமாலை போலப் பொலிவு செய்தலின் இது குற்றமாகாது. மேற்பாட்டே குற்றமுடையதாம் எனின், இன்ன சொல்லும் இன்ன பொருளும் உடையன பொன்மாலை எனவும் பூமாலை எனவும் வரையறுத்துக் கூறலின்மையின் இந்த வகையி னாலும் அப்பாட்டைக் குற்றம் உடையது என்று கூறிவிட முடியாது ஆனால் அந்த அணி இலக்கண நூல்கள் பொரு ளதிகாரத்துள்ள பொருட்பகுதிகளெல்லாம் செய்யுட்கு அணி செய்வனவே ஆகும்.

முதல் கரு உரி என்ற அப்பொருளெல்லாம் பாடலுள் பயின்றவையே யாகும். அக்காரணத்தால் அவற்றையெல்லாம் தொகுத்து அணியெனக் கூறாது, அவற்றுள் சிலவற்றை மட்டும் வாங்கிக் கொண்டு அணியெனக் கூறுதல் பொருந் தாது என்று மறுத்துக் கூறுகிறார் பேராசிரியர். இது முடிபு முறைத் திறனாய்விற்குரியது.

ஒரு நூலினைத் திறனாய்வு செய்பவர் முன்னை அதன் மூல பாடத்தை நன்கு ஆராய்ந்து தக்க பாடத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். பேராசிரியர் மெய்ப் பாட்டியலில்

"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"

என்னும் நூற்பாவிற்கு உரை எழுதும்பொழுது "புதுமையை ஆக்கத்துள் அடக்கி "முதுமை" யைப் பாடமாகவும் உரைப்ப" என்று ஒரு பாட வேறுபாட்டைக் காட்டுகிறார். இளம்பூரணரும் இவ்வாறு பாடம் கொள்ளவில்லை. வேறு யாரோ ஒருவர் " முதுமை பெருமை சிறுமை ஆக்கம்' என்று பாடங்கொண்டுள்ளார்.

மேற்கண்ட பாடம் சரியன்று என்பதற்குப் பேராசிரியர் இரண்டு காரணம் காட்டுகிறார். ஒன்று அன்னதோர் வழக்கின்மையானும் என்பது இளம்பூரணர் முதலிய தொல் லாசிரியர் வழக்கு இல்லை என்பது இதற்குக் கருத்தாகும்.

மற்றொன்று புதுமை என்பது ஆக்கத்துள் அடங்குவ தாயின், ஆக்கம் போல ஒன்று ஒன்றாய்த் திரிதல் வேண்டும்; புதுமை அங்ஙனம் திரியாதது. இளம்பூரணரும் யாதொன் றாயினும் எவ்விடத்தினும் எக்காலத்தினும் தோன்றாததோர் பொருள் தோன்றுவது. அது கந்தருவர் அந்தரம் போதலைப் பார்ப்பது போன்றது என்பர். அதனால் புதுமை ஆக்கத்துள் அடங்காது இவ்விரண்டு காரணத்தால் முதுமை என்ற பாடம் தக்க பாடம் ஆகாது என்று மறுத்துள்ளார். இதற்கு இவற்றால் மூலபாடத்திறனாய்வு செய்யும் முறை நம் நாட்டில் முன்பே இருந்ததென்று அறிகின்றோம்.

பேராசிரியர் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை செய்துள்ளார். ஆனால் இப்பொழுது மெய்ப்பாட்டியல் உவமவியல் செய்யுளியல் மரபியல் என்னும் நான்கு இயல் கட்கு எழுதிய உரைமட்டும் கிடைக்கின்றது. இவர் இலக்கண நூல்களுக்கேயன்றி இலக்கியங்கட்கு உரை எழுதியிருக்க வேண்டும். நச்சினார்க்கினியர் உரைப்பாயிரப் பாட்டு பேராசிரியர் உரை எழுதாத விட்ட இருபது பாடல்களுக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதினார் என்று குறிக்கின்றது. அதனால் அவர் குறுந்தொகைக்கு உரை எழுதிய செய்தி புலனாகின்றது.

இலக்கியங்கட்குச் சுவையாக உரை எழுதுவதில் இவர் மிக வல்லவர்.

"வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறாது
இடம்சிறிதென்னும் ஊக்கம் துரப்ப
ஒடுங்கா உள்ளத் தோம்ப ஈகை
கடந்தரு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்

பொழுதென வரைதி புறங்கொடுத் திருத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் கலையால் பல்கதிர் விரித்தே"

(புறநானூறு 8)

என்னும் இப்பாட்டு சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடிய பாட்டாகும். இப்பாட்டுப் புறநானூற்றில் "பகல் விளங்குதியால்" என்னும் பாடத்துடன் ஓதப்பட்டுப் புறநானூற்று உரையாசிரியரால் சூரிய மண்டிலத்தை நோக்கிக் கூறியதாக உரை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பேராசிரிய ரால் "பகல்விளங் கலையால்" என்று பாடங் கொள்ளப் பட்டுத் தண்கதிர் மண்டிலத்தை நோக்கிக் கூறுவதாக உரை கூறப்பெறுகிறது.

இலக்கியங்களில் எவ்வாறு ஈடுபட்டு இலக்கியச் சுவையை வெளிப்படுத்துகிறார் என்னும் செய்தி இப் பாட்டிற்கு இவர் உரை கொள்ளும் முறையால் அறிந்து கொள்ளலாம்.

இப்பாட்டினைப் பேராசிரியர் தொல் - உவமவியலில் "வேறுபட வந்த உவமத் தோற்றத்தைக்" கூறும் நூற்பா விலும், "ஓரீசிக் கூறுலும் "மரீசிய பண்பே" என்னும் நூற்பா விலும் எடுத்தாளுகின்றார்.

இப்பாடல் புறத்திணைப் பாடலாகும். பாடாண் திணையுள் இயல்பினைக் கூறுகின்ற இயன்மொழி வாழ்த் தாகும். திங்களாகிய தெய்வத்துடன் ஒப்பிட்டுக் கூறுவதால் பூவைநிலை என்றும் புகல்வர். இயன்மொழி வாழ்த்துத் துறையே சிறப்புடைத்தே.

பேராசிரியர் உரைப்பது

உவமையாகிய திங்களை வீங்கு செலன் மண்டிலமே! நீ எங்கள் சேரலாதனை யாங்கனம் ஒத்தியோ? என வினாவிக் குறிப்பால் (குறிப்பு செய்யுளுக்கு ஓர் உறுப்பு) நீ ஒவ்வாய் என்னும் கருத்தைப் பெற வைக்கிறார். இவ்வுவமை இப் பொருளுக்கு உவமையாகாது என்று கூறுதலால் இது ஓரீஇக்கூறுதல் என்ற வகையின் பாற்படும்.

அடுத்து இப்பாட்டு வேறுபட வந்த உவமத் தோற்ற மும் ஆகும் அவை பலவகையாக வரும் என்று ' வேறு படவந்த" (32) என்னும் நூற்பா வுரையில் அவர் கூறி யுள்ளார் அவற்றுள் ஒன்று உவமைக்கும் பொருட்கும் ஒப்புமை மாறுபடக் கூறுவது.

எனவே இப்பாடலை உவமைக்கு மாறுபடக் கூறுவது என்றும் பொருட்கு மாறுபடக் கூறுவது என்றும் இரண் டாகப் பிரித்துக் கொள்ளவேண்டும் இங்கே உவமை தண்கதிர் மண்டிலமாகிய திங்கள். பொருள் சேரலாதன்.

முதற்கண் பொருளுக்கு ஓதிய அடையை மறுத்து திங்களாகிய உவமைக்கு மாறுபடக் கூறுகிறான். எவ்வா றெனின்? வையங்காவலர் வழிமொழிந் தொழுக என்பது தொடங்கி, ஓம்பா ஈகை என்பது வரையிலும் மறுத்துக் கொள்ள வைத்துள்ளான்.

(1) வையம் காவலர் எல்லோரும் தம் தன்மையென ஒன்றின்றி (தம்தன்மை இழிந்து) (சேரலாதன்) மொழிந்ததையே மொழிந்து ஒழுகுமாறு அவன் உள்ளான். எனவே எல்லா அரசரையும் சேரன் தன்னகப்படுத்தி அவர்கட்கெல்லாம் தலைமையுடன் விளங்குகின்றான் என்றனர்.

ஆனால், உவமமாகிய திங்களோவெனின், தன்னை யொழிந்த எல்லாக் கோள்களும் ஒளிகுறையாமல் தன்றன்மை யோடு இயங்க அவற்றுடன் தானும் இயங்கும் என்றது ஏனைய கோள்களெல்லாம் வழிமொழிந்து ஒழுகும் நிலையில் திங்கள் இல்லை என்பதை உணர்த்துகிறது.

(2) போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாதவன் சேரலாதன் எனவே இன்ப நுகர்வை விரும்பிப் பழிபட வொழுகி உலகமக்களால் பழிக்கப்படாதவன் என்பதாயிற்று, திங்களோவெனின், பல மகளிரொடு இன்பம் நுகர்ந்து அவர்களுடன் ஒத்த அன்பால் ஒழுகாது உரோகணிபால் கழிகாமத்தனாய் இருப்ப அதன் காரணமாக எழுந்த பூசலால் எல்லோரும் பழித்துப் பேசுமாறு உள்ளான். எனவே இதனாலும் சேரலாதனைத் திங்கள் ஒவ்வாதாயிற்று.

(3) 'இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப' என்றது சேரன் தனக்குரிய சேரனாடு சிறிது என்னும் ஊக்கம் துரப்பத் தன் நாட்டை விரிவுபடுத்திக் கொள்பவன் சேரலாதன். திங்களாகிய நீயோ எஞ்ஞான்றும் உன் எல்லைக் கண்ணேயே இயங்குகிறாய். அதனாலும் சேரலாதனை ஒவ்வாய் என்றது.

(4) சேரலாதன் ஒடுங்கா உள்ளத்தினையுடையான். திங்களாகிய நீயோ நாடொறும் தேய்ந்து சூரியனிடத்திலே ஒடுங்குகிறாய். இதனாலும் நீ அவனை ஒவ்வாய் என்றது.

(5) சேரலாதன் ஓம்பா ஈகையை உடையன். திங்களாகிய நீயோ நாடொறும் ஒவ்வொரு கலையாக வளர்ந்து உயிர்கட்கு இன்பம் தருகிறாய் இதனாலும் அவனை ஒவ்வாய் என்றது.

II இனி உவமைக்கு ஒதிய அடையை மறுத்துச் சேரலாதனாகிய பொருட்கு மாறுபடக் கூறுகிறான்

(1) திங்கள் (விலங்குசெலன் மண்டிலம்) திங்களே! நீ ஒதுங்கிச் செல்லும் செலவினை உடையவனாயிருக்கின்றாய். சேரலாதனோவெனின், விலங்கிச் செல்லான், தலைமையானவர் நடக்கும் விலங்காநடையை யுடையவன் என்றனர்.

(2) பொழுதென வரைதி; திங்களே! நீ நாடொறும் நாழிகை வேறுபட்டுத் தோன்றுகிறாய். சேரலாதன் எப்பொழுதும் விளங்குவான்.

(3) புறங்கொடுத்து இறத்தி திங்களே! நீ தோற்றோர் போல் ஒளிமழுங்கிச் செல்கின்றாய். சேரலாதன் ஒளிபெற விளங்கிப் பிறர் தோற்றோடக் காய்வான்.

(4) மாறிவருதி; திங்களே! திங்கள்தோறும் மாற்றம் அடைந்து பிறக்கின்றாய்; சேரலாதன் இவன் என்றும் மாறா நிலை பெற்றவன்.

I. " நாடுகண் அகற்றிய உதியஞ் சேரலைப்
பாடிச் சென்று புலவரைப் போல"

(5) மலைமறைந்து ஒளித்தி; திங்களே! அத்தமனமலை சார்ந்த வழி த்தோன்றாய்; சேரலாதன் மேற்குமலைச் செறிவில் சிறந்து விளங்குகின்றான்.

(6) அகலிடு விசும்பினாலும்; திங்களே! நீ வானத்தே விளங்குவாய்: சேரலாதன் நிலவுலகத்தே வாழ்பவன்.

(7) பகல் விளங்கலை; திங்கள்! நீ பகற்காலத்தே விளங்காய் சேரலாதன் இருபொழுதும் விளங்குவன் என்னும் இவற்றாலும் ஒவ்வாய் என்றது.

எனவே முற்பகுதியில்,

திங்களாகிய நீ (உவமை)

1. வழிமொழிந் தொழுகப் பெறாய்
2. போகம் வேண்டிப் பொதுச் சொல் பெறுவை
3. இடஞ்சிறிதென்னும் ஊக்கம் இல்லாய்
4. ஒடுங்கிய வுள்ளத்தை
5. ஓம்பவும் ஈகையினை

மேற்காட்டிய இவையெல்லாம் பொருளுக்கு ஓதிய அடையை மறுத்து உவமைக்குக் கொள்ளப் பெற்ற அடை யாகும்.

பிற்பகுதியில்

சேரலாதன் என்னும் அரசன்,

(1) விலங்குசெலல் இல்லாதவன்

(2) பொழுதென வரையாதவன்

(3) புறங்கொடுத்து இறக்காதவன்

(4) மலைமறைந்து ஒளிக்காதவன்

(5) மாறி வராதவன்

(6) அகன்ற நிலப்பரப்பில் விளங்குபவன்

(7) பகல்இரவு எப்பொழுதும் விளங்குபவன்

மேற்காட்டிய அடையை

வழிமொழிந்தொழுகப்பெறாத, போகம் வேண்டிப் பொதுச் சொல் பெறுகின்ற, இடம் சிறிதென்னும் ஊக்கம் இல்லாத, ஒடுங்கிய உள்ளத்தையுடைய, ஓம்பும் ஈகையினை யுடைய திங்களே!

விலங்குசெலல் இல்லாத, பொழுதென வரையாத, புறங்கொடுத்து இறக்காத, மாறிவராத, மலைமறைந்து ஒளிக்காத, அகன்ற நிலப்பரப்பில் விளங்குகிற பகலிர வென்னும் எக்காலத்தும் விளங்குகின்ற சேரலாதனை நீ பொருளோடு ஒப்புமை மாறுபடவும் பொருளை எடுத்துக் கொண்டு உவமையோடு ஒப்புமை மாறுபடக் கூறப்படுவது என்றும் 'வையங்காவலர்' என்னும் பாட்டில் முற்பகுதியும் பிற்பகுதியும் வேறுபடுதலில் வேறுபட வந்ததாயிற்று என்றும் கூறியுள்ளார். (தொல் - உவமவியல்32)

"தாமரை போன்றது கை" என்றதில் தாமரை உவமை; கை பொருள்; கைபோல் மலர்ந்தது தாமரை எனின் இது பொருளுவமையாகும். திங்கள் சேரலாதனை ஒவ்வாது என்றது உவம வாய்பாடு தோன்றக் கூறியதாம். சேரலாதன் திங்களை ஒவ்வான் என்ற இது பொருளுவம வாய்பாடாகும்.

சேரன் சூரியமரபில் பிறந்தவன். வெண்சுடர் வழித் தோன்றிய அரசனைத் தண்சுடரோடு பழிக்க வேண்டி இங்கே உவமை வாய்பாடேயன்றி பொருளுவமை வாய்பாடும் வந்துள்ளது. அப்பொருளுவமை பொருளுவமை போலின்றி உள்ளுறை உவமம் போல் குறிப்பால் பொரு ளுணருமாறு உள்ளது என்கின்றார். பேராசிரியர்.

இவர் 'வையங்காவலர்' என்னும் புறநானூற்றுப் பாடலுக்கு எழுதிய உரை, இவர் குறுந்தொகைக்கு எவ்வாறு உரை எழுதியிருந்தாரோ? அவ்வுரை கிடைக்காமற் போயிற்றே என்று நம்மையெல்லாம் வருந்த வைக்கின்றது.

இலக்கியத்தைச் சுவைப்பதற்குப் பாயிரம் போன்ற விளக்கங்கள்

ஒரு தனித்த பாட்டையேனும் அல்லது தொடர்நிலைப் பாடல்களையேனும் சுவைப்பதற்கு அவற்றைப் பற்றிய

விளக்கங்கள் குறிப்பிடப்பட வேண்டும். அக்குறிப்பு அவற்றைச் சுவைப்பதற்கு ஏதுவாயிருக்கும். இத்தகைய குறிப்பினைப் பேராசிரியர் சிலபாட்டிற்குத் தந்துள்ளார். அவர் முத்தொள்ளாயிரத்தில்,

> ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
> காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்
> பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
> வருஞ்செல்லும் பேருமென் நெஞ்சு

என்னும் பாடலைக் குறிப்பிட்டு, "இப்பாட்டில் மெய்ப்பாடு எட்டில் இளிவரல் என்னும் மெய்ப்பாடு பற்றி உவமம் வந்துள்ளது. என்னை? தலைமகன் மாட்டு இன்ப விளையாட்டெய்துவார் பலரையுங்கண்டு, நெஞ்சு முற்றிலும் புன்கண் எய்தித் தனிநின்று தலைவனிடம் புகப்பெறாது இளி வந்தமையின் அப்பெயர்த்தாயிற்று" என்பர். இவ் விளக்கத்தைப் படித்த நாம், தலைவி தலைமகனிடத்திலே இன்பம் துய்க்க விரும்பிச் சென்றாள் என்பதும், அப் பொழுது தலைமகன் பல பெண்களுடன் இன்ப விளை யாட்டை நிகழ்த்திக் கொண்டிருந்தான் என்பதும், அதனைக் கண்ட தலைவி மனம் முற்றிலும் புண்ணடைந்து தன் வீட்டிற்குள் வந்து கதவடைத்துப் படுத்துக் கொண்டாள் என்பதும், அவள் உடம்பு இங்கே தனித்துப் படுத்திருந்தாலும் உள்ளம் மட்டும் தலைவனிடத்தே ஓடுவதும் அவனுடைய தகாத ஒழுக்கத்தைக் கருதித் திரும்புவதுமாகத் திரிந்தன. நெஞ்சு புகுந்தென்பதும், அந்நெஞ்சு தலைவனிடம் வருவதும் போவதும் எதனைப் போலிருந்தெனின்? செல்வம் புலன் புணர்வு விளையாட்டால் வேருவகை படைத்திருக்கும் பெருஞ்செல்வர் மனையில், மூப்பு பிணி வருத்தம் மென்மை என்னும் இவற்றினைப் பெற்றுஇளிவரவு பெற்றவனொருவன் இளிவரவை போக்கிக் கொள்ளக் கருதி அம்மனையில் உள்ளே நுழைவதும், அம்மனையில் இருப்பவரால் மதிக்கப் பெறாமல், வெளிவருவதும், செய்தலைப் போன்றுள்ளது என்பதும் ஆகிய இவையெல்லாம் புலனாகின்றது.

பாட்டிற்கு உறுப்பு

யாப்பருங்கலக் காரிகை எழுத்து, அசை, சீர்,பந்தம், அடி, தொடை, பா, இனம் கூறுவன் என்று தொடங்கி உறுப் பியலில் எழுத்து, அசை, சீர் பந்தம் அடி தொடை என்னும் ஆறினையும் கூறுகின்றது. உறுப்பியல் என்ற தலைப்பில் இந்த ஆறும் ஓதப்பெற்றுள்ளமையால் மேற்கூறிய ஆறினை யும் நாம் உறுப்பென்றுதான் கருதிக் கொள்ள வேண்டும்.

பாவினையும் இனத்தினையும் செய்யுளியல் என்ற தலைப்பில் ஓதுவதால் அவற்றை முதல் என்று கருதிக் கொள்ள வேண்டும். முதல் சினை என்ற பாகுபாட்டில் எழுத்து முதலான ஆறினையும் சினையாகவும் பாவும் இனமுமாகிய செய்யுளை முதலாகவும் கொள்ள வேண்டும்.

யாப்பருங்கலம் என்னும் நூலும் காரிகை போல உறுப்பியல் செய்யுளியல் ஒழிபியல் என மூன்று இயலை வகுத்துக் கொண்டு உறுப்பியலில் எழுத்தோத்து, அசை யோத்து, சீர் ஓத்து, தளை ஓத்து, அடியோத்து, தொடையோத்து, என ஆறு ஓத்தினை வகுத்துக் கொண்டு எழுத்து முதலான ஆறினையும் கூறுகின்றது. எழுத்து முதலான ஆறும் உறுப்பியல் என்ற தலைப்பின் கீழ் ஓதப் பெறுவதால் இந்த ஆறினையும் உறுப்பென்னும் சினையாகவே கொள்ள வேண்டும். தூக்காகிய பாவும் இனமும் முதலாகும்.

ஆனால் தொல்காப்பியத்தில் உள்ள செய்யுளியலானது மாத்திரை எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர் களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம் என்னும் இருபத்தாறுடன் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன் என்று எட்டினையும் சேர்த்து முப்பத் தாறினையும் செய்யுள் உறுப்பென்றே தொல்காப்பியர் கூறியுள்ளார்.

'பொருந்தக் கூறிய' தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே

என்பது அந்த நூற்பாப் பகுதியாகும்.

இந்நூற்பா உரையில் பேராசிரியர் மற்றுச் செய்யுள் உறுப்பு ஈண்டோதினார். செய்யுள் யாண்டு ஓதுபவெனின்? அறியாது கடாயினாய்; உறுப்பென்பன உறுப்புடைப் பொருளின் (முதலின்) வேறெனப்படா. பொருள் எனப் படுவன உறுப்பே, அவற்றது ஈட்டத்தினைமுதலென வழங்கப் படுமாகலான் உறுப்பினையே சொல்லி யொழிந்தார். முதற் பொருளதிலக்கணமென உறுப்பிலக்கிணத்தினையே வேறு படுத்துக் கூறலாவதின்மையானும், உறுப்புரைப்பவே அவ்வுறுப்புடைய பொருள் வழக்கியலாற் பெறலாமாக லானும் என்பர்.

இவ்வாறு எழுதிய பேராசிரியர் செய்யுளியல் முதற் சூத்திரத்தின் இறுதியில் "இவற்றை உயிருடையதன் உறுப்புப் போலக் கொள்ளின் உயிர்வேறு கூறுதல் வேண்டுவதாம். அவ்வாறு கூறாமையால் கலவை உறுப்புப் போலக் கொள்க என்பர். நச்சினார்க்கினியரும் பேராசிரியரைப் பின்பற்றி, "இவற்றை உயிரில்லாத கலவை உறுப்புப் போல் கொள்க" என்பர்.

மேற்கூறிய பேராசிரியர் நச்சினார்க்கினியர் என்னும் இருவர்தம் கூற்றிலிருந்து பாட்டிற்கு உயிர் ஒன்று கொள்ள வேண்டுவதில்லை என்பது தெரிகின்றது.

செய்யுளை மக்கள் உடம்புபோல் கருதிவிட்டால் உடம்பு பலவகைத் தாதுவினால் செய்யப்பட்டது. அதுபோல் செய்யுளும் பலவகைச் சொல்லால் செய்யப்படும். அவ்வுடம்பு உயிர்க்கு இடமாயிருத்தல் போலச் செய்யுளும் பொருட்கு இடமாயிருக்கும் என்று கொள்ளலாம். இவ்வாறு கொள்வது செய்யுள் உறுப்பினை உயிருடைய தன் உறுப்புப் போலக் கொள்வதாம். மேற்கூறியவாறு கொள்ளாமல், பலவகை மலரும் நாரும் சேர்ந்து மாலையாயினாற் போல பலவகை உறுப்புகள் சேர்ந்து செய்யுளாயிற்று என்று கொள்ளின் இது கலவை உறுப்புப் போலச் செய்யுள் உறுப்புகளைக் கொள்ளும் நெறியாகும்.

இருவகை

பாட்டின் உறுப்புக்களை உயிருடைய தன் உறுப்புப் போலக் கொள்ளும் முறையும் உண்டு. நன்னூல்,

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

என்று கூறுவதையும், வீரசோழியம்

உரைஉட லாக உயிர்பொரு ளாக உரைத்தவண்ணம்
நிரைநிற மாநடை யேசெலவா நின்ற செய்யுட்களாம்
தரைமலி மானுடர்

என்று கூறுவதையும் கருதினால் இவ்விரண்டு நூலாரும் கருதுவது செய்யுளை உயிருடையதன் உறுப்புப் போலக் கொள்ளுகின்றனர் என்பது புலனாகின்றது.

சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்றும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால் - மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டார்ான் கூடல் தமிழ்

என்னும் இப்பாட்டு தமிழ்ப்பாடலின் உறுப்புக்களை உயிரில்லாத கலவை உறுப்புப் போலக் கொள்கின்றது என்பது புலனாகும்.

தொல்காப்பியர்

உறுப்பென்று கூறியவற்றில் பா என்பது ஒன்றாகும். அவ்வுறுப்பைப் பற்றி அவர் அங்கு பேசுவதெல்லாம் பா எத்தனை? அவை எப்பொருள் மேல் வரும்? வெண்பா முதலான ஒவ்வொரு பாவும் அவ்விலக்கணத்தனவாய் வரும்? என்பவையே. இங்கே பேசப்படுவதெல்லாம் பாவும் இனமும் எனப்பகுத்துக் கொண்டு யாப்பருங்கலம் முதலிய நூல்கள் செய்யுளியலிலே கூறுகின்றது. எனவே செய்யுளியலில் பாச்செய்யுளைப் பேசுமிடம் பா என்னும் தலைப்பில் கூறப்பெறுவன அத்தனையும் ஆம்.

கருத்து\மாறுபாடு

தொல்காப்பியர் பா என்பதை உறுப்பு என்று ஓதுகின்றார். யாப்பருங்கலம் யாப்பருங்கலக் காரிகை முதலியவற்றின் ஆசிரியரெல்லாம் பா என்பது எழுத்து அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் உறுப்புக்களால் ஆன முதல் என்று கருதுகிறார்.

அது போலப் பாட்டினை உயிருடையதன் உறுப்புப் போலக் கொண்டு பாட்டிற்கு உயிர் இன்னது என்று கூறுபவருள்ளும் பொருளே உயிர் என்பாரும், வைதர்ப்ப நெறி கௌட நெறி என்று வகுத்துக் கொண்டு பாட்டினைக் கூறும் முறையாகிய செறிவு முதலான பத்தும் உயிர் என்பாரும் என இருவகையினராக உள்ளனர்.

மேல்நாட்டுத் திறனாய்வாளர் பாட்டினை உயிருடை யதன் உறுப்புப் போலக் கொண்டு பொருளைப் பாட்டினால் புலவன் சொல்லுகின்ற முறையினையே உயிர் என்கின்றனர்.

இவர்களுக்கெல்லாம் மாறாகப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் பாட்டை உயிரில் பொருள் போலக் கொண்டு பாட்டின் உறுப்பை உயிரில்லாத பொருளின் உறுப்பாகிய கலவை உறுப்புப் போலக் கொள்க என்பர்.

26

தொல்காப்பியப் பொருளதிகாரம்

முதல் ஐந்து இயல்கள் - ஓர் ஆய்வு

தோற்றுவாய்

தமிழர்தம் தலைமைக்கும் தகைமைக்கும் தக்கதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்வது தொல்காப்பியன் தந்த தொல்காப்பியம், இது எழுத்து, சொல், பொருள் என்றும் மூன்று அதிகாரங்களை உடையது. எழுத்துக்கு இலக்கணம் இயம்புவது எழுத்ததிகாரம். சொல்லுக்கு இலக்கணம் சொல்வது சொல்லதிகாரம். பொருளுக்கு இலக்கணம் மொழி வது பொருளதிகாரம். இம்முறை வைப்பினை ஆராய்கின்ற மு. இராகவய்யங்கார் தம் தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, என்ற நூலில்,

'எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்து அச்சொற்றொடர் கருவியாகப் பொருளுணர்ச்சி பெற வேண்டுமாதலால் அம்முறையில் வைத்துத் தொல்காப்பியம் கூறுவதாயிற்று'

என்று கூறுகின்றார். பொருளதிகாரத்தின் இன்றியமை யாமையை இறையனார் களவியல் உரைகாரரும்

'எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே;
பொருளதிகாரம் பெறேமெனில் இவை பெற்றும் பெற்றிலேம்'[2]

என்று மொழிகின்றார்.

இப்பற்றி வாய்ந்த பொருளதிகாரம் மக்கள்தம் ஒழுக்க நெறியை அகவொழுக்கம், புறவொழுக்கம் என்ற இரண் டாகப் பிரித்துக் கொண்டு அவற்றிற்கு முறையே அகத்திணை, புறத்திணை என்று பெயர் வைத்து அவற்றை முறைப்படுத்திக் கூறுகிறது. அகவொழுக்கத்தை அகத்திணையியல், பொரு ளியல் என்ற பொதுவியல்களாகவும் களவியல், கற்பியல் என்ற சிறப்பியல்புகளாகவும் தொல்காப்பியனார் விரித்து

ஓதினார்.புறவொழுக்கத்தைப் புறத்திணையியல் என்ற ஓரியலாலேயே கூறுகின்றார்.இரண்டொழுக்கத்திற்கும் வேண்டும் பொதுச்செயதிகளை மெய்ப்பாட்டியல் உவமையியல், செய்யுளியல், மரபியல் என்னும் நான்கு இயல்களாலேயே கூறுகின்றார். இவற்றையெல்லாம் கருதின் தொல்காப்பியனார் அகவொழுக்கத்திற்கே முதன்மையும் சிறப்பும் தருகின்றார் என்பது புலனாகிறது. வெளிநாட்டுப் பழைய இலக்கியங்களில் புறவொழுக்கமாகிய வீரநிலையே முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாக இருந்தது என்ற உண்மையைத் தொல்காப்பியனார் புலப்படுத்துகின்றார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இயல்களை

'உயர்திணை அஃறிணை என்றிவ் வுலகை
மயர்வில் அறிவின் வளத்தால் செயிர்அற
நன்று பிரித்ததொடு நல்ல அகம்புறம்
என்னும் இருகூறு கண்டார் யார்?

'களவுநெறி கற்புநெறி கட்டுரைத்துள் ளகத்தே
உளவாம் மெய்ப்பா டுவமைஓர்வித் - தளவையிலாச்
செய்யுளியல் நன்மரபும் தேற்றினர்தொல் காப்பியனார்
வையக மெங்கும் இல்லா வகை'

என்ற வெண்பாக்களும் வரிசைப்படுத்துகின்றன. தொல் காப்பியப் பொருளதிகாரத்தின் இவ்வொன்பது இயல்களில் முதல் ஐந்து இயல்கள் பற்றி ஆய்வதே கட்டுரையின் நோக்கம்.

பொருளதிகார உரைகள்

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை கண்டவர்கள் அறுவர். அவர்கள் வருமாறு:

1. இளம்பூரணர்
2. நச்சர்
3. பேராசிரியர்
4. சோமசுந்தர பாரதியார்
5. புலவர் குழந்தை
6. மு. அருணாசலம் பிள்ளை

இவர்களில் இளம்பூரணரும், புலவர் குழந்தையும் மட்டுமே பொருளதிகாரம் முழுமைக்கும் உரை கண்டவர்கள். முன்னவர் காலத்தால் மூத்தவர். பின்னர் காலத்தால் பிற்பட்டவர். இருவருக்கும் உள்ள இடைவெளி பல நூறு ஆண்டுகள்! குழந்தையுரை காலமாற்றத்திற்கேற்பச் சில மாறுபாடுகளைக் கொண்டுள்ளது. இவரது உரையில் நூற்பாக்கள் இடம் மாற்றி வைக்கப்பட்டுள்ளன. பிறரது உரைகளில் காணப்படும் பொருளியலை இவர் உரையில் காண முடியவில்லை. மாறாகப் பொதுவியல் என்ற பெயரில் ஓர் இயல் அகத் திணையியலை அடுத்து வைக்கப்பட்டுள்ளது. இவர் வைப்பு முறைக்கேற்ப இவர் அமைத்துள்ள இயல் வரிசை பின்வரு மாறு:

1. அகத்திணையியல்
2. பொதுவியல்
3. களவியல்
4. மெய்ப்பாட்டியல்
5. கற்பியல்
6. புறத்திணையியல்
7. உவமயியல்
8. செய்யுளியல்
9. மரபியல்

உற்றுநோக்கும்போது தொல்காப்பியப் பொருளாதார அமைப்பு குழந்தையுரையில் முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக அமைகிறது. நச்சினார்க்கினியர் முதல் ஐந்து இயல்களுக்கும் செய்யுளியலுக்கும் உரை கண்டுள்ளார். ஆயினும் மு. இராக வய்யங்கார். தம் நூலில் நச்சர் முதல் ஐந்து இயல்களுக்கு மட்டுமே உரை கண்டுள்ளதாக மொழிவர்.

> 'அச்சேறிய பொருளதிகாரப் பதிப்பிலே செய்யுளியலுக்குள்ள பகுதி நச்சினார்க்கினியர் இயற்றியதன்றிப் பேராசிரியர் இயற்றியதென்பது செந்தமிழ் வாயிலாக முன்னரே பிரசித்தமானது. இதுபோலவே இவ்வச்சுப் பிரதியிற் கண்ட மெய்ப்பாடு உவமம், மரபியல்களில்

> உரைப்பகுதிகளும் நச்சினார்க்கினியரன்றிப் பேராசிரியர் இயற்றிய தென்பது செந்தமிழ் வாயிலாக முன்னரே பிரசித்தமானது

என்பது அவ்ர் கூற்று. பேராசிரியர் இறுதி நான்கு இயல்களுக்கு மட்டுமே உரை கண்டுள்ளார். அருணாசலம் பிள்ளை அவர்கள் முதல் இரண்டு இயல்களுக்கு அகத்திணையியல் உரைவளம், புறத்திணையியல் உரைவளம் என்று பெயர்களில் உரை கண்டுள்ளார். இவர் தம் நூலில் தம் முன்னோரின் உரைகளைத் தொகுத்துக் கூறி அவற்றைத் தழுவியும் மறுத்தும் உரை வகுக்கின்றார். 'தொல்காப்பியம் தமிழ் இலக்கிய வரலாறு என்ற பெயரில் க. வெள்ளை வாரணன் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமைக்கும் பொருள் கூறுகின்றார். இவர் பெரும்பாலும் இளம்பூரணர் உரையையே தழுவி உரைக்கின்றார். க. ப. அறவாணன் தொல்காப்பிய அகத்திணையியல், புறத்திணையியல் உரை வேறுபாடுகளை ஆய்ந்து கண்டுள்ளார்.

பொருளதிகாரம் - விளக்கம்

> 'பொருள் உணர்த்தினமையாற் பொருளதிகாரம் என்று பெயர்த்தாயிற்று. பொருள் என்பது யாதோ எனின் மேற்சொல்லப்பட்ட சொல்லின் உணரப் படுவது. அது முதல், கரு, உரி என மூவகைப்படும்.....
>
> இது பொருளதிகாரமாயின் உலகத்துப் பொருள் எல்லாம் உணர்த்தல் வேண்டுமெனின் அது முதல் கரு உரிப்பொருள் எனத் தொகைநிலையான் அடங்கும். அவ்வாறு வகுக்கப்பட்ட பொருளை உறுப்பினாலும் தொழிலினாலும். பண்பினாலும் பாகுபடுத்தி நோக்க வரம்பிலதாய் விரியும், இக்கருத்தினாலே இவ்வாசிரியர் உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் முதல் கரு. உரிப்பொருள் என ஓதினார் என்க'

என்பது இளம்பூரணர் காட்டும் விளக்கம்.

> 'நிறுத்த முறையானே பொருளினது இலக்கணம் உணர்த்தினமையின் இது பொருளதிகாரம் என்னும்

பெயர்த்தாயிற்று. நாண்மீனின் பெயர் நாளிற்கும் பெயராயினாற் போல்வதோர் ஆகுபெயர்.

பொருளாவன ஆறும் பொருளின்பமும் அவற்றது நிலையின்மையும், அவற்றின் நீங்கிய வீடுபேறுமாம் பொருளெனப் பொதுப்படக் கூறவே அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும் அவற்றின் பகுதி யாகிய இயங்குதிணையும், நிலத்திணையும் பிறவும் பொருளாம்'

என்பது நச்சரின் உரை.

'எழுத்துஞ் சொல்லும் செய்யுளுக்கு இன்றியமையாத உறுப்புக்கள் ஆதலின் அவற்றை முறையே முன்னிரண்டு பகுதிகளாக வகுத்துக் கூறின தொல்காப்பியர் புலவர்க்குரிய பொருட்பகுதியை மூன்று படலமாக வகுத்தார். மக்கள் கருத்துக்களை விளங்க வெளிப் படுத்துங் கருவியனைத்தும் செய்யுளெனப்படும். செவ்விதாய வளப்பாடு அதாவது உளத்துறுங் கருத்தைக் கேட்போருளத்துறக் கூறுதற்குரிய சொற் றொடர்கள் எல்லாம் செய்யுளாகும். பாட்டே செய்யுளென்பது பிற்காலப் பிழை வழக்கு. உரை, பாட்டு, நூல், பிசி, குறிப்பு மொழி, மறைமொழி, பழமொழி எனப் பலவகையாலும் பலவேறுருவிற் குள்ளே நின்று பொருள்பயப்பன யாவும் செய்யுளே யாம். செய்யுளெல்லாம் பொருள் பற்றியனவேமாக லானும், பொருள் ஒன்றே மக்கள் அப்பொருள் பற்றியும், அப்பொருள் உரைக்குங்கருவியாகும் செய்யுள் பற்றியும், அவையிற்றுக் குறுப்பும், துணையுமாவன பற்றியும் கூறுவனவற்றின் தொகுதி தொல்காப்பியரின் பொருட்படலமாகும்'

என்பது நாவலர் சோமசுந்தர பாரதியாரின் உரைவிளக்கம்

'நிறுத்த முறையினானே பொருளினது இலக்கணம் உணர்த்தினமையின் இது பொருளதிகாரம் என்னும் பெயர்த்தாயிற்று. இது புலியின் வடிவம் பொறித்த கொடியைப் புலிக்கொடி என்றாற் போல குணியாகு பெயர்.....

'பொருளாவன அகப்பொருளும் புறப்பொருளும் அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரிப் பொருள்களுமாம். அகம், புறம் என்பனவே அறம், பொருள், இன்பம் என வேறு வகையான் வழங்கப் படுதலின் அவையும் இவையேயாம். இன்பம் அகத் திலும் அறமும் பொருளும் புறத்திலும் அடங்கும் இன்பமும் பொருளும் அறமும் என்றாங்கு (கள.1) என ஆசிரியர் கூறுதல் காண்க.

'இனி இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள், காட்சிப் பொருள், கருத்துப் பொருள், உயர்திணைப் பொருள், அஃறிணைப் பொருள், பொதுப்பொருள், சிறப்புப் பொருள் முதலிய பொருட்கூறுபாடுக ளெல்லாம் இவ்விரண்டனுள் அடங்குமென்க. எல்லாப் பொருளும் அடங்கும் என்பது புலவர் குழந்தை கூறும் விளக்கம்.

பொருளதிகாரம் கிளத்தும் பொருள் என்பது இன்னது என்பது குறித்து விளக்குவதில் ஒவ்வொரு உரையாசிரியரும் வேறுபடுகின்றனர். குழந்தை தரும் விளக்கம் இளம்பூரணர் உரையையும், நச்சினார்க்கினியரின் உரையையும் உள்ளடக்கி நிற்கிறது. ஆழ்ந்து நோக்கும்போது குழந்தை தரும் அகம் புறம் என்ற விளக்கத்தை இளம்பூரணரே கூறிப்போந்தமை புலனாகிறது.

'முதல் கரு உரிப்பொருளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை'

என்ற அகத்திணையியல் நூற்பா உரையில்,

'இச்சூத்திரத்துட் பாடலுட் பயின்ற பொருள் மூன்று என ஓதி அவற்றின் உரிப்பொருள் என ஒன்றை ஓதினமையால் புறப் பொருளும் உரிப்பொருளாகியவாறு கண்டு கொள்க'[5]

என உரைப்பதால் இதனைத் தெளியலாம். சோமசுந்தர பாரதியாரின் பொருளதிகார விளக்கத்தில் பொருள் என்பது இன்னது என்ற விளக்கத்தையே காண முடியவில்லை.

ஒன்பதில் ஐந்து

முதல் ஐந்து இயல்களில் நான்கு இயல்கள் மட்டுமே அகம் கிளத்துவன. ஏனைய ஒரு இயல் புறம் புகல்வது. அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற அகம் கூறும் நான்கு இயல்களும் முதலும் முடிவும் அகவொழுக்கத்திற்கு உரிய பொதுவான இலக்கணங்களை உணர்த்தி நிற்கின்றன. களவியல் தலைமகன், தலைமகள் இருவர்தம் களவு வாழ்க்கையின் விளக்கம், களவுவழிப்பட்ட தலைமகன், தலைமகள் இருவரும் ஊரறிய, நாடறிய, வதுவையயர்ந்து இல்லறம் நடாத்தும் பாங்கினைக் கற்பியல் விரிக்கின்றது. புறத்திணையியல் போர் பற்றி விளக்குவது. முதலில் அகவொழுக்கத்தின் விளக்கங்களான அகத்திணை யியல், களவியல், கற்பியல், பொருளியல் இவற்றை முன்னர்க் கண்டு, பின் புறம் புகலும் புறத்திணையியல் பற்றிக் காண்போம்.

அகத்திணையியல்

அகத்திணையியல் காதல் ஒழுக்கத்திற்குப் பொது விலக்கணம் கூறுவதாகும்.

> **'ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற**
> **காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்திற்குப்**
> **பின்னர் அவ்விருவரும் தத்தமக்குப் புலனாகா**
> **இவ்வாறிருந்தெனக் கூறப்படாததாய் யாண்டும்**
> **உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர்**
> **பொருள், ஆதலின் அதனை அகம் என்றார்'**

என நச்சினார்க்கினியர் அகம் என்பது இன்னது என விளக்குவர்.

'அகமாவது காதலர் உள்ளக்கிடக்கையும் அவர் காதல் கதிர்த்து
வினைப்பட்டு அன்னோர் மனை வாழ்க்கையிற் றொடர்
புறுவதுமாகும்'

என சோமசுந்தர பாரதியார் அகத்திற்கு விளக்கம் தருகின்றார். இனி இவ்வகத்திணையியல் கூறும் பொதுச் செய்திகளைக் காண்போம்.

திணை ஏழு

அகத்திணையியல் முதல் நூற்பாவில் தொல்காப்பியனார் அகத்திணை ஏழு என்று குறிப்பிடுகின்றார்.

'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப'

என்பது அவர் காட்டும் நூற்பா.

கைக்கிளை என்பது தொடக்கநிலைக் காமமாகவும், ஒருபாற் காமமாகவும் சிறிய காமமாகவும் அமைவது. இக்கைக்கிளையினைப் பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்பர் இளம்பூரணர்.

ஐந்திணை காமம் நுகர்தலுக்கு ஏற்ற பருவமுடைய தலைவன் தலைவி என்னும் இருபாலாரிடத்தும் தோன்றும் அளவொத்த காமம். தொல்காப்பியனாரால் மிகவும் செப்ப முடையாத விரிவாகப் பேசப்படுவது இக்காமமே. இக் காமத்தை அவர் 'மக்கள் நுதலிய அகனைந்திணை', 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என்றெல்லாம் சிறப்பித்துக் கூறுகின்றார். இவ்வைந்திணைக் காமத்தின் பகுதியாகிய களவு, கற்பு என்னும் இரண்டும் தலைவன் தலைவி இருவருடைய அன்பின் பெருக்கத்தாலே அமைவதாதலின் இறையனார் அகப்பொருள் ஆசிரியர்.

'களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்
உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன'

என்று கூறுவர்

பெருந்திணை என்பது மிக்க காமமாகவும், காமம் நுகர்தலுக்கு ஏலாத முதியோர் காமமாகவும், பொருந்தாக் காமமாகவும் அமைவது

ஐந்திணைப் பொருள்கள்

எழுவகைத் திணையுள் கைக்கிளை, பெருந்திணை ஒழிந்த ஐந்திணைக் காமத்தையே தொல்காப்பியனார் விரிவாகப் பேசுகின்றார். ஐந்து திணைகளும் உரிய பொருள்கள் முதல், கரு, உரி என்பதை,

'முதல்கரு உரிப்பொருளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை'

என்ற நூற்பாவில் நுவல்கின்றார்.

முதற்பொருள்

ஐந்திணைப் பொருள்களல் முதற் பொருள் நிலமும் பொழுதும் என இருவகைப்படும்.

'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே'

என்பது தொல்காப்பிய நூற்பா.

ஐந்திணை - நிலங்கள்

ஐந்து திணைகளில் நான்கு மட்டுமே நிலம்பெறும் என்று குறிக்கின்றார்.

'நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே'

என்ற நூற்பாவும் இதனை உறுதிப்படுத்துகின்றது. நிலங்கள் பற்றிக் குறிக்கும் போது, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு திணைகள் மட்டுமே நிலம் பெறும் என்பதை

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'

என்னும் பிற நூற்பாவில் நவில்கின்றார். நிலங்கள் பற்றிக் கூறும் இந்நூற்பாவில்தான் திணைகளின் பெயரையும் அறிமுகப்படுத்துகிறார். ஐந்தில் நான்கு மட்டுமே நிலம் பெறுவனவாதலின் நான்கு திணைகளின் பெயரை ஈண்டுக் கூறினாரெனில் ஏனைய ஒரு திணையின் பெயர் யாது?

இத் திணையினை நடுவண் ஐந்திணை நடுவணது என்றுதான் குறிக்கின்றாரே அன்றி அகத்திணையியலில் இதன் பெயரை யாண்டும் கூறவில்லை. காலம் பற்றிக் கூறும் நூற்பாவில் கூட 'நடுவுநிலைத் திணை' என்றே குறிக்கின்றாரே ஒழிய இத்திணையின் பெயரை அங்கும் குறிக்கவில்லை. எனில் நடுவுநிலைத்திணை'பாலை' என்ற வழங்காது எவ்வாறு வந்தது? தொல்காப்பியனார் 'பாலை' என்ற பெயரையே சுட்டவில்லையா? உரையாசிரியர்களால் ஏற்பட்ட வழக்காறா? என்ற ஐயங்கள் அகத்திணையியலைப் பயிலு வோர்க்குத் தோன்றுதல் இயல்பே. இந்த ஐயங்களை அறுக்கின்ற வகையில் தொல்காப்பியனாரின்,

'வாகை தானே பாலையது புறனே'

என்ற புறத்திணையியல் நூற்பா திகழ்கிறது. இந் நூற்பாவில்தான் பாலை என்ற சொல்லாட்சியினை முதன் முதலில் காணுகின்றோம். நடுவண் ஐந்திணை நடுவணது பாலை என்பதை உய்த்துணர வேண்டிய நிலையிலேயே தொல்காப்பியனார் அமைக்கின்றார்.

'வெட்சி தானே குறிஞ்சியது புறனே'
'வஞ்சி தானேமுல்லையது புறனே'
'உழிஞை தானே மருதத்துப் புறனே'
'தும்பை தானே நெய்தலது புறனே'
'வாகை தானே பாலையது புறனே'
காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'
பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே'

என்ற புறத்திணையியல் நூற்பாப் பகுதிகள் அகத்திணை ஏழனுக்குப் புறனான புறத்திணை ஏழனை உணர்த்தி நிற்கின்றன. இவற்றுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை, கைக்கிளை என்ற ஆறு அகத்திணைகளின் பெயர்களை அகத்திணையியலிலேயே அறிகின்றோம். எஞ்சி நிற்பது பாலைத்திணை ஒன்றே. எனவே தொல்காப்பியனார் அகத்திணையியலில் குறிப்பிடும் 'நடுவண் ஐந்திணை நடுவணது' ஆகிய 'நடுவுநிலைத்திணை' இப்பாலைத்திணையே ஆதல் வேண்டும்.

'குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம்
நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே'

என ஐந்திணைக்குரிய பெயர்களை நம்பியார் தொகுத்துக் கூறுதல் போன்று தொல்காப்பியனார் ஐந்திணைப் பெயர் களை யாண்டும் தொகுத்துக் கூறவில்லை. உய்த்துணரும் படியே அமைக்கின்றார்.

காலம்

நிலம் பற்றிக் கூறியவர் மற்றொரு முதற்பொருளான காலத்தை ஏழு நூற்பாக்களில் கூறுகின்றார். காரும் மாலையும் முல்லைத்திணைக்கு உரியன. கூதிர்காலமும் யாமம். முன்பனியும் குறிஞ்சித்திணைக்கு உரியன. வைகறையும், விடியலும் மருதத்திணைக்குரிய பொழுதுகள். எற்படு பொழுது நெய்தல் திணைக்கு உரியது. நண்பகல் வேனில் என்பன நடுவுலைத் திணைக்கு - பாலைத்திணைக்கு உரியன.

'திணை மயக் குறுதலும் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே'

'உருப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே'

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்'

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் திணைமயக்கம் பற்றிப் பேசுகின்றன. இந்நூற்பாக்களுக்கு 'உரை வகுக்கும் உரை யாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உரைகூறிச் செல் கின்றனர். திணைமயக்கம் என்பதில் திணை என்பதற்கு ஒழுக்கம் எனப் பொருள் கொண்டு 'திணைமயக்குறுதலும் கடிநிலை யிலவே' என்ற நூற்பாவின் மூலம் உரிப்பொருள் மயக்கம் கூறப்பட்டது என்பர் நச்சர். இளம்பூரணர் இந்நூற்பா முதற் பொருள் மயக்கம் பற்றிப் புகல்கிறது எனப் புகல்வர். 'எவ்வொழுக்கம் எங்கு நிகழினும் நிலத்தியல்பு மாறாது. காடு புணர்ச்சி நிகழ்வதால் குறிஞ்சி ஆகாது.

முல்லை நிலமேயாகும். பிரிவாற்றாக் குறமகளிர் இரங்குவ தால் மலை நிலம் நெய்தல் ஆகாது. குறிஞ்சியேயாம்' என்று பாரதியும் இந்நூற்பா உரிப்பொருள் மயக்கமே கூறிற்று என்பர்.

முதல் இரண்டு நூற்பாக்களை இணைத்து நோக்கும் போது உரிப்பொருள் மயக்கம் என்ற கருத்து தொல்காப்பிய னாரின் கருத்துக்கு முரண்பட்ட ஒன்று என்பது தெளி வாகிறது.

'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே'

என்ற நூற்பா உரிப்பொருள் மயங்காது என்பதைத் திட்டவட்டமாகக் குறிக்கின்றது. இவ்வாறு இருக்க நச்சர் உரையாசிரியர்கள் உரிப்பொருள் மயக்கம் கூறுவது 14ஆம் நூற்பா எனக் கூறுவது பொருத்தமற்றதாகத் தோன்றுகிறது.

உரிப்பொருள் அல்லன என்பதற்குக் கருப்பொருள் முதற்பொருள் என்றுரைப்பர் இளம்பூரணர். நச்சர், குழந்தை, அருணாசலம் பிள்ளை ஆகியோர் கைக்கிளை பெருந்திணை என்றனர். கொண்டுதலைக் கழிதல், கலந்த பொழுது எனப் பொருள் கூறுவர் பாரதி. 14ஆம் நூற்பாவில் முதற்பொருள் மயக்கத்தையும், எந்நில மருங்கில் என்ற நூற்பாவில் கருப் பொருள் மயக்கத்தையும் கூறியவர் மீண்டும் கூறியது கூறலாக உரிப்பொருள் அல்லாத முதற்பொருளையும், கருப் பொருளையும் சுட்டுதல் வேண்டா என்று கருதிய பாரதி புதுப்பொருள் நாடினர். எனினும் அவர் கூறும் முடிவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. பாரதியின் கருத்துப்படி தொல்காப்பியனார் கூறியது கூறல் குற்றத்திற்கு ஆட்படவில்லை. அவர்தம் கருத்தைத் தெளிவாகவே கூறுகின்றார்.

தொல்காப்பியனார் தொகுத்துக் கூறிப் பின்னர் வகுத்துக் கூறும் உத்தியைக் கையாளும் இயல்பினர் என்பதற்கு அவர் நூலிலுள்ளே பல சான்றுகள் விரவிக் கிடக்கின்றன இவ்வாறே

"திணை மயக்குறுதலும் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப

புலனன் குணர்ந்த புலமை யோரே'

என்ற நூற்பாவின் முதல் அடியில் திணைமயக்கத்தைத் தொகுத்துக் கூறிப் பின் தொடர்ந்து வரும் அடியில் நிலம் மயங்காது என்று கூறுகின்றார் எனக் கொள்ளலாம். இனி,

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்'

என்ற நூற்பாவில் வாராவாயினும் என்றதனால் வரும் எனக் கருப்பொருள் மயக்கம் கூறுகின்றார்.

'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே'

என்ற நூற்பாவில் உரிப்பொருள் மயங்காது என்கின்றார். எனின் எஞ்சி நிற்பது காலம் மட்டுமே. எனவே உரிப் பொருள்அல்லன என இவண் தொல்காப்பியர் குறிப்பது காலத்தை மட்டுமே. இவ்வாறு, கொண்டால் தொல் காப்பியனார் எந்த நிலையிலும் கூறியது கூறல் குற்றத்திற்கு ஆட்படவில்லை என வரையறுத்துக் கூறலாம்.

இருவகைப் பிரிவு

'இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்
உரிய தாகும் என்மனார் புலவர்'

என்ற ஒரு நூற்பா அகத்திணையியலில் காணப்படுகின்றது. இவ்விருவகைப் பிரிவுகள் இன்னின்ன என்பதைத் தொல் காப்பியனார் குறிக்கவில்லை. இளம்பூரணர் 'தலைமகளைப் பிரித்தலும், தலைமகனை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும்' என்ற இரண்டைக் குறிப்பிடுவர். நச்சினார்க் கினியர் காலிற் பிரிவு, கலத்திற் பிரிவு என்ற இரண்டைக் குறிப்பர். நாவலர் சோமசுந்தர பாரதியார் வேனிற் பிரிவு, பின்பனிப் பிரிவு என்ற இரண்டைக் கருதுவர். இருவகைப் பிரிவு என்ன என்பதைத் தொல்காப்பியனார்வழி அறிய இயலாத நிலைமையும் இந்நூற்பா அமைப்பையும் நோக்கு போது இந்நூற்பா இடம் பிறழ்ந்துள்ளதோ என்ற ஐயம் ஏற்படுகின்றது.

உரிப்பொருள்கள்

ஐந்து திணைக்குரிய உரிப்பொருள்கள் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்றிவையும், இவற்றின் நிமித்தங்களும் ஆம் என்பதை,

'புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே'

என்ற நூற்பாவினால் தெளியலாம். இவையேயல்லாமல் மேலும் சில உரிப்பொருள்கள் உண்டு என்பதை,

'கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவண் இரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத்தான'

'கலந்த பொழுதும் காட்சியும் அன்ன'

என்ற நூற்பாக்களுக்கு உரைவகுக்கும் இளம்பூரணர் உரையால் உணரலாம். இவற்றில் 'கொண்டுதலைக் கழிதல்' என்ற நூற்பாவிற்கு

'ஓரிடத்து என்றமையான் மேற்சொல்லப்பட்ட ஐவகை உரிப்பொருளும் போல் எல்லாத் திணைக்கும் பொது வாகி வருதலின்றிக் கொண்டுதலைக் கழிதல் பாலைக் கண்ணும் பிரிந்தவன் இரங்கல் பெருந்திணைக் கண்ணும் வரும் என்று கொள்க. கொண்டுதலைக் கழிதலாவது உடன்கொண்டு பெயர்தல். அது நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமையானும், உடன்கொண்டு பெயர்தலின் பிரிதலின் அடங்காமை யானும் வேறு ஓதப்பட்டது. பிரிந்தவன் இரங்கலாவது ஒருவரை ஒருவர்ப் பிரிந்த இடத்து இரங்கல். அது தெட்டாறு சென்றவழி இரங்குதல் இன்மையானும் ஒருவழித் தணந்தவழி ஆற்றுதலின்றி வேட்கை மிகுதியால் இரங்குதலானும் வேறு ஓதப்பட்டது. (இதற்கு) ஏறிய மடற்றிறமும் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமும் முதலாயின பொருள். இது பெருந் திணைக்கு உரியது'

என உரை எழுதிச் செல்கின்றார்.

'கலந்த பொழுதும்' என்ற நூற்பாவிற்கு, 'கலந்த பொழுது என்பது தலைவனைக் கண்ணுற்றவழி மனநிகழ்ச்சி யுளதாங் காலம்; அக்காட்சி பின்னர்க் குறிப்பறியுந் துணையும் நிகழும் நிகழ்ச்சி. காட்சியாவது தலைவியை எதிர்ப்படுதல். குறிப்பறிந்த பின்னர்ப் புணருந் துணையும் நிகழும் முன்னிலையாக்கல் முதலாயின புணர்தல் நிமித்தம். இவை இந்நிரலேயன்றிப் பொதுப்பட நிற்றலின் வேறு ஓதப்பட்டன. அன்ன என்பது (இவையும்) ஓர் இடத்து நிகழும் உரிப் பொருள் என்றவாறு. ஓரிடமாவது கைக்கிளை'

என உரை வகுப்பர். இவற்றை நோக்கும்போது தொல் காப்பியனார் எழுதிணைக்கு உரிய உரிப்பொருள்களை இம்மூன்று நூற்பாக்களில் தெரிவிக்கின்றார் என்பது இளம் பூரணர் கருத்து என்பது தெளிவாகிறது.

கருப்பொருள்

ஐந்திணைக்குரிய கருப்பொருள்கள் இன்னின்ன என்பதை,

'தெய்வம், உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,
அவ்வகை பிறவும் கருவென மொழிப'

என்ற நூற்பாவில் நவில்கின்றார். இந்நூற்பாவில் இடம் பெறும் முதல் கருப்பொருளான தெய்வத்தின் பெயர்களை.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'

என்ற நூற்பாவில் மொழிகின்றார். இனி கருப்பொருள்கள் கூறும் நூற்பாவில் விடுத்த கருப்பொருள்களில் பூவை,

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயந்த வாகும்'

என்ற நூற்பாவிலும், மக்களைத் தொடர்ந்து வரும் ஐந்து நூற்பாக்களிலும் சுட்டுகின்றார்.

இவர் அகத்திணையியலில் மக்களைச் சுட்டும்போது ஆயர் வேட்டுவர் என்று முல்லைத்திணை மக்களையும், குறிஞ்சித்திணை மக்களையும் முதற்கண் குறிப்பிட்டுவிட்டு அவர்களுள் தலைமக்களைக் 'கிழவர்' என்ற சொல்லால் கூறிவிட்டு, மருதத்திணை மக்களையும், நெய்தல் திணை மக்களையும் இன்ன பெயரினர் என்ற விதந்து கூறாமல் 'ஏனோர்' என்ற சொல்லாலேயே குறிக்கின்றார். எனவே தமிழ்நாட்டு மக்களுள் ஆயர் வேட்டுவர் முதலான திணைமக்களும் அவர் தம்முள் தலைமக்களும் அகவொழுக்கத்திற்குச் சிறந்தவராகக் கருதப்படுகின்றனர்.

தொல்காப்பியனார் ஆயர், வேட்டுவர், ஏனோர் என்ற திணை மக்களுக்கும், அவர் தம்முட் சிறந்த கிழவர் என்னும் தலைமைக்கட்கும் வேறாக அடியோர், வினைவலர் என்ற இரு பகுதியினரைக் குறிப்பிட்டு, அவர்களை அகத்திணை ஒழுக்கத்திற்கு உரியரல்லர் கைக்கிளை பெருந்திணைக்கே அவர் உரியர் என்று கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்ட இரு பகுதியினர்க்கு மேல் 'ஏவல் மரபின் ஏனோர்' என்றவர்களைக் குறிப்பிட்டு இவரும் அகனைந்திணை முதலான அகவொழுக்கத்திற்குரியர் என்று கூறுகின்றார். ஏவல் மரபின் ஏனோர் என்ற சொற்றொடர்க்கு ஏவிக்கொள்ளும் மரபினை உடைய ஏனோர் என்ற உரை கூறப்பட்டு அவர் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் என்பவர் ஆவர் என்பது குறிப்பால் உணரப்படுகிறது.

எனவே அகத்திணையியலில் கூறப்படும் மக்கட் சமுதாயத்தை ஆயர், வேட்டுவர் முதலான திணைமக்களென்றும், அவர் தம்முட் கிழவர் என்றும் மேற்கூறிய திணைமக்களுக்கு அடியவராயும், வினைவலராயும் இருக்கும் பணிமக்கள் என்றும், ஏவல் மரபின் ஏனோராகிய பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளரென்று நான்கு பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம்.

இவர்களுள் ஆயர் முதலான திணைமக்களெல்லாம் திணைதோறும் வாழ்ந்து வந்த பழந்தமிழ் மக்கள் என்பதும், பார்ப்பனர், மன்னர், வணிகர் வேளாளரெல்லாம் அப்பழந்தமிழ் மக்களிலிருந்து தோன்றிச் செயல்முறையால் வேறுபட்ட எல்லாத் திணையிடத்தும் வாழ்ந்து பிறரை ஏவிக்கொள்ளும் ஏவல் மரபின் ஏனோர் என்பதும் உய்த் துணரப்படுகின்றன.

பிரிவுகள்

அகத்திணை ஒழுக்கத்தையுடைய மக்கள் ஓதவும், பகையை வெல்லவும், தூது உரைக்கவும், தெய்வப் படிமத்தையுடைய திருக்கோயில்கட்குப் பிழை ஏற்படின் அதனைக் காக்கவும், பொருள் ஈட்டவும் பிரிந்து செல்வர் என்று குறிக்கின்றார் தொல்காப்பியனார். இவற்றுள் ஓதற்பிரிவும் தூதிற் பிரிவும் உயர்ந்தோர்மாட்டு நிகழும், பகைவயிற் பிரிவு வேந்தனுக்கும் அவனுக்குற்றுழி யுதவும் ஏனோர் மாட்டும் நிகழும். காவற் பிரிவு வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரியது. பொருள்வயிற் பிரிவு அரசர் ஒழிந்து ஏனோர்க்கு உரியது என்று குறிப்பிடுவர்.

இவ்வாறு இவர்கள் பிரியும்போது சில பிரிவுகளில் தலைமகளையும் உடன்கொண்டு செல்வர் என்றும், தலை மகளை உடன்கொண்டு செல்லுமிடத்துக் கடல்வழிப் பிரிதல் என்றும் கூறுகின்றார்.

'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை'

என்பது அந்நூற்பா.

மடல் விலக்கு

மடல் ஏறல் ஆண்களுக்கே உரிய நிகழ்ச்சி என்பதையும், பெண்கள் மடல் ஏறல் அவர்தம் பொற்புக்கு ஏற்புடைத்தன்று என்பதையும்,

'எத்துணை மருங்கிலும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யானே'

என்ற நூற்பாவில் தெளிவுபடுத்துகின்றார்.

இதுவரை ஆண்மக்கள் தம் பிரிவினை உணர்த்தியவர் அடுத்துவரும் நூற்பாக்களில் தலைமகனுடன் தலைமகள் சென்ற நிலையில் யார்யார்க்குக் கூற்று நிகழும் என்பதை 39 முதல் 48 வரை உள்ள நூற்பாக்களில் அறிவிக்கின்றார்.

கூற்று நிகழ்வகை

தலைவன், தலைவி முதலிய கூற்று நிகழ்த்துதற்குரியோர் அனைவரும் அகவொழுக்கம் பற்றிய கருத்தை மறைத்துக் கூறல் வேண்டின் உள்ளுறை உவமையாலும், மறையாது கூறல் வேண்டிய இடத்தே வெளிப்படையாகவும் கூறுவர் என்பர் தொல்காப்பியனார்.

அகப்பாடல் மரபுகள்

அகப்பாடல்கள் நாடக வழக்கையும், உலக வழக்கையும் தழுவி, கலிப்பா, பரிபாடல் என்ற இருவகைப் பாவகை யாலும் இயற்றப்படல் வேண்டும் என்பதை,

'நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்'

என்ற நூற்பா வரையறுக்கின்றது. இவ்வாறு இயற்றப் படும்போது அப்பாடல்களில் தலைமக்களின் இயற்பெயர் இடம்பெறுதல் கூடாது என்பதை,

'மக்கள் நுதலிய அகன்ஐந்திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்'

என்ற நூற்பா வலியுறுத்துகின்றது. அவ்வாறு இயற்பெயர் இடம்பெற அமைப்பது புறத்திணைப் பாடல்களுக்கு உரியதே அன்றி அகத்திணைப் பாடல்களுக்கு உரியது ஆகாது என்பதை,

'புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே'

என்ற தொல்காப்பியனார் வாக்கால் உணரலாம்.

கைக்கிளை

கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். பெருமை யில்லாத தலைமக்கள் உறவு என்று கொள்ளப்படும் இக் கைக்கிளையைப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்திணையியலிலும், களவியலிலும் பேசுகின்றார். இக்கைக்கிளை தலைமகன்மாட்டு நிகழ்வதாக மட்டுமே ஆசிரியர் குறிப்பிடுகின்றார். தலைமகன் காமம் மிக்கவிடத்தே காமஞ்சாலாத இளமையோள்பால் சென்று தன் காமக் குறிப்பை எடுத்துக் கூற, அவள் சொல்லாடா நிற்கவும் இவன் சொல்லி இன்புறுவான், இது தான் கைக்கிளை என்பதை,

'காமஞ் சாலா இளமையோள் வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கியே புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே'

என்ற நூற்பா தெரிவிக்கின்றது. இனி

'முன்னைய நான்கும் முன்னதற் கென்ப'

என்ற நூற்பாவும் கைக்கிளைக்கு உரியதோர் மரபு உணர்த்துவதாகக் கொண்டு நான்கு என்பதற்கு ஏறா மடற்றிறம், இளமை தீராத்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத் திறம் மிக்க காமத்தின் மாறாகாத்திறம் என்பவற்றை உரைப்பார்.

களவியலில் இடம் பெறும்

'முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே'

என்ற நூற்பாவில் கைக்கிளைக் குறிப்பினை வைக்கின்றார் ஆசிரியர். இதில் இடம்பெறும் மூன்று என்பதற்கு உரை யாசிரியர் எண்வகை மணத்தினுள்ளும் அகரம் முதல் மூன்றும் கைக்கிளைப்பாற்படும் என்று கூறுகின்றார். ஐந்திணை ஒழுக்கத்தில் நிகழும் காட்சி முதல் குறிப்பறிதல் ஈறாக நிகழும் அத்திணையும் ஒருவர்மாட்டு மட்டுமே

நிகழ்தலின் அதனையும் கைக்கிளையாகக் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது.

பெருந்திணை

கைக்கிளையை விடப் பெருந்திணை ஒழுக்கத்தை மிகக் குறைவாகவே பேசுகின்றார். ஆசிரியர் பெருந்திணை இன்னது என்பதை,

> 'ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
> தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
> மிக்க காமத்து மடலொடு தொகைஇச்
> செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே'

என்ற நூற்பாவில் தெரிவிக்கின்றார். இதில் இடம்பெறும் மடலேறல் ஆண் இனத்துக்கே உரியது என்பது முன்னர்க் கூறப்பட்டது.

இவை மட்டுமல்லாமல் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம், தெய்வம் என்ற நான்கும் இப்பெருந் திணைப் பாற்படும் என்பது,

> 'பின்னர் நான்கும் பெருந்திணைப் படுமே'

என்ற நூற்பாவினால் தெரிய வருகின்றது. இவற்றை இவ் வாறு கூறியதற்கு.

'இந்நான்கும் ஒருதலைக்காமம் பற்றி நிகழாமையாலும் ஒருவனோடு ஒருத்தியை எதிர்நிறுவி அவருடம்பாட்டோடு புணர்க்கும் கந்திருவம் ஆனமையானும் அவற்றின் வேறாகிய பெருந்திணையாம்'

என்று காரணம் கூறுவர் நச்சினார்க்கினியர். இளம்பூரணர்,

> 'பெருந்திணை நடுவனைந்திணையாகிய ஒத்த காமத் தின் மிக்கும் குறைந்தும் வருதலாலும், எண்வகை மணத்தினும் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வமென்பன அத்திணைப் பாற்படுதலாலும் இந்நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்தலாலும் இவை உலகிலுட் பெருவழக்கு எனப் பயின்று வருதலாலும் அது பெருந்திணை என்று கூறப்பட்டது' என்பர். கைக்கிளையும், பெருந்திணையும், ஐந்திணை ஒழுக்கம் போலச் சிறந்த ஒழுக்கங்கள் அன்று

என்றாலும் அகவொழுக்கமாகவே ஆசிரியர் இவற்றைப் போற்றுகின்றார்.

களவியல்

களவு கற்பெனக் கைகோள் இரண்டு வகைப்படும். இதனைத் தொல்காப்பியனாரின்

'மெய்பெறும் அவையே கைகோள் வகையே

என்ற செய்யுளியல் நூற்பா விளக்கி நிற்கிறது. அகப்பொருள் விளக்க ஆசிரியரும்,

'அளவி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்'

என இவ்விருவகைக் கைகோளைக் குறித்துச் சொல்கின்றார். இவ்விருவகைக் கைகோளில் களவு என்ற கைகோளின் விளக்கமாக அமைவது களவியல், அதாவது பெருமையும் உரனும் மிக்க தலைவனும்,அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவற்றால் சிறந்த தலைமகனும் ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின் காரணமாக, நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்த அறிவுடம்பட்டுக் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றிக் கரந்த உள்ளத்தினராய்த் தம்முள் தாமே கூடி இன்புற்று வாழும் வாழ்வாகிய களவு வாழ்க்கையை இக்களவியல் விரித்தோதுகின்றது.

களவு - விளக்கம்

களவு என்பது மறையோரிடத்து ஓதப்பட்ட மணம் எட்டனுள்ளும் துறையமை நல்யாழினையுடையராய துணைமையோர் நெறி என்பதை,

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங் காலை
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே'

என்ற நூற்பாவில் நுவல்கின்றார் ஆசிரியர் தொல் காப்பியனார். எட்டு வகை மணங்களாகப் பிரமம் (கன்னியை

அணிகலன் அணிந்து பிரமசாரியா யிருப்பா னொருவனுக்குத் தானமாகக் கொடுப்பது). பிரசாபத்திலும் (மகட்கோடற்குரிய கோத்திரத்தார் மகன் வேண்டியவழி இருமுது குரவரும் இயைந்து கொடுப்பது). அவரிடம் (ஒன்றானும் இரண்டானும் ஆவும், ஆனேறும் வாங்கிக் கொடுப்பது), தெய்வம் (வேள்விக்கு ஆசிரியராய் நின்றார் பலருள்ளும் ஒருவர்க்கு வேள்வித்தீ முன்னர்க் கொடுப்பது), கந்திருவம் (ஒத்த இருவர் தாமே கூடுங் கூட்டம்), அசுரம் (வில்லேற்றினாதல் திரிபன்றி யெய்தானாதல் கோடற்குரியனெனக் கூறியவழி அது செய்தாற்குக் கொடுத்தல்), இராக்கதம் (தலைமகள் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது), பைசாசம் (களித்தார் மாட்டுத் துயின்றார் மாட்டுங்கூடுதல்) என்னும் இவற்றை உரையாசிரியர் குறித்துச் செல்கின்றார். இந்த எட்டனுள் காந்தருவமே தொல்காப்பியனார் கூறும் காமக்கூட்டம் என்பர் உரையாசிரியர்.

களவின் வகைகள்

காமக்கூட்டம் எனப்படும் இக்களவு காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என நான்கு வகைப்படும் என்பதைத் தொல்காப்பியனாரின்,

'காமப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்ற
ஆங்க நால்வகையினும்அடைந்த சார்வொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே'

என்ற செய்யுளியல் நூற்பா கிளத்துகின்றது. காமப் புணர்ச்சியாவது ஊழ் கூட்டத் தலைமகனும் தலைமகளும் நெஞ்சங் கலந்து ஒன்றுபடும் நிலை, நெஞ்சங் கலந்த இருவரும் காதலராய் வழித் தலைநாட் கண்ட இடத்திலேயே தொடர் நாளும் சென்று கண்டு கூடுதல் இடந்தலைப் பாடு, தலைமகன் தலைமகளைத் தன் பாங்கன் துணையாகக் கொண்டு கூடுவது பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் தோழியின் உதவியால் தலைமகன் தலைமகளைப் பெற்று மகிழ்வது. நம்பியக பொருள் ஆசிரியர் இக்களவு நெறியைப் பதினேழு வகைகளாகப் பகுத்துக் காட்டுகின்றார்.

தொல்காப்பியனார் களவின் வகைகளாக இவற்றைக் குறித்த போதும் இந்த முறையில் வைத்து நிகழ்ச்சிகளை விளக்குவதில்லை. பொதுவாக இவர் தலைமகன் கூற்று, தலைமகள் கூற்று, தோழி கூற்று என்ற கூற்று வகையாலேயே விரித்துச் செல்கின்றார். எனவே இவற்றைப் பயிலுவோரே உய்த்துணர வேண்டியிருக்கின்றது.

களவில் - தலைமக்கள்

தலைமகனும் தலைமகளும் களவில் ஈடுபடுதற்கு விதியே காரணம் என்பர் தொல்காப்பியனார். விதி கூட்டக் கூடுபவராகத் தலைமக்கள் திகழ்ந்தபோதும் அவர்கள் இருவரும் பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு, காமம், நிறை, அருள், உணர்வு, திரு என்றவற்றால் ஒத்திருத்தல் வேண்டும். தலைமகன் தலைமகளை விட மிக்கவனாக இருந்தாலும் நீக்கப்பட மாட்டாது என்று கூறுகின்றார்.

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே'

என்பது நூற்பா. இவ்வாறு பாலது ஆணையின் காரணமாக ஒருவனும் ஒருத்தியும் காணும்போது தலைமகள் சிறந்தவளாக இருக்குபோது மட்டுமே தலைமகனுக்கு ஐயம் நிகழும். இழிந்தவளாக இருக்கும்போது இழிநிலையே முன்னர்த் தோன்றும் ஆதலின் ஐயம் நிகழ வழியில்லை. இந்த ஐயம் தலைமகன்மாட்டு மட்டுமே நிகழும், தலை மகள்மாட்டு நிகழாது. இதனை.

'உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி
ஐயக்கிளவி ஆடூஉவிற்கு உரித்தே'

என்ற நூற்பாவினால் தெளியலாம். இவ்வாறு தலைமக னிடத்தே தோன்றும் ஐயத்தை, வண்டு, இழை, வள்ளி, பூ, கண், அலமரல், இமைப்பு, அச்சம் என்றின்ன பிறவும் கருவியாகிக் களையும் பான்மையினவாகும். ஐயம் நீங்கிய வழி தெளிவு பிறக்கும். அப்போது தலைமகன் தன் காமக்

குறிப்பினை வெளிப்படுத்த முனைவான். அவ்வாறு முனையும் போது அவன் சொல்லாடுதல் மரபின்மை ஆதலின் தன் காமத்தைக் கண்ணினால் குறிப்பாக உணர்த்துவான். தலை மகன் குறிப்பைத் தெளிந்து கொண்ட தலைவியும் தன் கண்ணினாலேயே குறிப்பினைத் தெரிவிப்பாள், காரணம் அந்த நிலையில் சொல்லாடுதல் தலைவிக்கு மரபன்று, மேலும் தன் குறிப்பினை வெளிப்படையாகத் தெரிவிக்கும் இயல்பு பெண்களுக்கு இயலாத ஒன்று ஆகும்.

'நாட்டம் இரண்டு அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்'

'குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்'

என்ற நூற்பாக்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

களவில் தலைமகன்

களவில் ஈடுபட்ட தலைமகனுக்குரியவற்றை மிகச் சில நூற்பாக்களிலேயே விளக்குகின்றார். ஆனால் தலைமகள், தோழி இவர்களுக்குரியனவற்றைப் பலவாறாக விளக்கு கின்றார். தலைமகன் பெருமையும் உரனும் மிக்கவனாக இருத்தல் வேண்டும். தலைமகன் தன் களவொழுக்கத்தை நாள் பார்த்துத்தான் மேற்கொள்ள வேண்டும். ஆற்றின்று அருமை, மனன் அழிவு, அஞ்சுதல், இடையூறு முதலியன தலைவன் மாட்டு நிகழாது. களவினை வெளிப்படுத்துதல் அம்பலும் அலரும் ஆதலின் அதற்குக் காரணமானவன் தலைமகனே.

களவில் தலைமகள்

தலைமகள் அச்சம், மடம், நாணம் முதலிய மூன்றும் மிக்கவளாகத் துலங்குதல் வேண்டும். இவ்வாறு இவை தலைமகள் நாணும், மடனும் மிக்கு இலங்குவதால் அவள் தன் வேட்கையினைக் குறிப்பினானும் இடத்தினானும் மட்டுமே புலப்படுத்துவாள். இனித் தலைமகள் தலைமகனைக் கூடும் வேட்கைக் குறிப்பினளாக இருந்தபோதிலும் அதற்

குடும்பட்ட நெறியைக் கூறுதல் அருமையுடைத்தாதலின் அதற்கு உடம்படாதாள் போன்று கூறும் கூற்று மொழியை உடையவள் ஆவள். இவ்வாறு தன் வேட்கையைக் கிழவன் முன் சொல்லாதவிடத்தும் அவ்வேட்கை புதுக்கலத்துட் பெய்த நீர்போலப் புறம்பொசிந்து காட்டும் இயல்பினை உடையது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர் தலைவன் மீண்டும் தன்னை வந்து கூடும் இடத்தைக் கூறுதல் தலைமகனுக்கே உரியது.

களவில் தோழி

தோழி எனப்படுபவள் செவிலியின் மகள். அவள் சூழவும் உசாத்துணை ஆகவும் வல்லள் ஆதல் வேண்டும். அவள் தலைவன் தலைவி இருவர்தம் களவினைக் குறையுற உணர்தல், முன்னுற உணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என்ற மூன்று வகையால் மதியுடம்படுவாள். தோழி மதியுடம்பட்டால்தான் பின்னர் கூட்டத்திற்குத் துணையாவாள். இனி கூட்டம் முயலும் காலத்து ஆராய்ந்து புணர்த்தலைச் செய்பவளும் தோழியே ஆவாள்.

களவு உணர்வகை

இவ்வாறு பாங்கியின் உதவியாகக் கொண்ட தலை மகளின் களவினை அவள் தந்தையும் ஐயரும் குறிப்பினால் உணர்வர். தாய் செவிலியைப் போன்றே தலைவியின் களவறிந்து கவல்வாள். தந்தையையும் தமையரையும் போன்று வெகுளுதல் செய்யாள். அம்பல், அலர் ஆகிய இரண்டும் கூட களவினை வெளிப்படுத்தி நிற்கும்.

கற்பியல்

தலைமகன் தலைமகள் இருவர்தம் கற்பு வாழ்க்கையின் விளக்கமாக அமைவது கற்பியல், கற்பொழுக்கமாவது பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு முதலிய பண்புகளால் ஒத்த தலைமகனும் தலைமகளும் (தலைமகன் மிக்கவ னாயினும் குற்றமில்லை) கொடைக்குரி மரபினோர்

கொடுப்பக் கொண்டு நாடறி நன்மண வதுவையயர்ந்து இருவரும் ஒருமனப்பட்டு இல்வாழ்க்கை நடாத்துதலே ஆகும். கற்பு என்ற சொல் இல்லறம் என்ற பொருளில் தொல்காப்பியத்தில் பலவிடங்களில் பயின்று வருகின்றன. கற்பு என்பதற்கு நச்சினார்க்கினியர் பின்வருமாறு விளக்கம் கூறுவர்.

'கற்பாவது தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்', 'கொண்டானின் சிறந்த தெய்வம் இன்றெனவும், அவனை இன்னவாறே வழிபடுக எனவும் இருமுதுகுரவர் கற்பித்தலானும் அந்தணர் திறத்தும், சான்றோர் தேத்தும், ஐயர் பாங்கினும், அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகள் கற்பித்தலானும் கற்பாயிற்று'

> "இவளை இன்னவாறு பாதுகாப்பாய் எனவும்,இவற்கு இன்னவாறே நீ குற்றேவல் செய்தொழுகெனவும் அங்கியங் கடவுள் அறிகுறியாக மந்திர வகையாற் கற்பிக்கப்படுதலின் அத்தொழிலைக் கற்பென்றார்'.

கற்பின் வகைகள்

தமர் கொடுப்பக் கொண்ட இல்லறவொழுக்கமானது மகிழ்தலும், புலத்தலும், ஊடலும், ஊடல், தீர்தலும், பிரிதலும், புணர்தலும் என்னும் இவற்றொடும் கூடிவரும் என்பதனைத் தொல்காப்பியனாரின்

'மறை வெளிப்படுதலுந் தமரின் பெறுதலும்
இவைமுத லாகிய இயனெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே'

என்ற செய்யுளியல் நூற்பா நவில்கின்றது. அகப்பொருள் விளக்க ஆசிரியர் நாற்கவிராச நம்பியார் இவ்வாழ்க்கையின் வகைகளாகக் கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி, செவிலி மகிழ்ச்சி, பாங்கி மகிழ்ச்சி என்பவற்றைக் காட்டுகின்றார். நம்பியார் கூறும் இல்வாழ்க்கை தொல்காப்பியனாரின் மலிவு என்ற வகைக்குள் அடக்கி விடுகிறது. புலவு. ஊடல், ஊடல் உணர்வு என்ற மூன்றும் நம்பியின் பரத்தையிற்

பிரிவின் விளக்கமாகிறது. பிரிவு என்பது தலைமகள் தலைமகளைப் பிரிந்து செல்லுதலையும், புணர்வு என்பது பிரிந்து சென்ற தலைமகள் மீண்டு வந்து கூடுதலையும் உணர்த்துகிறது. களவு வகைகளைப் போன்றே கற்பு வகை களில் நிகழ்ச்சிகளையும் தொல்காப்பியனார் தனித்தனியே விளக்கவில்லை. இங்கும் கூற்று வகையிலேயே கூறிச் செல் கின்றார்.

நுழைவாயில்

கற்பு வாழ்க்கையின் நுழைவாயிலாக அமையும் திருமணத்தை - வதுவை நன்மணத்தைக் குறித்துக் கற்பியலின் முதற்பகுதியில் பேசுகின்றார் ஆசிரியர்.

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

என்ற நூற்பா தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னர் தமிழர் கரணம் என்ற ஒன்று இன்றியே வாழ்ந்தனர். இவர் காலத்தில்தான் கரணம் என்ற ஒன்றுடன் இல்வாழ்க்கையைத் தொடங்கியுள்ளார், என்பதைப் புலப்படுத்தி நிற்கிறது. உரை யாசிரியர்களின் கூற்றுகளும் இதனை உணர்த்தி நிற்கின்றன. இக்கரணமும் களவு வெளிப்பட்டபின் வரைதல், களவு வெளிப்படா முன் வரைதல் என இருவகைப்படும். களவு வெளிப்படுமுன் தலைமகனும் தலைமகளும் உடன்போக்கு நிகழ்த்தும் காலத்தும் வரைந்து கொள்வர் என்பதை,

'கொடுப்போர் இன்றியுங் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான'

என்ற தொல்காப்பியனாரின் மொழியால் அறியலாம். களவு வெளிப்பட்ட பின் தலைமகன் தலைமகளை அவள் பெற்றோர் கொடுப்பக் கொள்வான். இவ்வாறு கொள்வது களவு வெளிப்பட்ட பின் வரைதலாகும். நம்பியகப் பொருள் ஆசிரியர் தன்மனை வரைதல், அவன்மனை வரைதல், உடன்போய் வரைதல் என்ற மூன்று நிலையைக் காட்டு கின்றார். தலைமகன் உடன்போய்த் தன்னூரின்கண் வரை தலும், தன்மனைக்கண் வரைதலும் ஆகிய இரண்டும்

ஒழித்து அல்லாத எல்லா வரைவின்கண்ணும் தலைமகன் சான்றோரையும், அந்தணரையும் முன்னிட்டு அருங்கலம் கொடுத்து வரைந்து கொள்வான் என்றும் அகப்பொருள் கூறுகிறது. தலைமகன் அருங்கலம் கொடுத்து வரைந்து கொள்ளுதலைத் தொல்காப்பியனார் குறிக்கவில்லை. தலைமகன் தலைமகளை அவள் பெற்றோரும் உற்றோரும் மற்றோரும் கொடுப்பக் கொண்ட நிலையையே தொல் காப்பியம் தெரிவிக்கின்றது. தலைமகளின் பெற்றோரையோ, உற்றோரையோ தொல்காப்பியத்தின்வழி அறிய முடிய வில்லை. தலைமகன் தன் திருமணத்திற்குத் தன் பெற்றோரின் இசைவினைப் பெற்றானா இல்லையா? என்பதும் அறிதற் கில்லை.

கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக் கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொண்டு தன் இல்லத்திற்கு ஏகினானா? அன்றித் தலைமகன் வீட்டிலேயே தன் இல் வாழ்க்கையைத் தொடங்கினானா? அன்றித் தனிமனை வாழ்க்கை மேற்கொண்டானா என்பது பற்றிய செய்தி களையும் தொல்காப்பியத்தின் வழி அறிய முடியவில்லை.

மகட்கொடை மன்றலைத்தான் தொல்காப்பியனார் குறிப்பிடுகின்றார். தலைமகன் வீட்டில் திருமணம் நடை பெற்றிருக்கக் கூடுமா என்பது ஐயத்திற்குரியதே!

கற்பில் தலைவன்

உணர்ப்பு வரை இறப்பினும், செய்குறி பிழைப்பினும் தலைமகன் புலத்தலுக்கும் கூடலுக்கும் உரியவன்.

தலைமகன் காமம் மிக்கவிடத்துக் தலைமகளிடத்துப் பணிவான மொழிகளைத் தோற்றுதற்கும் உரியவன்.

பின்வருமுறை ஆக்கிய பெரும்பொருள் வதுவையுடன் தொன்முறை மனைவியை எதிர்ப்படுகின்ற காலத்தும், புதல்வனை வாயிலாகக் கொண்டு புகுமிடத்தும் கலங்குதற்கு உரியன்.

தலைமகன் தலைமகள்முன் தன்னைப் புகழ்ந்து கூறுதல் வினைவயிற் பிரியும் வழி உரித்து.

எல்லாப் பிரிவின் கண்ணும் தலைமகன் தலைமகளை வற்புறுத்தியல்லது சேறுதல் இல்லை.

இதுபோல் தலைமகனுக்குரிய மரபுகள் பலவற்றைக் கற்பியலில் ஆசிரியர் தொல்காப்பியனார் எடுத்துரைக்கின்றார்.

கற்பில் தலைவி

தலைமகளின் மாண்புகள் இன்னின்ன என்பதை,

'கற்புங் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோன் மாண்புகள்

என்ற நூற்பாவில் அறிவிக்கின்றார்.

தலைமகள் தலைமகன்மாட்டு அருண்முந்துறுத்த அன்பு பொதி கிளவியைப் பொருள்பட மொழிபவளாக இருத்தல் வேண்டும்.

தலைமகள் தலைமகனொடு பாசறைக்கண் செல்லாள். ஆனால் புறப்பெண்டிரைத் தலைமக்கள் பாசறைக்கண் புணர்வர்.

கிழவன் முன் கிழத்தி தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் எக்காலத்தும் இல்லை என்பது போன்ற தலைமகளுக்குரிய மரபுகள் சிலவற்றையும் ஆசிரியர் இவ்வியலில் விரித்துரைக்கின்றார்.

வாயில்கள்

அகத்திணைச் சமுதாயத்தில் அகவொழுக்கத்தை மேற்கொள்ளும் தலைவன், தலைவி என்னும் இருவருக்கும் உதவுபவராக இருப்பவரைத் தொல்காப்பியனார் வாயில்கள் என்பர். இவர் இன்னார் என்பதை,

'தோழி, தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப'

என்ற நூற்பாவில் தொகுத்துக் கூறுகின்றார். இவ்வாயில் களில் அறிவர் முதலான மிக உயர்ந்தவரும், தோழி முதலான ஒத்தவரும், பாணன் முதலான தாழ்ந்தவரும் இருத்தலின் இவ்வாயில்களைப் பணியாளர் என்ற சொல்லால் வழங்குதல் கூடாது. தலைவியும் தலைவனும் நன்கு வாழ் வதற்கு வாயிலாக இருத்தலால் வாயில்கள் என்ற சொல் லால் வழங்குதலே தக்கதாகும். இவர்கள் தலைவன் தலைவி என்னும் இருவர்தம் மனமகிழ்ச்சிப் பொருளினையே நிகழ்த்துதற்குரியர். இவர்கள் தலைவனிடத்தே சென்று தலைவியைப் பற்றிப் பேசுவாராயின் தலைவியின் கற்பு, காமம், நல்லொழுக்கம், பொறுமை, நிறை, விருந்து, புறந்தருதல், சுற்றம் ஓம்பல் முதலான நற்பண்புகள் கூறுதல் வேண்டும். இவர்கள் வெளிப்படையாகப் பேசுதற்கே உரியர்.

கூற்று நிகழ்வகை

கற்பில் கூற்று நிகழ்த்துதற்குரியார் இன்னின்னார் என்பதனை,

'பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொன்னெறி மரபின் கற்பிற் குரியர்'

என்ற நூற்பா தெரிவிக்கின்றது. இதில் முன்னுறக் கிளந்த அறுவர் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி என்பவர் ஆவர். இவர்கள் அறுவரும் களவினிற் கூடுதற்குரியோர் ஆவர். இவர்கள் அனைவருக்கும் கூற்று நிகழ்கின்ற வகையினையும் தொல்காப்பியனார் கற்பியலில் விரிவாகப் பேசுகின்றார்.

சிறந்தது பயிற்றல்

தலைமகனும் தலைமகளும் இல்லறம் நிகழ்த்தும் பாங்கினைக் கற்பியலில் உணர்த்திய ஆசிரியர் தொல் காப்பியனார் அதன் பிற்பகுதியில் காமஞ்சான்ற நிலையில் தலைமகனும் தலைமகளும் ஆற்ற வேண்டிய செயலினை,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'

என்ற நூற்பாவில் விளக்குகின்றார். இளம்பூரணர் சிறந்தது பயிற்றல் என்பதற்கு 'அறத்தின் மேல் மனநிகழ்ச்சி' என்கின்றார்.

நச்சினார்க்கினியர் இந்நூற்பா முன்னர் இல்லற நிகழ்த்திய தலைவனுந் தலைவியும் பின்னர்த் துறவற நிகழ்த்தி வீடுபெறுதலைக் குறிக்கின்றது என்பர். அதாவது,

'தலைவனுந் தலைவியும் உரிமைச் சுற்றத்தோடே கூடிநின்று இல்லறஞ் செய்தலை விரும்பிய மக்களோடே தமக்கு முன்னரமைந்த காமத்தினைத் தீதாகவுட் கொண்ட காலத்திலே அறம்பொருளின்பத்திற் சிறந்த வீட்டின்பம் பெறுதற்கு ஏமஞ்சான்றவற்றை அடிப்படித்தல் யான் முன்கூறிய இல்லறத்தின் பயன்'

என்று உரை வகுக்கின்றார்.

டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் தொல்காப்பிய ஆராய்ச்சி என்ற தம் நூலில்,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை' என்ற நூற்பா துறவறம் பற்றிப் பேசாமல் இல்வாழ்வாரின் அன்பு மறனுமுடைய மனையற வீறு கூறுதலையே அதனினும் அன்பின் ஐந்திணைப் பகுதியாகக் கற்பியலில் மனையறச் சிறப்பே விளக்குகிறது'

என்று குறிக்கின்றார்.

சி. இலக்குவனாரும் தொல்காப்பிய ஆராய்ச்சி என்ற தம் நூலில்,

'காதல் நிறைந்த வாழ்விற்குக் கடையாணி போன்ற மனைவியைக் கொண்ட காலத்தில் இன்பமும் துணையும் பொருந்திய மக்களொடு நிறைந்து அறமே செய்கின்ற சுற்றம் சூழத் தலைவனும் தலைவியும்

சிறந்த செயல்களைச் செய்தலே இறந்ததன் பயனாகக் கொள்ளத் தக்கது'

என்று கூறி நச்சினார்க்கினியர் மொழியை மறுத்து மொழிகின்றார்.

'இவ்வாறு நேர்ப்பொருள் காணுவதை விடுத்து நச்சினார்க்கினியர் வடமொழி நூற்பொருளை நச்சி நூற்பாவின் சொற்கோப்பைச் சிதைத்து உளம் போனவாறு உரைகளைக் கூறித் தமிழர் வாழ்வியல் நெறியை மறைத்து வடவர் வாழ்வு முறையே தமிழர்க்கும் என நிலைநாட்டித் தம் வடமொழிப் புலமையை வையம் அறிந்து மகிழ வகை செய்து விட்டார்'

என்பது அவர்தம் மறுப்புரை. ஆழ்ந்து நோக்கும் நச்சி னார்க்கினியர் உரை ஏற்புடைய ஒன்றாகத் தோன்றவில்லை.

பொருளியல்

'இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின் பொருளியல் என்னும் பெயர்த்து. பொருளியல்பு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். என்னை பொருளியல்பு உணர்த்திய வாறு எனின், மேற்சொல்லப்பட்ட ஓத்துக்களினும், இனிச் சொல்லும் ஓத்துக்களினும் வரும் பொருளினது தன்மை யுணர்த்துதலிற் பொருளியல் உணர்த்திற்று'

என இவ்வியலுக்கு விளக்கம் தரும் இளம்பூரணர் "இதனை ஒழிபியல் எனினும் இழுக்காது; அகப்பொருள் புறப்பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றன கூறினமையின்" என்றும் கூறுவர் நச்சினார்க்கினியர்.

'இவ்வோத்துப் பொருளிலக்கணம் உணர்த்தினமையிற் பொருளியல் என்னும் பெயர்த்தாயிற்று. ஏனை ஓத்துக்களும் பொருளிலக்கணமன்றே உணர்த்தின. இதற்கு இது பெயராயவாறு என்னையெனின்; சொல்லதி காரத்திற் கூறிய சொற்களை மரபியலின் இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத் திரிபல் சொல்லென் பராதலின் அவை ஈண்டுத் தம்பொருளை

வேறுபட்டிசைப்பினும் பொருளாமெனவும், இப் பொருளதிகாரத்து முன்னர்க் கூறிய பொருள்களிற் பிறழ்ந்திசைப்பனவும் பொருளாமெனவும் அமைத்துச் சொல்லுணர்த்தும் பொருளும் தொடர்மொழி உணர்த்தும் பொருளும் ஒருங்கே கூறலிற் பொருளியல் என்றார்'

என உரை விளக்கம் செய்வர். இருவரும் இருவேறுபட்ட உரைகளைத் தந்து நிற்கின்றனர்.

பொருளியலை நோக்கும்பொழுது அது முன்னர் அகத்திணையியல், களவியல், கற்பியல் முதலிய இயல்களில் குறிப்பிடப்படாத அகப்பாடல் மரபுகளையும், அகப்பாடல் மாந்தர் மரபுகளையும், செய்யுள் மரபுகளையும் இன்னும் இதுபோன்ற பிறவற்றையும் உணர்த்துகின்றமை தெளிவாகிறது.

அகப்பாடல் மரபு

மக்கள் நுதலிய அகனைந்திணையும் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாத அகப்பாடலில் உண்ணுதல் தொழிலுக்குரியவல்லாத பொருளை உண்ணும் இயல் புடையனபோலக் கூறலும் மரபு என்பதை,

'உண்டற் குரிய அல்லாப் பொருள்
உண்டன போலக் கூறலும் மரபே'

என்ற நூற்பா எடுத்தோதுகின்றது,

அகப்பாடல் மாந்தர் மரபு

அகப்பாடல் மாந்தர்களான தலைமகன், தலைமகள், தோழி, தாய், செவிலி, வாயில்கள், பரத்தையர் இவர்க்குரிய நியதிகள் சிலவற்றையும் இப்பொருளியல் உணர்த்தி நிற்கிறது.

தலைமகன், தலைமகள் இருவருக்கும் காமம் மிக்க நிலையில் களவு தோன்றுதல் இயற்கை என்பதனை,

'களவும் உரித்தால் அவ்விடத்தான'

என்பதனால் தெரிய வருகின்றது.

களவுக் காலத்தில் தலைமகன் தலைமகளை தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்து சென்று காண்டற்கும் உரியவன்

'தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர்'

என்பது நூற்பா.

களவுக் காலத்தில் தலைமகளைப் புகழ்ந்துரைப்பது போன்றே வேட்கை மிக்கவிடத்து கற்புக் காலத்திலும் புகழ்தல் உண்டு. இதனை,

'நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியில்
புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே'

என்றதனால் தெளியலாம். தலைமகன் புலவிக் காலத்தில் தலைமகளைப் பணிதற்கும் உரியவன்.

'மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலை புலவியுள் உரிய'

என்பன போன்ற தலைமகனுக்குரிய மரபுகளை இப் பொருளியல் உணர்த்தி நிற்கும்.

தலைமகன் பிரிந்து சென்ற காலத்தில் தலைமகள் தன் உடம்பும் உயிரும் வாடிய காலத்திலும் ஆற்றியிருத்தற்கு உரிய அன்றித் தலைமகள் சென்ற இடத்திற்குச் சேர்தற்கு உரிமையுடைவள் அல்லள். இதனை,

'உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
என்னுற் றனகொல் இவையெனில் அல்லதைக்
கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை'

என்றதனால் தெளியலாம். அவ்வாறு அவள் பிரிந்து சென்ற காலத்தில் நெஞ்சோடு உசாவுமிடத்து தலைமகனோடு சேர்தல் உரியதாகவும் உண்டு,

'ஒருசிறை நெஞ்சோ டுசாவுங் கால்
உரிய தாகலும் உண்டென மொழிய'

என்ற நூற்பா இதனை உணர்த்துகிறது.

இவ்வாறே தோழி, செவிலி, நற்றாய், பரத்தை முதலி யோர்க்குரிய சில நியதிகளையும் உள்ளுறை, இறைச்சி பற்றி இவை இடம்பெற வேண்டிய நிலை பற்றியும் எடுத்துக் காட்டி இறுதியில் காட்டலாகாப் பொருள்கள் இன்னின்ன என்பதை எடுத்துக் கூறிப் பொருளியலை முற்றுப்பெற வைக்கின்றார்.

புறத்திணையியல்

தொல்காப்பியனார் அகப்பொருளையும், புறப் பொருளையும் இயைபில்லாத இரண்டு திணைகளாகக் கூறாமல் புறத்திணைகளை அகத்திணைகளோடு இயைபு படுத்தியே கூறியுள்ளார். அதனால் அகத்திணை இலக்கணங் களை அரில்தப உணர்ந்தோர்க்குப் புறத்திணை இலக்கணம் கூறுபாடு தோன்றக் கூறப்படுகின்றது.

'அகத்திணை மருங்கில் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்'

என்று புறத்திணை இலக்கணத்தைத் தொல்காப்பியனார் கூறத் தொடங்குகின்றார்.

ஒரு பெரிய செயலினைப் பல பகுப்பாகப் பிரித்துக் கொண்டு அப்பகுப்பிற்கெல்லாம் தனித்தனிப் பெயர் வைத்து வழங்கும் வழக்கத்தை அகத்திணையியலிலும், புறத்திணை யியலிலும் காண்கின்றோம். அந்த முறையில் வெட்சித்திணை முதலிய திணைகளையெல்லாம் பலப்பல பகுப்பாகப் பிரித்துக் கொண்டு அவற்றிற்கெல்லாம் பெயர் வைத்துத் தொல்காப்பியனார் கூறுகின்றார்.

வெட்சி என்னும் புறத்திணை குறிஞ்சி என்னும் அகத்திணைக்குப் புலனாகும். அது வேந்தனாலே விடப்பட்ட முனையிடத்துள்ள வீரர் பகைவர் நாட்டினுள் புகுந்து அவர்தம் ஆக்களைக் கொண்டு வந்து ஓம்புதலாகும்.

'வெட்சி தானே குறிஞ்சியது புறனே'

'வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்'

என்பன தொல்காப்பியனாரின் கூற்றுக்கள். இது படையியங்கு அரவம் முதலான பதினான்கு துறைகளை உடையது.

வெட்சித் திணையின் பின் நிகழ்வது வஞ்சி முதலிய போராதலால் அதற்கு உறுதி பயத்தற்காக மறவர்தம் குடியையெல்லாம் திரட்டி அவர்தம் ஆற்றலையெல்லாம் ஆராய்ந்து பாராட்டும் குடிநிலை என்னும் துறையும் கொற்றம் தரும் கொற்றவையை வழிபட்டு இனி நடக்கும் போரில் வேண்டும் கொற்றவை நிலை என்றும் துறையும் அடுத்துக் கூறப்படுகின்றன.

பகை மன்னன் ஆநிரைகளைக் கவர்ந்து சென்றவுடன் அவற்றிற்குரிய அரசன் மீட்டுச் செல்லும் வெட்சியே இதனை வேலன் முதலாக உள்ள இருபத்தொரு துறையில் விளக்குகின்றார்.

வெட்சித்திணையில் வஞ்சித்திணையை விளக்கு கின்றார். இது முல்லைக்குப் புறனானது. இது மண்ணசை காரணமாக வந்த வேந்தனை மண்ணிற்குரிய மன்னன் அவன் அஞ்சுமாறு சென்று அடல் புரிதல் ஆம். இதனை,

'வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே'

என்றதனால் உணரலாம். இது இயங்கு படை அரவம் முதலாக அழிபடை தட்டோர் தழிஞ்சி ஈறாக பதின்மூன்று துறைகளை உடையது.

வஞ்சித்திணைக்கு அடுத்து விளக்கம் பெறுவது உழிஞைத்திணை. இது மருதத்திற்குப் புறம்பானது. இது பகை மன்னர்தம் அரணினை முற்றுகையிடலும், கோடலும் என்னும் இரு வகையாக நிகழ்வது.

'உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முன்னலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப'

என்பது தொல்காப்பியம் காட்டும் நூற்பா. இந்த உழிஞைத்திணை கொள்ளார் தேளங் குறித்த கொற்றம் முதலாக உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில் உளப்பட எட்டு வகைப்படும் என்பர்.

'அறவே தானும் இருநூல் வகைத்தே'

என்பது அந்நூற்பா. இந்த உழிஞைத்திணை குடை நாட் கோள் முதலாக தொகைநிலை ஈறாகப் பன்னிரண்டு துறைகளை உடையது.

அடுத்ததாக விளக்கத்திற்கு அமைவது தும்பைத்திணை. இது நெய்தல் திணைக்குப் புறனானது. இது வலிமை காரணமாக வந்த வேந்தனை எதிர்ப்பட்டு அவன் மாற்றான் அவன்தன் வலிமையினை அடக்குவதன் காரணமாக நிகழ்வது.

'தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொரு ளாக வந்த வேந்தனை
சென்றுதலை அழிக்கும் சிறப்பிற் றென்ப'

என்ற நூற்பா இதனை எடுத்தோதுகின்றது. இந்தத் தும்பைத் திணையும் உழிஞைத் திணையைப் போன்றே பன்னிரண்டு துறைகளை உடையது.

இத்திணைகளில் கூறப்பட்டுள்ள துறைகளின் வெட்சி யிற் கூறப்பட்டுள்ள ஊர்கொலையும், வஞ்சியிற் கூறப் பட்டுள்ள எரிபரந்தெடுத்தல் என்னும் துறையும் போரினால் பகைவர் நாட்டுப் பொதுமக்கட்கு ஏற்படும் துன்பத்தை எடுத்துக் காட்டும். நல்ல நாள் பார்த்துப் போர் தொடங் கும் முறையைக் குடைநாட்கோள் வாள்நாட்கோள் என்னும் துறைகளால் அறிந்து கொள்ளலாம்.

வாகைத்திணை பாலைத்திணைக்குப் புறனாக அமைவது, வாகைத்திணையினைத் தொல்காப்பியனார்,

'வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப'

என்ற நூற்பாவினால் விளக்குவர். வாகைத் திணைக்குரிய மக்களை இதனை அடுத்த நூற்பாவில் விளக்குகின்றார். இவர்கள் அறுவகைத் தொழில் செய்யும் பார்ப்பனர், ஐந்து தொழில் செய்யும் அரசர், ஆறு தொழில் செய்யும் வணிகர், வேளாளர், குற்றமில்லாத செயல்களை முக்காலமும் முறையுடன் செய்து வரும் அறிவர், எட்டுவகைத் தவத் தொழில் புரியும் தாபதர், பலவகையான தொழில் முறை களை அறிந்து போர் முதலியவற்றில் ஈடுபடும் பொருநர் என ஏழுவகைப்படுவர்.

அகத்திணைச் சமுதாயத்தில் அகவொழுக்கத்திற் குரியவராக ஆயர், வேட்டுவர் முதலான திணைமக்களைக் கூறிய தொல்காப்பியனார் அகத்திணையுடன் இயைபுடைய புறத்திணையைக் கூறுமிடத்து ஆயர் வேட்டுவர் முதலான வரைச் சிறிதும் குறிப்பிடாது புறத்திணைத் தொழிலுக்கு உரியவராகப் பார்ப்பனர், அரசர், வணிகர் முதலிய ஏழு பிரிவான மக்களையே கூறுதல் சிந்திக்க வேண்டிய ஒன்று. வாகை முதலிய தொழில் மேலாதலின் அறுவகை, ஐவகை, இருமூன்று வகை முதலியனவெல்லாம் தொழிலையே குறிப்பனவாம். வாகைத்திணைக்குரிய மக்களுள் அறிவரும் தாபதரும் உலகியல் நெறிக்கு அப்பாற்பட்ட ஒழுக்க முடையவராவர்.

பார்ப்பனரையும், அரசரையும் வேறுபடுத்திக் கூறிய தொல்காப்பியனார் வணிகரையும், வேளாளரையும் 'இரு மூன்று மரபின் ஏனோர்' என்று ஒன்றுபடுத்தியே கூறு கின்றார். இவ்வாகைத் திணைகளைக் கூறும் மற்றொரு நூற்பாவில்,

'பகட்டி றானும் ஆவி னாலும்
துகள்தபு சிறப்பில் சான்றோர் பக்கமும்'

என்று வேளாளரையும், வணிகரையும் சான்றோர் என்று ஒன்றுபடுத்திக் கூறுகிறார். இப்பகுதிக்கு உரை வகுத்த இளம்பூரணர் "பகட்டால் (எருது) புரைதீர்ந்தார் வேளாளர், ஆவால் குற்றம் தீர்ந்தார். வணிகர் என்பர்,. தொல் காப்பியனார் அடியோர் வினைவலர் என்று பணிமக்கள்

சமுதாயத்தை குறிப்பிட்டு விட்டு அந்தணர் முதலான நால்வரையும் ஏவல் மரபில் ஏனோர் (பிறரை ஏவிக்கொள்ளும் மரபின் ஏனோர்) என்று குறிப்பதால் வேளாளருக்கு மற்ற மூவருக்கும் பணி செய்யும் தொழில் உண்டு என்று கூறுதல் ஆரியச் சார்பால் நிகழ்ந்ததாகும்.

இந்த வாகைத்திணை கூதிர்ப்பாசறை முதலாக பதினெட்டுத் துறைகளை உடையது என்பதனை அடுத்து நூற்பாவில் விளக்குகின்றார்.

வாகைத்திணையை அடுத்துக் காஞ்சித் திணையை விளக்குகின்றார் ஆசிரியர். இக்காஞ்சித்திணை பெருந் திணைக்குப் புறனானது. இது நிலைமையாமையைப் பற்றி பேசும் பாங்கினது. இதனை,

'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே'

என்ற நூற்பாவால் தொல்காப்பியனார் விளக்குகின்றார். இது இரண்டு பகுப்பாக ஓதப்பட்டுள்ளது. உண்மைப் பொருள் உணர்வார்க்கு நிலையாமை உணர்ச்சி உறுதி பயக்கும் ஆதலின் பாங்கரும் சிறப்பினை உடையது என்பர். புறப் பொருள் வெண்பாமாலை முற்றிலும் மாறுபட்ட நிலையில் காஞ்சித்திணையினை விளக்குகின்றது. அதாவது மண்கருதி வஞ்சி சூடி வந்த மன்னனுடன் மண்ணைக் காத்தலுக் குரியவன் காஞ்சி என்றும் மலர்சூடிப் போர் புரிவதனை குறிப்பிடுகின்றது. இது பன்னிருபடல நெறி ஆகும்.

இறுதியாக விளக்கத்திற்கு அமைவது பாடாண் திணை. இது கைக்கிளைக்குப் புறனான திணையாகும்.இது எட்டு வகையினை உடைத்து. இதனை

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே'

என்ற நூற்பா விளக்கி நிற்கிறது. இவ்வியலில் தெய் வத்தையும், தெய்வத்தை ஒத்தாரையும் மக்களையும் பல்வகை நெறியில் பாடும் முறை கூறப்பட்டுள்ளது.

சமுதாயத்தை குறிப்பிட்டு விட்டு அந்தணர் முதலான நால்வரையும் ஏவல் மரபில் ஏனோர் (பிறரை ஏவிக்கொள்ளும் மரபின் ஏனோர்) என்று குறிப்பதால் வேளாளருக்கு மற்ற மூவருக்கும் பணி செய்யும் தொழில் உண்டு என்று கூறுதல் ஆரியச் சார்பால் நிகழ்ந்ததாகும்.

இந்த வாகைத்திணை கூதிர்ப்பாசறை முதலாக பதினெட்டுத் துறைகளை உடையது என்பதனை அடுத்து நூற்பாவில் விளக்குகின்றார்.

வாகைத்திணையை அடுத்துக் காஞ்சித் திணையை விளக்குகின்றார் ஆசிரியர். இக்காஞ்சித்திணை பெருந் திணைக்குப் புறனானது. இது நிலைமையாமையைப் பற்றி பேசும் பாங்கினது. இதனை,

'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே'

என்ற நூற்பாவால் தொல்காப்பியனார் விளக்குகின்றார். இது இரண்டு பகுப்பாக ஓதப்பட்டுள்ளது. உண்மைப் பொருள் உணர்வார்க்கு நிலையாமை உணர்ச்சி உறுதி பயக்கும் ஆதலின் பாங்கரும் சிறப்பினை உடையது என்பர். புறப் பொருள் வெண்பாமாலை முற்றிலும் மாறுபட்ட நிலையில் காஞ்சித்திணையினை விளக்குகின்றது. அதாவது மண்கருதி வஞ்சி சூடி வந்த மன்னனுடன் மண்ணைக் காத்தலுக் குரியவன் காஞ்சி என்றும் மலர்சூடிப் போர் புரிவதனை குறிப்பிடுகின்றது. இது பன்னிருபடல நெறி ஆகும்.

இறுதியாக விளக்கத்திற்கு அமைவது பாடாண் திணை. இது கைக்கிளைக்குப் புறனான திணையாகும்.இது எட்டு வகையினை உடைத்து. இதனை

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே'

என்ற நூற்பா விளக்கி நிற்கிறது. இவ்வியலில் தெய் வத்தையும், தெய்வத்தை ஒத்தாரையும் மக்களையும் பல்வகை நெறியில் பாடும் முறை கூறப்பட்டுள்ளது.

பொதுவாக வாகை, காஞ்சி, பாடாண் என்னும் மூன்று திணைகளில் வாகைத் திணையும், காஞ்சித்திணையும் புலவன் நாட்டு மக்களைக் குறித்து அவர்தம் பலவகைச் செயலைப் பாடுவனவாகவும், பாடாண் திணை நாட்டு மக்கள் அனைவரையும் நோக்கி எழுந்ததாகவும் கொள்ளக் கிடக்கின்றன.

நிறைவுரை

இவ்வாறாகத் தொல்காப்பியனார் தம் பொருளதி காரத்தின் ஒன்பது இயல்களுள் முதல் ஐந்து இயல்களில் அகத்திணையியல், பொருளியல் என்னும் இரண்டு இயல்களில் அகவொழுக்கத்திற்குரிய பொதுவான இலக் கணங்களையும், களவியலில் களவு என்னும் கைகோளினை யும், புறத்திணையியலில் புறப்பொருள் பற்றியும் மிக விரிவாகப் பேசுகின்றார்.

27

தொல்காப்பியமும் சமுதாய இயலும்

தோற்றுவாய்

"தொல்காப்பியமும் சமுதாய இயலும்" என்று எழுதப்பெறும் இக்கட்டுரையில் முதற்கண் தொல் காப்பியனாரைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். தொல் காப்பியத்தின் சிறப்புப் பாயிரம் தமிழ் கூறு நல்லுலகத்தில் தமிழ் நாட்டு முடிமன்னர் மூவரும் நன்கு வாழ்ந்திருந்த காலத்தில் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்தே. அதங் கோட்டாசான் கேட்பத் தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டதாகக் கூறுகிறது.

மாங்குடி மருதனார் என்னும் புலவர் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் மேற் பாடிய மதுரைக்காஞ்சி என்று பாட்டில் அந்நெடுஞ்செழியனை,

"நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்"

என்று நிலந்தரு திருவிற் பாண்டியன் வழித்தோன்றல் என்று குறிப்பிடுகின்றார். (உம்பல் என்னும் பலபொருள் ஒரு சொல் 'வழித்தோன்றல்' என்னும் பொருளை இங்கே தருகிறது). எனவே பாண்டியன் நெடுஞ்செழியன் தொல் காப்பியம் அரங்கேறிய நிலந்தரு திருவின் நெடியோன் வழியிலே வந்தவனாகக் கருதப்படுகிறான். மதுரைக் காஞ்சியின் காலம் கிபி. முதல் நூற்றாண்டாகவோ அல்லது இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமாகவோ கருதப்படுவதால் அக்காலத்தில் வாழ்ந்திருந்த நெடுஞ்செழியனுக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பு நிலந்தரு திருவின் நெடியோன் வாழ்ந்திருத்தல் வேண்டும். எனவே அக்காலமே தொல்காப்பியனார் வாழ்ந்திருந்த காலமாகும்.

எனவே தொல்காப்பியனார் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்தவராவார். அதனால் அக்காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த மக்கள் வாழ்க்கை இயல்புகளை அறிந்து கொள்வதற்குத் தொல்காப்பியம் பயன்படுகிறது. தொல்காப்பியனார் இலக்கியப் புலவரல்லர். அவர் ஓர் இலக்கணப் புலவராவார். அவர் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை மட்டும் இயற்றினார். பன்னிரு படலத்தில் வெட்சிப் படலத்தைத் தொல்காப்பியனார் இயற்றியதாகப் பன்னிருபடலப் பாயிரம் கூறுகிறது. தொல்காப்பியத்தில் கூறப்படும் வெட்சித்திணையின் இலக்கணத்திற்கும் பன்னிரு படலத்தில் கூறப்படும் வெட்சித்திணையின் இலக்கணத் திற்கும் வேறுபாடிருத்தலாலும் பன்னிரு படலச் செய்திகள் பல தொல்காப்பியச் செய்திகளுடன் மாறுபட்டிருத்தலானும் தொல்காப்பியம் செய்த தொல்காப்பியனாரும் பன்னிரு படலத்தில் வெட்சிப் படலம் இயற்றிய தொல்காப்பிய னாரும் வேறு வேறாவர். தொல்காப்பியத்தைப் போலப் பன்னிரு படலம் பழமையுடையதன்றாதலின் அதனை இயற்றிய தொல்காப்பியரும் தொல்காப்பியம் இயற்றிய தொல்காப்பியனாருக்குப் பிற்பட்டவராவர்.

தொல்காப்பியனார் தம் காலத்திலே தமிழ் நாட்டில் வழங்கி வந்த உலக வழக்கம் செய்யுள் வழக்கம் என்னும் இரண்டினையும் முதற் கருவியாக வைத்துக் கொண்டும் அவற்றுடன் முந்நூலையும் ஆராய்ந்து கண்டும் தம் இலக்கண நூலைச் செய்ததாகத் தொல்காப்பியப் பாயிரம் கூறுதலின், தொல்காப்பியத்தில் தொல்காப்பியனார் காலத்து மக்கட் சமுதாய இயலையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். தொல் காப்பியத்தில் மக்கட் சமுதாய இயலை ஆராய்வதற்கு எழுத்தும் சொல்லும் ஓரளவே பயன்படுவனாகும்; ஆனால், பொருளதிகாரம் மட்டும் முற்றிலும் பயன் தரும்.

சமுதாயம்

இனிச் சமுதாயம் என்ற சொல்லைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். மன்பதை என்ற சொல்லும் பைஞ்ஞீலி என்ற சொல்லும் மக்கட் பரப்பை உணர்த்தும் என்று திவாகரம்

முதலான மூன்று நிகண்டுகளும் கூறுகின்றன. திவாகர நிகண்டு திரண்டோர் பெயரை,

" சங்கமும் குழுவும் கூட்டமும் கணமும்
தங்கிய தொகுதியும் சவையும் அவையும்
இங்கிவை திரண்டோர் யாவர்க்கு முரிய'

என்று கூறுகிறது. ஆனால் சூடாமணி நிகண்டாவது திரண்டோர் பெயரைக் கூறும்பொழுது,

"சவைசம வாயம் சங்கம் சமுதாயம் சமூகம்கோட்ட
அவைகுழாம் குழுவே கூட்டம் அடர்திரள் கணங்களா
றிவைதிரண் டோர்பேர்"

என்று கூறுகிறது. இங்கே 'சமுதாயம்' என்னும் சொல் வந்துள்ளது. இது திரண்டோர் பெயரைக் குறிக்கும் என்று சூடாமணி நிகண்டாசிரியர் கருதுகிறார். இச் 'சமுதாயம்' என்னும் சொல் இக்காலத்தே மன்பதை என்ற சொல்வினைப் போல மக்கட் பரப்பையெல்லாம் உணர்த்துகிறது. எனவே தொல்காப்பியரின் காலத்து வாழ்ந்திருந்த மக்கட் பரப்பின் இயலை ஒருவாறு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரமும் சமுதாய இயலும்

சமுதாய இயலை ஆராய்வதற்குக் தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்னும் இரண்டினை விடப் பொருளதிகாரம் மிகவும் பயன்தரும் என்று முன்னே குறிப்பிட்டேன். அப்பொருளதிகாரம் மக்கள் தம் ஒழுக்க நெறியை அகவொழுக்கம் புறவொழுக்கம் என்ற இரண்டாகப் பிரித்துக் கொண்டு அவற்றிற்கு முறையே அகத்திணை புறத்திணை என்று பெயர் வைத்து அவற்றை முறைப்படுத்திக் கூறுகிறது. அகவொழுக்கத்தை அகத்திணை இயல் என்று பொதுவியலாலும் களவியல் கற்பியல் என்ற சிறப்பியல்களாலும் பொருளியல் என்ற பொதுவியலாலும் தொல்காப்பியனார் கூறுகிறார். புறவொழுக்கத்தைப் புறத் திணையியல் என்ற ஓரியலாலேயே கூறுகிறார். இரண்

டொழுக்கத்திற்கு வேண்டும் பொதுச் செய்திகளை மெய்ப் பாட்டியல் உவம இயல் செய்யுளியல் மரபியல் என்னும் நான்கியல்களாலேயே கூறுகிறார். இவற்றையெல்லாம் கருதின், தொல்காப்பியனார் அகவொழுக்கத்திற்கே முதன்மையும் சிறப்பும் தருகிறார் என்பது புலனாம். வெளிநாட்டுப் பழைய இலக்கியங்களில் புறவொழுக்கமாகிய வீரநிலையே முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாக இருக்கத் தமிழ்நாட்டில் மட்டும் அகவொழுக்கமாகிய காமநிலையே முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாக இருந்தது என்ற உண்மையைத் தொல்காப்பியனார் புலப்படுத்துகிறார்.

அவர் அகத்திணை இயலில் மக்களைக் குறிப்பிடும் பொழுது ஆயர் வேட்டுவர் என்று முல்லைத்திணை மக்களையும் குறிஞ்சித் திணை மக்களையும் முதற்கண் குறிப்பிட்டுவிட்டு அவர்களுள் தலைமக்களைக் 'கிழார்' என்ற சொல்லால் கூறிவிட்டு, மருதத்திணை மக்களையும் நெய்தல் திணை மக்களையும் இன்ன பெயரினர் என்று விதந்து கூறுமவர், 'ஏனோர்' என்ற சொல்லாலேயே குறிப்பிடுகின்றார். எனவே தமிழ் நாட்டு மக்களுள் ஆயர் வேட்டுவர் முதலான திணை மக்களும் அவர் தம்முள் தலைமக்களும் அகவொழுக்கத்திற்குச் சிறந்தவராகக் கருதப்படுகின்றனர்.

தொல்காப்பியனார் ஆயர் வேட்டுவர் ஏனோர் என்ற திணை மக்களுக்கும் அவர்தம்முட் சிறந்த 'கிழவர்' என்னும் தலைமக்கட்கும் வேறாக, 'அடியோர்' வினைவலர் என்ற இரு பகுதியினரைக் குறிப்பிட்டு, அவர்களை உயர்ந்த அகத்திணை ஒழுக்கத்திற்கு உரியரல்லர்; கைக்கிளை. பெருந்திணைக்கே அவர் உரியர் என்று கூறுகிறார்.

மேற்குறிப்பிட்ட இரு பகுதியினர்க்கு மேல், 'ஏவல் மரபின் ஏனோர்' என்றவர்களைக் குறிப்பிட்டு இவரும் அகனைந்திணை முதலான அகவொழுக்கத்திற்குரியர் என்று கூறுகின்றார்.

ஏவல் மரபின் ஏனோர் என்ற சொற்றொடர்க்கு ஏவிக் கொள்ளும் மரபினையுடைய ஏனோர் என்று உரை

கூறப்பட்டு அவர் பார்ப்பனர் அரசர் வணிகர் வேளாளர் என்பவராவார் என்பது குறிப்பால் உணரப்படுகிறது.

எனவே அகத்திணை இயலில் கூறப்படும் மக்கட் சமுதாயத்தை ஆயர் வேட்டுவர் முதலான திணைமக்க ளென்றும், அவர்தம்முட் கிழவர் என்றும், மேற்கூறிய திணைமக்களுக்கு அடியோராயும் வினைவலராயும் இருக்கும் புணர்மக்களென்றும்,ஏவல் மரபின் ஏனோராகிய பார்ப்பனர் அரசர் வணிகர் வேளாளரென்றும் நான்கு பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம்.

தமிழ்கூறு நல்லுலகம்

மாயோன் மேய காடுறை உலகமென்றும், சேயோன் மேய மைவரை உலகமென்றும், வேந்தன் மேய தீம்புனல் உலகமென்றும், வருணன் மேய பெருமணல் உலமென்றும் பிரிக்கப்பட்டு அவற்றிற்கு முறையே முல்லை,குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று பெயர் வழங்கப்பட்ட முறைமை யையும் அவற்றிற்குக் காலம் வகுக்கப்பட்ட முறைமையையும் முல்லை முதலான ஒவ்வொன்றிற்கும் உரிய தெய்வம் உணவு, விலங்கு, மரம், புள், பறை, யாழின் பகுதி பூ செய்தி என்ற கருப்பொருள் முறைமையையும் அவற்றிற்குரிய புணர்தல் முதலான உரிப்பொருள் முறைமையையும் நாம் கருதினால், அகப்பொருள் இலக்கியம் அந்தக் காலத்தில் எவ்வளவு கட்டுக்கோப்பான முறையில் இயங்கி வந்தது என்ற உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

தொல்காப்பியனார் அகத்திணை இயலில் அக ஒழுக்கத் திற்குரிய மக்களை ஆயர், வேட்டுவர், ஏனோர், என்று முதற்கண் குறிப்பிட்டுவிட்டுப் பின்னர் அடியோரும் வினைவலரும் அகனைந்திணைக்குப் புறமான கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் உரியவர் என்றும், ஏவல் மரபின் ஏனோராகிய பார்ப்பனர் முதலான நால்வரும் இவ்வக வொழுக்கத்திற்குரியவர் என்றும் கூறுவதையும், அகத்திணை இயலில் பிரிவினைக் கூறும்பொழுது உயர்ந் தோர் (26), வேந்தன் (27-32), மன்னர் (30), பின்னோர் (30)

வேந்தனின் ஓரீஇய ஏனோர் (32), திணைதோறும் வாழ்ந்து வந்த பழந்தமிழ் மக்கள் என்பதும் பார்ப்பனர் மன்னர் வணிகர் வேளாளரெல்லாம் அப்பழந்தமிழ் மக்களிலிருந்து தோன்றிச் செயல்முறையால் வேறுபட்டு எல்லாத் திணையிடத்தும் வாழ்ந்தும் பிறரை ஏவிக் கொள்ளும் ஏவல் மரபின் ஏனோர் என்பதும் உய்த்துணரப்படுகின்றன.

அகத்திணை ஒழுக்கத்தினையுடைய மக்கள் ஓதவும், பகையை வெல்லவும், தூது உரைக்கவும் (27), தெய்வப் படிமத்தையுடைய திருக்கோயில்கட்குப் பிழை ஏற்படின் அதனைக் காக்கவும், பொருள் ஈட்டவும் (30) பிரிந்து செல்வர் என்றும், அவ்வாறு பிரியுமிடத்துச் சில பிரிவு களில் தலைமகளையும் உடன்கொண்டு செல்வர் என்றும், தலைமகளை உடன்கொண்டு செல்லுமிடத்து கடல்வழிப் பிரிதல் இல்லை என்றும் (37) தொல்காப்பியனார் கூறுகிறார்.

களவில் ஒழுகும் தலைவன் தலைவியிடத்தே தமர் திருமணத்திற்கு ஒருப்படாத காலத்திலே தலைவன் தலைவியைத் தமர்க்குத் தெரியாமல் உடன்கொண்டு செல்வான். இதனைக் தொல்காப்பியனார் கொண்டுதலைக் கழிதலென்று கூறி, பாலைத்திணை என்பர்.

கொண்டுதலைக் கழிதல் நிகழ்ந்த இடத்து நற்றாய் முதலியோர் தலைவி திரும்பி வருதலைக் குறித்தும் அவன் ஏதமில்லாமல் இருத்தலைக் குறித்தும் நற்றாய் முதலியோர் நிமித்தம் பார்த்தலும் நற்சொல் கேட்டலும் தெய்வத்தை வழிபடுதலும் முதலான செயல்களைச் செய்வர்.

தலைவன் தலைவியர் முதலியோர் அகவொழுக்கம் பற்றிய கருத்தை மறைத்துக் கூறல் வேண்டிய உள்ளுறை உவமையாலும் மறையாது கூறல் வேண்டிய இடத்தே வெளிப்படை உவமையாலும் கூறுவர் என்பர். இத்தகைய செய்திகளைத் தொல்காப்பியனார் அகத்திணை இயலில் கூறுகின்றார்.

அகத்திணைச் சமுதாயம்

இனித் தொல்காப்பியனார் அகத்திணைச் சமுதா யத்தைப் பற்றிக் கூறும் சிறப்புச் செய்திகளைக் காண்போம்.

அவர் அகத்திணையியல் தொடக்கத்தே அக ஒழுக்கத்தைக் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என்று மூன்று வகையாகவும் ஏழு திணையாகவும் பாகுபாடு செய்து கூறுகிறார்.

அவர் தொடக்க நிலைக் காமத்தையும், சிறிய காமத்தையும் ஒருபாற்காமத்தையும் காமம் துய்த்தலுக்கு ஏலாத இளையோர் பற்றிய காமத்தையும் கைக்கிளை என்றே கூறுகிறார்.

மிக்க காமத்தையும், காமம் நுகர்தலுக்கு ஏலாத முதியோர் காமத்தையும் பலவகையான பொருந்தாக் காமத்தையும் பெருந்திணை என்றே கூறுகிறார். இந்த இருவகைக் காமத்தைப் பற்றித் தொல்காப்பியனார் விரிவாகப் பேசவில்லை.

காமம் நுகர்தலுக்கு ஏற்ற பருவமுடைய தலைவன் தலைவி என்னும் இருபாலரிடத்தே தோன்றும் அளவொத்த காமத்தை அவர் ஐந்திணைக் காமம் என்று கூறுகிறார். இக்காமமே தொல்காப்பியனாரால் மிகவும் செப்ப முடையதாக விரிவாகப் பேசப்படுகிறது. இக்காமத்தை அவர் மக்கள் நுதலிய அகனைந்திணை என்று, இன்பமும் பொருளும் அறமென்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்றும், சிறப்பித்துக் கூறுகிறார். இவ்வைந்திணைக் காமத்தின் பகுப்பாகிய களவு கற்பு என்னும் இரண்டும் தலைவன், தலைவி என்னும் இருவருடைய அன்பின் பெருக்கத்தாலே அமைவதாதலின் இறையனார் அகப்பொருள் ஆசிரியர்,

களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்
உளநிகழ் அன்பின் உணர்ச்சி மேன

என்று கூறுவர். ஐந்திணைக் காமப்பகுதியைத் தொட்ட இடமெல்லாம் அன்பே சுரக்கும் என்பர் அறிஞர்.

தலைவன் தலைவி என்னும் இருவரும் அன்பினாற் புணர்தலைக் குறிஞ்சி என்றும், வினை நிமித்தமாகத் தலைவியினின்றும் தலைவன் பிரிதலைப் பாலை என்றும்,

பிரிந்த பொழுது தலைவி ஆற்றியிருத்தலை முல்லை என்றும், அவன் ஆற்ற இராமல் இரங்குதலை நெய்தல் என்றும், தலைவனிடத்தே தலைவி ஊடுதலை மருதம் என்றும் ஐந்து பிரிவாகப் பிரிக்கப்படுதலின் இக்காமம் ஐந்திணை என்ற பெயரைப் பெற்றது. கைக்கிளையையும் பெருந்திணையையும் இவ்வாறு பிரித்தோத முடியாதாதலின் ஐந்திணை என்னும் பெயர் அன்புடைக் காமத்திற்கே ஏற்ற பெயராயிற்று.

தொல்காப்பியர் ஐந்திணைக் காமத்திற்குரிய ஆண் மகனையும் பெண்மகனையும் கிழவன், கிழவி, தலைவன், தலைவி என்ற பெயராலேயே கூறுகிறார். அதனால் அவ்விருவரும் உரிமையும் தலைமையும் உடையவராதல் புலப்படும். இவ்விருவரும் .முன்னே களவினாற் கூடி யொழுகிப் பின்னர் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தும் கற்பொழுக்கத்தை மேற்கொள்வர்.

அகனைந்திணையிற் களவு

உரிமையுடைய தலைவனும் தலைவியும் முதற்கண் தனியிடத்தே நல்வினை கூட்ட எதிர்ப்பட்டுக் கண்ணும் கருத்தும் இயைந்து உள்ளம் ஒன்றாவர். அப்பொழுது காமம் மீதூரின் மெய்யுற்றும் புணர்வர். தொல்காப்பியனார் இதனைக் காமப்புணர்ச்சி என்பர். பின்னர் அவ்விடத்தே இருவரும் கூடுவர். இதனை இடந்தலைப்பாடு என்பர் அதன்பின் தலைவன் தன் பாங்கனால் தலைவி பொழிலகத்தே விளையாடும் இடமறிந்து அங்கே புக்குத் தலைவியைக் கூடுவன். இதனைப் பாங்கொடு தழாஅல் என்பர். பின்னர்த் தலைவன் தலைவியின் உயிர்த்தோழியை அறிந்து, அவன் உதவியால் தலைவியைக் கூடுவன். இதனைத் தோழியிற் புணர்வு என்பர். இவையெல்லாம் களவியலாகும். தொல்காப்பியனார் இதனை

> "காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
> பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்று
> ஆங்கரால் வகையினும் அடைந்த சார்பொடு
> மறையென மொழிதல் மறையோர் ஆறே"

என்பர். இங்கே காமப்புணர்ச்சி முதலான நான்கினையும் "மறையெனப் பெயர் வழங்குதல் மறையோர் நெறி" என்று கூறியுள்ளதை நோக்கினால் மறை என்பது களவியல் காமப்புணர்ச்சி முதலான நான்கினையும், களவியல் என்று கூறுதல் களவியல் நூலார் நெறி என்றே பொருள் கூற வேண்டும். 'மறையோர் நெறி' என்பதற்கு 'வேதத்தையுடைய பார்ப்பனர் நெறி' என்று பொருள் கூறக்கூடாது. அங்ஙன மாயின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் என்பதற்கு நான்கு வடமொழி வேதங்களை உணர்ந்த அதங் கோட்டாசானுக்கு என்று பொருள் கூறுதல் சிறப்பில்லை. ஏன் எனின்? தமிழிலக்கண நூலைக் கேட்பதற்கு வடமொழிவேதத்தை உணர்ந்திருத்தலாற் பயன் என்னை? இறையனார் களவியல் என்னும் பெயர் களவு கற்பு என்ற இரண்டு கைகோளும் அடங்கிய பொருளிலக்கண நூற்குப் பெயரானாற் போல நான்மறையென்பது நான்கு பகுப்பான களவியலை முதலான உடைய தமிழ்ப் பொருளிலக்கண நூலையே உணர்த்துமென்க.

அகனைந்திணையிற் கற்பு

இவ்வாறு தலைவனொருவனும் தலைவியொருத்தியும் களவினாற் கூடும் கூட்டம் சிலரால் அறியப்பட்டு அம்பல் ஆகியும், பலரால் அறியப்பட்டு அலராகியும் களவொழுக்கம் வெளிப்படுதல் உண்டு. இதனைத் தொல்காப்பியனார் மறை வெளிப்படுதல் என்பர். பின்னர் அவ்விருவரின் கள வொழுக்கத்தைத் தமர் அறிந்து அத்தலைவனுக்கே அத் தலைவியை மணச்சீர் நிகழ்த்தித் தருவர். இதனைத் தொல்காப்பியனார் தமரிற் பெறுதல் என்பர். இக்கற்பியலில் தமரிற் பெறுதல் முதன்மையான நிகழ்ச்சியாகும். இதனைத் தொல்காப்பியனார்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'

என்னும் நூற்பாவால் புலப்படுத்துகின்றார். இந்நூற்பாவில் திருமணச் சடங்கினைக் கரணம் என்ற சொல்லால்

தொல்காப்பியனார் குறிப்பிடுகின்றார். கரணம் என்ற சொல் செயல் என்று பொருள்படும். கொங்கு நாட்டு மக்கள் சடங்கினைச் சீர் என்று வழங்குவர்.

மிகப் பழங்காலத்தில் கரணம் என்னும் சடங்கு நிகழ்த்தப் பெறாமலேயே தலைவன் தலைவியர் வாழ்க்கை நிகழ்ந்ததென்றும், அவர்தம் கூட்டுறவில் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னரே ஊர்த்தலைவர்கள் கரணம் நடத்தும் முறையைக் கற்பித்தனர் என்றும் தொல்காப்பியனார் குறிப்பிடுகின்றார்.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

என்பது அந்நூற்பாவாகும். தந்தையை ஐயன் என்பது கொங்கு நாட்டார் வழக்கு. ஐயன் என்னும் சொல் மூத்தோர் (முதியோர்) என்னும் பொருளில் வருதலை,

"குரவன் ஐயன் சுவாமி கோமானே அடிகள் அத்தன்
பரவிய உரவோன் ஈசன் பதிஇறை முத்தோன் பேராம்"

என்னும் நிகண்டால் அறிக. ஐயர் யாத்தனர் என்பதற்கு அறிவாலும் ஆண்டாலும் பெரிய முதியோர் என்றே பொருள் கொள்ளல் வேண்டும். இக்கற்பு நெறியிற்றான் 'மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்' என்னும் மருதத் திணை உரிப்பொருளும் பிரிதல் என்னும் பாலைத்திணையின் உரிப்பொருளும் மிக்குத் தோன்றும் என்று தொல் காப்பியனார் கருதுகிறார்.

"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய இயற்நெறி பிழையாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்து கற்பெனப் படுமே"

என்பது அவர் நூற்பாவாகும்.

அகத்திணைச் சமுதாயத்தில்

அகத்திணைச் சமுதாயத்தின் தலைவன் தலைவி என்னும் இருவரும் தலைமை வாய்ந்தவராவர். அவ்விருவரது நல்வாழ்க்கைக்கு உறுதணையாவார் வாயில்கள்.

அகத்திணைச் சமுதாயத்தில் தலைவன்

அகத்திணைச் சமுதாயத்தில் வரும் தலைவன் பெருமை வாய்ந்தவன்; உரன் உடையவன் என்பர். பெருமையாவது பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சுதல் என்றும் அறிவுடைமை என்றும் இளம்பூரணர் விளக்கம் கூறுவர். தொல்காப்பியனார் தலைவனுடைய இயல்புகளைப் பல இடங்களில் குறிப் பிடுகிறார். தன்னைப் புகழ்ந்து கூறிக் கொள்ளுதல் நன்றன்று என்பது அறிஞர் கொள்கை. ஆனால் தலைவன் வினைமேற் கொண்டொழுகும் பொழுது தலைவிமுன் தன்னைப் புகழ்ந்து பேசுவன் என்பர்.

அகத்திணைச் சமுதாயத்தில் தலைவி

தொல்காப்பியனார் அகப்பொருட் சமுதாயத்தில் தலைவனுடைய பண்பைக் காட்டிலும், தலைவியின் பண்பினையே மிகுதியாக எடுத்துக் கூறுகிறார். தலைவ னிடத்தே பல நற்பண்புகள் இருப்பினும் அவற்றுள் அச்சமும் நாணும் மடனுமே முந்துற்றுத் தோன்றும் என்பர். நாகரிகமில்லாத சிலரிடத்தே காமவேட்கை நிகழின் தங்கள் வேட்கையைப் புலப்படக் கூறி வெளிப்படுத்துவர். நாகரிகம் வாய்ந்த மக்கள் நுதலிய அகனைந்திணைத் தலைவி காமவேட்கையைப் புலப்படக் கூறாள். இதனைத் தொல் காப்பியனார்.

"காமத் திணையின் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆதலின்
குறிப்பினும் இடத்திலும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னான"

தலைவி தன் காமவேட்கையை வெளிப்படக் கூறுவாளே யானால் நாணமும் மடமும் கெடும். ஆதலின் அவன் வேட்கை குறிப்பாலும் இடத்தாலும் அல்லது நெறிப்பட நிகழாது என்பதாம். மேலும் ஐந்திணைத் தலைவி தன் காமவேட்கையைத் தலைவன் முன் கூறாள் என்று மற்றோரிடத்தில் அவர் கூறுகிறார்.

"தன்னுரு வேட்கை கிழவன்முன் கிளத்தல்
எண்ணுங் காலை கிழத்திக் கில்லை
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப"

என்பது அந்நூற்பாவாகும். மேலும் தலைவன் தலைவியிடத்தே புணர்ச்சி கருதிக் கூறும் சொல்லெதிர் உடம்பட்டுக் கூறுதல் அருமைத்தாதலின் அதனை மறுத்துக் கூறும் மொழியே தலைவியினிடத்து உண்டாம் என்பர்.

"சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான"

என்பது அந்நூற்பாவாகும். இன்னும் தலைவியின் மாண்பு களைத் தொகுத்து,

"கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"

என்று அவர் கூறுகிறார். தலைவி என்றும், கிழவி என்றும் கூறுதற்குத் தக தலைவியானவள் தலைவனைத் தானே கண்ணுற்று அவனுடன் கூடியொழுகினாள். இஃதறிந்த தமர் இவளை வேறு மணமகனுக்கு மணம் செய்ய முயன்றனர். தான் ஒன்றாக விரும்பிய தலைவனை மணந்து கொள்ளுதலே தலைவிக்கு அறமாதலின் அக்கருத்தினைத் தோழி முதலி யோர்க்கு அறிவுறுத்தலைத் தொல்காப்பியனார் அறத்தொடு நிற்றல் என்பர். தலைவிக்குள்ள அறமாவது தலைவன் வரம்பு கடவாமையாகும் என்பதை அவர்," அவன்வரம் பிறத்தல் அறந்தனக் கின்மையில்" என்பதனாலும் அறத்தொடு நிற்றல் என்பதனாலும் புலப்படுத்துகிறார். இவ்வாறு தலைவியின் மாண்புகள் பல கூறப்பட்டுள்ளன. இம் மாண்புகள்

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவன் மாணாக் கடை"

என்னும் திருக்குறளை நினைவூட்டுகின்றன.

அகத்திணைச் சமுதாயத்தில் வாயில்கள்

அகத்திணைச் சமுதாயத்தில் அகவொழுக்கத்தை மேற் கொள்ளும் தலைவன் தலைவி என்னும் இருவருக்கும் உதவுபவராக இருப்பவரைத் தொல்காப்பியனார் வாயில்கள் என்பர்.

இவர் இன்னார் என்பதை,

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பில் வாயில்கள் என்ப"

என்னும் நூற்பாவால் தொகுத்துக் கூறுகிறார். இவ்வாயில் களில் அறிவர் முதலான மிக உயர்ந்தவரும் தோழி முதலான ஒத்தவரும் பாணன் முதலான தாழ்ந்தவரும் இருத்தலின் இவ்வாயில்களைப் பணியாளர் என்னும் சொல்லால் வழங்குதல் கூடாது. தலைவியும் தலைவனும் நன்கு வாழ்வதற்கு வாயிலாக இருத்தலால் வாயில்கள் என்ற சொல்லால் வழங்குதலே தக்கதாம். இங்கு குறிப்பிட்ட எல்லா வாயில்களும் தலைவன் தலைவி என்னும் இருவர்தம் மகிழ்ச்சிப் பொருளினையே நிகழ்த்துதற்குரிய என்று கருத்தினை

"எல்லா வாயிலும் இருவர் தேளத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப"

என்பர். இவ்வாயில்களாவார் தலைவனிடத்தே சென்று தலைவியைப் பற்றிப் பேசுவராயின் தலைவியின் சுற்பு, காமம், நல்லொழுக்கம், பொறுமை, நிறை, விருந்து புறந்தருதல், சுற்றம் ஓம்பல் முதலான (சுற்பியல் - 11) நற்பண்புகளையே கூறுதல் வேண்டும் என்பர். மேலும் அவர் குறிப்புச் சொல் வெளிப்படைச் சொல் என்னும் இரண்டில் பொருள் புலப்பாடு கருதி வெளிப்படைச் சொல்லினையே கூறல் வேண்டும் என்பர்.

"வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின் றுரிய தத்தம் கூற்றே".

புறப்பொருட் சமுதாயம்

தொல்காப்பியனார் அகப்பொருளையும் புறப் பொருளையும் இயைபில்லாத இரண்டு திணைகளாகக் கூறாமல் புறத்திணைகளை அகத்திணைகளோடு இயைபு படுத்தியே கூறியுள்ளார். அதனால் அகத்திணை இலக்கணங் களை அரில்தப உணர்ந்தோர்க்குப் புறத்திணை இலக்கணம், கூறுபாடு தோன்றக் கூறப்படுகிறது.

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்

என்று புறத்திணை இலக்கணத்தைக் கூறத் தொடங்குகிறார்.

புறத்திணையில் கூறப்படும் பொருள்கள் போரும், வெற்றியும், பலவகை நிலையாமையும், பாடப்படுபவனது ஒழுகலாறும் என நான்காகும். அவற்றுள் தொல்காப்பியனார் கூறும் போர்ச்சமுதாய இயலைப் பார்ப்போம்.

புறத்திணையில் போர்ச்சமுதாய இயல்

உலகத்தில் நிகழும் எல்லாப் போர்களையும் போர்க்கு முன்னோடியான செயல் என்றும், பகைவர்தம் மண்ணைக் கொள்ளக் கருதிய போரென்றும், பகைவர்தம் அரணோடு கூடிய தலைநகரைப் பற்றி அவரை அழிக்கும் போரென்றும், இவைகளன்றி இரண்டு மன்னர்கள் தத்தம் ஆற்றலை நிலை நாட்டக் கருதிச் செய்யும் போரென்றும் நான்கு வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். இவற்றை முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை எனப் பெயரிட்டுத் தொல்காப்பிய னார் கூறுகிறார். அவர் இந்நான்கினையும், அரசர்க் குரியதாகவே கூறுகிறார். பன்னிரு படலம் என்னும் பொருளிலக்கண நூல் வெட்சியை அரசர்க்குரியதாகவும் மற்றவர்க்குரியதாகவும் கூறுகிறது.

ஒரு பெரிய செயலினைப் பல பகுப்பாகப் பிரித்துக் கொண்டு, அப்பகுப்பிற்கெல்லாம் தனித்தனிப் பெயர் வைத்து வழங்கும் வழக்கத்தை அகத்திணை இயலிலும் புறத்திணை இயலிலும் காண்கிறோம். அந்த முறையில் வெட்சித்திணை

முதலிய திணைகளையெல்லாம் பலப்பலப் பகுப்பாகப் பிரித்துக் கொண்டு அவற்றிற்கெல்லாம் பெயர் வைத்துத் தொல்காப்பியனார் கூறுகின்றார்.

வெட்சி என்னும் புறத்திணை குறிஞ்சி என்னும் அகத் திணைக்குப் புறனாகும். அது வேந்தனாலே விடப்பட்ட முனையிடத்துள்ள வீரர் பகைவர் நாட்டார் புக்கு அவர்தம் ஆக்களைக் கொண்டு வந்து ஓம்புதலாகும். அது படையியங்கரவம் முதலான பதினான்கு துறைகளையுடையது என்பர்.

வெட்சித்திணையின் பின் நிகழ்வது வஞ்சி முதலிய போராதலால் அதற்கு உறுதி பயத்தற்காக மறவர்தம் குடியையெல்லாம் திரட்டி அவர்தம் ஆற்றலையெல்லாம் ஆராய்ந்து பாராட்டும் குடிநிலை என்ற துறையும், கொற்றம் தரும் கொற்றவையை வழிபட்டு இனி நடக்கும் போரில் கொற்றம் வேண்டும் கொற்றவை என்ற துறையும் அடுத்துக் கூறப்படுகின்றது.

இவற்றின் பின் முல்லையின் புறனாகிய வஞ்சித்திணை பகைவர்தம் மண்ணினைக் கொள்ளக் கருதி நிகழுமென்றும், இதன்பின் மருதத்தும் புறனாகிய உழிஞைத் திணை பகை மன்னர்தம் அரணினை முற்றுகையிடலும் பற்றுதலும் என்னும் இரண்டு வகையில் நிகழுமென்றும், இதன்பின் நெய்தற்குப் புறனாகிய தும்பைத்திணை தம் மைந்தினை நிலைநாட்டக் கருதி நிகழுமென்றும் கூறுவர். இத்திணைகளில் கூறப்பட்டுள்ள துறைகளில் வெட்சியிற் கூறப்பட்டுள்ள ஊர்கொலையும், வஞ்சியிற் கூறப்பட்டுள்ள எரிபந்தெடுத்தல் என்னும் துறையும் போரினால் பகைவர் நாட்டுப் பொது மக்கட்கு ஏற்படும் துன்பத்தை எடுத்துக் காட்டும். நல்ல நாள் பார்த்துப் போர் தொடங்கும் முறையைக் குடைநாட்கோள் வாள்நாட்கோள் என்னும் துறைகளால் அறிந்து கொள்கின்றோம்.

புறத்திணையில் வாகைச் சமுதாய இயல்

புறத்திணையியலில் வேந்தர்க்குரிய போர்வகையைக் கூறிய வெட்சி வஞ்சி, உழிஞை, தும்பை என்னும் இவற்றின்

பின் அப்போர்களில் அம்மன்னர்க்கு உளதாகிய வெற்றிகளையே கூறுதல் வேண்டும்.

புறப்பொருள் வெண்பாமாலையும்,

"இல்லபுனை வாகைசூடி இகன்மலைந்து
அலைகடற் றானைஅரசட் டார்ந்தன்று"

என அரசனை அட்டு ஆரவாரம் செய்தலை வாகை எனக் கூறும். ஆனால் தொல்காப்பியனார் அவ்வாறு கூறவில்லை நாட்டில் வாழும் எல்லா மக்களும் தம்தம் தொழிற் கூறுபாட்டில் வெற்றி காண்பதனையே அவர் 'வாகை' என்று கூறுகிறார்.

"வாகை தானே பாலையது புறனே"

"தாவில் கொள்கை தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"

என்பது அவர் நூற்பா. வாகை என்பது அகக்காழ் உடைய உறுதியான மரவகையுள் ஒன்று அதன் பூவைச்சூடி வெற்றி கொண்டாடுவர். வாகை என்பது வெற்றிக்கே ஒரு பெயரென்று திவாகர நிகண்டு கூறுகிறது. இவ்வாகை பாலைக்குப் புறனாகக் கூறப்பட்டுள்ளது.

வாகைக்கு முதலான பாலையின் சிறப்பு

நடுவுநிலைத்திணை என்று சிறப்பித்தோதப் பெறுவது அகத்திணையுள் பாலைத்திணை ஆகும். தொல்காப்பியனார் அகத்திணை இயலில் பாலையைப் பற்றிய செய்திகளையே மிகுதியாகக் கூறுகின்றார். இப்பாலைத்திணை ஓர் யாண்டில் பாதிக்காலத்தைத் தனக்கு உரியதாகப் பெற்றிருக்கிறது. பின்பனிக் காலத் தொடக்கமாகிய மாசித் திங்களிலிருந்து முதுவேனிற் காலத்தின் இறுதியாகிய ஆடித் திங்கள் இறுதி யாக ஆறு திங்களும் பாலைக்குரியது. தமிழ்நாட்டு மக்கள் இந்த ஆறு திங்களில் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிந்து வினை செய்து பொருளீட்டிக் கார்காலத் தொடக் கத்தே தங்கள் வீட்டிற்கு வந்து தங்கி முன்பனிக் காலத் திறுதியாகிய தைத்திங்கள் வரை (ஆறு திங்கள்) தங்கள்

தலைவியுடன் கூடி வாழ்வர். இது தொல்காப்பியனார் கூறும் பொதுவான விதியாகும். இதனைக் கருதிக் கொண்டே விக்கிரமாதித்தன் என்னும் அரசன் காடு ஆறு திங்கள் வீடு ஆறு திங்கள் இருந்ததாகக் கதை எழுதினர் போலும்.

இவ்வாறு நாட்டு மக்களெல்லாம் பிரிந்து தொழில் செய்வதற்குரிய பாலைத் திணையின் புறமாகத் தொல் காப்பியனார் வாகைத்திணையைக் கூறியுள்ளார்.அவர் வாகைத் திணைக்குப் பொருள் கூறுமிடத்து அரசர் வெட்சி முதலிய திணையை நிகழ்த்தி அவற்றாற் பெற்ற வெற்றியே வாகைத்திணை என்று கூறாமல் நாட்டில் உள்ள எல்லா மக்களும் தத்தம் தொழிற் கூற்றில் மிகுதிப்படுதலாகிய வெற்றியையே வாகைத்திணை என்பர்.

எனவே இவ்வாறு கூறப்பெறும் வாகைத்திணையும் எல்லா மக்களுடைய நிலையாமைகளைக் கூறும் பெருந் திணைப் புறனாகிய காஞ்சியும், புலவன் நாட்டு மக்களைக் குறித்து அவர்தம் பலவகைச் செயலைப் பாடும் கைக்கிளைப் புறனாகிய பாடாண் திணையும் நாட்டு மக்கள் அனைவரை யும் நோக்கி எழுந்தனவாகும்.

வாகைத்திணைச் சமுதாயம்

தொல்காப்பியனார் வாகைத்திணைக்குரிய மக்களை அறுதொழில் செய்யும் பார்ப்பனர், ஐந்து தொழில் செய்யும் அரசர், ஆறு தொழில் செய்யும் வணிகர், வேளாளர், குற்றமில்லாத செயல்களை முக்காலமும் முறையுடன் செய்து வரும் அறிவர், எட்டுவகைத் தவத் தொழில் புரியும் தாபதர்,பலவகையான தொழில் முறைகளை அறிந்து அவற்றிற் பொருட் பொருநர் என ஏழுவகையாகக் கூறியுள்ளார்.

அகத்திணைச் சமுதாயத்தில் அகவொழுக்கத்திற் குரியவராக ஆயர் வேட்டுவர் முதலான திணைமக்களைக் கூறிய தொல்காப்பியனார்,அகத்திணையுடன் இயைபுடைய புறத்திணையைக் கூறுமிடத்து, ஆயர் வேட்டுவர் முதலானவரைச் சிறிதும் குறிப்பிடாது, புறத்திணைத்

தொழிலுக்குரியவராகப் பார்ப்பனர், அரசர், வணிகர் முதலிய ஏழு பிரிவான மக்களையே கூறுதலை, அறிஞர் உலகம் சிந்திக்க வேண்டும். வாகை தொழில் மேலதாதலின் அறுவகை, ஐவகை, இருமூன்று வகை முதலியனவெல்லாம் தொழிலையே குறிப்பனவாகும். வாகைத் திணைக்குரிய மக்களுள் அறிவரும் தாபதரும் உலகியல் நெறிக்கு அப்பாற் பட்ட ஒழுக்கமுடையவராவர்.

புறத்திணைச் சமுதாயத்தில் வேளாளர்

பார்ப்பனரையும் அரசரையும் வேறுபடுத்திக் கூறிய தொல்காப்பியனார் வணிகரையும் வேளாளரையும் 'இருமூன்று மரபின் ஏனோர்' என்று ஒன்றுபடுத்தியே கூறுகிறார். இவ்வாகைத் திணைத் துறைகளைக் கூறும் மற்றொரு நூற்பாவில்,

"பகட்டி னூறும் ஆவி னாறும்
துகள்தடி சிறப்பின் சான்றோர் பக்கமும்"

என்று வேளாளரையும் வணிகரையும் 'சான்றோர்' என்று ஒன்றுபடுத்தியே கூறுகிறார்.

இப்பகுதிக்கு உரை வரைந்த இளம்பூரணர் "பகட்டால் (எருது) புரைதீர்ந்தார் வேளாளர். ஆனால் குற்றம் தீர்ந்தார் வணிகர்" என்பர். தொல்காப்பியனார் அடியோர் வினைவலர் என்று பணிமக்கள் சமுதாயத்தைக் குறிப்பிட்டு விட்டு, அந்தணர் முதலான நால்வரையும் ஏவல் மரபின் ஏனோர் (பிறரை ஏவிக்கொள்ளும் மரபின் ஏனோர்) என்று குறிப்ப தால், வேளாளருக்கு மற்ற மூவருக்கும் பணி செய்யும் தொழில் உண்டு என்று கூறுதல் ஆரியச் சார்பால் நிகழ்ந்த தாகும்.

புறப்பொருளில் காஞ்சி

புறப்பொருள் வெண்பாமாலை , மண் கருதி வஞ்சி சூடி வந்த மன்னனுடன் மனை காத்தலுக்குரியவன் காஞ்சி என்னும் மலர்சூடிப் போர் புரிவதனைக் காஞ்சி என்றும், வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே என்ற நூற்பாவைக் காண்க. இது பன்னிரு படல நெறி, இந்நெறிக்கு முற்றிலும்

மாறுபட்ட தொல்காப்பியம் பல நெறியால் உலகில் உள்ள நிலையாமையைக் கூறுதலே பெருந்திணைப் புறனாகிய காஞ்சி என்று கூறும் உண்மைப் பொருள் உணர்வார்க்கு நிலையாமை உணர்ச்சி உறுதி பயக்குமாதலால் பாங்கரும் சிறப்பினை உடையது என்பர். இது இரண்டு பகுப்பாக ஓதப்பட்டுள்ளது.

புறப்பொருளில் பாடாண்

கைக்கிளை என்பது அகத்திணை இயலில் முதற்கண் 'கைக்கிளை முதலா' என்று முதலாவதாக எடுத்தோதப் பட்டுள்ளது. அக்கைக்கிளையின் புறனாகிய பாடாண் புறத்திணை இயலில் இறுதியாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வியலில் தெய்வத்தையும் தெய்வத்தை ஒத்தாரையும் மக்களையும் பல்வகை நெறியால் பாடும் முறை கூறப்பட்டுள்ளது.

முடிவுரை

இங்ஙனம் தொல்காப்பியனார் அகச்சமுதாய இயலையும் புறச்சமுதாய இயலையும் கூறிச் செல்கின்றார். இவ்வியல்புகளில் மூவகைச் காலத்திலும் ஒத்து நடக்கும் நல்ல சமுதாய இயல்புகளை அறிந்து நடந்து உலகம் நன்னெறிப்படுவதாகுக.

28
மணம்

தோற்றுவாய்

ஆணும் பெண்ணும் கூடி வாழ்தல் என்பது, உலகத்தில் எல்லா நாட்டு மக்களிடத்தும் நிகழ்கின்ற ஒரு நல்ல நிகழ்ச்சியாகும். இது உலக ஆக்கத்திற்கு மிகவும் இன்றியமையாததொன்றாம். இதற்கு மணம் என்றும் மன்றல் என்றும் பெயர். மணம் என்றால் கூடுதல். இதனை மணத்தல் என்று கூறுவர். மன்றல் என்றாலும் கூடுதல் என்றே பொருள். மக்கள் கூடுமிடத்திற்கு மன்றம் என்று பெயரிருத்தலை அறிக, மணத்தலுக்கு எதிர் தணத்தல் என்பர். இதனைத் துறவு என்று கூறுவர், தமிழர் கண்ட அறம் இரண்டேதான். ஆணும் பெண்ணும் மணந்து செய்யும் அறத்தை இல்லறம் என்றும் அவர் பிரிந்து செய்யும் அறத்தைத் துறவறம் என்பர். வடமொழியாளர் இல்லறத்திற்கு முற்பட்ட ஆண்மகன் நிலையைப் பிரமசரியம் என்றும் இல்லற நிலையைக் கிரகஸ்தம் என்றும் துறவிற்கு முந்திய நிலையை வானப்பிரஸ்தம் என்றும் ஆண்மகன்தன் துறவு நிலையைச் சந்யாசம் என்றும் நான்கு நிலைகளைக் கூறுவர்.

எனவே இல்லறம் துறவறம் எனக் கூறுதல் தமிழர் நிலை என்றும், பிரமசரியம் கிரகஸ்தம் வானப் பிரஸ்தம் சந்யாசமென நான்கு நிலை கூறுதல் வடமொழியாளர் வழக்கம் என்றும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழர் ஆணும் பெண்ணும் கூடி வாழ்தலைக் கூடுதல் என்று பொருள்படும் மணத்தல் என்று சொல்லால் மணம், திருமணம் என்று கூறுகின்றனர். வடமொழியாளர் வகுத்தல், மேற்கொள்ளுதல் என்று பொருளில் விவாகம் என்பர். எனவே குடும்பத்தைச் சுமத்தல் அல்லது கிரகஸ்த தருமத்தைச் சுமத்தல் என்ற பொருளில் அவ்விவாகம் என்ற சொல் வழங்குகிறது.

மணம்

எனவே திருமணம் என்னும் தமிழ்ச் சொல்லிற்கும் விவாகம் என்னும் வடசொல்லிற்கும் பொருள் ஒன்றில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இனித் திருமணத்தைப் பற்றி ஆராய்வோம். **வடமொழி அறிஞர்** மணம் நடைபெறும் புறச்செயல் முறைகளை அடிப்படையாகக் கொண்டு மணத்தினை எட்டென்று பிரித்துக் கூறுகின்றனர்.

தமிழ் அறிஞர் மணப்பவர்தம் அகநிகழ்ச்சியாகிய அன்பினை அடிப்படையாகக் கொண்டு மூன்றாகப் பகுத்தோதியுள்ளார். எனவே இந்த வகையிலும் தமிழர்தம் திருமணப் பகுப்பிற்கும் வடமொழியாளர் கூறும் திருமணப் பகுப்பிற்கும் அடிப்படைக் காரணம் ஒன்றாக இல்லை.

வடமொழியாளர் கூறும் எண்வகை மணம்:

வடவர் கூறும் மணம் எட்டென்று மேலே கூறினோம். அவ்வெட்டும் 1. பிரமம்; 2. பிரசாபத்தியம்; 3. ஆரிடம்; 4. தெய்வம்; 5. காந்தர்வம்; 6. ஆசுரம்; 7. இராக்கதம்; 8. பைபசாசம் எனப் பெயர் பெறும்.

அவற்றுள் **பிரமமாவது:-** ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தளாய்ப் பூப்பு எய்தவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்துவதற்குமுன் அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது என்பர் **நச்சினார்க்கினியர்.** இதற்கு அறன்நிலை என்று ஒரு பெயரும் உண்டு.

பிரசாபத்தியமாவது:- மகன் கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம்மகட்கு வந்து மகளைக் கொடுப்பது என்பர் **நச்சினார்க்கினியர்.** மகள் கோடற்குரிய கோத்திரத்தார் மகள் வேண்டிய வழி இரு முது குரவரும் இயைந்து கொடுப்பது என்பர் **இளம்பூரணர்.** இதனை விரிமணம் என்பர். **யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்.** இதற்கு ஒப்பு என்றொரு பெயரும் உண்டு.

ஆரிடமாவது:- தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை மணமக்களை நிறுத்திப் பொன் அணிந்து நீவிரும் இவை போல் வாழ்வீராக என நீர்வார்த்துக் கொடுப்பது, என்பர் **நச்சினார்க்கினியர்.** ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக் கொண்டு மகனைக் கொடுப்பது என்றும், இதற்குப் பொருள்கோள் என்று மற்றொரு பெயர் உண்டு என்றும் **இளம்பூரணர்** கூறுவர்.

தெய்வமாவது:- பெருவேள்வி வேட்கின்றார் பலருள் ஒருவற்கு அவ்வேள்வித்தீ முன்னர்த் தக்கினையாகக் கொடுப்பது என்பர். இவை நான்கும் அந்தணர்க்குரியன என்று கூறும் யாப்பருங்கல விருத்தியுரை.

காந்தர்வமாவது:- கந்தர்வர் என்னும் ஒரு கூட்டத் தாரிடத்தே நிகழும் காம நிகழ்ச்சி என்று பொருள்படும். இதனை **நச்சினார்க்கினியர்** ஆடவரும் பைம்பூணவரும் தமக்குள் கண்ணெதிர் நோக்கொத்துக் கைகலந்து உள்ளம் நெகிழச் சேர்வதாகும் என்பர். **இளம்பூரணர்** ஒத்த இருவர் தாமே கூடும் கூட்டம் என்பர், **யாப்பருங்கல விருத்தி யாசிரியர்** ஒத்த குலமும் குணமும் அழகும் அறிவும் பருவமும் உடையார் யாருமில ஒரு சிறைக்கண் அன்பு மீதூரத் தாமே புணர்ந்தொழுகும் ஒழுக்கம் என்பர்.

அசுரம் அல்லது அகரம்: கொல்லேறு கோடம் திரிபன்றியெய்தன் வில்லேற்றுதல் முதலிய செய்து தலைவன் தலைவியை மணந்து கோடல்.

> **'முகையவிழ் கோதையை முள்ளெயிற் றரிவையைத்**
> **தகைநலங் கருதும் தருகிளிர் உளரெனின்**
> **இவைஇவை செய்தாற்கு எளியன்மற் றிவளெனத்**
> **தொகை நிலை உரைத்த பின்றைப் பகையளித்து**
> **அன்னை ஆற்றிய அளவையில்**
> **தொல்நிலை அசுரத் துணிந்த வாறே'**

என்பர் நச்சினார்க்கினியர்.

இளம்பூரணர் வில்லேற்றினானாதல் திரிபன்றியெய் தானாதல் இவளை இவன் கோடற்குரிய னெனக் கூறிய வழி, அது செய்தார்க்குக் கொடுத்தல் என்பர்.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் இன்னது செய் தார்க்கு இவள் உரியன் என்றவிடத்து அல்லது செய்து எய்துவது, அவை வில்லேற்றுதல் திரிபன்றி எய்தல் கொல்லேறு கோடல் முதலியன, என்னை

'வில்லேற்றல் வேள்வியைக் காத்தல் மிகுவலிக்
கொல்லேற் றியல்குழையைக் கோடலென் - றெல்லாம்
அரியனசெய் தெய்தினான் ஆயின் அசுரம்
அரியவாம் அந்த மணம்'

என்பர்.

இராக்கதமாவது:- தலைமகள் தன்னிலும் பெறாது, தமரிலும் பெறாது வலிதிற் கொள்வது.

'மணிபொற்பைம் பூணாளை மாலுற்ற மைந்தர்
வலிதிற்கொண் டாள்வதே என்ப- வலிதிற்
பராக்கதம் செய்துழலும் பாழி நிமிர்தோள்
இராக்கதத்தார் மன்றல் இயல்பு"

என்பர் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் தலைமகன் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது இராக்கதம் என்பர். யாப்பருங்கல விருத்தியாசிரியர் ஆடை மேலிடுதல் பூமேலிடுதல் கதவடைத்தல் முதலியவற்றால் வலிதிற் கோடல் என்னை?

"பூந்துகிலோ டின்னவுமேல் இட்டும் புதவடைத்தும்
பாய்ந்து கதந்தாஅய்ப் பற்றிக்கொண் டேந்திழையை
எய்தப் படுவ திராக்கதம் என்பதே
மைதீர்ந்தார் சொல்லும்மணம்"

என்பர்.

பைசாசமாவது:- மூத்தோர், கள்ளுண்டு மயங்கியோர் துயின்றோர்ப் புணர்ச்சியும் இழிந்தோளை மணம் செய்தலும் ஆடை மாறுதலும் பிறவுமாம்.

"எச்சார்க் கெளியர் இயைந்த காவலர்
பொச்சாப் பெய்திய பொழுதுகொள் அமையத்து
மெய்ச்சார் பெய்திய மிகுபுகழ் நண்பின்
உசாவார்க் குதவாக் கேண்மைப்
பிசாசர் பேணிய பெருமைசால் இயல்பே"

"இடைமயக்கம் செய்யா இயல்பினில் நீங்கி
உடைமயக்கி உட்கறுத்தல் என்ப - உடையிது
உசாவார்க் குதவாத ஊனியா யாக்கைப்
பிசாசத்தார் கண்டமணப் பேது"

என்பர் நச்சினார்க்கினியர்.

இளம்பூரணர் களியத்தார் மாட்டும், துயின்றார் மாட்டும் கூடுதல், இதற்குப் பேய்நிலை என்று பெயர்.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் துஞ்சினாரோடும் மயங்கினாரோடும் களித்தாரோடும் செத்தாரோடும் விலங்கினோடும் இழிதரு மரபில் யாருமில்லா ஒருசிறைக்கண் புணர்ந்து ஒழுகும் ஒழுக்கம் என்பர்.

"அஞ்சல் களித்தல் மயங்குதல் மாழாத்தல்
அஞ்சல்அறிவழிதல் சாதலென் - றெஞ்சினவும்
இன்ன திறத்தான் இழிதக வெய்துபவேல்
பின்னைப் பிசாசமணப் பேர்"

"குணத்தில் இழிந்த மயங்கியவ ரொடும்
பிணத்தினும் விலங்கினும் பிணைவது பிசாசம்"

என்பர்.

மேற்கூறியவை வடமொழியாளர் கூறும் மணவகை என்பது மேலே கூறப்பட்டது. இவ்வெட்டுள் பிரமம் முதலிய நான்கும் பார்ப்பனர்கட்கு உரியது என்று யாப்பருங்கல விருத்தியாசிரியர் கூறுகிறார், மற்றைய நான்கும் எவர்க்குரியன என்பதை அவர் கூறவில்லை, ஆனால், அவற்றிற்குக் காந்தர்வம் அகரம் இராக்கதம் பைசாசம் எனப் பெயர்கள் கூறப் பட்டுள்ளன. இப்பெயர்கள் காந்தர்வர் அசுரர் இராக்கதர் பைசாசர் என்பவரைக் குறிக்கும்.

பிங்கல நிகண்டு என்னும் நூல் பதினெண் கணங்களின் பெயர்களை

"அமரர் சித்தர் அசுரர் தைத்தியர்
கருமர் சின்னரர் நிருதர் கிம்புருடர்
காந்தர்வர் இயக்கர் விஞ்சையர் பூதர்
பசாசர் அந்தரர் முனிவர் உரகர்
ஆகாய வாசரியர் போகபூ மியரெனப்
பாடு பட்டன பதினெண் கணமே"

என்று கூறுகின்றது. எனவே பதினெண் கணங்களின் சிலருடைய பெயரால் இம்மணங்கள் பெயர் பெறுகின்றன என்பது தெரிகின்றது.

தொல்காப்பியர் கூறுவது

இனித் தொல்காப்பியர் கூறுவதைப் பார்ப்போம். அவர் காம ஒழுக்கத்தை அகத்திணை என்று கூறுகிறார். அவ் அகத்திணையைக் கைக்கிளை என்றும் ஐந்திணை என்றும் பெருந்திணை என்றும் மூன்றாகப் பிரித்துக் கொள்ளுகிறார்.

இந்த மூன்றுள் கைக்கிளை மூன்று வகையாகவும் ஐந்திணை ஐந்து வகையாகவும் பெருந்திணை நான்கு வகையாகவும் பிரிக்கப்பட்டுப் பன்னிரண்டாக வழங்கின. இப்பன்னிரண்டு பிரிவிற்கும் பாங்கன் நிமித்தமாயிருப்பான் என்று செய்தியை,

'பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப'

என்ற நூற்பாவால் தொல்காப்பியர் கூறுகின்றார்.

தொல்காப்பியர் மேல் நூற்பாவால் பாங்கன்நிமித்தம் பன்னிரண்டு என்று கூறி, அப்பன்னிரண்டுள் முன்னே கூறப்பட்டுள்ள மூன்றும்கைக்கிளைக் குறிப்பாகவும் பின்னே கூறப்பட்டுள்ள நான்கும் பெருந்திணையாகுமென்றும் இடையில் கூறப்பட்ட ஐந்தும் ஐந்திணை பெறும் என்றும் கூறுகிறார். களவியலில் அவர் இவ்வாறு கூறிய முறை, "கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப" என்று அகத்திணையியலில்

கூறிய முறைக்கு ஒத்தே உள்ளது. அம்முறைப்படி பாங்கன் நிமித்தமான பன்னிரண்டையும் இன்னவை என்று விளக்கி நூற்பா எழுதியிருக்க வேண்டும். அவ்வாறு அவர் எழுதாது விட்டார். அப்பன்னிரண்டும் இன்னவை என்று வேறு எங்கும் சுட்டப்படவில்லை. அதனால் உரை எழுதுபவர் கட்கு இந்த இடம் விளங்காமலிருந்திருக்க வேண்டும். விளங்காத இடத்தை விளக்கவில்லை என்று உரை யாசிரியர்கள் பெரும்பாலும் சொல்வதில்லை, அந்த முறையில் இளம்பூரணர்,

'பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப'

என்னும் நூற்பாவிற்குப்' பலவகை மணத்தில் பாங்கராயினார் துணை (நிமித்தம்) ஆகுமிடம் இத்துணை என வரை யறுத்தணர்த்துதல் நுதலிற்று" என்று கருத்துக் கூறிவிட்டு " பாங்கராயினார் துணையாகக் கூடுங் கூட்டம் பன்னிரண்டு வரை" என்று **பொழிப்புரை** எழுதி, நிமித்தம் என்பது நிமித்தமாகக் கூடுங்கூட்டம்; அக்கூட்டம் நிமித்தமென ஆகுபெயராய் நின்றது. பாங்கராற்கூட்டம் பாங்கர் நிமித்தமென வேற்றுமைத் தொகையாயிற்று. அவையாவன:- பிரமம் முதலிய நான்கும் கந்திருவப் பகுதியாகிய களவும், உடன்போக்கும் அதன்கண் கற்பின் பகுதியாகிய இற்கிழத்தியும் காமக்கிழத்தியும் காதற்பரத்தையும் அசுரம் முதலாகிய மூன்றும் என இவை" என்று **விளக்கவுரையும்** எழுதியுள்ளார். பின்னர்

"முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே"

என்ற நூற்பாவைத் தந்து எண்வகை மணத்தினுள்ளும் முன்னையவாகிய அசுரம் இராக்கதம் என்னும் மூன்றும் கைக்கிளைப்பாற்படும் என்றனர். இதன் பின்னர்

'பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே'

என்ற நூற்பாவிற்கு " எண்வகை மணத்தினுள்ளும் பிரமம் முதலிய நான்கும் பெருந்திணைப்பாற்படும்" என்று உரை எழுதினர். இதன் பின்னர்

'முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலிருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே'

என்னும் நூற்பாவிற்கு 'நிலமும் காலமுமாகிய முதலொடு புணர்ந்த கந்திருவர்பாற்பட்டனவாகிய (ஐந்திணைக்காமம்) களவு உடன்போக்கு இற்கிழத்தி காமக்கிழத்தி காதற்பரத்தை என இட வகையால் ஐந்து வகைப்படும்" என்று உரை கூறியுள்ளார்.

ஐந்நிலம்

நச்சினார்க்கினியர் இளம்பூரணர் உரையினின்று சிறிது மாறுபடுகின்றார். ஐந்நிலம் பெறுமே என்ற தொடர்க்கு இளம்பூரணர் எழுதிய உரையினைக் கொள்ளாத அவர் "முதற் கந்தருவம் ஐந்து உள்ளன அவ்வைந்துமேயன்றி அவற்றொடு பொருந்திவரும் கந்தருவ மார்க்கம் ஐந்தும் குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐந்து நிலத்தொடு பொருந்தி வரும்" என்று கூறி இவ்வைந்தனுடன் இளம்பூரணர் கூறியவாறே கந்தர்வம் ஒழிந்த ஏழினையும் கூட்டிப் பன்னிரண்டு என்பர்.

இளம்பூரணர் நச்சினார்க்கினியர் மாறுபாடு

இளம்பூரணர் ஐந்நிலம் என்பதற்கு 1. களவு. 2. உடன் போக்கு, 3. இற்கிழத்தி 4. காமக்கிழத்தி, 5. காதற்பரத்தை என்று ஐந்து என்பர். **நச்சினார்க்கினியர்** உலகியல் பற்றி குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐந்து நிலத்திலும் நடக்கும் காந்தர்வ மணம் என்பர்.

இனி இவ்விருவர் கருத்தையும் ஆராய்வோம். **இளம் பூரணர்** (ஐந்நிலம்) என்பதற்குக் களவும், உடன்போக்கும் இற்கிழத்தி, காமக்கிழத்தி, காதற்பரத்தை என ஐந்தினைக் குறிப்பிடுவர். இளம்பூரணர் கருதிய ஐந்துதான் ஐந்நிலம் என்பதற்கு வேறு தக்க சான்றில்லை. நச்சினார்க்கினியரே இக்கருத்தினை ஏற்றுக் கொள்ளவில்லை. அது நிற்க, உடன் போக்கிற்குப் பாங்கிதான் நிமித்தமாவாள், இச்செய்திக்கு இலக்கிய இலக்கணச் சான்று ஏராளமாக உள்ளன. பாங்கன் நிமித்தமாதலுக்கு ஒரு சான்றும் இல்லையே. இவற்றை யெல்லாம் கருதினார் "யாழோர் மேன தவலருஞ் சிறப்பின் ஐந்நிலத்திற் முன்றும் கைக்கிளைக் குறிப்பே" என்றதற்கு

அசுரம் இராக்கதம் பைசாசம் என்றே உரை கூறினார். அசுரம் முதலானவற்றைப் **பின்னர் மூன்று என்றும்** பிரமம் முதலான நான்கும் பெருந்திணை என்று கருதியிருப்பின் முன்னர் நான்கும் என்றே கூறியிருக்க வேண்டும். வடமொழி யாளர் எட்டு மணத்தைக் கூறுங்கால் பிரமம் முதலான நான்கையும் முன்னர் வைத்தும் அசுரம் முதலான மூன்றினையும் பின்னர் வைத்துத்தான் கூறுகின்றார்கள். அதனால் முன்னைய மூன்றும் அசுரம் முதலியனவென்றும் பின்னைய நான்கும் பிரமம் முதலியன என்றும் கூறுதற்குப் பொருத்தமேயில்லை. அதுவுமன்றித் துஞ்சினாரோடும் மயங்கினாரோடும் களித்தாரோடும் செத்தாரோடும் விலங்கி னோடும் இழிதரு மரபில் யாருமில்லா ஒருசிறைக்கண் புணர்ந்தொழுகும் பைசாச மணத்திற்கெல்லாம் பாங்கன் நிமித்தம் ஆதல் இல்லையாதலின் இவ்விருவர் உரையும் பொருந்துவதாக இல்லை.

பாங்கன் நிமித்தம் முதலான நூற்பாக்களுக்கு இரண்டு உரையாசிரியர்கள் கூறும் உரை அவர்கள் ஊகமே அன்றி வேறில்லை என்பது நமக்குத் தெளிவாக விளங்குகிறது. அதனால் நாமும் நம் ஊகத்தைப் பயன்படுத்தித் தமிழ் மரபு கெடாமல் உரைகூறுவதில் பிழையொன்றும் இல்லையெனக் கருதுகிறேன்.

தமிழர் மணம்

தமிழ் மணம் நிகழ்ந்து வந்தது. இப்பன்னிரண்டும் பாங்கனை நிமித்தமாக உடையன. அப்பன்னிரண்டில் முதல் மூன்றும் கைக்கிளைக் குறிப்பினையுடையன. நடுவண் ஐந்தும் யாழோர் மணத்தைப் போன்றன. ஈற்றில் கூறிய நான்கும் பெருந்திணையைச் சார்ந்தன. இவை வட மொழியாளர் கூறும் எட்டு மணத்திலும் வேறுபட்டவை யாகும்.

29

வஞ்சிதானே முல்லையது புறனே என்ற நூற்பாவிற்கு இயைய முல்லைப்பாட்டு அமைந்திருக்கும் பான்மை

தோற்றுவாய்

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் தம் தொல்காப்பியத்தில் அகத்திணையியலில் அகப்பொருட்குரிய திணைகளை,

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த கிளந்த எழுதிணை என்ப
- தொல்.அகம்1.

என ஏழு திணைகளைக் கூறுகின்றார். கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஏழு திணைகளுக்கும் புறனான பாடாண், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்ற புறத்திணைகள் ஏழனைப் பிற்படப் புறத்திணை இயலில் கூறுகின்றார்.

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே	- தொல். புறம். 10
வெட்சி தானே குறிஞ்சியது புறனே	- தொல்.புறம். 1
வஞ்சி தானே முல்லையது புறனே	- தொல். புறம். 6
உழிஞை தானே மருதத்துப் புறனே	- தொல். புறம் 8.
வாகை தானே பாலையது புறனே	- தொல். புறம். 15.
காஞ்சி தானே பெருந்திணைப் புறனே	- தொல். புறம். 18.

இத்தொல்காப்பிய நூற்பாக்கள் ஏழனுள் 'வஞ்சிதானே முல்லையது புறனே' என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக முல்லைப்பாட்டு அமைந்த திறத்தைக் காண்பதே இக்கட்டுரை.

முல்லையும் வஞ்சியும்

முல்லை என்ற அக ஒழுக்கத்திற்கு இயைந்த புற ஒழுக்கமாக வஞ்சி ஒழுக்கம் திகழ்கிறது. வஞ்சி எனப் பட்டதற்குக் காரணம் கூறவரும் இளம்பூரணர் "காடுறை உலகமாகிய முல்லைப்புறம் மன்னநசை வேட்கையால் எடுத்துச் செலவு புரிந்த வேந்தன்மேல் அடல் குறித்துச் செலவு புரிதலான் அவ்விருபெரு வேந்தரும் ஒருவினையாகிய செலவு புரிதலின் அது வஞ்சி என ஒரு குறி பெற்றது" எனக் கூறுகின்றார். இவற்றின் இயைபு பற்றிக் குறிக்கின்ற நிலையில், "மாயோன் மேய காடுறை உலகமும் கார் காலமும், முல்லைக்கு முதற்பொருளாதலாலும் பகைவயிற் சேறலாய வஞ்சிக்கு நிழலும் நீருமுள்ள காலம் வேண்டு மாதலானும், பருமரக் காடாகிய மலைசார்ந்த இடம் ஆகாமையானும் அதற்கு இது சிறந்ததென்க" எனக் குறிக்கின்றார்.

தலைவி தலைவனைப் பிரிந்து காட்டின் நடுவே அமைந்த தன் மலைக்கண் இருப்பதுபோலத் தலைவனுக்குத் தலைவியைப் பிரிந்து பகைவர் நாட்டிற்கு அரணான காட்டின்கண் அமைந்த பாடிவீட்டில் தங்கி இருப்பான். ஆதலால் முல்லையும் வஞ்சியும் தம்முள் இயைந்து காணப்படுகின்றன. இம் முல்லைப்பாட்டில் வஞ்சித் திணை ஒழுக்கம் இயைந்து நிற்றலைக் காண்போம்.

முல்லையில் வஞ்சி

வஞ்சிதானே முல்லையது புறனே என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்றபடி முல்லை என்னும் அகத்திணைக்கு இயைந்த புறத்திணை ஒழுக்கமான வஞ்சி முல்லைப்பாட்டின் இடையில் அமைவுறப் பொருந்தி வருகிறது. தலைவியின் இருப்பினையும், கார்காலத்தில் வருவதாகக் கூறிச்சென்ற தலைமகனின் தேர்காணாமல் வருந்துகின்ற பிரிவுத் துயரினையும், திறம்படக் கூறி, தலைமகன் தங்கி யிருக்கும் பாசறையின் அமைப்பினையும் அங்கு நிகழும் செயல் களையும் பொருத்தமுற விளக்குகின்றார். முதல் 28 அடிகளில் முல்லைத்திணை ஒழுக்கத்தினையும், 24-வது

அடிமுதல் 80 வரை உள்ள அடிகளில் வஞ்சித்தினை ஒழுக்கத்தையும் மீண்டும் 80 முதல் 103 வரை உள்ள அடிகளில் தலைமகள் இல்லிருத்தலையும், கார்காலச் சிறப்பையும், தலைமகன் திரும்பி வருகின்ற செய்தியையும் அமைக்கின்றார் ஆசிரியர் நப்பூதனார்.

நினைந்து அவள் புலம்பல்

வினையையே உயிராகக் கொண்ட தலைமகன் கருங்கடல் மேய்ந்த கமஞ்சூல் எழிலி இருங்கல் இருவரை ஏறி யுயிர்க்கும் பெரும்பதக் காலையில் திரும்பி வருவதாகக் கூறிச் செல்கின்றான். அவன் கூற்றில் நம்பிக்கை வைத்து அவளும் அவன் பிரிவை ஆற்றியிருக்கின்றாள். இமிழிசை வானம் முழங்குகின்றது. கல்லோங்கு கானம் களிற்றின் மதம் நாறுகிறது. முல்லை மலர்கள் செவ்வியுடையவாகின்றன. கார்கண்ட தலைமகள் தலைமகன் தேர்காணாமல் வருந்து கின்றாள். இவ்வாறு தலைமகள் வருந்துகின்ற வருத்தத்தைக் கண்ட பெருமுது பெண்டிர்,

நலந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொரித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலைக்

முல்லை. 1-6.

காலத்தில் அருங்கடி மூதூர் மருங்கிற் சென்று யாழிசை இனவண்டு ஆர்ப்ப. நெல்லொடு நாழி கொண்ட நறுவீ முல்லை. அரும்பவிழ் அலரி முதலியவற்றைத் தூவிக் கைதொழுது விரிச்சி கேட்கும் பொருட்டு நிற்கின்றனர். இந்நிலையில் முல்லைநிலப் பெண் ஒருத்தி பால் உள்ளுமை காரணமாகக் கலங்கித் துன்புறுகின்ற இனிய பசுங்கன்றை நோக்கி " உங்கள் தாயர் இடையர்களைப் பின்னே இருந்து செலுத்த இப்பொழுதே வந்துவிடும்" என்று கூறுகின்றார்.

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுடீர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போன்
நன்னர் நன்மொழி கேட்டனம்

- முல்லை. 12-17

இவ்வாறு அவர்கள் விரிச்சி கேட்டமையால் மகனும் தன்செயலை இனிதே முடித்து ஒன்னார்ப் பணித்துத் திறை பெற்றுவிரைந்து வருவன் எனத் தலைவியைப் பலவாறு ஏதுக்கள் கூறி வற்புறுத்தவும் அவள் ஆற்றமாட்டாமல் வருந்து கின்றாள். அவள் பூப்போன்ற கண்களினின்றும் முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகள் துளிர்த்து நிற்கின்றன.

நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறைய வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்ந்து நீநின்
பருவரல் எவ்வம் களையாயோ யெனக்
காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்பு முத்துறைப்ப

- முல்லை . 16-24

தலைவி தனிமைத் துயரில் வாடுகின்றாள். இவ்வாறாக முல்லைப்பாட்டு ஆசிரியர் நப்பூதனார் பாடலில் தொடக் கத்தில் முதல் இருபத்து மூன்று அடிகளில் முல்லைத்திணை ஒழுக்கமான' இருத்தலை' மிக அழகாக அமைத்துச் செல்கின்றார்.

வஞ்சி ஒழுக்கம்

பாடலில் முதற்பகுதியில் தலைவியின் ஆற்றாமை நிலையைக் கூறியவர் அடுத்த பகுதியில் வஞ்சி ஒழுக்கத்தை - எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்து அஞ்சுதகச் சென்று அடல் குறித்த செயலை விளக்குகின்றார். வேந்து வினை காரணமாகப் பிரிந்த தலைமகன் பாசறை அமைத்து அப்படி வீட்டில் தங்கியிருந்தமையை - பாசறை நிலையை மிகத் தெளிவாக விளக்கிச் செல்கின்றார்.

பாசறை அமைப்பு

போர்மேற் சென்ற தலைமகனும் அவன் வீரர்களும் காட்டாது சூழ்ந்த அகன்ற நெடிய புறவில் சேணாது பிடவம், பசிய தூறுகளையும் வெட்டி, அங்கிருந்த வேட்டுவரின் அரண்களையும் அழித்துக்காட்ட முள்வேலி யாகிய மதிலினை அமைத்து அதன் அகத்தே கடல்போல் பரந்த பாடி வீட்டினை அமைக்கின்றனர். இதனை,

கான்யாறு தழீஇய அகனெடும் புறவில்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை யருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பசந்த பாடி

- முல்லை. 24-28

என்ற முல்லைப்பாட்டுப் பகுதியால் தெளியலாம்.

யானைப்பாகர் செயல்கள்

இவ்வாறு அமைத்த பாசறையின் உட்பகுதியில் உவலைக் கூரை ஒழுகிய தெருவில் நாற்சந்தி கூடுமிடத்தில் காவலாக நிறுத்தப்பட்ட தேம்படு கவுளயானை கரும்பொடு நெருங்கக் கட்டிய நெற்கதிர்களையும், அதிமதிரத் தழையை யும் உண்ணாமல் அவற்றினால் நெற்றியைத் தேய்த்துக் கொண்டும், ,அயில்நுனை மருப்பில் தம் கையிடைக் கொண்டும் நிற்றலைக் கண்ட யானைப் பாகர் கவைமுட் கருவியால் வடமொழி பயிற்றி அதனை உண்ணுமாறு செய்கின்றனர்.

உவலைக் கூரை யொழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைத் தியாத்த
வயல்வினை யின்குளருண்ணாது நுதல்துடைத்து
அயில்துணை மருப்பிற் நம் கையிடைக் கொண்டென
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்ப - முல்லை. 29-36

என்பது முல்லைப்பாட்டு.

மறவரின் அரண்கள்

பாசறைக்கண் பல்வேறு மறவர்க்குரிய அரண்கள் இருந்தமையைக் கூறுகின்ற ஆசிரியர் நப்பூதனார் அவை அமைந்த திறத்தை விளக்குகின்றார். காவிக் கல்லிலே தோய்த்து உடுத்த உடையை உடையவனும், முக்காலை உடையவனுமாய அந்தணன் அம்முக்கோலை நட்டு அதன் மேல் அவ்வுடையை இட்டுவைத்த தன்மைபோல மறத்திலும் அறம் வழுவாத போரிலே வெந்திற்று ஓடாமைக்குக் காரணமான வலிய வில்லைச் சேர ஊன்றி அவற்றின்மேல் தூணிகளைத் தொங்கவிட்டுக் கூட்டமாக அரண்களை அமைத்தனர் எனக் கூறுகின்றார். இதனை,

கல்தோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசை நிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்வில் தூவி நாற்றிக்
கூடங்குத்திக் கயிறு வாங்கிருக்கை
பந்தலைக் குந்தம் குத்தில் நிரைத்து
வாங்குவில் அரணம் அரவ மாக
வேறு பல் பெரும்படை

- முல்லை 37-43

என்ற பகுதியால் உணரலாம்.

மன்னன் இருக்கை

இவ்வரண்களுக்கு நடுவே மன்னனின் தனி இருக்கை அமைக்கப்பட்டுள்ளது. வில்லரண்களில் மதில் திரையை வளைத்து அரசனுக்கென்று தனிக்கோயில் அமைக்கப் பட்டுள்ளது. இக்கோயிலில் உள்பகுதியில் குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து மங்கையர் கச்சிலே வாளைப் பூண்டவராம் நெய்யினை உமிழ்கின்ற திரிக் குழாயினால் பாவையினை கையிலே அமைந்த விளக்கின் சுடர் குறையுந்தொறும் திரியைக் கொளுத்தி எரிக்கின்றனர்.

..... நாப்பின் வேறோர்
நெடுங்காழ்க் கண்டம் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து
இரவுபகற் செய்யும் திண்பிடி யொள்வாள்

விரவிரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிற் சுரையர் நெடுந்திரிக் கொளீ இக்
கையமை விளக்கம் நந்துதொறு மாட்ட

- முல்லை. 43-49

மெய்க்காப்பாளர்

இவ்வாறு பாசறையின்கண் மகளிர் இருந்தமையை உணர்த்தியவர் அடுத்து மன்னன் மெய்க்காப்பாளர் சூழ இருந்தமையைப் புலப்படுத்துகின்றார். யானை, குதிரை முதலியன உறங்கலின் அவற்றின் கழுத்தில் கட்டப்பட்ட மணியோசை அடங்கிய நடுயாமத்தில் புனலிபூத்த அசைகின்ற சிறு தூறுகள் துவலையோடு வருகின்ற காற்றிற்கு அசைந்ததைப் போன்று துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப் பெருமூதாளர் காவலாகச் சுற்றி நிற்கின்றனர் என்பதை,

நெடுநா ஒண்மணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்விரல் அசைவளிக் கசைவந்த தாங்குத்
துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
பெருமூதாளர் ஏமம் சூழ

- முல்லை. 50-54

என்ற முல்லைப் பகுதிவழி உணர்த்துகின்றார் ஆசிரியர்.

நாழிகைக் கணக்கர்

இவ்வாறு மன்னனின் தனி இருக்கையில் குறுந்தொடி மகளிரும்,பெருமூதாளரும் மட்டுமின்றி எடுத்து காரியம் இனிதே நிறைவுறப் பொழுதினைக் கண்டு கூறும் மெய்யறி வுடையவர்களும் ஆங்கு இருந்தமையை,

பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெளீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்னல் இனித்தென் றிசைப்ப

- முல்லை, 55-58

என்ற முல்லைப் பகுதி உணர்த்துகின்றது.

யவனரும் மிலேச்சரும்

அரசனின் இருக்கையில் உள்நாட்டு மெய்க்காப் பாளர்கள் மட்டுமின்றி அயல்நாட்டுக் காப்பாளர்களும் இருந்தனர் என்பதை முல்லைப்பாட்டு உணர்த்தி நிற்கிறது. அரசன் பள்ளியறையில் அகப்பணி செய்தற்கு அயல்நாட்டுக் காப்பாளர் அமைந்திருந்தனர். இவ்வயல் நாட்டுக் காப்பாளர் களில்

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்

என்பவர்கள் ஒருவகையினர்.

உடன்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர்

என்பவர்கள் ஒருவகையினர். இவர்கள் புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்லில் மணிவிளக்கை எரிய வைத்துக்கொண்டு திண்நாண் எழிலி வாங்கிய ஈரறைப் பள்ளியுள் உள் அறையாகிய பள்ளி அறையின்கண் அரசனின் உழையராய் இருந்து காவல் புரிகின்றனர்.

மன்னன் மனநிலை

இவ்வாறாகப் பாசறையில் இருந்த மகளிர், மெய்க் காப்பாளர், நாழிகைக் கணக்கர், யவனர், மிலேச்சர் இவர்கள் சூழ இருந்த மன்னனின் மனநிலையை அடுத்து உரைக் கின்றார். வினைமுற்றியிருந்த தலைமகன் பகைமேற் செல்லும் விருப்பத்தால் உறக்கங் கொள்ளாமல், முன்னாளில் பகைவர் எறிந்த வேல் நுழைந்தமையால் புண்கூர்ந்து அதனால் வருத்தமுற்றுத் தம் பெண்யானைகள் மறந்த களிற்று யானை களை நிலைத்தும், யானைகளின் பாரிய கைகளை வெட்டி வீழ்த்தித் தாம் அணிந்த வஞ்சின மாலைக்கு வெற்றி உண்டாகும்படிச் செஞ்சோற்றுக்கடங் கழித்த மறவர்களை நினைந்தும், வைத்துணை பகழி மூழ்கலினால் புல் மிகுந்து அத்துன்பத்தால் புல்லுண்ணாமல் செவிசாய்த்து வருத்து கின்ற குதிரைகளை நினைந்தும்,

ஒருவகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகர் சேர்த்தி நெடிதுநினைத்து
பகைவர்ச் சுட்டிய படைகொல் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலத் திருத்தி
அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை

-யில் இன்துயில் வதிகின்றமையைக் காட்டுகின்றார்.

இவ்வாறாக முல்லைப்பாட்டு ஆசிரியர் நப்பூதனார் பகைமேற் சென்ற வேந்தனின் பாசறை நிலையைக் கூறுவதன் மூலம் முல்லைத்திணைக்கு இயைந்த வஞ்சி யொழுக்கத்தை விளக்குகின்றார்.

படர்மெலிந்து இரங்கும் தலைமகள்

பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டுவந்து ஆற்று விக்கவும் ஆற்றமாட்டாதவளாய்ப் பூப்போலுண்கண் புலம்பு முத்துறைக்க நின்ற தலைமகள் அரசிருந்து பணிக்கும் முரசு முழங்கு பாசறையில் இன்துயில் வதியுநனைக் காணாது வருந்துகின்ற முல்லை யொழுக்கத்தை மீண்டும் இறுதியில் வற்புறுத்துகின்றார் ஆசிரியர். உருமிடி வானம் இழியவும், வரிநிறப் பாதிரி விடவும், திருவில் விலங்கன்றித் தீம்பெயல் தாழவும் தொடங்கிய கார்காலத்தில் வருவதாகக் கூறிச் சென்ற தலைமகனின் வரவினைக் காணாத தலைமகள் தன் நெஞ்சினை அவன்பாற் போக்கி நிறையழிந்து வருந்து கின்றவள் இவ்வாறு தன் கொழுநன் சொல்லைத் தவறிய தாம் எனக் கூறித் தன்னைத் தானே தேற்றியும், கழலும் வளைகளைக் கழலாமல் திருத்தியும், மீண்டும் மயங்கியும் நெட்டுயிர்த்தும்,அம்பு பாய்ந்த மஞ்ஞையைப் போல் மயங்கி தன்னக நெகிழ இடஞ்சிறந்துயரிய எழுநிலை மாடத்தின் கண்ணே இருந்து முடங்கிறைச் சொரிதரும் மாத்திரம் அருவியின் ஓசையிலே மனம் பறி கொடுத்து நிற்கின்றாள்.

இன்றுயில் வதியுநற் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிரைதபு புலம்பொடு
நீடுநினைந் தேற்றியும் ஒடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென உயிர்த்து

ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி பாழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச் சுடரழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர வருவி
இன்பல் இமிழிசை யோர்ப்பனன் இடந்தோள்

- முல்லை, 80-88

எனத் தலைமகள் தலைமகனைப் பிரிந்து எழுநிலை மாடத்தில் தனித்து இருந்தமையை பிரிவிடை ஆற்றாது வருந்துகின்றமையை உணர்த்துகின்றார் ஆசிரியர். பேராசிரியர் டாக்டர். மு. வ. அவர்கள் முல்லைக்கு விளக்கம் கூறுகையில் 'கற்பு' எனப் பொருள் கூறுகின்றார். அதாவது தலைமகன் தலைமகள் இருவரும் சொற்றிறம்பாமல் நடத்தலே கற்பு - முல்லை எனக் கூறுகின்றார். அவர். இதற்கேற்பவே தலைமகள் தலைமகன் பிரிந்து சென்ற போது அவன் பிரிவை ஆற்றியிருப்பதாகக் கூறிய சொல்லைத் திறம்பாமல் கடைப்பிடிப்பதை ஆசிரியர் நப்பூதனார் 'நீடு நினைந்து தேற்றியும்' என்ற தொடர்வழிப் புலப்படுத்துகின்றார். தலைமகனும் தலைமகளைப் போன்றே சொற்றிறம்பாமல் கற்புடன் ஒழுகுவதைக் கார்காலத்தில் விரைந்து திரும்புகின்ற செயலின் மூலம் விளக்குகின்றார். இவ்வாறாக ஆசிரியர் நப்பூதனார் முல்லைத்திணை ஒழுக்கத்தைப் பாடலில் முதற் பகுதியிலும் இறுதிப் பகுதியிலும் அமைத்துக் காட்டுகின்றார்.

தலைமகள் மீளல்

விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருஇவ் பெருவிறல் வானம் பெருவரை சேருங் கருவளி காலத்தில் வருதும் என மொழிந்து சென்ற தலைமகன் வினைமுற்றி மீண்டு வருகின்றான். வேண்டுபுலங் கவர்ந்த ஈண்டுபெருந் தானை யோடு விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு வயிரும் வளையும் ஆர்ப்பவும் அயிரவும்,

செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை மங்கை யவிழத்
தோடார் தோன்றிக் குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி

வானம் வாய்த்த வாங்கதிர் வாகின்
திரிமருப் பிரலையொடு மடமானு களை
எதிர்செல் வெல்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடு

பின்னாகும்படி வருகின்றான் தலைமகன். தலைமகளின் வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவின் குளம்படி ஓசை யானது அரசிருந்து மணிக்கும் முரசுமுழங்கு பாசறையின் இன்துயில் வதியுநனைக் காணாது இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து முடங்கிறைச் சொரிதரும் மாத்திரள் அருவியின் இன்பல் இமிழிசை ஓர்ப்பனன் இடந் தோளாய தலைமகளின் அம்செவி நிறைய ஆவின என்று முடிக்கின்றார் ஆசிரியர். இதனால் தலைமகனும் சொன்ன சொல் தவறாமல் இருகின்ற பான்மையை உணர்த்தி நிற்கின்றார். தலைமகன் மீண்டும் வருகின்ற நிலையைக் கூறாமல் விடுத்திருந்தால் இம்முல்லைப்பாட்டு முழுமை பெற்றதாகாது. தலைமகனும் தன் பண்பில் குறைந்தவனாயிருப்பான். இவற்றைத் தவிர்க்கவே ஆசிரியர் நப்பூதனார் தலைமகன் மீண்டு வருகின்ற காட்சியினையும் அமைக்கின்றார்.

இறுவாய்

இவ்வாறாக முல்லைப்பாட்டு ஆசிரியர் நப்பூதனார் பாடலின் தொடக்கத்தில் கடவீர் முகந்த கமஞ்சூல் எழிலி குடமலை யாகத்துக் கொள்ளப்பு இறைக்கும் காலத்தில் திரும்பி வருவதாகக் குறிசெய்து பிரியத் தலைமகள் அவன் பிரிவை ஆற்றாது வருந்துகின்றமையைக் கூறிப் பின்னர் அவள் கூறிச் சென்றபடி தன் கற்பு ஒழுக்கத்திற்கேற்றபடி இல்லிருந்து ஆற்றுகின்றமையைப் பின் கூறுகின்றார். இடைப்பகுதியில் தலைமகன் தலைமகளைப் பிரிந்து பாசறை வீட்டில் இருக்கின்றமையைக் கூறுகின்றார். இவ்வாறு தலைமகன் தலைமகள் இருவரும் ஒருவரை ஒருவர் பிரிந்து தத்தமக்குரிய இடத்தில் சொற்றிறம்பாமல் இருப்பதாகக் கூறும் இருத்தல் நிமித்தத்தை விளக்கி நிற்பதால் 'வஞ்சிதானே முல்லையது புறனே' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு இயைய முல்லைப்பாட்டு அமைந்துள்ளது எனத் துணியலாம்.

பாடி வீட்டின் அமைப்பு

எஞ்சா மண்ணசை காரணமாக வந்த வேந்தன்மேல் தன் வீரத்தை நிலைநாட்டுதற்காகச் சென்ற முல்லைப்பாட்டுத் தலைமகன் அவன் வீரர்களுடன் பகைப்புலத்தில் பாசறை வீட்டில் தங்கியிருந்தமையைக் கூறும் ஆசிரியர் நப்பூதனார் அவர்கள் பாசறை அமைப்பினை,

கான்யாறு தழீஇய அகனெடும் புறவின்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை யருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏழற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி

- முல்லை 24 -28

என விளக்குகின்றார். அதாவது காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய காட்டிடத்தே, சேய்மைக் கண்ணும் சென்று மணம் வீசுகின்ற பிடவஞ் செடிகளையும், பசிய தூறுகளையும் வெட்டி வீழ்த்திப் பின்னர் ஆங்குக் காவலாக அமைந்திருந்த வேடுவர்களில் குடியிருப்புக்களையும் அழித்துக் கடல்போல் பரந்த பாடிவீட்டினை அமைத்தனர் என அப்பாடி வீட்டின் அமைப்பினைத் தெளிவுறுத்துகின்றார்.

இன்துயில் வதியுநற் காணாள் நெஞ்சாற்றுப்படுத்த நிரைதபு புலம்பொடு எண்ணியன

பெருமுது பெண்டிர் பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலை போதில் விரிச்சி கேட்டு ஆய்மகன் கூறிய நன்மொழிகளைக் காட்டவும், காட்டவும் காணாதாளாய்க் கலுழ்சிறந்து பூப்போல் உண்கண் புலம்புமுத்துறைப்ப நின்ற தலைமகள் அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறையில் இன்துயில் வதியுநனாய தலைமகனைக் காணாது வருந்துகின்றனள். வருந்துகின்ற தன் நெஞ்சினை அவள்பாற் போக்கி நிறையழிந்து மிக்க துன்பத்தினால் ஓடுகின்ற வளையைத் திருத்திக் கொண்டும், மையல் கொண்டு உயிர்த்தும், பகழி பாய்ந்து மஞ்ஞையினைப் போல் நடுங்கி

இழை நெகிழ எழுநிலை மாடத்தின்கண் இருந்து முடங்கிறைச் சொரிதரு மாத்திரளருவியில் இன்பல் இமிழிசையைக் கேட்டு நிற்கின்றனள். அவ்வாறு நிற்கின்றவள் தன் தலைவன் அக்காலத்தில் கூறிச் சென்ற சொற்களை நினைத்து பார்க்கின்றாள். உடனே அவளுக்குத் தலைமகன் உருமிடி வானம் முழக்குகின்ற கார்காலத்தில் திரும்பி வருவதாகக்கூறித் தான் வருந்துணையும் அவளை ஆற்றியிருக்குமாறு கூறிச் சென்ற சொற்கள் நினைவிற்கு வருகிறது. வரவே தலைமகன் கூறிச் சென்றிருப்பதால் அவன் சொற்களை மீறி இவ்வாறு வருந்துதல் தன் ஆருயிர்த் தலைவன் பெருமொழியைத் தவறியதாம் என்று கருதித் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு பிரிவுத் துயரை ஆற்ற நினைக்கின்றாள். இவ்வாறு தலைமகள் இன்துயில் வதியுநனைக் காணாது நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு எண்ணுகின்றமையை ஆசிரியர் நப்பூதனார் 'நீடுநினைந் தேற்றியும்' என்ற பகுதிவழி உணர்த்துகின்றார்.

30

திணை மயக்கம்

தோற்றுவாய்

தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமை இன்ன இன்ன பொருளில் வரும் என்பதை உணர்த்துமிடத்து, 'அதனொடு மயங்கல்' (தொல். 74) என்னும் பொருளிலும் அவ்வேற்றுமை வரும் என்பர். இதற்கு எடுத்துக்காட்டு 'எள்ளொடு விராய அரிசி', என்பதாம். எனவே மயங்குதல் என்னும் பல பொருள் ஒருசொல்லானது இங்கே விரவுதல், கலத்தல் என்னும் பொருளில் வந்துள்ளது.

எழுத்ததிகார மயக்கம்

தொல்காப்பியனார் நூன்மரபில் மொழி இடையில் மெய்யெழுத்துக்கள் மயங்கும் முறையினைக் கூறியுள்ளார். இன்ன மெய்யெழுத்துக்கள் இன்ன மெய்யெழுத்துடன் மயங்கி நிற்கும் என்று விதி கூறியுள்ளார். இம்மயக்கம் தனிமொழியாக்கத்திற்குப் பயன்படுகிறது. உயிரீற்று மொழி புணர்வதை உயிர் மயங்கியல் என்றும், மெய்யீற்று மொழி புணர்வதைப் புள்ளி மயங்கியல் என்றும் ஆசிரியர் கூறுவதால், சொற்கள் புணர்தலும் மயக்கமாகின்றது. இது தொடர்மொழியாக்கத்திற்குப் பயன்படுகிறது. இன்னும்,

'மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே' (புணரியல்-9)

என்னும் நூற்பாவால் மரூஉத்திரளாய் மயங்குகின்ற சொற்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதுவும் மொழியாக்கத்திற்கு உரியதாகும்.

ஆகாத மயக்கம்

'அவன் வந்தாள், என்று ஆண்பாற் சொல்லையும் பெண்பாற் சொல்லையும் மயக்கிச் சொற்றொடர் அமைக்கலாமா எனின், அவ்வாறு அமைக்கக் கூடாதென்பதைக் கண்டிப்பாகத் தொல்காப்பியனார் கூறுகின்றார்'

'வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே' (கிளவியாக்கம் - 11)

என்னும் நூற்பாவால், ஒருபாற் சொல் பிறிதொருபாற் சொல்லொடு மயங்காது; தம்பாற் சொல்லோடுதான் மயங்கிவரும் என்பர். பொருள் உலகத்தில் ஓர் ஆணும் பெண்ணும் மயங்கி நிற்பது (சேர்ந்து நிற்பது) சமூக ஆக்கத்திற்குப் பயன்படலாம். ஆனால் , சொல் உலகத்தில் ஓர் ஆண்பாற் பெயரும் பெண்பால் வினையும் மயங்கி நின்றால் அது பொருளுணர்ச்சிக்குக் கேடு பயப்பதாகும். ஆகையால் இவ்வகையான மயக்கம் கூடாது என்னும் கருத்தால் 'மயங்கல் கூடா' என்று அவர் கூறுகின்றார்.

ஆனால், உயர்திணைச் சொல்லாகிய தன்மை இடத்துச் சொல்லும், அஃறிணைச் சொல்லும் 'யானும் என் எஃகமும் சாறும்' என்று எண்ணுவழி விரவி (மயங்கி) வரலாம் என்பதை,

'தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்'
(கிளவியாக்கம் - 43)

என்னும் நூற்பாவால் தொல்காப்பியனார் கூறுகிறார்.

பொருளதிகார மயக்கம்

தொல்காப்பியனார் மரபியலில் 'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும் கலந்த மயக்கம்' இந்த உலகம் என்று கூறுகிறார். ஐம்பூதங்களும் கலந்து இருதிணை ஐம்பாலாகக் காட்சியளிக்கும் இவ்வுலகத்தினைப் பொருளாதிகாரத்தே அகத்திணை புறத்திணை என்று இரண்டாக முதற்கண் பகுத்துக் கொண்டு அகத்திணையை ஏழாகவும் புறத் திணையை ஏழாகவும் பிரித்துக் கொள்ளுகிறார். அவ்வகத் திணையுள் கைக்கிளை, பெருந்திணை என்னும் இரண்டினை நீக்கிவிட்டுச் சிறந்ததாகிய ஐந்திணை குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் என்று பெயர் பெறும் என்று கூறுகிறார். இவ்வைந்திணையும் முதல் கரு உரி என்னும் முப்பொருளைப் பெற்று வரும் என்று கூறுகின்றார்

அவ்வாறு வரும்பொழுது குறிஞ்சித்திணை முதலிய ஐந்தும் இன்ன இன்ன முதற்பொருள் பற்றியும், இன்ன இன்ன கருப்பொருள் பற்றியும், இன்ன இன்ன உரிப்பொருள் பற்றியும் வரும் என்று கூறுகிறார்.

குறிஞ்சி, முதலான ஐந்து திணைகட்கு முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்னும் முப்பொருள்களை உரிமையாக்கிய தொல்காப்பியனார் பின்னர்,

'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' (அகத்திணையியல்-15) என்னும் நூற்பாவால் திணைமயக்கம் கூறுகின்றார். இந்நூற்பாவிற்கு **இளம்பூரணர்** 'உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும் முதற்பொருளும் மற்றொரு திணையோடு சேர நிற்கவும் பெறும். உம்மை எதிர்மறை யாகலான் மயங்காமை பெரும்பான்மையாம். எனவே 'உய்த்துக் கொண்டுணர்தல்' என்னும் தந்திர உத்தியால் எடுத்தோதிய காலமாகிய முதற்பொருளும் பூவும் புள்ளும் முதலாகிய கருப்பொருளும் மயங்கியும் மயங்காமலும் வரும். மயங்கி வருதல் கவி முதலாகிய சான்றோர் செய்யுளகத்துக் கண்டு கொள்க.

'ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்'

(அகநானூறு:48)

என்ற வழி, இக்குறிஞ்சித்திணைப் பாட்டில் 'மருதத்திற்குக் கருப்பொருளாகிய செங்கழுநீர் மலரும், குறிஞ்சிக்குரிய வெட்சிப் பூவும் அணிந்தோள் என்றமையால் கருப்பொருள் மயக்கமாயிற்று என்பர்.

நிலம் நீர் தீ வளி ஆகாயம் என்னும் ஐம்பூதமும் தம்முள் கலந்ததால் (மயங்கியதால்) உலகில் எல்லாப் பொருள் களும் தோன்றின. அதுபோலவே உலகத்தில் ஓரிடத்தில் தோன்றிய பொருள்கள் மற்றோரிடத்திலே சென்று அங்குள்ளவர்க்குப் பயன்படுதலால் உலகியல் வளர்கின்றது. என்னும் கருத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே ஓர் திணைக்குரிய கருப்பொருள்கள் மற்றொரு திணையிலே சென்று மயங்கினால் (கலந்தால்) அதனை அறிஞர் திணைமயக்கம் என்று கூறுகின்றனர் என்பதை உணர்ந்தோம். இத்திணை மயக்கம் சங்ககாலப் புலவருடைய பாட்டிலும் பிற்காலப் புலவர் பாட்டிலும் மிக்க சுவை யாகக் கூறப்பட்டிருக்கின்றது.

'கொடிச்சியர் புனத்தயற் குறிஞ்சி நெய்பகர்
இடைச்சியர் கதுப்பயல் கமழும்; ஏழையர்
கடைச்சியர் களையெறி குவளை கானல்வாய்த்
தொடுத்தலர் பிணையலார் குழலுள் தோன்றுமே'

கொடிச்சியர் காவல் புரியும் தினைப்புனத்தில் பக்கத்தே மலர்ந்த குறிஞ்சி மலர்கள், அங்கு நெய் விற்க வந்த முல்லை நிலப் பெண்களாகிய இடைச்சியர்தம் கூந்தற் பக்கத்தே அணியப்பட்டு விளங்கும்.

மருதநிலம் பெண்களாகிய கடைச்சியரால் களையாகப் பறிக்கப்பட்டு எறியப்படும் குவளைமலர்கள் நெய்தல் நிலப் பெண்களின் கூந்தலுள் தோன்றுகின்றன.

'கலவர்தம் சிறுபறை இசையிற் கைவினைப்
புலவர்தேம் பிழிமகிழ் குரவை பொங்குமே;
குலவுகோற் கோவலர் கொன்றைத் தீங்குபல்
உலவுநீள் அசுணமா உறங்கும் என்பவே'

நெய்தல் நிலத்திலே கலங்களையுடைய பரதவர் முழக்கும் சிறுபறை இசையினாலே மருதநிலத்தே கள்ளுண்ட களியர்தம் குரவைக் கூத்து நிகழப் பெறும். அதுபோல முல்லைநிலத்துக் கோவலர் ஊதும் கொன்றையந் தீங்குழல் இசையினைக் கேட்டுக் குன்றிலுள்ள ஆசுணமா மயங்கி உறங்கும்.

மேற்கூறிய திணை மயக்கத்தினைத் தோலாமொழித் தேவர் என்பார் தாம் இயற்றிய சூளாமணி என்னும் இலக்கியத்தில் நாட்டுப்படலத்தே இவ்வாறு கூறியுள்ளார்.

பரஞ்சோதியார் தாம் இயற்றிய திருவிளையாடற் புராணத்தே நாட்டுப்படலத்திற்கூறிய திணைமயக்கத்திற் சில:-

'முல்லை வண்டுபோய் முல்லையாழ் முளரிவாய் மருதம்
வல்ல வண்டினைப் பயிற்றிப்பின் பயில்வன மருதம்'(38)

முல்லை நிலத்திலே உள்ள வண்டு மருதநிலத்திற்குச் சென்று அங்குத் தாமரைப் பூவினிடத்தே மருதப் பண்ணில் வல்ல வண்டினைச் சந்தித்து, முன்னே அதற்குத் தன்முல்லைப் பண்ணினைக் கற்றுக் கொடுத்து விட்டுப், பின் அவ்வண்டினிடத்தே மருதப்பண்ணைப் பயில்கின்றதாம். என்னே புலவரின் கற்பனை! இக்கற்பனையால் உயர்ந்த இலக்கினைப் புலவர் அறிவுறுத்துகின்றார். ஒரு கலையிலே வல்லவன் மற்றொரு கலை வல்லோன் இருக்குமிடம் சென்று அவனுக்குத் தன் கலையைக் கற்பித்து விட்டு அவன் கற்ற கலையைத் தானும் கற்பது என்ற முறை கலைவல்லோரிடம் காணப்பட்டால் அது மிகச் சிறந்ததன்றோ? அது போலவே ஒரு தமிழன் வேற்று மொழி வழங்கும் நாட்டிற்குச் செல்வானேயானால் தன் தமிழை அங்குள்ளவர்க்கு நன்கு சொல்லிக் கொடுத்துவிட்டு அவர்கள்பால் அவர்கள் மொழியையும் நன்கு கற்றால் மொழிப்பூசல் உண்டாகுமோ? பரஞ்சோதியார் கூறிய திணை மயக்கம் வெரும்புனைந்துரையன்றோ?

சமுதாய நலத்தை அடிப்படையாகக் கொண்டதாம்

'கரும்பொற் கோட்டினம் புன்னைவாய்க் கள்ளுண்டு காளைச்
சுரும்பு செவ்வழிப் பாண்செயக் கொன்றைபொன் சொரிய'

மேற்கூறிய திணைமயக்கப் பொருள்களுக்குமேல் இங்கே கூறிய திணை மயக்கம் சற்று மேலே செல்கின்றது. முல்லை நிலத்து ஆண் வண்டு நெய்தல் நிலத்திற்கு போய் அங்குள்ள புன்னை மரப் பூக்களிலே தேனை உண்டது. நெய்தல் நில மக்களெல்லாம் கேட்குமாறு செவ்வழிப் பண்ணை அழகாகப் பாடிற்று. இச்செயலை முல்லை நிலத்திலே உள்ள கொன்றை கண்டது. அக்கொன்றை தேசிய உணர்ச்சி கொண்டு, நம் திணைப் பண்ணை அயல் திணையிலும் சென்று பாடிப் பரப்பும் இவ்வண்டின் செயல் அரிய செயலாகும் என்று கருதி, அவ்வண்டிற்குப்

பரிசிலாக ஏராளமாகப் பொன்னைச் சொரிந்ததாம். இதுபோல நம் கலையை அயல்நாட்டிலே சென்று பரப்புபவர்கட்கு நம் நாட்டு மக்கள் மிகுதியான பொருளைத் தந்து உதவ வேண்டும் என்பது அவர் கருதிய குறிப்பாகும்.

பாரதியாரின் திணைமயக்கம்:

தொல்காப்பியனார் ஒரு திணையிலே தோன்றிய கருப்பொருள் வேறொரு திணையிலும் சென்று கூடும். சில சமயத்தில் கூடாமலும் இருக்கலாம் என்று இரண்டு நிலையினைக் கருத்தில் வைத்துக் கொண்டு 'உரிப்பொருள் இல்லன மயங்கவும்பெறுமே' என்று உம்மை வைத்து நூற்பாவை இயற்றியுள்ளார். இத்திணை மயக்கத்தைச் சில புலவர் புனைந்துரையாகவும் சிலர் புனைந்துரையுடன் சமுதாய நோக்கத்தைச் சேர்த்தும் பாடியுள்ளனர்.

ஆனால், பாரதியார் அவர்கள் ஓரிடத்துப் பொருள், மற்றோரிடத்திற்குச் சென்று பயன்படுவதாகக் கூறும் திணைமயக்கம் சமுதாய மேம்பாட்டிற்கும், ஓரிடத்து மக்கள் மற்றோரிடத்திற்குச் சென்று குடியேறி வாழ்வதாகக் கூறும் திணைமயக்கம் சமுதாய ஒற்றுமைக்கும் வழி செய்யும் என்று கருதுகின்றார். அவர் பாடிய,

'பாரத தேசமென்று பெயர்சொல்லு வார்- மிடிப்
பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லு வார்'

என்ற பாட்டில்,

'சிந்து நதியின்மிசை நிலவினிலே நல்ல
சேரனன் னாட்டிளம் பெண்க ளுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டி சைத்தே
தோணிக ளோட்டிவிளை யாடிடு வோம்'

'கங்கைந திப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப் போம்'

என்ற பகுதிகளை எடுத்துக்கொண்டால், இப்பகுதி, திணை மயக்கம் கூறும் பாடலைப் போன்றதேயாகும்.

'சிந்துநதி வெள்ளத்தின் மேலே வெண்ணிலா வீசும் பொழுது சேரனன்னாட்டிற் பிறந்த நல்ல இளம் பெண் களுடன் சேர்ந்துக் கொண்டு கவிஞர் தெலுங்கில் காதற் பாட்டிசைத்துத் தோணியோட்டி விளையாடிடுவோம்' என்று பாடுகிறார். இது நல்ல கருத்தமைந்த பாடலாகும்.

பாரதி, தமிழ்நாட்டிலே பிறந்தவர்; தென்நாட்டவர். இவர் விளையாடுவதற்குத் தன்னாட்டிலே உள்ள பெண் களைத் தேர்ந்தெடுக்காமல் தமிழின் துணைமொழியாகிய மலையாள மொழி பேசும் சேரனாட்டிளம் பெண்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார் இவர்கள் தமிழிலும் பாட்டுப் பாடாமல் மலையாளத்திலும் பாட்டுப்பாடாமல் தங்கள் இருமொழிக்கும் துணையாக உள்ள கவின்தெலுங்கில் காதற்பாட்டினைப் பாடுகின்றனர். ஆனால் தோணிவிட்டு விளையாடுமிடம் வடக்கே உள்ள சிந்துநதியாகும்.

பாரதியார் மேற்காட்டிய இப்பாடற்பகுதியை, 'பாரத நாட்டு மக்கள் எல்லோரும் பாரதநாடு முற்றிலும் தங்கு தடையில்லாமல் இயங்கி அவர்கள் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருத்தல் வேண்டும்' என்ற சமுதாய நலத்தை அறிவுறுத்தக் கருதியே பாடுகின்றனர். தென்னகத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகளைப் பேசுவோர் தம்முள் வேறுபாடு கருதாது ஒருவர் மொழியை மற்றொருவர் கற்க வேண்டும் என்பதும் அவர்தம் கருத்தாகும்.

அடுத்து அவர் கூறியுள்ள பாடற்பகுதியையும் பார்ப் போம். 'கங்கையாற்றில் புறத்தே விளையும் கோதுமைப் பண்டத்தைத் தெற்கே காவிரியாற்றுப் பக்கத்தே விளையும் வெற்றிலைக்குப் பண்டமாற்றுப் பொருளாகக் கொள்வோம் என்கின்றார். இதனாலே பாரத நாட்டுள் உள்ள எல்லாமாநிலங்களும் ஒன்றென்றே கருதப்பட்டு அங்கே பண்டமாற்றுமுறை எளிமையாக அமைய வேண்டும் என்றும் கருதுகிறார்.

அதன்பின் 'சிங்கம்போன்ற ஆற்றல் வாய்ந்த மராட்டியர்தம் வீரக் கவிதைகளை நாம் கேட்டு, சிங்கம் உண்ண விரும்புவது யானையை அல்லவா, அதனால்,

சேரனாட்டு யானைத் தந்தங்களை அப்பாடல்கட்குப் பரிசாகக் கொடுப்போம்' என்கின்றார். இதனால் அவர் உணர்த்தக் கருதியது என்னவெனில், பாரத நாட்டில் பல மொழி வழங்கி வருகின்றன. அதனைப் பேசும் ஒவ்வொரு வரும். தங்கள் தங்கள் மொழியினையே சிறந்ததென்று கருதியிருந்துவிடுதல் உண்டு. பாரத நாட்டுள் ஒரு மொழியைப் பேசும் ஒருவர் தம் நாட்டுள்ள ஏனைய மொழிகளையும் அறிந்து அம்மொழி இலக்கியங்களைப் பாராட்டக் கூடிய விரிந்த நோக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்' என்னும் கருத்தினையாகும். "சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்து' என்று மேற்கூறியதும் இக்கருத்தினையேயாகும்.

சங்ககாலப் புலவராகிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பவர் தாம் பாடிய பட்டினப்பாலையில்

'நீரின் வந்த நிமிர்ப்பரிப் பரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிலும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு'

(பட்டினப்பாலை 185-193)

என்னும் பகுதியால் இத்திணைமயக்கத்தை மிக அழமாகக் கூறுகிறார். காவிரிப்பூம்பட்டினத்து வாணிபத் தெருவில் கடல்வழியாக வந்த அயல்நாட்டுப் பொருள்களும், கடலிடத்தே தோன்றும் பொருள்களும், பல மலையிடத்தே தோன்றிய பொருள்களும், ஆற்றுப்படுகளில் தோன்றிய பொருள்களும் ஆகிய அரியவும், பெரியவுமான பொருள் களெல்லாம் வந்து அவ்வளம் இடந்தொறும் மயங்கிக் கிடக்கின்றன என்று கூறுகிறார்'.

பட்டினப்பாலை கூறும் 'கங்கை வாரியும் காவிரிப் பயனும்' என்னும் அடியுடன் 'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்' என்னும் பாரதியார் பாடல் அடி ஒத்திருத்தலைக் காண்க.

'திணை மயக்கம் என்பது ஓர் திணைப்பொருள் மற்றோர் திணையிலே சென்று கலத்தலைக் கூறுவதாகும்'. அத்திணை மயக்கத்தைச் சமுதாய நோக்கமுடையது என்று ஆழ்ந்து கருதிய பாரதியார் அதனை அழகான ஒலி அமைப் புடைய பாடலில், நல்ல வடிவு தந்து உணர்ச்சி பொங்கி வழியக் கற்பனை மிகச் சிறந்து விளங்கப் பாடியுள்ளார்.



சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர் கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி. ஏ. ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர், 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்ல நடைகொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர், பேராசிரியராகத் துறைத் தலைவராக விளங்குகிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர். இந்த முற்றிய புலமையாளர், முன்னாள் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமாவார்.

நாற்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந்திறனுக்கும் உயர்தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன் சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல். 'சங்க கால மகளிர் நிலை' பற்றிய ஆரர்ய்ச்சி. இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்; புலவரேறு (குன்றக்குடி ஆதினம்) செஞ்சொற்புலவர் (தமிழ் நாட்டு நல்வழி நிலையம்) சங்க நூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி! அயராது உழைக்கும் அருஞ் செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கிய பிறவி!

சி. பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி. இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு.

— மா.செ.